முழு மதுவிலக்கு அதுவே நமது இலக்கு



இரா. ரவிக்குமார்

முழு மதுவிலக்கு
அதுவே நமது இலக்கு

அன்புக்கினிய K.S. இராதா கிருஷ்ணன்
அவர்களுக்கு...

அன்பின் நினைவுகள்..

10/06/15

தொகுப்பாசிரியர் :

இரா.ரவிக்குமார்

ரவிக்குமார்

9943978256

வெளியீடு

கொங்கு மண்டல ஆய்வு மையம்,

உடுமலை.

✦ Muzhu Madhuvilakku Aduve Namadhu Ilakku
✦ ©R. Ravikumar ✦ April. 2015
✦ 368 Pages ✦ Tamil ✦ Rs. 250/-
✦ Kongu Region Research Centre
✦ ISBN No. : 978 - 81930648 - 0 - 1
✦ ED : 1

நூற்பெயர்	:	முழு மதுவிலக்கு அதுவே நமது இலக்கு
தொகுப்பாசிரியர்	:	இரா.ரவிக்குமார்
பதிப்பு	:	ஏப்ரல் 2015
பக்கம்	:	368 பக்கங்கள்
வெளியீடு	:	கொங்கு மண்டல ஆய்வு மையம், ரவி அச்சகம், உடுமலை. பேச : 224817, 99 43 97 82 56.
நூல் கிடைக்குமிடம்	:	உடுமலை.காம் பேச : 73 73 73 77 42
விலை	:	ரூ. 250/-

பொருளடக்கம்

உ

சாந்தலிங்கர் தாள்மலர் வாழ்க.



கயிலைப்புனிதர்

தவத்திரு மருதாசல அடிகள்

குரு முதல்வர்

அருள்மிகு தட்சணாமூர்த்தி (ஆலமர்செல்வர்)

திருமடம், திருக்காந்தள், உதகை.

இளையபட்டம்,

தவத்திரு சாந்தலிங்க அடிகளார் திருமடம், பேரூர்.

அணிந்துரை

ஒருநாடு நலம்பெற வேண்டும், நாட்டு மக்கள் எல்லோரும் வளம்பெற வேண்டும். அப்போதுதான் வல்லரசாக முடியும். வல்லரசாக வேண்டுமெனில் ஏதேனும் ஒரு துறையில் மட்டும் அதீத வளர்ச்சி பெற்றிருந்தால் முடியாது. ஒரு மனிதனின் உடலில் ஏதேனும் ஒரு உறுப்பு மட்டும் வளர்ச்சி பெற்றிருந்தால் அதனை வளர்ச்சி என்று கூறமுடியாது. எல்லா உறுப்புகளும் சீரான வளர்ச்சி பெற்றிருந்தால் மட்டுமே சரியான வளர்ச்சி என்கிறோம். அது போல, ஒருநாட்டில் உள்ள அனைத்துத் துறைகளும் சரிசமமாக வளர்ச்சி பெற்றிருத்தல் வேண்டும். அதுமட்டுமல்லாது மனிதன் அறிவால் உயர்ந்திருப்பதோடன்றி உள்ளத்தாலும் பண்பட்ட மனிதனாக இருத்தல் அவசியமாகும். சுவர் இருந்தால்தான் சித்திரம் வரையமுடியும் என்பாற்போன்று, உடல் நலமிருப்பின் உள்ளம் வளம் பெறும். இன்றைய சூழலில் உடலில் நலத்திற்குத் தீங்கு விளைவிக்கக்கூடிய முக்கிய காரணியாக இருப்பது போதைப் பழக்கமாகும். இது தனிமனிதனைப் பாதிப்பதோடு அல்லாமல் அவன் சார்ந்திருக்கின்ற குடும்பத்தையும், சமுதாயத்தையும் பெருமளவில் பாதிக்கிறது. பெரிய விருந்துகளில் போதை தரக் கூடிய மது இடம் பெற்றிருப்பது நாகரீகம் என்று கருதுகின்றனர்.

கூலிவேலை செய்பவர்கள் களைப்பைப் போக்குவதற்காக ஆரம்பத்தில் தொடங்கி, சிலநாட்களுக்குப்பின், முழுமையாக அடிமையாகி விடுகின்றனர். இந்நிலை கற்றவர், கல்லாதவர், ஆடவர், பெண்டிர் என்ற பாகுபாடின்றி இன்று இளைஞர்கள், சிறுவர்கள் வரை இப்பழக்கம் தொடர்ந்துள்ளது. இதனை ஒழிக்கப் பல்வேறு சூழல்களில் அறிஞர்கள் முனைந்து செயல்பட்டுள்ள -னர். அதுமட்டுமல்லாது, தமிழ் இலக்கியங்களும், புராணங்களும் கள்ளுண்ணாமை பற்றியும், அதனால் ஏற்படும் துன்பங்கள், துயரங்கள் பற்றி பல இடங்களில் கூறியுள்ளன. இன்றும் சில இடங்களில் பூரண மதுவிலக்கு செயல்படுத்தப்பட்டு வருகிறது. நாட்டினை வளப்படுத்த சமுதாயத்தை மட்டும் முன்னேற்றினால் வளம்பெறாது. நாட்டிலுள்ள ஒவ்வொரு தனிமனிதனையும் உடலாலும், உள்ளத்தாலும் பண்படச் செய்ய வேண்டும். மது -வினால் ஒவ்வொரு நாளும் ஏற்படும் தீமைகளைக் குறைக்க பல்வேறு வகைகளில் விழிப்புணர்வுகள் ஏற்படுத்தப்பட்டு வந்தாலும் மதுப்பழக்கம் குறைந்தபாடில்லை. இதனை ஒவ்வொரு -வரும் உணர்ந்து மீளும் வகையில் **முழுமதுவிலக்கு அதுவே நமது இலக்கு** என்ற நூலை பேராசிரியர் **இரா.ரவிக்குமார்** அவர்கள் தொகுத்துள்ளார். மேலும், அன்றுமுதல் இன்றுவரை பல்வேறு நிலைகளில் மதுஒழிப்பு பற்றிய சான்றுகளுடன் விளக்கமாகத் தொகுத்திருப்பது அனைவருக்கும் மிகப்பயனுள்ளதாக அமைந் -துள்ளது. இந்நூல் உரியோருக்கு ஆழ்மனதில் அமைந்து தீய நெறிகளில் இருந்து மீளச்செய்து மக்கள் அனைவரும் நல்வாழ்வு வாழ அருள்மிகு அம்பலவாணப் பெருமான் தண்ணருளும், திருக் கயிலாய மரபு பேரூரடிகளாரின் குருவருளும் நிறைந்து திகழ வாழ்த்துகிறோம்.

வேண்டுந்தங்களன்பு,

தங்கள் அன்புள்ள,

(மருதாசல அடிகள்)

ஜெய் குருதேவ்

பரம பூஜ்ய ஸ்ரீஸ்ரீ ரவிசங்கர் குருதேவ்

வேத விஞ்ஞான மஹா வித்யா பீடம்

சர்வதேச வாழும் கலை மையம்,

பெங்களூர் - 82

THE ART OF LIVING

வாழ்த்துரை

பாரததேசம் புகழ் பெரும் தேசம் என்பதற்கு நம்நாடு மிகுந்த வளம் நிறைந்த நாடாக, மற்ற நாடுகளின் கவனத்தை ஈர்த்ததால் தான், பிறநாடுகள் நம் நாட்டின் மீது படையெடுத்தனர் என்பது வரலாறு. இப்போது அந்த வளம் எல்லாம் எங்கே போனது என்று கேட்கத் தோன்றுகிறது. குடி குடியை கெடுக்கும் என்பது மட்டுமல்ல, குடிப்பழக்கத்தால் இன்று இந்திய நாடே பலமிழந்த நாடாகும் சூழல் ஏற்பட்டுள்ளது. இந்தியா அதன் கிராமங்களில் வாழ்கிறது. கிராமங்களுக்கு அழிவு நேர்ந்தால் தேசமே இல்லாது போய்விடும் என்றார் தேசப்பிதா மஹாத்மா காந்திஜி.

இப்போது விஞ்ஞான முன்னேற்றத்தால் கிராமங்களில் உற்பத்தித் திறனும் அதிகரித்தே உள்ளது. அப்படியிருக்க கிராமங்களின் சம்பாத்தியமெல்லாம் எங்கே போனது. எல்லாம் குடியில் போனது என்றே கூற வேண்டியுள்ளது. தொடர்ந்து மது அருந்துவதால் செல்வம் அழிந்து விடுவதுடன் மக்களின் ஆரோக் -கியமும் கேள்விக் குறியாகி விடுவதை இன்று பார்க்கலாம். இதுமட்டுமல்ல இன்று நகரங்களில் மது அருந்துவது ஒரு நாகரீக -மாகி வருகிறது என்பது, நமக்கு அச்சத்தை தருகிறது. மக்களை அழிக்கும் மது விற்பனையால், ஒரு அரசாங்கத்தின் வருமானத்தை உயர்த்த முடியும் என்ற மாநில, நடுவண் அரசுகளின் எண்ணத் -திற்குத் தடை போட வேண்டும். மது உற்பத்தி செய்வதில் அரசின் பங்கு இருக்கவே கூடாது. தமிழகத்தில் திரு.காமராஜ் அவர்கள்

முதல்வராக இருந்தபோது முழு மதுவிலக்கு இருந்ததால், ஒரு தலைமுறைக்கு மதுபழக்கம் இல்லாது இருந்தது என்று நான் அறிகிறேன்.

அதுபோல் ஆந்திராவில் பெண்கள் வெகுண்டு எழுந்த-தால் மதுவிலக்கு உயிர்ப்புப்பெற்றது பற்றியும் அறிகிறேன். இன்று மது அருந்துவது நம் அன்றாட உணவுப் பழக்கங்களில் ஒன்றாகிவிடும் அபாயமும் உள்ளது. ஆகவே முழு மதுவிலக்கு என்பது ஒரு தேசிய இயக்கமாக உருவெடுக்க வேண்டும் என்று விரும்புகிறேன். அதற்கு உடுமலை கொங்கு மண்டல ஆய்வு மையம் திரு.**இரா.இரவிக்குமார்** அவர்கள் தொகுத்து வெளியிட்-டுள்ள **முழுமதுவிலக்கு அதுவே நமது இலக்கு** என்ற நூல் உதவும் என்பதோடு முழுமதுவிலக்கு என்பதற்கு விழிப்புணர்வு ஏற்படுத்-தும் ஒரு அரிய தொகுப்பு நூலாகவே நான் கருதுகிறேன்.

கொங்கு மண்டல ஆய்வு மையத்தின் முயற்சி வெற்றிபெற வாழ்த்துகிறேன். குடிப்பழக்கம் இல்லாத இந்தியா குன்றின் மேல் இட்ட சுடர் போல் எரியும் திருவண்ணாமலை தீபமாகி உலகிற்கு ஒளி சேர்க்கும் என்று நம்புகிறேன்.

ஸ்ரீ ஸ்ரீ ரவிசங்கர் குருதேவ்

(ஒப்பம்)

சிவக்குமார்
ஓவியர், திரைப்படக்கலைஞர்,
சென்னை.

வாழ்த்துரை

அன்புத்தம்பி ரவிக்கு,

எழுபது ஆண்டுகளுக்கு முன், கோவை மாவட்டத்தின், ஒருகோடியில், சுமார் 50, 60 விவசாயக்கூலிகள் வாழ்ந்த ஒரு குக் –கிராமத்தில் பிறந்த ஒரு ஏழை விவசாயியின் மகன் நான்.

நான் பிறந்த அந்தக் காலகட்டம், பஞ்சம், உச்சத்தை தொட்ட காலம். மழை பொய்த்துவிட்டது. காடுகரையில் விளைச்சல் இல்லை. அதனால் மாடு கன்றுகளைப் பராமரிக்க முடியவில்லை. குடிதண்ணீருக்கு இரண்டு மைல் குடத்தைத் தலையில் சுமந்து சென்று பாலைவனச் சோலையாக – ஏதோ ஒரு மூலையில் ஒரு கிணற்றில் மட்டும் கிடைக்கும் குடிதண்ணீரை தோட்டக்காரர் அனுமதியோடு எடுத்து வர வேண்டும்.

டாய்லட் வசதி கிடையாது. மின்சாரம் எட்டிபார்க்காத காலம். சிம்னி விளக்கெரிக்கவும் மண்ணெண்ணை தட்டுப்பாடு. ராகி, சோளம், கம்பு, வரகு, தினை எதுவும் விளைய வழியில்லாமல் செங்காடு வெங்காஞ்சு கிடந்தது.

ரேஷனில் ஒட்டகப் பால்பவுடர் தருவார்கள். வாங்கிவந்து வெந்நீரில் கலந்து வெல்லப்பொடி போட்டு சாப்பிடுவோம். ஒட்டகத்தின் வாடை, பால் குடிக்கும்போது லேசாக வரும்.

கூலி கிடைக்காத ஏழை மக்கள், ஆற்றோரம் முளைத்துள்ள கற்றாழையின் இலைகளை வெட்டிவிட்டு, அடிப்பகுதியில் உள்ள கிழங்குகளை, கடப்பாறை கொண்டு தோண்டி எடுத்து வந்து, வெள்ளைவெளேர் என்ற கிழங்குகளை 2 அங்குல சதுரத்துக்கு வெட்டி, பெரிய மொடாக்களில் (பெரிய பானை) போட்டு,

பாதிவரை நீர் ஊற்றி, அதனுள்ளே 4 வட்டு கருப்பட்டி தட்டிப் போட்டு, நார் எடுத்த புளியை பெரிய உருண்டையாய் போட்டு 24 மணி நேரம் எரிப்பார்கள். அப்போதுதான் அந்தக் கருப்பட்டியின் இனிப்பும், புளியின் சாறும் அந்த கற்றாழைக் கிழங்குடன் சேர்ந்து திருநெல்வேலி அல்வா கலரில் மின்னும்.

ஆளுக்கு ரெண்டு துண்டு சாப்பிடக் கொடுப்பார்கள். சாப்பிட்ட 2 மணி நேரத்தில் வயிற்றுப்போக்கு ஏற்படும். குடும்பக் கட்டுப்பாடு தெரியாததால் வீட்டுக்கு ஐந்தாறு குழந்தைகுட்டிகள் இருக்கும். பட்டினி போட்டுச் சாகடிப்பதைவிட ஒரேயடியாகச் செத்துப் போகலாமென்று, அரளிக்கொட்டையை உடைத்து அரைத்து, பாலில் கலந்து அனைவரும் குடித்து சாவோரும் உண்டு.

அரளிக் கொட்டையால் சாவுக்குப் போராடுபவர்களை மீட்க, ஒரே மருந்து நாயின் மலம், அதை எடுத்து வந்து சட்டியில் போட்டு நீரில் கலந்து, நான்கு பேர் அமுக்கிப் பிடிக்க, வாயில் ஊற்றி விடுவார்கள். அந்தக் குமட்டல் தாங்காமல் வயிற்றுக் -குள்ளிருந்த விஷம், வாந்தியாக வெளிப்பட, உயிர் பிழைப் -போரும் உண்டு.

மது அரக்கன் எட்டிப்பார்க்காத காலம் அது! எங்கோ ஆற்றோரம், மறைவிடங்களில், அபூர்வமாகக் கள்ளச்சாராயம் காய்ச்சுவார்கள்.

வேலாம்பட்டை, பாட்டரிசெல்லில் உள்ள கரி, ஆரஞ்சுத் தோல் இப்படிச்சில வஸ்துக்கள் சேர்த்துக் காய்ச்சி பூமிக்கு அடியில் சிலநாள் புதைத்து வைத்து, புளித்தபின் விற்பனை செய்வார்கள்.

குடிகாரன் என்ற பட்டம், நான்கு கொலைகளைச் செய்தவன் என்ற பட்டத்தைவிட கொடுமையானதாக, மக்கள் நினைத்த காலம்.

அத்திபூத்தாற்போல எங்கள் கிராமத்தில் ஒரே ஒரு குடிகாரர் இருந்தார். பேச்சியண்ன ஆசாரி என்று பெயர். ஊரிலுள்ள அத்தனை ஓட்டு வீடுகளுக்கும் திண்ணைக்கால், விட்டம், ஓடு வேய்வதற்கான சட்டம் அத்தனையும் அந்த ஆசாரியின் கைவண்ணம். பெரும்பாலும் மங்களூர் டைல்ஸ் வீடுகள் என்பதால் அத்தனை வீடுகளும் ஆசாரியின் உழைப்பால் உருவானவை.

நாள் முழுக்க சுட்டெரிக்கும் வெயிலில் வீட்டுச் சுவர்களின் மேல் ஏறி விட்டம் சட்டம் அடிக்கும் அவருக்கு உடம்பு அலுப்புத் தீர்க்கும் ஒரே பானம் இந்தக் கள்ளச்சாராயம்தான். நாட்டுச்சரக்கு என்பதால் ஒரு டம்ளர் அடித்தாலே தலைமுடி நட்டுக்கொள்ளும். போதையின் உச்சத்தில், வேட்டியை அவிழ்த்து தலையில் கட்டிக் கொண்டு, கோவணத்தோடு வீட்டுக்கு வருவார்.

குடிகாரரின் ஒரே பொழுதுபோக்கு, அப்பராணி மனைவியை, ஆசைதீரப் போட்டுத் தாக்குவது. இரவு ஏழு மணியானால் அவன் மனைவி, குழந்தைகளின் கூக்குரல் தினந்தோறும் கேட்கும்.

இந்தக் கொடுமையைப் பார்த்துச் சகியாமல், சிலநாள் அவரை வண்டியில் தூக்கிப்போட்டு, போலீஸ் ஸ்டேஷனுக்கு அழைத்துப் போவோம்.

பாதிவழியில் “சாமி சாமி புத்தி வந்திருச்சு புத்தி... இந்த ஒரு வாட்டி மன்னிச்சிருங்க, இனிமேல் குடிக்க மாட்டேன்” என்று காலைப் பிடித்துக் கதறுவார்.

போலீஸ் லாக்கப்பில் அவரைப் போட்டுவிட்டால் வீடுகளுக்கு மர வேலை செய்ய, வேறு ஆள் ஏது? சும்மா மிரட்டி ரெண்டு தட்டு தட்டி வீட்டில் இறக்கி விடுவோம்.

ஒரு வாரம் சத்தம் இருக்காது. மீண்டும் வேதாளம் முருங்கை மரம் ஏறிவிடும். 15 வயது வரை கிராமத்தில் நான் பார்த்த ஒரே குடிகாரர் பேச்சியண்ண ஆசாரி மட்டுமே.

1958ல் சென்னை வந்தேன். மதுவிலக்கு அமலில் இருந்த காலம். துரைமார்களும், ஜிம்கானா கிளப், காஸ்மாபாலிடன் கிளப் மெம்பர்களும், நடிகர்களும், பர்மிட் வாங்கி கிளப்புக்குள் கௌரவ -மாக மது அருந்துவார்கள் என்று கேள்விபட்டிருந்தேன். ஆனால் பார்த்ததில்லை.

வங்கி ஊழியர்களும், தனியார் நிறுவன ஊழியர்களும் உயர் அதிகாரிகளும் ஒன்றாகக் கூடும் சமயங்களில் மாப்ளே நாக்கு செத்துப்போச்சுடா, ரெண்டு நாள் பாண்டிச்சேரிக்கோ, பெங்களூ -ருக்கோ போயி ஒடம்பை சர்வீஸ் பண்ணீட்டு வரலாம் என்று மாதம் ஒரு தரம், இரண்டு மாதங்களுக்கு ஒரு தரம் பெங்களூரோ, பாண்டிச்சேரியோ போய்வருவார்கள்.

பாதையோரம் கைரிக்ஷா இழுப்பவர்கள், உடம்பு வலி போக, குடிசைப்பகுதியில் ரகசியமாக விற்கப்படும் சாராயத்தை வாங்கி அடித்துவிட்டு, மனைவி ஆக்கிப்போட்ட மீன்குழம்புச் சோற்றைத் தின்று மட்டையாகி விடுவார்கள்.

இதெல்லாம், தேடித்தேடிப் போய்ப்பார்த்தால் மட்டுமே கண்ணில்படும் சில காட்சிகள். 1970க்குப் பிறகு இன்றுள்ள நிலைமை சொல்லிமாளாது...

கடந்த நாற்பது ஆண்டுகளில் குடிகாரர்களின் எண்ணிக் -கையைவிட குடிநோயாளிகளின் எண்ணிக்கை அதிகமாகி விட்டது.

குடியை நிறுத்த வேண்டும் என்ற ஆசையிருந்தும், கைவிட முடியாமல் காலையில் இருந்து இரவு வரை டாஸ்மாக்கில் வேலை செய்து கொண்டே குடித்துக்குடித்து ரத்த வாந்தி எடுத்து கோவை, பொள்ளாச்சி, உடுமலை, வேலாண்டிபாளையம், மதுரை பகுதியில் இறந்த இளைஞர்களின் வயது 35க்குள்.

பத்து வயதில் குடிக்க ஆரம்பித்து ஒன்பதாம் வகுப்பு போவதற்குள் வீட்டிலேயே பணம் திருடி பாருக்குப்போய்,

சப்ளையர் வேலை பார்த்து காசு சேர்த்து, தொடர்ந்து குடித்து பைத்தியமாகிவிட்ட இளைஞர்கள். அக்கா, தங்கை நகைகளை விற்றுக்குடித்து, காசு கொடுக்காத அம்மாவை மிரட்ட கத்தியால் கையை அறுத்துக் கொண்ட இளைஞர்கள் என ஏராளம்.

கட்டடப் பொறியாளர் ஒருவர். அப்பா பெரிய டாக்டர். குடிக்கு அடிமையாகி சேப்பாக்கம் டாஸ்மாக் கடைவாசலில் நின்று ஒரு ரூபாய், இரண்டு ரூபாய் பிச்சை எடுத்து, நாள் ஒன்றுக்கு நாலு குவார்ட்டர் அடித்து, கிழிந்த துணியாய், பிளாட்பாரத்தில் கிடந்த சம்பவங்கள் எத்தனை?

அரசுத்துறையில் பெரிய உத்தியோகத்தில் உள்ளவர், குடிக்கு அடிமையாகி, ஓய்வு பெற்ற ஆசிரியையான விதவைத் தாயாரை டாஸ்மாக் கடைக்கு அனுப்பி குடிகாரர்கள் கூட்டத்தில் நசுங்கி, கைகள் நடுங்க, கண்ணீர் வடிய, மதுபாட்டில் வாங்கி வந்து மகனுக்கு கொடுத்த அவலம் போன்றவை தொடர்ந்து நடக்கிறது.

ஹார்பர் பகுதியில் பிறந்த ஒருவர், அப்பா ரயில்வே வேலை. ஏழாவது படிக்கும்போது அப்பா இறந்து விட்டார். ரயில்வே ஸ்டேசனில் விளம்பரங்களுக்கு பெயிண்ட் அடிக்கிற வேலை. குடும்பத்தில், இவர் பரம்பரையில், யாரும் குடிகாரர்கள் இல்லை. வயது வந்த பிள்ளையை தட்டிக் கேட்க ஆளில்லை. பனிரெண்டு வயதில் சப்பி என்ற நாட்டுச் சரக்கு அடித்தார். இப்போது ஹார்பரில் வேலை. தினமும் குடிபோதை, சாராயம், சப்பி, ஜிஞ்சர், கலக்கல், மதுக்கசாயம் என போதை தரும் அத்தனை வகை பானங்களையும் சுவைக்க ஆரம்பித்தார்.

கால்கட்டுப் போட்டால் சரியாகிவிடும் என்று, ஆந்திரா பார்டரில் பெண் பார்த்தார்கள். மாப்பிள்ளை அழைப்பின்போதே மட்டையாகி, பிணம்போல் தூக்கிச் சென்று முகத்தில் குளிர்ந்த தண்ணீர் அடித்து, எடுத்து நிறுத்தினார்கள். தாலிகட்டும் போதும் நினைவில்லை. மனைவியின் தோளில் இவர் சாய்ந்துவிட, மற்றவர்கள் தாலி கட்டி விட்டார்கள்.

அடுத்த ஆண்டு அம்மாவுக்கு உடம்புக்கு முடியாமல் ஹார்பர் ஆஸ்பத்திரியில் சேர்த்தார்கள். பார்க்கப்போனவர் - தலையணைக்கடியில் இருந்த நூறு ரூபாயை அம்மாவுக்குத் தெரியாமல் திருடிவிட்டார். போதை உச்சமானதும் புது ஐடியா தோன்றியது. ஹார்பர் காலனியின் ஒவ்வொரு வீட்டின் கதவையும் தட்டி, “ஐயா அம்மா செத்துப் போயிட்டங்கய்யா! பாடை கட்ட, அடக்கம் பண்ண, காசு வேணும்னு” துண்டு விரித்து காசு சேர்த்தார். ஐநூறு ரூபாய் சேர்ந்தது. இரண்டு கேன் சாராயம் வாங்கிக் கொண்டு போய் மயானத்தை ஒட்டிய காட்டுப் பகுதியில் பதினோறு நாட்கள் குடித்தார். தினமும், குடிப்பார் மட்டையாவார். எழுந்ததும் குடிப்பார், மீண்டும் மட்டையாவார்.

பிறகு வனவாசத்திலிருந்து வீடு திரும்பினார். அம்மா குத்துக்கல் மாதிரி வீட்டில் அமர்ந்திருந்தார். வீட்டிலுள்ளோரும் வீதியில் காசு போட்டவர்களும் துடைப்பத்தாலும், செருப்பாலும் அடிஅடி என்று அடித்து வலிப்பு வந்து விழுந்துவிட்டார். அப்போ -தும் அந்த தாய்தான் மடியில் கிடத்தி மருத்துவமனைக்கு ஆள் அனுப்பி, நர்ஸை அழைத்து வந்து, ஊசி போட்டுக் காப்பாற்றினாள்.

பிராட்வே சாலையில் உள்ள ஒரு தியேட்டரில், டிக்கெட் கிழிக்கும் ஊழியர். புரசைவாக்கம், பெரம்பூர் பேரக்ஸ் பகுதியில் வாடகை வீடு. வீடெல்லாம் கிடையாது. பத்துக்குளட்டு அளவில் ஒரு அறை. கணவன், மனைவி, மகன், வயசுக்கு வந்த மகள் நால்வரும் அதே அறைக்குள் ஒரே பாயில்தான் தூங்குவார்கள். அறைக்கு முன்பக்கம் உள்ள திண்ணையில் சமையல். எதிர்த்தாற் போல திறந்த வெளியில், நாலு அடிக்கு நாலு அடி கோணிச் சாக்கால் மறைக்கப்பட்ட குளியல் பகுதி.

மகன் எஸ்.எஸ்.எல்.சியில் தோல்வி. வேலை வெட்டி கிடையாது. திண்ணையில் முடங்கிக் கிடப்பவனுக்கு கோணிச் சாக்கு துவாரத்தில் தங்கை குளிப்பதைப் பார்ப்பது பொழுது போக்கு.

குடிகார தந்தை போதையின் உச்சத்தில், வலதுபுறம் படுத்திருக்கும் மனைவியின் நினைவில், இடதுபக்கம் படுத்திருக் -கும் மகள் மீது கை போட்டிருக்கிறார். காலம் எப்படியோ சதிசெய்து முரண்டுபிடித்த மகளை, ஒருநாள் வன்புணர்ச்சி செய்து விட்டார் தந்தை. விளைவு மகள் வயிற்றில் குழந்தை! ஆறுமாதம் வரை, பெண், எப்படியோ மறைத்துப் பார்த்தாள். வயிறு பெரிதானதும், அம்மா கண்டுபிடித்து, சாத்துசாத்தென்று புருஷனையும் மகளை -யும் சாத்தினாள். எருக்கங்குச்சி உதவியுடன், அம்மாவே கருவைக் கலைத்து, குறைப்பிரசவம் பார்த்தாள். முழுமை பெறாத குழந்தை -யின் உடலை, துணியில் சுற்றி, குப்பைத் தொட்டியில் போட்டு விட, நாய் ஒன்று மோப்பம்பிடித்து, அதை எடுத்து வெளியே போட்டுவிட்டது.

அக்கம்பக்கத்திலுள்ளோர் பார்த்து, போலீசுக்குத் தகவல் சொல்ல, போலீஸ் விசாரணை செய்து, அந்த மனிதனைக் கைது செய்து, வழக்குப்போட்டு, ஆயுள் தண்டனை வாங்கிக் கொடுத்துள்ளது. இதுபோல் எத்தனையோ கொடுமைகள் என் மனக்கண் முன்னால் தோன்றுகிறது.

டாஸ்மாக் வருமானத்தை முழுமையாக நம்பித்தான், தமிழக மக்களுக்கு, இலவசத்திட்டங்கள் உருவாக்கப்படுகின்றன என்ற கசப்பான உண்மை மிகவும் வேதனையளிக்கும் விஷயம். மதுவால் எல்லா வகையிலும் தீமையே ஏற்படுகிறது.

குடியினால் ஈரல் பழுதடைந்து, குடும்பத் தலைவன் மயானத்திற்குப் போகும் கொடுமைக்கு ஈடாக, எந்த இலவசமும் இருக்கமுடியாது. இன்று ஏழரை கோடி மக்கள் வாழும் தமிழகத்தில், ஒழுங்காக கணக்கெடுத்தால் ஐம்பது சதவிகிதம் மக்கள் தொகையில் குடும்பத்திற்கு ஒருவர் குடிகாரராக இருப்பர்.

இந்த மூன்றரை கோடி மக்களில் தினம் தினம் செத்துக் கொண்டிருக்கும் குடும்பத்தலைவனையும், அவனால் வாழ் -விழந்து, நரகத்தில் உழலும் குடும்பத்தையும் கொஞ்சம்

நினைத்துப் பார்த்து, மது அரக்கனை தமிழ்நாட்டை விட்டே விரட்ட வேண்டும்.

மதுவை தமிழகத்திலிருந்து அப்புறப்படுத்த முடியாதா? என என் ஆழ்மனதில் தோன்றிய எண்ணத்தை "முடியும்" என நினைத்து என் அருமைத்தம்பி உடுமலை ரவி, **மதுவிலக்கு அதுவே நமது இலக்கு** என்ற இந்த அற்புதமான தொகுப்பை வெளியிட்டுள்ளார். ரவியின் வரலாற்றுப் பதிவு இந்நூலின் ஒவ்வொரு பக்கத்திலும் தெரிகிறது. மருத்துவக்குறிப்புகளில் தொடங்கி மது ஒழிப்பிற்காக பாடுபட்ட மகான்கள் வரை அனைத்தையும் தொகுத்திருப்பது ரவியின் கடின உழைப்பிற்குச் சான்றாகும். **இந்நூல் தமிழினத்தின் விடியலுக்கான ஒரு மைல்கல்.** தமிழர் நலனுக்காக மது ஒழிப்பு என்ற பயணத்தில் அனைவரும் பங்கு கொள்ள வேண்டும். என் தம்பியின் மது ஒழிப்பிற்கான பயணம் சிறப்பாக அமைய நான் என்றும் பக்க பலமாக இருப்பேன். தம்பி ரவியின் சமுதாயப் பணி வெல்ல என்னுடைய மனமார்ந்த வாழ்த்துகள்.

அன்புடன்.

இரா.ரவிக்குமார்
கொங்கு மண்டல ஆய்வு மையம்,
உடுமலைப்பேட்டை.

என்னுரை

தமிழ் சமூகத்தின் அக்கறையிலிருந்து நம்மை தனிமை படுத்திக்கொள்ள முடியாது. சமூக வாழ்வின் நன்மைக்காக நமது பங்களிப்பு அவசியமாகிறது.

அறிவியல், சமூக, கலாச்சாரத்தில் முன்னேற்றமடைந்த தமிழினமானது மதுவுக்கு அடிமையாகி வரும் சூழல் அழிவுப் பாதைக்கு கொண்டு செல்கிறது.

மதுபான விற்பனையில் இந்தியாவிலேயே தமிழகம் முதலிடத்தில் இருப்பதாக ஆய்வுகள் தெரிவிக்கின்றன.

சோமபானம், சுராபானம் என்றெல்லாம் சங்க இலக்கியங் -களில் கோடிட்டுக் காட்டினாலும் ஆங்கிலேயேர் ஆட்சிகாலம் 1800 வாக்கில் மதுவின் தாக்கம் தமிழகத்தில் தொடங்கியது.

ஆங்கிலேயர் ஆட்சிக்காலத்தில் 1943 ஆம் ஆண்டு மக்களின் உடல்நலம் குறித்து அறிய போரே கமிட்டி அமைக்கப் பட்டது. இந்த குழு 1946ஆம் ஆண்டு அறிக்கை கொடுத்தது. அதில் குடிப்பழக்கத்திற்கு அடிமையாகக் காரணம் வறுமை, வேலையின்மை, விரக்தி, கடன்சுமை, ஏமாற்றம், குடும்பசிக்கல் எனப் பல்வேறு காரணங்களைக் கூறியது. இதே காரணங்கள் இன்றைய காலகட்டத்திலும் பொருத்தமாக உள்ளது.

தமிழகத்தைப் பொறுத்து 30.08.1971 மதுவிலக்கு தள்ளி -வைக்கப்படும் என தமிழக அரசு அறிவித்தது. மேலும் மதுக்கடை -களை திறப்பதற்கு வகை செய்யும் அவசரச்சட்டம் ஒன்றை ஆளுனர் K.K.ஷா அவர்கள் பிறப்பித்தார். மதுக்கடை திறப்பதை எதிர்த்து டாக்டர் ஹண்டே V.S. ஸ்ரீகுமார், வெங்கடசாமிநாயுடு ஆகியோர் சென்னை உயர்நீதிமன்றத்தில் வழக்குத்தொடுத்தனர்.

மதுவிலக்கு சட்டத்தை நிர்வாக உத்தரவு மூலம் ஒத்திவைக்க முடியாது. எனவே தமிழ்நாட்டில் மதுக்கடைகளை திறப்பது சட்டவிரோதமான செயல் இதற்குத் தடைவிதிக்க வேண்டும் என்று மனுவில் கூறி இருந்தனர். உயர்நீதிமன்ற தலைமை நீதிபதி வீராச்சாமி, பி.எஸ்.கைலாசம், ஆர்.சதாசிவம், டி.ராம் பிரசாத்ராவ், வி.வி.ராகவன் ஆகிய ஐந்து நீதிபதிகள் இந்த வழக்கை விசாரித்தனர். "மதுக்கடைகளைத் திறக்க அவசரச் சட்டம் பிறப்பிக்கப்பட்டு விட்டதால் இந்த மனு செயலற்றதாய் ஆகிவிட்டது" எனக் கூறி தள்ளுபடி செய்தனர்.

குடிப்பது வெளியே தெரியக்கூடாது என்ற ஒரு உணர்வு 1975ஆம் ஆண்டுகளில் இருந்தது. கிராமப்புறங்களில் ஒதுக்குப் புறமாக கள்ளுக்கடையோ அல்லது சாராயக்கடையோ மட்டுமே இருக்கும். கள்ளுக்கடை இருக்கும் நடைபாதை வழியாக செல்வதற்கே வெட்கப்படும் சூழ்நிலை இருந்தது. இந்நிலை தற்போது மாறிவிட்டது. மது மிக எளிதில் கிடைக்கிறது. அதனால் மதுவின் தாக்கம் அதிகரித்து வருகிறது.

இன்றைய சூழலில் மதுவின் சுவையை 13 வயதிலேயே அனுபவிக்கத் துவங்கிவிட்டனர். சிறுவர்கள் மளிகைக்கடைக்குச் சென்று பிஸ்கட், மிட்டாய் வாங்குவதைப்போல மதுக்கடை -களுக்குச் சென்று மதுவை வாங்கிச் செல்கின்றனர். இளைஞர் சமுதாயம் கெட்டு சீரழிய அரசாங்கமே துணைபோகிறது.

உடலுறுப்புகள் வேகமாக வளர்ச்சியடையும் பருவத்தில் மது அருந்துவோரின் சராசரி வயது குறைந்து கொண்டே வருவது எதிர்கால தலைமுறையை சிதைக்கும் செயலாக உள்ளது.

மதுவுக்கும் சமூக விரோத செயல்களுக்கும் ஒரு நெருக்க -மான உறவு உள்ளது. கொலை, கொள்ளை, தற்கொலை, கற்பழிப்பு மற்றும் சாலை விபத்துக்கள் போன்றவற்றில் மதுவே முக்கிய இடம்பிடித்துள்ளது. பள்ளிக்குழந்தைகளின் பாலியல் தொந்தரவுகளுக்கு மதுவே முக்கியக்காரணம்.

மதுவின் மூலம் ஒவ்வொரு ஆண்டும் பல ஆயிரம் கோடி வருமானம் வருவது தமிழ்நாடு அரசுக்கு பெருமையான விசயம் அல்ல. ஒவ்வொரு நாளும் மதுப்பழக்கத்தினால் உடல் நலம், மன நலம் பாதிப்போர் எண்ணிக்கை அதிகரித்து வருகிறது அதனை கருத்தில் கொள்ள வேண்டும்.

நமது அண்டை மாநிலமான கேரள மாநிலத்தின் முதல்வர் **உம்மன்சாண்டி அவர்கள், மதுவிலக்கு என்பதை நாங்கள் வருவாய் அடிப்படையில் அணுகவில்லை. மக்களுக்கான அரசு என்பதற்கு சில இலக்கணங்கள் இருக்கின்றன. மக்களுக்கான அரசு என்பது வருவாய் கோணத்தில் மட்டுமே ஒரு விசயத்தை அணுகாமல் சமூக அக்கறையின் அடிப்படையில் அணுக வேண்டும்** எனக் கூறியுள்ளார்.

தற்போது மதுவிலக்குக்கான பணியை கேரள மாநிலத்தில் துவக்கிவிட்டனர். கேரள அரசு எதிர்வரும் 10 ஆண்டுகளில் படிப்படியாக மதுவிலக்கை அமல்படுத்துவோம் என்று கூறியுள்ளது. முதற்கட்டமாக 418 மதுவிற்பனைக் கூடங்களுக்கு உரிமங்கள் ரத்து செய்யப்பட்டுள்ளது. மேலும், 312 மது விற்பனைக் கூடங்களின் உரிமங்களை ரத்து செய்யப்போவதாக அறிவித்துள்ளது. இதேபோல் தமிழக அரசும் முயற்சித்தால் மதுவின் தாக்கத்தை குறைக்க முடியும்.

சாலை விபத்தில் அகால மரணமடைந்தவரின் உறவினர்கள் கூடுதல் இழப்பீடுகோரி சென்னை உயர்நீதிமன்றத்தில் வழக்கு தொடுத்தனர். விபத்தில் பலியானோர் மது அருந்திவிட்டு வாகனத்தை ஓட்டினர் என அரசு தரப்பு வழக்கறிஞர் கூறினார். அதற்கு நீதிபதி கிருபாகர் அவர்கள் மது விற்பனை குறித்தும், மதுவிலக்கு குறித்தும் பல்வேறு கேள்விகளை எழுப்பி பதிலளிக்குமாறு தமிழக அரசுக்கு உத்தரவிட்டார்.

இந்திய அரசியல் சாசனத்தின் 47 - வது பிரிவு மது விலக்கைப்பற்றி கூறும் நிலையில், அரசாங்கமே மதுக்கடைகளை நடத்துவது அரசின் செயல்பாடுகளைக் கேள்விக்குறியாக்குகிறது.

மதுவிலக்கு என்பது தமிழக அரசின் கஜானாவுக்கு வருவாய் குறைவு ஏற்படும் என்று நோக்காமல், தமிழினமே சீரழிந்து வருகிறது என்ற கண்ணோட்டத்தில்தான் பார்க்க வேண்டும்.

மதுவின் மூலம் கிடைக்கும் வருவாயை விட மக்களின் ஆரோக்கியத்தையே முன்னிலைப்படுத்த வேண்டும். சமூக அக்கறையுடன் மதுவிலக்கை அமுல்படுத்துவதன் மூலம் தமிழினத்தினை மீட்டுருவாக்கம் செய்ய முடியும்.

சமுதாய நலன்பொருட்டு செயல்படும் தினப்பத்திரிகை -களான தினமணி, தினகரன், தினமலர், தினத்தந்தி, தி ஹிந்து மற்றும் புதிய வாழ்வியல் மலர், புதிய தலைமுறை, செம்மலர், மனாருல் ஹீதா, ஆழம் மாத இதழ், பாடம் மாத இதழ், சமரசம் மாத இதழ், சுற்றுச்சூழல் மாத இதழ், ஜூனியர் விகடன், புதிய ஜனநாயகம், புதிய கலாச்சாரம், நமது நம்பிக்கை, தமிழ் ஆழி, உயிர்மெய், த சண்டே இந்தியன், புதிய தரிசனம், இந்தியா டுடே போன்றவற்றிலிருந்து கருத்துக்களை பகிர்ந்துள்ளேன். அனைத்து பத்திரிகை ஊடகங்களுக்கும் எனது நன்றி உரித்தாகுக.

எனது முயற்சிகளுக்கு எப்பொழுதும் உறுதுணையாக இருக்கும், உடுமலை பல் மருத்துவர் வெங்கடேஷ் ரங்கராஜன், உடுமலை சக்ரா மருத்துவமனை மருத்துவர் அசோக், கோவை, தொண்டாமுத்தூர் M.G. இராமலிங்கம், அக்ரோ கிருஷ்ணசாமி, உடுமலை ஆவண எழுத்தர் இ.பா.மணிவண்ணன், வெண்புரோ முத்துவேல், மௌனிகா தேவராஜ், தேன்மொழி ரவிக்குமார் ஆகியோருக்கும் எனது அன்பினை தெரிவித்துக்கொள்கிறேன்.

இந்நூலுக்கு வேண்டிய கருத்துக்களை கொடுத்து உதவிய ஹீபுருமொழி வல்லுனர் சாம் பக்தர், ஜமாஅத் இஸ்லாமி ஹிந்த் உடுமலை பொறுப்பாளர் ஷான் பாஷா, தமிழ்நாடு தவ்ஹீத் ஜமாஅத் உடுமலை கிளை பொறுப்பாளர் A. அப்துல்லா, சட்டப் பஞ்சாயத்து அமைப்பின் பொதுச்செயலாளர் செந்தில் ஆறுமுகம் ஆகியோருக்கும் எனது நன்றியினை தெரிவித்துக்கொள்கிறேன்.

தமிழர் நலன் சார்ந்த எனது பொதுவாழ்விற்கு ஊக்கம் கொடுத்து வரும் கோவை மருத்துவ மையத்தின் தலைவர் மருத்துவர் **நல்லா.பழனிச்சாமி அய்யா** அவர்களுக்கும் எனது அன்பினை தெரிவித்துக் கொள்கிறேன்.

இந்நூலுக்கு **அணிந்துரை** வழங்கி, எனது கொங்குநாட்டு வரலாற்று ஆய்வுகளுக்கு எப்போதும் பக்கபலமாக இருந்து வரும் பேரூர் ஆதீனம், இளையபட்டம், தவத்திரு. **மருதாச்சல அடிகளார்** அவர்களுக்கும், வாழ்த்துரை வழங்கிய, இளைஞர்களின் நலனுக்காக பாடுபட்டு வரும் சர்வதேச வாழும் கலை மையம் நிறுவனர் பரம பூஜ்ய ஸ்ரீஸ்ரீ **ரவிசங்கர் குருதேவ்** அவர்களுக்கும், கலையுலக மார்க்கண்டேயன் அண்ணன் **சிவக்குமார்** அவர்களுக்-கும் எனது நன்றியினை தெரிவித்துக் கொள்கிறேன்.

சங்கொலி வாரஇதழில் எனது மது ஒழிப்புக் கட்டுரைகளை தொடர்ந்து வெளியிட்டும், இந்நூலுக்கு **முழு மதுவிலக்கு அதுவே நமது இலக்கு** எனப் பெயரிட்டும், எனது பொதுவாழ்வின் வழிகாட்டியாய் இருக்கும் மக்கள் தலைவர் அண்ணன் **வைகோ** அவர்களுக்கு அன்பினை உரித்தாக்கிறேன்.

அன்புடன்,

(இரா. ரவிக்குமார்)

1. மது அருந்துவதால் ஏற்படும் பாதிப்புகள்

உழைப்பவனை தொற்றுகின்ற மிகப்பெரிய பாவம் மதுப் பழக்கமே ஆகும். மது தீமைகள் பிறக்கும் பாவக்கூடு. வறுமை, நோய், வேலை வாய்ப்பின்மை போன்றவற்றை மதுப்பழக்கம் உருவாக்குகின்றது.

மது அருந்துவதால், கல்லீரல் நேரடியாக பாதிப்பு அடை–கிறது. பசியற்ற தன்மை, அதிக சோர்வு, வாந்தி, மஞ்சள் காமாலை, உடல் எடை குறைதல் போன்ற நோய்கள் ஏற்படுகின்றன.

மது அருந்துவதால், கல்லீரலின் செல்கள் அழிந்து சுருங்க ஆரம்பித்து விடுகின்றது. இதனால், உடலின் மேல்பகுதி மெலிந்–தும், வயிற்றுப் பகுதி வீங்கியும் காணப்படும்.

தோல்களில் திட்டுத்திட்டாக அடையாளங்கள் தோன்றும். வயிறு மற்றும் கால்களில் நீர் கோர்த்துவிடும். மண்ணீரலில் வீக்கமும் காணப்படும்.

மனிதன் மதுவைத் தொடர்ச்சியாகப் பயன்படுத்தி வந்தால் உடலில் உள்ள அனைத்து உறுப்புகளும் வேகமாகச் சீரழிந்து விடுகிறது. மதுவானது கல்லீரலுக்குச் சென்றவுடன் வளர்சிதை மாற்றத்தில் கல்லீரலில் கொழுப்புப் படிவதை ஏற்படுத்துகிறது.

நமது உடலில் கல்லீரலில் மட்டுமே மதுவின் முழு செரிமானம் நடைபெறுகிறது. குடல் பகுதியில் பல சுரப்பிகள் உள்ளன. அவைகளின் மூலமாக மதுவானது அசிட்டால்டிகைடு, அசிட்டைல்அசிடேட் போன்ற வேதியியல் பொருளாக மாற்றப்–படுகிறது. வேதியியல் நோக்கில் அசிட்டால்டிகைடு மதுவினால் ஏற்படும் விஷத்தன்மைக்கு காரணமாக அமைகிறது. மேலும் மதுவிற்கு அடிமையாவதற்கும் ஏதுவாக அமைகிறது.

மதுவானது உடலில், குளுக்கோஸ், கால்சியம், வைட்ட–மின்கள், ஊட்டச்சத்து போன்றவற்றை அதிக அளவில் உறிஞ்சப்

–படுவதை தடுக்கிறது. இதனால் நமது உடலில் நோய் எதிர்ப்பு சக்தி குறைந்து பல்வேறு நோய்கள் ஏற்படுகின்றது.

மதுவானது சர்க்கரைப் பொருள்களில் வளர்சிதை மாற்றத்தை ஏற்படுத்தி உடலில் சர்க்கரையின் அளவை குறைத்து இரத்தத்தில் சர்க்கரையின் அளவை அதிகப்படுத்துகின்றது.

மது வயிற்றுக்குள் சென்றவுடன் லாக்டிக் அமிலம், யூரிக் அமிலம் போன்ற அமிலத்தன்மையை அதிகரிக்கச் செய்து குடலில் பெரும் புண்களை உண்டாக்குகின்றது.

மதுவானது நேரடியாக இருதயத்தைத் தாக்கி இதயத் துடிப்பையும், இரத்தம் வெளியேறும் திறனையும் அதிகப்படுத்து –கிறது. மேலும் தமனிகளில் இரத்தக் குழாய்களை விரிவடையச் செய்து உடலின் வெப்பநிலையை குறைக்கின்றது. இதன் காரணமாக இருதயம் சீரற்ற நிலையில் இயங்க ஆரம்பிக்கும். இதனால் இரத்தக் கொதிப்பு ஏற்படும்.

மது அருந்துவதால், மலட்டுத்தன்மை, இரத்தசோகை போன்ற பாதிப்புகள் ஏற்படுகின்றன. மேலும் நாளமில்லா சுரப்பிகள் பாதிக்கப்படுவதால் நோய்களைத் தோற்றுவிக்கும் கருவியாக மது உள்ளது.

மது அருந்துவதால், உணவுக்குழல், இரைப்பை போன் –றவை கடுமையாக பாதிப்படைகின்றன. இதன் காரணமாக வயிறு எரிச்சல், இரத்த வாந்தி, தொடர் பசியின்மை, வயிறு உப்பசம் போன்ற நோய்கள் ஏற்படுகின்றன.

மது அருந்துவதால், ஆண்களுக்கு விந்துப்பை சுருக்கம் ஏற்பட்டு விந்து உற்பத்தி குறைகிறது. இதன் காரணமாக மலட்டுத்தன்மை ஏற்படுகின்றது. கணைய அலர்ஜி ஏற்படு –கின்றது. இதன் காரணமாக நீர்கட்டி வயிற்றில் உருவாகிறது. நுரையீரலில் நீர் சேர்தல் போன்றவையும் ஏற்படுகிறது.

மது அருந்துவதால், பெரு மூளை, சிறு மூளை பாதிப் படைகிறது. இதன் காரணமாக மனநோய் ஏற்படுகிறது.

மது அருந்தினால் உடனடியாக இறப்பு ஏற்படாவிட்டாலும் அதிகப்படியான பக்கவிளைவுடன், மிக விரைவாக மரணத்தைத் தழுவுகின்றனர்.

முதலில் மது அருந்தியவுடன் மனதில் ஒருவித கிளர்ச்சி ஏற்படும். தயக்கங்களிலிருந்து மெதுவாக விடுதலையும், சுதந்திரமான மனப்பான்மையும் ஏற்படும்.

ஆல்கஹால் அணுக்கள் மிகச்சிறியதாக இருப்பதால் நொதி -களின் உதவியுடன் செரித்து பின் இரத்தத்தில் கலக்கவேண்டிய -தில்லை. இவை நேரடியாக சவ்வூடுபரவல் மூலம் இரத்தத்தில் வெகுவிரைவில் கலக்கும். அதனால் உடனடியாக போதை ஏற்படுகிறது.

மது அருந்தியபின் ஏற்படும் போதையினால் தன்னிலை மறந்த நிலையும், குருட்டுத்தனமான தன்னம்பிக்கையும், சுய கட்டுப்பாட்டை இழத்தலும் ஏற்படுகிறது. இதனால் மது அருந்திய -வர்களால் இரகசியங்களைக் காப்பாற்ற இயலாது.

இரத்தத்தில் 20 மில்லி ஆல்கஹால் இருக்கும்போது கூர்மையாக பார்க்கும் திறன் குறையும். தசைக்கட்டுப்பாடு இழக்கும், தொடு உணர்வுகள் குறையும். சிந்தனை, புரிந்துணர்வு ஆகியவை பாதிக்கப்படும்.

இரத்தத்தில் 50 மில்லிகிராமுக்கு மேல் போனால் வாய் வார்த்தைகள் குழறும். நடையில் தள்ளாட்டம் ஏற்படும். அதிக மயக்கம் ஏற்படும். ஞாபகமறதியும் குழப்பமும் ஏற்படும்.

காலம், நேரம், தூரம், மதிப்பீடுகள் மது அருந்துவதால் குறையும். அதனால் சாலையில் வரும் வாகனங்கள் எவ்வளவு தூரத்தில் வருகிறது என்பதை சரியாகக் கணிக்கமுடியாது. மது அருந்திவிட்டு வாகனம் ஓட்டுவதால் விபத்துகள் ஏற்படுகின்றன.

ஆல்கஹால் பயன்படுத்துவதால் வைட்டமின் A, B இரும்புச்சத்து ஆகியவை இழப்பு ஏற்படுகிறது. தொடர்ந்து மது அருந்துவதால் RUMFITS என்ற வலிப்புநோய் ஏற்படும்

Paranoid State எனும் மூளைக்குழப்பம் ஏற்படும். இது ஒரு வகை பைத்தியம் ஆகும். இதனால் மனைவி மீது சந்தேகம், குழந்தைகள் மீது வெறுப்பு, எதைப் பார்த்தாலும் எரிச்சல் போன்ற குழப்பங்கள் ஏற்படும்.

மது அருந்துவதால் குடல்புண் (ULCER) மற்றும் மீளா மயக்கம் (Hapatic Como) ஏற்பட வாய்ப்பு அதிகமாக உள்ளது.

கள்ளச்சாராயம் அருந்துவதால் மெத்தீல் ஆல்கஹால் என்னும் எரிபொருள் கல்லீரலில் கலப்பதால் பார்மாலிக் அமிலம் சுரக்கின்றது. இது 50 மில்லி அளவைத் தாண்டிவிட்டாலே கண் பார்வை பறிபோகிறது.

ஆல்கஹால் பருகும்போது இரத்தத்தில் ஆக்ஸிஜன் எடுத்துக்கொள்ளும் கொள்ளளவு குறைந்து உடலில் இரத்த ஓட்டம் குறைந்துவிடும். இதனால் எந்த வேலையும் செய்யாமல் இருக்கும்போதும் அதிகமான சோர்வு ஏற்பட்டு மயக்கம் ஏற்படும்.

மது அருந்துவது மூளையின் செயல்பாட்டை குறைத்து திடீரென தோன்றும் இடையூறுகளை உணரமுடியாமல் செய்கிறது என National Institutes Alcohol Abuse and Alcoholism என்ற அமைப்பு தெரிவிக்கின்றது.

பெண்கள் மது அருந்துவதால், மாதவிடாய் கோளாறுகள் ஏற்படுகின்றன. போதைக்கு அடிமையாகும் பெண்கள் கடுமை -யான உடல் நலக்கோளாறுகளை சந்திக்க நேருகிறது. மது அருந்தும் ஆண்களைவிட பெண்களுக்கு இதன் பாதிப்பு அதிகமாக இருப்பதால் பெண்கள் தங்களின் ஆயுளின் பெரும் பகுதியை இழந்து விடுகிறார்கள் என வாஷிங்டன் பல்கலைக் கழகம் தெரிவிக்கின்றது.



2. ஆல்கஹாலிசம் ஒரு நோய்

ஒரு மனிதன் குற்றங்கள் புரிவதற்கு மூலகாரணம் அவனது மன சஞ்சலமும், மனம் அமைதியற்ற நிலையுமே ஆகும்.

கல்லாதார் என்பதிலை, ஒழுக்கப்பாதை
காணாதார் என்பதிலை, பதவி செல்வம்
இல்லாதார் என்பதிலை, போதை வாழ்வில்
எல்லோரும் உளர், விலக்கிங் கெதுவுமில்லை

– குலோத்துங்கன் கவிதைகள்

போதைப்பொருட்கள் உபயோகமும், அதனால் உருவாகும் குற்றங்களும் பெருகுவதற்கான காரணத்தை அறியும் பொருட்டு உலக சுகாதார அமைப்பு ஒரு குழுவை அமைத்தது. அந்தக் குழு உலகம் முழுவதும் ஆய்வு செய்து ஒரு அறிக்கை வெளியிட்டது. அந்த அறிக்கையில், உலகச்சந்தையில் பலதரப்பட்ட போதைப் பொருட்கள் மலிந்து கிடக்கின்றன. மிக எளிதாக போதைப் பொருட்கள் கிடைக்கிறது. இதன் காரணமாக விருப்பமான போதைப்பொருட்களை அதிகமாக உபயோகிக்கின்றனர் என்று கூறப்பட்டுள்ளது.

அமெரிக்காவில் ஜார்ஜ் புஷ் ஜனாதிபதியாக இருந்தபோது ஒரு கருத்துக்கணிப்பு நடத்தப்பட்டது. இந்த கருத்துக்கணிப்பில் இரண்டு கோடியே எண்பது இலட்சம் பேர் ஏதாவது ஒருவித போதைப்பொருளை பயன்படுத்திக் கொண்டுள்ளனர் என்று தெரியவந்துள்ளது.

இவர்கள் மது போன்ற போதைப்பொருளை மட்டும் பயன் -படுத்தவில்லை. ஹெராயின், கொக்கேன் போன்ற தீவிர போதைப் பொருட்களையும் பயன்படுத்தி வந்துள்ளனர். ஜனாதிபதி புஷ் இந்தப் பொருட்கள் உபயோகப்படுத்துவதை தடுத்து நிறுத்த வேண்டும் என்று கேட்டுக்கொண்டதுடன் அதை தடுத்து நிறுத்தும் பொருட்டு எழுநூற்றெண்பது கோடி டாலர் நிதியும் ஒதுக்கினார்.

போதைப்பொருட்களின் முடிவு நன்மை பயப்பதாக இல்லை, அவற்றை உடனே விலக்க வேண்டும். உடலில் எந்த ஒரு உறுப்பையும் கெடுக்காத, சிதைக்காத ஒரு போதைப் பொருள் உலகில் இல்லவே இல்லை. போதை வாழ்விற்கு அடிமையானவர் –களை அப்பழக்கத்திலிருந்து விடுபடுவதற்காக உலகெங்கும் பலர் போராடி வருகின்றனர். அதில் வெற்றியும் பெற்றுள்ளனர்.

தன்னிலை மறக்கச் செய்யும் உணவுப் பொருட்கள் முதலில் போதை பொருட்கள் என்றே அழைக்கப்பட்டது. அவ்வகையான உணவுப் பொருட்களை உட்கொள்ளும்போது உடல் உணர்வுகளை மரத்துப்போகச் செய்து உறக்கத்தை உண்டு பண்ணக்கூடியது என்று கூறுகின்றனர்.

Norcotic Drug என்பதற்கு மருத்துவ அகராதியில் மறத்துப் போதல் என்று பெயர். நார்கோடிகோஸ் (Norcoticos) என்ற கிரேக்க வேர்ச்சொல்லில் இருந்து பெறப்பட்டதாகும். Norcoticos என்ற சொல் உணர்விழத்தல் (Stuper) அல்லது மறமந்தம் (Torper) என்ற பொருள் தரும் நார்கே (Norke) என்ற மூலச்சொல்லில் இருந்து பெறப்பட்டதாகும்.

மதுபானங்களில் கலந்துள்ள ஆல்கஹால் எனப்படும் எத்தனால் என்ற வேதிப்பொருளே ஒரு பானத்தை மதுவாக மாற்று –கிறது. ஆல்கஹால் என்ற சொல் அரபி மொழியில் அல் – கோஹல் (Al-kuhul) என்ற கண்ணிற்கு மையாக இடப்படும் பயன்படுத்தப் படும் ஒரு வகையான பொடியைக் குறிக்கும் சொல்லாகும். இந்த நுண்ணிய பொடிகளை மத்திய கால ஐரோப்பாவின் இரசவாதிகள் வடித்தெடுக்கும் எல்லாவித வேதிப் பொருட்களுக்கும் இச் சொல்லைப் பயன்படுத்தத் துவங்கினர். இதுவே தற்காலத் –தில் வடித்தெடுக்கப்படும் மதுவிற்கு பெயராக அமைந்து விட்டது.

சாராயத்திற்கு அராக் (Araq) என்ற சொல் பயன்படுத்தப் –படுகிறது. இச்சொல்லும் அரபு மொழியிலிருந்து பெறப்பட்ட சொல்லாகும்.

1956 இல் அமெரிக்க மருத்துவக்கழகம் (AMA - American Medical Association) ஆல்கஹாலிசத்தை ஒரு உடல்நலக் குறைவாக அறிவித்தது.

1966 இல் ஆல்கஹாலிசத்தை ஒரு நோயாக அறிவித்தனர். NCA - National Council for Alcoholisam மற்றும் NIAAA - National Institute for Alco and Alcohol Abuse என்கிற அமைப்புகள் ஆல்கஹாலிசத்தை முழுநோயாக அறிவித்தன.

ஆல்கஹாலிசத்தை நோயாக அறிவித்த "ஜெனலிக்ஸ்" என்பவர் முன்வைத்த முதல் ஆய்வுக் கட்டுரையான "Stages of the Alcoholic" என்பதுதான் இன்று வரை இந்நோய்க்கான நோய்தீர்க்கும் முறையாக பயன்பட்டு வருகிறது.

ஆல்கஹாலிசம் என்ற நோய் ஏற்படுவதால் முதலில் ஈரல் பாதிக்கப்படுகிறது. மென்மையாக இருக்கும் ஈரல் கடினமாகிறது. இதனால் இரத்த ஓட்டம் பாதிக்கிறது.

சமுதாய நிலையங்களிலேயே மது தொடர்பான எந்த ஒரு செயலும் நாட்டிற்கு வளம் சேர்ப்பவை அல்ல. மேலும், வறுமையை வளர்ப்பன ஆகும்.

மதுவிலிருந்து தப்பக்கூடிய ஏழைக்குடிசைகள் எதுவுமே இல்லை. போர்கள், கொள்ளை நோய், பஞ்சம் இவை மூன்றும் ஒன்று கூடி செய்த அழிபாடுகளை விட மதுவின் அழிபாடு மிகவும் அதிகமாகும்.

மது நமது உயிரையும், பணத்தையும் ஒன்றாக நம்மிடம் இருந்து கேட்கிறது. தீமைகளைத் தவிர மது நன்மை ஒன்றும் செய்யவில்லை. மது மனிதனை முட்டாள் ஆக்குகிறது. பைத்தியக் –காரன் ஆக்குகிறது. அவனுடைய பலத்தை வெகுவாக குறைக் –கிறது.

மதுவினால் கிடைக்கும் வருமானம் கோடிக்கணக்கான மக்களின் உயிரையும், வாழ்வையும் கெடுத்து கிடைக்கும் வருமானம் ஆகும். அதனால் மதுவிற்பனையை ஒழித்தே ஆகவேண்டும்.

ஒரு நாட்டிற்கு சிறப்பினை கொடுப்பது அந்த நாட்டு மக்களின் கலாச்சாரம், பண்பாடு முதலியன. மதுவின் காரணமாக கலாச்சாரம் முற்றிலும் சிதைந்து வருகிறது. பண்பாடு அழிந்து வருகிறது.

❑

3. மதியை இழக்கச்செய்யும் மது

மதுவால் மூளையில் ஏற்படும் பிரச்சனைகள் :

மதுவை ஒருவர் தொடர்ந்து அருந்தும்போது அதனைத் தாங்கும் திறன் (Tolerance) மூளையில் அதிகரித்துக் கொண்டே இருக்கும். ஆரம்பத்தில் குறைவாக மது அருந்துபவர்கள் நாளடைவில் போதை ஏறவில்லை என்ற காரணத்தைக் கூறி அதிகளவில் குடிக்க ஆரம்பிக்கிறார்கள். இதற்குக் காரணம் மது நரம்புகளின் மூலம் மூளைக்குச் செல்லும்போது மூளையில் மதுவை ஏற்கும் செல்களின் (Recaptors) எண்ணிக்கை அதிகமா -வதுதான். இதனை மருத்துவத்தில் UP Recantation of Recaptors என்று அழைக்கிறார்கள்.

இயற்கையாக மனித மூளையில் மது ஏற்கும் செல்கள் (Recaptors) மிகக்குறைந்த அளவே இருக்கும். மதுவை அதிகள -வில் அருந்தும்போது இந்த மது ஏற்பிகள் இலட்சக்கணக்கில் உருவாகின்றன. இதனால் சராசரியை விட ஒவ்வொரு நாளும் ஒரு குறிப்பிட்ட அளவிற்கு மேல் ஆல்கஹால் மூளைக்குச் செல்லும் போது ஒரு கட்டத்தில் போதைக்கு அடிமையாக வேண்டிய சூழல் ஏற்படுகிறது. இந்நிலைக்கு தள்ளப்பட்டவர்கள் உடனடியாக மதுவை நிறுத்தினால் கை, கால் நடுங்கும். வலிப்பு நோய் போன்றவை ஏற்படும் வாய்ப்பு உருவாகிறது. மதுவானது தாழ்வு மனப்பான்மையை அதிகரிக்கச் செய்கிறது. மனோசக்தியின் வேகத்தைக் குறைக்கின்றது.

மதுவால் ஊட்டச்சத்து குறைந்து நரம்பு மண்டலத்தில் நோய் ஏற்படுகின்றது. இந்த நோய்க்கு "வெர்னிக் நோய்" என்று பெயர். இந்நோய் ஏற்பட்டால் பெருமூளை, சிறுமூளையின் முன்பகுதி கடுமையாக பாதிப்படைகிறது. இவ்வாறு பாதிப்படை -வதால் கண் பார்வை கோளாறு, குழப்ப நிலை, ஞாபக மறதி, தடுமாற்றம் ஏற்படும்.

பாட்டாளி வர்க்கத்தின் எழுத்தாளரும், லெனின் அவர் -களின் நெருங்கிய நண்பருமான தோழர் **"மாக்சீம் கார்க்கி"** தனது உலகப் புகழ்பெற்ற **தாய்** நாவலில், கதாநாயகன் பாவலும், அவரது தோழர்களும் மது அருந்துபவர்களாக இருந்து பின் புரட்சி ஏற்படுத் -துவதற்காக மதுவை வெறுத்து ஒதுக்குபவர்களாக மாறினர். இவ்வாறு மதுவிற்கு எதிராக **தாய்** என்ற நாவலைப் படைத்துள்ளார்.

மதுவினால் இந்த உலகம் அழிந்து கொண்டுள்ளது. அரசுக்கு டாஸ்மாக் மூலம் வரும் வருவாயைக் காட்டிலும், பீடி, பான்பராக், குட்கா மற்றும் மது வகைகளால் ஏற்படும் குடல்புண், வாய்ப்புண், கேன்சர் போன்ற நோய்களுக்கு சிகிச்சை அளிக்க அரசு மருத்துவமனைகளில் ஏற்படும் செலவினங்கள் அதிகமாகும்.

இந்திய சுதந்திர போராட்ட காலத்தில் பூரண மது விலக்கு -கோரி போராட்டம் நடத்தினர். ஆங்கிலேய அரசு 1937 ஆம் ஆண்டு மதுவிலக்கிற்காக சட்டம் இயற்றியது. காந்தி பிறந்த குஜராத் மாநிலத்தில் இன்றும் பூரண மதுவிலக்கு அமலில் உள்ளது.

கேரளாவில் "சைலண்ட்வேலி" பகுதியில் பழங்குடி மக்களின் கலாச்சாரத்தைப் பாதுகாக்க கேரள அரசு பூரண மதுவிலக்கை அமல்படுத்தியது.

மதுப்பழக்கத்தினால் உலக அளவில் நன்மையை விட தீமைகளே அதிக அளவில் ஏற்படுகிறது. மதுவானது நாட்டை குற்றவாளிகள் நிறைந்த நாடாக மாற்றிவிடுகிறது. பெரும்பாலான மரணங்கள் மதுவினால் உண்டாகிறது. தமிழகத்தில் தினசரி நடக்கும் குற்றங்களில் நூற்றுக்கு எழுபது சதவிகிதம் மது அருந்து -பவர்களால்தான் நடைபெறுகிறது என ஆய்வுகள் தெரிவிக் -கின்றன.

ஆரோக்கியம் இல்லாதவர்களிடமிருந்து நல்ல கருத்துக்கள் விளைந்திடாது. ஆரோக்கியமற்ற மனிதனால் இந்த சமுதாயத் -திற்கு நன்மை ஏற்படுவதில்லை.

மதுவானது மதியை மறக்கச் செய்கிறது.

மதுவானது மற்றவர்களுக்குத் தொல்லை கொடுக்கிறது.

மதுவானது உடல்நிலையைப் பாதிக்கிறது.

மதுவானது குழந்தைகளின் எதிர்காலத்தை அழிக்கிறது.

மதுவானது குடும்பத்தையே அழிக்கிறது.

மதுவானது துயரங்களின் பிறப்பிடமாக உள்ளது.

மதுவானது மனிதனுக்குத் துக்கத்தை ஏற்படுத்துகிறது.

மதுவானது குடும்பத்தில் சோகத்தை ஏற்படுத்துகிறது.

மதுவானது குற்றவாளிகளை உருவாக்குகிறது.

மதுவானது மனவேதனையை உண்டாக்குகிறது.

மதுவானது தாழ்வு மனப்பான்மையை ஏற்படுத்துகிறது.

மதுவானது தோல்விக்கு காரணமாக அமைகின்றது.

மதுவானது மனோசக்தியை கெடுக்கின்றது.

மதுவானது ஆன்ம பலத்தை கெடுக்கின்றது.

மதுவானது மனநலத்தை பாதிக்கின்றது.

மதுவானது குற்றங்கள் உருவாக காரணமாக இருக்கின்றது.

மதுவானது நரம்புத் தளர்ச்சியை ஏற்படுத்துகிறது.

மதுவானது குடும்பத்தின் ஒற்றுமையை கெடுக்கின்றது.

மதுவானது செல்வத்தை அழிக்கின்றது.

மதுவானது ஒழுக்கக் கேடுகளை ஏற்படுத்துகின்றது.

மதுவானது குடும்பத்தின் மகிழ்ச்சியைக் கெடுக்கின்றது.

மதுவானது மூளைச் செல்களின் வேலையை பாதிப்பதால் போதை நிலையை ஏற்படுத்தி மன எழுச்சியையும், கட்டுப்பாடு அற்ற நிலையையும் இதனால் முறை தவறிப் பேசக்கூடிய நிலையும் உருவாகிறது. மதுவை அருந்தும்போது நினைவை இழக்கும் நிலையும் உருவாகிறது.

துக்கமும் சோகமும் மது அருந்தும் பழக்கத்தினால் அதி-கரித்துக் கொண்டே போகிறது. பொலிவுமிகுந்த இல்லங்கள் கூட மதுப்பழக்கத்தினால் பொலிவிழந்து இருளில் மூழ்கி விடுகின்றன. மது அருந்துவதால் கொலைகாரர்களாகவும், கொடுமைக்காரர்களா-கவும், போக்கிரிகளாகவும், பொறுப்பற்றவர்களாகவும் மாறிவிடு கின்றனர். ஆகையால் மது அருந்தும் குற்றத்தைச் செய்வோரது வாழ்க்கையும் கெட்டு அவரைச் சார்ந்த குடும்பத்தினரையும் அழித்து விடுகிறது. ❑

4. மதுவால் அழியும் தமிழ்ச்சமூகம்

ஒரு கெட்ட பழக்கம் இரண்டு குட்டி போடும் இது கொங்கு நாட்டின் பழமொழி.

மதுவுக்கு அடிமையான தமிழ் சமுதாயம் பான்பராக், புகையிலை. குட்கா போன்ற போதைப் பொருட்களைக் கடந்து உடனடியாக போதை கொடுக்கக்கூடிய ஊசி வகைகளும், கஞ்சா, அபின் போன்ற போதை தரக்கூடிய வஸ்துக்களும் மிக எளிதாக கிடைக்கக்கூடிய சூழ்நிலைக்கு தமிழகம் வந்துவிட்டது.

இம்மதுவினால் ஏற்படும் சமூகப் பிரச்சனை மிகப்பெரிய கலாச்சார சீரழிவை உருவாக்கிக் கொண்டுள்ளது. தமிழகத்தில் சராசரியாக ஒரு கோடி மக்கள் மது அருந்துகின்றனர். சுமார் ஐம்பது லட்சம் பேர் மதுவுக்கு அடிமையாகிவிட்ட ஒரு சூழ்நிலை தமிழகத் -தில் உருவாகி விட்டது. இந்த மது அடிமைகளில் அதிகமானோர் இருபத்தைந்து வயதுக்குட்பட்ட இளைஞர்கள் என்பது வருந்தத் -தக்க விசயமாகும்.

இந்தப்பழக்கமானது காமவெறியை தூண்டுகிறது. தேசிய எய்ட்ஸ் கட்டுப்பாட்டு அமைப்பு குடிநோயாளிகளிடம் ஒரு ஆய்வை நடத்தியது. அதில் 30 சதவிகிதம் பேர் பாலியல் வெறி கொண்டவர்களாக உள்ளனர்.

இந்த உலகில் மிகக் கொடிய நோயாகக் கருதப்படும் புற்றுநோயைக் குணப்படுத்துவதற்கு மருந்துகள் கண்டுபிடித்து விட்டனர். எய்ட்ஸ் என்ற கொடிய வியாதியை குணப்படுத்த முடியாவிட்டாலும் வாழ்நாளை நீட்டிக்க மருந்துகள் கண்டுபிடித் -துள்ளனர். ஆனால் மதுவுக்கு அடிமையானவர்களின் பாதிக்கப் பட்ட உடல் உறுப்புகளை சரிசெய்வது என்பது இயலாத காரியம். காரணம் உடலின் அனைத்து உறுப்புகளும் கெட்டு விடுகின்றது.

மது அடிமை என்ற விசயத்தில் ஆண்கள் மட்டும் என்ற நிலை மாறி பெண்களும் மதுவுக்கு அடிமையாகி வரக்கூடிய சூழ்நிலை உருவாகி விட்டது. இத்தோடு பள்ளிக்குழந்தைகள் கூட மதுவுக்கு அடிமையாகி விட்டனர்.

1937 இல் தமிழகத்தில் மதுவிலக்கு கொண்டு வரப்பட்-டது. அன்று மதுக்கடைகள் இல்லை. கள்ளுக்கடைகளும், ஆங்-காங்கே ஒருசில சாராயக்கடைகளும் இருந்தன. கள் குடிப்பதை ஒரு தவறான விசயமாக மக்கள் மத்தியில் பார்க்கப்பட்டது.

30.08.1970 அன்று சட்டசபைக் கூட்டத்தைக் கூட்டாமல் அவசர சட்டத்தின் மூலமாக மதுவிலக்கு நீக்கப்பட்டது. தொடர்ந்து தமிழகத்தில் 7,395 கள்ளுக்கடைகளும், 3,512 சாராயக் கடை-களும் திறக்கப்பட்டன. மக்களிடத்தில் எதிர்ப்புகள் அதிகமாக காரணத்தால் 1974 இல் மதுவிலக்கு கொண்டுவரப் பட்டது. மீண்டும் 1981 இல் மதுவிலக்கு ரத்து செய்யப்பட்டு தனியார் நிறுவனங்கள் மது உற்பத்தி செய்ய அனுமதி கொடுத்தது.

தமிழகத்தில் இன்று பதினோரு மதுபான உற்பத்தித் தொழிற்சாலைகளும், ஐந்து பீர் உற்பத்தி தொழிற்சாலைகளும் செயல்பட்டு வருகின்றன. தமிழகம் முழுவதும் ஏழாயிரத்திற்கும் மேற்பட்ட டாஸ்மாக் மதுவிற்பனைக் கடைகள் தமிழக வாணிபக் கழகத்தால் இயங்கி வருகின்றன. இந்தக் கடைகள் தினமும் புதிதுபுதிதாக மது அடிமைகளை உருவாக்கிக் கொண்டு வருகிறது. இந்த மதுக்கடைகளுக்கு எதிராக நீதிமன்றங்களும் கண்டனக் குரல் எழுப்புகின்றன.

தேசிய நெடுஞ்சாலைகளில் மதுக்கடைகளை அகற்றும்-படி நீதிமன்றம் கூறியது. அதனைத் தொடர்ந்து தேசிய நெடுஞ்சாலைகளில் இருந்த ஒருசில மதுபானக்கடைகளை அரசு வேறு இடத்திற்கு மாற்றியதேயொழிய அக்கடைகளை முழு-மையாக அகற்றவில்லை என்பது வருந்தத்தக்க விசயமாகும்.

தற்போது பொதுமக்களும், குறிப்பாக பெண்கள் மதுவுக்கு எதிராக போராட்டத்தை கையில் எடுத்துக் கொண்டனர். சமுதாய மாற்றம் பெண்களால் ஏற்படுகின்றது என்று கூட கூறலாம். ஒரு தலைமுறையையே அழித்துவிட்ட இந்த மதுவானது ஒழிக்கப்பட வேண்டும் என்பதில் பல்வேறு சமூக ஆர்வலர்கள் போராட்டக் களத்தில் குதித்துள்ளனர்.

இந்த உலகில் உயிரைவிட முக்கியமானது எதுவுமே இல்லை. மதுவானது மிக எளிதாகவும், மிக வேகமாகவும் உயிரைப் பறித்து விடுகிறது.

இலவசங்கள் தொடர்வதற்காக மதுக்கடைகள் தேவை என்றால் அந்த இலவசங்களை பயன்படுத்தும் மக்களே மதுவுக்கு அடிமையாகி மரணத்தை தழுவுகின்றனர்.

மதுக்கடைகள் ஒழிக்கப்பட்டால் கள்ளச்சாராயம் பெருகும் என்பது ஏற்றுக்கொள்ளப்பட முடியாத ஒன்று. தமிழகத்தில் லாட்டரி சீட்டு ஒழிக்கப்படவில்லையா? அதன்பின் ஆங்காங்கே விற்பவர்களை கைது செய்து கடுமையான தண்டனை அளிக்கப் பட்ட பின்பு தற்போது லாட்டரி சீட்டுகள் முழுவதுமாகவே விற்பது தடைசெய்யப்பட்டுவிட்டது. லாட்டரி சீட்டுக்கள் ஒழிக்கப்பட்ட பின் 95 சதவிகித மக்கள் லாட்டரி சீட்டு வாங்குவதை நிறுத்திக் கொண்டனர். அதுபோல மதுக்கடைகள் ஒழிக்கப்பட்டால் மதுவின் மேல் உள்ள தாக்கம் வெகுவாகக் குறையும் என்பதில் எந்தவித மாற்றுக் கருத்துக்கும் இடமில்லை.

குடிநோய் என்பது குடும்பநோயாக மாறிவிட்டது. குடிப்ப -வர் தான் அழிவது மட்டுமில்லாமல் தன் குடும்பத்தையும் பொருளாதாரத்தில் பின் தங்கிய நிலைக்கு தள்ளி, ஒருவேளை சோற்றுக்கே வழியில்லாமல் மிகவும் வேதனைப்படுகிறார்கள். நான்கு சதவிகித ஆல்கஹால் உள்ள கள்ளை ஒழிக்க, ஆங்கிலே -யரை எதிர்த்து போராடிய சுதந்திரப்போராட்டத்தைவிட மிகப் பெரிய போராட்டத்தை தமிழகம் கண்டது. இன்று கள்ளைவிட நாற்பது சதவிகித போதை தரக்கூடிய மதுவகைகளை அரசாங்கமே

உற்பத்தி செய்து விற்பனை செய்கிறது. இதனை எதிர்த்துத் தீவிரமாகப் போராட வேண்டிய தருணத்தில் தற்போது உள்ளோம்.

பெங்களூரில் உள்ள இந்திய தேசிய மனநல மையம் மது தொடர்பாக 2000 ஆம் ஆண்டு ஒரு ஆய்வை நடத்தியது. அந்த ஆய்வில் மது அருந்தும் பழக்கத்தினால் இந்தியாவில் ஆண்டு தோறும் 23 லட்சம் பேர் உயிரிழக்கின்றனர்.

மதுப்பழக்கம், அதற்கு அடிமையானவர்களின் சராசரி ஆயுட்காலத்தை 15லிருந்து 20 ஆண்டுகள் குறைக்கிறது.

இந்தியாவில் தற்கொலை செய்து கொள்பவர்களில் 34% பேர் குடிப்பழக்கம் உள்ளவர்கள்.

மது அருந்துபவர்களில் பலர் கடன்காரர்களாக மாறு –கின்றனர்.


மதுபோதையால் ஓர் ஆண்டில் 12.2 வேலைநாட்கள் இழக்கப்படுகிறது

மதுப்பழக்கத்தின் விளைவாக ஓர் ஆண்டில் 18.1% பேர் தங்கள் வேலையை இழக்கின்றனர்.

மதுப்பழக்கம் உள்ளவர்கள் இருக்கும் குடும்பங்களில் 59.4 சதவீத குடும்பங்களின் பொருளாதாரத் தேவையினை பிற உறுப்பினர்களால் கவனிக்கப்படுகிறது.

2000ஆண்டு எடுக்கப்பட்ட இந்த ஆய்வுகளைவிட தற்போது அதிக பாதிப்பிற்கு உள்ளாகியுள்ளது என்பது மறுக்க முடியாத உண்மை.





குடிகாரனின் பாங்க்

அழிவுப் பாதை, அடகுக்கடை, ஏழை இல்லம் மனநோயாளர் மனை, சிறைச்சாலை, சுடுகாடு இவைதான் முடிவிலே அவன் பெறுவான்.

5. மதுவுக்கு அடிமையாகும் சிறுவர்கள்

இன்றைய நிலையில் பெற்றோர்கள் எதிர்கொள்ளும் முக்கியமான பிரச்சனை குழந்தைகளின் குடிப்பழக்கம். இருபது ஆண்டுகளுக்குமுன் குடிக்கும் பழக்கம் வெகுவாக குறைந்து இருந்தது. ஆனால் இன்றைய நிலையில் 13 வயதிலேயே மதுவை அருந்த சமூகம் தயாராகிவிட்டது.

வளர் இளம்பருவத்தின் நுழைவாயிலிலேயே சிறுவர்கள் போதைக்கு அடிமையாகக்கூடிய சூழ்நிலை ஏற்பட்டு விட்டது. இதனால் உடல், மனபாதிப்புகளும், குடும்பம் மற்றும் சமூக பொருளாதார தளங்களில் நிகழும் பாதிப்புகளும் மிக அதிகம்.

1985ஆம் ஆண்டுவாக்கில் மது அருந்தும் பழக்கம் சராசரி வயது 28 க்கு மேற்பட்டதாக இருந்தது. 1990ஆம் ஆண்டு 19 வயதில் மது அருந்தலாம் என்ற நிலை உருவானது. தற்போது 13 வயதில் வந்து நிற்கின்றது. மக்கள் தொகையில் மூன்றில் ஒருவர் மதுப்பழக்கத்திற்கு ஆளாகியுள்ளார்.

எல்லோராலும் ஏற்றுக்கொள்ளப்பட்ட தவறாக, மதுப் பழக்கம் மாறிவிட்டது என மனநலம் மற்றும் போதை நீக்கியல் சிகிச்சை மருத்துவர் **மோகன் வெங்கடாஜலபதி** கூறுகிறார்.

இந்திய மக்கள் தொகையில் 32 % பேர் மது அருந்துவதாக புள்ளிவிபரம் கூறுகின்றது. இதில் 13 % பேர் தினமும் குடிப்பவர்கள். பெண்களில் 5 % மதுவுக்கு அடிமையாகி விட்டதாக ஆய்வுகள் தெரிவிக்கின்றது.

11 % மாணவர்கள் பள்ளி நாட்களிலேயே மதுவை அருந்து -கின்றனர். பள்ளிப் பருவத்தில் குடிப்பது அடுத்த இருபது ஆண்டு -களில் இதயம், கல்லீரல், சிறுநீரகம் உள்ளிட்ட உடல் உறுப்புகள் சிதைந்து குடிநோயாளியாக உருவெடுக்கும் ஆபத்து நிச்சயம் ஏற்படுகிறது. 40 வயதிற்குள் அவர்களின் வாழ்க்கை முடிந்து விடுகிறது.

இளம் வயதில் மது அருந்தும் பழக்கத்தால் உடலில் பலவிதமான நோய்கள் உருவாகின்றன. இதனை குழந்தைகள் நல மருத்துவர் **T. குமரன்** அவர்கள் பட்டியல் இடுகிறார்.

மூளை வளர்ச்சி பாதிப்பதோடு, மூளையில் ரத்தக்கசிவு ஏற்படும். சிந்திக்கும் ஆற்றல், நினைவாற்றல் குறையும். மனச் சிதைவு நோய்வரும். குழப்பமான மனநிலை இருக்கும். வார்த்தை -கள் தெளிவின்றிப் பிறழும்.

தசைகள் தளர்ச்சியடையும். உடல் உறுப்பு வளர்ச்சி பாதிக்கப்படும்.

நரம்பு மண்டலம் பலவீனமடைந்து, நரம்புத்தளர்ச்சி வரும். கை, கால்களில் நடுக்கம் இருக்கும். வலிப்பு நோய் வரலாம்.

கல்லீரல் அதிகமாக பாதிக்கப்படும். வயிறு தொடர்பான பிரச்சனைகள் அதிகம் வரும். வயிறு வீக்கம், வலி, வயிற்றுப்புண் வரும்.

சரியாகச் சாப்பிட முடியாது. வைட்டமின் சத்து குறையும்.

புற்றுநோய் வருவதற்கான வாய்ப்புகள் அதிகம்.

கணையம் பாதிக்கப்படும். இன்சுலின் சுரப்பதில் குறை -பாடு ஏற்பட்டு நீரிழிவு நோய் வரும்.

ஹார்மோன்கள் சுரப்பதில் குறைபாடுகள் இருக்கும். இது ஆண்மைக்குறைவுக்குக் காரணமாகலாம். பெரியவர்களாகும் போது, உடல் உறவில் நாட்டம் குறையும்.

நுரையீரல் பாதிக்கப்பட்டு மூச்சுக்கோளாறுகள் வரும்.

இதய நோய்கள் வரும் வாய்ப்புகளும் அதிகம். மதுவுடன் சேர்த்துச் சாப்பிடும் உணவுகள் அதிக பாதிப்பை ஏற்படுத்தும்.

பார்வை பறிபோகும்.

மூளை, நுரையீரல், எலும்பில் காசநோய் வரலாம். சிறு நீரகங்கள் பழுதடையும்.

உயர் ரத்த அழுத்தம் ஏற்படும். ஊட்டச்சத்துக் குறைபாடு உண்டாகும்.

அதிக அளவு பீர் குடிப்பது கணையப் புற்றுநோய்க்கு வாசல் திறக்கலாம்.

மது, பாதுகாப்பற்ற உடலுறவுக்கு தள்ளும்.


பிற போதைப் பொருள்களை நாடச் செய்யும்.

மாணவர்கள் மதுவுக்கு அடிமையாவது எதிர்கால சமுதாயத்தை சீரழிப்பதாகும். அவர்களுக்கு மதுவின் தீமைகள் குறித்த புரிதல் இல்லை. எதற்காக குடிக்கிறோம் என்று கூடத் தெரியவில்லை. ஏதோ ஒரு ஆசையினால் குடித்துவிட்டு பின் அடிமையாகின்றனர் என மதுவுக்கு எதிராகப் போராடிவரும் **சசிபெருமாள்** கூறுகிறார்.

தெருவுக்குத் தெரு மதுக்கடைகளும் எளிதில் வாங்க முடிகிற நிலையும் மது அருந்துவதற்கு முக்கியமான காரணம் என்கிறார் டி.டி.கே மதுமீட்பு மையத்தின் இயக்குநர் மருத்துவர் **அனிதாராவ்**. வீட்டிலேயே ஆண், பெண் இருவரும் சேர்ந்து குடிக்கும் குடும்பங்கள் அதிகரித்துவிட்டன. இதனைப் பார்த்துக் கொண்டிருக்கும் குழந்தைகளுக்கு மது அருந்தவேண்டும் என்ற தாக்கத்தை ஏற்படுத்துகின்றது. இந்த நிலை தொடர்ந்தால் இன்னும் 20 ஆண்டுகளில் பேரிழப்புகளை நாம் எதிர்கொள்ள நேரிடும். குடி மிகப்பெரிய சமூக அவலம் எனக் கூறுகிறார்.

தமிழகத்தில் மது விற்பனை செய்ய அரசு நடத்தும் டாஸ்-மாக் மற்றும் தனியார் பார்கள் என ஏழாயிரத்துக்கும் மேற்பட்ட கடைகள் உள்ளன. தமிழக அரசின் மொத்த ஆண்டு வருவாயில் மதுவிற்பனை மூலம் சராசரியாக 30 % கிடைக்கிறது.

ஒவ்வொரு ஆண்டும் மது விற்பனையின் அளவு அதிக-மாகிக் கொண்டே இருக்கிறது. மாதந்தோறும் விற்பனை அளவு அதிகரிப்பது கண்கூடாகத்தெரிகிறது. விழாக்காலங்களில் அரசாங்-கமே அதிகப்படியான மதுக்கடைகளை திறந்து விற்பனை செய்கிறது. எந்தக் கட்சி ஆட்சிக்கு வந்தாலும் டாஸ்மாக் விற்பனை மூலம் கிடைக்கும் வருவாயே மாநிலத்தின் நிதிப்பற்றாக்குறையை சமாளிக்க உதவுவதாக சொல்கின்றன.



Complications of chronic alcoholic toxicity
(from Robin 4th edition, 2005)

மதுவிலக்கு என்பது நடைமுறைக்கு சாத்தியமில்லாதது. இதனால் கள்ளச்சாராயம் பெருக்கெடுத்து ஓடும் என வாதிடுவர் பலருண்டு. ஆனால் தற்போது எதிர்காலத்தமிழர் நலன் கருதி மதுவிலக்கை அமுல்படுத்த வேண்டிய அவசர காலத்தில் உள்ளோம். மதுவின் தீமைகளை விளக்கி மக்களை நல்வழிப் படுத்த முயற்சிகள் மேற்கொள்ள வேண்டும்.


இன்றைய இளைஞர் சமுதாயம் மதுவிற்கு மிக வேகமாக அடிமையாகின்றனர். மேற்படிப்பிற்காகத் தங்களை தயார்படுத்த வேண்டிய இளைஞர் சமுதாயம் போதைக்கு அடிமையாகிக் கொண்டிருக்கிறார்கள்.

தெருவுக்குத் தெரு மதுக்கடை. நம்மைச் சுற்றிலும் மதுவுக்கு அடிமையானவர்கள். நமது சிந்தனையைக் கெடுக்கும் திரைப்படங்கள் இந்தச் சமூகச் சூழலில் இருந்து குழந்தைகளைக் காத்து, மீட்டுக்கொண்டு வருவது என்பது ஒரு கடினமான பணி.

சிறுவர்கள் பள்ளிப்பருவத்திலேயே மதுவுக்கு அடியாகி விட்டனர். இதனால் மூளைவளர்ச்சி கடுமையாக பாதிப்படை -கிறது. குடிப்பழக்கம் இருக்கும்போது உணவுப்பழக்கம் சிதைவ -டைகிறது. சரியான நேரத்தில் உணவு அருந்தாமல் இருப்பதால் ஜீரண மண்டலம் பாதிப்படைகிறது. மூளை நரம்புசெல்கள் சிறிதுசிறிதாகச் சிதலமடைந்து மனக்குழப்பத்துக்கு இட்டுச் செல்கிறது.

❑

physiological effects of alcohol



6. அறிஞர்கள் பார்வையில் மது

திறமையாகப் பணிபுரிவதற்கு மது ஒருபோதும் உதவியாக இருந்தது இல்லை. ஒவ்வொரு துளி மதுவும் விஷமே.

– டாக்டர் எச்.எச்.பட்டேல்.

ஒரு மனிதன் மதுவைக் குடிக்கிறான். அதன் பிறகு மதுவே அவனை குடிக்கச் செய்கிறது. அதன் பிறகு மதுவே மனிதனைக் குடித்து விடுகிறது *– ஜப்பானியப் பழமொழி.*

நீரில் மூழ்கியவனைப் போல, முட்டாளைப் போல, பைத்தியக்காரனைப் போல ஒரு குடிகாரன் ஆகிவிடுகிறான்

"மதுவில் ஒழிந்திருக்கும் சக்தியே! ஒயினே! உனக்கு ஒரு பெயரும் இல்லாவிட்டால் உன்னை பிசாசு என்றே அழைப் –போமாகா!" *– ஷேக்ஸ்பியர்.*

கணவன் குடித்தால் பாதி வீடு எரிந்து கொண்டிருக்கும். மனைவி குடித்தால் முழுவீடும் எரிந்து கொண்டிருக்கும்

– இரஷ்யப் பழமொழி.

மது அருந்துவதால், மயக்கம், புலம்பல், பைத்தியம், தூக்க மின்மை, நரம்புத்தளர்ச்சி, வலிப்பு, பக்கவாதம், தொண்டை கொதிப்பு, இரைப்பைப் புண், கல்லீரல் வீக்கம், மூத்திர நோய், இருதய நோய், இரத்த குழாய் தடித்தல், சுவாச பாதிப்பு, எலும்புருக்கி நோய், குடல்புண், கண்களில் கொதிப்பு போன்ற நோய்கள் வரும் *– மருத்துவ நிபுணர் சர்.விக்டர் ஹார்ஸ்லி.*

சமுதாய சீர்குலைவு :

நாம் உட்கொள்ளும் எல்லா வகை உணவுகளையும் விட மது வகைகளுக்கு மட்டுமே நமது புலன்களைத் தன்வயப்படுத்தி ஆளத்தக்க வலிமை உண்டு. குடிப்பழக்கத்திற்கு அடிமையான ஒருவன் தன்னைத்தானே ஆளமுடியாமல் தன்னை மது வகை

-களிடம் ஒப்படைத்து விடுகிறான். குடிப்பழக்கத்திற்கு அடிமைப் பட்டவன் எந்தக் காரியத்தையும் அளவறிந்து செய்ய முடியாமல் போகிறது. அந்த நிலையில் குறித்த வேலையைக் குறித்த நேரத்தில் குறித்த முறையில் செய்ய இயலாமல் தவிக்கின்ற அவன் தனக்கும் சமுதாயத்திற்கும் இடையேயுள்ள உறவையும் சீர்குலைக்கிறான். ஆகவேதான் குடிப்பழக்கத்தையும் விலக்கத் தக்க ஒன்றாகக் கொள்கிறோம். *— பொற்கோ.*

காப்பாற்ற எழுங்கள் :

வெளிநாட்டான் வந்து தாக்கி ஒரு நாட்டின் உரிமையைப் பறிக்க முயன்றால் அந்நாடு முழுவதுமே அவனோடு போரிடத் தம் ஆயுதங்களோடு திரண்டு எழும்.

இங்கே பூமித்தாயும் கடலும் நமக்குத் தரும் செல்வங்களை எல்லாம் கொள்ளை அடிக்கும் ஒரு கொடிய பகைவன் உள்ளே புகுந்துள்ளான். நாடு முழுவதையுமே பாழ்படுத்தும் இந்தப் பகைவனுக்கு எதிரே ஒரு நாடு எப்படி நடந்து கொள்ள வேண்டும்?

அந்த எதிரியை எதிர்த்துப் போராடி அழிக்க வேண்டிய கடமையும் பொறுப்பும் நமக்கு உள்ளதல்லவா? அதேபோல மது என்னும் எதிரியை அழிக்க வேண்டிய பொறுப்பு ஒவ்வொரு மனிதனுக்கும் உண்டு. *— ரிச் மாண்ட் – பி – ஹாப்சன்*

முழுவதுமாக ஒழிப்போம் :

கொள்ளை அடித்தல், அடிமை வியாபாரம் செய்தல் போலவே மதுபானத் தொழிலையும் ஒழுங்குபடுத்த இயலாது. முழுவதுமாக எதிர்த்து அடியோடு ஒழித்துவிட வேண்டும்.

— ஜோசப் குக்.

மண் தின்னும் மனிதன் :

நண்பரே! நீர் குடிக்கும் ஒவ்வொரு கோப்பை ஜின்னுடனும், உம் நிலத்தின் ஒரு பகுதியையும் சேர்த்துக் குடித்து வருகின்றீர்.

நண்பர்கள் சிலரோடு சேர்ந்து குடிக்கும்போது இன்னும் சில நிலப்பகுதிகள் உம்மை விட்டுப் போய்விடும். விருந்து விழாக் -களில் இன்னும் அதிகமாகவே உம் சொத்துக் கரையும். முடிவில்

புதைகுழியில் உம்மைப் புதைக்கும்போது அந்த மண்ணையும் நீர் தின்பீர். நீர் நல்ல விவசாயியாக ஒருபோதும் ஆகவே முடியாது.

– டுவெண்டியத் செஞ்சுரி ஸ்பீக்கர்.

தடுப்பது நியாயமே :

"நோய்வாய்ப்பட்ட மாடுகளை நல்ல மாடுகளுடன் சேரும் –படி விடக்கூடாது" என்று தடை விதிக்கிறது நம்நாடு. அதே நாடு, "தொற்றுநோய்த் தன்மை உடையது" என்று மக்கள் கருதுவதும், நோய்வாய்ப்பட்ட மாடுகளை விட மிகுந்த கேடுவிளைவிப்பது –மான மதுவையும் மக்களிடையே பரவவிடக்கூடாது என்று தடை செய்வது நியாயமானது அல்லவா? அதை ஏன் செய்யவில்லை.

அமெரிக்க துணை நீதிபதி, ஜான் மார்ஷல் ஹார்லன்.

தக்கை மூடிகள் :

"தக்கை உடைகள் காப்பாற்றிய உயிர்களை விட அதிகமான உயிர்களைத் தக்கை மூடிகள் சாகடித்துள்ளன" (தக்கை மூடி : பாட்டிலின் கார்க் ; நீரில் அமிழாமல் காப்பது தக்கை உடை).

– மாலுமி தாமஸ் லிப்டன்

மதுவைக் கொன்றுவிடுங்கள் :

நெப்போலியனின் படையிலே இருபத்து மூன்று ஆண்டுகள் பணியாற்றியவர் கர்னல் லெமனாஸ்கி. இவர் ஒரு கூட்டத்திலே பேச எழுந்தார். நிமிர்ந்து நின்று, முகத்திலே உடல் நலம் ஒளிவீச, உயர –மான அந்தக் கிழவர், கணீரென்ற குரலில் பேசத் தொடங்கினார்.

"எழுபது வயதான ஒருவனை உங்கள் முன்பாக நீங்கள் பார்க்கிறீர்கள். நான் இருநூறு போர்களில் சண்டையிட்டு இருக்கிறேன். என் உடலிலே பதினான்கு காயங்கள் உள்ளன. முப்பது நாட்கள் குதிரை மாமிசமும், மரப்பட்டைகளுமே உணவாகவும், பனியும் பனிக்கட்டியுமே தண்ணீராகவும், வானமே போர்வையாகவும், காலில் செருப்போ காலுறையோ இல்லாமல், சில கந்தைத் துணிகளோடு மட்டுமே காலம் கழித்திருக்கின்றேன்"

"எகிப்திய பாலைவனத்தில் எரிக்கும் வெயிலில் பல நாட்கள் நடந்து சென்றிருக்கிறேன். கால்கள் வெந்து போக, கண்கள் மூக்குத் துவாரங்கள், வாய் எல்லாம் மணல் எழுந்து மூடிக்கொள்ளச் சென்றிருக்கிறேன். தொண்டை வறட்சி பொறுக்க முடியாமல், என் இரத்தக் குழாயையே அறுத்து ஒருசமயம் என் வாயை நனைத்து மிருக்கிறேன்"

"இந்தப் பயங்கரத்திலிருந்து எல்லாம் நான் எப்படித் தப்பினேன் என்கிறீர்களா? **என் வாழ்நாளில் நான் ஒரு சொட்டு மதுவைக்கூட அருந்தியதே இல்லை.**"

எகிப்திலிருந்து உயிரோடு திரும்பிய 6000 படை வீரர்களில் பெரும்பாலோர் குடிப்பழக்கம் அற்றவர்களே என்பது பிரெஞ்சுப் படையின் மருத்துவ உதவியாளர்களுள் ஒருவரான "பேரன் லேரி"யின் கருத்தாகும். – *பாதிரியார். டட்லி எ.டிங்.*

மிகவும் அதிகம்

போர்கள், கொள்ளை நோய்கள், பஞ்சங்கள் இவை மூன்றும் ஒன்று கூடி செய்த அழிபாடுகளை விட மதுவின் அழிபாடு மிக அதிகமாகும். – *கிளாட்ஸ்டன்.*

அழித்தது மது

மது மயக்கம்போல உலகில் அத்தனை குற்றங்களும் அவ்வளவு மனிதர்களை அழித்ததில்லை. சொத்துக்களை அழித்ததும் இல்லை. – *பேகன் பிரபு.*

கொள்ளை நோய்

ஷயரோகம், மேகவியாதிகள் போன்ற கொடிய நோய்களை விட, மதுப்பழக்கம் என்னும் மிகக்கொடிய நோய் நம்நாட்டிலே மிகவும் மிகுதியாகப் பரவி வருகின்றது. இதை தடுத்து நிறுத்த வேண்டும். – *டாக்டர் கான்ராட் வெஸ்ஸல் ஹாப்ட்.*

சுதந்திர உணர்வு சாகிறது

மதுப்பழக்கம் குழந்தைகளிடம் அடிமைப் புத்தியை உண்டாக்குகின்றது. மதுப்பழக்கமற்ற குடும்பங்களில் உள்ள குழந்தைகளில் 82 சதவிகிதம் வரை இந்தத் தாழ்வு மனப்போக்கு

எவ்வகையிலும் காணப்படுவதில்லை. இப்படியே மதுப்பழக்க-முள்ள குடும்பங்களில் 72 சதவிகிதத்திற்கும் மேற்பட்ட பிள்ளை-கள், இந்தத் தாழ்வு மனப்போக்கினைப் பெற்றுள்ளார்கள்.

இதனால், அடிமைப்படுத்தியுள்ள குழந்தைகள்தான் அங்கே இருந்தாக வேண்டும் என்ற முடிவுக்கு வரலாம். அப்போதுதானே தந்தையின் சொந்தச் சுதந்திரத்தில் குறுக்கீடு இருக்காது. அவர்கள் மனைவியரிடமோ, தலைநரைத்த அன்னையரிடமோ சென்று சொந்த சுதந்திரம் பற்றிப் பேசிப் பாருங்கள். ஒரே வேதனைதான்.

– டி.எஃப். ஆண்டர்சன்.

மது தீமைகளைத் தவிர ஒன்றுமே செய்யவில்லை.

– டால்ஸ்ராய்.

மதுவால் ஏற்படும் அழிவுகள்

மது முட்டாளாக்குகிறது; பைத்தியமாக்குகிறது.

– பிஸ்மார்க்.

மது பலத்தைக் குறைக்கிறது. *– மாத்யூ உட்ஸ் எம்.டி.*

மனித சமுதாயத்தின் ஒவ்வொரு துறையையும் மது கெடுக்கிறது. *– தி.ரோசனாவ்ஸ்.*

கான்சரையும், ஷயரோகத்தையும் பரப்புகின்றது

– சர் விக்டர் ஹார்ஸ்வி.

ஜீவனுள்ள உயிரணுக்களை நஞ்சாக்கி, அழிக்கிறது.

– பேராசிரியர் காராவிட்ஸ்.

நம் புதிய போர் ஆயுதங்களை விட அதிகமான பேரைக் குடிப்பழக்கம் கொல்லுகிறது *– ஓல்ஸ்லே பிரபு.*

நோய் பற்றுவதற்கான சூழலை அதிகரிக்க, அது கடுமையாக உதவுகிறது நோய் நீங்குவதையும் கெடுக்கின்றது.

– ஏ.கே.சால்மர்ஸ் எம்.டி.

தார்மீக எண்ணங்கள் நன்றாகச் செயற்படுத்துவதற்கு வேண்டிய வறுமைச் சூழல்களே மதுவை ஒழித்துவிட்டால் இல்லாமற் போய்விடும். *– பிலப்ஸ் புரூக்ஸ்.*

எந்த யுத்தமும், பிளேக், காலரா ஷயரோகம் பஞ்சம் முதலிய -வையும் இவ்வளவு பேர்களை அழித்ததில்லை. இவற்றை தந்தது மதுதான். *– சார்லஸ் டார்வின்.*

தாழ்ந்துவிட்ட மனித இயல்பின் ஒவ்வொரு ஆர்வத்தையும் மது உருவாக்கி வலுவாக்கிக் கடுமையாக்கி விடுகின்றது. தீமைகட்கு எல்லாம் மதுதான் ஆதாரமாக நின்று அவற்றை முன்னேறச் செய்கிறது. *– ஜான் B.கோக்.*

குடிகாரனின் பாங்க்

முட்டாள்தனமாக நாம் செலவளிக்கும் ஒவ்வொரு டாலரை -யும், எவனோ ஒருவன் சேமித்துக் கொள்கின்றான். உங்கள் பணத்தை சேவிங்ஸ் பாங்கில் போடுகிறீர்களா? மதுபானப் பாங்கில் போடுகிறீர்களா?

மதுபான பாங்கில் போட்டு வந்தால் உங்கள் பணத்தை இழக்கிறீர்கள். உங்கள் நேரத்தை இழக்கிறீர்கள். உங்கள் சுய மரியாதையை இழக்கிறீர்கள். உங்கள் ஆன்மாவையே முடிவில் இழக்கிறீர்கள்.

மதுக்கடை என்பது நரகப்பாதையிலே போகும்போது கட்டணம் வசூலிக்கும் ஒரு "டோல்கேட்" ஆகும்.

பிரார்த்தனை தொடரும்

குடிபோதை காரணமாக ஒரு தகப்பனின் வேலை போய்விட்டதாலே அவன் பிள்ளைகளின் வயிற்றிலே உண்டாகும் பசி எழாமல் போய்விடாது.

மதுபானத் தொழில் அதை நடத்துவோரின் பிள்ளைகளைத் தவிர வேறு எவர் பிள்ளைகளும் கல்வி கற்பதற்கு உதவி செய்வதில்லை. ஆனால், பல்லாயிரக்கணக்கான பிள்ளை -களுக்குப் பள்ளிக்கூட வசதிகளை மூடுவதில் மட்டும் அது தீவிரமாகத் துணை செய்கிறது.

மதுபான வாணிகம் வேண்டுமென்றோ, மதுபானத் தயாரிப்பு அதிகமாக வேண்டுமென்றோ, குடிகாரர்களும் குடிகார மனைவிமார்களும் பிள்ளைகளும் நாட்டிலே பெருக வேண்டு மென்றோ, எவரும் ஆண்டவனை நோக்கிப் பிரார்த்திப்பதில்லை.

ஆனால், கடற்கரை மணலினும் அதிகமான பேர்கள் மது வானது ஒழிக்கப்படுவதை வேண்டி, நாள்தோறும் பிரார்த்தனை செய்கின்றனர்.

வாக்குச் சீட்டுகளால் அரசாங்கம் மாறி, இந்தப் பிரார்த்தனை -கள் நிறைவேறும் வரை, மக்கள் தினமும் பிரார்த்திக் கொண்டே இருப்பார்கள். *– டானியல் ஏ.போலிங்.*

பெரிய சாபக்கேடு

உழைப்பவனைப் பற்றிப் பீடிக்கும் பெரிய சாபம் மதுப் பழக்கமே ஆகும். வேலை நிறுத்தம், போர், நோய், சாவு என்பவை -களை விட மிகுதியான துயரத்தை அது கொணர்ந்திருக்கிறது.

ஏகபோகத் தனியுரிமை பெற்ற கொடுங்கோலனை விட, மதுப்பழக்கம் மிகவும் அரக்கத் தன்மை கொண்டதாகும்.

பசியாலும், குளிராலும் வாடி வதங்கி, தீயவர்களோடு சேர்ந்து வளர்ந்தாக வேண்டிய பரிதாப நிலைக்குப் பல ஆயிரம் சிறு குழந்தைகளை மது மிதித்துத் தள்ளியிருக்கிறது.

எந்தக் கொடிய பாபக்கேட்டையும்விட மதுவே அதிகமான வீடுகளைப் பாழாக்கியும், அதிகமானவரின் வாழ்வைச் சிதைத்தும் கொடூரம் புரிந்துள்ளது. *– கிப்பன்ஸ் பாதிரியார்.*

பாவநோய்க்கு மருந்து

சட்ட சம்மதமுடன் நடந்துவரும் ஒரு கொடுமையை ஒழிக்கச் சட்டப்பூர்வமான மருந்தே தேவை. மற்ற மருந்து மாத்திரைகள் எதுவும் வேண்டாம்.

சமூகத்தினைப் பற்றிப் படரும் இந்தப் புற்றுநோயை அறுத்தெறிய வேண்டும். சர்ஜனின் சக்தியை எங்களிடம் தாருங்கள்.

மதுத்தொழிலை எந்த வகையிலும் தொடரவிடக்கூடாது. அதை முழுதுமாக அழிப்பதே நம் பாவநோய்க்கு ஒரே மருந்து.

– கிளிண்டன் ஹோவார்டு.

நாட்டு நலன்

நாட்டின் நலன் என்ற ஒன்றையே நினைத்தால் ஒரே முடிவுக்கே நாம் வரவேண்டும். நாட்டு மக்களே அழிவைச் செய்யும் மதுவரக்கனை நாம் முதலில் அடியோடு அழித்தாக வேண்டும். *– ரிச்மண்ட பி.காப்சன்.*

நம்நாட்டு நிர்வாகச் சீர்குலைவுகட்கும், ஊழல்களுக்கும், பெருகிய தீமைகளுக்கும், நோய்களுக்கும் ஒரே மூலகாரணமான மதுவை நாம் ஒழித்தாக வேண்டும். *– கிளிண்டன் ஹோவார்டு.*

காப்பது இயலாது

எதற்காக மதுக்கூடம்?

மதுவாணிகம் என்னும்போது சாராயம் காய்ச்சும் இடங்-களையும், மது வடிக்கும் தொழிற்சாலைகளையுமே நான் குறிப்பிடுகின்றேன்.

திட்டமிட்டுப் பரவலாக நடைபெறுகின்ற மதுவின் மொத்த வியாபாரமும், சில்லரை வியாபாரம் மற்றும் பலவகையான மது விற்பனைகளையும் தான் நான் சேர்த்தே சொல்லுகின்றேன்.

ஒரே வார்த்தையில் சொல்வதானால், இவை எல்லாம் பேய்த் தொழில்கள் என்றுதான் கூறுவேன். பேயைக் கரைத்தே மதுவாகத் தருகின்றனர் என்பேன். *– உல்வார்ட் லாசன்.*

மதுவே நாட்டை விட்டுப்போ

மதுபானம் நாட்டை விட்டுப் போகத்தான் வேண்டும். இரவும் பகலும், ஊரிலும் வெளியிலும் அதற்காக நாம் உழைப்-போம். நாம் மனம் உடைந்து போய்விடமாட்டோம். மதுத் தொழிலை தூக்குக் கயிற்றில் மாட்டியே தீருவோம்.

இரத்தக்கறை பட்ட பண மூட்டைகளிடையே சாகும் தறுவாயில் மதுவரக்கன் கிடந்தபடி, “கொஞ்சம் தவணை தாருங்-கள். மேலும் பத்து லட்சம் டாலர் தருவோம்” என்று கெஞ்சினாலும் அவனுக்கு இரக்கம் காட்ட மாட்டோம்.

"இல்லை! நீ நரகத்திலே மூழ்கிப்போ. நாங்கள் உன்னை அனுப்பினோம் என்று சொல்லு" என்று அதன் கழுத்திலே குதிகாலால் மிதித்து அதைச் சாகடிப்போம். *— ஜான் ஜி. ஊல்லி.*

யுத்தங்களை விட, தொற்றுநோய்களை விட, கொடிய பஞ்சங்களை விட மிகவும் அழிவைச் செய்வது மது.

— கிளாட்ஸ்டன்.

மது மிகவும் அழிபாடுகளை உண்டாக்கும் கீழ்த்தரமான மனிதப்பழக்கம். *— வில்லியம் மக்கே.*

எந்த ஒரு நாட்டிலும், எந்த ஒரு காலத்திலும் மனிதர்களை கொல்வதற்கு கண்டுபிடித்தவற்றுள் மிகவும் கொடூரமான திறமையான கருவி மது. *— ஜான் ரஸ்கின்.*

மது உற்பத்தி சோம்பேறித்தனம், நோய்கள், வறுமை, குற்றங்கள் ஆகியவற்றை விருத்தி செய்யும் தொழில்.

— அமெரிக்க உச்சநீதிமன்றம்

நான் வெறுக்கின்றேன்

மதுபானப் பழக்கத்தினால் வரும் கெடுதல்களைப் போதுமென்னும் அளவுக்கு நான் பார்த்துவிட்டேன். அதனால் உண்டாகும் பொருள் இழப்பு, உடற்கேடு, மனச் சிதறல் அனைத்தையும் வேண்டிய அளவிற்குப் புரிந்து கொண்டேன். அதனால், கொட்டப்படும் கண்ணீர், அடையும் தலைவேதனை போன்றவற்றையும் நான் அறிவேன். உடனே பலன் தரக்கூடிய கடுமையான சட்டங்களால் அதைக் கட்டுப்படுத்த வேண்டும் என்றே நான் கருதுகிறேன்.

அந்தத் தொழிலிலே ஈடுபட்டிருப்பவர்களுடன் எனக்கு எந்த விதமான விரோத பாவமும் கிடையாது. ஆனால் அந்தத் தொடர்பையே நான் அடியோடு வெறுக்கின்றேன். அதன் ஒவ்வொரு நிலையையுமே வெறுக்கின்றேன். அந்தத் துறையையே நான் வெறுக்கின்றேன். அதன் பேராசை பற்றியும் துரோகம் பற்றியும் அதனை நான் மேலும் அதிகமாகவே வெறுக்கின்றேன்.

மது அரசியலிலே செலுத்தும் ஆதிக்கத்தை நான் வெறுக்கின் -றேன். நாட்டின் வாக்குரிமையைக் கீழ்மைப்படுத்தும் அதன் தொடர்ந்த முயற்சிகளை எல்லாம் நான் வெறுக்கின்றேன். சட்டங்களைக் கொஞ்சமும் மதியாத அதன் ஆணவப்போக்கை நான் வெறுக்கின்றேன்.

தொழிலாளியின் முதுகிலே மது ஏற்றும் சுமைக்காக அதை வெறுக்கிறேன். அறிவாளிகளுக்குப் புண்களை விளைவிக்கும் அந்த மதுவை நான் வெறுக்கிறேன். அது விளைவித்த கெடுதலாற் சீரழிந்த மனிதர்களின் காரணமாக, அதை நான் வெறுக்கின்றேன்.

சிறைச்சாலைகளையும் பிச்சைக்கார விடுதிகளையும் நிரப்புவது பற்றியும், அதன் விளைவான பைத்தியக்காரத்தனமான வளர்ச்சி பற்றியும், அது நிரப்பிய சமாதிக் குழிகள் குறித்தும், அதை நான் வெறுக்கின்றேன்.

தனக்கு இரையானவருக்கு அது தருகின்ற மன அழிவுக் -காகவும், ஆன்மாத் தளர்ச்சிக்காகவும், ஒழுக்கக் கேட்டுக்காகவும், அந்த மதுவை நான் அடியோடு வெறுக்கின்றேன்.

அது விளைவித்த பழி பாவங்களை நினைத்தும், அது குட்டிச் சுவராக்கிய குடும்பங்களை நினைத்தும், அது உடைத்து நொறுக்கிய இதயங்களை நினைத்தும், நான் மதுவை எப்போதுமே வெறுக்கின்றேன்.

இன்னும் பெண்கள், குழந்தைகள், முதியோர் போன்றவர் -களுக்கு அது விளைவித்துள்ள கொடுமைகளை நினைத்தும், மதுவை நான் மிகவும் வெறுக்கின்றேன்.

உயர்வு தாழ்வையும், உண்மை பொய்யையும், புண்ணியம் பாவத்தையும், நன்மை தீமையையும், நியாயம் அநியாயத்தையும், சுதந்திரம் அடக்குமுறையையும், விடுதலை கொடுங்கோலையும் வெறுப்பது போலவே, நானும் மதுவை மிக வெறுக்கின்றேன்.

– இந்தியானாவின் மாஜி கவர்னர் ஹான்லி.

மது ஒரு புற்றுநோய்

மதுப்பழக்கமானது சமுதாயத்தைப் பீடித்திருக்கும் ஒரு கொடிய புற்றுநோய். சமுதாயத்தின் ஜீவாதார அம்சங்களையே அது தின்று சீரணித்து விடுகிறது. சமுதாயத்தையே முடிவில் அது அழித்துவிடக் கூடும். அதை ஒழுங்குபடுத்த எடுத்துக் கொள்ளும் எல்லா முயற்சிகளும் பயனற்றுப் போவதுடன் அவையே அந்தக் கேட்டை மேலும் அதிகமாக்கிவிடவும் கூடும்.

இந்தப் புற்றுநோயை நெறிப்படுத்தும் முயற்சிகள் இனிக் கிடையாது. இதை அறவே ஒழித்தாக வேண்டும். ஒரு சல்லி வேரைக் கூட விட்டுவிடாமல் பறித்து எறிந்து விட வேண்டும்.

இதை நாம் செய்யாதவரை எல்லாப் பிரிவினரும் குடி போதைக்கு இரையாகி விடும் அபாயம் நம் நாட்டிலே இருந்து கொண்டேதான் இருக்கும். – *ஆப்ரகாம் லிங்கன்.*

ஒருவராவது மாறலாம்

விருந்து மண்டபத்திலே இளைஞர்களோடு கூடிக் கலந்து மகிழ்வதிலே எனக்கு எப்போதும் விருப்பம் இல்லை. மது குடிப்பது புத்திசாலித்தனமானது என்றோ, உடல் நலத்துக்குப் பாதுகாப் -பானது என்றோ எவருக்கும் உபதேசிக்கவும் நான் கருதவில்லை.

ஒரு கோப்பை திராட்சை மதுவிலிருந்து எந்த ஆனந்தத் -தையும் நான் பெறவில்லை. சுற்றியுள்ளவர்களைப் போலவே நானும் மதுவைப் பருகுவதனால், எந்தவிதமான மனத் திருப்தியையும் நான் பெறப்போவதும் இல்லை.

குடிக்க வேண்டுமென்று தோன்றும் மனவேகத்தை மாற்ற விரும்பும் ஒருவரையாவது என் நிலைமை மாற்றினாலும், அதுவே எனக்குப் போதும். – *வில்லியம் ஜென்னிங்ஸ் பிரயன்.*

பழக்கத்தின் பிடிப்பு

தன் துயரங்களைக் குடிபோதையிலே மூழ்கடிக்க முயல் -கின்றவன், அவை அதிலே நன்றாக நீந்தக்கூடும் என்பதை மட்டும் மறக்க வேண்டாம்.

பழக்கத்தின் சங்கிலிப்பிடிப்பு முதலில் சிறிதாகவே தோன்றும். ஆனால் இறுதியிலே உடைக்கவே முடியாதபடி அது மிகவும் வலுவாகி விடும் என்பதுதான் உண்மையாகும்.

– *நீதிபதி ஹாக்கின்ஸ்*

ஏமாற்றும் மாயம்

குளிரும்போது மது வெம்மை ஊட்டுவதாக நீங்கள் நினைக்–கின்றீர்கள். சூடாக இருக்கும்போது குளிர்ச்சி செய்வதாக நம்புகின்–றீர்கள். தளர்ச்சியில் வலிமை அடைவதாக மயங்குகின்றீர்கள்.

கூர்மையான வியாபாரத் திறனையும், திறமையான பேச்சாற்–றலையும் தருவதாகக் கருதுகிறீர்கள். உங்களைப் பெருஞ்செல்–வராகவும், சிறந்த குடிமகனாகவும், பெரிய அரசியல் தலைவராக–வும், மது உயர்த்துமென்றும் ஏமாறுகின்றீர்கள்.

எந்தப் பொருளாதார மதிப்பும் மதுவுக்குக் கிடையாது. அதற்கு அதிகமாகச் செலவு செய்யும் ஒருவன் காலுக்கு செருப்பு வாங்கவும் கூட காசில்லாதவனாக மாறிவிடுவான். அவன் எந்த அவசியத் தேவைகளுக்கும் பணமில்லாமலே வாடி வருந்துவான்.

மதுத் தொழில் பெரிய அளவிலே பல பகுதிகளிலும் தன் விஷ நாக்கை நீட்டிக் கொண்டிருக்கிறது. அது மக்களை தலை குனிய வைக்கின்றது. அதை எந்த நாளிலும் தலை எடுக்காதபடி ஒழித்துவிட வேண்டும். – *சி.எஸ்.லோங்காக்கர்.*

செய்வோமா

மதுபானங்களைத் தயாரிப்பவர்களும் விற்பவர்களும் உடலாலும், உழைப்பாலும், ஒழுக்கத்தாலும், அரசியல் கோட்பாடு–களாலும் தகுதியற்றுப் போய்விட்ட ஒரு மக்கள் கூட்டத்தையே நாட்டில் விருத்தி செய்கிறார்கள்.

எந்த உரிமையிலே மதுபான வாணிபத்துக்கு அனுமதி அளித்தோமோ அதே நிலையில் அதை முற்றிலும் ஒழிப்பதற்கும் நாம் உரிமை பெற்றிருக்கிறோம். சட்டபூர்வமாக ஒரு குற்றத்துக்கு இசைவு தருவதான பழியிலிருந்து நாம் விலகி விடு   ட வேண்டும்.

மதுவினாலே கிடைக்கும் வருமானம் எண்ணற்ற ஏழை மக்களின் உயிரையும் இரத்தத்தையும் வாழ்வையும் பறித்துப் பெற்ற வருமானம் என்று நினைத்தாவது, அதை நாம் ஒதுக்க வேண்டும்.

இதை நாம் செய்வோமா?

– டானியல் ஏ. போலிங்.

மிகப்பெரிய குற்றம்

குடிபோதை மிகவும் கெடுதலானது. குடிகாரரை உண்டாக்குவதோ மிகவும் கேவலமானது. குடிகார உற்பத்திக்கு அரசாங்கத்தின் அனுமதியும் ஆதரவும் தருவதென்பது ஆட்சியிலுள்ளோர்கள் வெட்கப்பட வேண்டிய கொடிய செயலாகும்.

மனிதர்கள் நலத்தைப் பாதுகாப்பதற்கென்னும் தெய்வீகக் கடமையிலே பொறுப்பேற்றிருக்கும் ஓர் அரசாங்கமானது, சொல்லவே கூசும் கேவலமான குடிகாரர்களை உற்பத்தி செய்யும் கொடுமைக்கும் ஆதரவளித்து அதைச் சட்ட சம்மதியானது என்றும் ஏற்படுத்துவது என்பது மிகக்கொடிய தவறாகும்.

"குடிகாரனைத் தயாரிப்பவன் அந்த வேலையை செய்வதற்குக் கட்டணமும் செலுத்துகின்றானே" என்று சொல்வது மிக மோசமான வெட்கப்பட வேண்டிய தவறான வாதமாகும். இதைக் கண்டிக்க வார்த்தைகளே போதாது.

மிகவும் பெரிய குற்றம் அது! மனித வரலாற்றின் மாபெரும் அட்டூழியம் அது! அழிவையும் சாவையும் விளைவிக்கும் மிகக் கொடிய துரோகம் அது!

எர்வின் எஸ்.சாப்மென் டி.டி.எல்.எல்.டி.

மதுவின் கொடுமை

நம்மிடம் துயரமில்லையானால், மது அவற்றை உற்பத்தி செய்து படைக்கிறது.

நம்மிடம் துன்பமிருந்தால், மது அதைப் பெரிதாக்கி நம்மால் சகிக்க முடியாததாக வளர்ந்து விடுகிறது.

ஒரு பசுமையான மரத்தை மின்னல் பாய்ந்து அழித்து மொட்டை மரமாக்கிவிடுவது போல, மது இளைஞர்களைப் பற்றித் தீய்த்து விடுகின்றது.

ஒழுக்கத்தின் திருடன் மது.

நீதி நிர்வாகத்தையே மது நிலைகுலையச் செய்கிறது.

கோர்ட்டுகளில் போய்ப் பாருங்கள்; சிறைச்சாலைகளிலே சென்று பாருங்கள்! மதுவின் கொடுமை புரியும்.

குடும்பங்களின் அமைதி குன்றினால், மதுவே முதன்மை -யான காரணமாக இருக்கும்.

வேட்டைக்காரனின் துப்பாக்கிக்கு முன்னால் அச்சத்தால் சிதறி யோடும் பறவைகளைப் போலத் தந்தையரைக் கண்டு பிள்ளைகளை ஓடிப் பதுங்க வைப்பதும் மதுவேதான்.

– எம்.ஆர்.பாட்டர்சன், தன்னசி மாகாண மாஜி கவர்னர்.

காட்டு மிருகம்

நாகரிகம் என்ற பெயரால் நடுச்சாலைகளிலே, விரும்பியபடி அழிவு செய்வதற்கு, அனுமதி தந்து அவிழ்த்து விடப்பட்டிருக்கும் மதுவென்னும் கொடிய காட்டு மிருகத்தை நான் கடுமையாகவே எதிர்க்கின்றேன்.

நம்முடைய அறியாத பிள்ளைகள் மதுவின் வாய்க்குள் வீழ்ந்து இரையாக வேண்டுமா? நம்முடைய குடும்பங்கள் நரகமாக வேண்டுமா? இதற்கு சட்டத்தின் அனுமதியா?

நம்நாட்டு நிர்வாகச் சீர்குலைவுகட்கும், ஊழல்களுக்கும், பெருகிய தீமைகளுக்கும், நோய்களுக்கும் ஒரே மூல காரணமான மதுவை நாம் ஒழித்தாக வேண்டும்.

– கிளிண்டன் ஹோவார்டு.

கவி வாக்கு

நஞ்சின் வெறியாலே எழுப்பப்பட்டுச்
சிலர் நெஞ்சை நிமிர்ந்து நடக்கிறார்கள்!
அதன் பயங்கரமான விளைவுபற்றித் தெரியாமல்
அதை மறந்தேதான் அப்படி நடக்கிறார்கள்!

ஆனால், விரைவாகவோ, காலம் தள்ளியோ,
முடிவுகாலம் என்பதும் வந்துவிடுகிறது!
ஒருவன் உயிரோடிருப்பதற்காக,
தொண்ணூற்றொண்பது பேர், அங்கே
அழிந்து போகின்றனர்!

— கவிஞர் ஜேம்ஸ் ஸ்மித் (1776–1839).

மதுவின் நிழலில் நிற்பதும் மரண வாயிலின் நிழலில் நிற்பதும் ஒன்றுதான். மதுவானது தான் புகுந்த வீட்டில் பிரகாசித்தே மங்கச் செய்கிறது. இந்த மதுவானது வீட்டிலே உள்ள சின்னஞ்சிறு குழந்தைகளின் மோகன சிரிப்பொலியை போக்கி விடுகிறது. துயரத்தையும், பசி கொடுமையையும் நிழலாடச் செய்கிறது.

உலகம் தோன்றிய காலத்தில் இருந்து இதுவரை எண்ணற்ற போர்கள் உலகில் நிகழ்ந்துள்ளன. எண்ணிலடங்கா தொற்று நோய் கள் அளவில்லாத மக்களை அழித்துள்ளது. இவற்றால் உயிர் இழந்த மக்களைக் காட்டிலும் மதுவால் உயிரிழந்த மக்களின் தொகையானது மிகுந்த பலமடங்கு என்பது முற்றிலும் உண்மையாகும்.

இலட்சக்கணக்கான ஆண்டுகளாகவே மது தன்னுடைய கொடுமையான அழிவுச் செயலை தொடர்ந்து இடைவிடாமல் செய்து வருகிறது. துக்கத்தையும், சோகத்தையும் உலகெங்கும் நிரப்பி வருகிறது.

அருமையான வளமையான ஒளி மிகுந்த பல நாடுகளிலே மதுவானது புகுந்து அந்த நாடுகளை குட்டிச் சுவர்கள் நிறைந்த பாழ்பட்டுப் போன இடங்களைக் கொண்டதாக உருமாற்றி விடுகிறது.

மதுவானது நோய்கள் மலிந்த பரிதாபத்திற்குரிய அசிங் –கமான ஒரு பிராணியைப் போல அவனை உருமாற்றி அவன் வாழ்க்கையையும் குட்டிச் சுவராக்கி விடுகிறது.

மதுவானது ஒருவனது இளமைக் காலத்தில் பற்றிக் கொண் –டால் அவ[illegible]மையான இளமைக் காலத்தை அழித்து விட்டு [illegible] வேகமாக அழைத்துச் செல்கிறது.

மதுவானது கல்விச் சாலையினுள் புகுந்து இளம் வயது மாணவர்களையும் பிடித்துக் கொள்கிறது. அவர்களை ஒழுக்கமற்ற –வர்களாகவும், பொறுப்பற்றவர்களாகவும், உருப்படாதவர்களா –கவும் மாற்றி விடுகிறது.

குடிகாரர்கள் தேவ சாம்ராஜ்யத்தை ஒருபோதும் சேர்வ –தில்லை என்பது தெய்வீக வாக்கு. இருண்ட மதுப்புட்டியின் கோர நிழல் உலகத்தோடு மட்டும் ஒருவனை விட்டு விடுவதில்லை. நரகம் வரை தொடர்ந்து அவனை தள்ளிச் சென்று அதில் தள்ளிவிட்டுத்தான் வருகிறது. *– ஜி.எஸ்.தாம்சன்.*

பிரார்த்தனைகள் வீணாகாது

இந்து சாம்ராஜ்யத்தின் ஆதிக்கத்தை அதன் கோரப்பிடியிலே சிக்கி மனித சமுதாயத்தின் சீரும் சிறப்பும் கெட்டழிவதை, நியாய புத்தியுள்ள ஒவ்வொருவரும் நினைத்து, அதை ஒழிப்பதற்குத் தீவிரமாகப் பாடுபட வேண்டும். குழந்தைகளின் கபடமற்ற பிரார்த்தனைகளும், ஒரு போதும் வீணாகப் போனதில்லை; போவதுமில்லை! *– கெண்டால், அமெரிக்க மக்கள் பிரதிநிதி.*

மதுவிலிருந்து தப்பக்கூடிய ஏழைக்குடிசைகள் எதுவுமே இல்லை. அது உள்ளே விடாமல் காவல் காத்து நிற்கும் வலிமை படைத்த கட்டடம் எதுவும் இல்லை.

இன்று அது குழந்தையின் வாயில் இருக்கும் ரொட்டித் துண்டை தட்டி விடுகிறது. நாளை அது அரசாங்கத்திடமிருந்து மானியத்தை விதிக்கக் கூடும்.

அது, வாக்குகளை வற்புறுத்திப் பெற முடியாத போது சட்டங்களை மீறிச் செல்கிறது. அது, அமைதிக்கும் ஒழுங்குக்கும் கொடிய பரம விரோதி. மனிதர்களையே அழிப்பது அது.

பெண்களை அஞ்சி, நடுநடுங்க வைப்பது, குழந்தைகளின் முகத்திலே படர்ந்து மூடி மறைக்கும் கருமேகமது. ஏராளமான கல்லறைகளை உருவாக்கிய அரக்கன் அது. *– ஹென்றி கிராடி.*

அழிப்பதற்கு உரிமையா?

நாம் அரசாங்கம் லைசென்ஸ் என்ற போர்வையிலே மதுத் தொழிலுக்கு சட்டப்பூர்வமான தொழில் நடத்தும் உரிமையைத் தடுக்கின்றது. இப்படி உரிமை தருவதற்குத் தனக்கே உரிமையிருப் -பதாகவும் அரசாங்கம் நினைக்கிறது.

இது நாட்டிலே விதவைகளையும், அநாதைகளையும் உண்டாக்குவதற்குத் தனக்கு உரிமையுள்ளதாக அரசாங்கம் நினைப்பதைப் போன்றதாகும்.

குடும்பங்களைச் சிதைப்பதற்கும், வறுமையையும், குற்றங் களையும், பெருக்குவதற்கும் தனக்கு வலிமையுள்ளதாக ஒரு அரசாங்கம் நினைப்பதாகும்.

கொலைகாரர்களையும், முட்டாள்களையும், பைத்தியக்காரர் களையும், கொள்ளைக்காரர்களையும் அதிகமாக்கத் தனக்கு உரிமையுள்ளதாக கருதுவதாகும்.

அநாதை இல்லங்களையும், பிச்சைக்காரர் விடுதிகளையும், மன நோயாளர் மனைகளையும், சிறைச்சாலைகளையும் நிரப்பு -வதற்குத் தனக்கு உரிமையுள்ளதென்று அரசாங்கம் நினைப்ப -தாகும். தூக்கு மரத்திற்கு ஆட்களைத் தொடர்ந்து அனுப்புவதற்குத் தனக்கு உரிமையுள்ளதாக ஒரு அரசு எண்ணுவதாகும்.

– நீதிபதி சாமுவேல் ஆர்.ஆட்மேன்

உழவை மறந்த வயல்

மதுபானப் பழக்கத்தைப் போன்ற சமுதாயக் கோளாறுகளின் விளைவுகள், சன்னலற்ற வீடுகள் போலவும், வேலையில்லாத தோட்டங்களைப் போலவும், உழவை மறந்த வயல்களைப் போல -வும், கூரையற்ற குடிசைகளைப் போலவும், குறிக்கோள், ஒழுக்கம், பண்பு போன்ற ஆடைகளற்ற குழந்தைகளைப் போலவும் அழிவை நோக்குவனவேயாகும். *– பென்ஜமின் பிராங்க்ளின்.*

ஏ மனமே! குடி மனிதனின் நல்லறிவைக் கெடுத்து, உயிரை வதைத்து சித்திரவதை செய்வதுடன் தாய்க்கும் மனைவிக்கும் வித்தியாசம் தெரியாதபடி செய்து விடுவதோடு மேலும் மாபாதகங் -களையும் துணிந்து செய்யத் தூண்டிவிடும் என்பதை மறவாதே!

– கந்தாசிரமம், சேலம்.

“மதுவை ஒரு தட்டிலும் மற்ற பாவங்களை எல்லாம் ஒரு தட்டிலும் வைத்தால் சரிசமானமாய் இருக்கும். குடிவெறியைவிடக் கொடிதான பாவம் எதுவும் இதற்கு முன்னும் இருந்ததில்லை. இனிமேலும் இருக்கப் போவது இல்லை”

– சாணக்கியர்

“மக்களிடையே நன்னடத்தையும், கற்பும் நிலவ வேண்டு -மாயின் மதுவை விலக்கியே ஆக வேண்டும். இல்லாவிடில் உலகம் முழுவதிலும் சத்திய தர்மங்கள் இல்லாமல் போகும் பொறுப்பு உணர்ச்சியும் போய்விடும்”

– பீஷ்மர்.

“குடி போதையிலிருக்கும் மனிதன் செய்யும் வெறுக்கத் -தக்க காரியங்களுக்கு கணக்கில்லை. அவனுக்கு இந்த உலகத் -திலும் துன்பந்தான். மேல் உலகிலும் துன்பந்தான் குடிகாரன் பையிலுள்ள பணத்தைப் பிறர் பறித்துக் கொள்வார்கள். போதை நீங்க நினைவு வந்த பிறகுதான் பறிகொடுத்த பணத்தைத் தேடி அவன் இங்கும் அங்கும் அலைவான்”

– மகாவீரர்.

“பங்கியும், புகையிலையும், அபினியும், கலியுகத்தின் எம தூதர்கள்”

– கபீர்தாசர்

“நீங்கள் சாலையில் போய்க்கொண்டு இருக்கையில் சாலையின் ஒரு புறத்தில் மதங்கொண்ட யானை ஒன்றையும், மற்றொரு புறத்தில் ஒரு கள்ளுக்கடையையும் கண்டால், யானையின் பக்கம் ஒதுங்கி அதனால் மிதிபட்டுச் செத்தாலும் சாகுங்கள். ஆனால், மதுக்கடை பக்கம் மட்டும் செல்ல வேண்டாம்”

– சைதன்யர்.

தன் மனைவி, குழந்தைகள், பணியாட்கள் எல்லோரு -டனும், குடிகாரனுக்குத் தகராறுதான். அவர்களுக்கு நிம்மதியே இல்லாது போகிறது. எல்லோரையும் பகைத்துக் கொள்வதால் குடிகாரனுக்கும் நிம்மதி இருப்பதில்லை.

– ஜராதுஷ்புரர்

மது வெறுப்பைக் காதலாக மாற்றுகிறது. பொறாமையை வெறியாக்குகிறது. நல்ல இதயம் படைத்து வீர புருஷனைக் கோமாளியாக்குகிறது. கோழையைக் கொலைகாரன் ஆக்குகிறது. ஆண்டவனது படைப்பில் மது மயக்கத்தில் ஆழ்ந்திருக்கும் மனிதனை விடக்கேடானது கிடையாது.

– அடிஸன்.

எந்த நாட்டார் மதுவைக் குடித்து வருகிறார்களோ அவர்கள் நாளுக்கு நாள் திறமை குறைந்து, முடிவில் உடலையும் மனத்தையும் கெடுத்துக் கொண்டு சர்வநாசம் அடைவார்கள் என்பதில் சந்தேகமில்லை.

– டாக்டர் ஸலீபி.

மதுவைத் தொடாத மனிதன் அதிக மகிழ்ச்சி அடைவான். சுகம் அதிகம் பெறுவான், பணம் மிகுதி பெறுவான்.

– ஸெர் ஆர்தர் கோனன்டாயல்.

கடலில் மூழ்கி இறந்தவரைவிட கள்ளில் மூழ்கி இறந்தவரே அதிகம்

– பப்ளியஸ் ஸைரஸ்.

“பூமியைப் பிளந்து உலகில் உள்ள மதுபானக் கடைகளை எல்லாம் விழுங்கிவிடச் செய்வதற்கு என்னிடம் ஒரு மந்திரசக்தி இருந்தால், நான் உடனே அப்படிச் செய்துவிட்டு, மனித சமூகத்துக்கு அளவிலாத நன்மை புரிந்ததாக எண்ணி மகிழ்ச்சி அடைவேன்.

– ஆர்ச்பிஷப் கீன்

மதுவை அடியோடு தடுத்துவிட்டால் மக்கள் எல்லோரும் தேகசுகத்துடன் மனமகிழ்ச்சியுடன் வாழலாம்.

– மில்டன்

ஆண்டவனே! மக்கள் தங்கள் மதியென்னும் மாணிக் கத்தைத் திருடக்கூடிய பகைவனைத் தங்கள் வாயில் விட்டுக்கொள்கிறார்கள். (மது அருந்துகிறார்கள்) இது ஒரு விந்தை. மகிழ்ச்சி ஆரவாரத்துடன், களியாட்டங்களுக்கு மத்தியில் மக்கள் தங்களை விலங்குகளாக மிருகங்களாகச் செய்து கொள்ளுவது ஓர் அதிசயம் தான். *– ஷேக்ஸ்பியர்*

உலகில் மக்கள் மிகவும் கேடான சமூக நிலைமைகளைச் சகித்துக் கொண்டு முன்னேற்றமடையப் பெருமுயற்சி எதுவும் செய்யாதிருப்பதற்குக் காரணம் கோடிக்கணக்கான பேர் மதுபானத்தால் மூளை மழுங்கி, மந்தமடைந்து இருப்பதேயாகும்.

– பெர்னாட்ஷா

மதுவெறி என்பது நாமாகத்தேடிக்கொள்ளும் பைத்தியம்.

– ஸெனிகா

குடிப்பது தன்னை வேண்டுமென்று பைத்திய மாக்கிக் கொள்வது மட்டுமன்று முட்டாளாக்கிக் கொள்வதும்தான்

– எம். மான்ஸ்

ஆசை காட்டி மோசம் செய்வதில் மதுவுக்கு மிஞ்சிய வேறொன்றுமில்லை. அது பலம் தருவதாய் ஆசை காட்டுகிறது. உண்மையில் பலவீனம் ஆக்குகிறது. உயிர் அளிப்பதாகச் சொல்லி அகால மரணத்தைத் தருகிறது. அறிவு தருவதாய் ஆசை காட்டி மூளைக் குழப்பத்தை அளிக்கிறது.

– டாக்டர் நார்மென்கெர்

கள்விற்று சம்பாதிப்பதைவிட கற்பூரம் விற்று கால்பணம் சம்பாதிப்பது மேல்.

– நம் நாட்டுப் பழமொழி

மது உள்ளே சென்றால் அறிவு வெளியே சென்று விடும்.

– இத்தாலிய பழமொழி.

முதலில் மனிதன் மதுவைக் குடிக்கிறான். அப்புறம் கடைசியில் மது மனிதனைக்குடித்து விடுகிறது.

– ஜப்பானிய பழமொழி

"குடி, அபினி, புகையிலை இவற்றை உலகம் முழுவதிலும் உபயோகிப்பது ருசிக்க அன்று, மகிழ்ச்சிக்கு அன்று, விளையாட் -டுக்கு அன்று, ஆனால் மனச்சாட்சியின் வேண்டுகோளை மறைப்பதற்கே குடிவெறியில் இல்லாதவன் நினைக்கவும் ஒவ்வாத காரியத்தைக் குடிவெறியில் உள்ளவன் செய்கிறான்

– டால்ஸ்டாய்

ஒரு நாட்டின் நல்வாழ்வைச் சரியான முறையில் அமைக்க வேண்டுமானால் மதுபான பாவத்தை ஒழிக்க வேண்டும். போதை வியாபாரத்தின் மேல் எந்தக் கட்டிடமும் நிற்காது.

மதுவை வீழ்த்தினால் தேசம் நன்றாக இருக்கும்

மனிதனை வீழ்த்தும் மதுவை முதலில் வீழ்த்த வேண்டும். மதுவை வீழ்த்தினால் தனி மனிதன் நன்றாக இருப்பான். ஒட்டுமொத்த தேசமும் நன்றாக இருக்கும்.

– பக்தவச்சலம், தலைவர் கே.ஜி.மருத்துவமனை, கோயமுத்தூர்.

மதுவிற்கு துணைபோகும் அரசாங்கம்

தமிழகத்தில் ஏறத்தாழ 1.25 கோடி பேர் குடிகாரர்களாக மாறி உள்ளனர் என்கிறது ஒரு புள்ளி விபரம். இதிலும் தினமும் குடிப்பவர்கள் 49 இலட்சம் பேர் என்கிற அந்த புள்ளிவிபரத்தை நினைக்கும்போது உள்ளபடியே மிகவும் கவலையாக உள்ளது. இங்கே நடைபெறக்கூடிய பெரும்பாலான குற்றச்செயல்களுக்கு அடிப்படைக் காரணமே மதுதான். பள்ளிக்குழந்தைகள்கூட மது அருந்தும் போக்கு அதிகரித்துள்ளது. இதற்கு துணைபோவதுதான் மிகப்பெரிய கொடுமை. இந்திய அரசியல் அமைப்புச் சட்டம் மிக தெளிவாக சொல்கிறது. தேசத்தின் மக்களை போதைகளுக்கு

அடிமைப்படாமல் பார்த்துக்கொள்வது அரசின் கடமை. ஆனால் அதைச் செய்யவேண்டிய அரசு அதை விடுத்து போதையை ஊக்கப்படுத்தும் மதுபானங்களை விற்பதும் எந்த விதத்திலும் ஏற்புடையது அல்ல.

– மோகன் சி.லாசரஸ் (இயேசு விடுவிக்கிறார்)

குடிப்பழக்கத்தினால் அடியோடு நிர்மூலமாகும் ஆயிரமாயிரம் குடும்பங்கள்

அரசாங்கமே டாஸ்மாக் கடைகளை நடத்தி நல்லபடி வாழ வேண்டிய ஏராளமான குடும்பங்களை அதன்மூலம் நாசம் செய்து வருகிறது. இந்த பாவம் அனைத்தும் அரசாங்கத்தையும் அதனை நடத்துபவர்களையுமே சேரும்.

எத்தனை ஆயிரம் குடும்பங்கள் குடிப்பழக்கத்தினால் அடியோடு நிர்மூலமாகிக் கொண்டிருக்கின்றன என்பது நம் அரசி –யல் தலைவர்களுக்கு நிச்சயம் தெரியும். ஆனால், அவர்களுக்கு வேண்டியது மக்களின் நல்வாழ்வு அல்ல. அவர்களுக்கு பணம் ஒன்றே பிரதானம். ஆனால் இந்த பாவத்திற்கு பல பிறவிகள் எடுத்து தண்டனை அனுபவிப்பார்கள்.

– காலம் கிரகங்களின் கையில் சோதிடர், ஏ.எம்.ராஜகோபாலன்

ஒழுக்கமும், நேர்மையும் பழுதுபடாமல் பார்த்துக் கொள்ளு –வதே ஒரு நல்ல அரசின் நோக்கமாக இருக்க வேண்டும்.

– கன்பூஷியஸ்

குடிபோதை குற்றங்களை தூண்டுகிறது. குடிபோதை மூலம் வரும் வருவாய் பாவத்தின் கூலி ஆகும். அரசுக்கு இதில் ஒரு ரூபாய் வருமானம் வந்தால் இதனால் விளையும் குற்றங்களை தடுக்க இரண்டு ஒரு ரூபாய் செலவழிக்க நேரிடும்.

– ஆலன் ஆக்டோவியன் ஹ்யூம்

மது நன்மை செய்ததாக இதுவரை எந்த சரித்திரமும் கூறவில்லை. மதுவினால் உடலுறுப்புக்கள் அனைத்தும் கடுமையாக பாதிப்படைகிறது.

மதுவானது ஒருவனது இளமைக்காலத்தில் பற்றிக் கொண்டால் அவனது வளமையான எதிர்காலத்தைப் பாழ்படுத்தி விடுகிறது. அதனால் மதுவை ஒழிப்போம்.

*– **நல்ல.பழனிச்சாமி,** தலைவர், கோவை மருத்துவ மையம்.*

கேன்சர் வருவதை தவிர்ப்பதற்கு புகை பிடித்தல், வெற் -றிலை சுண்ணாம்புடன் பாக்கு உபயோகிததல், புகையிலை மற்றும் மது போன்ற போதைப் பொருட்களை உபயோகித்தல் போன்றவற்றை தவிர்க்க வேண்டும்.

உடம்பில் நச்சுப் பொருட்கள் அதிகமாக சேரும் வகையான உணவுப் பொருட்களை உண்ணக்கூடாது. தினமும் தேவையான அளவு உடற்பயிற்சி செய்ய வேண்டும். தினமும் நன்றாக நடக்க வேண்டும். தினமும் ஏதாவது ஒரு பழம் சாப்பிடும் பழக்கம் உருவாக வேண்டும். கோபத்தை தவிர்க்க வேண்டும்.

புகைபிடிப்பதால் அதிகப்படியானோர் கேன்சரால் பாதிக்கப் பட்டுள்ளனர். இந்தியாவில் 18 இலட்சம் பேர் கேன்சரால் பாதிக்கப் பட்டுள்ளனர். உடல், மன ரீதியாகவும், சமூக ரீதியாகவும், பொருளாதார ரீதியாகவும் பாதிக்கப்பட்டுள்ளனர். இவர்களை குணமாக்க வேண்டும்.

தீய பழக்கங்களிலிருந்து மக்கள் விடுதலை பெற வேண்டும்.

– டாக்டர்.ஏ.பி.ஜே. அப்துல்கலாம்,
முன்னாள் குடியரசுத் தலைவர்

புகழ்பெற்ற ஆங்கில வைத்தியர் ஸர் விக்டர் ஹார்ஸ்லி, 1916ஆம் வருஷத்தில் மெஸபொட்டேமியாவில் இறந்தார். அவருக்காக ஆங்கில வைத்தியக் கழகத்தில் பெரியதொரு நன்றி பாராட்டுத் தீர்மானம் நிறைவேறியது. இவர் மதுபானத்தினால் உண்டாகும் நோய்களுக்கு ஜாபிதா போட்டிருக்கிறார். ஏழு நோய் வகை, மதுசாரத்தினாலேயே உண்டாகும்.

இவை மயக்கம், புலம்பல், பைத்தியம், தூக்கமின்மை, நரம்புத் தளர்ச்சி, வலிப்பு, பக்க நோய், இவை போக மதுபானத்தி -னால் உடலில் காப்பு சக்தி குறைந்து போய், எளிதில் வளரக்கூடிய நோய்களின் கணக்கு : 1.தொண்டைக்கொதிப்பு, 2.இரைப்பைக் கொதிப்பு, 3. கல்லீரல் உதிரப் பெருக்கால் கொதித்தல், 4. கல்லீரல்

தடித்துச் சுருங்குதல், 5. கல்லீரலின் தசை கொழுப்பு செறிந்து கெடுதல், 6. மூத்திரத்தில் பிசினக்கழிவு, 7. மூத்திரக் கோசக் கொதிப்பு, 8. மூட்டுகள் கொதிப்படையும் வியாதிகள், 9. மூத்திர நோய், 10. சர்மக் கொதிப்பு, 11. ஸ்திரீகளுக்கு கர்ப்பாசய நோய், ஸ்தன நோய்கள், 12. ஹிருதய அறைகள், தசையின் பலக் குறைவால் விரிதல், 13. கொழுப்படைந்த ஹிருதயம், 14. ரத்தக் குழாய்கள் தடித்தல், 15. சுவாச கோசங்கள் கொதித்துப் பொங்குதல், 16. க்ஷயரோகம், 17. குடல் நோய், 18. இரைப்பை பலம் குறைந்து விரிந்து போதல், 19. சுவாசச் சிறு குழாய்கள் உஷ்ணக் கொதிப்படைதல், 20. கண்களில் உஷ்ணக் கொதிப்பு, 21. சாக்காய் வலி, 22. தூக்கப் பைத்தியம், 23. சித்தக் கோளாறு, 24. பூரண மடமை, 25. உஷ்ணத்தால் ஏற்படும் மயக்கம், 26. விஷ சுர சர்மச் சினப்பு, 27. விஷ ஜென்னி, 28. பறங்கி ரோகம், 29. தொண்டை வீக்க விஷ சுரம்.

மானிடர்கள் கண்டறிந்த விஷயங்களிலெல்லாம் மது சாரமும், புகையிலை விஷமும் மிகப்பெரிய விஷயங்களாகும்.

– ஸர்.சி.வி.ராமன்.

நோயாளிகளில் யாருக்கு மதுபான வழக்கமுண்டோ அவர்களுக்கு வியாதியைத் தடுக்கும் பலம் குறைவு.

– லிவர்பூல் சர்வகலாசாலைப்புலவர், ஜான்ஹே.

இயற்கையில் நோயைத் தடுக்கும் சக்தி உடலுக்கு உண்டு. ஆனால் மதுசாரம் இதைக் குறைத்துவிடுகிறது.

– இங்கிலாந்து கல்விக்கழகம்.

கள், சாராயம் முதலிய வகைகள், அபினி, கஞ்சா முதலிய போதை வஸ்துக்கள் இவற்றை விதமாக உபயோகப்படுத்துவதும் கூட இந்தியாவைப் போன்ற உஷ்ணதேசங்களில் தீமையே உண்டாக்கும். உடம்பிலும், நரம்புகளிலும் ஏற்படும் களைப்புக்கு மதுபானம் உண்மையான பரிகாரமாகவே ஆகாது.

– வைத்தியர்களின் கூட்டு அறிக்கை (1918).

என்னுடைய அனுபவத்திலிருந்து சொல்லுவதை வாலிபர்கள் எல்லாரும் கேட்க வேண்டும். எந்த விளையாட்டிலா -வது வெற்றி பெற்று முன்னணியில் நிற்க வேண்டுமானால் எந்தவிதமான மதுபானத்தையும் தொடாதீர்கள்.

– புரூக்ஸ்.

புகை பிடிப்பதும், மதுபானமும் தேகப் பயிற்சி விளையாட்டு -களில் ஈடுபடுகிறவர்களுக்கு நல்ல வயதிலேயே விருத்தாப்பிய தசையை உண்டாக்கி விடுகின்றன. மிதமிஞ்சி சுருட்டுப் பிடிக்கிற -வனை பற்றியாவது, கிடைத்தபோதெல்லாம் குடிப்பவனைப் பற்றியாவது நான் சொல்லவில்லை. ரொம்ப கட்டுப்பாட்டுடன் மிதமாகக் குடிப்பதைப் பற்றியும் சுருட்டுப் பிடிப்பதைப் பற்றியும் தான் இவ்வாறு சொல்லுகிறேன். புகையிலையிலுள்ள விஷமும் மதுசாரமும் உடம்பிலுள்ள சக்தியை மெதுவாகத் தின்று விடுகின்றன.

– டிஸ்டென்.

நான் பூர்ண மதுவிலக்குக்காரன். எப்போதும் நான் அந்த விரதத்தைக் கொண்டவன். குஸ்தி, கைக்குத்து முதலிய போட்டி -களில் சேரும் எந்த வாலிபனும் எவ்விதமான மதுப்பொருளையும் தீண்டக்கூடாதென்பது என் கொள்கை.

– ஜாக் டெம்ப்ஸி.

மதுசாரம் ஒரு உணவுப் பதார்த்தம் என்று நம்பித்தான் பலர் மது வலையில் சிக்கிக் குடியர்களாகிறார்கள்.

– டாக்டர் ஹம்மிங்ஸ்.

பிரான்ஸிலுள்ள எல்லா சேனைகளைவிட பீர்தான், ஜெர்மனிக்கு அதிக அபாயகரமான எதிரியாகும்.

- 1870 ல் பிரான்ஸை ஜெயித்த ஜெர்மனிய தளகர்த்தர் வான்மோல்டக்.

நாம் மூன்று பகைவர்களின்மேல் யுத்தம் நடத்துகிறோம். முதலாவது எதிரி ஜெர்மனி, இரண்டாவது எதிரி ஆஸ்ப்ரியா, மூன்றாவது எதிரி மதுபானம். மூன்றில் மதுபானமே மிகவும் பெரிய பகைவன்.

– பிரிட்டிஷ் பிரதம மந்திரி லாயிட் ஜார்ஜ் (1915).


தாங்கள் உட்கொள்ளும் மதுபானத்தில் எவ்வளவு கெட்ட விஷம் கலந்திருக்கிறது என்பதை அறியாமல் ஜெர்மானிய மக்கள் அந்த விஷத்திற்கு இரையாகிக் கொண்டு வருகிறார்கள். முக்கியமாக பீரைக் குடிப்பது, நம்முடைய மக்களில் பெரும்சேதம் விளைவித்து வருகிறது.


– ஜெர்மானிய யுத்தமந்திரி.

உலகத்தில் யாருமே குடிகாரனாக வேண்டுமென்று ஆரம்பிப்பது கிடையாது. எல்லாப் பெருங்குடியும் முதல் முதலில் சிநேகிதத்திற்காகவோ, சந்தோசத்திற்காகவோ சின்னதாகத்தான் ஆரம்பிக்கப்பட்டது.

– டாக்டர் ஜோவெட்.

❑




SO CUTE AND HARMLESS
1ST YEAR
EASILY CONTROLLED
LIQUOR HABIT
2ND YEAR
HE WAS COMPLETE MASTER OF IT, YOU KNOW.
LIQUOR HABIT
3RD YEAR
BUT, ALAS, WHEN FULLY GROWN, IT SHOWED ITS TRUE NATURE, SO ENDS THE STORY
LIQUOR HABIT
4TH YEAR

7. மதுவிலக்கே ஒரு வளர்ச்சிப்பணி

இந்திய அரசியலமைப்புச் சட்டத்தின் வழிகாட்டுதல் நெறிமுறையிலேயே மதுவிலக்கின் அவசியம் பற்றிக் குறிப் -பிட்டும்கூட, ஒரு சில மாநிலங்களில்தான் மதுவிலக்கு அமுல் செய்யப்பட்டுள்ளது. பல்லாண்டுகளாக மதுவிலக்கை அமுல்படுத் -திய சில மாநிலங்கள் கூட அவற்றை ரத்து செய்திருப்பது அதை விட வருத்தமளிக்கும் விஷயம்.

குடியெனும் கொடிய நோயினை ஒழிப்பதற்காக மகாத்மா காந்தியடிகள் புனிதப்போர் தொடுத்தார். குடிப்பழக்கத்தை ஒழிப்பதற்கு அதற்கான சட்டமும், மதுவின் தீமையை மக்களுக்கு புரியும்படி செய்யும் உறுதியான பிரசாரமும் தேவை என்பதை மூதறிஞர் ராஜாஜி தன் கூர்மையான மதிநுட்பத்தால் உணர்ந்து மதுவிலக்கை சென்னை மாகாணத்தில் வெற்றிகரமாக அமுல் -படுத்தினார். மொரார்ஜி தேசாயும் பூரண மதுவிலக்கில் முழுமை -யான நம்பிக்கை கொண்டு, தான் முதல்வராக இருக்கும்போது பம்பாய் மாகாணத்தில் அதை அமுல்படுத்தினார்.

மதுவிலக்கிற்கு எதிராகக் கூறப்படும் முதன்மையான குற்றச் சாட்டு இதனால் ஏற்படும் வருவாய் இழப்பேயாகும். மதுவிலக்கை விமர்சிப்போர் மதுவிலக்கை அமுல்படுத்தினால் அரசுக்கு ஏராள -மான வருவாய் இழப்பு ஏற்பட்டு, அதனால் வளர்ச்சிப் பணிகளே தடைப்பட்டுவிடும் என்பது போல் ஒரு மாயையைத் தோற்றுவிக்க முயற்சிக்கிறார்கள். ஆந்திர மாநிலத்தில் மதுவிலக்கை அமுல் செய்வதால் சுமார் 600 கோடி ரூபாய் வருவாய் இழப்பு ஏற்பட்டு, வளர்ச்சிப் பணிகளுக்கான திட்ட ஒதுக்கீடு கணிசமாகக் குறையும் என்று கூறுகிறார்கள். பூரண மதுவிலக்கே ஒரு வளர்ச்சிப் பணிதானே மேலும் இதனால் மக்கள் ஆண்டுக்கு 6,000 கோடி ரூபாய்க்கு மேல் சேமிக்கவல்லவோ போகிறார்கள்.

இந்தச் சேமிப்பைக் கொண்டு தங்களுடைய வாழ்க்கைத் தரத்தை உயர்த்தவும்,மேன்மையான கல்வியைத் தங்களுடைய குழந்தைகளுக்கு கொடுக்கவும் அல்லவா போகிறார்கள். மது விலக்கு இல்லையெனில் இந்த 6,000 கோடி ரூபாயை மது வாங்கியே அழித்திருப்பார்கள். ஆனால் மதுவிலக்கை அமுல்படுத்-துவதன் மூலம் ஒரே சமயத்தில் 6,000 கோடி ரூபாய், மக்கள் தங்கள் வளத்திற்காக சேமிக்கப் போகிறார்கள். இது நாம் அடைய விரும்பும் இலட்சியம் இல்லையா?

நாடு முழுமையும் மதுவிலக்கினால் ஏற்படும் வருவாய் இழப்பு ஆண்டுக்கு 5,000 கோடி ரூபாய் என்றால் மக்களுக்கு இன்னுமொரு வகையில் 50,000 கோடி ரூபாய்க்கு வாங்கும் திறனை அதிகரித்திருக்கிறோம் என்றுதானே பொருள். மது விலக்கு வேண்டும் என்பதற்கு, இத்தகைய மக்களை முன்னேற்ற-மடையச் செய்யும் பொருளாதார அணுகுமுறைதானே முக்கியம். மற்றும், மதுவின் மூலமாக வரும் வருவாயில் ஏற்படும் இந்த இழப்பானது மற்ற பிற பொருள்களை வாங்குவதால் வசூலாகும் கலால் மற்றும் பிற வரிகள் மூலமாக ஓரளவு ஈடுகட்டப்படும். மதுவிலக்கினால், பயனற்ற மதுவிற்கு செலவு செய்வதை விடுத்து, நமக்குத் தேவையான உணவு, உடை மற்ற பிற பொருட்கள் மீது செலவு செய்வதால், அரசுக்கு வரிகள் மூலம் வருவாய் பெருகும். பிற வரிகள் மூலமாகவும், வருவாய் இழப்பை ஈடு செய்ய முயற்சிக்கலாம்.

விற்பனை வரி

கசப்பான உண்மை என்னவெனில், விற்பனை வரி என்பது 1938–ல் ராஜாஜி சென்னை மாகாண முதல்வராக இருந்தபொழுது மதுவிலக்கை அமுல் செய்வதால் ஏற்படும் வருவாய் இழப்பை ஈடுசெய்யக் கொண்டு வந்ததாகும். ஆட்சியாளர்கள் மதுவிலக்-கைக் கடைப்பிடிக்கவில்லையேயொழிய அவர் கொண்டு வந்த விற்பனைவரி முறையை மட்டும் கைவிடவில்லை. கஷ்டப்படும் ஏழை மக்கள் குடிப்பதால் அரசுக்குக் கிடைக்கும் வரியின் மூலம் வருவாயைப் பெருக்குவதை விடுத்து வெவ்வேறான பிற வரிகள் மூலமாக பெறுவதே சிறந்ததாகும்.

மதுவிலக்கு முழுமையாக வெற்றியடைவது அதை எவ்வளவு தூரம் உறுதியாக அமுல்செய்கிறோம் என்பதைப் பொருத்தே அமைகிறது. இங்கே சில சந்தேகங்கள் எழுகின்றன. மதுவிலக்கைக் கடுமையாக அமுல் செய்வதால், கள்ளச்சாராய உற்பத்தி பெருகி, அதனால் ஏராளமான கோரச்சம்பவங்கள் நடக்க வழி ஏற்படுகிறது என்று சிலர் கூறுகிறார்கள். ஆனால், பல்லாண்டு –களாக மதுவிலக்கை அமுல் செய்த தமிழ்நாடு மற்றும் குஜராத் மாநிலங்களில்தான் இத்தகைய கோரவிபத்து குறைவாக இருந்தது என்பதே உண்மை. அதேபோல் மிகவும் கொடூரமான கள்ளச் சாராயச்சாவுகள் அதிகம் நிகழ்ந்தது மதுவிலக்கை அமுல்செய்யாத மாநிலங்களிலேயே!

கள்ளச்சாராயம் பெருகக் காரணம் குடிப்பழக்கத்தை விலக்கா –ததேயொழிய மதுவிலக்கல்ல. இத்தகைய பயன்தரும் கொள் –கையை நேர்மையான அரசாங்கங்கள் அமுல்படுத்தி இந்த உண்மையை நிச்சயமாக நிரூபிக்கமுடியும்.

பிரசாரம் மூலம் மக்களைத் திருத்தும் பணி தொடரும்போது மதுக்கடைகளை மூட வேண்டியது மிகவும் அத்தியாவசியமானது. ஏனெனில் கடைகளைத் திறந்து மதுவை விற்பனை செய்யும் போது மக்களின் மனத்தில் ஒருவித ஆசையை வளர்த்துவிடுகிறார் –கள். மதுவினால் ஏற்படும் தீமைகளைப் பற்றி மக்களுக்கு விழிப் –புணர்ச்சியூட்ட நாம் கடுமையாக உழைத்துக் கொண்டிருக்கும் அதேவேளையில் கடைகளைத் திறந்து மனிதர்களுக்கு ஆசை காட்டுவது எவ்வகையில் நியாயம்?

பெண்களையும் குழந்தைகளையும் தொந்தரவு செய்து கொடுமைப்படுத்தும் கேவலமான செயல்கள் ஆண்கள் குடிப்பதால் ஏற்படுகிறது. குறிப்பாக, சமூகத்தில் மிகவும் பின்தங்கிய ஏழை –களிடத்தில் இத்தீமை அதிகமாக உள்ளது. இது குடும்பமே சீரழியும் நிலைக்குக் காரணமாகிவிடுகிறது. பெண்களின் நகை –களை அடகு வைத்து குடித்துவிட்டு அவர்களை அடித்துக் கொடுமைப்படுத்தும் சமூக அவலம் எங்கும் காணப்படும்

ஒன்றாகும். மதுவிலக்கு என்பது சமூக சூழ்நிலையையே ஒட்டு மொத்தமாக உயர்த்தவல்லது. அரசுக்கு ஏற்படும் வருவாய் இழப்பைவிட குடும்பங்களிலேயே ஏற்படும் அமைதியும், நல்லிணக்கமும் முக்கியமில்லையா?

இந்து சமயம் என்ன சொல்கிறது?

குடிப்பிரியர்கள் இந்து சமய நூல்களைக்கூட தவறாகக் குறிப்பிட்டு, தங்களுக்குச் சாதகமாக வாதிடுவார்கள். ஆனால் வேத காலத்திலோ, இந்து மதத்திலோ குடிப்பழக்கம் ஏற்றுக் கொள்ளப்படவில்லை ஒரு காலத்தில் அவையெல்லாம் இருந்தது என்பதாலோ அல்லது பிற தீமைகள் இருந்து வந்தன என்ப -தாலோ சமூகம் அவற்றை ஏற்றுக்கொண்டது என்று கூறுவது ஏற்புடையதல்ல.

அதிலும், இந்து மத சாஸ்திரங்களிலும் புராணங்களிலும் மதுவுக்கு எதிரான போக்கே காணப்படுகிறது. குடி என்பது ஒரு பாவம் என்று கொள்ளப்பட்டு அதற்குக் கடுமையான தண்டனை -யும் விதிக்கப்பட்டுள்ளது. இன்னும் கூட குடிகாரர்களைக் கேவலமாகத்தான் நம் சமூகம் பார்க்கின்றது. புனித குரானின்படி இஸ்லாத்தில் குடி ஒரு குற்றமாகவே கருதப்படுகிறது.

மதுவிலக்கும் போதைமருந்துக் கட்டுப்பாட்டைப் போன்றதே. எப்படி போதை மருந்து சமூக விரோத செயல்களுக்குக் காரணமாக அமைகிறதோ அதே போலத்தான் மதுவும். ஆகவே, மதுவிலக்கே சமூக விரோதச் செயல்களை ஒழிப்பதற்கு வழியாகும். ❑



8. குடி ஒரு சமூகத்தீமை

அதிகமாகக் குடிப்பவர்கள் மட்டுமல்ல, முதன் முதலில் குடிப்பவர்களும் கூட மரணத்தை விலைக்கு வாங்குகிறார் என்று ஸ்டேன்லி மருத்துவமனையின் இரைப்பை மற்றும் குடல் சார்ந்த அறுவை சிகிச்சைத்துறை தலைவர் டாக்டர். **ஆர்.சுரேந்திரன்** அவர்கள் உறுதியாய் கூறுகிறார்.

1970ஆம் ஆண்டுகளில் வாரத்திற்கு இரண்டுபேர் கல்லீரல் பாதிப்புடன் மருத்துவமனைக்கு வருவார்கள். ஆனால் இப்போது, வாரத்துக்கு 450 பேர் வரை கல்லீரல் பாதிப்புடன் வருகிறார்கள் என்று கூறுகிறார்.

மதுப்பழக்கம் உள்ளவர்கள் உடலில் மது, மெதுவாக ஆனால் நிலையான சேதத்தை ஏற்படுத்துகிறது. நமது நாட்டில் கல்லீரல் நோய்களுக்கு முக்கிய காரணமாக மதுப்பழக்கமே உள்ளது. தொடர்ந்து குடிப்பவர்களுக்கு கல்லீரல் முதலில் வீங்கும். பிறகு சுருங்கத் தொடங்கும். சுருங்கிய பிறகு வயிற்றில் நீர் சேரும். இரத்த வாந்தி எடுப்பார்கள். பிறகு மரணம் தான்.

முன்பு ஜெர்மனியில்தான் மதுப்பழக்கத்தால் உடல்நலம் பாதிக்கப்பட்டவர்களின் உடல்நிலைக்கு சிகிச்சை அளிப்பது குறித்து எங்களுக்கு நிறைய பாடங்கள் வரும். ஏனெனில் அங்கே குடிநோயாளிகள் அதிகம் இருந்தார்கள். 2011 ஆம் ஆண்டு கணைய பாதிப்புகளுக்கான சிகிச்சை குறித்து இந்தியாவில் ஒரு கருத்தரங்கு நடைபெற்றது. கொச்சியில் நடைபெற்ற அந்த சர்வதேச கருத்தரங்கில் ஜெர்மனியில் இருந்து வந்த ஒரு மருத்துவர் கூறும்போது, அந்நாட்டில் மதுப்பழக்கம் தொடர்பான கணைய நோயாளிகள் குறைந்து விட்டார்கள் என்றும், இந்தியா -வில்தான் புதிதாக நிறைய நோயாளிகள் இருக்கிறார்கள் என்றும் அவர்கள் குறித்த சாம்பிள்கள் நமக்கு வேண்டும் என்றும் கூறினார்.

இந்தியாவில் குடிப்பழக்கம் கலாச்சாரமாக மாறிவருகிறது. ஆனால் வெளிநாடுகளில் குடிப்பழக்கம், புகைபிடிக்கும் பழக்கங்க -ளிலிருந்து வெளியேறுவதில் மக்கள் தீவிரமாக இருக்கும் நேரத்தில் இங்கே அது கலாச்சாரமாக மாறி வருகிறது.

குடியினால் ஏற்படும் அபாயம் பற்றி அவர் சொல்லும் அதிர்ச்சித் தகவல்கள் :

- ☆ குடிப்பழக்கம் உள்ளவர்கள் தங்கள் வாழ்க்கையில் பல பிரச்சினைகளையும் இழுத்துப் போட்டுக் கொள்கிறார்கள். குடிப்பதனால் உடலுக்குக் கேடு, உழைத்து சம்பாதித்த பணத்திற்கு கேடு, குடும்பத்திற்குச் சீரழிவு, கணவன் - மனைவி தகராறுகள், குடும்பத்தில் வறுமை, குழந்தைகள் பட்டினி, குழந்தைகளின் கல்வி மற்றும் எதிர்கால வளர்ச்சிக்கு இடையூறு எனப் பல தீமைகள்!
- ☆ குடிப்பதனால் உடலுக்கு ஏற்படும் பாதிப்புகள் மிகக் கொடுமையானவை. **ஒரு தடவை குடித்தால் ஒன்றுமாகாது. அடிக்கடி குடித்தால்தான் உடல் கெட்டுப்போகும்** என்ற கருத்து மிகவும் தவறானது.
- ☆ முதல் தடவை குடித்துவிட்டு மிக மோசமான நிலையில் மருத்துவமனைக்கு வந்தவர்களும் உண்டு. மரணத்தை தழுவியவர்களும் உண்டு.
- ☆ குடிகாரர்களில் பலர், **நாம் நன்றாகத்தானே இருக்கிறோம்** என்று நினைப்பார்கள். அது மிகவும் தவறு. மதுவில் உள்ள ஆல்கஹால் மனித உடலில் மோசமான பாதிப்பை ஏற்படுத்தக்கூடியது. குறிப்பாக நமது வயிற்றுப்பகுதியில் உள்ள கணையத்திலும், கல்லீரலிலும் அதிக பாதிப்பை ஏற்படுத்துகிறது. மதுவில் உள்ள ஆல்கஹாலால் பாதிக்கப் பட்ட கணையம் சிறிது சிறிதாக அழுக ஆரம்பிக்கும். கணையம் அழுகிப் போய்விட்டால் அதன் பக்கத்திலுள்ள உறுப்புகளும் அழுக ஆரம்பிக்கும். நாம் சாப்பிடும் உணவு செரிக்க காரணமாயிருப்பது கணையம்தான். கணையம் கெட்டுப்போனால் செரிமானம் நடைபெறாது. இதனால்

குடல் அரிப்பு ஏற்படும். ரத்தம் கசியும். கணையம் அறுவை சிகிச்சை செய்து கொள்ள குறைந்தபட்சம் ரூ.10 இலட்சம் முதல் ரூ.70 இலட்சம் வரை செலவாகும். அவ்வாறு பெருந் -தொகை செலவு செய்து அறுவை சிகிச்சை செய்தாலும் 100 பேருக்கு 40 பேர் இறந்து போவர்.

☆ கணையம் பாதிக்கப்பட்டவுடன் அது சிறுநீரகம், இதயம், கல்லீரல் போன்ற உறுப்புகளையும் கெடுத்து விடும். மது அருந்துபவர்களுக்கு கல்லீரலின் அளவு 10 இல் 1 பங்காக சுருங்கிவிடும். பின் பசி இருக்காது. எப்போதும் சோர்வாக இருப்பர். கல்லீரல் வீங்கி ரத்த வாந்தி எடுப்பர். வயிற்றில் நீர் சேர்ந்துவிடும். வயிறு பெருத்துக் காணப்படும். அடிக்கடி மயக்கம் ஏற்படும். சாப்பிட முடியாது. சாதாரண மாத்திரை சாப்பிட்டாலும் மயக்க நிலைக்கு (ஹோமா ஸ்டேஜ்) போய் விடுவர். மீண்டும் நல்ல நிலைக்கு கொண்டு வருவது கடினம்.

☆ மது அருந்தினால் நரம்பு மண்டலம் பாதிக்கப்படும். கண் பார்வை குறையும். கால் மரத்துப்போகும். கை, கால் எரிச்சல் ஏற்படும். குடலில் புண் ஏற்படும். இது உடனே குணமாகாது. ஆனால், பலருக்கும் இதெல்லாம் தெரியாது. மது அருந்தி விட்டு அதற்கு ஈடு செய்யும் வகையில் நன்றாகச் சாப்பிட்டு விட்டால் ஒன்றும் செய்யாது என்பது தவறான ஓர் கருத்து. கொஞ்சம் படித்த வசதியானவர்கள் குடிப்பதற்கு முன் கல்லீரலை பாதுகாக்கும் மாத்திரைகளை சாப்பிடுகிறார்கள். இதெல்லாம் எரிகின்ற நெரிப்பில் எண்ணெய் ஊற்றுவது போல!

☆ குடிப்பவர்கள் சிந்திக்க வேண்டும். குடிப்பதனால் அவர்கள் பெறுவது ஒன்றுமில்லை. ஆனால், இழப்பதோ மிக அதிகம். அவர்களது உடல், மன ஆரோக்கியத்தை மட்டுமல்ல - அவர்களது விலை மதிப்பற்ற உயிரை, அவருடைய குடும்பத்தின் மன அமைதியை, மனைவியின் நம்பிக்கையை, குழந்தைகளின் எதிர்காலத்தை என எல்லாவற்றையும் இழக்கிறார்கள். ❑

9. மகாத்மா காந்தியும் மது ஒழிப்பும்



மகாத்மா காந்தி சமூக சீரமைப்புத் திட்டங்களை வகுத்துச் செயல்படுத்தியபோது பொருளாதார ரீதியாக மறைமுக சுரண்டலுக்கு உட்படுத்தும் மதுப்பழக்கத்திலிருந்து மக்கள் விடுதலை அடைய வேண்டுமென்றார். எனவே, மதுவிலக்கு என்பதை தனது அடிப்படைக் கொள்கைகளில் ஒன்றாக ஆக்கிக் கொண்டார். தன்னுடைய எழுத்தாலும், பிரச்சாரத்தாலும் மக்களிடையே மதுவிலக்கைப் பரப்பினார்.

1920 முதல் மதுவிலக்கில் தீவிரமாக செயல்படத் துவங்கிய காந்தி இப்படி எழுதுகிறார். "குடி குடியைக் கெடுக்கும். குடும்பங்கள் குலையும்; உறவுகள் முற்றியும்; மானிட வாழ்வில் நெறி முறைகள் அதிர்ந்து தடம் புரளும்; பெண்கள் ஒழிக்கப்பட்டு அவர்கள் உரிமைகள் முடக்கப்படும்; கற்பு பறிக்கப்படும்; பாவங்கள் மலியும்; சோகங்கள் வளரும்; துக்கம் துயரம் எங்கெங்கும்

கரைபுரண்டு ஓடும்; இதைக் கட்டுப்படுத்த நாடு உயிர்த்தெழ வேண்டும்"

"பட்டினியால் வாடுவோர் செய்யும் திருட்டு போன்ற சிறு தவறுகளை விட மது குடிப்பது மிகப்பெரிய குற்றமாகும். தீபோன்ற திரவத்தைத் தயாரிப்பவர்களையும், அதை பிடிவாதமாக குடிப்பவர் -களையும், உடனுக்குடன் தண்டிக்க வேண்டும். ஆவேசமாக எரியும் உலைக்குள்ளோ, பிரவாகமான அருவிக்குள்ளோ குதிப் -பதை விட இது ஆபத்தானது. எரியுலையும், அருவியும் உடலை மாத்திரமே அழிக்கின்றன. ஆனால், மதுவோ உடல், ஆத்மா இரண்டையும் நாசமாக்குகிறது.

– (யங் இந்தியா – 08.08.1929)

மதுவிலக்கு என்பது மதுவிற்கு மட்டும் விலக்கு என்பதில் -லாமல் எல்லா போதை தரும் பானங்களையும், சரக்குகளையும் விலக்குகிறது. – (யங் இந்தியா – 30.10.1937)

"மதுக்கடைகள் வாயிலாக கிடைக்கும் வருமானம் புல் தரையில் ஒழிந்திருக்கும் நச்சுப்பாம்பை ஒத்தது. குடிப்பழக்கம் என்பது வளர்ந்து ஓங்கி வரும் சமுதாயத் தீமையாகும். ஆதலால், வாய்ப்பு அமையும்போது இத்தீமையை ஒழிப்பதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டியது அரசின் கடமையாகும்."

"மதுவிலக்கு சம்பந்தமாக என்னுடைய வேலை 1893 இல் நான் தென்னாப்பிரிக்காவுக்குச் சென்றபோதே ஆரம்பமாகி விட்டது" என்று "யங் இந்தியா – 18.04.1929" கட்டுரையில் காந்தியடிகள் குறிப்பிடுகிறார்.

மேலும் இங்கிலாந்திற்குப் படிக்கச் சென்றபோது தனது அன்னையிடம் மது, மங்கை, மாமிசம், மூன்றையும் நுகரமாட்டேன் என்று கொடுத்த உறுதிமொழியில் இருந்தே மதுவிலக்கு சிந்தனை துளிர்விடத் தொடங்கி விட்டது.

தென்னாப்பிரிக்காவில் இந்தியத் தொழிலாளர்களுக்கி -டையே குடி ஒரு பழக்கமாக மாறிவிட்டது. அதனை விடுவிக்க போராடுகிறார். டர்பன் நகர காவல்துறை மேற்பார்வையாளர் அலெக்ஸாண்டர் குடி தொடர்பான குற்ற வழக்குகளில் இந்தியப்

பெண்களும் உள்ளதை சுட்டிக்காட்டுகிறார். தென்னாப்பிரிக்கா -விலிருந்து வெளிவரும் "இந்தியன் ஒப்பீனியன்" இதழில் மது அருந்துவதை நிறுத்துமாறு வேண்டுகோள் விடுத்தார்.

1915 இல் இந்தியா திரும்பும் காந்தியடிகள் மதுவை ஒழிக்க வேண்டியதன் அவசியத்தை அறிந்து கொண்டு போராட்டத்தைத் துவக்குகிறார். 1921 இல் கல்கத்தாவில் தொழிலாளர்களுக் -கிடையே உரையாற்றும்போது, "உங்கள் வருமானத்தைக் கொண்டு உங்களால் நலமாக வாழ முடியாது. அந்தத் துன்பத்தை மறப்பதற்காகவே நீங்கள் குடிக்கிறீர்கள். இந்தக் குடிக்கு அடிமை -யாகி உடலும் உள்ளமும் கெட்டு மரணத்தை தழுவுகிறீர்கள்" என்று கூறினார்.

மது அருந்துவதன் மூலம் ஏற்படும் பொருளாதார பாதிப்பு -களை அவர் கோடிட்டு காட்ட முற்பட்டார். ரூ. 20 கோடி கலால் வரியாக அரசுக்கு கிடைக்கிறது என்பதற்காக, மக்களால் ரூ.80 கோடி மதுவிற்கு செலவிடப்படுகிறது. இதனால் நாட்டு வருமானத் -தில் ரூ. 60 கோடி மது தயாரிப்பாளர்களுக்குச் செல்கிறது. இந்தப் பெருந்தொகை ஏழை எளியோர்களிடமிருந்துதான் பிறருக்கும் செல்கிறது என்ற உண்மையை மக்கள் முன் எடுத்து வைக்கிறார்.

அமெரிக்க வரலாற்றினை எடுத்துக்காட்டி மதுவிலக்கு வெற்றி பெறமுடியாது என்றும், கொஞ்சம் மதுவிலக்கு என்ற கொள்கையை தளர்த்திக் கொள்ளுமாறும் வேண்டினார். அதற்கு "அமெரிக்காவிலும் மதுவிலக்கு ஆதரவாளர்கள் ஜனாதிபதி மற்றும் பிரதிநிதிகள் சபை உறுப்பினர்கள் தேர்தலில் வெற்றி பெற்றதை மது வடிப்பதற்கான கோதுமை ஒதுக்கீட்டு அளவை ஜனாதிபதி வெட்டிக் குறைத்தமை, மாணவர் மாநாடுகள் மதுவிலக்கை ஆதரித்து வரவேற்றது. அமெரிக்க உழைப்பாளர்கள் சமஷ்டி என்ற அமெரிக்க தொழிற்சங்கமானது நாட்டில் கூட்டுறவு வங்கிகள் தோன்றி வளர மதுவிலக்கை ஊக்குவிக்கும். சேமிப்புகளை உருவாக்குவது போன்ற செயல்கள் காரணமாக மதுவின் தாக்கம் குறைந்துள்ளது என்று கூறினார்.

மதுவிலக்கை எவ்வாறு நடைமுறைப்படுத்த வேண்டும் என்பதில் காந்தியடிகள் தெளிவான கருத்தைக் கொண்டிருந்தார்.

பூரண மதுவிலக்கு மட்டுமே வெற்றி பெற முடியும் :

உரிய சட்டத்தை முதன் முதலில் நிறைவேற்றிய பின் சட்ட செயல்பாட்டை வெற்றிகரமாக நிறைவேற்ற மதுவிலக்கு பிரச்சாரமும் அவசியம் என்று கூறினார்.

பாட்டர்ஸன் என்ற ஆஸ்திரேலிய பொறியியல் அறிஞர் 400 பவுண்ட் வருமானம் உள்ளவர். தென்னாப்பிரிக்காவில் காந்தியடி -களுடன் சேர்ந்து இருந்தார். இவர் ஒரு பிரம்மஞானியும்கூட. காந்தியின் போதனைக்கு இணங்கி மதுவை விலக்கி வாழ்ந்தார். ஆனால் சில காலத்திற்குப் பின் மீண்டும் மதுவிற்கு அடிமையாகி விட்டார். மதுவின் மீதுள்ள சபலம் அவ்வளவு வலுவானது என் -பதை காந்தியடிகள் புரிந்து கொள்கிறார். மேலும், நோய்வாய்ப் பட்டுக் கிடக்கும் குழந்தையின் முன் மிட்டாய்ப் பெட்டியை வைத்துவிட்டு குழந்தை மிட்டாய் தின்னாதவாறு தடுப்பது எப்படி? என்ற ஒரு கேள்வியை அவர் எழுப்புகிறார். ஆகவே, முதலில் மது கிடைக்காமல் ஆக்க வேண்டும். அது சட்டத்தின் வழியாகவே சாத்தியமாக வேண்டும். அதே நேரத்தில் சட்டம் அனைத்தையும் செய்து விடும் என்று நம்பியிருத்தலும் கூடாது. எனவே, மதுவின் தீமைகளைப் பற்றிய போதனைகளுடன் சட்டத்தை தொடர்ந்து நடைமுறைப்படுத்த வேண்டும்.

குடியானது ஒரு கெட்ட பழக்கம் என்று கொள்வதை விட அதனை ஒரு நோயாகக் கருதி அந்த நோயைக் குணமாக்குவதற்கு உதவியில்லாமல் இருக்கும் மது அடிமைகளுக்கு உதவிக்கரம் நீட்டுவது நமது கடமை என்று கூறுகிறார்.

சுதந்திரத்திற்கு முன் ஆங்கிலேயர், நிர்வாகத்தில் அரசு சட்டங்களை இயற்ற இயலாமல் இருந்த காலத்தில் சட்டத்தை இயற்றச் சொல்லி ஒரு கோரிக்கையும் மதுவிலக்குப் பிரச்சாரமும் செய்யப்பட்டது குறிப்பிடத்தக்கது.

1920 - 21 இல் மதுவிலக்கு இயக்கம் ஒரு மக்கள் இயக்க -மாக உருவாகியது. வித்தல்பாய்பட்டேல் "தானே" மாவட்டக் குழுவில் மதுவிலக்குகோரி தீர்மானம் நிறைவேற்றுகிறார். சூரத் பஞ்சாயத்தும் மதுவிலக்கு கோருகிறது. மதுக்கடை மறியலில் பொதுமக்களை ஈடுபடுத்துகின்றனர்.

தார்வார், அலிகார் மாவட்டங்களில் துப்பாக்கிச் சூடும் நடைபெறுகிறது. மதுவிலக்கு இயக்கத்தின் எதிர்ப்பு காரணமாக மதுவிற்பனை வெகுவாகக் குறைந்தது.

தமிழ்நாட்டில் சேலம், சிங்காரப்பேட்டை கிராம முன்சீப் பெருமாள்சாமி நாயுடு என்பவர் மதுவிற்பனை வீழ்ச்சியை தடுக்கத் தவறியது காரணமாக அரசாங்கத்தால் தற்காலிக பணிநீக்கம் செய்யப்பட்டார். மேலும், அவரிடம் நஷ்டஈடுகோரி ஒப்பந்ததாரர் வழக்கு தொடர்ந்தார். அரசாங்கம் சாத்தான் வழியில் செயல்பட்டுக் கொண்டிருப்பதாக யங் இந்தியாவில் காந்தியடிகள் எழுதினார்.

1937 இல் மாநில அரசுகள் கொஞ்சம் அதிகமான அதிகாரத்-தைப் பெறுகின்றன. முழு மதுவிலக்கை காந்தியடிகள் அமல்-படுத்த முடிவு செய்வதற்காக பனிரெண்டு அம்சத்திட்டத்தை "ஹரிஜன்" இதழில் வெளியிட்டார்.

1) ஒவ்வொரு மாநிலத்திலும் மது மற்றும் அபின் கடைகள் இருக்கிற இடங்களைக் காட்டும் ஒரு குடிபோதைப் படம் அமைக்க வேண்டும்.

2) அதனதன் உரிமம் காலம் முடிந்ததும் மதுக்கடைகளை மூடவேண்டும்.

3) கலால் வருமானம் வளர்ந்து கொண்டிருக்கும் வரை, அதனை உடனடியாக மதுவிலக்குக்காகச் செலவிட வேண்டும்.

4) முடிந்த இடங்களிலெல்லாம் மதுக்கடைகளை, பழைய வாடிக்கையாளர்கள் தொடர்ந்து அவற்றைப் பயன்படுத்த வருவார்-கள் என்ற நம்பிக்கையில், சிற்றுண்டி மற்றும் ஓய்வறைகளாக மாற்ற வேண்டும்; ஒப்பந்ததாரர்கள் விரும்பினால், அவர்களே அவற்றை நடத்துமாறு தூண்டி விடலாம்.

5) குடிபானத்தை, திருட்டுத்தனமாக வடித்தலையும், குடிப்பதையும் கண்டுபிடிக்க, கலால்துறை அலுவலர்களை அமர்த்த வேண்டும்.

6) ஆசிரியர்களும், மாணவர்களும் தமது பகுதி நேரத்தை மதுவிலக்குப் பணியில் செலவிடுமாறு கல்வி நிறுவனங்களைக் கேட்டுக்கொள்ள வேண்டும்.

7) குடி மற்றும் அபின் பழக்கத்திற்கு ஆளாகியுள்ளவர் -களைச் சென்று காண ஏற்பாடு செய்யுமாறு பெண்களிடம் கேட்டுக்கொள்ள வேண்டும்.

8) பக்கத்து மாநிலங்களிலும் அதே காலத்தில் மது விலக் -கைக் கொண்டு வருமாறு அவற்றுடன் தொடர்பு கொள்ளவேண்டும்.

9) போதைப்பொருட்களுக்கு மாற்றான மது கலவாத பானங் -கள், மற்றும் பிற பதிலிகளையும், மதுப்பழக்கமுள்ளவர்களை மீட்பதற்கான வழிமுறைகளையும் தெரிவிக்க, மருத்துவத் தொழிலுள்ளவர்களைத் தாமாகவோ அல்லது வேண்டி வந்தால் ஊதியமளித்தோ ஈடுபட வைக்கலாம்.

10) குடிக்கு எதிரான இயக்கத்திற்கு ஆதரவாக மிதக்குடிச் சங்கங்களின் செயற்பாடுகளை மீட்டுருவாக்க வேண்டும்.

11) தமது தொழிலாளர்களுக்கான சிற்றுண்டி, ஓய்வு மற்றும் படிப்பறைகளை, உயர்தர நிர்வாகிகளின் கீழ் நிறுவிப் போற்றி வருமாறு முதலாளிகளைக் கேட்டுக்கொள்ளலாம்.

12) கள் இறக்குவோர்களை, விற்பனைக்காகப் பதநீர் இறக்கவோ அல்லது பனை வெல்லமாக மாற்றுவதற்கோ பயன் -படுத்தலாம்.

தமிழ்நாட்டில் காந்தியின் மது ஒழிப்புப்பிரசாரம் :

மகாத்மா காந்தி ஒத்துழையாமை இயக்கத்தைத் தொடங்கியது மக்கள் மனதில் ஆழமாகப் பதிந்து விட்டது. ஒத்துழையாமை இயக் -கத்தின் காரணமாக இந்திய தேசியத்தில் பல விளைவுகள் ஏற் -பட்டன. பொது வேலைநிறுத்தங்களும், ஊர்வலங்களும் பொதுக் கூட்டங்களும் சங்கிலித்தொடர்போல் நடந்துகொண்டிருந்தன. கள்ளுக்கடை மறியலின் காரணமாக அதன் விற்பனை கணிசமாக குறைந்தது. அதனால் அரசாங்கத்திற்கு வருமானமும் குறைந்தது. போராட்டத்தில் தமிழகம் முக்கிய பங்கு வகித்தது. கஸ்தூரிரங்க அய்யங்கார், சீனிவாச அய்யங்கார், சீ.விஜயராகவாச்சாரியார், இராஜ கோபாலச்சாரி, எஸ்.சத்தியமூர்த்தி, வ.உ.சிதம்பரம்பிள்ளை, வி.கலியாணசுந்தரம்முதலியார், சிங்காரவேலுசெட்டியார், ஈ.வெ.இராமசாமிநாயக்கர், டாக்டர். பி.வரதராஜுலுநாயுடு,

யாகூப்ஹாசன் போன்ற தலைவர்கள் தமிழகத்தில் போராட்டக் களத்தில் இருந்தனர்.

தினமணி, இந்து, தேசபக்தன், சுதேசமித்திரன் போன்ற செய்திதாள்களின் பங்கும் முக்கியமானது. தென்னாப்பிரிக்காவில் தமிழர்கள் காந்தியோடு மிகநெருக்கமாக போராட்டக் களத்தில் பணியாற்றியதன் காரணமாக தமிழர்களையும், தமிழகத்தையும் காந்தி மிகவும் நேசித்தார். மேலும் கதர், தீண்டாமை ஒழிப்பு, மதுவிலக்கு போன்ற நிர்மாணப் பணிகளில் தமிழகம் முதன்மை வகித்தது. இதன் காரணமாக தமிழகத்தின் போராட்டக் களத்தை காந்தி முக்கியமாகக் கருதினார்.

தமிழகத்தில் கள்ளுக்கடை மறியல் அரசாங்கத்திற்கு பெரும் பொருளாதார வீழ்ச்சியை உண்டு பண்ணியது. இந்திய அரசுக்கு மாநில அரசு எழுதிய கடிதத்தில், "மாநிலம் முழுவதிலும் கள்ளுக் கடைகளில் விற்பனை குறைந்திருக்கிறது. பல மாவட்டங்களில் கள்ளுக்கடை ஏலம் போனாலும் கிடைத்த வருவாய் மிகக்குறைவு மற்ற மாவட்டங்களில் ஏலத்தில் கேட்பாரே இல்லை கடைகளை விற்கவே முடியவில்லை. இது தங்கள் இயக்கத்தின் வெற்றி என்று ஒத்துழையாமை இயக்கவாதிகள் உரிமை கொண்டாடுகின்றனர். ஒத்துழையாமை இயக்கப் பிரச்சாரமும், கள்ளுக்கடை மறியலும் இதற்கு பெரிதும் துணைபுரிகின்றன என்பதில் ஐயமில்லை. அதே சமயம் கள்ளுக்கடை மறியலுடன் ஒப்பிட்டால் வெளிநாட்டு துணிவிலக்கின் முக்கியத்துவம் ஒன்றுமே இல்லை."

மகாத்மா காந்தியடிகள் 1921-ல் கூறினார். "இந்தியர்களைக் கட்டாயப்படுத்தி குடிப்பழக்கத்தைக் கைவிடச் செய்யாது குடிக்க விரும்புவோர் குடிப்பதற்கான வசதிகளை அரசாங்கமே செய்து தர வேண்டும் என்று சொல்வோரின் வாதத்தினைக் கண்டு ஏமாந்து விடக்கூடாது. மக்களின் தீய செய்கைகளுக்கெல்லாம் வசதி செய்து கொடுப்பதற்காகவோ வரைமுறைப்படுத்துவதற்காகவோ அரசாங்கம் செய்து கொடுப்பதில்லை.

என்னைப் பொருத்தவரை திருடுவதைவிட, ஏன், விபசாரத் -தைவிட மோசமான குற்றமாகவே குடிப்பதைக் கருதுகிறேன்.

குடிதானே மேற்கண்ட இரு தீமைகளுக்கும் அடிப்படை. மதுக் -கடைகளை அழிக்கும் அரசு முயற்சிக்கு நீங்களெல்லோரும் ஆதரவு கொடுங்கள் என்று உங்களைக் கேட்டுக் கொள்கிறேன்."

மனிதர்களை மது பல்வேறு வழிகளில் பாதிக்கிறது என்பது சாதாரண அறிவுக்குக்கூட புரியக்கூடிய உண்மை. நம்நாட்டில் நடக்கும் பெரும்பாலான அரசியல் ஊழல்களுக்குக் காரணம் சாராயச் சீமான்கள்தான். ஆகவேதான் மதுவிலக்கு ஆதரவாளர்கள் மிகப்பெரிய சக்தியை எதிர்கொள்ள வேண்டியிருக்கிறது. மது விலக்கு என்பது ஒரு தீவிரமான நடைமுறை. ஏனெனில் அது மக்களைக் கட்டாயப்படுத்துகிறது.

தற்போதைய தேவை, மதுவிலக்குச் சட்டத்தை அமுல் -படுத்துவதேயாகும். மதுவிலக்கிற்கான இந்தப் புனிதப் பணியில் மகளிர் தொண்டு நிறுவனங்கள்தான் முன்னணியில் நிற்க வேண்டும்.

20.09.1921 அன்று காலை காந்திஜி அவர்கள் திருச்சி, ஸ்ரீரங்கம் நகரசபை அலுவலகத்திற்கு சென்றார். நகரமன்ற தலை -வராக இருந்த பி.சீனிவாசராகவ அய்யங்கார் வரவேற்புரையை வாசித்தார். பின்னர் காந்தி பேசும்போது நகராட்சிகளுக்கு மூன்று வகையான கடமைகள் உண்டு என்றும் அவற்றை நகராட்சி மன்றங்கள் எண்ணிப்பார்க்க வேண்டும்.

அக்கடமைகளாவன,

1. ஒவ்வொரு நகராட்சிமன்றமும் அதன் எல்லைக்குள் வாழும் பொதுமக்கள் வெளிநாட்டு துணிமணிகள் அணியாமலும், கதர் அணியுமாறும் பார்த்துக்கொள்ளவேண்டும்.

2. குடிப்பழக்கத்தை முற்றிலுமாக அகற்றிவிட வேண்டும்.

3. தீண்டாமைக்கு சிறிதளவும் இடமளிக்கக்கூடாது என்று கூறினார்.

ஸ்ரீரங்கத்திலிருந்து கரூர் செல்லாமல் மதுரை சென்றார். அப்போது கரூர் காங்கிரஸ்குழுவிற்கு ஒரு கடிதம் எழுதினார். அதில் **"கரூருக்கு வரஇயலாமல் இருப்பதற்காக வருந்துகிறேன். நீங்கள்**

எவ்வளவு சிறந்த முறையில் மதுவிலக்கிற்காக பணியாற்றி இருக்கிறீர்கள் என்பதை நான் அறிவேன்" என்று கூறினார்.

ஈரோட்டில் பெரியார் ஈ.வெ.இராமசாமிநாயக்கர் அவர்கள் மதுவிலக்கு சம்பந்தமாக பணியாற்றிக்கொண்டிருந்த சமயத்தில் அங்கு நடைபெற்ற மதுவிலக்குப் பணிகளை காந்திஜி வெகுவாகப் பாராட்டினார். சென்னையும், ஆந்திராவும் மெதுவாக முன்னால் வந்து கொண்டிருக்கின்றன. வங்கத்தைப்போன்று அங்கும் 1500 பேர் கைதானதால் நான் வியப்படையமாட்டேன். மதுவிலக்கில் ஈரோடு மட்டும் அஞ்சாது பணியாற்றி வந்திருக்கிறது. அதனால் இராமசாமிநாயக்கருக்கு ஒருமாத சாதாரண சிறைதண்டனை பரிசாக கிடைத்திருக்கின்றது. இந்த சிறிய ஊரில் மட்டும் ஏற்கனவே 37 பேர்க்கு தண்டனை கிடைத்து விட்டது. இப்போது நாயக்கரின் மனைவியாரும் இவருடைய சகோதரியும் மறியல் செய்யப் போகின் -றனர் என்று 22.12.1921 அன்று **யங்இந்தியா**வில் எழுதினார்.

1924 ஆம் ஆண்டு முக்கியமான தேசத்தலைவர்கள் மீது ஆங்கிலேய அரசாங்கம் வழக்குத்தொடுத்தது. அவ்வாறு வழக்குத் தொடுக்கப்பட்டவர்களில் ஈ.வெ.ராவும் ஒருவர். இராஜாஜி பம்பாய் சென்றிருந்த சமயம் ஈ.வெ.ரா மீது உள்ள வழக்கு அக்டோபர் 18 ஆம் தேதி வருகிறது என்பதற்காக அவசரமாக திரும்பி வந்தார். தேவதாஸ் காந்தி மேலும் ஒருநாள் தங்கி இருந்துவிட்டு போகும் -மாறு சொன்னதைக்கூட அவர் ஏற்கவில்லை. சென்னைக்கு 18 ஆம் தேதி போய் ஆக வேண்டும். அன்றுதான் இராமசாமி நாயக்கரின் இறுதி விசாரணை அவர் மீது அரச துரோக குற்றம் சாட்டப்பட்டிருக்கிறது. அவருக்கு நீண்ட கால சிறைதண்டனை கிடைக்கலாம். எங்களுடைய காங்கிரஸ் நடவடிக்கைகளுக்கு தீவிரம் நிறைந்த தலைவராக (Head & Active Master) இருந்து வந்திருக்கிறார் என்று இராஜாஜி ரயிலில் இருந்து 16.10.1924 அன்று காந்திஜிக்கு எழுதிய கடிதத்தில் குறிப்பிடுகிறார்.

டாக்டர் அன்னிபெசண்ட் தலைமையில் கோகலே மண்டபத்தில் நடைபெற்ற மதுவிலக்குப் பிரசாரகர்கள் கூட்டத் -தில் மிகவும் உணர்ச்சிப் பெருக்கோடு அவர் ஒரு நீண்ட உரையாற்றியபோது, சிறு வயதில் தமது தாயார் மதுவைத் தொடக்

கூடாது என உறுதிமொழி வாங்கியதிலிருந்து மதுவிலக்கில் படிப்படியாகத் தமக்குள் வளர்ந்து வந்த ஈடுபாட்டை விளக்கிக் கொண்டு போனார். தென்னாப்பிரிக்காவில் இந்தியர்களிடையே மதுவிலக்குப் பிரச்சாரம் செய்தபோது ஐரோப்பியர்கள் மட்டும் குடிக்கலாம், நாங்கள் குடிக்கக் கூடாதோ? என்று அவர்கள் கேட்டதாக காந்திஜி கூறியபோது எல்லோரும் சிரித்துவிட்டனர். "அபினிலிருந்தும், குடியிலிருந்தும் கிடைக்கும் வருமானத்தை விட்டுவிடுமாறு சட்டமன்ற உறுப்பினர்களுக்கு நம்மால் எடுத்துணர்த்த முடியுமானால் இன்றே நான் அதைச் செய்ய விரும்புகிறேன். இந்த வருமானம் இல்லாது குழந்தைகளுக்குக் கல்வி அளிக்கமுடியாது என்றால் அவர்களுடைய கல்வியை நிறுத்திவிடவும் நான் தயாராய் இருக்கிறேன்" என்று அவர் உறுதியாகக் கூறினார்.

"ஒருவன் குடிப்பழக்கம் உள்ளவனாய் இருப்பதன் காரணங்-களை ஆராய்ந்து அறிந்தாலொழிய அப்பழக்கத்தை வெற்றிகர-மாகத் தடுக்க முடியாது" என்று டாக்டர் பெசண்ட் தமது தலைமை உரையில் கூறியதை அண்ணல் ஏற்றுக்கொண்டார். பம்பாயில் உள்ள ஏழைத் தொழிலாளிகளுடைய பரிதாப நிலையை விளக்கி அவர்களுடைய நிலையில் இருந்தால் எல்லோரும் குடிக்கத்தான் செய்வார்கள் என்றும் சொன்னார். "ஆகையால், வெறும் பேச்சின் மூலம் சிலருடைய குடிப்பழக்கத்தை நிறுத்த முடியாது. சென்னையில் உள்ள சேரிகளில் வாழும் அநேக ஆண், பெண்களுக்கு இது எவ்வளவு பெரிய சிக்கல் என்பது தெரியாது. இச்சிக்கலை முழுதுமாக நீங்கள் ஆராய்ந்து பார்த்தால் பெரும் மனக் குழப்பம் அடைந்துவிடுவீர்கள். ஒரு மனிதர் செய்யக்கூடிய காரியமல்ல இது. இந்த இமாலயப் பணியை எல்லோரும் அவரவர் இருக்கும் இடங்களிலிருந்து ஆற்ற வேண்டும்" என்று அண்ணல் கூறினார்.

17.10.1927 அன்று கோவை காரனேசன் பூங்காவில் (தற்போது வ.உ.சி.பூங்கா என்று அழைக்கப்படுகிறது) நடை-பெற்ற பொதுக்கூட்டத்தில் கலந்துகொண்டார்.

ஆதி திராவிடர்கள் கொடுத்த வரவேற்புரையில் இருந்த குறிப்பு அண்ணலின் உள்ளத்தைக் கவர்ந்தது. "அரசாங்கமானது எங்களுடைய சேரிகளின் அருகிலேயே கள்ளுக்கடைகளை திறந்து எங்களுக்கு குடியின் மீது ஆசை காட்டுகிறது. இந்தக் கள்ளுக்கடைகளுக்குப் பதிலாக தொழிற்சாலைகள் இருந்தால் ஆப்காரி காண்ராக்டர்களுக்குப் பதிலாக சமூக ஊழியர்கள் எங்களுக்கு நண்பர்கள் ஆனால் விரைவில் நாங்கள் முன்னேறி விடுவோம் என்பதில் ஐயமில்லை. ஆகையால் எங்களுடைய சேரிகளுக்கு அருகில் தொழிற்பள்ளிகளை திறந்து உதவுமாறு உங்களை வேண்டிக்கொள்கிறோம்" என்று இந்த வரவேற்புரை கடிதம் கூறுகிறது. இந்த கடிதத்தை கூட்டத்தில் காந்திஜி திரும்பவும் படித்துக் காண்பித்தார்.

சாதாரண கூட்டங்களில் வரவேற்புரைகளைப் படிப்பதே காந்திஜிக்குப் பிடிக்காது ஆனால் இந்த வரவேற்புரையின் பகுதியை அவரே கூட்டத்தில் படித்துக் காண்பித்தார். நான் இதை முழு மனதாக ஆதரிக்கிறேன்.

கோவை நகர மக்களாகிய நீங்கள் இதற்கு ஆதரவாக போராட வேண்டும். ஆதி திராவிடர்களுக்காக சில இளைஞர்களும், பெண்களும் முன் வந்து தொழிற்பள்ளிகளை தொடங்க வேண்டும் என்று கேட்டுக்கொண்டார்.

சென்னையில் நடைபெற்ற கூட்டத்தில் "எத்தனையோ சாதிக்காரர்கள் குடிக்கிறார்கள். ஆனால் தாழ்த்தப்பட்டோர் மட்டும் குடிக்கிறார்கள்" என்று கூறுவது நியாமில்லை என்று ஒரு புகார் மனுவை காந்திஜியிடம் கொடுத்தனர். அதற்கு காந்திஜி மற்ற சாதியினர்களிடமும் குடிப்பழக்கம் இருக்கிறது என்று தெரியும். ஆனால் எவ்வளவோ சிரமப்பட்டு முன்னேறவேண்டிய பிற்போக்கான நிலையில் உள்ள அரிஜனங்களுக்கு இது கட்டுபடியாகாது. ஆகையால் குடிப்பழக்கத்திலிருந்து விலகி ஒதுங்க வேண்டிய பொறுப்பு இவர்களுக்கே அதிகம். நான் அவர்களுடைய குடிப் பழக்கத்தை அகற்ற எத்தனையோ ஆண்டுகள் எவ்வளவோ பாடுபட்டு இருக்கிறேன் என்று கூறினார்.

30.01.1946 அன்று சென்னை பொதுக்கூட்டத்தில் பேசும் போது மதுவினால் ஏற்படும் தீங்குகளைப் பற்றி காந்திஜி குறிப்பிட்டார்.

"சென்னை நகரில் ஆயிரக்கணக்கான பேர் குடிப்பழக்கம் உள்ளவர்களாய் இருக்கிறார்கள் என்பதை நான் அறிவேன். யாரும் நினைத்துப் பார்த்தால் இதயமே வெடித்துவிடும் அளவிற்கு தீங்குகள் விளைகின்றன.

மதுவிலக்கு இருந்தபோது மதுவினால் வரக்கூடிய வரு -மானம் குறைந்தது. மக்கள் மகிழ்ச்சியாக வாழ்ந்தார்கள் குடும்பத் -தில் உள்ளவர்களுக்கு வயிறு நிறைய உணவு கிடைத்துக் கொண்டிருந்தது. இந்த சீர்திருத்தம் மேலே இருந்து வராமல் கீழே இருந் து வந்திருந்தால் இன்னும் அதிக பலன்கள் கிடைத்திருக்கும்" என்று கூறினார். ❑

"உண்டும், குடித்தும், களித்தும், வாழ்வதற்காக கடவுள் நம்மை படைக்கவில்லை. ஒவ்வொருவரும் உழைத்து உண்ண வேண்டும். மது அருந்துதல் மிகப் பெரிய குற்றமாகும். இக்குற்றத்தின் பயனாக பல கொடுமைகள், தீமைகள், கலவரங்கள், இரத்தக் களரிகள் முதலியன அடுக்கடுக்காக நிகழ்கின்றன."

– 29.01.1948 அன்று டெல்லியில் காந்திஜி ஆற்றிய உரை.

மதுபானம் அருந்தாமல் இருந்தால் உழவர்களும், உழைப்பாளிகளும் சுய அறிவு அடைவதோடு ஆத்ம பலத்தையும், தேக பலத்தையும் அடைவார்கள் .

மதுவிற்கு அடிமையான ஒரு சமுதாயத்திற்கு விமோசனம் என்பதே கிடையாது

– காந்திஜி.

10. தந்தை பெரியாரும் மது ஒழிப்பும்



தந்தை பெரியார் அவர்கள் மதுவிலக்கு கொள்கையில் மிகத்தீவிரமாக இருந்தார். 1921 – இல் கள்ளுக்கு உதவும் மரங் –களையெல்லாம் வெட்டிவிட வேண்டும் என்று காந்தியடிகள் கூறினார்.

மதுவிலக்குப் பிரசாரம் மும்முரமாக நடந்தபோது, காந்தி ஒரு பணியிட்டார். "கள்ளுக்கு உதவும் மரங்களையெல்லாம் வெட்டிவிடவேண்டும்" இது அப்பணி. வடநாட்டில் பெரும்பாலும் கள் தருவது ஈச்சமரங்கள். அவைகளை வெட்டி வீழ்த்துவதால் பெருஞ்சேதம் இல்லை. தென்னாட்டில் அப்படியல்ல. இங்கே கள் இறக்கப்படுவது தென்னைமரங்களில். தென்னையின் பயன் மிகமிகப் பெரியது. இவைகள் அழிக்கப்பட்டால் நாட்டுக்குப் பொருட்சேதம் பல. இதைப்பற்றிக் காந்தியார் சிந்திக்கவே இல்லை போலும்! காந்தியாரின் பணியைப் பலர் ஏற்றனர். வடநாட்டில் பல

இடங்களில் ஈச்சமரங்கள் வெட்டி வீழ்த்தப்பட்டன. இச்செய்தி, செய்தித்தாள்களில் வந்தன. அதனைக் கண்டார் ஈ.வெ.ரா. காந்தீய வெறியில் மூழ்கியிருந்தார் அல்லவா? தமது தோட்டங்களிலிருந்த 500 தென்னை மரங்களையும் வெட்டிச் சாய்த்தார். அக்காலத்தில் காந்தீய வெறியினால் தென்னைகளை வெட்டி வீழ்த்தியவர்களில் இவரே தலைசிறந்தவர் என்று கூறலாம்.

1921-ஆம் ஆண்டில் கள்ளுக்கடை மறியல் மிகவும் புகழ்பெற்றது. ஈரோட்டில் மறியல் மும்முரம் மிகுதி. ஈ.வெ.ராவே மறியலைத் தலைமை தாங்கி நடத்தினார். இதற்காக 144 தடை உத்தரவு பிறப்பிக்கப்பட்டிருந்தது. மறியல்காரர்கள் தடை உத்தரவை பொருட்படுத்தவில்லை. எண்ணற்ற தொண்டர்கள் சிறை புகுந்தனர். 1921 நவம்பரில் சுமார் 100 தொண்டர்களோடு சிறைபிடிக்கப்பட்டார். ஒரு மாதம் தண்டனை பெற்றார். இதனால் ஊரெங்கும் அமளி. நாடெங்கும் கலவரம். இச்சமயம் நாகம்மை -யாரும் ஈ.வெ.ராவின் தங்கை கண்ணம்மாளும் மறியலுக்குப் புறப்பட்டனர். இவர்களுடன் பல பெண்மணிகளும் தொடர்ந்தனர். மறியல் செய்பவர்கள் ஒரு நாளில் ஆயிரக்கணக்கில் பெருகினர். நாகம்மையாரும் அவருடன் சென்ற தோழர்களும் சிறைபடுத்தப் -பட்டால் ஈரோட்டின் நிலைமை மிக மோசமாகி 10,000 பேர் -களுக்கு சிறை வேண்டியிருக்குமென்று அதிகாரிகள் கருதி, சென்னை அரசாங்கத்துக்குத் தந்தி கொடுத்து முன்னறிவிப்புடன் தடை உத்தரவை நீக்கினர். அதுசமயம் சர்க்கார் 144-க்கு மதிப்பற்று வாய்தா காலத்திற்குள் ரத்து செய்யப்பட்டது இது ஒன்றேயாகும். இச்சம்பவத்திற்குப் பிறகு தமிழ்நாட்டில் கள்ளுக்கடை மறியல் கொழுந்துவிட்டு எரிய ஆரம்பித்துவிட்டது.

இச்சமயம் பொதுவாக இந்தியாவில் நடந்து வந்த ஒத்துழை -யாமைக் கிளர்ச்சி சம்பந்தமாக, காங்கிரசுக்கும் அரசாங்கத்துக்கும் ஒரு சமாதான ஒப்பந்தப் பேச்சு நடைபெற்றது. இதற்காக பம்பாயில் ஒரு மாநாடு கூட்டப்பட்டது. அதற்குக் காலஞ்சென்ற சர்.சங்கரன் நாயர் தலைவர். இம்மாநாட்டின் பெயர் மாளவியா மாநாடு. இம்மாநாட்டின் நடவடிக்கை துவக்கப்படும் முன்பு திரு.பண்டிட் மாளவியா அவர்களும் சர்.சங்கரன் நாயர் அவர்களும் 'மறியலை

நிறுத்திவிட்டு, நடவடிக்கைகள்' என்று காந்தியாரைக் கேட்டுக் கொண்டார்கள். அப்போது காந்தியார், "மறியலை நிறுத்துவது என் கையில் இல்லை; அது ஈரோட்டிலுள்ள இரண்டு பெண்களிடம் இருக்கிறது. அவர்களைக் கேட்டாக வேண்டும்" என்று பதிலுரைத் -தார். இச்செய்தி அச்சமயம் 19.1.1922ந் தேதி வெளியான "ஹிந்து" பத்திரிகையில் வெளியிடப்பட்டிருக்கிறது. காந்தியார் இவ்வாறு சொன்னதற்குக் காரணம், ஈ.வெ.ரா.வின் மனைவி நாகம்மையார், அவரது தங்கை கண்ணம்மாள் ஆகிய இரு பெண்மணிகளும் மறியலுக்கு முக்கிய காரணமானவர்கள். ஆதலால், அவர்களின் கருத்தையறிந்த பின்பே முடிவுசெய்ய வேண்டுமென்று கருதிக் கூறியதேயாகும்.

கள்ளுக்கடை மறியல் செய்வதாக முதன்முதல் முடிவு செய்த இடம் ஈரோடுதான். ஈ.வெ.ரா. அவர்கள் வீட்டில் காந்தியார் முதலிய தலைவர்கள் கூடின காலத்தில் கள்ளுக்கடை மறியல் செய்யவேண்டுமென்று பேசி முடிவு செய்யப்பட்டது, இம் முடிவுக்கு அடிப்படை ஈ.வெ.ரா.வின் முழு ஆதரவேயாகும். இவ்வுண்மையை இன்றைய இளங்கன்றுகள் சில அறியாதிருக்க -லாம். ஆனால், காந்தியாரும் ஆச்சாரியாரும் மறந்திருக்க முடியாது.

1930 மே 10,11 ஆகிய இரண்டு நாட்கள் இரண்டாவது மாகாண சுயமரியாதை மாநாடு நடைபெற்றது. இத்துடன் இளைஞர் மாநாடு, பெண்கள் மாநாடு, மதுவிலக்கு மாநாடு, சங்கீத மாநாடு முதலிய மாநாடுகள் நடந்தன. மதுவிலக்கு மாநாட்டின் தலைவராக S. இராமச்சந்திரன் சேர்வை B.A.,B.L., அவர்கள் இருந்தார்.

1931 ஆம் ஆண்டு ஆகஸ்ட் விருதுநகரில் மூன்றாவது சுயமரியாதை மாகாண மாநாடு நடைபெற்றது. இதன் தலைவர் சர்.ஆர்.கே.சண்முகம் வரவேற்புத் தலைவர் தோழர் V.V.இராமசாமி அவர்கள் இம்மாநாட்டில் ஈரோட்டில் நிறைவேற்றப்பட்ட தீர் -மானங்களை ஒப்புக்கொண்டு தீர்மானம் இயற்றினர்.

பெரியார் அவர்கள் மதுவிலக்கு, சாதி ஒழிப்பு, கதர் விற்பனை போன்ற பல்வேறு தமிழர் நலம் சார்ந்த போராட்டங் -களை நடத்தினார். காங்கிரசில் இருந்தபோது மதுவுக்கு எதிராக மிகப்பெரிய போராட்டத்தை இவரது குடும்பத்தினரே நடத்தினர். இதற்காக சிறையும் சென்றனர்.

தமக்கும் காந்திஜிக்கும் இருந்த தொடர்பை குறித்து பின்வருமாறு தந்தை பெரியார் கூறுகிறார்.

"காந்தியார் மீது நான் காங்கிரசில் இருந்தபோது எனக்கு விசுவாசம் இருந்தது. 1921 –ஆக இருக்குமென்று நினைக்கிறேன். ஈரோட்டிற்கு காந்தியார் வந்திருந்தார். எங்கள் வீட்டிற்கும் வந்தார். அப்போதுதான் நான் அவரை முதன்முதலில் சந்தித்ததாகும்.

"காந்தியார் எனக்கு இரண்டுமுறை கடிதங்கள் எழுதியிருக் –கிறார். ஒருமுறை என்னுடைய தொண்டைப் பாராட்டிக் கடிதம் எழுதினார். மற்றொரு முறை அவர் எனக்குக் கடிதம் எழுதியது என்னுடைய கையில் வலி ஏற்பட்டு நான் துன்பப்பட்ட சமயமாகும். நீங்கள் இராட்டையைச் அதிக நேரம் சுழற்றுவதை நிறுத்தி வையுங்கள் என்று அவர் எழுதியிருந்தார். சட்ட மறுப்புப் போராட்டம் தீவிரமாக நடைபெற்றுக் கொண்டிருந்த ஒரு காலம். ஆயிரக்கணக்கில் ஆண்களும், பெண்களும் போராட்டத்தில் பங்கு கொண்டு சிறைக்குச் சென்றுவிட்டார்கள். அந்தச் சமயம் இந்திய அரசுடன் சமாதானப் பேச்சு நடத்தி அரசியலில் அமைதியான நிலையை ஏற்படுத்தக் கருதி சர்.சங்கரன்நாயர் ஒரு சமாதான மாநாடு கூட்டினார். சமாதானப் பேச்சைத் தொடங்கு –வதற்கு முன்பு போராட்டத்தைக் காங்கிரஸ் கைவிட வேண்டு –மென்று அவர் ஒரு நிபந்தனை கூறினார். அதை காந்தியார் ஏற்கவில்லை. "இந்தப் போராட்டத்தை நிறுத்துவது என் கையில் இல்லை; ஈரோட்டில் ஈ.வெ.இராமசாமியின் தங்கை மற்றும் மனைவி ஆகியோர் கையில் இருக்கிறது" என்று அந்த மாநாட்டிலேயே கூறினார். இவ்வாறு காந்தியார் கூறியதற்கு காரணமும் இருந்தது. அம்முறை சட்ட மறுப்பில் பங்கு கொண்டு என் மனைவி சிறைக்குச் சென்றபின் ஏராளமான பேர் அந்த அம்மாளை பின்பற்றி சிறைக்குச் சென்றார்கள். எங்கள் குடும் –பத்திற்கு ஈரோட்டில் நல்ல செல்வாக்கு உண்டு மேலும் நான் நகராட்சித்தலைவராக வேறு இருந்து இருக்கிறேன். ஆகையால் நாங்கள் எதிர்பார்த்ததற்கும் அதிகமான பேர் நண்பர்களும், ஆதரவாளர்களும் சிறைக்குச் சென்று விட்டார்கள். ஆகையால் அங்கு இருந்த அதிகாரிகள் 144 தடை உத்தரவு போடுவதற்கு

யோசிக்க வேண்டியதாயிற்று. சட்ட மறுப்பு போராட்டத்தில் பாதிக்கப்பட்டவர்கள் தனிப்பட்ட முறையில் வழக்குத் தொடரட் –டும் அதன் பின் நாம் நடவடிக்கை எடுத்துக் கொள்ளலாம். நாமாக தடை உத்தரவு போட வேண்டாம். தடை உத்தரவு போட்டால் போராட்டம் சமாளிக்கமுடியாத அளவுக்கு மேலும் கடுமையாக –லாம் என்று கருதி விட்டுவிட்டார்கள். இது இந்தியா முழுவதற்கும் ஒரு முன்மாதிரியான வெற்றியாக 144 தடை உத்தரவைத் தோற்கடித்த வெற்றியாக கருதப்பட்டது. நான் காங்கிரசின் மீது பற்றுக் கொண்டிருந்த காலத்தில் இந்தியை பரப்புவதிலும் தீவிரமாக ஈடுபாடுகொண்டிருந்தேன். ஈரோட்டில் இந்தி கற்றுக்கொடுக்க பள்ளி ஒன்றையும் தொடங்கி நடத்தினேன். இந்த பள்ளியை தொடங்கி வைத்தவர் பண்டித மோதிலால் நேரு ஆவார். அந்தக்காலத்தில் மதுவிலக்கிலும் எனக்கு ஈடுபாடு இருந்தது. மதுவிலக்கை வெற்றியாக்கும் எண்ணத்துடன் என்னுடைய தென்னந்தோப்பில் இருந்த தென்னை மரங்களை வெட்டினேன். என்னைப் பின்பற்றி என்னுடைய நண்பர்களும் தங்கள் தென்னந் –தோப்பில் இருந்த தென்னை மரங்களை வெட்டினர்.

கள்ளுக்கடையை நீக்கினால், தமிழ்நாட்டில் உள்ள பள்ளிக்கூடங்களை மூடவேண்டிய சூழ்நிலை உருவாகும். கல்விதான் முக்கியம் என்று கருதி கள்ளுக்கடை மூடுவதை எதிர்த்தார்.

மேலும் கள், சாராயக் கடைகளை தேர்தல் காலங்களில் மட்டும் எதிர்த்ததை கண்டித்தார். கள்ளுக்கடைகளை எதிர்த்த –தையும், எந்தக் காரணத்திற்காக ஆதரித்தோம் என்பதையும் குடிஅரசு இதழில் தலையங்கமாக எழுதினார்.

ஏழை மக்கள், தாழ்த்தப்பட்ட சமுதாயத்தைச் சேர்ந்தவர்கள் மதுவினால் பாதிக்கப்படுவதை நினைத்து வருந்தினார். மதுக்கடைகளை ஒழிப்பதற்காக கல்வியை ஒழிப்பது என்பது தாழ்த்தப்பட்ட சமுதாயத்தை மீண்டும் அடிமைப்படுத்துவதாகவே இருப்பதை நினைத்து கல்வி தொடர்வதற்காக மதுக்கடைகள் வேண்டும் என்று நினைத்தார்.

தந்தை பெரியாருடைய காலத்தில் அவரது கருத்து சரியான கோணத்திலேயே இருந்தது. இதனை குடிஅரசு இதழில் அவர் வெளியிட்ட தலையங்கங்களையும், கட்டுரைகளையும் படிப் -பதன் மூலம் நன்கு அறியலாம்.

மதுபானம் :

1920 –ம் வருடம் சென்னை ராஜதானியில் உள்ள கள்ளுக் கடைகள் 11,034 இவைகளில் விற்ற கள்ளு 11 கோடி காலன். 8 திராம் புட்டி 1 க்கு 2 அணா வீதம் 66 கோடி புட்டிக்கு கிரயம் ரூ. 8½ கோடி கிரயம் ஆகிறது. இதற்கு அனுகூலமாய் செலவாகும் மாமிசம், புட்டு, தோசை, முட்டை முதலிய உபகருவிகளுக்கு 2 கோடி ரூபாய் ஆக ரூ. 10 ½ கோடி.

சென்னை ராஜதானியில் உள்ள சாராயக்கடைகள் 6,352. இவைகளில் விற்ற சாராயம் 16,75,000 காலன்கள். காலன் ஒன்றுக்கு 12 ரூ. வீதம் 2 கோடியே 1 லட்சம் ரூபாய் இதற்கு மாமிசம், தோசை, புட்டு முதலிய உபகருவிகள் 25 லட்சம். ஆக இரண்டும் சேர்ந்து 12½ கோடி ரூபாய் செலவாகிறது.

இந்த பனிரண்டரைக்கோடி ரூபாய் நமது ராஜதானியில் கள், சாராயத்திற்காக 3½ கோடி ஜனங்களால் சிலவு செய்யப்படு கிறது. இது அல்லாமல் ஏழை மக்களால் குடியின் பொருட்டு களவு – சூது – பொய் – கொலை, கொள்ளை முதலிய காரியங்களுக்கு ஆகும் செலவு எவ்வளவு? கோர்ட்டு, வக்கீல், லஞ்சம், சப்ளை, மாமூல் வகைகளில் ஆகும் செலவுகள் எவ்வளவு?

மக்கள் ஒழுக்கம், கற்பு முதலிய குணங்கள் ஒழிந்து தேசத்திலும், நாட்டிலும், குடும்பத்திலும் ஏற்படும் கலகங்கள் ஒற்றுமைக் குறைவுகள் எவ்வளவு? இவைகளுக்கு விலைமதித்தால் எந்தக் கணக்கிலடக்கமுடியும்? இவ்வளவு கொடுமைகளையும் செய்வித்து வரும்படிக்காக நமது சர்க்கார் நமது மாகாணத்தில் இதனால் சம்பாதிக்கும் பொருள் எவ்வளவு என்று கணக்குப் பார்த்தால் கள்ளில் 2 கோடியே 31 லட்சமும், சாராயத்தில் 88½ லட்சமும், ஆக 3 கோடி ரூபாய் 19½ லட்சம் ரூபாய்தான். இதல்லாமல், கஞ்சா, அபினி, சீமை சாராயம் விற்கும் கணக்குகள்

இதில் சேர்க்கப்படவில்லை. இதிலிருந்து சர்க்கார் 3 கோடி ரூபாய் சம்பாதிக்க ஜனங்கள் எவ்வளவு கஷ்டமும் நஷ்டமும் அடைய வேண்டி வருகிறது?

இதே மாதிரி இந்தியா முழுமைக்கும் 1923 - 1924-ம் வருஷத்திற்கு நமது சர்க்காருக்கு மது வியாபாரத்தில் வந்த ஆதாயம் 19,40,51,689 ரூபாய். சர்க்காருக்கு 19½ கோடி வரவேண்டுமானால் பொது ஜனங்களுக்கு மேற்கண்ட கணக்குப்படி கள்ளும் சாராயமும் குறைந்தது 80 கோடி ரூபாய்க்குக் குறை வில்லாமல் விற்பனை ஆகியிருக்க வேண்டும். இதற்கேற்ற மற்ற சடங்குகளின் செலவையும் சேர்த்துப் பார்த்தால் எவ்வளவு பெரிய தொகை நாட்டின் சேமத்திற்கல்லாமல் நாட்டினுடையவும், ஒழுக்கத்தினுடையவும் அழிவுக்குச் செலவாகிறது என்பது விளங்கும். சட்டசபை மெம்பர்கள் என்று சொல்லிக் கொள்வோரும் இதற்காக என்ன செய்திருக்கிறார்கள்? கேள்வி கேட்பதும் பத்திரிகையில் எழுதிக் கொள்ளுவதுமான காரியங்களைச் செய்து பொதுஜனங்களை ஏமாற்றி சர்க்காருக்கு அனுகூலம் செய்து கொண்டு வந்திருக்கிறார்களே அல்லாமல் உண்மையில் யோக்கியமான வேலை எதுவும் செய்திருக்கிறார்களா?

சட்டசபையிலேயே குடிக்கும் மெம்பர் சில பேர்கள், சாராயக்கடை குத்தகையெடுத்துப் பிழைக்கும் மெம்பர்கள் சிலபேர்; கள்ளுக்கு மரம் குத்தகை விட்டுப்பணம் சம்பாதிக்கும் மெம்பர்கள் சிலபேர்; குடியினால் ஏற்படும் கொடுமைகளினால் பிழைப்பவர் -கள் சிலபேர். குடியை விளம்பரப்படுத்தி "நல்ல சாராயம்", டாக்டர் சிபார்சு செய்தது, உடம்புக்கு நல்லது என்று ஜனங்களைக் குடிக்கச் சொல்லிப் பிழைக்கும் மெம்பர்கள் சிலபேர். இப்பேர்ப்பட்ட சிகாமணிகளால் பெரும்பாலும் நிரப்பப்பட்ட சட்டசபை (இவை -களில் சம்பந்தப்படாத சில பேர் இருக்கலாம்) ஜனங்களுடைய பிரதிநிதிசபையென்று இப்படிப்பட்டவர்களே பொதுஜனங் களுக்கு எடுத்துச் சொல்லி இவைகளை ஒழிப்பதாய் அங்கு போய் உட்கார்ந்து கொண்டு தங்கள் பிள்ளைக்குட்டிகளுக்கும், இனத்தாருக்கும் பிழைப்புக்கு உத்தியோகம் சம்பாதிக்கப் பாடுபடு -வதல்லாமல் வேறு என்ன பலனை உண்டாக்குகிறார்கள்?

சட்டசபைகள் ஏற்பட்டு மதுபானத்தை ஒழிக்க நம்மவர்கள் பிரயத்தனப்பட்டதாக சொல்லிக் கொள்வதன் பெருமையைக் கீழ்க்கண்ட கணக்குகளால் தெரிந்து கொள்ளலாம். ஜனப்பிரதிநிதி -கள் பெரும்பாலும் உள்ள சட்டசபை இல்லாத காலத்தில் நமது சர்க்காருக்கு இந்தியாவில் மொத்தம் கள்ளு சாராயத்தால் வரும் படி:-

அதாவது 1880 - 1881 வருஷத்தில் 3½ கோடி. அதற்கு வேண்டிய இலாகாக்கள் அமைத்து ஒழுங்குபடுத்தின பிறகும், சட்டசபை ஏற்பட்ட பிறகும் 6 கோடி. 1910 -ல் மிண்டோ- மார்லி சீர்திருத்தத்தின் பிறகு 10 கோடி 1918 -ம் வருஷத்தில் மாண்ட் போர்ட் சீர்திருத்தத்தின் பிறகு 18½ கோடி.. 1924 – ம் வருஷத்தில் 19½ கோடி.

இப்படியே நாளுக்குநாள் உயர்ந்துகொண்டு வருவதல்லா -மல் குறைவுபடுவது எங்கே? இதை நிறுத்திவிட வேண்டு -மென்று சொன்னால் நமது சட்டசபை மெம்பர்களும் மந்திரிகளும் கூட இந்த வரும்படி போனால் சர்க்கார் நடைபெறாதே என்று விசனப்படுகிறார்களே அல்லாமல், தேசமும் ஜனங்களும் கெட்டுப் போகிறதே என்கிற கவலையே இவர்களுக்கு இல்லை. தவிரவும், மது வரும்படி நின்றால் ஜனங்கள் படிக்கப் பணமில்லையே என்றும் விசனப்படுகிறார்கள். இரண்டு பிள்ளையுள்ள தகப்பனை உன் ஒருபிள்ளை படிக்க வேண்டுமானால் ஒரு பிள்ளை கள்ளு சாராயம் குடிக்க வேண்டும்; சம்மதமா? என்று கேட்டால், தகப்பன் ஒரு பிள்ளை குடித்தாலும் சரி ஒரு பிள்ளை படிக்கத்தான் வேண்டும் என்று எவனாவது சொல்லுவானா? ஒருக்காலும் சொல்ல மாட்டான். அதுபோலவே நமது மந்திரிகளும். சட்ட சபை மெம்பர்களும், ஏழை மக்களும், தாங்களும் ஒருவருக்கொருவர் சகோதரர் என்கிற உணர்ச்சி இருக்குமானால் வெகுகாலத்திற்கு முன்பே இந்த மதுவியாபாரத்தை சர்க்காரிலிருந்து ஒழித்திருப் -பார்கள் அல்லது சட்டசபையை விட்டு விலகி இருப்பார்கள். மதுஅருந்துபவர் பெரும்பாலும் ஏழைகள். சட்டசபைக்குப் போகிறவர்கள் பணக்காரரும், மதுஅருந்துபவர்கள் கொடுக்கும் பணத்தால் படித்தவர்களாயுமிருப்பதால் மதுபானமென்பது அவர்களுக்கு ஒரு கவலையற்ற விஷயமாயிருக்கிறது. சட்டசபைப்

பயித்தியம் இருக்கிறவர்கள் மற்றெல்லா விவகாரங்களையும் விட்டுவிட்டு மதுவிலக்கு என்கின்ற ஒரு காரியத்தில் மாத்திரம் தாங்கள் எல்லாரும் ஒன்றாயிருந்து ஒரேயடியாய் இதை ஒழிப்பது தான் தங்கள் வேலைத்திட்டம் என்கிற கொள்கையை வைத்துக் கொண்டு சர்க்காரின் அதிகச் செலவைக் குறைத்து கள்ளு வரும்படி இல்லாமலே சர்க்கார் நடக்கும்படியாக வரவு செலவு திட்டத்தைச் சரிசெய்துகொண்டு இதை சர்க்காரை ஒப்புக் கொள்ளச் செய்வோம்; ஒப்புக் கொள்ளாவிட்டால் ராணுவச் சட்டம் வந்தாலும் சரி, சட்டசபையை வேறுகாரியம் பார்க்கவிடுவ -தில்லையென்று பிடிவாதம் செய்வதாக தீர்மானித்துக் கொண் -டால் மதுபானம் நமது நாட்டில் இன்னும் ஒழியாமல் இருக்குமா? ஒருக்காலும் இருக்காது என்றுதான் சொல்லுவோம்.

கள் மரம் வளர்ப்பது நாம், சாராயம் காய்ச்சுவது நாம், விற்பது நாம், குடிப்பது ஏழைகள். யார் பேரில் குற்றம் சொல்வது? மரம் வளர்த்து குத்தகைக்கு விட்டுக்கடையெடுத்து கள் விற்று, குடிகாரன் போதையில் செய்த காரியத்திற்குக் கோர்ட்டில் ஏற்பட்ட வழக்குக்கு பீசு பெற்று வாழுபவர்கள், சட்டசபைக்குப் போனால் சர்க்கார் பேரில் குற்றம் சொல்லி ஜனங்களை ஏமாற்றுவார்களே அல்லாமல், தங்கள் குற்றங்களை ஒருக்காலும் திருத்திக் கொள்ள மாட்டார்கள். ஆகையால் யாராவது சட்டசபைக்குப் போவதற்காக ஏழை மக்களிடத்தில் வந்து ஓட்டர்கள் கேட்பார்களானால் அவர்களை சட்டசபையில் நம்பிக்கை உள்ள ஓட்டர்கள் உங்களுக்கு எத்தனை தென்னை மரம்? அதில் எவ்வளவு கள்ளுக்கு அடைக்கப்பட்டிருக்கிறது? நீங்கள் எத்தனை குடிகாரர் கேசுக்கு ஆஜராகி எவ்வளவு பணம் சம்பாதித்தீர்கள்? குடி விலக்க நீங்கள் இந்த 6 வருஷ காலமாய் சட்டசபையிலும், வெளியிலும் என்ன செய்தீர்கள்? எங்களுக்கு வேறு ஒரு நன்மையும் வேண்டாம்; குடி ஒழிந்தால் போதும்; அதற்கு நீங்கள் என்ன செய்யப்போகி -றீர்கள்? நீங்கள் சொல்வதை சர்க்கார் கேட்காவிட்டால் நீங்கள் என்ன செய்வீர்கள்? என்று இம்மாதிரியான கேள்விகளைக் கேட்டு அதற்கு ஏற்ற உண்மை யோக்கியர்களை ஆராய்ந்துப் பார்த்து ஓட்டர்கள் தங்கள் கடமையைச் சரியாய்ச் செய்வார்களானால்

மாத்திரம் சட்டசபையால் மதுபானம் ஒழிக்கலாம் என்று ஓட்டர்கள் நம்புவதற்கும், மதுபானம் ஒழியாவிட்டால் சர்க்கார் மீது குற்றம் சொல்லுவதற்கும் அர்த்தம் உண்டு.

குடி அரசு – தலையங்கம் – 16.08.1925

உயிரோடு பிணமாக்கும் சாராயம் :

விஷமும் சாராயமும் பேசுவதுபோல், தந்தை பெரியார் சொன்ன கதை :

விஷம் : ஓ சாராயமே! நீ என்ன மகாகெட்டிக்காரன்போல் பேசுகிறாய். ஒரு கடுகளவு ஒரு மனிதனுக்குள் பிரவேசித்தேனேயானால் உடனே அவன் உயிரை வாங்கி பிணமாக்கி விடுவேன். நீ பீப்பாய் அளவு உள்ளே போனாலும் ஒன்றும் செய்வதில்லை.

சாராயம் : அப்படியா, உன்னால் என்ன செய்ய முடியும்? ஒரு மனிதன் உயிரை மாத்திரம் தான் வாங்கமுடியும். இது யாரும் செய்து விடுவார்கள். என் சங்கதியைக் கேள். நான் ஒரு மனிதனுக்குள் சென்றேனேயானால் அவன் புத்தி, மனம், சொத்து இவ்வளவையும் பிடுங்கிக் கொள்வதோடு உயிர் இருக்கவே பிணமாக்கி விடுவேன். இது உன்னால் முடியுமா?

ஒருசமயம் வெற்றிலைபாக்கு கடை வியாபாரிகள் சங்க ஆண்டுவிழாவில் பேசவேண்டுமென்று பெரியாரை அழைத்தனர்.

நானும் உங்கள் விழாவில் எது குறித்துப் பேசுவதென்று பலமணிநேரம் சிந்தித்துப் பார்த்தேன். உங்கள் தொழிலால் சமுதாயத்திற்கு எந்த நன்மையும் ஏற்படுவதாகத் தெரியவில்லை. நீங்கள் வெற்றிலை பாக்கு, பீடி, சிகரெட் ஆகியவற்றை வியாபாரம் செய்கிறீர்கள். இவற்றை பயன்படுத்துவதால் மக்களுக்கு கேடு தான் விளைகிறதே தவிர எந்த நன்மையும் உண்டாவதில்லை. எனவே, என்னைக் கேட்டால் நீங்கள் இந்த வியாபாரத்தைக் கைவிட்டுவிட்டு வேறு ஏதேனும் மக்களுக்குப் பயன்படக்கூடிய தொழிலை மேற்கொள்வது தான் அறிவுடைமை ஆகும் என்று பேசினார்.

பீடி, சிகரெட், பான்பீடா உயிருக்கு ஆபத்தானது அதனை விட்டொழிக்க வேண்டும் என்ற வேலையை பெரியார் அன்றே தொடங்கி விட்டார்.

11. நாகம்மையாரும் மது ஒழிப்பும்



நாகம்மையார் அவர்கள் தந்தை பெரியாரின் துணைவி-யாக இருந்ததோடு மட்டுமல்லாமல் பெரியார் நடத்திய பல போராட்டங்களிலும் பங்கு கொண்டவர்.

தந்தை பெரியார் அவர்கள், "நாகம்மையார் நான் காங்கிரசில் இருக்கும் போது நடத்திய பல்வேறு மறியல் விஷயங்களிலும் வைக்கம் சத்தியாகிரக விஷயத்திலும், சுயமரியாதை இயக்கத்தி-லும் ஒத்துழைத்து வந்தது உலகம் அறிந்ததாகும்" எனக் கூறினார்.

வைக்கம் போராட்டம் உள்ளிட்ட பல்வேறு போராட்-டங்களில் முக்கிய பங்காற்றிய நாகம்மையார் கள்ளுக்கடை மறியலிலும் போராடினார். இவரது போராட்டம் பெண்கள் போராட்ட வரலாற்றில் ஒரு மைல்கல்லாகும்.

நாகம்மையாரின் முதல் அரசியல் நடவடிக்கை கள்ளுக் கடை மறியல் போராட்டமாகும். 1921 ஆம் ஆண்டு நடந்த இந்த



நிகழ்ச்சி இந்திய சுதந்திரப் போராட்ட வரலாற்றில் பெண்களின் பங்களிப்பில் முக்கியப் போராட்ட நிகழ்வாகும்.

மதுவிலக்குப் பிரச்சாரத்தைச் செயல்படுத்த காந்தியும், காங்கிரசுத் தலைவர்களும் ஒன்றுகூடி, கள்ளுக்கடை முன் மறியல் செய்வது எனும் முடிவினை ஈரோட்டில் பெரியாரின் இல்லத்தில் தான் எடுக்கப்பட்டது.

கள் இறக்கிட உதவிடும் மரங்களை வெட்டிவிட வேண்டும் என காந்தியடிகள் வேண்டுகோள் விடுத்தார். வடநாட்டில் பெரும்பாலும் ஈச்ச மரங்களில் இருந்துதான் கள் இறக்கப்பட்டது. எனவே காந்தியடிகளின் வேண்டுகோளை ஏற்று பல ஈச்ச மரங்கள் வெட்டப்பட்டன. இதனால் பெரும் சேதம் இல்லை.

ஆனால், தென்னாட்டில் தென்னை, பனைமரங்களில் இருந்து கள் இறக்கப்பட்டது. தென்னை, பனை மரங்களின் பயன்பாடு மிக அதிகம். ஆனால், பொருட்சேதம் பற்றி சிந்திக்கா -மல் தமது தோட்டத்தில் இருந்த தென்னை மரங்களை வெட்டிச் சாய்த்தனர் பெரியாரும் நாகம்மையாரும்.

கள்ளுக்கடை மறியல் போராட்டம் ஈரோட்டில் மிக வேகமாக நடந்தது. 144 தடை உத்தரவு பிறப்பித்த போதும் தொடர்ச்சியாக மறியலில் ஈடுபட்டுக் கைதாகி சிறை சென்றனர்.

நாகம்மையாரும், பெரியாரின் தங்கை கண்ணம்மாளும் பல பெண்களுடன் மறியலுக்குப் புறப்பட்டனர். மறியல் செய்பவர்கள் ஒரேநாளில் ஆயிரக்கணக்கில் பெருகினர். நாகம்மை -யாரும் அவருடன் சென்றவர்களும் சிறைப்படுத்தப்பட்டால் பத்தாயிரம் பேருக்கு மேற்பட்டோரை சிறை வைக்க வேண்டு -மென்று அரசு அலுவலர்கள் கருதிச் சென்னைக்கு தந்தி அனுப்பித் தடையுத்தரவை நீக்கினர். அவ்வேளையில் அரசு 144 தடை ஆணைக்கு மதிப்பளித்து இரத்தான நிகழ்வு இது ஒன்றுதான். இந்நிகழ்விற்குப் பின் தமிழகம் எங்கும் கள்ளுக்கடை மறியல் கொழுந்துவிட்டு எரியத்தொடங்கி விட்டது.

அன்றைய காலகட்டத்தில் அரசு ஒத்துழையாமைப் போராட்டத்தை முடிவுக்குக் கொண்டுவர காங்கிரசுடன் பேச்சு வார்த்தையில் ஈடுபட்டது. இதற்காக மும்பையில் ஒரு மாநாடு கூட்டப் பட்டபோது அதன் தலைவராக விளங்கியவர் சர்.சங்கரன் நாயர். இந்த மாநாட்டின் பெயர் “மாளாவியா மாநாடு.”


இம்மாநாட்டின் நடவடிக்கை தொடங்கும் முன் மதன் மோகன்மாளாவியாவும் சர்.சங்கரன்நாயர் அவர்களும் மறியலை நிறுத்தி விட்டு நடவடிக்கையைத் தொடங்கலாம் என்று காந்தியை

கேட்டுக் கொண்டனர். அதற்குக் காந்தியடிகள் மறியலை நிறுத்து -வது என் கையில் இல்லை. அது ஈரோட்டில் உள்ள இரண்டு பெண்களிடம் இருக்கிறது. அவர்களைக் கேட்க வேண்டும் என்று கூறிவிட்டார்.

கள்ளுக்கடை போராட்டத்தைக் காட்டுத்தீயாக பற்ற வைத்தவர்கள் நாகம்மையாரும், கண்ணம்மாளும். பெண்கள் வீட்டை விட்டு வெளியே வந்து பொதுவாழ்வில் பங்கேற்க தயங்கிய காலத்தில் கள்ளுக்கடை மறியலை தலைமையேற்று நடத்தினர்.

“தமிழ்நாட்டில் இவ்விரு பெண்கள்தான் முதன்முதலில் சிறை சென்ற பெரிய குடும்பத்தினர். இதன் காரணமாக ஈரோடு நகரமே மலைத்தது” என பெருந்தலைவர் காமராசர் அவர்கள் 24.12.1973 அன்று “காண்டீபம்” பத்திரிக்கையில் குறிப்பிட்டுள்ளார்.

தந்தை பெரியார் நடத்திய பல போராட்டங்களில் நாகம்மையாரின் பங்கு குறிப்பிடத்தக்கது. ❑



12. தவத்திரு குன்றக்குடி அடிகளாரும் மது ஒழிப்பும்



ஆத்திகனோ, நாத்திகனோ முதலில் மனிதனாக இரு. அது தான் உனக்கும், எனக்கும், ஊருக்கும், உலகுக்கும் என்றென்றும் வேண்டியது. – குன்றக்குடி அடிகளார்

1982 ஆம் ஆண்டு குமரி மாவட்டத்தில் மிகப்பெரிய மதவெறிப்போராட்டம் ஏற்பட்டது. நிலைமை கட்டுக்கடங்காமல் போனது. குன்றக்குடி அடிகளார், பிற மதத் தலைவர்களையும் அந்தப் பகுதியில் முக்கிய பிரமுகர்களையும் அழைத்துப்பேசினார்.

கிராமங்களுக்குள் அன்னியர் நுழைய முடியாத நிலையில் குன்றக்குடி அடிகளார், கோவை, பேரூர் ஆதீனம் இராமசாமி அடிகளாருடன் கிராமம் கிராமமாக சென்றார். மக்களைப் பார்த்து ஆறுதல் கூறினார். அஞ்சிக் கிடந்தவர்களுக்கு தைரியம் ஊட்டி–னார். குன்றக்குடி அடிகளார் சென்ற இடமெல்லாம் மிக வேகமாக அமைதி திரும்பியது.


15.12.1956 அன்று மதுரையில் நடந்த திராவிடர் கழக பொதுக்கூட்டத்தில் கருவறை நுழைவுப்போராட்டத்தை தந்தை பெரியார் அறிவித்தார். போராட்டத்தின் நோக்கம் இறைமை சார்ந்தது அல்ல, இந்த போராட்டம் சமூகம் சார்ந்தது. குன்றக்குடி அடிகளாரும் தன் ஆதினத்தைச் சார்ந்த திருக்கோயில்களில் தீட்சை பெற்று பதிவு செய்து கொண்ட அனைவரும் சாதி வித்தியாசம் இன்றி கருவறையினுள் நுழைந்து பூவும், நீரும் இட்டு இறைவனை நேரில் வழிபடலாம் என்று 24.12.1969 அன்று அறிவித்தார். மேலும் இதனை அருள்நெறித் திருக்கூட்டம் மூலமாக நடைமுறைப்படுத்தினார்.

வறட்சி நிலையில் இருந்த குன்றக்குடி பகுதி வளமான பகுதியாக மாற்றுவதில் முக்கிய பங்கு வகித்தார். கிராமத்தில் வேலைவாய்ப்பு பெருக்கப்பட்டது. வறண்ட மானாவரி கிராமத் -தில் மக்களுக்கு வேலைவாய்ப்பை ஏற்படுத்திக்கொடுத்தார். குன்றக்குடியில் திட்டக்குழு ஒன்றை ஏற்படுத்தி அதன் மூலமாக "சமூக நல்லிணக்கம்" கண்டார்.

1989 ஆம் ஆண்டு மலிவுவிலை மதுக்கடை திட்டத்தை தமிழ்நாடு அரசு ஏற்படுத்தியது. அதன்படி குன்றக்குடியிலும் மலிவுவிலை மதுக்கடை ஒன்று தொடங்கப்பட்டது. அடிகளார் இதை திட்டக்குழுவின் முன் வைத்தார். குன்றக்குடியில் மதுக் கடை கூடாது என்று தீர்மானம் நிறைவேற்றப்பட்டது. அதையும் மீறி மதுக்கடையை குன்றக்குடி பகுதியில் அரசு அமைத்தது.

அடிகளார் ஊராட்சி மன்றத் தலைவர் என்ற நிலையில் உயர்நீதிமன்றத்தில் வழக்குத் தொடுத்துத் தடை ஆணை பெற்று மலிவு மதுவை குன்றக்குடி ஊராட்சி எல்லைக்குள் நுழைய விடாமல் துரத்தி அடித்தார். ❑

13. முன்னாள் முதல்வர் சுப்பராயனும் மது ஒழிப்பும்



சுதந்திர போராட்ட வரலாற்றில் சுப்பராயன் அவர்களுக்கு முக்கிய பங்கு உண்டு. கால்பந்து, ஹாக்கி, கிரிக்கெட் போன்ற விளையாட்டுகளில் ஆர்வம் கொண்டவர்.

ஜமீன் பரம்பரையில் வந்த சுப்பராயன் அவர்கள் ஏழைகளுக்கான உணவுத்திட்டம், தாழ்த்தப்பட்டோருக்கான பள்ளிகள், தொழிற்கல்விதிட்டம், குறவர் இனத்திற்கான வீடுகள் அமைத்துக் கொடுத்தல், தாழ்த்தப்பட்ட மாணவர்களுக்குக் கல்வி நிதிச் சலுகை, ஆதி திராவிடர் கூட்டுறவு சங்கம், விதவைகள் மறுமணம், மூடநம்பிக்கைக்கு எதிரான பிரச்சாரம் போன்றவற்றில் ஈடுபட்டு வந்த ரங்கராவ் அவர்களின் மகள் இராதாபாய் என்பவரை டாக்டர் சுப்பராயன் காதல் திருமணம் செய்தார்.

ரங்கராவ் அவர்கள் தன் வாழ்வின் பெரும்பகுதியை பொதுநலனுக்காவே அர்ப்பணித்தவர். அவர் தன்னுடையை



மனைவி இறப்பிற்குப்பின் ரங்கராவ் என்ற பெயரை கைவிட்டு விட்டு "சாமி ஈஸ்வரானந்தா" என்று பெயரை மாற்றிக் கொண்டார். மேலும் என்னுடைய உயிர் பிரிந்தபின் என் உயிரற்ற உடலை ஆதி திராவிட மக்களிடம் கொடுக்க வேண்டும். அவர்கள் சக்கிலியர் என்று அழைக்கப் -படுகின்ற அருந்ததியர் மயானத்தில் என் உடலை அடக்கம் செய்ய வேண்டும் என்று "சுவாமி ஈஸ்வரானந்தா" உயில் எழுதி வைத்தார்.

1928 ஜனவரி 30 ஆம் தேதி ரங்கராவ் என்று அழைக்கப் பட்ட சுவாமி ஈஸ்வரானந்தா அவர்கள் உயிர் பிரிந்தது. அவரது உயிலின்படி அவரது உயிரற்ற உடல் தாழ்த்தப்பட்ட மக்களிடம் ஒப்படைக்கப்பட்டது. அவர்கள் தங்கள் காலனியில் வைத்து ஈஸ்வரானந்தா உடம்பிற்கு இறுதி மரியாதையைச் செலுத்தினர். அதன்பின் அவர் விருப்பப்படி அருந்ததியரைப் புதைக்கும் மயானத்தில் புதைத்தனர்.

அந்தணராய்ப் பிறந்த ரங்கராவ், சுவாமி ஈஸ்வரானந்தா என்ற பெயரில் ஆதிதிராவிடராய் மறைந்தார். சாமி ஈஸ்வரானந்தா -வின் சேவைகளை அறிந்த மகாத்மாகாந்தி சுவாமி ஈஸ்வரானந் -தாவை அடக்கம் செய்த தாழ்த்தப்பட்டோர் சுடுகாட்டிற்குச் சென்று அவரின் சமாதிக்கு முன் அமர்ந்து பிரார்த்தனை செய்தார். பின்னர் அங்கிருந்து விடைபெறும் போது ஆதிதிராவிடர் மக்களி -டம் உங்கள் குரு ரங்காராவ் (எ) சுவாமி ஈஸ்வரானந்தா தான் எனது உண்மையான குரு என்றார்.

ரங்கராவ் (எ) சுவாமி ஈஸ்வரானந்தா அவர்களின் மகள் இராதாபாய் அவர்களை திருமணம் செய்த டாக்டர் சுப்பராயன் அவர்களும் மது ஒழிப்பிற்காக பாடுபட்டார்.

திரு. சுப்பராயன் அவர்கள் தமிழக முதல்வராக பொறுப்பு வகித்தார். இவரது காலத்தில் தான் வகுப்புவாரி பிரதிநிதித்துவம் அறிமுகப்படுத்தப்பட்டது.

1928 ஆம் ஆண்டு சேலத்தில் நடைபெற்ற காங்கிரஸ் மாநாட்டில் வகுப்பு வாரி இட ஒதுக்கீட்டை ஆதரித்துப் பேசிய கப்பலோட்டிய தமிழன் வ.உ.சிதம்பரனார் அவர்கள் ப.சுப்பராயன் தலைமையில் சுயேச்சை அமைச்சரவை தான் வகுப்புவாரி இட ஒதுக்கீட்டிற்கு சட்டரீதியான உத்திரவாதத்தை ஏற்படுத்தியது. கம்யூனல் அரசாணை பிறந்தது டாக்டர் ப.சுப்பராயன் ஆட்சியில் தான் எனக் குறிப்பிட்டார்.

குமாரமங்கலத்திற்குத் தென் கிழக்கே நான்காவது கல் தொலைவில் இருக்கும் கிராமம் புதுப்பாளையம். இங்கிருந்த கைலாசக்கவுண்டருக்கு நடன சபாபதிக்கவுண்டர், இரத்தின சபாபதிக்கவுண்டர் என இரண்டு புதல்வர்கள்.

நடனசபாபதிக்கவுண்டர் கெட்டவழிகளில் ஈடுபட்டு அனைத்துச் சொத்துகளையும் இழந்து இறந்தார்.

இரத்தினசபாபதிக் கவுண்டரின் மனைவி பாவாயம்மாளுக்-குப் பிறந்த இரண்டும் பெண் குழந்தை என்பதனால், நல்லம்மாள் என்பவரை இரண்டாம் தாரமாகத் திருமணம் செய்தார். இவருக்குப் பிறந்த மூன்றும் பெண் குழந்தைகளே! அதனால் தன்னுடைய அண்ணன் நடனசபாபதிக்கவுண்டரின் மகனை இரத்தின சபாபதிக்கவுண்டர் தத்து எடுத்துக் கொண்டார். டாக்டர் சுப்பராய-னின் மாமாதான் இந்த இரத்தினசபாபதிக் கவுண்டர்.

இரத்தினசபாபதிக் கவுண்டர் பெரும் குடிகாரர்; முன்கோபி; அடிக்கடி சவுக்கை எடுத்துக் கொண்டு மற்றவர்களை மிரட்டுபவர்.

சேலம் நீதிமன்றத்திலும் சென்னை உயர்நீதிமன்றத்திலும் வழக்குரைஞராகப் பணியாற்றிக் கொண்டு, காங்கிரஸ்காரராக பொது வாழ்க்கையில் ஈடுபட்டுக்கொண்டிருந்த இராஜாஜி, நான்கு குழந்தைகளை விட்டுவிட்டு மனைவி அலமேலுமங்கம்மா இறந்ததால் துயருற்றார். இந்தக் கவலையிலிருந்து விடுபட முயன்றார்.

காந்திஜியின் ஒத்துழையாமை, தேச நிர்மாணத் திட்டங்க-ளான கதர்த்திட்டம், மதுவிலக்குப் பிரச்சாரம், தீண்டாமை ஒழிப்பு ஆகியவற்றில் ஈடுபடுவதன் வழியாக தன் மனக்கவலைகளுக்கு மருந்திடலாம் என்று இராஜாஜி எண்ணினார்.

இந்தத் திட்டங்களைச் செயல்படுத்த இராஜாஜிக்கு ஒரு இடம் தேவைப்பட்டது. அதுபற்றி டாக்டர் சுப்பராயனிடம் இராஜாஜி விவாதித்தார். அப்போது தன்னுடைய ஜமீனுக்குச் சொந்தமான புதுப்பாளையம் கிராமத்தில் காந்தியின் நிர்மாணப் பணிகளைத் தொடங்குவதற்கு ஏற்பாடு செய்வதாக டாக்டர் சுப்பராயன் கூறினார்.

டாக்டர் சுப்பராயன் இந்தக் காலகட்டத்தில் காங்கிரஸ் கட்சியில் உறுப்பினராக இல்லை. இருப்பினும் இராஜாஜி தன் குடும்ப நண்பர் என்ற வகையிலும், காந்தியக் கருத்துகளில் தனக்கு இருந்த பற்றினாலும் இராஜாஜிக்கு டாக்டர் சுப்பராயன் உதவினார்.

புதுப்பாளையம் கைலாசக்கவுண்டரும், அவருடைய மகன் இரத்தினசபாபதிக்கவுண்டரும் இராஜாஜிக்கு அறிமுகமானவர் -களே. இருப்பினும் இரத்தின சபாபதிக்கவுண்டரை அணுகி, தன்னுடைய விருப்பத்தை இராஜாஜி தெரிவித்தார்.

தனிப்பட்ட வாழ்க்கையில் குறைபாடுடையவராக இருப்பி -னும், இராஜாஜியின் காந்திய நிர்மாணப் பணிகளுக்கு உதவுவ -தாக இரத்தினசபாபதிக்கவுண்டர் உறுதி கூறினார். அதன்படி ஊரின் தொடக்கத்தில் இருந்த நான்கு ஏக்கர் நிலத்தையும், அதில் இருந்த இரண்டு கிணறுகளையும், இராஜாஜியின் காந்திய நிர்மாணப் பணிகளுக்காக இரத்தின சபாபதிக் கவுண்டர் தான -மாகக் கொடுத்தார்.

இரத்தினசபாபதிக்கவுண்டர் இனாமாகக் கொடுத்த நிலத் -தில், காந்திஜி அமைத்திருக்கும் சபர்மதி ஆசிரமத்தைப் போன்று ஒரு ஆசிரமம் அமைக்க இராஜாஜி விரும்பினார். அந்தத் திட்டத் -துடன் இராஜாஜி காந்திஜியைச் சந்தித்தார். அவர் இந்திய நூற்போர் சங்க நிதியிலிருந்து அறுபதாயிரத்தை வழங்கி இராஜாஜியை வாழ்த்தி வழியனுப்பினார்.

ஆசிரமம் உருவாகியது. அதற்கு "காந்தி ஆசிரமம்" என்று பெயரிடப்பட்டது. கோவை அய்யாமுத்துக்கவுண்டர், ஈரோடு ஈ.வெ.ராமசாமி (தந்தை பெரியார்), மதுரை வழக்குரைஞர், அவருடைய மனைவி, என்.நாராயணன், திருமதி & திரு.கே.சந்தானம்,

இரத்தினசபாபதிக்கவுண்டர் ஆகியோர் ஆசிரமத் திறப்பு விழாவிற்கான ஆரம்பப் பணிகளில் ஈடுபட்டனர்.

"காந்திஆசிரம"ப்பணி தொடங்கிய நாளிலிருந்து இராஜாஜி -யும் அவருடைய குழந்தைகளும் இரத்தினசபாபதிக்கவுண்டர் வீட்டிலேயே தங்கினர். அதன்பின் இராஜாஜியும் அவருடைய குழந்தைகளும் தங்குவதற்காக 12` x 5' அளவில் ஒரு நீண்ட அறையுடன், இரண்டு சிறிய அறைகள் கொண்ட ஓட்டு வீடு ஒன்று கட்டப்பட்டது.

ஆசிரமம் கட்டி முடிக்கப்பட்டது. அந்த ஆசிரமத்தை காந்திஜியைக் கொண்டு திறப்பதென முடிவு செய்யப்பட்டது. 1925 பிப்ரவரி 6 ஆசிரமம் திறப்பு விழா என முடிவும் செய்யப் பட்டது. ஆனால், அன்றைய தினம் காந்திஜியால் வர இயல வில்லை. அதனால் தந்தை பெரியாரைக் கொண்டு, "காந்திஜி ஆசிரமம்" திறப்பு விழா நடந்தது.

ஆரம்பத்தில் பதினேழு பேர் ஆசிரமத்தில் வசித்தனர். அவர்கள் அதிகாலையிலும், மாலையிலும் சூரிய வணக்கம் செய்தல், பிரார்த்தனை செய்தல் என வாழ்ந்ததைப் பார்த்து புதுப்பாளைய மக்கள் அதிசயித்தனர்.

காலப்போக்கில் கிராம மக்கள் ஆசிரம மக்களுடன் பழகத் தொடங்கினர். இதைப் பயன்படுத்திக் கொண்டு, கிராமத் தலைவர் -களைக் கொண்ட குழுக்களை இராஜாஜி அமைத்தார். மொத்தத் -தில் அந்தக் கிராம மக்களின் வாழ்க்கையில் புதுமை தென்படத் தொடங்கியது.

ஆசிரமத் திறப்பு விழாவிற்கு வர இயலாத காந்திஜி, 1925 ஏப்ரல் மாதத்தில் ஒருநாள் புதுப்பாளையம் வருவதாகத் தகவல் வந்தது. இதற்கிடையில் இரத்தினசபாபதிக்கவுண்டரும் அவரு -டைய குடும்பத்தினரும் கதராடைக்கு மாறிவிட்டனர். கிராமத்தின் அடித்தட்டு மக்களும் நூல் நூற்கத் தொடங்கி விட்டனர்.

குறிப்பிட்ட நாளில் காந்திஜியும் அவருடைய உதவியாளர் மகாதேவ் தேசாயும் புதுப்பாளையத்தில் இருக்கும் "காந்தி "ஆசிரம"த்திற்கு வந்தனர். இரத்தினசபாபதிக் கவுண்டரின்

ஏற்பாட்டில் மிராசுதாரர்களும் பொதுமக்களும் ஆசிரமத்திற்குத் திரளாக வந்திருந்தனர். தாழ்த்தப்பட்ட வகுப்பைச் சார்ந்த பெண்களும், உயர் சாதியினரும் ஒன்றாக அமர்ந்து நூல் நூற்றனர். இதனைக் கண்ட காந்திஜி, "இரத்தினசபாபதிக்கவுண்டரின் புனித -மான உதாரணத்தைக் கடைப்பிடிப்போம்" என்று பாராட்டினார்.

இரத்தினசபாபதிக்கவுண்டரை காந்திஜி பாராட்டியது அனைத்து கிராமங்களுக்கும் பரவியது. இதுநாள்வரை குடித்துக் கொண்டிருந்த இரத்தினசபாபதிக்கவுண்டரும் இன்றோடு குடிப்பதை நிறுத்தினார். இராஜாஜியின் காந்தியப் பணிகளுக்கு இரத்தினசபாபதிக்கவுண்டர் முழுமையாகவும், முழுமனதோடும் ஒத்துழைக்கத் தொடங்கினார். காந்தி ஆசிரமத்தின் புகழ் எல்லைகளைத் தாண்டி பரவியது.

மதுவிற்கு அடிமையாக இருந்து விடுபட்ட இரத்தின சபாபதிக்கவுண்டர், மதுவின் தீமைகளை மக்களிடத்தில் பிரச்சாரம் செய்தார். ஊர்ஊராகச் சென்றும் மது ஒழிப்புப் பிரச்சாரத்தை நடத்தினார். இதற்கு அந்தப் பகுதி மக்களிடத்தில் நல்ல பலன் கிட்டியது.

ஆசிரமம் தொடங்கிய நூறு நாட்களுக்குள் இரத்தின சபாபதிக் கவுண்டரின் சேவையினால், புதுப்பாளையத்தைச் சுற்றியிருந்த இருபது கிராமங்களில் ஆயிரம் பேர்களுக்கு மேல் கைராட்டையில் நூல் நூற்கத் தொடங்கிவிட்டனர்.

இராஜாஜியும், அவருடைய குழந்தைகளும் இரத்தின சபாபதிக்கவுண்டர் வீட்டில் தங்கியிருந்தபோது மாமிசம் சமைப்பதைக் கைவிட்டனர். இராஜாஜி ஆசிரம வீட்டில் வாழத் தொடங்கிய பின்பும் இரத்தினசபாபதிக்கவுண்டர் வீட்டில் சைவம் மட்டுமே சாப்பாடானது. ஆம்! கொண்ட கொள்கையில் உறுதியாக பற்றுக் கொண்டு புது மனிதராக இரத்தினசபாபதிக் கவுண்டர் வாழ்ந்தார். இது அவருடைய குடும்ப உறுப்பினர்களையும், கிராம மக்களையும் பற்றிப் படர்ந்தது.

ஒருமுறை இராஜாஜியும், இரத்தினசபாபதிக்கவுண்டரும் மது ஒழிப்புப் பிரச்சாரத்தில் ஈடுபட்டிருந்தனர். அப்போது ஒரு சாராயக் கடை முதலாளி குடித்துவிட்டு இராஜாஜியிடமும்

இரத்தினசபாபதிக் கவுண்டரிடமும் தகராறு செய்தார். மது ஒழிப்புப் பிரச்சாரத்தால் தன்னுடைய தொழில் பாதிக்கப்படுவதாக அந்த சாராயக்கடை முதலாளி ஆதங்கப்பட்டார். இராஜாஜியும், இரத்தின சபாபதிக் கவுண்டரும் எவ்வளவோ எடுத்துச் சொல்லியும் அந்தக் குடிகாரர் சொன்னதையே திரும்பத்திரும்ப சொல்லிக் கொண்டி -ருந்தார்.

பொறுமையை இழந்த இரத்தினசபாபதிக்கவுண்டர், அந்தக் குடிகாரனை அடித்து, "ஏண்டா! நீ என்னை விட குடிகா -ரனா? எங்கிட்டியே சவால் விடுறியா?" என்றார். இதைப் பார்த்துக் கொண்டிருந்த இராஜாஜி இரத்தினசபாபதிக்கவுண்டரின் தீரத் -தைக் கண்டு வியந்தார். இந்த நிகழ்வை இராஜாஜி காந்திஜிக் -கும் தெரியப்படுத்தினார்.

சுமார் 150 வீடுகளைக் கொண்ட புதுப்பாளையத்தில் எல்லா வீடுகளிலும் கைராட்டை எல்லாப் பெண்களும் நூல் நூற்றனர்.

ஆசிரமம் திறந்த இரண்டு ஆண்டுகளில் சுமார் 300 கிராமங்களில், 13,700 நூற்பாளர்கள் இருந்தனர். 18 லட்சம் பெறுமான துணிகள் உற்பத்தி ஆயின. இந்த ஆசிரமத்தின் கிளைகள் தமிழகமெங்கும் தொடங்கப்பட்டன. இப்படி தொடங்கப் -பட்ட கிளைகளின் எண்ணிக்கை 281.

மொத்தத்தில் இரத்தினசபாபதிக் கவுண்டரின் காந்தியப் பணிகளைக் கண்ட அந்தப் பகுதி மக்கள் அவரை "குட்டி காந்தி" என்று அழைத்தனர். மதுவிலக்குப் பிரச்சாரத்திற்கு புதுப்பாளை -யமே முன்னோடியாகத் திகழ்ந்தது. அதன் விளைவு இராஜாஜி "விமோசனம்" என்ற பத்திரிகையைத் தொடங்கவும், பின் அதையே "Prohibition" என்று ஆங்கிலத்தில் வெளியிடவும் காரணமாயிற்று. □

14. முன்னாள் முதல்வர் இராஜாஜியும் மதுஒழிப்பும்

சேலம் மாவட்டம் திருச்செங்கோட்டிற்கு அருகே காந்தி ஆசிரமம் இராஜாஜி அவர்களால் உருவாக்கப்பட்டது. காங்கிரஸ் கட்சியில் முக்கியஸ்தர்கள் காந்தி ஆசிரமத்தின் பொறுப்பில் இருந்து சிறப்பாக வழிநடத்தியுள்ளனர். 1925 இல் தந்தை பெரியார் அவர்கள் ஆசிரமத்தை துவக்கி வைத்தார்.

மது ஒழிப்பு, கிராமப்புற முன்னேற்றம், சாதி ஒழிப்பு போன்றவற்றை முன்னிலைப்படுத்தி இந்த ஆசிரமம் செயல்பட்டு வந்தது. சென்னை முதல் குமரி வரை மதுவிலக்கு யாத்திரை காந்தி ஆசிரமத்தினரால் நடத்தப்பட்டது.

இந்த ஆசிரமத்திற்கு இந்திய அளவில் உள்ள பல முக்கியத் தலைவர்கள் வருகைபுரிந்துள்ளனர். இராஜாஜி அவர்கள் இந்த ஆசிரமத்தில் சுமார் மூன்று ஆண்டுகளுக்கு மேல் தங்கியிருந்தார்.

மகாத்மா காந்தி, ஜவஹர்லால் நேரு, சர்தார் வல்லபாய் படேல் உட்பட பலர் இங்கு வருகை தந்துள்ளனர். இங்கு நடைபெற்ற செயற்குழு கூட்டங்களில் தந்தை பெரியார் அவர்களும் கலந்து கொண்டுள்ளார்.


மகாத்மா காந்தி அவர்கள் இந்த ஆசிரமத்தின் முக்கியஸ்தர் வருகைப் பதிவேட்டில் பாபு என்று தமிழில் கையொப்பம் இட்டுள்ளார்.

இங்கு மதுவினால் ஏற்படும் பிரச்சனைகளை ஓவியங்களாக வரையப்பட்டுள்ளது. இது மதுவின் தீமைகளைப் பற்றி விளக்குவ –தாக உள்ளது. மதுவிற்கு எதிரான **விமோசனம்** என்ற பத்திரிகை இங்கிருந்துதான் வெளியானது என்பது குறிப்பிடத்தக்கது.





பார்த்தாயா தம்பி!...
வெளியீடு: காந்தி ஆசிரமம் - திருச்செங்கோ



ஓட்டைக் குடம்
நிரம்பாது...
மதுக்கடையால்
ஏழை
வாழமாட்டான்




குடிப்பது
"கள்" அல்ல...
மனைவி, மக்களின்
உயிரைக்
குடித்து வருகிறாய்


மதுவெறி



பாடுபட்டு தேடிய
பணத்தை சாராயம்
குடித்து தொலைக்கிறா
அவனது மனைவி மக்கள்
தெருப்பிச்சை
எடுக்கிறார்கள்...


பிராந்தி
விஸ்கி
பீர்
வியர்வை சிந்தி சம்பாதித்த
பணத்தை வீட்டிற்கு கொண்டு
போய் சேர்க்க வழியில்
இருக்கும் தடைகள் விஸ்கி,
பிராந்தி, பீர் முதலியன.


கேட்டினில் துணிந்து நில்.
- மகாகவி பாரதியார்



கள், சாராயம்
தொடாதவர்கள் ஆடு
மாடு, வீடு, வாசல், மனைவி
மக்களோடு சுகமாக
வாழ்கிறார்கள்.



அழகு
சாராயம்
1ஆம் ஆண்டு
என்ன செய்யும்?
சாராயம்
2ஆம் ஆண்டு
பார்த்துக் கொள்வேன்
சாராயம்
3ஆம் ஆண்டு
4ஆம் ஆண்டு
ஐயோ செத்தேன்
சாராயம்


மது


1
மதுபான கடை



2


3



4






தூக்கு
யாருக்கு?



மனை நகை
போகும்
மது வெறி


??
எஞ் சியவை
பாட்டில் களே




சென்னை-குமரி
மதுவிலக்கு
பாதயாத்திரை

15. முன்னாள் முதல்வர் ஓமந்தூர் இராமசாமி ரெட்டியாரும் மது ஒழிப்பும்




ஓமந்தூர் இராமசாமி ரெட்டியார் அவர்கள் சென்னை மாகாண முதல் மந்திரியாக 23.03.1947 முதல் 06.04.1949 வரை இருந்தார். இவரது காலகட்டத்தில் தமிழகத்தில் பல்வேறு நலத் திட்டங்களைக் கொண்டு வந்தார். குறிப்பாக தேவதாசி ஒழிப்புச் சட்டத்தை நடைமுறைப்படுத்தினார். தாழ்த்தப்பட்டோர் கோயிலுக்குள் வருவதற்கு முழு உரிமை கொடுக்கும் வகையில் சட்டம் இயற்றினார். இவரது அமைச்சரவையில் டேனியல் தாமஸ் அவர்கள் மதுவிலக்கு பொறுப்பினை ஏற்று தீவிரமாக மதுவிலக்குத் திட்டத்தை அமுல்படுத்த முற்பட்டார். நான்கு மாவட்டங்களில் மட்டும் மதுவிலக்கு இருந்ததை ஓமந்தூர் இராமசாமி ரெட்டியார் அவர்கள் தமிழகம் முழுமையாக மதுவிலக்கை அமுல்படுத்தினார். தாழ்த்தப்பட்ட மற்றும் ஏழை மக்கள் வாழ்வில் முன்னேற வேண்டுமென்றால் முழுமதுவிலக்கு

அவசியம் என்று கூறினார். முழுமதுவிலக்கை நடைமுறைப் படுத்துவதற்காக அனைவரும் இவருக்கு முழு ஒத்துழைப்பை நல்கினர்.


முழு மதுவிலக்கை அமுல்படுத்துவதன் மூலமாக வேலை வாய்ப்பை பெருக்குவதற்காக கதர் பொருட்கள் உற்பத்தியை அதிகமாக்கினார்.

இவரது காலத்தில்தான் முழுமதுவிலக்கு கொண்டு வரப் பட்டது என்பது பெருமைக்குரிய செயலாகும். ❑



முதலிலே வைக்கும் காலடி

16. முன்னாள் முதல்வர் P.S. குமாரசாமி ராஜாவும் மதுஒழிப்பும்



இந்திய சுதந்திர போராட்டத்தில் இராஜபாளையம் பகுதி ஒரு முக்கியப் போராட்டக் களமாக விளங்கியது. காரணம், இராஜ பாளையம் பகுதியில் பிரிட்டிஷ் ஏகாதிபத்தியத்தையும் அடக்கு முறையையும் எதிர்த்துப் பொதுமக்களே போராடினார். இராஜ பாளையம் ஈன்றெடுத்த தலைவர் P.S.குமாரசாமி இராஜா. இவர் **தென்னக காந்தி** என எல்லோராலும் அழைக்கப்பட்டார். இவர் இராஜபாளையம் நகர மன்ற தலைவராகவும், ஜில்லா போர்டு தலைவராகவும் தமிழக முதல்வராகவும், கவர்னராகவும் இருந்து பொதுவாழ்வில் பாடுபட்டார். இவர் தன்னுடைய அமைச்சரவை -யில் பூரண மதுவிலக்கு கொண்டுவந்தார்.

1949 ஆம் ஆண்டு ஏப்ரல் 1 ஆம் நாள் முதல் P.S. குமாரசாமி இராஜா அவர்களின் முயற்சியால் 25 மாவட்டங்களில் பூரண மதுவிலக்கு நடைமுறைப்படுத்தப்பட்டது.



பூரண மதுவிலக்குத் திட்டம் வெற்றி பெறுவதற்காக பல்வேறு திட்டங்களை செயல் -படுத்தினார். மதுப்பழக்கம் என் -னும் சீர்கேட்டை மக்களால் தான் அப்புறப்படுத்த முடியும் என்று உறுதியாக நம்பினார். மேலும், குடியினால் ஏற்படும் தீமைகளையும் அன்றாட வாழ்வின் சீர்கேடுகளையும் மக்களிடத் -தில் எடுத்துக்கூற வழிவகை செய்தார். பொதுமக்களுடைய ஒத்துழைப்பு இருந்தால்தான் இத்திட்டம் வெற்றிபெற முடியும் என்று திடமாக நம்பினார்.

அரசாங்கம் எத்தனை திட்டங்கள் போட்டாலும் மக்கள் அதைக் கடைப்பிடித்தால்தான் வெற்றி அடையும் என்றும், குடும்பங்கள், மனைவி, மக்கள் இத்திட்டத்தை ஆதரித்து வெற்றிபெறச் செய்ய வேண்டும் என்றும் கேட்டுக்கொண்டார். மேலும், மது அடிமை மற்றும் மறுவாழ்வுத் திட்டத்தில் சேர்ந்து அதன் மூலம் புது வாழ்வினை பெற்றுக் கொண்டிருக்கும் மக்களால் தான் வெற்றி அடைந்துள்ளது என்று கூறினார்.

பூரண மதுவிலக்கு திட்டத்தை ஆதரித்துப் பேசிய கவர்னர் ஜெனரல் இராஜாஜி, "இந்தியாவிலேயே சென்னை மாகாண அரசுதான் இந்த செயற்கரிய செயலை முதன்முதலில் வெற்றி -கரமாகச் செய்து காட்டியுள்ளது. இது P.S. குமாரசாமி இராஜா அவர்களின் மேல் மக்கள் கொண்டுள்ள அன்பினையும், அபார நம்பிக்கையையும் காட்டியுள்ளது. மேலும், என்னால் கொண்டு வரப்பட்ட மதுவிலக்கை விட துணிச்சலாக P.S. குமாரசாமி இராஜாவால் மட்டுமே முடியும்" என்று ஒப்புக்கொண்டார்.

இந்தத் திட்டத்திற்கு பல்வேறு அரசியல் கட்சிகள் எதிர்ப்பு தெரிவித்தனர். அரசுக்கு வருமானம் குறைந்துவிடும் என்றும் இந்த திட்டத்தால் எந்த பயனும் கிடைக்காது என்றும் கூறினார்கள். மேலும், வருமான இழப்பீட்டின் காரணமாக பற்றாக்குறை


பட்ஜெட் போட வேண்டிய சூழ்நிலை வரும் என்றும் கூறினார்கள். அதற்கு P.S. குமாரசாமி இராஜா அவர்கள் பதில் கூறும்போது, ஒருசில நல்ல விசயங்களையும், திட்டங்களையும் கொண்டு வரும்போது ஒருசில தியாகங்கள் செய்ய வேண்டி வரும். மேலும், ஒருசில நலன்களை இழக்க வேண்டி வரும் இதனைப் பொருட் படுத்தக் கூடாது என்று கூறினார்.

மக்கள் முன்னேற்றம், மதுவினால் ஏற்படும் தீமை இவற்றை -யெல்லாம் கணக்கில் எடுத்துக் கொண்டால் மதுவிலக்கை அமல் படுத்தியாக வேண்டும் என்று கூறினார். இந்தியாவின் கலாச்சாரம் குறிப்பாக தமிழ் மாகாண மக்கள் முன்னேற்றத்தை நாம் பார்க்க வேண்டும். மக்கள் நலன்தான் அரசின் வேலை. இது வியாபாரம் அல்ல. மக்கள் சேவை என்றும் கூறினார். மேலும் இந்த திட்டத்தின் மூலமாக கள், சாராயம், மேல்நாட்டு மதுவகைகள், கஞ்சா மற்றும் போதைப் பொருள் எல்லாவற்றிற்கும் தடை விதிக்கப்பட்டு அதனைக் கண்காணிக்க சிறப்பு அமலாக்கப்பிரிவும், மதுவிலக்குப் பிரிவும் கொண்டு வரப்பட்டது. இவற்றைக் கண்காணிக்க பல திட்டங்கள் வகுக்கப்பட்டுள்ளது. இந்தத் திட்டமானது 1949 அக்டோபர் 2 மு.தல் நடைமுறைபடுத்தப்படும் என அறிவித்தார்.

இதை மீறி யாரேனும் மது விற்பனை செய்யவோ, மது வாங்கவோ அல்லது மது அருந்துவதோ கூடாது. மீறினால் கடும் தண்டனைக்கு உள்ளாவார்கள் என்றும் எச்சரிக்கை செய்தார்.


மேலும் சாராயம் காய்ச்சுவதில் ஈடுபட்டுக் கொண்டிருந்தவர் -களை மாற்றுத்தொழில் தொடங்க கூட்டுறவு அமைப்பு மூலம் நிதிஉதவி செய்தார். இத்திட்டம் 1952 ஆம் ஆண்டு வரை செயல்பாட்டில் இருந்த காரணத்தால் மக்கள் மதுவினை அறவே வெறுத்து ஓரளவு மது கட்டுப்பாட்டிற்குள் கொண்டுவரப்பட்டது. இந்த மது ஒழிப்பினை மக்களும், சமூக உணர்வோடு பார்க்கத் தொடங்கினர். மக்களிடமும் விழிப்புணர்ச்சி ஏற்பட்டது. குறிப்பாக பெண்கள் மத்தியில் பெரும் வரவேற்பைப் பெற்றது. மேலும், அரசாங்கம் குடியினால் ஏற்படும் தீமைகளைப் பற்றி வானொலி, நிகழ்ச்சிகள், திரைப்படம், நாடகம், பத்திரிகைகள் மூலம் தொடர்ச்

-சியாக மக்களுக்கு கருத்தை தெரிவித்து வந்தது. மேலும் மதுவிற்கு செலவு செய்யும் பணத்தை சிறுசேமிப்புகளை தொடங்கச் செய்து சேமிக்கும் மனப்பான்மையை மக்களிடத்தில் ஏற்படுத்தினார். இத்திட்டத்தின் மூலமாக வேலை வாய்ப்பும் பெருகியது. கூட்டுறவுச் சங்கங்கள் கொடுத்த பணமும் திரும்ப வந்தது. குடும்பங்களில் மகிழ்ச்சி திரும்பியது. இத்திட்டத்தை செயல்படுத்தியதன் காரணமாக முதல்வர் P.S.குமாரசாமி இராஜா அவர்களின் நிர்வாகத் திறமைக்கு இந்திய அளவில் மதிப்பு ஏற்பட்டது.



மதுக்களத்திலே மடியப்போகும் தற்கொலைப் படைகள்

17. முன்னாள் முதல்வர் பெருந்தலைவர் காமராசரும் மது ஒழிப்பும்



கிங்மேக்கர் என்றழைக்கப்பட்ட பெருந்தலைவர் காமராசர் அவர்கள் சாதாரண ஏழைக்குடும்பத்தில் பிறந்து, காங்கிரசில் இணைந்து இந்திய அளவில் தனக்கென தனி இடம் பிடித்தவர். மதுரையில் நாடார் சங்க மாநாடு நடைபெற்றபோது காமராசர் அவர்கள் மதுரையிலிருந்தார். நாடார் சங்கப் பொறுப்பாளர்கள் மாநாட்டிற்கு வருமாறு அழைத்தனர். நான் சாதி மதங்களுக்கு அப்பாற்பட்டவன். அதனால் நீங்கள் நடத்தும் சாதீய மாநாட்டிற்கு நான் வரமாட்டேன் என்று திட்டவட்டமாக கூறிவிட்டார்.

இவரது காலத்தில்தான் அனைத்துக் கிராமங்களிலும் பள்ளிக் கூடங்கள் உருவாயிற்று. ஏழு சதவிகிதமாக இருந்த படித்தவர் களின் எண்ணிக்கை இவரது காலத்தில்தான் 37 சதவிகிதமாக உயர்ந்தது. அதற்குக் காரணம் இவரது ஆட்சியில் உருவாக்கிய பள்ளிக்கூடங்களே.


ஏழை மக்கள் தொடர்ந்து ஏழையாகவே இருப்பதற்குக் காரணம் இந்த மதுவே. குடும்பங்களைச் சீரழிக்கும் இந்த மதுவை எக்காரணம் கொண்டும் தமிழ்நாட்டில் அனுமதிக்கக்கூடாது என்று தெளிவாக உறுதியாக இருந்தார்.

1923 ஆம் ஆண்டு மதுரையில் நடைபெற்ற கள்ளுக்கடை மறியலில் கலந்துகொண்டார்.

எந்த ஊருக்குச் சென்றாலும் பள்ளிக்கூடம் உள்ளதா என்பதை உற்றுநோக்குவார். பள்ளிக்கூடங்களில் ஏழைக்குழந்தைகள் தொடர்ந்து வந்து படிப்பதற்காக மதிய உணவுத் திட்டத்தைத் தொடங்கி வைத்தார். இதனால் கல்வி பயிலும் ஏழை மாணவர் -களின் எண்ணிக்கையும் அதிகமாகியது.

பெருந்தலைவர் காமராசர் முதல்வராக இருந்தபோது தஞ்சை -யில் சுற்றுப்பயணம் மேற்கொண்டார். அப்போது உடன் வந்த அதிகாரியிடம் “மது ஒழிப்பினால் மக்கள் வாழ்வில் ஏதாவது மாற்றம் உண்டா” என்று கேட்டார். அதற்கு அந்த அதிகாரி “மது ஒழிப்பினால் மக்களது இல்லங்களில் நிம்மதியாக உணவருந்து -கின்றனர். வீடுகளில் சண்டை சச்சரவுகள் குறைந்து விட்டது” எனக் கூறினார். இதைக் கேட்ட பெருந்தலைவர் காமராசர் பெருமகிழ்ச்சியடைந்தார்.

பெருந்தலைவர் காமராசரிடம் அவரது உதவியாளர், “இரண்டு இலட்சம் ரூபாய் இருந்தால் நீங்கள் செய்த சாதனைகளை படமாக்கி வரும் தேர்தலில் வெற்றி பெற்று விடலாம்” என்று கூறினார். அதற்கு பெருந்தலைவர் காமராசர், “அடேங்கப்பா அதில் நான் நான்கு பள்ளிக்கூடங்களை கட்டிவிடுவேனே” என்று கூறினார். ❑



18. பாரத ரத்னா சி.சுப்பிரமணியமும் மதுஒழிப்பும்



திருச்சி அருகே உள்ள காவிரிக்கரையோரம் திருப்பராயத் துறையில் தபோவனம் அமைத்துக் கல்விப் பணியாற்றிய சித்பவானந்தர் அவர்களால் வார்ப்பிக்கப்பட்டவர் சி.எஸ் என்று அழைக்கப்படும் பாரத ரத்னா சி.சுப்பிரமணியம் அவர்கள்.

சட்டப்படிப்பை முடித்த பிறகு, கோவை அருகே போத்தனூர் இரயில் நிலையத்தில் காந்தியடிகளை முதன்முதலாக நேரில் சந்தித்தார். அப்போதிருந்து காங்கிரஸ் பேரியக்கத்தில் தனது வாழ்க்கையை அர்ப்பணித்துக் கொண்டார்.

1947 ஆகஸ்ட் 15 அன்று பண்டித ஜவஹர்லால் நேரு சுதந்திரதின பிரகடனத்தை நிகழ்த்தும்போது உடனிருந்தவர். இராஜாஜி அமைச்சரவையில் தமிழகத்தின் கல்வி, நிதி அமைச் -சராக இருந்தவர். தொடர்ந்து பெருந்தலைவர் காமராஜர் அமைச் -சரவையிலும் மந்திரியாக நியமிக்கப்பட்டார். அதற்குப் பிறகு



பொள்ளாச்சி பாராளுமன்றத் தேர்தலில் வெற்றி பெற்று மத்திய அரசின் உணவு மற்றும் வேளாண் துறை அமைச்சராக இருந்தவர். பின்பு அறிவியல் தொழில்நுட்ப அமைச்சராகவும், பாதுகாப்புத் துறை அமைச்சராகவும் பொறுப்பு வகித்தார் சி.சுப்பிரமணியம் அவர்கள்.

போர்லாக் விருது, இந்தியாவில் உயரிய விருதான பாரத ரத்னா விருது ஆகியவற்றைப் பெற்றவர். இவரது இளமைக் காலத்தில் முதல் களப்போராக கள்ளுக்கடை மறியலில் கைதாகி பத்து மாதம் சிறை தண்டனை பெற்று பின்பு விடுதலையானார். இந்தப் போராட்டம் தந்தைக்கும், மகனுக்கும் நடைபெற்ற அறப்போர் ஆகும்.

1932 ஆம் ஆண்டு ஜூலை மாதம் பொள்ளாச்சி நகரில் அரசு கள்ளுக்கடை ஏலத்தை நடத்தியது. கிராம அதிகாரியாக இருந்த சி.சுப்பிரமணியம் அவர்களின் தந்தையார் சிதம்பரக் கவுண்டர் அவர்கள் அரசு சார்பில் கள்ளுக்கடை ஏலம் விடும் பணியில் பங்குபெற இல்லத்திலிருந்து புறப்பட்டுச் சென்றார். அப்போது தனது தந்தையாரை கள்ளுக்கடை ஏலம் விடும் பணிக்குச் செல்லக்கூடாது என்றும், வேலையிலிருந்து உடனடியாக விலக வேண்டும் என்றும் மன்றாடினார். ஆனால் அவரது தந்தை சிதம்பரக்கவுண்டர், சி.சுப்பிரமணியம் அவர்கள் கூறியதை மறுத்ததோடு, அரசு பணியாளராகிய நான் எனது கடமையை செய்ய வேண்டும் என்று கூறிவிட்டு ஏலத்திற்குப் புறப்பட்டுச் சென்றுவிட்டார்.

ஏலம் நடந்து கொண்டிருக்கும் நேரத்தில், சில காங்கிரஸ் தொண்டர்களுடன் சி.சுப்பிரமணியம் அவர்களும் சென்று ஏலம் நடத்த விடாமல் மறியல் செய்தார். இந்நிலையில் சி.சுப்பிரமணியம் அவர்கள் காவல்துறையினரால் கைது செய்யப்பட்டு அன்று இரவு முழுவதும் சிறையில் அடைக்கப்பட்டார். இதைக்கேள்விப்பட்ட பொள்ளாச்சி நகர்மன்றத் தலைவர்

நாச்சிமுத்துக்கவுண்டர் அவர்கள் காவல்நிலையம் சென்று சிறுசிறு உதவிகளை சுப்பிரமணியம் அவர்களுக்குச் செய்தார். இத்தோடுநில்லாமல், பொள்ளாச்சி ஆட்சியர் M.K.வெள்ளோடி அவர்களிடம் சுப்பிரமணியம் அவர்களின் குடும்ப பூர்வீகத்தை எடுத்துக்கூறினார்.

பூர்வீகத்தை கேள்விப்பட்ட ஆட்சியர் M.K.வெள்ளோடி அவர்கள் சிறையில் இருந்த சி.சுப்பிரமணியத்தை அழைத்து மன்னிப்புக் கேட்டால் விடுதலை செய்துவிடுவதாகக் கூறினார்.

அதற்கு சி.சுப்பிரமணியம் அவர்கள், நான் கடைபிடித்து வரும் காந்திய கொள்கைகளில் மதுவிலக்கு முதன்மையானது. அதனால் மன்னிப்புக் கேட்க மாட்டேன். சிறையிலேயே இருக்கத் தயார் என்று கூறினார். இதை அப்படியே நீதிபதி முன்பும் கூறினார். இதைக் கேட்ட நீதிபதி பத்து மாத கடுங்காவல் தண்டனை விதித்துத் தீர்ப்புக் கூறினார். மேலும், மாவட்ட ஆட்சியர் மூலம் ரூபாய் 500 அபராதமும் விதிக்கப்பட்டது. இதை செலுத்தத் தவறியதால் கூடுதலாக இரண்டு மாதம் சேர்த்து சிறைதண்டனை அனுபவித்தார்.

பொதுவாழ்வில் புகழ்பெற்ற குடும்பத்திலிருந்து வந்தவரை கையில் விலங்கு பூட்டியவாறு பொள்ளாச்சி வீதிகளில் அழைத்துச் செல்லப்பட்டு, கோவை சிறைக்கு பேருந்தில் ஏற்றிச் செல்லப் -பட்டார். பின்பு கோவையிலும் தெருத்தெருவாக கையில் விலங்கு -டனே கூட்டிச் சென்று சிறையில் அடைத்தனர்.

ஓராண்டு காலம் கடுங்காவல் தண்டனையை ஆரம்பித்த சி.சுப்பிரமணியம் அவர்கள் மூன்று வாரங்களுக்குப்பின் வேலூர் மத்திய சிறைக்கு மாற்றப்பட்டார். சிறைச்சாலையில் பட்டாபி சித்தாராமய்யா, பேராசிரியர் என்.ஜி.ரங்கா ஆகியோருடன் பழகும் வாய்ப்பு கிடைத்தது.

தன்னுடைய இளமைக்காலத்தில் செய்த கள்ளுக்கடை மறியல் சி.சுப்பிரமணியம் அவர்களை வாழ்வின் மிக உயர்ந்த நிலைக்கு அழைத்துச் சென்றது.

❑

19. முன்னாள் முதல்வர் எம்.பக்தவத்சலமும் மது ஒழிப்பும்



குடிப்பழக்கம் உலகெங்கும் இருக்கிறது. இத்தீய பழக்கத்தை ஒழிக்க வேண்டும் என்பதே பல நாடுகளின் விருப்பம். ஆனால் அங்கெல்லாம் வெற்றி பெறாத மதுவிலக்குத் திட்டம் இந்தியாவில்தான், மகாத்மா காந்தியின் தலைமையில், உறுதி -யோடு ஆரம்பிக்கப்பட்டு இன்று பெரும் அளவு வெற்றியுடன் நிறைவேற்றப்பட்டு வருகிறது.

ஆச்சரியமான பேச்சு

பாமர மக்கள், ஏழை மக்கள் தொழிலாளர்களுக்கு நிவாரணம் அளிக்கும் வகையிலேதான் மதுவிலக்குத் திட்டம் உருவாக்கப் -பட்டு நிறைவேற்றப்பட்டு வருகின்றது. ஆனால், அதிலே குற்றம் செய்கின்றவர்களுக்கும் தொல்லை ஏற்படுகிறது என்ற காரணத் -தால் இந்தத் திட்டத்தை அமுலுக்குக் கொண்டுவராமல் இருந் -தாலே நலம் என்று சிலர் கூறுவது ஆச்சரியத்தை விளைவிக்கிறது.

“மது விலக்குத் திட்டம் சரிவர நடைபெறவில்லை, அது தொல்லையைத்தான் அளிக்கிறது; போலீஸ்காரர்கள் பிடிக்கிறார் –கள்; விலங்கு போடுகிறார்கள் – குற்றம் செய்கின்றவர்களை. இம்மாதிரி தொந்தரவு ஏற்படுவதால் மதுவிலக்குத் திட்டமே வேண்டாம்” என்ற முறையில் சிலர் பேசுகிறார்கள்.

காந்திஜியும் சட்டமும்

மது விலக்குத் திட்டத்திற்காகச் சட்டம் செய்யக்கூடாது. ஜனங்களாகவே மனம் மாறி மதுவை ஒழிக்க வேண்டுமென்று காந்தியடிகள் சொன்னதாகவும் சிலர் குறிப்பிடுகிறார்கள். மது விலக்குக்காகச் சட்டம் செய்யக்கூடாது என்று காந்தியடிகள் எங்கே கூறினார்கள்?

காந்திஜி வாழ்ந்த காலத்தில் மதுவிலக்குச் சட்டம் அமுலில் இருந்தது. அப்பொழுது நடைபெற்ற ராஜ்ய அரசாங்கங்களும், மத்திய அரசாங்கமும் அப்போதைக்கப்போது பல அரசாங்க நிர்வாக விஷயங்களைப்பற்றி காந்தியடிகளிடம் கலந்து கொண்டுதான் முடிவு செய்து வந்தனர். அவைகளை நிறைவேற்றிக்கொண்டும் வந்தார்கள். ஆகவே காந்தியடிகள் சட்டம் வேண்டாமென்று சொல்லவில்லை. சட்டம் வேண்டாம் என்ற அபிப்பிராயம் யாருக்காவது இருந்தால் அதற்குக் காந்தி அடிகளை மேற்கோளாக – தவறுதலாகக்கூற வேண்டாம் என்று கேட்டுக் கொள்கிறேன்.

சட்டத்தின் பயன்

மதுவிலக்குச் சட்டம் நிறைவேற்றப்படுவதனால் மக்களுக்கு மிச்சம் ஏற்பட்டது. முன்பு மதுவினால் சர்க்காருக்கு 16 கோடி ரூபாய் வந்திருந்தால் இப்போது 10 கோடி ரூபாயாவது மக்களிடத்திலே தங்கியிருக்க வேண்டும் என்பது சரியானது. ஆனால் அது மக்களுக்கு மிச்சமாகி என்ன பயன்? அனாவசியமான வழியில் செலவு செய்து விடுகிறார்களே! என்று சிலர் குறிப்பிடுவதை நான் வரவேற்கிறேன். மதுவிலக்குத் திட்டம் வெறும் ஒழிப்பு இயக்கம் இல்லை, மக்களுடைய வாழ்க்கையை வளர்க்கும் திட்டமும் ஆகும். தங்களிடம் மிச்சப்படுகிற பணத்தை அவர்கள் நல்ல வழியில் உபயோகித்து தங்கள் வாழ்வை வளப்படுத்திக் கொள்ள வேண்டும் என்பதையும் நான் வரவேற்கிறேன்.

அப்படிச் செய்யாமல் அவர்கள் சினிமாவுக்குப் போகிறார்களே என்று சிலர் வருத்தப்படுகின்றனர். சினிமாவுக்குப் போவது அவசியம்தான். வாழ்க்கை என்பது தினந்தினமும் சாப்பிட்டுக் கொண்டிருப்பது மாத்திரம் அல்ல. சாப்பிடுவது மட்டும்தான் வாழ்க்கை என்றால் அதில் சுவையெதுவும் இருக்காது. மனித வாழ்க்கைக்கு சினிமாவும் ஒரு முக்கியமான சாதனம். ஆனால் எப்படிப்பட்ட சினிமாவுக்குப் போகக் கூடாது என்பதைக் கவனித் -துப் போகவேண்டும். கிராம வாழ்க்கைக்கு உகந்த, நல்ல முறை -யில் ஒழுக்கத்தை சரிப்படுத்தக்கூடிய சினிமாப் படங்களுக்கு போகவேண்டும் என்று அவர்கள் ஆசைப்பட வேண்டும். இப்படி அவசியமான செலவுகளைச் செய்து கொள்ளத்தான் வேண்டும்.

நன்மை விளக்கப்பணி

மற்றொன்று நான் அடிக்கடி வற்புறுத்துவது உண்டு. தொழி -லாளர்கள், தொழிற்சங்கங்கள், தொழில் நிர்வாகம் இவைகள், குறிப்பாக இந்த மதுவிலக்குத் துறையில் அதிக கவனம் செலுத்த வேண்டும் என்று சொல்வேன். மதுவிலக்கினால் ஏற்படக்கூடிய நன்மையை வற்புறுத்தி அவர்கள் இந்தக் குடிப்பழக்கத்திற்கு இரையாகாமல் கவனித்துக் கொள்ள வாய்ப்பு இருக்கிறது.

பிரசாரம் செய்வது அவசியம் என்று சொல்லப்படுகிறது. நான் தெரிவிக்க விரும்புவது என்னவென்றால், அரசாங்கத்தைப் பொறுத்த மட்டில், அரசாங்கத்தின் சார்பாகப் பிரசாரம் செய்ய வேண்டிய அவசியத்தின் காலம் தீர்ந்துவிட்டது என்றுதான் சொல்ல விரும்புகிறேன்.

மது விலக்குத் திட்டம் 1937 -ம் ஆண்டிலே முதன் முதலாகத் துவக்கப்பட்டது. அப்பொழுதெல்லாம் பிரசாரத்திற்கு மிகுந்த கவனம் அரசாங்கத்தாரால் செலுத்தப்பட்டு வந்தது. இப்பொழுது அரசாங்கமே நேரிடையாக பிரசாரம் செய்வதற்கு அவசியம் இல்லை என்பதுதான் அரசாங்கத்தினுடைய கருத்து. பிரசாரம் செய்யப்பட்டு விட்டது. குடிப்பது தவறு, குடிப்பது குற்றம் என்பதை எல்லோரும் உணருகிறார்கள். இனி சட்டத்தைச் சரிவர அமுல் நடத்துவதுதான் அரசாங்கத்தினுடைய பொறுப்பு.

தொழிலாளர் மத்தியில்...

ஆனால், ஓரளவு பிரசாரம் வேண்டியிருக்கிறது. வேறு வகையிலே வேண்டியிருக்கிறது. "இம்மாதிரி குற்றத்தில் அகப் -பட்டுக்கொண்டு அவதிப்பட வேண்டாம்" என்ற பிரச்சாரம் வேண்டியிருக்கிறது. அந்தப் பிரசாரத்தைப் பொதுமக்கள் செய்ய வேண்டும். பொதுமக்களுடைய பிரதிநிதிகள் இதிலே அக்கறை கொள்ள வேண்டுமென்று இந்தச் சமயத்தில் நான் வேண்டிக் கொள்ளுகிறேன். முக்கியமாகத் தொழிலாளர் தலைவர்களாகவும், தொழிலாளர் பிரதிநிதிகளாகவும் இருப்பவர்கள் இதிலே அக்கறை கொண்டு, சிறந்த முறையிலே பிரசாரம் செய்ய வேண்டும். அப்பொழுது தான் மக்கள் இதை நன்குணர்ந்து இவ்வாறு குற்றம் செய்யமாட்டார்கள். இம்மாதிரி குற்றம் செய்யாமல் அவர்களைத் தடுப்பதற்கான பொறுப்பை உத்தியோகப்பற்றில்லாத மக்கள் ஏற்றுக் கொள்ள வேண்டும் என்றுதான் இந்தச் சமயத்தில் நான் சொல்ல விரும்புகின்றேன்.

அவ்வாறு பிரசாரத்திலே ஈடுபட்டால் இந்தத் திட்டம் வெற்றிகரமாக நிறைவேறுவதற்கு உதவியாக இருக்கும். இதில் கட்சி வித்தியாசம் ஒன்றும் இல்லை. கட்சி வித்தியாசத்திற்கு வேறு இடம் இருக்கிறது. ஆனால், மதுவிலக்குத் திட்டத்தைப் பொறுத்த வரையில், கட்சி வித்தியாசத்திற்கே இடம் இல்லை. இதுபோல் கட்சிகள் எல்லாம் சேர்ந்து செய்யக்கூடிய காரியங்கள் பல உண்டு. அதைச் செய்யக்கூடும் என்பதை எடுத்துக்காட்ட வேண்டும் என்பது தான் என்னுடைய ஆசை. ஆகவே, எல்லோரும் சேர்ந்து இந்த மதுவிலக்குத் திட்டம் சரிவர நிறைவேற்றப்படுவதற்கு, அதிலும் வெற்றிகரமாக அமுல்நடத்தப்படுவதற்கு வேண்டிய ஆதரவை அளிக்க வேண்டும் என்று வலியுறுத்திச் சொல்ல விரும்புகிறேன்.

அறவே அகற்ற...

இன்னும் சிலர் "இந்தச் சட்டத்திலே தண்டனை கொடுப்பது போதாது" என்று சொல்கிறார்கள். இன்னும் சிலர் "தண்டனை அதிகம்" என்றும் சொல்கிறார்கள். வேறு சிலர் "உற்பத்தி செய்கின் -றவர்களுக்கு (கள்ள மது தயாரிப்பவர்கள்) தண்டனையை

குறைக்கலாம். குடிக்கின்றவர்களுக்குத் தண்டனையை அதிகப் -படுத்த வேண்டும்” என்று சொன்னார்கள். “உற்பத்தி செய்கிறவர் -களுக்கு அதிகமாகத் தண்டனை கொடுக்கலாம். ஆனால், குடிக் -கின்றவர்களுக்குத் தக்க தண்டனையைக் குறைக்க வேண்டும்” என்றுகூடச் சிலர் சொன்னார்கள்.

இதையெல்லாம் பார்த்து எந்த வகையிலே சட்டத்தை அமுல் நடத்தினால் இந்தக் குற்றங்களை அறவே அகற்ற முடியும் என்பதற்கு சட்டசபை அங்கத்தினார்கள், அரசாங்கம் எல்லோரும் சேர்ந்து, அதற்கு வேண்டிய சட்டத்தை இயற்ற வேண்டியிருக்கிறது.

பிரசாரம் எல்லாம் ஒரு அளவுக்குத்தான் பலனைக் கொடுக் -கிறது. எவ்வளவுதான் பிரசாரம் இருந்தாலும் அதற்குமேல் சட்டம் வேண்டியிருக்கிறது. அதிலும் இயற்றப்பட்ட சட்டத்தைச் சிறந்த முறையில் அமுல் செய்வதற்கு அப்போதைக்கப்போது சில திருத்தங்கள் வேண்டியிருக்கிறது. அந்த முறையில்தான் மது விலக்குச் சட்டம் திருத்தப்பட்டிருக்கிறது.

மதுபான பெர்மிட்

மதுவிலக்குச் சட்டத்தை அமுல் நடத்தும் போது “மதுபான பர்மிட்” என்ற பெயரில் சிலருக்குக் குடிக்க வசதி அளிப்பது கொஞ்சம் கூட பொருத்தமில்லை என்று சொல்கிறார்கள். நான் அவர்களுக்குத் தெரிவிக்க விரும்புகிறேன்; யார் கேட்டாலும் அவர்களுக்குப் பெர்மிட் கொடுப்பது கிடையாது. வைத்தியர்கள் பார்த்து அவர்கள் உடல்நிலை காரணமாக, அவர்களுக்குப் “பெர்மிட்” கொடுக்க வேண்டும் என்று சிபாரிசு செய்தால், அந்தச் சிபாரிசின் மீதுதான் மதுபான பர்மிட் வழங்கப்படுகிறது. அப்படி வழங்குவதிலே மாதத்திற்கு ஒரு யூனிட் முதற்கொண்டு நான்கு யூனிட் வரையிலே வழங்கப்படுகிறது. இதையும் தவிர்ப்பது என்றால் அதற்கு அரசியல் அமைப்புச் சட்டமே இடம் கொடுக்க -வில்லை என்பதை இந்தச் சந்தர்ப்பத்தில் சுட்டிக்காட்ட விரும்பு -கிறேன். வைத்தியம் காரணமாக மது ஓரளவு வேண்டியிருந்தால் அதை நாம் தவிர்ப்பதற்குச் சட்டம் இடம் கொடுக்கவில்லை.

சில பெரிய மனிதர்கள் அவர்களுக்கு இருக்கின்ற வசதிக -ளால், அவர்களுக்கு இருக்கின்ற சூழ்நிலைகளால் குடிக்கின்றார் -கள். நான் அதைப்பற்றியெல்லாம் கவலைப்படவில்லை. என்னு -டைய கவலையெல்லாம் ஏழை மக்களைப் பாதுகாக்க வேண்டும் என்பதுதான். அதற்காகப் பெரிய மனிதர்கள் குடிக்கலாம் என்று சொல்லவில்லை. அதற்காக அவர்களுக்குச் சலுகை உண்டு என்றும் சொல்லவில்லை.

வைத்தியப் பரீட்சை

வைத்தியப் பரீட்சையின்பேரில், வைத்திய அதிகாரியின் அத் -தாட்சியின் பேரில் ஒருவருக்கு மது, மருந்து என்ற முறையில் வேண்டியிருக்கிறது என்று சொன்னால் கொடுக்கத்தான் வேண்டி -யிருக்கிறது. இது எல்லோருக்கும், பெரிய மனிதர்களாய் இருந் -தாலும் சரி, சிறிய மனிதர்களாய் இருந்தாலும் சரி எல்லோருக்கும் இந்தச் சலுகை கொடுக்கப்பட்டிருக்கிறது. இதுதவிர, இதனால் பெரிய மனிதர்களுக்கு, குடிப்பதற்கு சலுகை கொடுக்கிறோம் என்று சொல்லுவது சரியல்ல.

மதுபான பர்மிட் வழங்குவதில் ஒரு டாக்டர் பரிசீலனை செய்வதற்குப் பதிலாக ஒரு போர்டு வைத்து, அவர்களைச் சிபாரிசு செய்யச் சொல்வது என்றால், அது இன்னும் கொஞ்சம் திருப்திகர -மாக இருக்கும் என்ற வகையிலும் சிலர் சொன்னார்கள். ஆனால், பொதுவாக அவர்களும் கருதவில்லை என்று நினைக்கிறேன். நானும் நினைக்கவில்லை - அந்த வகையிலே சொல்லுவது சரியல்ல. டாக்டர்களை நம்ப முடியாது என்று சொல்லுவதற் -கில்லை. டாக்டர்களை நம்பித்தான் நாம் நம் உடலை அவர்களி -டம் ஒப்புவிக்கின்றோம். கூடியவரை அவர்களும் அவசியத்தை உணர்ந்துதான், அவர்களுடைய பெரும் பொறுப்பை உணர்ந்து தான், இம்மாதிரி சர்டிபிகேட்டுகளை ஜாக்கிரதையாக வழங்குகிறார் -கள் என்று நாம் எதிர்பார்க்கிறோம். ஆனால் குறிப்பிட்ட சில விஷயங்களிலே இந்த சர்டிபிகேட் போதவில்லை. திருப்திகரமாக இல்லையென்று ஏற்பட்டால் அப்போதைக்கப்போது ஒரு போர்டு நியமித்து ஒன்றுக்கு மேற்பட்ட டாக்டர்களை வைத்தும் பரிசீலனை செய்யச் சொல்லுகின்றோம்.

மிகைப்படுத்தப்பட்ட தோற்றம்

ஏராளமான பேர் திருட்டுத்தனமாகச் சாராயம் காய்ச்சுவதாக -வும், எல்லோரும் குடிக்கிறார்கள் என்றும், குடிக்காதவர்களே இல்லை என்றும் பேசுகிறார்கள்.

பொதுவாக நமக்கு எல்லாம், ஒரு தீமையைப் பார்த்தாலேயே, உலகம் பூராவும் அந்தத் தீமை மலிந்து கிடப்பதாகத் தோன்றுவது இயற்கை. எங்கோ ஓர் இடத்தில் கொலை நடந்து விட்டது. மறுநாள் பத்திரிகையில் அது கொட்டை எழுத்தில் வந்திருக்கும். அதைப் பார்க்கும்போது உலகமே கொலை மயமாக இருப்பது போன்ற தோற்றம் நமக்கு ஏற்பட்டு விடுகிறது. அதேபோல், எங்கோ ஒருவர், இருவர் குடிப்பதைப் பார்த்துவிட்டு இந்த ராஜ்யம் பூராவும் எல்லோரும் குடிக்கிறார்கள், கள்ளச்சாராயம் காய்ச்சுகிறார்கள் என்கிற தோற்றத்தைக் கொண்டு பேசுகிறோம். இது சரியல்ல.

மொத்த ஜனத்தொகையில் மதுவிலக்குக் குற்றம் புரிபவர் -களின் எண்ணிக்கை மிகமிகக் குறைவு. என்னுடைய மதிப்பின் படி நூற்றுக்கு 80 பேர்களுக்கு மேல் இன்றைய தினம் குடிப் பேயிலிருந்து காப்பாற்றப்பட்டிருக்கிறார்கள் என்று சொல்வேன். ஆகவே குற்றங்களை மிகைப்படுத்திச் சொல்ல வேண்டிய -தில்லை என்று நான் சொல்ல விரும்புகிறேன்.

ஒரே நோக்கம்

மதுவிலக்குச் சட்டத்தை நல்ல முறையில் அமுல் நடத்த வேண்டுமென்று சொல்கிறார்கள். இதுதான் அரசாங்கத்தின் எண்ணமும். மதுவிலக்குக் கமிட்டி ஒவ்வொரு ஜில்லாவிலும் அமைக்கப்பட்டிருக்கிறது. அதற்குமேல் தாலுக்காக்களிலும், கிராமங்களிலும் கூட அமைத்துக் கொள்ளலாம். தடை ஒன்றும் இல்லை. இந்தக் கமிட்டிகளில் எல்லாக் கட்சிகளும் இடம் பெற வேண்டுமென்பது அரசாங்கத்தின் ஆவல். எல்லோருடைய ஒத்துழைப்பும் வேண்டும் என்கிற முறையில் எல்லாக் கட்சிக்காரர் -களும் இடம் பெற வேண்டும் என்பதுதான் சர்க்கார் எண்ணம்.

ஏழை மக்களைப் பாதுகாக்க வேண்டும், அவர்களுடைய வாழ்க்கையை வளப்படுத்த வேண்டும் என்கிற ஒரே நோக்கத்திற் -காகத்தான் சர்க்கார் இந்தத் திட்டத்தைத் தீவிரமாக நிறைவேற்ற முயற்சிக்கிறார்கள்.

கடுமையான நடவடிக்கை

மதுவிலக்குச் சட்டம் முதன் முதலாக 1937-ம் ஆண்டிலே கொண்டு வரப்பட்டது. இந்தச் சட்டம் அப்போதைக்கப்போது திருத்தப்பட்டு வருகிறது. அனுபவத்தின் மேல் ஒரு சட்டத்தைத் திருத்துவதிலே ஒன்றும் தவறில்லை.

கடுமையான பிரிவு

மதுவிலக்குச் சட்டத்தை நன்கு அமுலுக்குக் கொண்டு வரவேண்டும், நன்கு நிறைவேற்றப்பட வேண்டும், அந்தச் சட்டம் நன்கு கையாளப்பட வேண்டுமென்றால், குற்றங்களுக்கு இடமில் -லாமல் நடவடிக்கை எடுக்கவேண்டுமென்றால், சட்டத்தில் சில கடுமையான பிரிவுகள் இருக்கவேண்டும். குற்றங்களுக்குத் தண்டனை கடுமையாக இருக்க வேண்டும் என்பது நமது அடிப் -படையான கருத்து.

எல்லா ராஜ்யங்களிலும் மதுவிலக்கு இல்லையே, மற்ற நாடுகளிலெல்லாம் பார்த்துவிட்டு நிறுத்தி விட்டார்கள், இவர்கள் இங்கு மட்டும் எவ்வாறு நிறைவேற்றப்போகிறார்கள் – என்று சில ருக்குக் கருத்து வேறுபாடு இருக்கிறது. மிதமானகுடி பாதக -மில்லை, அதிகக் குடியைத்தான் தடுக்க வேண்டுமென்றும் சொல்லப்படுகிறது.

பெரிய பிரச்சனை

மதுவிலக்கு இன்றைய தினம் இந்த ராஜ்யத்திலே அமுலில் இருக்கிறது. இது இப்போது நம் அரசியல் அமைப்புச்சட்டத்திலே வழிகாட்டி நெறிகளில் ஒன்று என்றிருக்கிறது. ஆகவே, அப்படி இருப்பதை ஒரு ராஜ்யம் எடுத்துக் கொண்டு நிறைவேற்றி வரும் போது, பின்னால் போவது என்பது நடக்க முடியாத காரியம். நிறை வேற்றுவது சிலருக்கு அசாத்தியமானதாகக் கூடத் தோன்றலாம்.

மதுவிலக்குத் திட்டத்தை நல்ல முறையிலே நடத்த வேண் -டும் என்பது தான் நமது அரசாங்கத்தின் எண்ணம். அதை ரத்து செய்ய வேண்டும் என்ற எண்ணம் இல்லை. ஆனால் இதற்கு ஏன் கடுமையான தண்டனை விதிக்க வேண்டும், பிரசாரம் செய்துதான் இதைத் தவிர்க்க வேண்டும் என்றும் அதற்கு மேலே போகக்கூடாது என்றும் சொல்லப்படுகிறது. அது சரியல்ல.

இதற்கு ஒரு திருஷ்டாந்தத்தை எடுத்துக்காட்ட விரும்பு –கிறேன். ரஷ்யாவிலே தோழர் குருஷேவ் அவர்கள் குடி அதிக –மாகப் போகிறது, இது ஒரு பெரிய பிரச்சினை ஆக இருக்கிறது, அதைத் தவிர்க்க வேண்டும் என்று கவலையைத் தெரிவித்திருந் –ததைப் பத்திரிகையில் பார்த்தேன். ரஷ்யாவில் குடி அதிகமாக இருப்பதினாலே அதைத் தவிர்க்க முடியாத காரணத்தினால் எத்தனையோ கோளாறுகள் ஏற்படுகின்றன என்பதை அவர் எடுத்துக்காட்டியிருக்கிறார். குருஷேவ் அவர்கள் இந்த மாதிரிச் சொல்லும்பொழுது, குடிப்பது பஞ்சமாபாதகங்களில் ஒன்று என்ற எண்ணம் கொண்டவர் அல்ல என்பதையும் குறிப்பிட விரும்பு –கிறேன். ரஷ்யாவில் குடி அதிகமாக இருப்பதைப் பார்த்து, அது விபரீதமாகப் போகிறது, ஒரு பெரிய பிரச்சினையாக இருக்கிறது என்று அவர் சொல்லியிருப்பதைத்தான் நான் சுட்டிக் காட்ட விரும்புகிறேன்.

குற்றம் குறைந்தாலும்

சில காலமாக கடுமையான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு வருகின்றன. அவ்வாறு நடவடிக்கைகள் எடுத்துக் கொள்வதினால் தவறுகள் செய்து வருவது குறைந்து வருகிறது என்பதை நான் நிச்சயமாகச் சொல்லக்கூடும். ஆராய்ந்துதான் இதைச் சொல்லு –கிறேன். சென்னை நகரை எடுத்துக்கொண்டால் அதிகமாக குறைந்திருக்கிறது. இன்னும் சில ஜில்லாக்களிலேயும் அதிகமாக குறைந்திருக்கிறது. இதை நன்றாக உணர்ந்துதான் சொல்லு –கிறேன். குறைந்திருக்கிறது என்றால் ஏன் கடுமையான சட்டம் கொண்டு வரவேண்டுமென்று சிலர் கேட்கலாம். அவ்வப்போது கவனித்துக் கொண்டு வருவதனால்தான், நிலைமை அபிவிருத்தி அடைந்திருக்கிறது. அதைக்கொஞ்சம் தளர்த்தினால், மேலும் குற்றங்கள் தலை தூக்க ஆரம்பித்துவிடும். அப்படித் தலைதூக்க விடாமல், நிரந்தரமாகக் குறைவதைப் பார்க்க வேண்டும்.

சட்டங்கள் இருந்தாலும் சில குற்றங்கள் நடக்கலாம். ஆனால் அவற்றை மிகைப்படுத்திச் சொல்லக்கூடாது. இப்பொழுது கொலை செய்தால் தூக்குத் தண்டனை கொடுக்கவேண்டுமென்று இருக்கிறது. அப்படி இருந்தாலும் சில சமயம் கொலை நடந்துதான்

வருகிறது. இது குறைந்துவிட்டதனால், இந்தியன் பீனல் கோடி (Indian Penal Code)லுள்ள சம்பந்தப்பட்ட செக்ஷனை எடுத்துவிட வேண்டுமென்று யாரும் சொல்லமாட்டார்கள். 100க்கு 75 பங்கு குற்றம் குறைந்திருக்கிறது என்று தாராளமாகச் சொல்லலாம். ஆனால் குற்றங்கள் நடைபெறுவதைத் தவிர்க்கத்தான் வேண்டும். பார்த்துக் கொண்டிருக்க முடியாது. அனுபவத்திலே பார்த்ததில், சட்டத்தைக் கடுமையாக ஆக்கவேண்டுமென்பது தெரிந்து திருத்தப்பட்டது.

குறைந்தபட்ச தண்டனை

இச்சட்டத்தின் கீழ் துன்புறுத்தப்படுவது என்பது எங்கே நடந்தாலும், அதைப் பார்த்த அளவிலே, புகார்கள் வருவது எல்லாம், போலீசார் போதிய நடவடிக்கை எடுத்துக்கொள்ளவில்லை என்பது தான். இந்த மாதிரியாக அதிகமாக நடவடிக்கை எடுத்து வருகிறார்கள் என்று புகார்கள் வந்தால், அவைகளை விசாரணை செய்து பார்த்தால், 100க்கு 80 வரையில் பாதிக்கப்பட்டவர்கள்தான் அப்படிச் சொல்லுகிறார்கள். அதைத் தடுப்பதற்கு அரசாங்கம் நடவடிக்கை எடுத்துக் கொண்டுதான் வருகிறது.

முன்பு, தண்டனை கொடுப்பதிலே அதிகபட்ச தண்டனை இல்லை. இப்பொழுது குறைந்தபட்ச தண்டனையும் சட்டத்தில் சேர்க்கப்பட்டிருக்கிறது. அனுபவத்திலே பார்த்ததில், குறைந்த பட்ச தண்டனை இல்லை என்பதால், சில இடங்களிலே அதைப் பயன்படுத்தப்பட்டு வந்தது. தண்டனையைக் கேவலப்படுத்தும் முறையிலே மீண்டும் மீண்டும் குற்றத்தைச் செய்கிறார்கள். எனவே தான் குறைந்தபட்ச தண்டனையும் இருக்கவேண்டுமென்று கருதி மதுவிலக்குச் சட்டம் திருத்தப்பட்டது.

காரிய சாத்தியமா

மதுவிலக்குப் பிரசாரம் எல்லாம் நமக்குப் புதிது அல்ல. நாம் சுதந்திரப் போராட்ட காலத்திலேயே காந்திஜி அவர்களின் தலைமையில் மதுவிலக்குத் திட்டத்தை ஒரு நிர்மாணத் திட்டமாகவே ஏற்றுக் கொண்டோம். அதை ஏற்றுக் கொண்டு அஹிம்சா முறையில் பிரசாரத்தில் ஈடுபட்டோம். மறியல் செய்தோம். அதற்காக உரிமை கோரப்பட்டு பெறப்பட்டது. இன்று

எதிர்க்கட்சியில் உள்ளவர்களில் சிலர்கூட இந்த சாத்வீக மறியல் இயக்கத்தில் ஈடுபட்டு பல இன்னல்களுக்கு உள்ளாகி இருக்கிறார் -கள். பலர் சிறை சென்றார்கள். அப்படிப் பல்லாயிரக்கணக்கானவர் -கள் இன்னலுற்றது எதற்காக? சிறந்த பிரசாரங்களை எல்லாம் செய்தது எதற்காக?

என்னுடைய அபிப்பிராயத்தைத் தாழ்மையாகத் தெரிவித்துக் கொள்கிறேன். பிரசாரத்தைக் குறை கூறுவது என்பதாக அல்ல. பிரசாரத்திற்கும் ஓர் அளவு உண்டு. மதுவிலக்குத் திட்டமானது நல்லதா? கெட்டதா? என்பதைப் பற்றி யாருக்கும் சந்தேகம் இல்லை. அதுவும் தொன்றுதொட்டு நம் நாட்டில் குடிப்பழக்கத்தை வன்மையாகக் கண்டித்து வந்திருக்கிறார்கள். காந்தியடிகளின் தலைமையில் நடந்த போராட்டங்களும் இன்னும் மக்கள் மனத்தில் இருந்துகொண்டுதான் இருக்கிறது. இருந்தாலும் சட்டத்தை மீறிக் குற்றம் செய்கின்ற மனப்பான்மை ஒரு சிலருக்கு இருக்கிறது. அதைத் தவிர்ப்பதற்குத் தண்டனை விதிக்காமல் என்ன செய்வது? சட்டமே வேண்டாம், அரசாங்கமே வேண்டாம், மக்கள் தாங்களே தங்கள் காரியங்களைச் செய்து கொள்வார்கள் என்று சொல்லலாம். அது நல்ல கொள்கைதான். காரியாம்சத்தில் அது சாத்தியமா என்று பார்க்கவேண்டும்.

வெற்றியா? தோல்வியா?

பொதுவாக மதுவிலக்குத் திட்டமானது வெற்றி பெற்றிருக் -கிறது. முன்போல நம் நாட்டில் தெருக்களில் குடித்துவிட்டுப் போடும் சண்டைகள் இல்லை, மக்கள் அமைதியாக வாழ்கிறார்கள். இன்றைய தினம் ஒரு சில இடங்களில் குடிக்கிறவர்கள் இருக்கிறார் -கள் என்பதை நானும் ஒப்புக் கொள்கிறேன். இருந்தாலும் முன்பு இருந்த குடிப் பழக்கத்திலிருந்து மீட்கப்பட்டிருக்கிறார்கள். ஆகவே மதுவிலக்குத் திட்டம் தோல்வி அடைந்துவிட்டது என்று சொல்ல முடியாது.

குறைந்தபட்ச தண்டனை விதிக்கிற முறையில் மதுவிலக்குச் சட்டத்தைத் திருத்தினால் அது, எந்த விதத்தில் நீதியில் தலையி -டுவதாகும்? சட்டப்படி தண்டனை கொடுக்கப்படுகிறது, அல்லது

விடுதலை அளிக்கப்படுகிறது. சட்டம் என்ன சொல்கிறது, சாட்சிகள் என்ன சொல்கிறார்கள் என்பவைகளையெல்லாம் வைத்துக் கொண்டு நீதிமன்றத்தில் பாரபட்சமில்லாமல் தீர்ப்புக் கூறுகிறார்கள்.

நீதிமன்றப் பொறுப்பு

நீதிமன்றம், நம் சட்டத்தில் இருக்கிறதைப் பற்றித்தான் சொல்லும், அதாவது, சட்டத்தில் என்ன சொல்லப்படுகிறதோ அதுபடிதான் நீதிமன்றம் தீர்ப்புக்கொடுக்கிறது. நாம் இயற்றும் சட்டத்திற்கு அவர்கள் அர்த்தம் சொல்வார்கள். நீ ஏதோ நினைத்து சட்டம் செய்தாய், ஆனால் அதன் அர்த்தம் அதுவல்ல என்று நீதி மன்றம் சொல்லலாம். அதைப் பார்த்து, சட்டத்தைத் திருத்துவதற் -குள்ள ஏகபோக உரிமை சட்டசபைக்கு உண்டு. குறைந்தபட்ச தண்டனை விதிப்பதற்கு என்று சட்டம் செய்தது நீதியில் தலை -யிடுவதாகாது. ஒரு சட்டத்தைத் திருத்துவது என்பது நீதியில் தலையிடுவதாகும் என்று சொல்லுவது, தவறானதாகும். அது, சட்டசபையின் நிலையை உணராது பேசுவதாகும்.

சட்டம் இருப்பதை வைத்துத்தான் நீதிமன்றம் தீர்ப்புக் கொடுக்கிறது. அதிகபட்ச தண்டனை என்ன என்று பார்த்துக் கொள்கிறது. அவர்கள் எவ்வளவு வேண்டுமானாலும் கொடுக் -கலாம். ஒரேகுற்றம், ஒரேமாதிரி விசாரணை ஆனால் ஒரு மாஜிஸ்ட்ரேட் ஒரு தண்டனை கொடுக்கிறார், வேறு ஒரு மாஜிஸ்ட்ரேட் வேறு ஒரு தண்டனை கொடுக்கிறார். நான் அவர்களைக் குறைத்துக் கூறவோ அல்லது நீதிபரிபாலனத்தைக் குறைத்துக் கூறவோ இல்லை. சட்டத்தில் என்ன சொல்லியிருக்கி -றது என்று பார்க்கிறார்கள். நிறைய சம்பாதிக்கிறவனுக்கு 10 ரூபாய் அபராதம் போட்டால் அது அவனுக்குப் பெரிதல்ல. மறுபடியும் மறுபடியும் அவன் குற்றம் செய்கிறான். ஆனால் அதற்காக நீதிபதிகளின் பேரில் குற்றம் சொல்லமுடியாது. அனுபவத்தில் நாம் பாரதத்தில் குறைந்தபட்சத் தண்டனை விதிப்பது அவசியம் என்று கருதி இந்தத் திருத்தம் செய்தோம்.

பின்னால் இருப்போர்

பாத்திரங்கள் வைத்துக் கொண்டிருந்தால், சாராயம் காய்ச்சுவ-தற்கு அல்லது கள் இறக்குவதற்கு அல்ல என்று நிரூபிக்கப்பட வேண்டுமென்பது சட்டம். ஏழைகள் இதனால் பாதிக்கப்படுவார்-கள். சமைப்பதற்குக்கூட பாத்திரம் வைத்திருந்தால், அதிகாரிகள் ஏழைகள் மீது பொய் கேஸ் போட்டு, அவர்கள் மேல் ஆத்திரம் இருந்தால் அவர்களைத் துன்புறுத்துவதற்கு இது ஏதுவாக இருக்கிறது என்று சொல்லப்பட்டது. ஏழைகள் சமையல் செய்யக் கூடிய பாத்திரங்கள் எத்தகையது என்பதை நாம் எல்லாம் அறியாத-வர்கள் அல்ல. ஆனால் சாராயம் காய்ச்சுவதற்கு வேண்டிய பாத்திரங்கள், அதற்கு வேண்டிய பாத்திரங்கள், அதற்கு வேண்டிய பட்டைகள், விவசாயிகள் அல்லாதவர்களின் வீட்டில் அமோனியம் சல்பேட் போன்ற பொருள்கள் வைத்திருந்தால், இவைகள் இருப்பதாகத் தெரிந்தால், அதற்காக நடவடிக்கை எடுத்தால், இதில் என்ன தவறு இருக்கிறது என்றுதான் எனக்குப் புரியவில்லை.

முக்கியமாக, ஏழைகள் சிலபேர்கள் குடிக்கலாம். ஆனால், இந்தத் திருட்டுத்தனமாகச் சாராயம் காய்ச்சும் விஷயத்தில் ஏழைகளைவிட வசதி படைத்தவர்கள், பணக்காரர்கள், மேலும் சம்பாதிக்க வேண்டும் என்ற எண்ணமுள்ளவர்கள் அதிகம் ஈடுபடுகிறார்கள். அவர்கள் இந்த ஏழைகளைப் பயன்படுத்திக் கொள்ளுகிறார்கள். ஏழைகள் அகப்பட்டுக்கொள்ளட்டும், தாங்கள் தப்பித்துக் கொள்ளலாம் என்று எண்ணிக் கொண்டிருக்கிறார்கள்.

இந்த சட்டத்தின் முக்கிய நோக்கம் ஏழைகளை ஈடுபடுத்திக் கொண்டு அதற்குப் பின்னால் இருக்கிறவர்களைப் பிடிக்க வேண்டும் என்பதுதான். அம்மாதிரிப்பட்ட பணக்காரர்களை, வசதி உள்ளவர்களைக் கண்டுபிடித்து அவர்கள் மீது கடுமையான நடவடிக்கை எடுத்துக்கொள்ள வேண்டும் என்பதுதான் இந்தச் சட்டத்தின் முக்கிய நோக்கம்.

இதனால் நிரபராதிகள் யாரும் பாதிக்கப்படமாட்டார்கள். கோர்ட் இருக்கிறது. நீதிமன்றத்தில் எனக்கு நம்பிக்கை இருக்கிறது. அதன் மூலம் நிரபராதிகள் யாரும் பாதிக்கப்பட மாட்டார்கள், என்ற நம்பிக்கை எனக்கு இருக்கிறது.

எச்சரிக்கைப் பிரசாரம்

வார்னிஷ், பெயிண்ட் போன்றவை ஏராளமாக உற்பத்தி செய்யப்பட்டு வினியோகிக்கப்பட்டு வருகிறது. அதற்கு வேண்டிய அளவு ஸ்பிரிட் கொடுக்க வேண்டும். மருந்து வகைகளும், டாக்டர்களது தேவைக்கும் மற்றும் தொழில் துறை-யிலும் கூட இவைகள் வேண்டியிருக்கிறது. இவைகளையெல்-லாம் நன்கு பரிசீலனை செய்து எந்த அளவுக்கு வேண்டுமோ அந்த அளவுக்குக் கட்டுப்படுத்தப்பட்டிருக்கிறது, என்றாலும், இதிலே தவறுதல்கள் எவ்வளவோ நடைபெறுகின்றன. இந்த மாதிரி தவறுதல்கள் நடப்பது யாருக்காவது, தெரியவந்தால், தயங்காமல் விவரங்களை நேரிடையாகத் தெரிவித்தால், அதைக் கவனித்து வேண்டிய நடவடிக்கைகள் எடுப்பதால் தயக்கம் இராது என்று உறுதி சொல்லிக் கொள்ள விரும்புகிறேன்.

சிறிய அதிகாரிகளாக இருந்தாலும் சரி, பெரிய அதிகாரிகளாக இருந்தாலும் சரி, அது பற்றிக் கவலை இல்லை. குற்றம் செய்பவர்-கள் யாராக இருந்தாலும் அவர்கள் மீது நடவடிக்கை எடுத்துக் கொள்ள அரசாங்கம் தயங்காது.

ஆகவே, மதுவிலக்குச் சட்டத்தைப் பற்றிக் குறை கூற வேண்டுமானால் குறை கூறட்டும். அதை வேண்டாம் என்று நான் சொல்லக் கூடாது. நான் சொல்ல மாட்டேன். மதுவிலக்குத் திட்டம் வெற்றிகரமாக நிறைவேற வேண்டுமென்றால், கடுமையான தண்டனைகள் விதிக்கப்பட்டிருப்பதால் மக்கள் ஜாக்கிரதையாக நடந்து கொள்ளவேண்டுமென்று சொல்லும்படி மீண்டும் கேட்டுக் கொள்கிறேன்.

தவிர்க்கும் எண்ணம்

ஏதோ பழைய குடிக்கிற பழக்கம் இன்றும் இருக்கிறது. எப்படித் திடீரென்று அதை விட்டுவிடும்படி சொல்லுவது என்றும் சொல்கிறார்கள். குடிப்பது தவறு, குடிக்கக்கூடாது என்று சொல்லிப் பலபேர் அதிலிருந்து மீட்கப்பட்டிருக்கிறார்கள். ஆகவே, இந்தச் சட்டம் திடீரென்று வந்து விடவில்லை. இருந்தாலும் பிரச்சாரம் செய்ய வேண்டுமென்பதை நான் ஒப்புக்கொள்கிறேன். சட்டம் அம்மாதிரி இருக்கிறது. அதில் விதிக்கப்பட்டிருக்கிற கடுமையான

தண்டனைக்கு நீங்கள் உட்படக்கூடாது, அதைத் தவிர்க்க வேண்டுமென்ற ஒரு எண்ணத்தை மக்களிடத்திலே, இதனால் பாதிக்கப்படக்கூடியவர்களிடத்திலே, உண்டாக்குவதற்கு எல்லோ–ரும் ஒத்துழைக்க வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

முன்னேற்றச் சின்னம்

கலால் இலாகாவின் கீழ் மதுவிலக்குத் திட்டம் அமுல் நடந்தது. இப்பொழுது போலீசார் நடத்துகிறார்கள்.

மதுவிலக்கு முக்கியமாக கலால் இலாகாவின் கீழ் வந்து மதுவிலக்குச் சட்டத்தின் கீழ் செய்யப்படும் ஒரு குற்றம் என்று கருதப்பட்டு அதற்காக அது போலீஸ் இலாகாவுடன் சேர்த்து வைக்கப்பட்டிருக்கிறது. அதற்காக ஒரு சட்டம் கொண்டு வந்து நிறைவேற்றப்பட்டிருக்கிறது. அந்தச் சட்டமும் திருத்தி அமைக்கப்–பட்டிருக்கிறது. அந்தச் சட்டத்தின் கீழ் குற்றம் செய்கிறவர்களைக் கண்டுபிடித்து அவர்கள் மீது நடவடிக்கை எடுத்துக் கொள்ள வேண்டும் என்பதற்காகத்தான் அந்த இலாகா போலீஸ் இலாகா–வுடன் சேர்க்கப்பட்டிருக்கிறது.

போலீசிடம் பொறுப்பு

குற்றங்களைக் கண்டு பிடிப்பதற்கும், குற்றங்கள் நடை பெறாமல் பாதுகாப்பதற்கும், குற்றங்களைக் கண்டு பிடித்து அவர்–கள் மீது நடவடிக்கை எடுத்துக் கொள்வதற்கும் போலீஸ் இலாகா பொறுப்பு ஏற்று இருக்கிறது. இவைகள் அவர்களுடைய பொறுப்–பாகும் அதற்கு ஏற்றவாறுதான் போலீஸ்காரர்கள் மதுவிலக்குத் திட்டத்தையும் அமுல்நடத்தி வருகிறார்கள்.

அனுபவத்தில் கண்டவழி

மதுவிலக்குத் திட்டத்தை அமுல் நடத்துவதற்கு இந்த போலீசார் வேண்டாம் என்றும், அதற்கு தனியாக ஏற்பாடு செய்தால் நலமாக இருக்கும் என்றும் சிலர் கூறுகின்றனர். தனியான இயந்திரம் அதற்கு எது என்பது எனக்குப் புரியவில்லை. என்னுடைய அனுபவத்தையும் சொல்லுகிறேன், அபிப்பிராயத்–தையும் சொல்லுகிறேன். பெரும்பாலோர் அதை ஏற்றுக்கொள்–வார்கள் என்றே நினைக்கிறேன்.

நாட்டில், எங்காவது, ஏதாவது குற்றங்கள் நடந்தால் அதைக் கண்டுபிடித்துக் கொள்வதற்குப் போலீஸ்காரர்கள் இருக்கிறார்கள். அதைப் போலவே மதுவிலக்கு சம்பந்தப்பட்ட குற்றங்களைச் செய்கிறவர்களைக் கண்டுபிடித்து அவர்கள்மீது நடவடிக்கை எடுக்க வேண்டியவர்கள் போலீஸ்காரர்களாகத்தான் இருக்க வேண்டும். ஏனென்றால் மதுவிலக்குத் திட்டத்தின்கீழ் வரக்கூடிய குற்றங்களும் மற்ற குற்றங்களைப்போலத்தான். அப்படி நட–வடிக்கை எடுத்துக் கொள்வதற்கு போலீஸ்காரர்களைத் தவிர வேறு திறமையான இயந்திரம் இருப்பதற்கு இல்லை என்பதுதான் என்னுடைய அபிப்பிராயம், என்னுடைய அனுபவம். மதுவிலக்–குத் திட்டத்தைப் போலீசாரைக் கொண்டு அமுல்நடத்துவதுதான் சிறந்த வழி என்று தெரிந்து கொண்டேன். அதையே வலியுறுத்திச் சொல்ல விரும்பு கிறேன்.

வாகன வசதிகள்

மதுவிலக்குத் திட்டத்தை அமுல் நடத்தும்போது போலீசார் பல குற்றவாளிகளைக் கண்டுபிடிக்க வேண்டியதாக இருக்கிறது. மதுவிலக்குத் திட்டத்தைக் கெடுக்க வேண்டுமென்று சிலர் குற்றங்களைச் செய்து வருகிறார்கள். அதை அவர்கள் தொழிலாக வைத்துக் கொண்டிருக்கிறார்கள். தங்களுடைய வறுமையின் காரணமாகச் சிலர் அதை வருமானம் அடையக்கூடிய வகையில் பயன்படுத்திக் கொள்ளுகிறார்கள். இவைகளில் சில இடங்களில் போலீஸ்காரர்கள் ஈடுபடுகிறார்கள் என்றும் குறிப்பிடப்பட்டது. அவ்வாறு போலீஸ்காரர்கள் இதை ஒரு தொழிலாக வைத்துக் கொண்டு வருமானம் சம்பாதிக்கலாம் என்று நினைக்கக்கூடும். ஆனால் நிலைமையையும் கொஞ்சம் கவனிக்க வேண்டியதாக இருக்கிறது. போலீஸ்காரர்கள் குற்றவாளிகளைக் கண்டு பிடிக்கப் போகும் போது போலீஸ்காரர்கள் மீது ஏதாவது குற்றங்களைச் சுமத்த வேண்டும் என்று நினைக்கிறார்கள். குற்றவாளிகளைப் பிடிக்கச் சென்றால் போதிய அளவு பலன் அடைவது இல்லை.

போலீஸ்காரர்களுக்கு அதிகப்படியான வாகனங்கள் இருக்கின்–றன என்றும் அவற்றை அவர்கள் அதிகமாக உபயோகப்படுத்து–கிறார்கள் என்றும் சிலர் குற்றம் சாட்டினார்கள். ஆனால் இப்

-போதைய நிலையில் அவர்களுக்கு இருக்கக்கூடிய வாகனங்கள் போதவே போதாது. மதுவிலக்குக் குற்றங்களைக் கண்டுபிடிக்க துரிதமாகப் போகவேண்டுமானால் அவர்களுக்கு இப்பொழுது இருக்கக்கூடிய வாகனங்கள் போதவே போதாது. துரிதமாக நடவடிக்கைகள் எடுத்துக்கொள்ள வேண்டுமென்றால் அவர்களி -டம் வேண்டிய வாகனங்கள் இல்லை. சில ஊர்களுக்கு ராத்திரி போக வேண்டியதாக இருக்கிறது. அங்குத் துரிதமாகச் சென்றால் -தான் குற்றங்களைக் கண்டுபிடிக்கலாம். அப்படிச் செல்லும்போது அந்த ஊரில் எல்லோரும் சேர்ந்து போலீஸ்காரர்களைச் சூழ்ந்து கொண்டால் அதைச் சமாளித்துக் கொள்வதற்கு அவர்களிடம் வேண்டிய ஆள் பலம் இல்லை. அங்கேயிருந்து சமாளித்துக் கொண்டு வருவதற்குக் கூட அவர்களிடம் போதிய வாகனங்கள் கிடையாது. எந்த வேலையையும் துரிதமாகச் செய்ய வேண்டுமா -னால் அவர்களுக்கு வேண்டிய வசதிகளைச் செய்துகொடுக்க வேண்டியதாக இருக்கிறது. வசதிகள் செய்து கொடுக்காமல் இருக்கும்போது அவர்கள்மீது குற்றம் கூறுவதற்கு இல்லை. சில சமயங்களில் அவர்களுடைய உயிருக்கே ஆபத்து வருகிறது. தங்களுடைய உயிரைக்கூடப் பார்க்காமல் குற்றவாளிகளைக் கண்டுபிடிக்கப் போகிறார்கள்.

அவதூறு மனப்பான்மை

சாதாரணமாக குற்றவாளிகள் போலீஸ்காரர்கள் மீது குற்றம் சாட்டுவது போல் மதுவிலக்குக் குற்றவாளிகளும் போலீஸ்காரர் -கள் மீது குற்றம் சாட்ட முற்படுகிறார்கள். அதனால்தான் போலீஸ் -காரர்கள் குற்றவாளிகளைக் கண்டுபிடிக்கப்போகும்போது போலீஸ்காரர்கள் மீது குற்றம் சாட்டுகிறார்கள். இப்படி பல புகார்கள் வருகின்றன. பலவிதமான புகார்கள் போலீசார் மீது வந்திருக்கின்றன. யார் வந்து குற்றம் சொன்னாலும் அதைப்பற்றி விசாரித்து அதற்கு வேண்டிய நடவடிக்கையும் எடுத்துக் கொள்ளப்படுகின்றன. அதைப் பற்றிய விசாரணைக்கு ஏற்பாடு செய்யப்படுகிறது. ஆனால் பெரும்பாலும் வருகிற புகார்கள் விசாரணைக்கு ஏற்பாடு செய்யப் -படும் போது ஆதாரமற்றவைகளாகத்தான் இருக்கின்றன. சில சமயங்களில் புகார் செய்கிறவர்களே யார் என்று தெரியாமல்

போய்விடுகிறது. மேலும் செய்யப்பட்ட புகாருக்கு ஆதாரம் இல்லை என்றுதான் ஏற்படுகிறது.

ஆனால் சில இடங்களில் ஆதாரம் கிடைத்திருக்கிறது. உண்மை என்று ஏற்பட்டிருக்கிறது. அந்த மாதிரி ஆதாரம் கிடைத்தால் தயங்காமல் நடவடிக்கைகளை எடுத்துக் கொண்டுதான் வருகிறோம். சில சமயங்களில் போலீஸ்காரர்கள் குற்றங்களைக் கண்டு பிடிக் -கிறார்கள், குற்றவாளிகளைக் கண்டுபிடித்துக் கொடுக்கிறார்கள் என்பதன் காரணமாக அவர்கள் மீது வெறுப்பு ஏற்பட்டு, அதன் காரணமாக அவர்கள்மீது அவதூறு சொல்கிற மனப்பான்மை வளர்ந்து வருகிறது. இதையெல்லாம் போலீசார் சமாளிக்க வேண்டி இருக்கிறது.

கட்டுப்பாடும் திறமையும்

போலீஸ் வேலை என்பது ஒரு கம்பி மேல் நடப்பது போலா -கும். அவர்கள் வேலையைச் சீராகச் செய்து வருகிறார்கள். ஆனால் தவறுதல் செய்யக்கூடியவர்கள் இல்லையென்று நான் சொல்ல வில்லை. சிலர் இருக்கலாம். தவறு செய்பவர்கள் யாராக இருந் -தாலும் நடவடிக்கை எடுத்துக் கொண்டுதான் வருகிறோம். "பெரிய அதிகாரிகள் மீது நாங்கள் நடவடிக்கை எடுத்துக்கொள்ளத் தயங்குகிறோம்." என்று சிலர் நினைக்கிறார்கள். குற்றம் செய்தவர் -களாக இருந்தால் சின்ன அதிகாரிகளாக இருந்தாலும் பெரிய அதிகாரிகளாக இருந்தாலும் ஒரே விதமாகத்தான் நடவடிக்கை எடுத்துக் கொள்ளுகிறோம் என்பதைக் குறிப்பிட விரும்புகிறேன். எவ்வளவு பெரிய அதிகாரியாக இருந்தாலும்கூட நடவடிக்கை எடுத்துக் கொண்டிருக்கிறோம்.

ஜில்லா அதிகாரிகள் என்ற காரணத்தால் எந்த அதிகாரியை -யும் விட்டு விடுவதில்லை. ஆனால், கீழே இருக்கிற அதிகாரிக -ளாக இருந்தாலும் குற்றம் குற்றம்தான். போலீசாருடைய திறமை அவர்களுடைய கட்டுப்பாட்டைப் பொறுத்தது. சின்ன அதிகாரி -கள் ஏழைகள், அதிகச் சம்பளம் இல்லை. 2 ரூபாய்தான் வாங்கி -னார்கள், 50 ரூபாய் வாங்கவில்லை, ஆயிரம் ரூபாய் வாங்க வில்லை. அதனால் பரவாயில்லை என்று சொல்வதை ஏற்றுக் கொள்ள முடியாது. அது தவறு. குற்றம் செய்வதைவிட மோச -மானது எதிரடித்துப் பேசுவது; "நீ யார் கேட்பது? நான் என்ன

சொல்வது? நான் மேலே போய்ப் பார்த்துக் கொள்ளுகிறேன்" என்று பேசுவதை எங்கும் அனுமதிக்க முடியாது. அதிலும் முக்கியமாகப் போலீசில் அனுமதிக்க முடியாது. அனுமதித்தால் திறமை குறைந்து விடும்.

பாண்டிச்சேரி நிலைமை

தென்னாற்காடு மாவட்டத்தின் பக்கத்திலே பாண்டிச்சேரி இருக்கிறது என்றும், அந்தப் பாண்டிச்சேரியில் மதுவிலக்கு இல்லை என்றும், அதனால் சங்கடங்கள் ஏற்படுகின்றன என்றும், அதற்குப் பரிகாரம் தேட வேண்டும் என்றும் குறிப்பிடுகிறார்கள். இதைப் பற்றி அரசாங்கம் கவனித்துக் கொண்டுதான் வருகிறது.

முன்பு பிரெஞ்சு அரசாங்கம் இருந்த காலத்திலே கடிதப் போக்குவரத்து நடந்து வந்தது. இப்பொழுதும் அங்கு உள்ள அரசாங்கத்துக்கும் இந்த அரசாங்கத்துக்கும் விவாதம் நடை-பெற்றுக் கொண்டிருக்கிறது. இந்த ராஜ்யத்தைப் பொறுத்த வரையில் மதுவிலக்குத் திட்டத்தை வெற்றிகரமாக நிறைவேற்று-வதற்கு எவ்வாறு அவர்களுடைய ஒத்துழைப்பை பெறுவது என்பதைப் பற்றி இப்பொழுது தீவிரமாக கவனிக்கப்பட்டு வருகிறது.

பதனீர் துஷ்பிரயோகம்

முன்பு, கள் இறக்கி வந்தவர்களுக்கு ஒரு தொழில் வசதி செய்து கொடுக்க வேண்டுமென்பதற்காக பதனீர் இறக்க அவர்களுக்கு லைசென்ஸ்கள் வழங்கப்பட்டிருக்கின்றன. ஆனால், பெரும்பான்மையாக வெல்லமோ பதனீரோ உற்பத்தியாவ-தில்லை. கொடுக்கப்பட்டுள்ள லைசென்ஸ்களின்படி உற்பத்தி-யாகி இருக்க வேண்டிய வெல்லத்தின் அளவை மதிப்பிட்டு விட்டு, உண்மையாக உற்பத்தியாகி இருப்பதைப் பார்த்தால் உண்மையாக உற்பத்தியாகியிருப்பது உற்பத்தியாகியிருக்க வேண்டியதை விட மிகவும் குறைவாக இருந்தது. மீதிப் பதனீர் எல்லாம் தவறான முறையில்தான் உபயோகிக்கப்படுகிறது என்று கொள்ள வேண்டியிருக்கிறது. இன்னும் சில இடங்களில் கடை-களிலிருந்து வெல்லத்தை வாங்கிக் கணக்குக் காட்டி விடுகிறார்கள் என்று சொல்லப்படுகிறது. சொசைடிகளில் கூட கடையிலிருந்து

வெல்லத்தை வாங்கிக் கணக்குக் காட்டி விடுகிறார்கள் என்று சொல்கிறார்கள். இந்த துஷ்பிரயோகத்தைத் தடுக்க வேண்டும் என்ற கவலை எங்களுக்கு உண்டு. துஷ்பிரயோகங்களைத் தடுத்து மதுவிலக்குச் சட்டத்தை வெற்றிகரமாக நிறைவேற்றுவதில் கவனம் செலுத்த வேண்டும். இதில் மக்களின் ஒத்துழைப்பு தேவை.

மரமேறிகளுக்கு உதவி

பதனீர் தயாரிக்கும் மரமேறிகளுக்குச் சிறந்த நவீன உப -கரணங்களை அளிப்பதற்கான ஆராய்ச்சி அவசியம். அதைக் கருத்தில் கொண்டு மரமேறிகளுக்கு உதவியளிக்க அரசாங்கம் முயற்சித்து வருகிறது.

மரங்களின் சொந்தக்காரர்கள் லாபத்தில் பெரும் பகுதியைப் பெறுகிறார்கள் என்றும் பதனி இறக்குபவர்கள் அவ்வளவு பலன் பெறுவதில்லை என்றும் சொல்லப்பட்டது. இதற்குச் சிறந்த பரிகாரம் கூட்டுறவு முறை ஆகும். ஆங்காங்கே கூட்டுறவுச் சங்கங்கள் அமைக்கப்படுகின்றன. கூட்டுறவுச்சங்கங்களின் மூலம் சிறந்த கருவிகளையும் உதவிகளையும் மரமேறிகள் பெற முடியும். கூட்டுறவுச் சங்கங்களுக்கு உதவிகள் அளிக்கப்பட்டு வருகின்றன. கூட்டுறவுச் சங்கங்கள் தொழில்களை வெற்றிகரமாக நடத்துவதை நானும் பார்த்திருக்கிறேன். தங்களுக்கு உரிய பலனை அடைவதற்கு மரமேறிகள் கூட்டுறவுச் சங்கங்களில் சேர்ந்து கொள்ளுவதுதான் சிறந்த வழி என்று நான் சொல்லுவேன்.

பதனீர் பாதுகாப்பு


பதனீரிலிருந்து வெல்லமும் கருப்பட்டியும் காய்ச்சுவதற்கும் சிறந்த சாதனங்களைப் பெறுவதற்கும் ஏற்பாடு செய்யப்பட்டு வருகிறது. அதிலும் கவனம் செலுத்தப்பட்டு வருகிறது.

பதனீரும், நீராவும் கெடாமல் பாதுகாக்கப்படுவதற்கும், புளித்துக் கள்ளாக மாறாமல் பாதுகாக்கப்படுவதற்கும் என்ன செய்யவேண்டும் என்பதற்கு ஆராய்ச்சிகள் செய்யப்படும். மைசூர் ராஜ்யத்தில் மத்திய அரசாங்கத்தின் உணவு ஆராய்ச்சி நிலையம் ஒன்று இருக்கிறது. அந்த நிலையத்தின் மூலம் ஆராய்ச்சி செய்வது சாத்தியமா என்று யோசிக்கப்பட்டு வருகிறது. இந்த பானங்களை சோடாவிற்குப்பதிலாக பாட்டிலில் வைத்துப் பாதுகாத்துப் பிறகு

உபயோகிப்பதற்கு முயற்சி செய்யவேண்டும் என்று சொல்லப் பட்டது. கிராம மக்கள் அந்த மாதிரி அவைகளைச் சோடாவிற்குப் பதிலாக உபயோகிக்கலாம் என்று கூறப்பட்டது. இந்தப் பொருள்களைத் துஷ்பிரயோகம் செய்யமுடியாத வகையில் எப்படிச் செய்வது என்று கவனிக்கப்பட்டு வருகிறது. மக்களுக்கு எல்லா வகையிலும் உதவி செய்வதற்குக் கவனம் செலுத்தி வருகிறோம். ஆனால் இந்தத் தொழில்களில் பானங்களும் மற்ற பொருள்களும் துஷ்பிரயோகம் செய்யப்படாமலிருப்பதற்கான வழிகளைக் கண்டுபிடிப்பதிலும் கவனம் செலுத்தி வருகிறோம்.

முன்னேற்றச் சின்னம்

மதுவிலக்குச் சட்டம் சில காலமாக எல்லா ஜில்லாக்களிலும் மும்முரமாக அமுல் நடத்தப்பட்டுவருகிறது. இதன் விளைவாகச் சில முன்னேற்றச் சின்னங்களைக் காண்கிறோம். எல்லோரும் என்னிடம் வந்து அவைகளைப்பற்றிக் குறிப்பிடுகிறார்கள், இதற்கு முன்பு குறை கூறியவர்களே குற்றங்கள் குறைந்திருக்கின்றன என்று என்னிடம் சொல்லியதைக் கேட்டிருக்கிறேன். குற்றங்களை அடியோடு ஒழிப்பதில்தான் அரசாங்கம் கவனம் செலுத்தி வருகிறது.



20. முன்னாள் முதல்வர் பேரறிஞர் அண்ணாவும் மது ஒழிப்பும்



திராவிட இயக்கத்தில் பொன் எழுத்துக்களால் பொறிக்கப் படவேண்டியவர் மிக எளிய குடும்பத்தில் பிறந்து தமிழகத்தின் முதல்வராக பொறுப்பேற்றவர். அவருடைய குடும்பத்தில் பெற்றோருக்கு அவர் ஒரு பிள்ளையாகத்தான் இருந்தார். ஆனால் பொதுவாழ்வில் பல்லாயிரக்கணக்கான குடும்பத்தினருக்கு பிள்ளையாகவும் அந்த குடும்பப் பிள்ளைகள் அனைவருக்கும் அண்ணனாகவும் இருந்தார் என இரா.செழியன் அவர்கள் குறிப்பிட்டுள்ளார்.

சமூகநீதி, தமிழ்நாடு பெயர்மாற்றம் சீர்திருத்தத் திருமணத் -திற்கு சட்டபூர்வ அங்கீகாரம், மதுவிலக்கு போன்றவற்றில் அண்ணாவின் திட்டங்களால் தமிழகம் சமத்துவம் கொண்டது.

1967 ஆம் ஆண்டு தமிழ்நாட்டில் பல நகரங்களில் கள்ளச்சாராயம், வார்னீஷ் போன்றவற்றை அருந்தி மாண்டவர் -களின் எண்ணிக்கை அதிகமாக உயர்ந்தது.

21.9.1967 ஆம் ஆண்டு மது ஒழிப்பிற்கான ஆய்வுக் கூட்டத்தை சென்னையில் கூட்டி அதில் அண்ணா குடித்துவிட்டு மனைவி மக்களைத் தாக்கும் குடிகாரர்களால் அடிபடும் பெண் –களின் அழுகுரல் அதிகமாகிறது. அந்த அழுகை ஒலியை என்னால் தாங்கமுடியவில்லை. இனி மதுக்கடை ஒன்றுகூட திறக்கப்படுவதை நான் அனுமதிக்கமாட்டேன் என்றார்.

அன்றைய ஆந்திர முதலமைச்சர் பிரமானந்தரெட்டி அவர்கள் எங்களை விட அண்ணா உண்மையான காங்கிரஸ் –காரராக, காந்தியவாதியாக இருக்கிறார் என்றார்.

1967ஆம் ஆண்டு அண்ணா தலைமையில் தமிழகத்தில் ஆட்சி அமைந்தது. மதுவிலக்குக் கொள்கையில் தீவிரமான ஆதரவாக இருந்த அண்ணா பூரண மதுவிலக்கைத் தமிழகத்தில் அறிமுகப்படுத்தினார்.

12.04.1968 ஆம் ஆண்டு சென்னையில் நடைபெற்ற அகில இந்திய மதுவிலக்கு மாநாட்டின் வரவேற்புக்குழுத் தலை –வராக இருந்தார்.

அறிஞர் அண்ணா முதலமைச்சராக இருந்தபோது கடுமை யான நிதித்தட்டுப்பாடு ஏற்படவே "மதுவிலக்கை ரத்து செய்து விட்டு அதில் கிடைக்கும் வரி வருவாய் மூலம் நிதித் தட்டுப் –பாட்டைச் சமாளிக்கலாம் என்று ஒரு சிலர் ஆலோசனை கூறினர்."

மதுவிலக்கை ரத்து செய்வதினால் கிடைக்கக்கூடய வருவாய் என் மன் மனக்கண் முன்னால் தோன்றியது. அதற்குப் பின்னால் அழுகின்ற தாய்மார்களின் உருவமும் குழந்தைகளின் கதறலும், மனிதன் தன் அறிவை இழந்து காட்டுமிராண்டி போல் தெரியும் காட்சிதான் என் கண்முன்னால் நிற்கின்றது. ஆகையால் மதுவிலக்கு ரத்தின் மூலம் கிடைக்கும் வருமானத்திற்கு விடை சொல்வோம். அதற்கு மாறாக சிரிக்கின்ற தாய்மார்களின் முகங் –களும் குதூகலமுள்ள குடும்பங்களையும் குடிபோதைக்கு அடிமையில்லாத மக்களையும் வரவேற்போம்.

தமிழகத்தில் மதுவிலக்கை அமல்படுத்தியதோடு நின்று விடாமல் மற்ற மாநிலங்களிலும் இது அமலுக்கு வரவேண்டும் என்று விருப்பப்பட்ட அண்ணா அவர்கள் அதே மாநாட்டில்.

மதுவிலக்கைத் தளர்த்தியுள்ள மற்ற மாநிலங்களில் மதுவிலக்குக் கொள்கைக்கு ஆதரவாக காங்கிரஸ் தலைவர்களான திரு. காமராஜ் அவர்களுடனும், திரு.பக்தவத்சலம் அவர்களு -டனும் கை கோர்த்துப் பிரச்சாரம் செய்யத் தயாராக இருக்கிறேன். மூவரும் ஒன்று சேர்ந்து மற்ற மாநிலங்களிலும் பிரச்சாரம் செய்ய வேண்டு மென்று கேட்டுக்கொள்ளப்படு வோமென்றால் அந்த நாள் பொன்னாள். இந்த நல்ல முயற்சிக்கு அந்த இரண்டு காங்கிரஸ் தலைவர்களும் இசைவைத் தெரிவிப்பார்களானால் நான் பிரச்சாரம் செய்வது மட்டுமல்ல மதுவிலக்கை ரத்து செய்துள்ள மாநிலங் -களில் சட்டமீறல் நடவடிக்கைகளில் ஈடுபட்டு தொடர்ந்து மதுவிலக்கை அமுல்படுத்தக் கேட்டுகொள்வோம். இம்முறையில் நமக்குச் சிறைத் தண்டனை கிடைத்தாலும் மகிழ்ச்சியுடன் ஏற்றுக்கொள்ளத் தயார் என்று அறைகூவல் விடுத்தார்.

மதுவிலக்கு பற்றி அறிஞர் அண்ணா கூறிய கருத்துக்கள் :

★ மது விலக்கை நீக்கம் செய்து விடுவதன் மூலம் கிடைக்கும் வருமானத்தை விட, தாய்மார்களின் மகிழ்ச்சி பொருந்திய குடும்பங்கள்தான் தமிழக அரசுக்கு முக்கியம்.

★ மதுவிலக்குச் சட்டத்தில் இருக்கும் ஓட்டைகளை மூடித் திட்டத்தை இன்னும் உறுதியாகச் செயல்படுத்தி வெற்றி காண முனைவோம். இதற்கு எதிராக இந்த வருமானம் எந்த வகையிலும் ஈடல்ல.

★ மதுவிலக்கை மகாத்மா காந்தியடிகள் ஒரு கொள்கையாக அல்ல, வாழ்க்கை முறையாகவே வலியுறுத்தினார்.

★ மதுவிலக்கினால் சமுதாயம் அடையும் நன்மைகள்தான் பிற எவற்றையும்விட முக்கியமானவை.

★ மதுவிலக்கை - சட்டத்தை சிலர் மீறுகிறார்கள் என்பதற்காக எந்த நாகரீக அரசும் மதுவிலக்குத் திட்டத்தை எடுத்து விடாது.

★ மதுவிலக்கு சட்டமீறல் அந்தத் திட்டம் தோல்வியடைந்து விட்டது. ஆகவே அதை நீக்கம் செய்துவிட வேண்டும் என்றால் ஏற்றுக் கொள்ள இயலாது.

★ மதுவிலக்குத் திட்டம் இன்னும் வலுவான முறையில் செயல்படுத்தப்பட வேண்டும் என்பதன் கட்டாயத்தையே அது எடுத்துக்காட்டுகிறது, வற்புறுத்துகிறது.

★ மதுவிலக்கை நீக்கம் செய்து விடுவதன் விளைவாக கண்ணீர் வடிக்கும் தாய்மார்களின் முகங்களும் அழுது கதறும் குழந்தைகளின் உருவங்களும், நலிந்துவிட்ட குடும்பங்களும் என்னுடைய மனக்கண் முன் காட்சியளித்தன.

★ மதுவிலக்குத்துறையில் சிறப்பான தொண்டாற்றுவதும் உரிய முறையில் பிரசாரம் செய்வதும் தேவையானதாகும்.

★ மதுவினால் ஏற்படும் கேடுகளை விளக்கவும் மக்களுடன் தொடர்புகொண்டு நன்முறையில் அறிவுரை கூறவும் வேண்டும்.

★ மதுவிலக்குச் சட்டத்தை திறம்பட செயல்படுத்தவும், ஏற்படுத்தப்பட இருக்கும் கண்காணிப்புப் படையில் தொண்டாற்ற முன்வரவேண்டுமெனவும் அனைத்துக்கட்சி பேராளர்களையும் கேட்டுக்கொள்கிறேன்.

★ மது – குடிகாரர்கள் தங்களை அழித்துக் கொள்வதுடன் தங்களைச் சார்ந்தவர்களையும் அழித்து விடுகிறார்கள்.

★ மதுவினால் சமுதாயத்தின் ஒழுக்கமும் சீரழிவிற்கு உள்ளாகிறது.

★ மது பழக்கமற்ற, உடல் நலமிக்க மக்களைக் கொண்ட நாடுதான் முன்னேற முடியும்.

★ மது விலக்கு இல்லையேல் அரிசனங்களுக்கும், விவசாய தொழிலாளர்களுக்கும் விமோசனமே இல்லை.

★ எவ்வளவு கோடி வருமானம் வந்தாலும் ஏழைகளைப் பட்டினி போடும் மதுக்கடைகளைத் திறக்க ஒருநாளும் சம்மதிக்க மாட்டேன். ❑

21. முன்னாள் முதல்வர் புரட்சித்தலைவர் எம்.ஜி.ஆரும் மது ஒழிப்பும்



ஆரம்பகாலத்தில் காங்கிரஸ் பேரியக்கத்தில் இருந்த எம்.ஜி.இராமச்சந்திரன் அவர்கள் அறிஞர் அண்ணாவின் கருத்துக் -களால் ஈர்க்கப்பட்டு திராவிட முன்னேற்றக் கழகத்தில் தன்னை இணைத்துக் கொண்டார். அண்ணா மறைவிற்குப் பின் அண்ணா திராவிட முன்னேற்றக்கழகம் என்ற இயக்கத்தைத் தோற்றுவித்தார். தமிழ்நாட்டில் மூன்று முறை முதலமைச்சராக இருந்தார்.

பள்ளிக்குழந்தைகளுக்காக காமராஜ் கொண்டு வந்த மதிய உணவுத்திட்டத்தை விரிவுபடுத்தினார்.

தனி ஈழம் உருவாக வேண்டும் என்ற ஒரே நோக்கத்தில் மிகப் பெரிய அளவில் பொருளாதார உதவிகளைச் செய்தார்.

இதயக்கனி, புரட்சி நடிகர், நடிக மன்னன், மக்கள் நடிகர், பல்கலை வேந்தர், மக்கள் கலைஞர், கலையரசர், கலைச்சுடர், கலை மன்னர், கலை மன்னன், கலை வேந்தர், திரை நாயகன்,

கொடுத்துச் சிவந்த கரம், கலியுகக் கடவுள், பொன்மனச் செம்மல், மக்கள் திலகம், வாத்தியார், புரட்சித்தலைவர், இதயதெய்வம், மக்கள் மதிவாணர், ஆளவந்தார் எனப் பல்வேறு பட்டங்களைக் கொண்டு பொதுமக்களால் அழைக்கப்பட்ட ஒரே தலைவர்.

"நிருத்திய சக்கரவர்த்தி" என்று ஈழ மக்களால் கொடுக்கப் -பட்ட பட்டத்தை விருப்பமுடன் ஏற்றுக்கொண்டவர்.

இவர் நடித்த திரைப்படங்களில் மது அருந்துவது, புகை பிடிப்பது போன்ற செயல்களை முற்றிலுமாக தவிர்த்துக் கொண் -டார். நடிப்பே வாழ்க்கையாக இருக்க வேண்டும் என்பதை நடைமுறைப்படுத்திக் காட்டினார்.

திராவிட முன்னேற்றக்கழகத்தில் பொருளாளராகப் பொறுப் -புடன் செயல்பட்டார். 1970 ஆம் ஆண்டில் கோவையில் நடைபெற்ற பொதுக்குழுவில், மதுப்பழக்கத்தினால் ஏற்படும் தீமைகளை விளக்கி, தமிழகம் முழுவதும் தீவிரமாகப் பிரச்சாரம் செய்ய எம்.ஜி.ஆர் தலைமையில் பிரச்சாரக்குழு அமைத்து தீவிரமாகச் செயல்படுத்துவது என்று தீர்மானம் செய்யப்பட்டது.


குடிப்பழக்கத்தின் கொடுமைகளை விளக்கி மக்கள் மனதில் புதிய மாற்றத்தை உருவாக்கிடக் கடுமையாக உழைத்தார்.

அண்ணா திராவிட முன்னேற்றக் கழகத்தை உருவாக்கி, தமிழகத்தின் முதலமைச்சாரானவுடன் நிதிநிலை பற்றாக்குறை -யால் மதுக்கடைகளை திறந்தார். பின்பு மதுவின் தீமைகளை அறிந்து மதுக்கடை மூடினார்.

குடியும் இருக்கக்கூடாது, குடிகாரர்களும் இருக்கக்கூடாது என்று கருதி, மதுவிலக்குச் சட்டத்தைக் கடுமையாக அமுல் -படுத்தினார். மதுவிலக்குச் சட்டத்தின்கீழ் ஒருவர் பிடிபட்டால் மூன்று வருடம் சிறைதண்டனை, இரண்டாவது முறையாக அதே குற்றத்தைச் செய்தால் ஏழு வருடம் சிறை தண்டனை, மூன்றாவது முறையாக குற்றம் செய்து பிடிபட்டால் நாடு கடத்தப்படுவர் என்று கடுமையாக சட்டங்களைப் பிறப்பித்தார்.

❑

22. தி.சு.அவினாசிலிங்கம் செட்டியாரும் மதுஒழிப்பும்



ஏழைக்குழந்தைகள் கல்வி பயில்வதற்காக இராம கிருஷ்ணா மிஷன் வித்யாலயம் என்ற கல்விக்கூடத்தை நிறுவியவர். கல்வி மந்திரியாக இருந்தபோது திருக்குறளைப் பாடத்திட்டத்தில் சேர்த்தவர். மது ஒழிப்பிற்கான போராட்டத்தில் கல்வி ஒரு கேள்விக்குறியாக இருந்தது. இந்தச்சூழலில் மதுவை ஒழித்து கல்வியை வளர்க்கப் பாடுபட்டார்.

மந்திரி சபை பதவி ஏற்றபின், காங்கிரஸ் மகத்தான பிரச்சனைகளைத் தீர்க்க வேண்டியிருந்தது. பெரிய சீர்திருத்தங் -களையும் முன்னேற்றங்களையும் மக்கள் மந்திரிகளிடமிருந்து எதிர்பார்த்தார்கள். காங்கிரஸ் பல காலமாகப் பிரசாரம் செய்து வந்த நிர்மாணத் திட்டக் கொள்கைகள் அமலுக்கு வரும் என்பதையும் மக்கள் எதிர்பார்த்துக் கொண்டிருந்தார்கள். நிர்மாணத் திட்டங்கள் பலதரப் பட்டவையாக இருந்தன. அவற்றில் மிக முக்கியமானவை கதர், மதுவிலக்கு, கட்டாய ஆரம்பக்கல்வி முதலியன. காங்கிரஸ்

பதவிக்கு வந்ததிலிருந்து இந்த நிர்மாணத் திட்டங்களை எவ்விதம் அமலுக்குக் கொண்டுவர முடியும் என்பதைப் பற்றித் தலைவர்கள் ஆலோசிக்கத் தொடங்கினர். காங்கிரஸ் ஸ்தாபனங்களுக்கும், அவற்றின் மூலம் எல்லா மந்திரி சபைகளுக்கும் எல்லாப் பிரச்சனை -களும் அவர் முன் வைக்கப்பட்டு, அவர் யோசனையைக் கேட்டு, அதன்படி நடக்கப் பிரயத்தனம் நடைபெற்றது.

கோடிக்கணக்கான மக்களைக் கெடுக்க உதவியாக இருந்தது மது. காங்கிரஸ் பதவிக்கு வந்ததும், மதுவை விலக்குவது அதன் முதற்கொள்கையாக இருந்தது. பல தீர்மானங்கள் இதைப் பற்றிக் காங்கிரஸ் மகாசபைக் கூட்டங்களில் நிறைவேற்றப் பட்டன. எனவே, முதல் முதல் காங்கிரஸ் சர்க்கார் யோசிக்க வேண்டிய காரியம் அதுவாக இருந்தது. தாங்கள் பதவிக்கு வந்தவுடனே இந்த விஷயத்தை முதலில் மந்திரி சபையினர் ஆராய்ந்தார்கள்; அது சம்பந்தமான கணக்குகளைப் பார்த்தார்கள். மது விலக்கு நல்லது என்பதைப்பற்றி யாதொரு சந்தேகமும் இருக்கவில்லை. ஆனால், அதிலிருந்து வந்த வருமானம் மிக அதிகமானதாக இருந்தது. சென்னை மாகாணத்தில் அக்காலத்தில் சுமார் நாலரைக் கோடி ரூபாய் இந்தத் துறையிலிருந்து வந்தது. சென்னை மாகாணத்தின் முழு வருமானமே அக்காலத்தில் சுமார் 16½ கோடிதான். முழு வருமானத்தில் இத்தொகை எத்தகைய அளவு என்பதை நாம் தெரிந்துகொள்ளலாம். சுமார் நான்கில் ஒரு பங்கு வருமானம் முழுவதையும் ஒருங்கே எங்ஙனம் இழப்பது என்பதே பெரிய கேள்வியாக இருந்தது.

இதனுடன் சேர்த்துக் கல்விப்பிரச்சனையும் பிணைக்கப் பட்டிருந்தது. சுமார் 3 கோடி ரூபாய் கல்விக்காகச் செலவாயிற்று. ஆனால், மதுவின் மூலம் வந்த வருமானத்தை இழந்துவிட்டு, இன்னும் கல்வியைப் பரப்புவது எப்படி என்பது ஒரு பெரிய பிரச்சனை.

காங்கிரஸின் திட்டம். கூடிய சீக்கிரத்தில் தேசம் முழு -வதும் கட்டாய ஆரம்பப்படிப்புக்கு ஏற்பாடு செய்ய வேண்டும் என்பது. அப்படிக் கட்டாய ஆரம்பக்கல்விக்கு ஏற்பாடு செய்தால் இன்னும் 5 பங்குக்குமேல் பணம் செலவாகுமே! அந்தப் பணத்தை

எங்கிருந்து சம்பாதிப்பது என்பது மற்றொரு கேள்வி. இவ்வளவு பணம் வேண்டியிருக்கும்போது இப்பொழுது வந்துகொண்டிருக்-கும் சுமார் 4½ கோடி ரூபாய் வருமானத்தையும் இழந்துவிடுவது உசிதமாகுமா என்று பலர் கேட்டார்கள்.

குடிப்பவர்கள் யாருடைய வற்புறுத்தலின் பேரிலும் குடிப்பதில்லை. தாங்களே சுயேச்சையாகத்தான் குடிக்கிறார்கள். தவிர, மக்களுக்குக் குடிக்க உரிமையும் உண்டு; அந்த உரிமை-யைப் பாதிக்கச் சர்க்காருக்கு அதிகாரம் இல்லை. அந்த உரிமை-யையும் பாதித்து, இத்தகைய பெரிய வருமானத்தையும் இழப்பது தேசத்திற்கும் கல்வியின் அபிவிருத்திக்கும் நல்லதல்ல என்றும் சிலர் வாதித்தார்கள். எனவே, இந்தப் பிரச்சனையைத் தீர்க்க ஒரு மார்க்கம் கண்டுபிடிக்க வேண்டியிருந்தது.

மக்களுக்கு எல்லாவிதத்திலும் வழிகாட்டியாக இருந்த மகாத்மாகாந்தி இதைப்பற்றித் தீவிரமாக ஆலோசித்தார். மது விலக்கு மிகவும் அவசியமானது. மதுவை எவ்வளவு சீக்கிரத்தில் ஒழிக்கிறோமோ அவ்வளவுக்குத் தேசத்திற்கு நல்லது என்ற அபிப்பிராயத்தை மகாத்மாகாந்தி உறுதியாகக் கொண்டிருந்தார். அதனுடன் சேர்ந்து கல்விப் பிரச்சனையையும் ஆலோசிக்க ஆரம்பித்தார். அப்பொழுது இருந்த நிலைமையில் சென்னை மாகாணத்தில் மாத்திரம் கட்டாய ஆரம்பக்கல்வி கொண்டுவர இன்னும் பல கோடி ரூபாய்கள் அவசியம் என்றால், நம் எளிய மக்கள் அத்தனை கோடி பணத்தை வரியாகக் கொடுக்க முடியுமா என்பதையும் அவர்ஆலோசித்தார். அந்த வரியை மக்கள் கொடுக்க முடியாதென்றால், நம்முடைய நிலைமை என்ன? இந்த நிலைமை-யில் கட்டாயக்கல்வியை அமலுக்குக் கொண்டு வராமலே இருப்-பது நியாயமாகுமா என்பதையும் ஆலோசித்தார்.

அக்காலக் கல்விமுறையும், அது நம் மக்களுக்கு ஏற்ற வாறு அமைக்கப்பட்டிருக்கிறதா என்ற கருத்தும் அவர் மனத்தில் வந்தன. "கல்வித் திட்டத்தை மாற்றி அமைக்க வேண்டும்; இந்நாட்டின் மக்களுக்கும் அவர்கள் சூழ்நிலைக்கும் ஏற்றவாறு நம் பள்ளிக் கூடங்களைத் திருத்தி அமைக்க வேண்டும்" என்று வெகுகாலமாகப் பல அறிஞர்கள் சொல்லிவந்திருக்கிறார்கள்.

எனவே, எவ்விதத்தில் நாம் கல்வி முறையை மாற்றி அமைக்க வேண்டும் என்பதைப் பற்றியும் அவர் யோசித்தார். பல மாதங்கள் அவர் இதைப்பற்றிச் சிந்தித்திருக்க வேண்டும். பலருடனும் அவர் பேசியிருக்கவேண்டும். கடைசியில், அவர் ஒரு திட்டத்தைத் தமது பத்திரிகையில் வெளியிட்டார். அவர் சொன்னதாவது:

"புதிய (1935 –ஆம் வருஷச் சட்டப்படி வந்த அரசியல்) சீர்திருத்தத்தில் ஒரு கஷ்டமான நிலைமை ஏற்பட்டிருக்கிறது. அது என்னவென்றால், மதுபானத்திலிருந்து வரும் வருவாயைக் கொண்டுதான் நம் குழந்தைகளின் கல்வியை நாம் கவனிக்க வேண்டியிருக்கிறது. இது நமக்கு மிகவும் கடுமையான பிரச்சனை. ஆனால், இதைக்கண்டு நாம் அஞ்சலாகாது. இந்தப் பிரச்சனை –யிலிருந்து நாம் விடுவித்துக் கொள்வது, மதுபான விலக்கைப் பற்றி நாம் விடுவித்துக் கொள்வது, மதுபானவிலக்கைப்பற்றி நாம் கொண்டுள்ள தீர்மானத்தைப் பாதிக்கும்படியாக இருக்கக்கூடாது. நம் குழந்தைகளின் கல்விக்காக மதுபானத்தை ஒழிக்க முடியா –தென்று சொன்னால், அது மிகவும் அவமானமான விஷயமாகும். ஆதலால், மதுபானத்தையும் ஒழித்து. கல்வியையும் பரப்பக்கூடிய வேறுவழிகளை நாம் கண்டுபிடிக்க வேண்டும்.

"நாம் கல்விக்காக வேறு வரிகள் போடலாமென்பது உண்மை. ஆனால், கல்வி இத்தகைய முறையில் இருக்கும் வரையில் எத்தனை வரி போட்டாலும் போதுமானதாக இராது. இப்பொழுது ஒரு சிறு பகுதியாருக்கே கல்வி வழங்கப்பட்டு வருகிறது என்பதை நாம் மறந்துவிடலாகாது. இப்போதைய முறையிலேயே நடத்துவதென்றால் கல்விக்கு இன்னும் 5, 6 பங்குப் பணம் செலவு செய்ய வேண்டியிருக்கும். வரிவசூல் செய்வதன் மூலம் மாத்திரம் இந்தப் பிரச்சனையை நாம் தீர்த்துவிட முடியாது. ஆதலால், தைரியமாக நான் ஒரு யோசனை சொல்ல முன் வந்திருக்கிறேன். இந்த யோசனை பயனற்றது என்று சிலர் நினைக்கலாம். ஆனாலும், அதைச் சொல்லியே தீரவேண்டும். தொழில் மூலம் கல்வியைக் கற்பித்து, அதன் மூலம் ஓரளவு கல்விக்குச் செலவாகும் பொருளையும் நாம் சம்பாதிக்க வேண்டும் என்பது அது. கல்வி என்பது மக்களிடமுள்ள உயர்ந்த சக்தியை

வெளிப்படுத்த ஒரு கருவியாகும். அவர்கள் உடல், மனம் ஆத்மா இவைகளின் பண்பை வளர்க்க வேண்டும். எழுத்தறிவு, கல்வியின் ஆரம்பமேயொழிய அதன் முடிவல்ல. மக்களிடத்தில் மனப்பண் -பையும் கல்வி அறிவையும் ஊட்டுவதற்கு அது ஒரு சாதனமாக இருக்கின்றது. எழுத்தறிவு மாத்திரம் கல்வி அறிவு ஆகாது. என்னைக் கேட்டால், குழந்தைகளின் கல்வி ஓர் உபயோகமான தொழிலைக் கற்பதன் மூலமாக ஆரம்பிக்கப்பட்டு, ஆரம்பத்தி -லிருந்து சரியாக அந்தத் தொழிலைச் செய்யக்கூடிய சக்தியை அதற்கு அளிக்க வேண்டும். அதன்மூலம் பிள்ளைகள் ஓரளவுக்குத் தங்கள் செலவைத் தாங்களே சரி செய்து கொள்ளும்படி செய்யலாம்.

"இத்தகைய கல்வியின் மூலம்தான் மனிதர்களுடைய மனத்தையும் ஆத்மாவையும் சரியாகப் பண்படுத்தி வளர்க்க முடியு மென்று நான் நம்புகிறேன். வெறும் கைத்தொழிலை மட்டும் சொல்லித் தரலாகாது. அதில் பொதிந்திருக்கக் கூடிய அறிவுக் -கேற்ற சாதனங்களைக் குழந்தைகள் நன்றாக அறியும்படி சொல்லித்தரவேண்டும். நானே குழந்தைகளுக்குச் செருப்புத் தைத்தல், நூற்றல் முதலியவைகளைச் சொல்லித் தந்து மிக்க பயனைக் கண்டிருக்கிறேன். குழந்தைகளுக்கு எழுதச் சொல்லிக் கொடுப்பதைக்கூடக் கொஞ்சம் பின்னால் ஆரம்பிக்கலாம். இந்தக் கருத்துக்கள் மிகவும் புரட்சிகரமாக இருக்கலாம். ஆனால் இத்தகைய முறைகளின் மூலந்தான் இந்தக் கல்விப் பிரச்சனையை நாம் தீர்க்க முடியுமென்று நான் நம்புகிறேன்."

காந்தியடிகளின் இந்தக் கருத்துக்கள் நாடு முழுதும் பலவாறான விவாதத்தைக் கிளப்பின என்று சொல்லத் தேவை -யில்லை. பலர் இதை எதிர்த்தார்கள். கொஞ்ச நாள் பத்திரிகைகள் பலவும் இந்தக் கருத்துக்களை விவாதித்துக் கொண்டே இருந்தன. கல்வித் துறையில் ஈடுபட்ட அறிஞர்கள் அபிப்பிராயத்தைக் கலந்து கொண்டு இது விஷயத்தில் ஒரு முடிவுக்கு வரவேண்டு -மென்று காந்தியடிகளுக்குத் தோன்றியது. எனவே, இவ்விஷயங் -களை ஆலோசித்து ஒரு முடிவுக்கு வருவதற்காக வார்தாவில் ஒரு கல்வி மகாநாடு கூட்டப்பட்டது. இந்தியாவில் தேசீயக் கல்வியில்

அக்கறை வாய்ந்து, அதற்காக உழைத்துக் கொண்டிருக்கும் பலர் இதற்கு அழைக்கப்பட்டார்கள். டில்லியில் தேசீய முஸ்லீம் சர்வகலா சாலையை (Jamia Milia) நடத்திவரும் ஸ்ரீ ஜாகிர் ஹூசேன், ஸ்ரீ அரிய நாயகம், ஸ்ரீமதி ஆஷா தேவி, மாகாணக்கல்வி மந்திரிகள் முதலிய கல்வியில் சம்பந்தப்பட்ட பலரும் அழைக்கப் -பட்டிருந்தார்கள். அம்மகாநாட்டிற்கு அழைக்கப்பட்டவர்களில் நானும் ஒருவன். இதிலிருந்து மகாத்மாவிடம் கல்வி சம்பந்தமாக நெருங்கிப்பழக எனக்கு மீண்டும் ஒரு சந்தர்ப்பம் கிடைத்தது.

வார்தாக் கல்வி மகாநாடு

கல்வியைப் பற்றிய மகாத்மாஜியின் பிரேரணைகள் இந்தியா முழுவதும் ஒரு பெரிய விவாதத்தைக் கிளப்பியிருந்தன. பள்ளிக் கூடங்களில் வெறும் படிப்பு மாத்திரந்தான் இருக்க வேண்டுமென்ற கருத்து இன்னும் உலகில் இருந்து வருகிறது. கற் -றவர்களென்று பெயர் பெற்றவர்கள் அழகாக உடுத்துக் கொண்டு காரியாலயங்களில் மேஜைக்கு முன் குரிச்சியில் அமர்ந்து, எழுத்து வேலை செய்வதுதான் தங்களுக்குப் பெருமையென்று நினைத் -துக் கொண்டிருந்தார்கள். அதற்குப் பதிலாக, எல்லாக்காரியங்களை -யும் தாங்களே செய்யவேண்டும். வேலையில் உயர்வு தாழ்வு என்பது இல்லை. தொழில் மூலமே கல்வி போதிக்கப்பட வேண் -டும் என்றெல்லாம் மகாத்மா காந்தி சொன்னது அவர்களுக்குப் பெரிய அதிர்ச்சியாக இருந்தது. எனவே, அதற்கு எதிர்ப்பாகவும், விரோதமாகவும் பல இடங்களிலிருந்து கூக்குரல்கள் எழுந்தன.

சிலர் "பள்ளிக்கூடங்களுக்குப் படிப்பதற்காக அல்லவா எங்கள் பிள்ளைகளை அனுப்புகிறோம்? இந்தக்காரியங்களைச் செய்வதற்கல்லவே!" என்று சொன்னார்கள்.

இன்னும் சிலர் "பள்ளிக்கூடங்களில் பிள்ளைகளிடம் வேலை வாங்கி, அதன் மூலம் வருமானம் சம்பாதிக்க வேண்டு -மென்று நினைப்பது அவர்களை அந்த வேலைக்கு அடிமை யாக்கிவிடும். இனிமேல் பள்ளிக்கூடங்கள் கல்விச் சாலைகளாக இராமல், குழந்தைகளைக் கொண்டு வேலை வாங்கும் வெறும் தொழிற்சாலைகளாக மாறிவிடும். அது குழந்தைகளின் வளர்ச்சி -யைப் பாதிப்பதாக இருக்கும்" என்றார்கள்.

வேறு சிலரோ, 'மகாத்மாஜியின் கதர்த் திட்டம், தீண்டாமை, மதுவிலக்குப்போல் இதுவும் முடியாத காரியங்களில் ஒன்று' என்று நினைத்தார்கள்.

எனவே, எல்லோரும் வார்தாவில் கூடவிருக்கும் கல்வி நிபுணர்கள் மகாநாட்டை எதிர்பார்த்திருந்தார்கள்.

கல்வி மகாநாடு 1937ஆம் ஆண்டு அக்டோபர் மாதம் 22,23-ஆம் தேதிகளில் வார்தாவில் கூட்டுவதற்காக ஏற்பாடு ஆகியிருந்தது. இந்தியா முழுவதிலிருந்தும் கல்வி மந்திரிகள் பலருக்கும் அழைப்புச் சென்றது. அத்துடன் கல்வியில் நிபுணர்களென்று பெயர் பெற்ற பலருக்கும் அழைப்பு விடுத்திருந்தார்கள். ஆங்காங்கே தேசீயக் கல்வி முறையை நடத்த முயன்று கொண்டிருக்கும் வித்தியாசாலைகள் நாட்டில் பல இருப்பதை நேயர்கள் அறிவார்கள். அவைகளில் முக்கியமானவற்றை நடத்தி வருபவர் சிலரும் மகாநாட்டிற்கு அழைக்கப்பட்டிருந்தார்கள். இங்ஙனம் அழைக்கப்பெற்றவர்களில் பலர் மேல்நாடு சென்று கல்வித் துறையில் மிகவும் பயின்று வந்தவர்கள். சிலர் கல்லூரியில்வேலை செய்துகொண்டிருந்த பேராசிரியர்கள். இன்னும் சிலர் பல விதங்களில் நன்றாகப் படித்துக் குழந்தைகளை வளர்ப்பதற்குரிய தத்துவங்களை அறிந்தவர்கள். ஆதலால், இம்மகாநாட்டை இந்தியா முழுவதிலும் உள்ளவர்கள் மிகவும் அக்கறையுடன் கவனித்தார்கள். கல்வி மந்திரிகள் அனைவருக்கும் அழைப்புப் போயிற்றென்று குறிப்பிட்டிருந்தேன். சென்னையிலிருந்து அப்பொழுது கல்வி மந்திரியாயிருந்த டாக்டர் சுப்பராயன் அவர்களும் மகாநாட்டிற்கு வந்திருந்தார். பம்பாயில் பிரதம மந்திரியாகவும் கல்வி மந்திரியாகவும் இருந்த பி.ஜி.கேர் அவர்களும், பீகாரில் கல்வி மந்திரியாயிருந்த டாக்டர் சையத் மகமது, மத்திய மாகாணப் பிரதம மந்திரியான ஸ்ரீ சுக்லா, ஒரிசா மாகாணப் பிரதமர் ஸ்ரீ விசுவ நாத தாஸ் ஆகியவர்களும், வேறு மாகாணக் கல்வி மந்திரிகள் பலரும் வந்திருந்தார்கள். கல்வி நிபுணர்களில் ஸ்ரீ ஜாகிர் ஹூசேன், ஸ்ரீ அரியநாயகம். பேராசிரியர் கே.டீ.ஷா முதலிய பலரும் வந்திருந்தார்கள். தேசீய முறையில் வித்தியாலயங்கள் நடத்திவரும் பிரதிநிதிகள், மகாராஷ்டிரத்திலிருந்து திலகர் வித்தியாலயத்தை நடத்தி

வந்த ஸ்ரீ அடிட்கர், குஜராத்திலிருந்து ஸ்ரீ நானாபாய் பட் முதலி யவர்களும் வந்திருந்தார்கள். இப்பொழுது பம்பாய் மாகாணக் கல்வி ஆலோசகராக இருந்துவரும் ஸ்ரீ சயதீன், பேராசிரியர் பி.ஸி. ராய், ஸ்ரீ விநோபா பாவே, ஸ்ரீ காகா காலேல்கர், ஸ்ரீஜே.ஸி.குமரப்பா, ஸ்ரீ கிஷோர்லால் மஷ்ருவாலா முதலியவர்களும் மகாநாட்டில் கலந்து கொண்டார்கள். கல்வி ஸ்தாபனங்கள் நடத்தி வரும் ஊழியர்களில் ஒருவனாக என்னையும் அழைத்திருந்தார்கள். மகாத்மாஜியால் அழைக் கப்படும் இச்சிறந்த கல்வி மகா நாட்டில் கலந்துகொள்ளக் கூடிய சந்தர்ப்பம் கிடைத்ததை நான் ஒரு பெரும் பாக்கியமாக நினைத்தேன்.

மகாநாட்டை மகாத்மாஜி தம் முன்னுரையுடன் ஆரம் -பித்து வைத்தார். அச்சமயத்தில் மகாத்மாஜியின் உடல்நலம் சரியில்லாமலிருந்ததால், கொஞ்ச காலமாகவே அவர் மிகவும் பலவீனமாக இருந்தார். இம்மகாநாட்டில் பேசுவதற்கு வேண்டிய சக்தியைச் சேகரித்துக்கொள்வதற்காகவே அதற்கு முன் பல தினங்கள் அவர் மௌனவிரதம் மேற்கொண்டிருந்தார். அவர் பேசும்போதுகூடக் கம்மிய குரலில் மிகவும் நிதானமாகத்தான் பேச முடிந்தது. அவர் தம்முடைய பிரேரணைகளைச் சொல்லுமுன் வழக்கம் போல் ஒரு விஷயத்தைக கண்டிப்பாக உரைத்து வந்தார். அது மகாநாட்டிற்கு ஓர் எச்சரிக்கையாக இருந்தது. மிகவும் மனப் பூர்வமாக அவர் முதலில் கேட்டுக்கொண்டது இதுதான். "நான் சொல்லுகிறேனென்று எதையும் நீங்கள் ஒப்புக் கொள்ள வேண்டாம். என்னிடத்திலிருந்து இவ்விஷயம் வருகிறதென்பது உங்கள் அபிப்பிராயத்தைப் பாதிக்கக்கூடாது. தயவுசெய்து உங்கள் மனத்தில் எதுஎது சரியென்று தோன்றுகிறதோ அதைச் சொல்லுங் -கள். நான் சொல்வது தவறு என்று தோன்றினால், அதைத் தைரியமாகவும், நன்றாகவும் எனக்கு எடுத்துரைப்பதே நீங்கள் எனக்குச் செய்யக்கூடிய உதவியாகும்; என்பால் காட்டக் கூடிய அன்பு அதுதான். ஆதலால், என்னிடம் இருக்கும் மரியாதையைக் கொண்டு நான் சொல்வதை நீங்கள் ஒப்புக்கொள்ள வேண்டாம். உங்களுடைய உண்மையான அபிப்பிராயத்தையே நான் அறிய விரும்புகிறேன். அதைத் தயவுதாட்சண்யமின்றி எடுத்துச் சொல்லும் -படி மிகவும் மன்றாடிக் கேட்டுக்கொள்ளுகிறேன்."

அதற்குமேல் அவர் தம்முடைய பிரேரணைகளைப் பற்றிச் சொன்னதாவது; "குழந்தைகளுக்குக் கல்வி போதிப்பதில் எனக்குக் கொஞ்சம் அனுபவம் உண்டு. நான் தென்னாப்பிரிக் -காவில் டால்ஸ்டாய் தோட்டத்தில் வசித்து வந்தபோது பலவகை ஜாதியினராகி குழந்தைகள் பலருக்குக் கல்வி போதித்து வந்திரு க்கிறேன். தச்சு வேலை, செருப்புத் தைத்தல் போன்ற தொழில் மூலமாகவே அத்தகைய கல்வியைப் போதித்தேன். அதன் மூலம் குழந்தைகளும் மற்றவர்களும் நல்ல பயனை அடைந்திருக்கிறார் -களென்றே நான் நம்புகிறேன். இக்கல்வி முறையில் அத்தொழி -லைச் சொல்லிக் கொடுப்பது முக்கியம் அன்று. அத்தொழில் மூலம், கணக்கு, சரித்திரம் முதலிய எல்லா விதமான அறிவையும் புகட்டுவதுதான் முக்கியமான கருத்தாகும். தற்காலக் கல்வியிலி -ருக்கும் பல குறைகளைப் போக்கவே இத்தகைய கல்வி முறையை ஏற்க வேண்டுமென்று நான் சொல்லுகிறேன். தக்ளி மூலம் கல்வி கற்க வேண்டுமென்று நான் உரைப்பதற்குக் காரணம், அதன் மூலம் பலதரப்பட்ட கல்வியைப் புகட்ட முடியு -மென்பது தான். தவிர, உணவுக்கு அடுத்தபடி உடை அவசியமா யிருப்பதால் அதன் மூலம் உண்டாகும் பண்டமும் பிரயோஜனம் உடையதாக இருக்கும்." "நமது தற்காலப் பொருளாதார நிலையில் பள்ளிக் குழந்தைகளின் உழைப்பின் மூலம் ஆசிரியர்களின் சம்பளத்தின் ஒரு பகுதியையாவது சம்பாதிக்கவேண்டுமென்று நான் நினைக்கிறேன். புதிதாக வரி போட்டுக்கட்டாயக் கல்விக்குப் பணம் கண்டுபிடிக்கும் வரையில் நாம் காத்திருக்க முடியாது. தற்காலப் பள்ளிக்கூடங்களிலிருக்கும் பிள்ளைகளுக்குத் தங்களை -யும், சுற்றுப்புறத்தையும் சுத்தமாய் வைத்திருக்கத் தெரியாது. தாங்களே தங்கள் காரியங்களைக் கவனித்துக்கொள்ளவும் தெரியாது. நான் சொல்லும் கல்வி மூலம் அவர்களுக்கு இப்பழக்கம் உண்டாகுமென்று நம்புகிறேன். இக்கல்வி முறையை நான் ஏற்க வேண்டுமென்று உரைப்பது, அதனால் வரக்கூடிய வருமானத் -திற்காக அல்ல; நம் குழந்தைகள் வளர்ச்சிக்கு இதுமிகவும் ஏற்றதென்ற நம்பிக்கையின் பேரில் தான் நமது கல்வி முறை அங்ஙனம் சீர்திருந்த வேண்டுமென்று அபிப்பிராயப்படுகிறேன்."

இதற்குமேல் விவாதம் ஆரம்பமாயிற்று. மகாநாடு அன்றும் மறுதினமும் நடந்தது. ஸ்ரீ ஜாகிர் ஹூசேன் முதலில் பேசினார்: "மகாத்மா காந்திஜியினுடைய கருத்து முற்றும் புதிதானதல்ல. காரியங்களைச் செய்வதன் மூலம் குழந்தை-களுக்குக் கல்வி கற்பிப்பது என்பது பல ஆண்டுகளாகக் கல்வி நிபுணர்கள் ஒப்புக்கொண்ட கொள்கையாகும். அந்தக் கொள்கை-யைப் பல நாடுகள் ஏற்றுக்கொண்டு, அமல்நடத்தி வருகின்றன. ப்ராஜெக்ட் முறை (Project Method) போன்ற முறைகள் தத்துவத்தை அடிப்படையாகக் கொண்டிருக்கின்றன. ஆனால், தொழில்களை அடிப்படையாகக் கொண்டு கல்வி போதிப்பதென்பது அதற்கு மேல் ஒருபடியாகும். இதுவும் முற்றும் புதிது எனச் சொல்ல முடியாது. ரஷ்யா போன்ற நாடுகளில் இன்னும் இதுமாதிரிக் கல்வி பயில்விக்க முயற்சி செய்யப்பட்டு வருகிறது. ஆனால், தொழிலை அடிப்படையாகக் கொண்டு கல்வி கற்பித்து, அதன் மூலம் வரும் வருமானத்தைக் கொண்டு பள்ளிக்கூடத்தை நடத்துவதென்பது ஒரு புதிதான அம்சமே. அது விஷயத்தைப் பற்றித் தீர ஆலோசித்து அநுபவத்தில் பார்த்துத்தான் முடிவு சொல்லவேண்டும். ஆனால், தொழில் மூலம் கல்வியென்ற மகாத்மாஜியின் அடிப்படையான தத்துவம் முற்றும் ஒப்புக் கொள்ளக்கூடிய தத்துவமே."

இன்னும் ஸ்ரீமதி சௌதாமினி மேத்தா, பேராசிரியர் கே.டீ.ஷா, நாகபுரி திலகர் வித்தியாலயத்தின் தலைவராக இருந்த ஸ்ரீ திஜாரே, டாக்டர் ஸையத் முகமது, ஆசாரிய விநோபா, பேராசிரியர் டாக்டர் பி.ஸி.ராய், ஹரித்துவாரத்துக்கருகில் ஆரிய சமாஜத்தைச் சேர்ந்த காங்கிரி குருகுலத்தலைவர் ஸ்ரீ தேவி சர்மா முதலிய பலர் விவாதத்தில் கலந்துகொண்டார்கள். நானும் பேசினேன்.

இந்த மகாநாட்டில் தொழில் மூலம் கல்வியென்ற முக்கிய-மான தத்துவத்தைத் தவிரக் கல்விப் போதனையின் வேறு சில அம்சங்களையும் பற்றி விவாதம் நடைபெற்றது. நிரந்தரமாகக் குழந்தைகளுக்குக் கல்வி பயிற்றுவதற்கு எத்தனை வருஷம் கட்டாயக் கல்வி இருக்க வேண்டும் என்பதைப் பற்றியும், பள்ளிக் கூடங்களில் எதன் மூலம் கல்வி போதிக்கப்படவேண்டும். அது

எந்தப் பாஷையின் மூலம் இருக்க வேண்டும் என்பதைப் பற்றியும் அன்று விவாதம் நடைபெற்றது. அக்காலத்தில் எல்லா உயர்தரப் பள்ளிகளிலும் ஆங்கிலத்தின் மூலமே கல்வி கற்பித்தார்கள். பலர் தங்கள் குழந்தைகள் ஆரம்பப் பாடசாலைகளில்கூட ஆங்கிலத்தின் மூலம் கல்வி பயிலவேண்டுமென்று நினைத்து வந்தார்கள். எனவே, அப்பிரச்சனையும் ஒரு முக்கியமான அம்சமாக மகாநாட்டில் விளங்கியது. இரண்டு நாட்கள் விவாதங்களுக்குப் பின் கீழ்க்கண்ட தீர்மானங்கள் மகாநாட்டில் நிறைவேற்றப்பட்டன.

1. இந்த மகாநாட்டின் அபிப்பிராயப்படி தேசம் முழுவதிலும் எல்லாக் குழந்தைகளுக்கும் கட்டாய இலவசப் படிப்பு ஏழு ஆண்டுகளுக்கு ஏற்பாடு செய்யப்பட வேண்டும்.

2. பள்ளிகளில் போதனை தாய் மொழியின் மூலமே இருக்க வேண்டும்.


3. மகாத்மாஜியின் பிரேரணைப்படி, கல்வி ஒரு தொழிலை அடிப்படையாகக் கொண்டு இருக்கவேண்டும். குழந்தைகளின் சக்திகளை வெளிப்படுத்துவதற்கு ஏற்றவாறு இந்தத் தொழில் முறையைப் பள்ளிக்கூடங்கள் உபயோகப்படுத்த வேண்டும். அந்த தொழில்களும் கூடுமானவரை பயனுடையன -வாக இருக்க வேண்டும். அந்த அந்தச் சுற்றுப்புறங்களுக் -கேற்றவாறு இத் தொழில்கள் இருக்க வேண்டும்.

4. நாளடைவில் ஆசிரியர்களுக்குக் கொடுக்க வேண்டிய ஊதியத்தையும் இக்கல்வி மூலம் பெற முடியுமென்று இம்மகாநாடு எதிர்பார்க்கிறது.

வார்தாவில் நடந்த அந்தக் கல்வி மகாநாடும், அதில் நிறை -வேறிய தீர்மானங்களும் கல்வியுலகில் பெரும் புரட்சியை உண்டு பண்ணின. அக்காலத்தில் மக்கள் பலர் அதனுடைய அடிப்படை -யான தத்துவங்களை உணரவில்லை. இன்று இந்தியா முழுவதும் ஒப்புக்கொள்ளப்படும் ஆதாரக் கல்வியின் அஸ்திவாரம் அந்த மகாநாட்டில் போடப்பட்டது.


❑

23. ஜி.டி.நாயுடுவும் மது ஒழிப்பும்



கொங்கு நாட்டில் கிராமங்களில் துடிப்பான பள்ளிக் குழந்தைகளைப் பார்த்தால் "ஜி.டி.நாயுடு மூளைக்காரன்" எனப் பெருமையாகக் கூறுவார்கள். ஆனால் ஜி.டி.நாயுடு தன்னுடைய இளமைக்காலத்தில் பள்ளிக்குச் செல்வதில் நாட்டம் இல்லாமல் இருந்தார்.

ஒரு நாள் வலி நிவாரண மருந்துப்புட்டி ஒன்று அவருக்குக் கிடைத்தது. அவர் தன்னுடைய வீட்டிற்கு அந்த மருந்து புட்டியை கொண்டு வந்து அந்த மருந்து கம்பெனியின் முகவரிக்கு விற்பனை உரிமை வேண்டும் என்று கடிதம் எழுதினார். பார்க் டேவிஸ் என்ற அந்த மருந்து கம்பெனி விற்பனை உரிமம் கொடுத்தது. வீடு வீடாக சென்று வலி நிவாரண மருந்து விற்பனை செய்ததோடு, மூலிகை வைத்தியங்களைப் பற்றி கற்றறிந்தார். பின்பு கைதேர்ந்த நாட்டு வைத்தியராக மாறினார்.



ஒரு நாள் ஆங்கிலேய நில அளவை அதிகாரி "லங்கா -ஷயர்" இவரது ஊர் வழியாக செல்லும் போது மோட்டார் சைக்கிள் பழுதடைந்து விட் -டது. தன்னுடைய வீட்டில் இருந்து சிறிது மண்ணெண் -ணையும், சிறிய துணியும் கொடுத்து உதவினார். மோட்டார் சைக்கிளில் பழுதுபட்ட பாகத்தை பிரித்து சுத்தம் செய்து லங்காஷயர் பொருத்தியதை வைத்த கண் வாங்காமல் பார்த்துக் கொண்டிருந்தார். அந்த மோட்டார் சைக்கிள் வாங்கிவிட வேண்டும் என்ற எண்ணம் அவர் மனதில் அப்போது உருவானது.

இவர் பிறந்த ஊரான கலங்கல் கிராமத்திலிருந்து 15 கி.மீட்டர் தூரத்தில் உள்ள கோயமுத்தூரையே பார்க்காத ஜி.டி.நாயுடு நடந்தே சென்று கோவையை அடைந்தார். முதன் முதலாக இரயில் வண்டியை பார்த்து மகிழ்ச்சி அடைந்தார். இரயில் வண்டியில் ஏறிப்பார்க்கவேண்டும் என்று விரும்பினார். பசி மயக்கம் கண்ணை மறைத்தது. தண்ணீரைக் குடித்து பசியைப் போக்கினார். ஒரு உணவு விடுதியில் மாதம் 5 ரூபாய் சம்பளத்தில் வேலைக்குச் சேர்ந்தார். இரவும் பகலும் கடுமையாக உழைத்தார். மூன்றாண்டுகள் கடும் உழைப்பில் 400 ரூபாய் சம்பாதித்து விட்டார்.

அதன்பிறகு ஜி.டி.நாயுடு அவர்கள் "லங்காஷயர்" என்ற ஆங்கிலேயரின் பங்களாவிற்கு சென்று மூன்று ஆண்டுகளுக்கு முன் கலங்கல் கிராமத்திற்கு வந்த போது மோட்டார் சைக்கிள் பழுதுற்றதையும் மண்ணெண்ணையும், துணியும் கொடுத்ததை -யும் நினைவு கூர்ந்தார். எனக்கு அப்போதிருந்து உங்கள் மோட்டார் சைக்கிளைப் போல ஒரு மோட்டார் சைக்கிள் வாங்க வேண்டும் என நினைத்தேன் என்று கூறினார். ஜி.டி.நாயுடுவின் ஆர்வத்தை கண்ட லங்காஷயர் 400 ரூபாய்க்கு தன்னிடமிருந்த பழைய மோட்டார் சைக்கிளைக் கொடுத்தார்.

ஜி.டி.நாயுடுவுக்கு மோட்டார் சைக்கிள் ஓட்டத்தெரியாது. பெரும்புதையல் கிடைத்த மகிழ்ச்சியில் அந்த வண்டியை 15 கி.மீட்டர் தூரம் இருந்த தன் ஊருக்கு தள்ளிக்கொண்டே வந்து சேர்ந்தார்.

பின்னர் பஞ்சாலையில் வேலை செய்தார். அதன்பிறகு சொந்தமாக பஞ்சாலை ஒன்றை அமைத்தார். பம்பாய் சென்று பஞ்சு வியாபாரம் செய்தார். அனைத்திலும் நஷ்டம் அடைந்தார். மீண்டும் கோவையில் "இராபர்ட் ஸ்டேன்ஸ்" அவர்களை சந்தித்தார். பேருந்து ஒன்றை எட்டாயிரம் ரூபாய்க்கு விலைக்கு வாங்கினார்.

முதலாளி, ஓட்டுனர், நடத்துனர் எல்லமே ஜி.டி.நாயுடு தான். பொள்ளாச்சியில் இருந்து பழனிக்கு பேருந்தை இயக்கினார். மிகவேகமாக முன்னேறினார். அனைத்து வழித் தடங்களிலும் கூட்டுறவின் மூலமாக பேருந்தை இயக்கினார்.

U.M.S. என்ற கூட்டுறவின் மூலமாக 500க்கும் மேற்பட்ட பேருந்துகளை இயக்கினார். காலந்தவறாமையும், தொழிலாளர் -களின் நலன் காப்பதையும் மிகச் சிறப்பாகச் செயல்படுத்தினார். வெளிநாட்டுத் தொழில் வல்லுனர்கள் இந்தியா வந்தால் இவரை சந்திக்காமல் செல்ல மாட்டார்கள். 15 கி.மீட்டர் தூரத்தில் உள்ள கோவை நகரத்தையே பார்க்க முடியாமல் இருந்த ஜி.டி.நாயுடு உலகை நான்கு முறை வலம் வந்தார்.

அமெரிக்காவில் சிக்காகோ நகரில் விவேகானந்தர் பேசிய பேச்சு இந்தியாவிற்கு பெருமை சேர்த்தது. அதேபோல சிக்காகோ நகரில் உலக வணிக மாநாட்டில் ஜி.டி.நாயுடு பேசியது உலகத்தமிழர்களுக்கு பெருமை சேர்த்தது.

தன்னுடைய மிகச்சிறந்த அறிவாற்றலால் ஒளிப்பதிவு கருவி, ரேடியோ, கடிகாரம், காசு போட்டால் தானே பாடும் கருவி, மின்சார சவரக்கத்தி போன்றவற்றை தயாரித்தார். உலக அரங்கில் ஒட்டுப்பதிவு செய்யும் இயந்திரத்தை ஜி.டி.நாயுடு கண்டுபிடித்தார்.

200 முறை முகம் மழிக்ககூடிய ரேசர் பிளேடை உலகள -வில் சந்தைப்படுத்தினார். பல வெளிநாட்டு நிறுவனங்கள் இவரிடம் உரிமம் கேட்டுப்போராடின.

தமது சொந்த மண்ணிலே ரேசர் பிளேடு தயாரித்து இந்தியாவிற்கு பெருமை சேர்க்க விரும்பினார். ஆனால் இந்தியா -வில் அங்கீகாரம் கிடைக்கவில்லை. ஆனால் ஜெர்மனியில் உள்ள லீப்ஸிக் நகரத்தில் நடைபெற்ற பொருட்காட்சியில் இவர் தயாரித்த சவரக்கத்தி முதல் பரிசையும், பிளேடு இரண்டாம் பரிசையும் பெற்றது.

இத்தோடு நில்லாமல் பருத்தி, சோளம், கேழ்வரகு, ஆரஞ்சு, பப்பாளி, வாழை, காளிபிளவர், அவரை, துவரை என அனைத்துப் பயிர்களிலும் தரமான விதைகளை உற்பத்தி செய்தார்.

கப்பலோட்டிய தமிழன், செக்கிழுத்த செம்மல் வ.உ.சிதம் -பரனார் அவர்கள் கோவைச் சிறைச்சாலையில் இருந்து வெளியே வரும்போது வரவேற்பு கொடுப்பதற்காக தந்தை பெரியார் வர இயலவில்லை. தந்தை பெரியார் சார்பாக ஜி.டி.நாயுடு அவர்கள் கோவை சிறைச்சாலை வாயிலில் வ.உ.சிதம்பரனார் அவர்களுக்கு சிறப்பான வரவேற்புக் கொடுத்தார்.

தமிழனாகப் பிறந்த ஒரே காரணத்தால் இவரது கண்டு பிடிப்புகளுக்கு அரசாங்கம் சரியான அங்கீகாரம் கொடுக்க வில்லை. தந்தை பெரியார் அவர்களும், அறிஞர் அண்ணா அவர்களும் இவரது கண்டுபிடிப்புகளைப் பார்த்துச் சென்றபின் இவர் கண்டுபிடிப்புகள் அனைத்தையும் விழாவாக வைத்து உடைத்து எறிந்தார்.

தந்தை பெரியாரோடு மிக நெருக்கமாக இருந்த ஜி.டி.நாயுடு அவர்கள் கல்வியிலும் மிகப்பெரிய மாறுதலை கொண்டுவந்தார். மாணவர்கள் ஒழுக்கம் உள்ளவர்களாகவும், கட்டுப்பாடு மிக்கவர் -களாகவும் திகழவேண்டும் என்பதில் மிக உறுதியாக இருந்தார். கல்வி கற்க வந்த மாணவர்கள் கவனம் முழுவதும் கல்வியிலேயே இருக்க வேண்டும் என்றும் வேறு சிந்தனைகளில் மனதைச் செலுத்தக்கூடாது என்றும் தெளிவாகக் கூறினார்.

1951ஆம் ஆண்டு நோபல் பரிசு பெற்ற சர்.சி,வி.ராமன் அவர்களை கோவைக்கு அழைத்து சிறந்த மாணவர்களுக்கு விருது வழங்கினார். அப்போது அவர் பேசும்போது மாணவர்கள் விதண்டாவாதங்களிலும், வீண் பொழுதுபோக்குகளிலும் செல்லா

-மல் பார்த்துக் கொள்ள வேண்டும். கட்டுப்பாடு, நல்ல ஒழுக்கம் மாணவர்களுக்கு அவசியம் இருக்க வேண்டும். அப்போது தான் சிந்திக்கும் ஆற்றல் வளரும். மேலும் யாரும் எந்த நிலையிலும் யாரையும் ஏமாற்றக் கூடாது. மதுப்பழக்கம் அறவே கூடாது. மதுப் பழக்கம் இளைஞர்களின் எதிர்காலத்தை சீரழித்து விடும் என்று பேசினார். ஜி.டி.நாயுடு அவர்கள் இளைஞர்களை சரியாக வழி நடத்துவதை அறிந்த சர்.சி.வி.ராமன் அவர்கள் ஜி.டி.நாயுடுவை வெகுவாகப் பாராட்டினார்.

ஜி.டி.நாயுடு திருக்குறளில் ஆழ்ந்த புலமை கொண்டிருந் -தார். ஒரு கல்லூரியில் இவரை சிறப்பு பேச்சாளராக அழைத்த போது குறளை மையப்படுத்தி பேசினார்.

"ஒழுக்கம் விழுப்பம் தரலான் ஒழுக்கம்
உயிரினும் ஓம்பப் படும்."

என்ற குறளுக்கேற்ப நல்ல ஒழுக்கம் தான் ஒவ்வொருவருக்கும் உயர்வைக் கொடுப்பதால் ஒழுக்கம் உயிரைவிட பெரிதாக போற்றப்பட வேண்டும். ஒவ்வொரு மாணவனும் ஒழுக்கத்துடன் வாழ்வது மிக முக்கியமாகும்.

தொழில்துறை முன்னேறவேண்டுமானால் மாணவ - மாணவிகள் நல்ல மாணிக்கங்களாக இருக்கவேண்டும். ஐம்பொறி -களையும் அடக்கி ஆளவேண்டும். மேலும்,

"சென்ற இடத்தால் செலவிடா தீதொரீஇ
நன்றின்பால் உய்ப்பது அறிவு"


மனம்போன போக்கெல்லாம் போகாமல் மனதை அடக்கி ஆளப்பழகவேண்டும் என்று கூறினார். உழைப்பிற்கு மிஞ்சியது எதுவுமே இல்லை என்று கூறி **எக்காரணம் கொண்டும் தீய பாதையில் இளைஞர்கள் செல்லக் கூடாது** என்றும் கூறினார்.

14.2.1953 அன்று திருச்சி சூசையப்பர் கல்லூரியில் பேசும்போது இளைஞர்கள் மனதை உறுதியாக வைத்துக்கொள்ள வேண்டும். இதேபோல் உடல், உணவு, உள்ளம் இந்த மூன்றும் ஒன்றோடு ஒன்று தொடர்புடையன என்ற உண்மையை தெரிந்து அதற்கேற்ப நடந்து கொள்ள வேண்டும் என்று பேசினார். 25.2.1953 அன்று கிண்டி பொறியியல் கல்லூரியில் பேசியபோது

மாணவர்களிடத்தில் சோம்பல் கூடாது. அனுபவத்தின் மூலமாக அதிகப்படியான அறிவைப் பெற வேண்டும். உழைப்பால் உயர்ந்த மேதைகளின் வரலாற்றைப் படிக்க வேண்டும் என்று பேசினார்.


இளைஞர்களை சரியான பாதையில் வழிநடத்திச் செல்வதற்காகவே தொழிற்பயிற்சிக் கல்லூரியை உருவாக்கி வெற்றி கண்டார்.

Do you know who are the enemies
No 1, 2, 3 etc., of the Youngesters?
1) Parents, 2) Politics, 3) Films, Tobacco,
Useless Papers, Magazines, Novels indicipline.
- G.D. Naidu



மதுவால் ஏற்படும் அழிவுகள்

24. ம.பொ.சி யும் மது ஒழிப்பும்



தமிழக சுதந்திரப் போராட்ட காலத்தில் வரலாற்றில் முக்கியப்பங்கு வகித்தவர் சிலம்புச்செல்வர் என்று அழைக்கப்பட்ட மா.பொ.சிவஞானம் அவர்கள். இராஜாஜி, காமராஜர் மற்றும் பல அரசியல் தலைவர்களோடு நெருக்கமாக தொடர்பில் இருந்தவர். நூற்றுக்கும் மேற்பட்ட இலக்கிய நூல்களை இயற்றியுள்ளார். "வள்ளலார் கண்ட ஒருமைப்பாடு" என்ற நூல் எழுதியதற்காக 1966 ஆம் ஆண்டு சாகித்ய அகாடமி விருது பெற்றவர். மத்திய அரசின் பத்மஸ்ரீ விருதும் பெற்றவர். மொழிவாரி மாநிலங்கள் பிரிக்கப்பட்டபோது வடக்கு எல்லை போராட்டம், தெற்கு எல்லை போராட்டம், தட்சண பிரதேச எதிர்ப்பு போன்ற போராட்டங்களில் முக்கிய பங்கு வகித்தவர். மேலும் சென்னை மாகாணத்தைத் தமிழ்நாடு என்று பெயர் மாற்றம் செய்வதற்கான போராட்டம், இலங்கையில் தமிழ்மொழி உரிமைப் போராட்டம் போன்ற போராட்டங்களில் முக்கிய பங்கு இவருக்கு உண்டு.

ம.பொ.சி. அவர்களின் பொதுவாழ்வில் மது ஒழிப்பிற்கான போராட்டம் மிக முக்கியப் போராட்டமாக கருதப்படுகிறது. மது ஒழிப்பைப் பற்றி "கிராமணி குலம்" என்ற பத்திரிகையில் தொடர்ந்து கட்டுரைகள் எழுதி வந்தார். மேலும், மது ஒழிப்பு தொடர்பாக "எனது போராட்டம்" என்று தனது சுயசரிதை நூலில் பின்வருமாறு கூறுகிறார்.

நான் முதன் முதலாக சேலம் மாவட்டத்தில் சுற்றுலாப் பயணம் செய்தபோது அந்த மாவட்டத்தில் முழுமதுவிலக்கு அமலில் இருந்தது. தமிழ்நாட்டிலேயே இந்த மாவட்டத்தில் தான் முதன்முதலாக முழுமதுவிலக்கு அமல்படுத்தப்பட்டது. மது விலக்கு அமலுக்கு வந்து சரியாக ஓர் ஆண்டு நிறைவு பெற்றிருந்த நேரத்தில் நான் இந்த மாவட்டத்தில் சுற்றுப்பயணம் மேற்கொண் -டேன். குடிப்பழக்கத்தை நான் அடியோடு வெறுப்பவன். ஆதலால், மதுவிலக்கின் நற்பண்புகளை ஆராய்ந்து அறிவதில் கருத்து செலுத்தினேன். உண்மையிலேயே சேலம் மாவட்டத்தில் மதுவிலக்கு வெற்றிகரமாக இருந்தது கண்டு மகிழ்ச்சியடைந் -தேன். தேர்தல் பிரச்சாரத்திற்குச் சென்ற கிராமங்களிலே சாதாரண மக்களை அணுகி மதுவிலக்கு பற்றி அவர்கள் கருத்தறிய முயன்றேன். மக்களில் மிகப்பெரும்பாலோர் மதுவிலக்கிற்கு ஆதரவாகவே இருந்தனர். சேலம் மாவட்டத்தில் மதுவிலக்கு வெற்றிநடை போட்டது.

பிற்காலத்தில் மதுவிலக்குச் சட்டம் வெற்றிபெறவில்லை என்பது உண்மைதான். அதற்கு முதல்காரணம் அரசியல் கட்சிகளுக்கே மதுவிலக்கில் அழுத்தமான நம்பிக்கை இல்லாதது தான். அரசியல் கட்சிகளிடையே குடிப்பழக்கம் உள்ளவர்களை சேர்த்துக் கொள்ள இயலாதபடி மதுவிலக்கு கொள்கையைக் கொண்டிருந்த ஒரே கட்சி காங்கிரஸ்தான். இந்த கட்சியே மதுவிலக்கில் நம்பிக்கை இழந்து, மதுக்கடைகளைத் திறக்க ஆரம்பித்துவிட்டது.


குடிப்பழக்கத்தின் கொடுமையை மதுவிலக்கின் நன்மையை விளக்கி மக்கள் மத்தியிலே பிரச்சாரம் செய்யவில்லை. குடும்பக் கட்டுப்பாடு பிரச்சாரம் போல மதுவிலக்கிற்கு ஆதரவா -கவும் பிரச்சாரம் நடத்த அரசு திட்டமிட்டிருக்குமானால், மது விலக்குச் சட்டம் வெற்றிநடை போட்டு இருக்கும். மதுவிலக்குச் சட்டம் வெற்றிபெறாததோடு சாதாரண மக்கள் மதுவிலக்கைக் கொள்கை அளவில்கூட விரும்பாதநிலை ஏற்பட்டு விட்டது. இப்போதும்கூட மனமிருந்தால் அரசு பிரச்சாரத்தை வலுப்படுத்தி மதுவிலக்கிற்கு வெற்றி தேடலாம்.

நான் சேலத்தில் சுற்றுப்பயணத்தில் இருந்தபோது தமிழ் மாகாண காங்கிரஸ் கமிட்டியின் கூட்டம் நடைபெற்றது. அக்கூட்டத்தில் இந்தி மொழி எதிர்ப்பு பற்றியும், மதுவிலக்கின் வெற்றி பற்றியும் பேசினேன். மக்களிடையே மிகுந்த வரவேற்பு பெற்றது.

தமிழ்நாட்டின் மற்ற மாவட்டங்களில் மதுவை ஒழிப்பதற்காக "**கள் ஒழிந்த சேலத்தில் நான் கண்ட காட்சி**" என்ற தலைப்பில் பல இடங்களில் பேசினேன். அதிகப்படியான வரவேற்பையும் பெற்றேன். மது ஒழிப்பு பற்றி மேடைகளில் பேசியது எனது பொதுவாழ்வில் திருப்பு முனையாக அமைந்தது என எழுதியுள்ளார்.

1931 இல் கள்ளுக்கடை மறியல் சென்னையில் ஆரம்ப மானது. மதுக்கடைக்கு முன்பு ஐந்து அடி தூரத்தில் காங்கிரஸ் தொண்டர்கள் மறியல் நடத்த அரசு அனுமதி வழங்கியது. குடிக்க வேண்டாம் என்று கைகுவித்து கும்பிட்டு வேண்டி கேட்டுக் கொண்டனர் காங்கிரஸ் தொண்டர்கள். இதனால் பல குடிகாரர்கள் மனமாற்றம் அடைந்தனர் என எனது போராட்டம் என்ற நூலில் ம.பொ.சி. குறிப்பிட்டுள்ளார். ❑

25. திரு.வி.க.வும் மது ஒழிப்பும்



தமிழ்த்தென்றல் திரு.வி.கலியாணசுந்தரனார் அவர்கள் பல்வேறு இலக்கிய நூல்களை எழுதியுள்ளார். வள்ளலார் கண்ட ஒருமைப்பாட்டினை வலியுறுத்தி வந்தார். சமரச சன்மார்க்கம், ஒரே கடவுள், சாதி ஒழிப்பு, தீண்டாமை ஒழிப்பு, பெண்ணுரிமை போன்றவற்றிற்காக தன் வாழ்நாள் முழுவதும் பாடுபட்டார்.

1921 அக்டோபர் மாதம் 15,16 ஆம்தேதி திருப்பாதிரை புலியூரில் தென்னாற்காடு ஜில்லா அரசியல் மகாநாடு நடைபெற்றது. மகாநாட்டில் குடியினால் விளையுங்கேடுகளைப் பற்றி நம்நூல்கள் விரிவாகக் கூறியிருக்கின்றன இக்கால அறிவு நூல்களும் குடியின் கொடுமையை விளங்க உரைக்கின்றன.

குடியின் கொடுமை : குடியின் கொடுமைகள் படங்கள் வாயிலாகவும் விளக்கப்படுகின்றன. அதிலுள்ள தீமைகளைக்

கண்டே நம்மவர் ஐம்பெரும் பாவங்களுள் ஒன்றாக அதைத் தொகுத்திருக்கின்றனர். நூறு ஆண்டுகளுக்கு முன்னர் குடிப்பவர் தொகை மிகச் சுருங்கியிருந்தது. நாளேற நாளேறக் குடிப்பவர் தொகை பெருகிவிட்டது. கற்றவரும் மேல்நாட்டுச் சாராய வகைகளைக் குடித்து வருகின்றனர். பழைய காலத்தில் மேல்நாட்டு வாணிபர் தமது நாட்டு மதுபானங்களைக் கொணர்ந்து கொடுத்து நமது நாட்டு ஏலம், மிளகு முதலிய பொருள்களைப் பண்ட மாற்றாகப் பெற்றுச் சென்றனர். மேல்நாட்டுக் கூட்டுறவால் நமது நாட்டில் குடி பெருக்கெடுத்தது என்றே கூறலாம். குடியாத வகுப்பினருள்ளும் சிலர்குடிக்கும் பயிற்சிபெற்று வருகின்றனர். குடியிலுள்ள கொடுமைகளைக் கண்ட சில மேல்நாட்டு அறிஞர், இப்பொழுது அதை ஒழிக்கப் பெருமுயற்சி செய்கின்றனர். அமெரிக்கா இம்முயற்சியில் தலைசிறந்து விளங்குகிறது. இந்நாளில் குடி விலக்குப் பிரசாரம் இந்தியாவிலும் சிறப்பாக நடைபெறுகிறது. இதற்குத் தற்போதைய அரசாங்கத்தாரும் துணைபுரிதல் சிறப்பு மதுவில் எவ்வளவு வரிப்பணம் வரினும் அதனை அரசாங்கத்தார் ஏற்றல் கூடாது. அதற்குப் பதிலாக வேறு வழிகளிற் பொருள் பெறலாம். மதுபானப் பிரசாரத்திலும் அரசாங்கத்தார் ஐயங்கொள்ளுதல் முற்றிலும் மறுக்கத் தக்கது. குடி நிறுத்தம் சுயராஜ்யத்துக்கு அடிகோலுவதாகும். ஆதலால், கள் கொடுப்போர் கள்ளெடுப்போர், கள் விற்போர், கள் உண்போர் ஆகிய இவர்கள் காங்கிரஸ் கட்டளை வழி நின்று நாட்டைக் காப்பார்களாக.

கொல்லாமையால் கொலை ஒழிதல் வேண்டும் கள்ளாமை -யால் களவு அழிதல் வேண்டும். கள்ளுண்ணாமையால் குடி தொலைதல் வேண்டும். ஆசை அகலல் வேண்டும். பொய்யாமை -யால் பொய் போதல் வேண்டும், ஐம்பெரும் பாவங்களால் அடிமை வாழ்க்கை வளரும். அவைகளை ஒழித்தலால் உரிமை வாழ்க்கை ஓங்கும்.


1924 ஏப்ரல் மாதம் 5,6 ஆம் தேதி திருச்சிராப்பள்ளி ஜில்லா குளித்தலையில் நடைபெற்ற அரசியல் மகாநாட்டில் பேசியது. கள், மனிதன் உடல் வளத்தையும் உயிர் நலத்தையும் கெடுப்பது. தென்னை, பனை முதலியன கள்ளுக்காக ஏற்பட்டன -வல்ல. மனித வாழ்வுக்கு வேண்டப்படும் பொருள்பல அவற்றில் இருக்கின்றன. மனிதன், தன் முயற்சியால், கள்ளை அவற்றினின் -றும் உண்டு பண்ணுகிறான். கள், இயற்கையாகப் படைப்பில் விளைவதன்று இயற்கைப் படைப்பிலில்லாத மதுவிலக்கு ஒன்றைக்குடிப்பது வாழ்வைக் குலைக்குமென்பதில் ஐயமில்லை. பண்டைக்காலத்தில் கள்ளருந்துவோர் தொகை மிகச் சுருக்கம், இப்பொழுது பெருக்கம். இழிதொழில் செய்வோரும், உயர்தொழில் செய்வோரும் இதுகாலை மது உண்கிறார். மேல்நாட்டு மது -வினங்களும் நமது நாட்டில் வந்து இறங்குகின்றன. அவற்றைப் பெரிதுங் குடிப்போர்கற்ற வகுப்பாரேயாவர். மதுவால் அரசாங்கத் -தாருக்கு வருவாய் ஏராளமாகக் கிடைக்கிறது. இவ்வருவாயைக் குறைத்து அரசாங்க இயக்கத்தை இடர்ப்படுத்தவே நிர்மாணத் திட்டத்தில் மதுவிலக்கு ஒரு முறையாகக் கொள்ளப்பட்டிருக் -கிறது. என்று கருதுவோர் கருதுக. கட்குடியால் நாட்டுக்குப் பல கேடுகள் உண்டு. நாட்டு மக்கள் என்று சொல்லப்படும் தொழிலாளர், கள் அருந்துவதால் செல்வப்பேறு இழப்பதுடன், உடல் இன்பப்பேறு, மக்கட்பேறு முதலிய பேறுகளையும் அவர் இழக்கிறார்.

மது உண்போர்பால் தேசபக்தி நிகழ்தல் அரிது. சிலவேளை தேசபக்தி நிகழாமல், அது மின்னல்போலத் தோன்றி மறையும். அவர்தம் உள்ளத்தில் எழும் எழுச்சி நீர்க்குமிழிபோல் தோன்றி நின்று அழிவதாகும். எழுச்சி வேளையில் அன்னார் ஏதாயினுங் கொடுஞ் செயல் ஆற்றினும் ஆற்றுவர்.

நிர்மாணத் திட்டமெனும் ஆக்க வேலைகளுள் ஒன்றாக -வுள்ள நூல் நூற்றல், மதுவிலக்குக்கு உற்ற துணை செய்வதாகும்.


இயந்திரங்கள் நிரம்பிய தொழிற்சாலைகளில் வேலை செய்வோர் செவியில் எந்நேரமும் (இயந்திர) ஒலி கேட்பதாலும், உழைப்பின் அலுப்பாலும் அவர்க்குக் காரணச் சோர்வு நிகழ்கிறது. அதைப் போக்கத் தொழிலாளர் குடிக்கின்றனர். சர்க்காவால் அத்தகையச் சோர்வு நிகழாது. குடியர் சர்க்கா சுழற்றி வருவாரானால் நாளடை–வில் அவர் கள்ளை வெறுப்பவராவர்.

கள்ளுக்கு மரம் விடுவோரும், கள்ளிறக்குவோரும், கள் விற்போரும் மதுவிலக்கத்தில் தலைப்பட்டால் நாடு தூய்மையு–றும். மதுவிலக்கு ஏனைய இரண்டு முறைகளைப் போல இன்றிய–மையாதது. அதை விலக்க எல்லோரும் முயலல் வேண்டும். பெரிதும் கள்ளுக்கு மரம் விடுவோர் நாட்டின்மீது கருணை செலுத்தல் வேண்டும். ❑



மதுக்களத்திலே மடியப்போகும் தற்கொலைப் படைகள்

26. தோழர் ஜீவாவும் மது ஒழிப்பும்



புதுவருஷப்பரிசு என்று ஜனசக்தியில் 8.12.1943 அன்று எழுதிய தலையங்கத்தில் மதுவிலக்கை வற்புறுத்தி பொதுவுடமை இயக்கத் தலைவர் ப.ஜீவானந்தம் கூறியுள்ள கருத்துகள் இதோ...

உங்களுக்குப் பாவம், சாப்பாட்டுக்குப் பொருட்கள் கிடைப்பதில்லை. அதற்குப்பதிலாக நல்ல புஷ்டியான போதை கிடைக்கும் கொஞ்சம் உடலில் வலிமை ஏற்படும். உற்சாகமாய் ஆடுவீர்கள், பாடுவீர்கள் என்று பதிலளித்துவிட்டு நவம்பர் மாதம் 16 ஆம் தேதி இந்தப் புனிதமான காரியத்தை 1944 புதுவருஷப்பிறப்பன்று அமுலுக்குக் கொண்டு வருவதாக வெளியிட்டனர். அட்வைஸ் சர்க்கார் இந்தச் சட்டத்தை ரத்து செய்வதன் மூலம் மக்களுக்குத்தான் பெரிய நன்மை செய்து விட்டதாக எண்ணியது என்று நம்புவது பகுத்தறிவுக்கு மாறாகும்.

மக்களின் துன்பங்களையும், துயர்களையும் பயன்படுத்திக் கொண்டு சுயநலத்தைக்கருதி கொள்ளை லாபம் அடிக்கும் கயவர்கள்தான் அதிகாரவர்க்கத்தின் செய்கையை வரவேற்பார்கள். சித்தூரில் 50 கள்ளுக்கடைகள் ஏலத்துக்கு 400 பேர் வந்தனராம்.

ஏழை எளியவர்களையும் பொது ஜனங்களையும் சுரண்டிக் கொள்ளையடிக்கும் கொழுத்த பணக்காரர்கள், உணவைப் பறித்து ஒளித்து வைத்து, அதிக விலைக்கு விற்றுக் கொள்ளை லாபமடித்துக் கொழுத்துக் கொம்மாளங்கொட்டிக் கொண்டிருக்கும் பணமூட்டைகள் இத்துறையிலும் கொழுக்கலாம் என்று முன் வருவார்கள். மதுவிலக்குச் சட்டத்தைப் பொதுஜனப் பிரதிநிதிகள் சட்டசபையில் இருந்த காலத்தில் எல்லா கட்சிகளும் ஒன்று சேர்ந்து நிறைவேற்றின. இன்று இந்த மதுவிலக்கு ரத்து உத்திரவை எதிர்த்து நடக்கும் கிளர்ச்சியிலும் அனைவரும் ஒன்று திரண்டு வருகின்றனர்.

அனைவரும் ஏகோபித்து இதைக் கண்டிக்கின்றனர். இந்த விஷயத்தில் ஏற்படும் மக்களின் ஒற்றுமை அதிகாரவர்க்கத்தைப் பணியவைக்கும் என்பதே நமது நம்பிக்கை.

மதுவிலக்கு ரத்து இன்று நாட்டு மக்களின் நிலைமை -யையே மோசமாக்கிவிடும். வாழ்க்கையைத் தாழ்த்தி மன உறுதி -யையும் குலைக்கும். மதுவிலக்கு ரத்து உத்தரவை வாபஸ் கோர வேண்டும். எங்கெல்லாம் கூட்டங்கள் போடமுடியுமோ, அங்கெல் -லாம் எல்லா ஸ்தாபனங்கள் ஸ்தல அரசியல் கட்சிகளும் இதைக் கண்டித்துக் கூட்டங்கள் போட்டுத் தீர்மானங்கள் நிறைவேற்ற வேண்டும், வீடுவீடாகச் சென்று மகஜர்களில் கையொப்பம் வாங்கி அதிகாரிகளுக்குப் பொதுஜனங்களின் எண்ணத்தைத் தெரியப்படுத்த வேண்டும். 4.15 கோடி சென்னை மாகாணத்து மக்கள், இதர மாகாணத்திலுள்ள கோடிக்கணக்கான மக்கள் இப்பிரச்சினையில் ஒன்றுபடுவது இதில் வெற்றி அளிக்கும்.

மதுவிலக்கு ரத்து ஒழிக;

8.12.1943இல் ப.ஜீவானந்தம் மதுவிலக்கை வலியுறுத்தி எழுதிய தலையங்கத்தின் பகுதிகள் இவை.

1952இல் சென்னை வண்ணாரப்பேட்டையில் சட்ட மன்ற உறுப்பினராகத் தேர்வு செய்யப்பட்டார். ப.ஜீவானந்தம். மதுவிலக்குச் சட்டம் சட்டப் பேரவையில் தாக்கல் செய்யப்பட்டது. எதிர்க்கட்சித் தலைவர் பி.இராமமூர்த்தி திருவெட்டுப் பிரேரணை கொண்டு வந்தார். அதன் மீது ப.ஜீவானந்தம் பேசியதின் சில பகுதிகள் இதோ.

மதுவை நாட்டைவிட்டு ஒழிக்க வேண்டுமென்று மகாத்மாகாந்தி சொன்னார்.

துஞ்சினார் செத்தாரின் வேறல்ல ரெஞ்ஞான்றும்
ஏஞ்சுண்பார் கள்ளுண்பவர்?

என்பதாக கள் சாப்பிடுகிறவர்கள், விஷத்தைச் சாப்பிடுபவர்கள் போல் ஆவார்கள்.

அதாவது எப்படி விஷத்தைச் சாப்பிட்டால் இறந்துபோய் விடுவானோ, அதைப் போலவே கள்ளைக் குடிப்பவர்கள் அழிந்தே போய்விடுவார்கள் என்று உபதேசம் செய்துவந்திருக்கிறது.

இன்றைக்கு நேற்றைக்கல்ல 2000 ஆண்டுகளாகவே மதுவை ஒழிக்கவேண்டுமென பிரசாரம் இந்த நாட்டில் செய்யப் பட்டு வந்திருக்கிறது. இந்த நாட்டில் மட்டுமல்ல நமக்குத் தெரிந்த எல்லா நாடுகளிலேயும் மதுவை ஒழிக்க வேண்டுமென்று பிரசாரம் செய்யப்பட்டு வந்திருக்கிறது என்று 16.07.1952இல் தமிழக சட்டமன்றத்தில் முழங்கியவர் தோழர் ஜீவா.

❑



27. வ.உ.சியும் மது ஒழிப்பும்



கப்பலோட்டிய தமிழன், செக்கிழுத்த செம்மல் என்று போற்றப்படும் தீரர் வ.உ.சிதம்பரனார் அவர்கள் ஆங்கிலேயருக்கு எதிராகப் போராட்டங்கள் நடத்தியதில் சிறைச்சாலையில் இருந்தார். சிறைச்சாலையில் பல ஆங்கில நூல்களை தமிழில் மொழிபெயர்த்தார். ஆலான் என்பவர் எழுதிய அறிவுநூல்களில் ஒன்றினை மனம்போல் வாழ்வு என்று தமிழிலே மொழிபெயர்த்தார்.

1915 ஆம் ஆண்டு சென்னையில் மெய்யறிவு என்ற நூலை வெளியிட்டார். இதில் ஆறாம் அதிகாரம் மறங்களைதல் ஆகும். அந்த அதிகாரத்தின் முதல் பாடல் இதோ...

கொலை, களவு, கள், காமம், பொய்யெள்ளளவு
மிலையுளத்து மென்றக் காலென்று – மலையளவு
நோயும் பனிபோல நொந்தழியு மெய்ப்பொருளை
யாயுமறிவு மிகும்.



கொலையும், களவும், கள்ளும், காமமும், பொய்யும் என்றும் எள் அளவும் உளத்தும் இல்லை என்றக் கால், மலை யளவு நோயும் பனிபோல நொந்து அழியும் மெய்ப் பொருளை ஆளும் அறிவும் மிகும்.

ஆறாம் அதிகாரம் 4 ஆம் பாடல்

கள்ளுண்ணக் காசளித்தல், கள்விற்றல், கள் ஆக்கல்
கள்ளுண்ணுந் தீயாரைக் காதலித்த – உள்ளறிவை
மாய்க்குமதன் றன்மையுள மற்றவற்றை யுட்கொள்ளல்
தாய்க்கு மடுங் கள்ளருந்தல் தான்.

கள்ளை உண்ணுவதற்காக ஒருவனுக்குப் பொருளைக் கொடுத்தலும், கள்ளை வைத்து விற்றலும், கள்ளை இறக்குதலும், (மதுவை) கள்ளை உண்ணுகின்ற பாவிகளை நேசித்தலும், உள்ளத்தின் அறிவைக் கெடுக்கும்.

கள்ளின் குணத்தைக் கொண்டுள்ள கஞ்சா, அபின் முதலிய வற்றை உட்கொள்ளுதலும், பெற்ற தாய்க்கும் வருத்தத்தை விளைவிப்பது கள்குடியே. கள் முதலிய மயக்க வஸ்துக்களை உண்ணுதல் மாத்திரம் கள் குடிப்பாவவென்று கருதற்க.

அவற்றை உண்ணுதற்காக ஒருவனுக்குக் காசு கொடுத்தல் முதலிய அனைத்தும் கட்குடிப்பாவமே என்பார் வ.உ.சி.

– (மெய்யறிவு, 1915, பக்கம் 52 – 56).

28. நாமக்கல் கவிஞரும் மது ஒழிப்பும்



நாமக்கல் கவிஞர் தமிழகத்தின் ஆஸ்தானக் கவிஞராக இருந்தார். புரட்சித்தலைவர் எம்.ஜி.ஆர் நடித்த மலைக்கள்ளன் படத்திற்குத் திரைக்கதை எழுதினார். சுதந்திரப்போராட்டம், மகளிர் நலன், தமிழின விடியல் போன்ற கண்ணோட்டங்களில் கவிதைகள் தொடர்ந்து எழுதினார்.

1953இல் சங்கொலி என்ற கவிதைத் தொகுப்பை வெளி-யிட்டார். இதில் மதுவுக்கு எதிராகக் கவிதைகளை எழுதினார்.

சங்கொலி எழுந்தது சங்கடம் அழிந்தது
தைரியம் கொள்வாய் தமிழ் மகனே!
திருட்டுகள் நீங்கிடும் தீயன நடுங்கிடும்.
தீனர்க்கு அபயக்குரல் சங்கோசை
சூதரும் குடியரும் சுருக்கெனப் பயப்படும்



சுதந்திரச் சங்கொலி கேட்குதடா
மங்களச் சங்கொலி மகிழ்தரக்
கேட்குது.
மயக்கம் விட்டெழுந்தினி
மறைபாடு

என்று சங்கொலித்த நாமக்கல் கவிஞரின் மதுவிலக்கு பற்றிப் பாடல்கள் இதோ:

குடிப்பதைத் தடுப்போம்


குடிப்பதைத் தடுப்பதே கோடி
கோடி புண்ணியம்
அடிப்பினும் பொறுத்து நாம் அன்பு கொண்டு
வெல்லுவோம்.
மக்களை வதைத்திடும், மனைவியை உதைத்திடும்
துக்கமான கள்ளினைத் தொலைப்பதே துரைத்தனம்
பித்தராகி ஏழைகள் பேய் பிடித்த கோலமாய்ப்
புத்தி கெட்டுச் சக்தியுற்றுப் போனது இந்தக் கள்ளினால்
பாடுபட்ட கூலியைப் பறிக்கும் இந்தக் கள்ளினை
வீடுவிட்டு நாடு விட்டு வெளியிலே விரட்டுவோம்.

கஞ்சியின்றி மனைவி மக்கள் காத்திருக்க வீட்டிலே
வஞ்சமாகக் கூலி முற்றும் வழிபறிக்கும் கள்ளினை
மெய் தளர்ந்து மேனிகெட்டுப்போனது இந்தக் கள்ளினால்
கை ஒடுக்கங், கால் ஒடுக்கங் கண்டது இந்தக் கள்ளினால்
தேசமெங்கும் தீமைகள் மலிந்தது இந்தக் கள்ளினால்,
நாசமுற்று நாட்டினர் நலிந்தது இந்தக் கள்ளினால்
குற்றமற்ற பேர்களும் கொலைஞர் ஆவார் கள்ளினால்
கத்திகுத்துச் சண்டைவேறு கள்ளினால் விளைந்தவே
குற்றமென்று யாருமே கூறும் இந்தக் கள்ளினை
விற்க விட்டுத் தீமையை விதைப்பது என்ன விந்தையே!

மோட்டார் ஓட்டிகளுக்கு

போதை ஊட்டுகிற எதையும் – உண்டால்
போகும் வழி அறிவு சிதையும்
காதைக் கண்ணைமிக அடைக்கும் – காரைக்
கவிழ்த்து மண்டைகளை உடைக்கும்

என்று மதுவின் தீமையை மோட்டார் ஓட்டிகளுக்குப் பாடலாகத் தந்தவர் நாமக்கல் கவிஞர். (நாமக்கல் கவிஞர் பாடல்கள், தணிகை உலக நாதன் தொகுப்பு, சென்னை, 1960, பக்கம் 176 –177 – 396)



பாழாகும் தேசீய வருமானம்

29. கோவை அய்யாமுத்துவும் மது ஒழிப்பும்



மறைவு : 31.12.1975 மறைவு : 26.12.1975

கோவை அய்யாமுத்து அவர்கள் 1918 இல் முதல் உலகப் போரின் போது ஐரோப்பியப் படையில் சேர்ந்தார். பஸ்ரா, மெஸபடோமியா போன்ற நாடுகளில் பணியாற்றியிருக்கிறார். 1921 இல் கோவை மாவட்டம், கிணத்துக்கடவைச் சேர்ந்த கோவிந்தம்மாளை மணம் செய்து கொண்டார். 1921 இல் கோவைக்கு வருகை தந்த காந்தியின் உரை கேட்டு மனைவியுடன் காங்கிரஸில் இணைந்தார்.

1931 இல் போலீஸ் குடியிருப்பில் தண்ணீர் எடுக்க ஒரு தலித் போலீஸ் காவலரை மற்ற ஜாதிகளைச் சேர்ந்த போலீசார் அனுமதிக்கவில்லை. இதைக் கேள்விப்பட்ட அய்யாமுத்து தன் மனைவியுடன் அங்கு சென்று அந்தக் கிணற்றுக்கு அவரை அழைத்துச் சென்று தண்ணீர் இறைக்கச் செய்தார். அதிலிருந்து ஹரிஜன இயக்கத்தில் ஆர்வம் கொண்டு பணியாற்றினார்.

இக்காலகட்டத்தில் பெரியார் ஈ.வெ.ராவுடன் நட்பு கொண்டார். 1924 இல் வைக்கம் போராட்டத்தில் கலந்து கொண்டு சிறை சென்றார். பின்னர் சுசீந்திரம் ஆலயப் பிரவேசம் போராட்டத்திலும் தீவிரப் பங்கேற்றார்.

1933 இல் திருப்பூர் கதர் வஸ்திராலயத தலைவரானார். 1936 இல் தமிழ்நாடு சர்க்கார் சங்கத் தலைவரானார். 1940 வரை கதர் இயக்கத்தின் தீவிர வெற்றிக்குக் காரணமாக இருந்தார். கதர் இயக்கத்திற்காக குடிநூல் என்னும் இதழை நடத்தி வந்தார். இந் நூலில் மதுஒழிப்புக் கட்டுரைகளை அதிக அளவில் வெளியிட்டார்.

சுதந்திரப் போராட்ட வீரர் தியாகி அய்யாமுத்து அவர்கள் கள்ளுக்கடைகளை எதிர்த்து போராடினார். **எனது நினைவுகள்** என்று கோவை அய்யாமுத்து அவர்கள் எழுதிய நூலிலிருந்து...

மதுவிலக்கில் மும்முரம் :

புஞ்சைப் புளியம்பட்டியில் ஒரு தொண்டர் முகாம் அமைத்து அவ்வூரில் இருந்த கள்ளுக் கடையை மறியல் செய்யவும் ஏற்பாடு செய்தேன்.

வாராவாரம் புளியம்பட்டிச் சந்தையில் உண்டியல் குலுக்கி -னதில் பதினைந்து ரூபாய் கிடைத்தது. கூகலூர் சுப்பணகவுண்டர் வாரம் பதினைந்து ரூபாய் அனுப்பி வந்தார். தறிக்காரர்களிடமிருந்து தறிக்கு அரையணா, காலணா வீதம் வசூலித்ததில் வாரம் முப்பது ரூபாய் திகைந்தது. இத்தொகையாகவும் தொண்டர்களின் உண்டி, உடை, பிரயாணச் செலவுக்குப் போதுமானதாயிருந்தது.

சில தொண்டர்கள் சிறை செய்யப்பட்ட பின்னரும் மறியல் தளராமல் நடந்தது.

கள்ளுக்கடை ஏலமும் அவ்வாண்டு வந்தது. வழக்கமாக ஏலத்தில் எடுத்து வந்த பொந்த மூப்பனார் அப்பக்கம் தலை வைத்துப் படுக்கவே இல்லை.

புளியம்பட்டியை அடுத்த வெங்கநாயக்கன் பாளையத்திலி -ருந்த ஓதிமலைக்கவுண்டர் என்பவரும் அவருடைய சகாவான ரங்கசாமி முதலியார் என்பவரும், அறுபதைத் தாண்டிய அசகாய சூரர்கள்.

அப்பகுதியில் அவ்விருவருக்கும் அபாரமான செல்வாக்கி-ருந்தது. ஊரிலே ஏதேனும் வம்பு, வழக்கு, சண்டை, சச்சரவு, கொடுக்கல் வாங்கல் தகராறு எதுவானாலும் ஓதிமலைக்கவுண்டர் வாசலில்தான் விசாரணை நடக்கும்.

தப்பித்தவறி எவரேனும் போலீசுக்குப் போய்விட்டாலும் அதன் விசாரணை ஓதிமலைக்கவுண்டரை வைத்துக் கொண்டு தான் முடிவுபெறும்.

தாலூகா போர்டு, ஜில்லா போர்டுகளுக்கு இவ்விருவரும் தான் ஏகபோக வாரிசுகளாய் இருந்தனர்.

இந்த இரண்டு மகான்களும் கள்ளுக்கடை ஏலத்துக்குக் கோபிசெட்டிபாளையம் புறப்பட்டார்கள். அவர்களை நான் சந்தித்-துப் போகவேண்டாமென்று கேட்டுக்கொண்டேன்.

நீ யாராடா! அநாமதேயப்பயல்! அனாவஸ்யமாக இதில் எல்லாம் தலையிட்டாயானால் உன் தலை போய்விடும். பத்திரம் என்று என்னை மிரட்டி விட்டுப் போனார்கள்.

கோபிசெட்டிபாளையத்தில் தாலூகா கச்சேரிக்கு(கோர்ட்) எதிர்ப்புறம் நடுரோட்டில், சத்தியமங்கலம் நாராயண சாஸ்திரியார், அவ்விருவர் காலில் சாஷ்டாங்கமாக விழுந்து, கள்ளுக்கடை ஏலத்தில் எடுக்கப் போகாதீர்கள் என்று வேண்டினார்.

அந்த இரும்பு மனிதர்கள் இருவரும் யார் சொல்லும் கேளாமல் புஞ்சைப் புளியம்பட்டி, நல்லூர் ஆகிய இரண்டு கடைகளையும் ஏலத்தில் எடுத்து அக்கடைகளை எப்போதும் ஏலத்-தில் எடுத்து, நடத்தி வந்த பொந்த மூப்பனாரை, தைரியப்படுத்தி – நாங்களாச்சு, நீ எதற்கும் பயப்பட வேண்டாமென்று சொல்லி, அவரை உள் குத்தகைக்காரனாக அமர்த்திக் கொண்டார்கள்.

புஞ்சைப் புளியம்பட்டியிலிருந்த அதிகாரிகள் அனை-வரும் எனது அத்யந்த நண்பர்களாயிருந்தனர்.

கதர் கடைக்குப் பத்து கெஜத்துக்கு அப்பால் போலீஸ் ஸ்டேசன் இருந்தது. போலீஸ் சப்-இன்ஸ்பெக்டர் தங்கப்பெருமாள் எனது பள்ளித்தோழர்.

கதர்க்கடைக்கு எதிர்ப்புறம் சப்–ரெஜிஸ்தார் ஆபீஸ் இருந்தது. சப்–ரெஜிஸ்தார் சித்தாநாயுடுவும் எனது பள்ளித்தோழர்.

ரெவின்யூ இன்ஸ்பெக்டராயிருந்த துரைசாமி முதலியார் எனது நெருங்கிய நண்பர்.

சத்தியமங்கலம் சப்–மாஜிஸ்திரேட் விருஷபதாஸ், கோபி சப்–கலெக்டர் தோத்தாத்ரி அய்யர், சர்க்கிள் இன்ஸ்பெக்டர் பாஸ்கர ராவ், போலீஸ் டிப்டி சூப்ரிண்டென்ட் கிருஷ்ணய்யர் ஆகிய எல்லோரும் புளியம்பட்டியில் முகாம் செய்த போதெல்லாம் கதர்க் கடைக்கு வந்து போனார்கள். அவ்வளவு நெருங்கிய நட்பு.

புஞ்சைப் புளியம்பட்டி லோகல் டிஸ்பென்சரி டாக்டர் சுப்பாராவ், எட்மாஸ்டர் புவனேஸ்வர அய்யர், போஸ்ட்மாஸ்டர் சுப்பாராவ், அக்கம்பக்கம் கிராமங்களிலிருந்து சந்தைக்கு வந்த பெரிய மனிதர்கள் எல்லோரும் என்னைக் கண்டு சென்றார்கள்.

எனவே வெங்கநாயக்கன்பாளையம் கிழட்டு வீரர்களுக்கு என் தலையைக் கிள்ளுக்கீரையாக எண்ண முடியவில்லை.

கள்ளுக்கடை ஏலம் முடிந்தவுடன் புஞ்சைப் புளியம்பட்டி –யில் வஸ்திராலயத்திற்கு எதிர்ப்புறமிருந்த மைதானத்தில் ஒரு பொதுக்கூட்டத்திற்கு ஏற்பாடு செய்தேன்.

புளியம்பட்டியைச் சுற்றி பத்துமைல் வட்டாரத்தில் இருந்த கிராமப் பெரிய தனக்காரர்களையெல்லாம் நேரில் சென்று பார்த்தேன். அச்சிட்ட அழைப்புகள் அனுப்பினேன்.

வெங்கநாயக்கன்பாளையம் ஓதிமலைக்கவுண்டருடைய நெருங்கிய உறவினர் – அவருடைய பெயர் இப்போது என் ஞாபகத்தில் இல்லை – எனது வலையில் சிக்கினார். ஓதிமலைக் கவுண்டருக்கு அவர் நேர் பங்காளியென்று நினைக்கிறேன். நடுத்தர வயதுள்ள முரட்டு ஆள் என்னுடன் தோளுடன் தோள் சேர்த்துப் பக்கபலமாய்ப் பீமசேனன் போன்று தோன்றினார்.

குறிப்பிட்ட நாளில் பொதுக்கூட்டம் நடைபெற்றது. கோபி வக்கீல் தலைவர் நாகேஸ்வர அய்யர் தலைமை தாங்கினார்.

கூட்டத்திற்கு வந்திருந்த தென்னந்தோப்புடைய பிரமுகர் –கள் ஒருவர் பாக்கியில்லாமல் கற்பூரம் கொளுத்தித் தங்கள்

மரங்களைக் கள்ளுக்கு விடுவதில்லையென்று சத்தியப் பிரமாணம் செய்தார்கள்.

ஒவ்வொரு பிரமுகராக எழுந்து மேடை முன் வந்து, எரியும் கற்பூரத்தைத் தொட்டுக்கும்பிட்டு காந்தியின் மேல் ஆணையிட்டுப் பிரமாணம் செய்து கொடுத்தபோது கூடியிருந்த பொதுமக்கள் கரகோஷம் செய்து, காந்திக்கு ஜே என்று முக்கிய முழக்கம் கண் கொள்ளாக் காட்சியாக இருந்தது.

பிரமாணப்படியே பத்து மைல் வட்டாரத்தில் கள்ளுக்கு மரம் கிடைக்கவில்லை.

ஓதிமலையாரும், ரங்கசாமியாரும் பகீரதப் பிரயத்தனம் செய்தும், உருட்டியும் மிரட்டியும் காரியத்தைச் சாதிக்க முடியவில்லை.

பத்து மைலுக்கு அப்பால் இருந்த நம்பியூரிலிருந்து, மரப் பீப்பாய்களில் கள் நிரப்பி, லாரியில் ஏற்றிக் கொண்டு வந்தார்கள்.

உள்ளூர்க் கடைகளிலும், நல்லூர்க் கடைகளிலும் கள் விற்கப்படாமல் குடங்குடமாய் அன்றாடம் கீழே கொட்டப்பட்டதால் ஊரே கள் நாற்றமெடுக்கத் தொடங்கிவிட்டது.

நான் சிறை சென்ற மறுநாள் கோவை முனிசிபல் சேர்மனாயிருந்த திவான்பகதூர் சி.எஸ்.இரத்தின சபாபதி முதலியார் என்னை வந்து பார்த்தார். ஜெயிலர் கேசி என்ற பெயருள்ள ஆங்கிலோ இந்தியரும் அவருடன் வந்திருந்தார்.

அன்று முதலியார் தலையிலிருந்து கால்வரைக்கும் வெள்ளைத் தூய கதராடையில் எனக்குக் காட்சியளித்தார்.

ஏதேது? என்று நான் சிரித்தேன்!

கோவிலுக்குப் போகையில் மடி கட்டிக் கொண்டு போவது போல், உன்னைப் பார்க்க கதர் கட்டிக் கொண்டு வந்தேன் என்றார்.

கோவையில் மறியல்

கோவைச் சிறையினின்று வெளிவந்ததும் உருப்படியாக ஏதாவது செய்ய வேண்டுமெனக் கருதினேன். கோவை நகர காங்கிரஸ் ஊழியர்கள் அனைவரும் சிறைச் சாலையில் அடைபட்டுக் கிடந்தார்கள். உடுமலைப்பேட்டை ஜி.வேலப்பநாயுடு வெளியில் இருந்தார்.

கள்ளு, சாராயக்கடைகளையும், அந்நிய ஜவுளி விற்பனை செய்யும் கடைகளையும் மறியல் செய்வதென முடிவு செய்தோம்.

நாற்பது ஆண் தொண்டர்களும், இருபது பெண் தொண் -டர்களும் வந்து சேர்ந்தனர்.

ஆண்களுக்குக் கோவை முனிசிபல் ஆபீசுக்கு எதிர்ப்புற -மிருந்த காங்கிரஸ் ஆபீசிலும், பெண்களுக்கு ஒப்பணக்காரத் தெருவில் ஒரு பெரிய வீட்டிலும் சத்தியாகிரக முகாம்கள் ஏற்படுத்தினோம்.

ஆண் தொண்டர்களில் உடுமலையை அடுத்த புக்குளம் என்ற ஊரிலிருந்து இரண்டு கம்பீரமான சகோதரர்கள் வந்து சேர்ந்தனர். ஒருவர் பெயர் ரங்கசாமிக்கவுண்டர். மற்றவர் குருசாமிக் கவுண்டர். ஆறடி உயரம். பார்த்தால் பாரதிதாஸ் காமா பயில்வான் மாதிரி இருந்தார்கள். அவர்கள் மறியல் செய்த கடைகளின் முன்பு அவர்களைப் பார்ப்பதற்கென்றே மக்கள் வந்தார்கள்.


பெண்கள் முகாமில் எனது மனைவியுடன், உடுமலை சாவித்திரி அம்மாள், அவருடைய அக்காள் ஜானகி அம்மாள், மகள் சந்தியாவல்லி, வி.என்.ரங்கநாதன் மனைவி முத்தம்மாள் முதலியோர் இருந்தார்கள். மற்றும் உள்ளூரில் அவரவர்கள் வீட்டில் தங்கிக்கொண்டே பகீரதி அம்மாள், கருவாட்டுக்கடை வெங்கடா -சல நாயக்கரின் மனைவி மக்கள், ராகவாச்சாரியாரின் மனைவி, சுப்ரியின் மனைவி முதலானோர் மறியலில் கலந்து கொண்டனர்.

முகாம் செலவிற்காக ரூபாய் ஐயாயிரத்துக்கும் அதிகமாக வசூலித்து வேலப்பநாயக்கரிடம் கொடுத்தேன். பெரிய கடைத் தெருவிலிருந்த பல சரக்கு மளிகைக் கடைக்காரர்கள் உணவுப் பண்டங்களைக் கணக்கின்றி அள்ளிக் கொடுத்தனர்.

அம்மாபட்டி வெங்கிடுசாமி, ஜல்லிப்பட்டி கோவிந்தசாமி, வி.என்.ரங்கநாதன் போன்ற தொண்டர்கள் ஒவ்வொருவராக சிறையினின்றும் விடுதலையாகி வந்து சேர்ந்தனர்.

❑

30. நாராயணசாமிநாயுடுவும் மது ஒழிப்பும்



"அனைத்தையும் கொடுத்துவிட்டு அனைத்தையும் இழப்ப–வன்தான் விவசாயி இந்த நாட்டு மக்களுக்கு அமுது படைப்பவன் விவசாயி. எல்லாம் உற்பத்தி செய்து கொடுத்துவிட்டு எல்லாவற்–றையும் இழந்து கொண்டிருக்கிறான் விவசாயி. விவசாயிகளை துன்பப்படுத்தும் அதிகாரிகளே! உங்கள் உடம்பில் ஓடுகின்ற ரத்தம் எங்கள் வேர்வையில் விளைந்தது"

– உழவர் பெருந்தலைவர் நாராயணச்சாமி நாயுடு.

இந்தியாவில் கி.பி.1800 க்குப் பின்னர் 1950 வரை 500க்கும் மேற்பட்ட விவசாயப் போராட்டங்கள் நடந்துள்ளன. இந்தப் போராட்டங்கள் எதுவுமே முறையாக பதிவு செய்யப் படவில்லை என "கேத்தலின் கௌ" என்ற வரலாற்று ஆய்வாளர் கூறுகிறார்.

1928 ஆம் ஆண்டு என்.ஜி.ரங்கா அவர்களால் விவசாய சங்கம் ஆந்திராவில் தோற்றுவிக்கப்பட்டது.

1966 இல் தமிழ்நாட்டில் விவசாய சங்கம் துவக்கப்பட்டது. தமிழகத்தில் நடைபெற்ற விவசாயிகள் போராட்டத்தில் 1972 ஜூன் 7, 8 ஆம் தேதிகளில் கோவையில் நடைபெற்ற கட்டை வண்டிப் போராட்டம் உலகப்புகழ் பெற்றது. அமெரிக்க பத்திரிகை -கள் இந்தப் போராட்டத்தை "இந்தியாவின் பார்ட்டன் டாங்குகள்" என வர்ணித்து எழுதின.

விவசாயப் போராட்டங்கள் மட்டுமின்றி மது ஒழிப்பையும் குறிக்கோளாகக் கொண்டு செயல்பட்டார்.

இவர் ஒருநாளைக்கு சுமார் முப்பதுக்கும் மேற்பட்ட பொதுக்கூட்டங்களில் பேசினார். விவசாயிகளை ஒன்று திரட்டு -வதற்காகத் தமிழகம் முழுவதும் சூறாவளிச் சுற்றுப்பயணம் மேற்கொண்டார்.

உழவர் பெருந்தலைவர் நாராயணசாமி அய்யா அவர்கள் 20.12.1984 அன்று கோவில்பட்டிப் பொதுக்கூட்டத்தில் உரை -யாற்றினார். அப்போது பேசும்போது, "இந்த நாட்டிலே சினிமாவை ஒழிக்க வேண்டும். மதுக்கடை கூடாது என்பதை உறுதியாக செய்ய வேண்டும். மதுவை ஒழித்தாக வேண்டும். பரிசுச்சீட்டை ஒழித்தாக வேண்டும். யாரைப் பார்த்தாலும் பரிசுச்சீட்டைப் பைகளிலே வைத்திருக்கிறார்கள். ஒருவேளை விழுந்தால் கடனைக் கட்டலாம் என்று நினைக்கின்றனர் போலும். அது உனக்கு விழுகாது அப்பனே. இந்த அரசாங்கங்கள் மக்களைத் துன்புறுத்துகின்றன. தாய்க்குலம் என்று சொல்லக்கூடிய அந்த கிராமத்து பெண்கள் விடுகின்ற அந்த கண்ணீருக்கு பதில் சொல்லியாக வேண்டும்" என்று உரையாற்றினார்.

"இந்த வறட்சியான காலகட்டத்தில் மதுவானது மக்களை மேலும் வறுமையாக்குகிறது. மக்கள் மதுவிலிருந்து விடுதலை பெறவேண்டும். பெண்களும் மதுவுக்கு எதிராக போராட வேண் -டும்" என ஒவ்வொரு பொதுக்கூட்டங்களிலும் பேசினார்.

❑

31. கிருஷ்ணம்மாள் - ஜெகநாதன் தம்பதியினரும் மது ஒழிப்பும்



மதுவிலக்குப் போராட்டத்தில் கிருஷ்ணம்மாள்

கிருஷ்ணம்மாள் – ஜெகநாதன் தம்பதியினர் சுதந்திரப் போராட்டத்தில் முக்கியபங்கு வகித்தவர்கள். ஆச்சாரிய வினோபா, டாக்டர். ஜே.கார்னேலியஸ் குமரப்பா ஆகியோருடன் மிக நெருக்க–மான தொடர்பு கொண்டிருந்தனர்.

சர்வோதயக் கொள்கையில் விருப்பம் கொண்ட கிருஷ்–ணம்மாளுக்கு சர்வதேச மாநாட்டில் இந்தியாவின் **ஜோன் ஆஃப் ஆர்க்** என்ற பட்டம் கொடுத்தார்கள். இந்திய அரசு இவரது சேவையைப் பாராட்டி **பத்மஸ்ரீ** பட்டம் கொடுத்தார்கள்.

இறால் பண்ணை அமைப்பதை எதிர்த்து நீதிமன்றத்தில் கடுமையாக வாதாடினார். மது ஒழிப்பிற்காக இத்தம்பதியினர் கடுமையாகப் போராடினர். அவர் தன் வாழ்க்கையில் நடந்த சம்பவத்தைப் பின்வருமாறு கூறுகிறார்.

நான் ஜூன் 26-ம் தேதி 1926-ம் ஆண்டு ஒரு ஹரிஜனக் குடும்பத்துல பிறந்தேன். இங்க இருந்து 10 கிலோ மீட்டர் தூரத் -துல இருக்கற அய்யன்கோட்டைங்கற ஊர்லதான் பிறந்தேன். என்னோட அம்மாவுக்கு 12 குழந்தைகள் பிறந்தார்கள். அதில் நாங்க ஆறு பேர்தான் தப்பிப் பிழைத்தோம். என் அம்மா 32 வயசிலயே விதவை ஆகிவிட்டார். அப்பா பயங்கரமான குடிகாரர். தினமும் அம்மாவைப் போட்டு அடிப்பார். அவரது அந்த மாதிரி -யான செயல்கள்தான், சிறுவயதில் என்னைத் திருமணமே செய்து கொள்ளக்கூடாது என்று எண்ண வைத்திருந்தன.

அந்நாட்களில் ஒரு விதவையின் வாழ்க்கை, அதிலும் ஏழை விதவையின் வாழ்க்கை என்பது மிகவும் கடினமானதாக இருந்தது. என் தாய் தினமும் அதிகாலையிலேயே எழுந்து விடு -வார். அக்கம் பக்கத்துப் பெண்களுடன் மூன்று மணிக்கே எழுந்து, பக்கத்தில் இருக்கும் காட்டுக்கு இலைதழைகளைப் பொறுக்கச் சென்றுவிடுவார். அவற்றை ஊரில் இருந்த பண்ணையார் ஒரு -வரது நிலத்திற்கு உரமாகப் போடுவதற்காகப் போய் சேகரித்து வருவார். எழு கிலோமீட்டர் நடந்து காட்டை அடைய வேண்டும். பின், இலைதழைகளை அறுத்து தலையில் கட்டாகக் கட்டிக் கொண்டு வருவார். பண்ணையாரின் வயலில் அவற்றைப் பரப்புவார்.

காலை நேரத்தில் உண்பதற்கு பெரிதாக எதுவுமே கிடைக் -காது. பகல் முழுவதும் பண்ணையில் வேலை பார்த்து விட்டு மாலை வீடு திரும்பினால் வீட்டில் அதைவிட வேலைகள் காத்திருக்கும். கிணற்றில் இருந்து நீர் எடுத்து வருவார். வீடு பெருக்கி, பாத்திரம் தேய்த்து, மாலை உணவுக்கு அடுப்பில் உலையை வைத்துவிட்டு அன்றைய கூலியை வாங்க பண்ணை -யார் வீட்டுக்குப் போவார்.

பண்ரணையாரின் மனைவிதான் கூலி தருவார். அவர் மிகவும் கொடுமைக்காரர். என்னதான் ஒழுங்காக வேலை செய்திருந்தாலும் ஏதாவது குத்தம் குறை சொல்வார். உரிய கூலியைத் தரமாட்டார். நான் அப்போது சிறுமியாக இருந்தேன் என்பதால், நான்தான் ஒவ்வொருவரது பெயரையும் கூவி அழைப்

-பேன். பணியாட்கள் கூலி கிடைக்கிறதே என்ற சந்தோஷத்துட -னும் அதேசமயம் செய்த வேலைக்கு உரிய சம்பளம் கிடைக்க வில்லையே என்ற வருத்தத்துடனும் இருப்பார்கள்.

அந்தப் பணத்தை கொண்டுதான் அன்றைய உணவுக்குத் தேவையானவற்றை வாங்கிச் செல்ல வேண்டும். விதவையாக இல்லாத பெண்களின் நிலை இன்னும் மோசம். அவர்களது குடிகாரக் கணவன் சம்பளத்தைப் பிடுங்கிக்கொண்டு போய் விடுவான். தர மறுத்தால் தெருவிலேயே போட்டு அடிப்பான். இதுதான் அன்றைய பெண்களின் நிலைமை.

அந்தப் பண்ணையாரம்மா, ஒவ்வொரு பெண்ணையும் திட்டும்போது எனக்கு வேதனையாக இருக்கும். எல்லோருக்கும் சம்பளம் கொடுத்த பிறகு, எனக்கும் சின்னதாகக் கூலி கொடுப்பார். அதை வாங்கிக் கொண்டு வீட்டுக்குத் திரும்புவேன். என் அம்மா கடைக்குப் போய் அரிசி வாங்கி வருவார். கல்லும் மண்ணுமாக இருக்கும் அதைச் சுத்தம் செய்ய நேரமாகும். அடுப்புக்கு விறகு தான் பயன்படுத்துவார். மழைக்காலங்களில் விறகுகள் ஈரமாகி எரியவே எரியாது. புகையோடு புகையாக இருந்து ஊதிவிட்டுக் கொண்டே இருப்பார். சமைத்து முடிப்பதற்குள் இரவு வெகு நேரமாகிவிடும்.

என் தம்பி, தங்கைகள் எல்லோரும் பசி.. பசி.. என்று அழுது ஓய்ந்து தூங்கிவிட்டிருப்பார்கள். அம்மா ஒவ்வொருவரையாக எழுப்பி, கெஞ்சிக் கூத்தாடி சாப்பிட வைப்பார். தினமும் இதே கதை தான். சாப்பிட்டு முடித்த பின், நாங்கள் எல்லோரும் தரையிலே பாய் விரித்துப் படுத்து தூங்கிவிடுவோம்.

நள்ளிரவில் தாகம் எடுத்தாலோ அல்லது சிறுநீர் கழிக் -கவோ மெல்ல எழுந்து பார்ப்பேன். தாழ்த்தப்பட்ட அரிக்கேன் விளக்கொளியில், விட்டத்தையே வெறித்துப் பார்த்தபடி அம்மா படுத்திருப்பது தெரியும். நான் எழுந்து அம்மாவின் அருகில் போய் படுத்துக்கொள்வேன். எனக்கு நினைவு தெரிந்த நாளில் இருந்து பத்துப் பதினைந்து வயதுவரை, அம்மா பட்ட கஷ்டங்கள்தான் எனக்குப் பெண்களின் நிலை உயர பாடுபடவேண்டும் என்ற உத்வேகத்தை எனக்குள் எழுப்பின. கடவுளின் அருளால் என்

எழுபதாவது வயது வரையில் அந்தப் போராட்டத்தை ஓரளவுக்கு வெற்றிகரமாக நடத்தி வந்திருக்கிறேன்.

என் தாய் உண்மையிலேயே மிகவும் சிறந்த பெண்மணி -யாக விளங்கினார். ஆண் துணை இல்லாமல் எங்கள் அனைவரை -யும் மிகவும் அருமையாக வளர்த்தார். ஒரே நேரத்தில் பல வேடங் -களை அவரால் திறமையாகப் போட முடிந்தது. ஓர் அன்பான தாயாக, இனிய அண்டை வீட்டுக்காரியாக, திறமையான பாரம் -பரிய மூலிகை மருத்துவராக எனப் பல பரிமாணங்களோடு விளங்கினார்.

அதோடு அவரிடம் விசேஷமாக ஒரு குணம் இருந்தது. தான் ஏழையாக இருந்தாலும் பிறருக்கு கொடுத்துவிட்டுச் சாப்பிடும் நல்ல மனம் அவரிடம் இருந்தது. எங்கள் வீட்டுக்குப் பக்கத்தில் உடல் ஊனமுற்ற, மனநிலை பிறழ்ந்த சிலர் இருந்தார் -கள். அவர்களுக்கு என் அம்மாதான் தினமும் உணவு கொடுப்பார். ஊரில் இருந்த அனைவருமே அவர்களுக்கு உணவு கொடுப்பது உண்டு என்றாலும், அவர்கள் எங்கள் வீட்டுக்கு அருகிலேயே தான் இருப்பார்கள். என் அம்மாதான் அவர்களைக் கவனித்துக் கொள்வார்.

என் அம்மாவிடம் இன்னொரு குணம் இருந்தது. அவர் எந்த ஒரு விஷயத்துக்கும் கலங்கவே மாட்டார். எது நடக்கிறதோ அதை அப்படியே ஏற்றுக்கொள்ளும் வலிமை அவரிடம் இருந்தது. மிகுந்த கடவுள் பக்தி இருந்தது. இவை எல்லாவற்றையும் நான் அவரிடம் இருந்துதான் கற்றுக்கொண்டேன்.

அம்மாவுக்கு ஒரு பெரிய ஆசை இருந்தது. எந்த ஒரு நோய் நொடியும் இல்லாமல் அமைதியான முறையில், தூக்கத்திலேயே உயிர் பிரிந்துவிட வேண்டும் என்று அடிக்கடிச் சொல்லுவார். மரணம் என்பது பற்றிய பயம் ஒருநாள் கூட வராமலேயே இறந்து விட வேண்டும் என்று சொல்வார். கடவுளிடம் தினமும் பிரார்த்திப் -பார். அது அப்படித்தான் நடக்கவும் செய்தது, என் அம்மாவின் மரணத் தறுவாயில் நான் அவருடன்தான் இருந்தேன். தலையை இரண்டுமுறை விலுக்... விலுக்... என்று அசைத்தார். அப்படியே தலை சாய்ந்து விட்டது. எளிய விடை பெறல்.

அவர் தன் வாழ்க்கையில் செய்து வந்த நல்ல விஷயங்கள் தான் அவருக்கு அப்படியான நிறைவான மரணத்தைத் தந்தது என்று நான் நம்புகிறேன். தினமும் அதிகாலையில் எழுந்ததும் சூரியனை வழிபடுவார். பல தெய்வங்களின் பெயரைச் சொல்லி வணங்குவார். பிரார்த்தனை முடிந்து, சிறிது நேரம் மவுனமாக அப்படியே நிற்பார். நானும் அம்மாவுடன் நின்று வணங்குவேன்.

இருள் விலகி, சூரியனின் ஒளியால் உலகம் மெல்ல துலக்கம் பெறும் காட்சி என்பது ஒரு இனிய ஆரம்பமாக அமையும். இந்த பிரார்த்தனை என்னை மிகவும் பாதித்திருந்தது. எனவே, இன்றுவரையான என் வாழ்நாளில் அதிகாலையில் திறந்த வெளியில் அமர்ந்து தியானிப்பது என்பது என் அன்றாடக் கடமைகளில் ஒன்றாக விளங்கி வருகிறது. அன்று செய்ய வேண்டிய பணிகளை மனதுக்குள் திட்டமிட்டுக்கொள்வேன். அந்தத் தருணங்களில் ஒரு தெய்வீகக்கரம் என்னை வழி நடத்துவது போல் உணர்ந்திருக்கிறேன்.

இந்த உலகில் இருக்கும் மரம், செடிகள், பறவைகள், விலங்குகள், மலைகள் என இயற்கையின் அனைத்து அம்சங்களு -டன் ஒன்றாகக்கலந்து நானும் அந்த இயற்கையின் ஒரு அம்சமாக நிறைந்து நிற்பேன். அதன் பின், மெல்ல மெல்ல சுய நினைவுக்குத் திரும்பி அன்றாட வேலைகளில் ஈடுபடுவேன். அது ஒரு வகையான தியானம். ஒருவகையான விடுதலை. ஒவ்வொரு நாளும் அந்த உணர்வு ஒருவித புதிய உணர்வு போல, புதிய உலகில் அடி எடுத்து வைப்பது போலவே இன்றும் எனக்குத் தோன்றுகிறது.

அப்போது மாலைநேரப் பிரார்த்தனைக்கு நேரமாகிவிட்டது என்று ஒரு சிறுமி வந்து நினைவுப்படுத்தினாள். பேட்டியை நிறுத்திவிட்டு பிரார்த்தனைக் கூடத்திற்குப் போனோம். அங்கே 40, 50 சிறுவர்கள் இருந்தார்கள். அவர்கள் அனைவருமே அந்த சிறிய வயதிலேயே குடும்பத்தினரால் கைவிடப்பட்டவர்கள். பெரும்பாலான குழந்தைகளின் தந்தையர் இறந்து விட்டனர். சில குழந்தைகளின் தந்தையர் குடிகாரர்களாக இருந்தனர்.

இந்திய கிராமப்புறங்களில் சாராயம் என்பது மிகவும் மோசமான விளைவுகளை ஏற்படுத்தி வந்தது. மேலை நாடுகளைப் போல் குடிப்பது என்பது இங்கு இருப்பதில்லை. அங்கெல்லாம் அடிப்படைத் தேவைகள் பூர்த்தியாகி இருக்கும். குடிப்பது என்பது விரும்பிச் செய்யும் ஆடம்பரமாகத்தான் இருக்கும். ஆனால், இந்தியாவில் அப்படி அல்ல. அடிப்படைத் தேவைகளே பூர்த்தி -யாகியிராத நிலையில், குடிப்பது என்பது நிலைமையை மேலும் மோசமாக்குவதாகவே அமைந்துவிடுகிறது.

கிராமப்புறங்களில் சாராயம் குடிக்கும் ஆண்கள் அனை -வருமே தங்கள் மனைவி, குழந்தைகளின் வாழ்க்கையையே பணயம் வைத்துத்தான் அதைச் செய்துவருகின்றனர். அம்மாவும் அப்பாவும் அரசின் மலிவு விலைச் சாராய விற்பனையை எதிர்த்து பல போராட்டங்கள் நடத்தி உள்ளார்கள். குடிப்பவர்களாகப் பார்த்துத் திருந்தாத வரை குடியை நிறுத்த முடியாது.



மதுபான எதிர்ப்பு அணையை மீறுகிறது

32. புத்தரும் மதுஒழிப்பும்



தமிழகத்தில் புத்த மதம் கடற்கரை ஓரங்களில் செழித்து இருந்தது. புத்தர் அருளிய அறவுரைகளும், சங்கவிதிகளும் அவரைப் பற்றிய வரலாறுகளும் பௌத்தத் திருமுறைகளில் மூன்று பிரிவான தொகுதிகளாக உள்ளன. அவைகளுக்குத் திரிபிடகங்கள் என்று பெயர்.

புத்தர்களின் புனிதநூலாக கருதப்படும் தம்மபதத்தின் சூத்-திரங்கள் சுருக்கமாயும், பொருள் நிறைந்தும், கவிதைப் பண்-புடனும் உள்ளது. மதுவின் தீமை குறித்து புத்தர் பின்வருமாறு கூறுகிறார்.

தம்மபத மலவக்கோ (மலவர்க்கம்)

ஸுரா மேரயபானங்ச
யோ நரோ அநுயுஜ் ஜதி
இதே வமேஸோ லோகஸ்மிஸ்
மூலங் கணதி அத்தனோ

மயக்கம் உண்டாக்குகிற குடிவகைகளைக் குடிக்கிறவரும் இவ்வுலகத்திலேயே தமது வேரைத் தாமே தோண்டிக் கொள் -கிறார்கள்.

(Bhikkhu Somananda மொழிபயர்ப்பு சென்னை, 1950, பக்கம் 136.)

Surameraуapanan ca
yo naro anuyunjati
idh evameso lokasmim
mulam khanati attano.

And a man who is addicted to intoxicating drinks digs up his own roots in this very world.

(U.Dhamma joti, The Dhammapada, page 154-155)

Anthony Elenjimittam

"He who destroys life, who speaks what is not true, who misappropriates what is not given to him, who consorts with another man's life, who is addided to intoxicating drinks, such a one digs his own grave even in this very life"

என்று அந்தோணி எலின்ஜிமிட்டப் ஆங்கிலத்தில் விளக்கம் தருகிறார்.

உயிர்க்கொலை செய்வோனும் பொய் பேசுவோனும், பிறர் பொருள்களைப் பறிப்போனும், பிறர்மனை எண்ணுவோனும், வெறி – கொடுக்கும் மது வகைகளைப் பருகுவோனும் இவ்வுல -கிலேயே தம் வேர்களைத் தாமே பறிக்கின்றனர்.

தமது போதனையில், வெறுப்படைதல், தீயோரை விரும்பு -தலும், நன்னடத்தையை வெறுப்பதும்; தூக்கம், வீணர் கூட்டு, வேம்பல், பயனற்றிருத்தல், தன் வயது முதிர்ந்த தாய் தந்தையரைப் பேணாதிருத்தல், துறவோரை ஏமாற்றுதல், பொய்மைக்கு ஆட்படுதல், திரண்டசெல்வம் பெற்றிருந்தும் தான் மட்டும் பயன் துய்த்தல்; பிறப்பு செல்வம், குலம் ஆகியவற்றைக் கொண்டு பெருமைப்பட்டுப் பிறரைத் தூற்றுதல், சினமுடையவனாய், குடிகாரனாய், சூதாடியாய், செல்வத்தை வீணாக்குபவராய் இருத்தல், தன் மனைவியோடு திருப்தியுறாமல் பிறன்மனை விழைதல், வயது முதிர்ந்த பின் இளம் பெண்ணை மணத்தல், எப்போதும் பொறாமையில் தகித்தல், ஊதாரியாயும், குடிகாரராயும் உள்ள ஆணையோ, பெண்ணையோ வேலைக்கு அமர்த்தல், மிகப்பேரிய ஆசை, மேற்கண்ட குணங்களில் எது இருப்பினும் அது ஒருவருக்கு வீழ்ச்சியை உண்டாக்கிவிடும். ❑

33. இஸ்லாம் மார்க்கத்தில் மது ஒழிப்பு

மது அருந்தாதீர்கள், தீமைகளுக்கெல்லாம் ஆணிவேர் போன்றது அது — *நபிகள் நாயகம்.*

"திராட்சை மதுவின் ஒவ்வொரு துளியிலும்
பிசாசு குடி இருக்கின்றது" — *குர்ஆன்.*

நபிகள் நாயகம் அவர்கள் மது விசயத்தில்,

1. மதுவைப் பிழிபவன்
2. மதுவைத் தயாரிப்பவன்
3. மதுவைக் குடிப்பவன்
4. மதுவைக் குடிக்கக் கொடுப்பவன்
5. மதுவை எடுத்துச் செல்பவன்
6. மது யாருக்கு எடுத்துச் செல்லப்படுகிறதோ அவன்
7. மதுவை விற்பவன்
8. மதுவை வாங்குபவன்
9. மதுவை அன்பளிப்பு செய்பவன்
10. மதுவின் மூலம் வருவாயை சாப்பிடுபவன்

ஆகிய பத்து நபர்களையும் சபித்தார். — *நூல் : திர்மிதீ*

மதுவை விட்டுவிடுங்கள். நிச்சயமாக அனைத்துத் தீங்குகளுக்கும் திறவுகோல் ஆகும் என்று நபிகள் நாயகம் கூறினார். — *நூல் : ஹாகிம்*

இஸ்லாம் மார்க்கத்தில் மது :

இஸ்லாம் மார்க்கத்தில் மதுவைப் பற்றி பல்வேறு செய்திகள் குறிப்பிடப்பட்டுள்ளது. போதையூட்டும் பொருளுக்கு கமர் (Khamar) என்று பெயர். இது கமாரா (Khamara) என்ற வேர்ச்

சொல்லிலிருந்து உருவானது. "மனதை, அறிவை திரையிட்டு மறைக்கும் செயல்" என்பதே இதன் பொருள்.

திருக்குரானின் மூன்று வசனங்கள் மதுபானம் அருந்துதல் பற்றிக் குறிப்பிடுகின்றன.

அத்தியாயம் 1, அல்பகறா 2, வசனம் 219 :

மது, சூதாட்டம் பற்றி உம்மிடம் கேட்கிறார்கள். அவை இரண்டிலும் பெருங்கேடு இருக்கிறது. அவற்றின் பயன்கள் சிறிது. பாவம் அதிகம்.

அத்தியாயம் 2, அந்நிஸா 4, வசனம் 43 :

நீங்கள் போதையோடு இருக்கும் நிலையில் தொழுகையை நெருங்காதீர்கள். நீங்கள் என்ன கூறுகின்றீர்கள் என்பதை அறிகின்றபோதுதான் தொழ வேண்டும்.

அத்தியாயம் 3, அல்மாயிதா 5, வசனம் 90, 91 :

மது, சூதாட்டம், பலி பீடங்கள், குறிபார்க்கும் அம்புகள் ஆகியவை அருவருக்கத்தக்க சைத்தானின் செயல்கள் ஆகும். அவற்றைத் தவிர்த்துக் கொள்ளுங்கள்.

திருக்குர்ஆனுக்கு அடுத்த நிலையில், நபி முகமதுவின் சொல், செயல், அனுமதியை, வாய்மொழி வரலாறுகளின் வழியாக பதிவு செய்து "ஹதீஸ்கள்" என்ற பெயரில் பேணப்பட்டு வருகிறது. இவ்வாறு பேணப்படும் ஹதீஸ்கள் புகாரி, முஸ்லீம், அபுதாவூது திருநிதி, இப்னுமாஜா, நசாஈ போன்ற அறிஞர்களின் பெயரா -லேயே அழைக்கப்படுகிறது. இமாம் அல்புகாரியின் காலம் கி.பி.810 முதல் கி.பி.870 ஆகும். புகாரி ஹதீஸில் 7275 வாய்மொழி வரலாறுகள் இஸ்நாத் முறையில் தொகுக்கப்பட்டு உறுதி செய்யப்பட்டுள்ளன.

இஸ்லாத்தில்ஒரு பிரிவான ஷியா முஸ்லீம்கள் இமாம் அலியை மையப்படுத்தி அவர் வழியைப் பின்பற்றுகின்றனர். இதற்கான காலகட்டம் முகமது நபிகள் மறைவுக்குப்பின் 300 ஆண்டுகளுக்கு பிறகானதாகும்.

மதுவுக்கு எதிராக புகாரி ஹதிஸில் அதிகப்படியான வார்த்தைகள் பதிவாகி உள்ளது. பொதுவாக "அறிவைத் தடுமாறச் செய்கிற எல்லா பானங்களுமே மது" என்று கருதப்படுகிறது.

மது ஊற வைப்பதற்கென்று சுரைக்காய் குடுக்கை, தார்பூசிய பாத்திரம், மண்சாடி, மரச்சாடி போன்ற பொருட்கள் பயன்படுத்தப் பட்டன. மதுவின் வாடை வீசும் என்பதற்காக இப்பாத்திரங்களைக் கூட பயன்படுத்தத் தடை விதிக்கப்பட்டிருந்தது. ஹதீஸ்களைப் பொறுத்தவரை போதை தரும் மதுபானங்கள் விலக்கப் -பட்டுள்ளது.

கலீபாக்களின் காலத்தில் மது அருந்துவது சட்டப்படியான தண்டனைக்கு உரியதாக மாற்றப்பட்டிருந்தது.

மது தடை செய்யப்பட்டது என்று தெரிந்தவுடன் "அபுதல்ஹா" வீட்டில் அங்கிருந்த மக்களுக்கு மதுவை ஊற்றிக் கொடுத்துக் கொண்டிருந்த என்னிடம் அதைக் கவிழ்த்துக் கொட்டிவிடு என்று சொன்னார்கள். நானும் அவ்வாறே செய்தேன். மக்களும் மதுவைக் கொட்ட அது மதினாவின் தெருக்களில் ஆறாக ஓடியது.

மது தடை செய்யப்பட்டுள்ள நாடுகள் :

அரபு நாடுகளில் மதுபானத்திற்கு எதிராக உள்ளனர். சவுதி அரேபியாவில் மதுபான உற்பத்தி செய்தல், இறக்குமதி செய்தல், குடித்தல் ஆகிய மூன்றும் கடுமையான தண்டனைக்கு உட் பட்டது. இந்தத் தடையை மீறும் பட்சத்தில் சிறைத் தண்டனை -யும், சவுக்கடியும் வழங்கப்படுகிறது.

கத்தாரில் பொது இடங்களில் மதுபானங்கள் அருந்துவது தண்டனைக்குரியதாக உள்ளது.

அரபு ஐக்கிய குடியரசிலும் மது தடை செய்யப்பட்டுள்ளது.

1979 இல் நடைபெற்ற ஈரானிய புரட்சிக்குப் பிறகு மதுபான உற்பத்தி முற்றிலும் தடை செய்யப்பட்டுள்ளது.

தலிபான்கள் ஆட்சிக்குட்பட்ட பகுதியில் மதுபானம் அருந்துவது தடை செய்யப்பட்டுள்ளது.

லிபியா, சூடான் நாடுகளில் மதுபானம் அருந்தினால் கடும் தண்டனை வழங்கப்படுகிறது.

நபிகள் நாயகம் அவர்கள் நான்கு விசயங்களை தடை செய்தார் :

அவை,

1. மது வைத்திருந்த மண்சாடிகள்

2. சுரைக்குடுக்கைகள்

3. பேரீச்சை மரத்தின் அடிமரத்தை குடைந்து தயாரித்த மர பீப்பாய்கள்

4. தார் பூசப்பட்ட பாத்திரங்கள்

இவற்றைப் பயன்படுத்தக் கூடாது என்று அபூ ஜம்ரா அறிவித்தார். (Volume 1 : Book 2)

“கல்வி மக்களிடமிருந்து மறைந்து விடுவதும், அறியாமை நிலைத்து விடுவதும் மது அருந்தப்படுவதும், வெளிப்படையாய் விபச்சாரம் நடப்பதும், மறுமை நாளின் அடையாளங்களில் செலவாகும் என்று இறைத்தூதர் (ஸல்) அவர்கள் கூறினார்கள் “ என அனஸ் (ரலி) அறிவித்தார்.

பகரா அத்தியாயத்தில் வட்டி (விலக்கப்பட்டது என்பது) பற்றிய வசனங்கள் இறங்கியபோது நபி (ஸல்) அவர்கள் பள்ளிவாசலுக்குச் சென்று மக்களுக்கு அவ்வசனங்களை ஓதிக் காட்டினார்கள். மதுபானங்கள் விற்பதும் விலக்கப்பட்டது என அறிவித்தார்கள். (Volume 1 : Book 8)

நான்கு காரியங்களை விட்டு உங்களை நான் தடுக்கிறேன். அவையாவன, (மதுபானங்கள் வைத்திருந்த) சுரைக்குடுக்கை, வாய் குறுகலான சுட்ட மண் குடுவை, தார் பூசப்பட்ட பாத்திரம், பேரீச்சமரத்தின் அடிப்பகுதியைக் குடைந்து செய்யப்பட்ட பாத்திரம் ஆகியவற்றை (பயன்படுத்துவதை) விட்டும் உங் –களைத் தடுக்கிறேன் என்று கூறினார்கள்.

(குறிப்பு : போதைப் பொருள்களுக்காகப் பயன்படுத்தப்பட்ட இப்பாத்திரங்களைப் பயன்படுத்தலாகாது என்ற தடை, பின்னர் நபி (ஸல்) அவர்களால் விலக்கிக் கொள்ளப்பட்டது என்பதைக் கவனத்தில் கொள்க) (Volume 1 : Book 9)

"நிச்சயமாக! ஷைத்தான் விரும்புவதெல்லாம் மதுபானத்தைக் கொண்டும் சூதாட்டத்தைக் கொண்டும் உங்களிடையே பகைமையையும் வெறுப்பையும் உண்டு பண்ணி அல்லாஹ்வின் நினைவிலிருந்தும் தொழுகையிலிருந்தும் உங்களைத் தடுத்து விடத்தான். எனவே அவற்றை விட்டும் விலகிக் கொள்ள மாட்டீர்களா?"

– (அல்குர்ஆன் 5:91)

இந்த மது சாதாரண மனிதனை மட்டுமல்ல; இறை வழிபாட்டில் திளைத்திருப்பவர்களைக்கூட பதம் பார்த்து விடும் வல்லமை கெஅ

அறியாமைக் காலத்திலிருந்து வாழையடி வாழையாக மது அருந்தி வந்தவர்கள் கூட அல்லாஹ் மதுவைத் தடைசெய்து விட்டான் என்ற செய்தி சொல்லப்பட்டவுடன் பீப்பாய் பீப்பாயாக தெருக்களில் ஊற்றிவிட்டு மதுவை மறந்து மாமனிதர்கள் ஆனார்கள். (ஹிஜ்ரி எட்டாம் ஆண்டு மது தடை செய்யப்பட்டது.)

– (நூல் : புகாரி)

மது அருந்துபவனுக்குத் தண்டனை என்ன?

நபி அவர்கள் காலத்தில் அவர்களிடம் குடிகாரர் கொண்டு வரப்பட்டால் குற்றம் நிரூபிக்கப்பட்டவுடன் அவரை அடிக்குமாறு தோழர்களுக்குக் கட்டளையிடுவார்கள். சிலர் கையாலும், சிலர் துணியாலும், சிலர் காலணியாலும், சிலர் பேரீச்சை மட்டையாலும் தண்டனையை நிறைவேற்றுவர்.

ஹழ்ரத் அபூபக்கர் (ரலி) அவர்கள் ஆட்சிக்காலத்தில் குடிகார –ருக்கு 40 சாட்டையடிகள் வழங்கப்பட்டன. ஹழ்ரத் உமர் (ரலி) அவர்களின் ஆட்சிக்காலத்தில் துவக்கத்தில் 40 சாட்டையடிகளும் பின்னர் குடிப்பழக்கம் மக்களிடம் அதிகமாகவே 80 சாட்டை –யடிகளும் வழங்கப்பட்டன.

– *மனாருல்ஹுதா* (Vol 4 - issue 8)

இஸ்லாமிய ஆரம்பகாலத்தில் முஸ்லீம்கள் மது அருந்திக் கொண்டிருந்தனர். அப்போது அதுபற்றி எத்தகைய சட்டமும் இல்லாதிருந்ததால், அது அனுமதிக்கபட்டதாகவே கருதப்பட்டு வந்தது. முஸ்லீம்கள் திருமதீனா வந்த பின்னர் ஹஜ்ரத் உமர் ரளியல்லாஹு அன்ஹு அவர்களும் சில அன்சாரித்தோழர்களும் நாயகம் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்களிடம் கூறினார்கள். "அல்லாஹ்வின் தூதரே! மதுவையும், சூதாட்டத்தை -யும் பற்றி எங்களுக்கு ஒரு தீர்ப்பு வழங்குவீர்களாக. அவை அறிவைக் கெடுக்கின்றன. பொருளை நாசம் செய்கின்றன என்று கூறினார்கள்." அப்போதுதான் அல்லாஹுத்தா ஆலா குர்ஆனில் இந்த வசனத்தை இறக்கி வைத்தார்.

"மதுவையும் சூதாட்டத்தையும் பற்றி (நபியே) உம்மிடம் அவர்கள் கேட்கிறார்கள். அவ்விரண்டிலும் பெரிய பாவமும் மனிதர்களுக்கு சில பிரயோஜனங்களும் இருக்கின்றன. ஆயினும் இவ்விரண்டின் மூலம் ஏற்படும் பாவம் அவற்றின் பிரயோஜனத் -தைவிட மிகப்பெரியதாகும் என்று நீர் பதில் கூறும்"

– *(அல்குர்ஆன்).*

மேற்கண்ட இவ்வசனத்தின் மூலம் விடையும் கிடைத்தது. எனினும் கண்டிப்பாக மது அருந்தக்கூடாது என்று இவ்வசனத்தின் மூலம் ஆரம்பத்தில் தடை விதிக்கப்படவில்லை. அவ்விரண் -டிலும் பெரிய பாவமும் மனிதர்களுக்கு சில பிரயோஜனங்களும் இருக்கின்றன என்று மட்டும் கூறப்பட்டதால் பாவம் என்று கருதிய சிலர் அதைவிட்டனர். அதில் சில பலன்கள் உண்டு என கருதியோர் அதை அருந்தினர். ஆனால் அனைத்து பாவங்களுக் -கும் தலையாயதாக, பாவங்கள் செய்யத் தூண்டுகோலாக, தலை -வாசலாக இந்த மதுப்பழக்கம் இருப்பதினை உணர்ந்த அரபியர் -கள் குடிப்பழக்கத்திலிருந்து முழுவதுமாக விடுபட இறைவன் விரைவிலேயே நல்வழி காட்டினான்.

அரேபியாவும் ஆல்கஹாலும் :

மதுவருந்துதல் அரேபியர்களின் அன்றாடப் பழக்கமாக இருந்தது. அதனால் பலன்கள் அதிகமுண்டு எனக்கருதி அதனை விடாது அவர்கள் அருந்தி வந்தனர். முதல் தடவையிலேயே மது அருந்தக்கூடாது எனக் கடுமையான தடை விதிக்கப்பட்டால் அதனை அமுல் நடத்துவது அவர்களுக்குச் சிரமமாகிவிடும். அதனால்தான் சிறுகச்சிறுக பலவிதமாக அதன் கெடுதிகளை உணர்த்திக்கொண்டே வரப்பட்டது. இறுதியில் மது தீங்கு விளை -விப்பதே என அவர்கள் உணர்ந்ததும் பூரணமாக தடை விதிக்கப் -பட்டது. அச்சமயம் அதை அமுல்படுத்துவதற்கும் அவர்களுக்கு எளிதாகி விட்டது. கண்டிப்பாக மது அருந்தக்கூடாது என்ற சட்டம் வந்தது ஏன்? என்பதை பின்வரும் ஹதீஸ் விளக்குகிறது.

ஹஜ்ரத் அப்துல் ரஹ்மான் பின் அவ்ஃப் ரளியல்லாஹு அன்ஹு அவர்கள் ஒரு விருந்துக்கு ஏற்பாடு செய்து அதற்கு நாயகம் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்களின் தோழர்கள் சிலரை அழைத்திருந்தார்கள். விருந்தினருக்கு உணவு பரிமாறப்பட்டது. அதில் பண்டைய வழக்கப்படி மதுவும் வைக்கப் பட்டிருந்ததால் விருந்தினர் அதையும் அருந்தினர். மஃரிப் தொழுகைக்கான நேரம் வந்துவிட்டதால் யாவரும் எழுந்தனர். அவர்களில் ஒருவர் இமாமாக முன் நின்று தொழ வைக்கச் சென்றார். போதை தலைக்கேறியிருந்த சமயம். அதனால் காஃபிரூன் என்ற அத்தியாயத்தை ஓதிய அவர் காஃபிர்களே! நீங்கள் வணங்கிக் கொண்டிருப்பதை நான் வணங்க மாட்டேன் என்று இருக்கும் வசனத்தில் வணங்கமாட்டேன் என்பதை வணங்குவேன் என்று மாற்றி ஓதிவிட்டார். இதனை உத்தேசித்து உண்மை விசுவாசிகளே! நீங்கள் போதையாக இருக்கும் நிலையில் தொழுகையின்பால் நெருங்காதீர்கள் (அல்குர்ஆன் 4:43) என்னும் வசனம் அடுத்து இறக்கப்பட்டது.

போதையாக இருக்கும்போது தொழக்கூடாது என்றுதான் தடை விதிக்கப்பட்டது. இதனால் மது அருந்துவோர் இரவின் பிற்பகுதி தொழுகையான இஷாவை முடித்துக்கொண்டு மது அருந்திவிட்டு தூங்கிவிடுவர். காலை எழுந்திருக்கும்போது போதை தெளிந்திருக்கும். பஜ்ர் தொழுகையை நிறைவேற்றி விட்டு பிறகு மது அருந்துவார்கள். மதியம் லுஹர் தொழுகையின் போது அது தெளிந்துவிடும். இந்நிலை சில நாட்கள் நீடித்தது. ஆனால் மது அருந்துவது அறவே தவிர்க்கப்படவில்லை.

பின்பு உதுமான் பின் மாலிக் என்பவர் ஒரு விருந்து வைத்து முஸ்லீம்கள் சிலரை அதற்கு அழைத்தார். அழைக்கப்பட்டவர் -களில் ஸஃது பின் அபீவக்காஸ் ரளியவ்லாஹூ அன்ஹூ அவர்களும் ஒருவர். அவ்விருந்தில் ஒட்டகத்தின் தலை பொரித்து வைக்கப்பட்டிருந்தது. அதனை அனைவரும் ரசித்துப் புசித்து விட்டு அதற்குமேல் வேண்டிய மட்டும் மதுவை அருந்தினர். மிதமிஞ்சிய போதையால் ஆடலும் பாடலும், குடும்ப பெருமை பற்றிய புகழ்பாக்களும் கிளம்பிவிட்டன. ஸஃதுபின் அபீவக்காஸ் ரளியல்லாஹூ அன்ஹூ அவர்களும் ஒரு கவிதை புனைந்து அதில் தன் மரபினரை பெருமைப்படுத்தியும் மதினா வாசிகளான அன்சாரிகளை இகழ்ந்தும் பாடினார்.

இது அன்சாரிகளில் ஒருவருக்கு ஆத்திரத்தை மூட்டியது. ஒட்டகத்தின் எலும்பொன்றை எடுத்து ஸஃது அவர்களின் தலையில் ஓங்கி அடித்து காயப்படுத்திவிட்டார். ஸஃது அவர்கள் நாயகம் ஸல்லல்லாஹூ அலைஹி வஸல்லம் அவர்களிடம் சென்று முறையிட்டார்கள். அப்பொழுது அங்கிருந்த ஹஜ்ரத் உமர் ரளியல்லாஹூ அன்ஹூ அவர்கள் இறைவா! மது விஷயத்தில் தெளிவான கட்டளையை தெரிவிப்பாயாக என்று வேண்டிக் கொண்டார்கள். இதன் பின்னர்தான் அறவே மது அருந்தக்கூடாது

என்ற கட்டளை பிறந்தது. இதனை தாங்கிய வசனம் அல்மாயிதா என்ற அத்தியாயத்தில் வருகிறது.

– (ஆதாரம் : புகாரி, முஸ்லீம்).

இஸ்லாம் ஒரு பொருளை தடைசெய்கிறது என்றால் அது மனிதர்களுக்கு மறுஉலகில் மட்டுமல்லாது இவ்வுலகிலும் தீங்கு விளைவிக்க கூடியதாகவே இருக்கின்றது.

போதை தரும் அனைத்தும் மதுவாகும். போதைதரும் அனைத்தும் விலக்கப்பட்டதாகும் என நபி(ஸல்) அவர்கள் கூறினார்.

– அறிவிப்பவர் – இப்னுஉமர் (ரலி). நூல் : முஸ்லீம்

போதை தரும் பொருளை அருந்துபவர்களுக்கு தீனத்தூல் கப்பால் என்னும் பானத்தை புகட்டுவதாக அல்லாஹ் முடிவு செய்துள்ளான் என்று நபி(ஸல்) அவர்கள் கூறினார்கள். அப்போது நபி தோழர் தீனத்துல் கப்பால் என்றால் என்னவென்று கேட்டனர். அதற்கு அவர் அது நரகவாசிகளின் வேர்வை அல்லது நரகவாசிகளிடம் பிழிந்தெடுக்கப்பட்ட பானம் என பதிலளித்தார்.

– அறிவிப்பவர் – ஜாபிர்(ரலி) நூல் : முஸ்லீம்.

மது அருந்திய ஒருவரை நபி(ஸல்) அவர்களிடம் கொண்டு வரப்பட்ட போது அவரை அடியுங்கள் என கூற நாங்கள் கையாலும், செருப்பாலும், துணித்திரியாலும் அடித்தோம்.

மது அருந்தியவர்களுக்கு பேரிச்சைபட்டை, செருப்பு ஆகியவைகளால் அடிகொடுக்கச்செய்தனர். இவ்விரண்டாலும் 40 அடிகள் கொடுக்கப்பட்டன.

– அறிவிப்பவர் – கத்தாதா :

உலகில் பயிரிடப்படும் ஒட்டு மொத்த திராட்சை பழங் –களில் முக்கால் பங்கிற்கு மேல் மது தயாரிப்பிற்கு பயன் படுத்தப்படுகிறது.

பேரீச்சம் பழத்தையோ, திராட்சை பழத்தையோ தண்ணீ -ரில் ஊறவைத்து சுவை ஏற்றுவது அரபியர் வழக்கம். அவற்றை அவர்கள் போதைதரும் அளவிற்கு நீண்ட நாட்கள் ஊற வைப்பதும், போதை தராத விதத்தில் ஓரிரு நாட்கள் மட்டும் ஊறவைப்பது உண்டு. பொதுவாக போதை ஏற்படுத்தினாலும், போதை ஏற்ப்படுத்தாவிட்டாலும் அதனை நபீத் என்று அழைப்பர்.

மது தடைசெய்வதற்கு முன்பு பயன்படுத்திய பாத்திரங் -களில் நபீத் எனும் இனிப்பு பானங்களை, பழச்சாற்றை ஊற்றி வைப்பர். அப்பாத்திரங்களைச் சுத்தமாகக் கழுவினாலும் ஈஸ்ட் மீண்டும் நொதித்தல் வேலையை துவங்கி விடும். பாத்திரங்களை எத்தனை முறை கழுவினாலும் அதிலுள்ள நுண்ணுயிர்களை நீக்கமுடியாது. சஹாபாக்கள் அறியாத நிலையில் மது உருவாகும். ஆகவே நபிகள்நாயகம்(ஸல்) அவர்கள் மதுவுக்காக பயன் -படுத்திய பாத்திரங்களைக்கூட உபயோகிக்க வேண்டாம் என்று கூறினார்.

ஒருமுறை சுரைக்காயில் ஊறிய நபீத் பானத்தை நபி(ஸல்) அவர்களிடம் கொடுத்தேன். அது நொதித்து இருந்ததை அறிந்த அல்லாஹ்வின் தூதர்(ஸல்) அவர்கள் அதை சுவரில் அடித்து அழிக்கச் சொன்னார்கள். அல்லாஹ்வையும், மறுமை நாளையும் நம்பாதவன் அருந்தும் பானம் என்றார்கள்.

– அறிவிப்பவர் : அபூஹீரைரா (ரலி)
நூல் : அபூதாவூத் 3716.

இனிப்பு + ஈஸ்ட் ஒன்று சேரத் தடை :

நான்கு கனிந்த பேரீச்சம் பழத்தையும், நன்கு கனியாத நிறம் மாறிய செங்காய்களையும் ஒன்று சேர்த்து ஊற வைப்பதை -யும், பேரீச்சம் பழத்துடன் உலர்ந்த திராட்சையையும் ஒன்று சேர்த்து ஊற வைப்பதையும் நபி(ஸல்) அவர்கள் தடை செய்தார் -கள். தனித்தனியாக ஊற வைக்க அனுமதித்தார்கள்.

–அறிவிப்பவர் : அபூகத்தாதா (ரலி) நூல்: புகாரி 5602.

நபீத் (சர்பத்) பானத்தை அருந்துங்கள். அவை திராட்சை அல்லது பேரீச்சம் பழத்தில் மட்டும் அல்லது பழுக்காத பேரீச்சங் -காயின் மூலம் மட்டும் ஆனால் ஒன்றோடு ஒன்று கலந்து விடுவதை நபி(ஸல்) அவர்கள் தடை செய்தார்கள்.

– அறிவிப்பவர் : அபூசயீத் அல்குத்ரீ (ரலி)
நூல் : முஸ்லிம்.

திராட்சை மதுவுக்கு பெரும் கண்ணியம் கொடுத்தார்கள். ஆம்! திராட்சையை அல்கர்ம் கண்ணியமானது என்றே அழைத்த -னர். இப்படி அழைப்பதற்கு நபி(ஸல்) அவர்கள் தடை விதித்தார்கள்.

உங்களில் ஒருவர் திராட்சையை அல் கர்ம் (கண்ணிய -மானது) என்று கூறாதீர்கள். உண்மையில் கண்ணியம் (எனும் பெயருக்கு தகுதியானவர்) முஸ்லீமான மனிதரே ஆவர். என்று நபி(ஸல்) அவர்கள் கூறினர்.

– அறிவிப்பவர் : வாயில் இப்னுஹீஜர் (ரலி)
நூல் : முஸ்லிம் 4527, 2578.

திராட்சையை அல் கர்ம் (கண்ணியமானது) என கூறாதீர் -கள். மாறாக அல் இனப் என்றோ அல்ஹப்லா என்றோ கூறுங்கள் என்று நபி(ஸல்) அவர்கள் கூறினார்.

– அறிவிப்பவர் : வாயில் இப்ன் ஹீஜர் (ரலி)
நூல் : முஸ்லிம் 4530.

மது அருந்தாத சமுதாயத்தை உருவாக்குவதற்கு நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் கடுமையான சட்டங்களை படிப்படியாக கொண்டு வந்து நடைமுறைப்படுத்தினார்.

போதை தரக்கூடிய அனைத்தும் மதுவாகும். போதை தரக்கூடிய அனைத்தும் ஹராமாகும்.

– அறிவிப்பவர். இப்னு உமர் (ரலி), நூல் : முஸ்லீம்.

புத்தியை பேதலிக்கச் செய்து, போதையை ஏற்படுத்தக் கூடிய அனைத்தும் – அது குறைவாக இருந்தாலும் அதிகமாக இருந்தாலும் – ஹராமாகும். நபி(ஸல்) அவர்கள் கூறினார்கள். போதை தரக்கூடியது அதிகமாக இருந்தாலும், குறைவாக இருந்தாலும் ஹராமாகும்.

– அறிவிப்பவர் : ஜாபிர் (ரலி), நூல் : அபூதாவூத்

மதுவுக்கு எத்தனை பெயர்கள் இருந்தாலும் எத்தனை வகைகள் இருந்தாலும் எல்லாம் ஒன்றுதான். எல்லாம் மதுதான். எல்லாவற்றுக்கும் (ஹராம் எனும்) ஒரே சட்டம் தான்.

இறுதியாக மது அருந்துபவர்களுக்கு இதோ நபி(ஸல்) அவர்கள் செய்த ஓர் அறிவுரை.

'எவன் மது அருந்தி அதனால் அவனுக்குப் போதை ஏற்பட்டால் அவனுடைய நாற்பது நாட்களின் காலைத் தொழுகை ஏற்றுக் கொள்ளப்படமாட்டாது. அவ்வாறே அவன் மரணமடைந்து விட்டால் நரகம் புகுவான். அவன் தவ்பா செய்தால் அவனுடைய தவ்பாவை அல்லாஹ் ஏற்றுக்கொள்கிறான். தவ்பா செய்து மீண்டும் மது அருந்தி, போதை ஏற்பட்டால் (மீண்டும்) அவனு –டைய நாற்பது நாட்களின் காலைத் தொழுகை ஏற்றுக் கொள்ளப்படமாட்டாது. அப்படியே அவன் மரணமடைந்தால் நரகம் புகுவான். அவன் தவ்பா செய்தால் அவனுடைய தவ்பாவை அல்லாஹ் ஏற்றுக்கொள்கிறான்.

திரும்பவும் அவன் மது அருந்தி போதை ஏற்பட்டால் மறுமை நாளில் அவனுக்கு 'ரத்கதுல் கபால்' என்ற பானத்தைப் புகட்டுவது அல்லாஹ்வின் மீது கடமையாகுமென நபி(ஸல்) அவர்கள் கூறினார்கள். அப்போது நபித்தோழர்கள் அல்லாஹ்வின் தூதரே! 'ரத்கதுல் கபால்' என்றால் என்ன? என்று வினவினர். அதற்கு நபி(ஸல்) அவர்கள் 'நரகவாசிகளின் சீழ்' என பதிலளித்தார்கள்.

– அறிவிப்பவர் : அப்துல்லாஹ் பின் அமர்(ரலி),
நூல் : இப்னு மாஜா.

மது அருந்துபவனுக்கு மணமுடித்து வைக்காதீர்கள்.

அவன் நோயுற்றால் நோய் வினவச் செல்ல வேண்டாம்.

அவன் இறந்துவிட்டால் ஜனாசா தொழுகை தொழ வேண்டாம்.

என்னை நபியாக அனுப்பியவன் மீது ஆணையிட்டு கூறுகிறேன். மது அருந்துபவன் தவ்ராத், சபூர், இன்ஜீல், குர்ஆன் ஆகிய நான்கு வேதங்களாலும் சபிக்கப்பட்டவனாவான்.

அவனுக்கு உதவி செய்வது இஸ்லாத்தையே இடிப்பதற் கொப்பாகும்.

– ஆதாரம் : புகாரி

❑

மருந்துக்கு கூட மது வேண்டாம்...



ஒரு மனிதர் நபி (ஸல்) அவர்களிடம், மது (குடிக்கலாமா என்பது) பற்றி கேட்டார். அதை (குடிக்கக் கூடாது என) தடுத்தார்கள். அதை மருந்துக்கு பயன்படுத்தலாமா? என மீண்டும் அவர் கேட்டார். நிச்சயமாக அது (நோயை குணப்படுத்தும்) மருந்தல்ல. அதுவே ஒரு நோய்தான் என்று நபி ஸல் அவர்கள் கூறினார்கள்.

அறிவிப்பவர் : இப்னு ஹாஜா (ரலி)
ஆதார நூல் : முஸ்லிம், அபூதாவூது, திர்மிதீ, அஹ்மது

34. பாபரும் மது ஒழிப்பும்



ஜவஹீருத்தின் முகம்மது பாபர் அவர்கள் 14.02.1483 முதல் 26.12.1530 வரை இந்தியாவில் முகலாயர் ஆட்சியின் தலைமைப் பொறுப்பில் இருந்தார். அவர் மதுவிலக்கினைப்பற்றி பாபர் நாமா நூலில் குறிப்பிட்டுள்ளார்.

இராணாசங்கா

இராஜ புத்திர அரசர் வீரத்தின் இலக்கணம் இராணா சங்கா -வுடன் 1527 மார்ச் 17 ஆம் நாள் கான்வாப் போர் நடத்தி வெற்றிகண்டவர் பாபர். அவர் அந்தப் படையெடுப்பிற்கு செல்லும் முன்னர் நடைபெற்ற நிகழ்ச்சிகள் இதோ :

பாபர் சிக்ரியில் இருந்தார். தனது பகைவரான இராணாசங் -காவின் நிலையை அறிய 1500 படைவீரர்களை அனுப்பி வைத்தார். அப்படை மிகக்கடுமையாகத் தோற்கடிக்கப்பட்டது. படைவீரர்கள் கொல்லப்பட்டனர். படைவீரர்கள் தங்களது

கொடிகளையும் இழந்தனர். ராணாசங்கா கான்வாவில் (தற் –போதைய பாரத்பூர்)இருந்தார். பாபரின் நிலை மிக அபாயகரமாக இருந்தது. அவரது படைவீரர்கள் இராஜபுத்திர வீரர்களின் ஆற்றலையும் வீரத்தையும் கண்டு அஞ்சினர்.

இந்த நிலையில் காபூலிலிருந்து வந்த ஜோதிடன் ஒருவர் பாபர் தோல்வியுறுவார் என்று முன்னறிவித்தார். இதுவும் முகலாயப் படைகளை மேலும் பீதிக்கு உட்படுத்தியது. அப்போது பாபர் செய்தது என்ன?

மதுஒழிப்பு

தமது அதிகாரிகளுக்கும் படைவீரர்களுக்கும் முன்னிலை –யில் மது அருந்துவதைக் கைவிட்டு விடுவதாக எல்லோரும் வியக்கும்படி அறிவித்தும், தமது கையிலிருந்த மதுவைக் கீழே கொட்டியும், தமது விலை உயர்ந்த மதுப்பாத்திரங்களை உடைத்தும் பாபர் தனது வீரர்களுக்கு உற்சாக மூட்டினார். வரலாற்று ஆசிரியர் ஏ.சி.வத்ஸா எழுதுகிறார்.

"It became necessary for Babar to raise their spirits by dramatically renouncing wine, pouring his store of liquor on the ground and breaking his precious vessels before an assemblage of his officers and troops."

– பாபர் நாமா

வாழ்க்கை போராட்டம்தான் பன்னிரண்டு வயது முதல் பாபருக்கு அது பெரும் போராட்டம். இந்தியாவில் முகாலயப் பேரரசு ஒன்றை உறுதியாக நிறுவுவதற்காக அவர் நடத்திய போரின்போது அவர் எவ்வாறு நடந்து கொண்டார். அவரே தனது வாழ்க்கைச் சரித்திரமான பாபர் நாமாவில் சொல்கிறார்.

1527 பிப்ரவரி 25

"குடிப்பது குறித்த வருத்தம் என் மனதில் இருந்து வந்ததை நினைத்துக் கொண்டேன். இந்த முறையற்ற செயலைச் செய்வதால் என் உள்ளத்தில் தொடர்ந்து வருத்தம் சூழ்ந்திருப்பதை எண்ணி நான் சொன்னேன், என் ஆன்மாவே, மனமே இன்னும் எத்தனை நாட்களுக்குப் பாவத்தைச் சுமந்து கொண்டு இருப்பாய்? உணவு, பானக்கட்டுப்பாடு சுவையற்றதல்ல.

சுவைத்துக் கொண்டே இரு, எத்தனை நாளைக்கு நீ பாவத்தால் மாசுபடப்போகிறாய்? இந்த இடர்பாட்டில் எத்தனை நாள் நீ சௌகர்யமாக இருந்து விட முடியும்? எத்தனை நாளைக்கு இன்னும் ஆசை வழியில் அலையப்போகிறாய்? எத்தனை நாள் இன்னும் வாழ்க்கையை வீணாக்கப் போகிறாய்?

நான் இந்த ஒழுக்கத்திலிருந்த மாறுபட்ட செயலைவிட்டு விட்டேன்.

மதுவை ஒழித்தேன்; மனதுக்கு ஓய்வு கொடுத்தேன் :

மது அருந்தியதிற்கு வருந்தினேன். பொன், வெள்ளிப் பாத்திரங்கள், மது கோப்பைகள், விருந்துக்கான பொருள்கள் என்று நான் கொண்டு வந்தவற்றை எல்லாம் உடைத்து விட்டேன். மதுவை ஒழித்துவிட்டு என் மனதுக்கு ஓய்வு கொடுத்தேன். உடைக்கப்பட்ட பொன், வெள்ளிப்பாத்திரங்களை ஏழைகளுக்கு விநியோகிக்கப்பட்டன.

கைவசமிருந்த மது கீழே ஊற்றப்பட்டது. மதுவை தரை -யில் ஊற்றிய இடத்தில் ஒரு படிக்கிணறு தோண்டப்பட்டது. அதைக் கல்லினால் கட்டவும், அதையடுத்து ஒரு தருமச் செயலுக்கான கட்டடம் கட்டவும் திட்டமிட்டேன் என்று பாபர் நாமாவில் பாபர் குறிப்பிடுகிறார். தொடர்ந்து பாபர் எழுதுகிறார்.

மது அருந்துவதிலிருந்து விடுபட்டு திருந்த வேண்டும் என்ற இதய வீட்டுக்கருவூலத்தின் மறைந்திருந்ததை தேடி எடுத்த, முத்தின் உள்ளத்து உழைப்பைச் செயல்படுத்தினேன். என் மகிழ்ச்சிகரமான உத்தரவுக்கு இசைய என் பணிஆட்கள் உருவ பொம்மைகளை துண்டு துண்டாக உடைத்து எறிவதுபோல் உடைத்து எறிந்தார்கள். (மதுப்பாட்டில்கள் உடைக்கப்பட்டதை இவ்வாறு எழுதுகிறார்).

இந்த மனமாற்ற மகிழ்ச்சியால் விரைவில் உரிய மதிப்பு மிக்க பரிசு பெறப் போகிறார்கள். முழுமையாகப் போதைப் பொருட்களை விட்டொழித்தார்கள்.

பாபரின் ஆணை

இதன் பின்னர் பாபர் ஆணை ஒன்றை பிறப்பித்தார். முழுமையாக, எவரும் போதையூட்டும் பொருட்களை அருந்துதல், பெறுவதற்கு முயற்சி செய்தல், தயாரித்தல், விற்றல், வாங்குதல் வைத்திருத்தல், அதை அனுப்பி வைத்தல் ஆகிய பாவங்களைச் செய்யக்கூடாது. நீ வளமாய் வாழ அவற்றை விலக்கு. (பாபர் நாமா, தமிழில் ஆர்.பி.சாரதி, பக்கங்கள் 516,518,519).

வளமாய் வாழ விலக்கு :

மனிதன் வளமாய் வாழ மதுவை விலக்கு என்று பாபர் ஐந்நூறு ஆண்டுகளுக்கு முன்பே ஆணையிட்டார். அவ்வாறே செயல்பட்டார்.



மதுபான எலிப்பொறி

35. திப்பு சுல்தானும் மது ஒழிப்பும்



மதங்களைக் கடந்து மனிதநேயத்துடன் ஆட்சிபுரிந்த திப்பு சுல்தான் மதுவை அடியோடு வெறுத்தார். திப்புவின் வருவாய்த் துறை சட்டம் (1787) மது ஒழிப்பை பற்றிக்கூறுகிறது.

நமது மக்களின் சமுதாய, ஆன்மீக நன்மைக்காக மது காய்ச்சுவதும், விற்பதும் முழுமையாக தடை செய்யப்பட வேண்டும். வெளிநாட்டினருக்குத் தேவையானால் மது அனுமதி வழங்கப்படலாம்.

மீர்சாதிக்கு திப்பு 1787இல் கடிதம் எழுதினார். "மது விற்பனையாளர்கள் தமது தொழிலை நிறுத்துவதற்கான ஒப்பந்தம் செய்து கையொப்பம் வாங்கியுள்ளதாக உங்கள் அறிக்கை தெரிவிக்கிறது. மதுவை முற்றாக ஒழிக்க மது காய்ச்சுபவர்களிட -மும் இத்தகைய ஒப்பந்தம் செய்து கையெழுத்து வாங்குவது

அவசியம். பின்னர் அவர்களுக்கு வேறு வேலைவாய்ப்புகள் உருவாக்க உதவுவதும் அவசியம்.

முழுமையான மதுவிலக்கைக் கொண்டு வருவதில் உள்ள பொருளாதார லாபநஷ்டங்களுக்காக தயங்கவோ, ஒதுங்கவோ செய்வது மக்களுக்கு நல்லதல்ல. இந்த விஷயத்தில் உறுதியான முடிவை நாம் எடுக்க வேண்டும். இது ஏதோ வெறும் மதநம்பிக்கை குறித்த விஷயம் மட்டுமல்ல. நமது மக்களின் பொருளாதார நன்மை, ஆன்மீக நல்லுணர்வுகள் சார்ந்தது. நமது இளைஞர்களிடம் நல்லொழுக்கத்தை உருவாக்க வேண்டியது நமது கடமை. இதனால் உண்டாகும் உடனடியான பொருளாதார இழப்புகள் குறித்த உங்கள் கவலை எனக்குப் புரிகிறது. ஆனால், அவற்றை மீறி நாம் சிந்திக்க வேண்டாமா? நமது மக்களின் உடல் நலம், வளமான வாழ்வு இவற்றை விட நமது அரசு கஜானாவை நிரப்புவதை முக்கியமானதாகக் கருதுவது எப்படி சரியாகும்."

மது காய்ச்சுவதையும், விற்பதையும் முற்றிலுமாக தடை செய்தார். புகையிலையைப் பக்குவப்படுத்த சாராயம் கலக்கு -வதற்கு பதிலாக சர்க்கரைப்பாகு கலக்கும் முறையை பயன் -படுத்தினர். பாங் என்ற போதைப்பொருளைத் தடைசெய்தார். சாராயம் காய்ச்சுவோர்க்கு மாற்றுத் தொழிலை உருவாக்கினார்.

பின்னாளில் திப்புவிற்கு துரோகம் செய்த மீர் சாதிக் "மதுவிலக்கால் உண்டாகும் இழப்பு பற்றிக் குறை கூறியபோது மது ஒழிப்பு எனது ஆத்மார்த்தமான இலட்சியம். நமது மக்களின் ஆரோக்கிய வாழ்வும், ஆன்மீக மேன்மையும் இளைய தலைமுறை -யிடம் பண்பாடும் பொருள் இழைப்பை விடவும் மதிப்பு வாய்ந் -தவை" என்று உறுதிபடக் கூறினார். மேலும் மதுவால் வரும் வருமானத்தைவிட மக்களின் உடல் நலமும், மன வளமும் அதிக மதிப்புமிக்கவை என்ற கருத்தில் உறுதியாக இருந்தார்.

"மக்களின் நலனைக் கருத்தில் கொண்டு போதைப் பொருட்களை ஒழிக்க முன்வந்த ஒரே மன்னன் திப்பு" என்று போற்றுகின்றார் எட்வர்ட் தாம்ஸன்.

அண்ணல் காந்தியடிகள் திப்புவைப் பற்றி "நல்ல இஸ்லாமியரான அவர் மதுவிலும் மங்கையர்களிலும் மூழ்கிப் போகாத நல்ல மன்னராக வாழ்ந்தார். வருமானம் இழப்புகளைப் பற்றி கவலைப்படாது பூரண மதுவிலக்கை அமுலாக்கிய திப்பு ஓர் உன்னதமான மன்னர்" என "யங் இந்தியா"வில் எழுதினார்.


18ஆம் நூற்றாண்டின் மத்தியில் மைசூர், மதுரை அரசுகள் வலுவிழந்து அந்நியரின் ஓயாத படை எடுப்புகளால் மக்கள் பெரும் அவதிக்குள்ளாகி இருந்த போது ஹைதர் அலியும் அவரது மகன் திப்புசுல்தானும் மக்களுக்கு 40 ஆண்டுகள் நிம்மதியான நல் வாழ்வைக் கொடுத்தனர்.

காந்தியடிகளுக்கு முன்னதாக மத ஒற்றுமையையும், மதுவிலக்கையும் அமுல்படுத்தி அன்னிய நாட்டாரை இங்கே நிலைக்க விடாமல் தடுத்தது. மக்களுடைய சுதந்திர எழுச்சிக்கும், தேசிய இயக்கத்திற்கும் தூண்டுகோலாய் அமைந்தது என "மைசூர் கெஜட்" கூறுகிறது.



ரஷ்யாவில் மது ஒழிக்கப்பட்டது—1914

36. காயிதேமில்லத்தும் மது ஒழிப்பும்



காயிதே மில்லத் அவர்கள் 5.6.1896 ஆம் ஆண்டு கே.டி.மியாக்கான் ராவுத்தர் –முகையத்தீன் பாத்திமா அம்மையாருக் –கும் மகனாகப் பிறந்தார்.

1946 - 1952 சென்னை சட்டசபை உறுப்பினராக பணியாற்றினார். 1952 முதல் 1958 வரை மாநிலங்களவை உறுப்பினராகவும், 1962 முதல் 1972 வரை மஞ்சேரி தொகுதி நாடாளுமன்ற உறுப்பினராகவும் பணியாற்றினார்.

சென்னை சட்டசபையில் 6.3.1947 அன்று நிதிநிலை அறிக்கை விவாதம் தொடங்கியது. அதில் பங்கேற்ற காயிதே மில்லத் எம்.முஹம்மது இஸ்மாயில் பகதூர் 17.03.1947இல் ஆற்றிய உரையில் மதுவிலக்கை வலியுறுத்தி கருத்துகளை பதிவு செய்தார்.

சபாநாயகர் அவர்களே, என் நண்பர் சீதிசாஹிப் கூறியதை ஒட்டிச் சில வார்த்தைகளைக் கூற விரும்புகிறேன்.

அமெரிக்காவிலும் ஐரோப்பிய நாடுகளிலும் மக்கள் அதிகமாக மது அருந்துகிறார்கள். ஆனால், அவர்களுக்கு எத்தகை -யத் தீங்கும் ஏற்படவில்லை என்று கூறப்பட்டது. அங்கெல்லாம் மதுவிலக்குக் கொள்கை தோற்றுவிட்டது. குறிப்பாக அமெரிக்கா -வில் மதுவிலக்குக் கொள்கை முழுமையாகத் தோற்றுவிட்டது என்றும் வாதிடப்பட்டது.

அமெரிக்காவில் மதுவிலக்குக் கொள்கையை அரை மனதோடு கொண்டு வந்தார்கள். மதுவிலக்குக் கொள்கையை அமுல்படுத்துவதற்குச் சீரிய முறையில் அவர்கள் பாடுபட -வில்லை. உள்ளூர் மதுவிலக்கு வெற்றி பெறுவதை அவர்கள் விரும்ப வில்லை அதுதான் மதுவிலக்குக்கொள்கை தோற்றதற்குக் காரணம்.

குடிப்பது சமூகக்கேடு

மற்றுமொரு உண்மையை நான் மனதில் பதியவைக்க வேண்டும். மேலைநாட்டில் மதுவிலக்கு என்பதை தமது உரிமைப் பறிப்பாகவும் வாழ்க்கை வசதிக் குறைப்பாகவும் அவர்கள் நினைக் கிறார்கள். ஆகவேதான் மதுவிலக்கை அங்குள்ளோர் எதிர்க் -கிறார்கள்.

ஆனால், நமது நாட்டின் நிலை முற்றிலும் வேறுபட்ட -தாகும். இங்கு மது அருந்துபவர்கள்கூட தாங்கள் குடிப்பதை பெருமையாகக் கருதவில்லை. நலனுக்காகக் குடிப்பதாகவும் எவரும் நினைப்பதில்லை. அதோடு குடிப்பது ஒரு சமூகக்கேடு என்பதை நம் நாட்டு மக்கள் அனைவருமே ஒப்புக் கொள்கிறார்கள் ஆகவேதான் நமது நாட்டில் மதுவிலக்கு வெற்றிபெற வேண்டும். வெற்றி பெறுவதற்குரிய காரியங்களைச் செய்ய வேண்டும் என்று வலியுறுத்திக் கூறுகின்றோம்.

மதுவிலக்கால் அரசுக்குப் பெரும் வருமானம் இழப்பு ஏற்படும் என்பதுதான் மதுவிலக்கை எதிர்த்துப் பேசியவர்களின் வாதமாகும்.

வருமானம் இழப்பு ஏற்படும் என்பதை ஏற்றுக் கொள்கிறேன். ஆனால், எந்த ஒரு அரசாங்கமும் மக்களின் தீய பழக்கங்களையும் சமுதாயக் கேடுகளையும் தனது வருமானத்திற் -குப் பயன்படுத்தக் கூடாது என்பதை நினைவுபடுத்துகிறேன்.

எவ்வளவு வருமானம் வந்தாலும் அல்லது வருமானத்தை இழந்தாலும் மக்களின் மகிழ்ச்சிக்கு குறுக்கே நிற்கின்ற தீய பழக்கத்தை ஒழித்துக்கட்டுவதற்கு எந்த அரசாங்கமும் தயங்கக் கூடாது என்பதை வலியுறுத்துகிறேன் என்று சட்டப் பேரவையில் காயிதே மில்லத் முழங்கினார். (காயிதே மில்லத் பேசுகிறார் சட்டமன்றச் சொற்பொழிவுகளில், பக் 51-54).

❑



முதலே வாயிலே தள்ளலாமா?

37. கிறிஸ்துவமும் மது ஒழிப்பும்

கல்வி சேவையிலும், மருத்துவசேவையிலும்மகத்தான பணிகளைக் கிருத்துவம் தமிழகத்தில் செய்துள்ளது.

இந்தியாவிலேயே முதன்முதலாக பரிசுத்த அமலோர்பவ -மாதா மதுவிலக்கு சபை என்ற அமைப்பை உவரியில் துவக்கப் பட்டு நூறு ஆண்டுகளுக்கு மேலாக செயல்பட்டுவருகிறது.

1912 ஆகஸ்ட் 15 ஆம் தேதி பங்குதந்தை அந்தோணி சூசைநாதர் அவர்களால் 15 உறுப்பினர்களைக் கொண்டு ஆரம்பிக்கப்பட்டது. தற்போது 300க்கு மேற்பட்ட உறுப்பினர் -களுடன் வளர்ச்சி பெற்றுள்ளது.

இச்சபையில் உறுப்பினராக சேருவதற்கு மது அருந்தக் கூடாது, சூதுகள் செய்யக்கூடாது, விலைமாதுவிடம் செல்லக் கூடாது என்று பங்குத்தந்தை முன்னிலையில் கையொப்பம் இட வேண்டும்.

பரிசுத்த அமலோர்பவமாதா மதுவிலக்கு சபையில் உறுப் -பினராய் இருப்பவர்களுக்கு உவரியில் நடைபெறும் அனைத்து விழாக்களிலும் முக்கியத்துவம் கொடுப்பார்கள். தற்போது இந்த சபை மது ஒழிப்பதை முக்கிய குறிக்கோளாகக்கொண்டு செயல் பட்டு வருவது மகிழ்ச்சிக்குரிய விஷயமாகும்.

தமிழகத்தைப்பொறுத்து பல்வேறு கிருத்துவசபைகள் மதுவுக்கு எதிராகப் போராடி வருகின்றன.

மதுவின் தீமை பற்றிக் கூறும் வசனங்கள் :

நீயும் உன்னோடகூட உன் குமாரரும் சாகாதிருக்க வேண்டுமானால், ஆசரிப்புக் கூடாரத்துக்குள் பிரவேசிக்கிறபோது, திராட்சை ரசத்தையும் மதுவையும் குடிக்க வேண்டும்.

(லேவி. 10:9)

அவன் திராட்சை ரசத்தைக் குடித்து, வெறிகொண்டு, தன் கூடாரத்தில் வஸ்திரம் விலகிப் படுத்திருந்தான்.

(ஆதி. 9:21)

ஆதலால், நீ திராட்சை ரசமும் மதுபானமும் குடியாதபடிக் –கும், தீட்டானது ஒன்றும் புரியாதபடிக்கும் எச்சரிக்கையாயிரு.

(நியா.13:4)

அப்சலோம் தன் வேலைக்காரரை நோக்கி: அம்னோன் திராட்சைரசம் குடித்துக் களித்திருக்கும் சமயத்தை நன்றாய்ப் பார்த்திருங்கள்; அப்பொழுது நான்: அம்னோனை அடியுங்கள் என்று சொல்லுவேன்; உடனே நீங்கள் பயப்படாமல் அவனைக் கொன்று போடுங்கள்.

(2சாமு. 13:28)

திராட்சை ரசம் (பழையது) ஒழுங்கீனத்தைத் தோற்று –விக்கும்; போதை தரும் குடி அமளியைத் தோற்றுவிக்கும்; அவற்றில் நாட்டங்கொள்பவர் மடையரே.

– *(நீதிமொழிகள் 20:1)*

சிற்றின்ப பிரியன் தரித்திரனாவான்; மதுபானத்தை விரும் –புகிறவர் செல்வந்தராகமாட்டார்.

– *(நீதி.21:17)*

திராட்சை ரச மதுவில் நீந்திக்கொண்டிருப்பவர்களே, புதுப்புது மதுக்கலவையைச் சுவைத்துக் களிப்பவர்களே.

மதுவைப்பார்த்து, இந்த இரசத்தின் சிவப்பென்ன! பாத்தி –ரத்தில் அதன் பளப்பளப்பென்ன! எனச் சொல்லி மகிழாதீர். அது தொண்டைக்குள் செல்லும்போது இனிமையாயிருக்கும்;

பிறகோ அது பாம்பு போலக் கடிக்கும்; விரியனைப்போலத் தீண்டும். உன் கண் என்னென்னவோ வகையான காட்சிகளைக் காணும்; உன் உள்ளத்திலிருந்து தாறுமாறான சொற்கள் வெளிப் படும்.

கடல் அலைமீது மிதந்து செல்வது போலவும், பாய்மர நுனியில் படுத்துறங்குவது போலவும் உனக்குத் தோன்றும்.

என்னை அடித்தார்கள் எனக்கு நோகவில்லை; என்னை அறைந்தார்கள், நான் அதை உணரவில்லை; நான் எப்பொழுது விழித்தெழுவேன்? அதை இன்னும் கொடுக்கும்படி கேட்பேன் என்று நீ சொல்லுவாய்.

– (நீதிமொழிகள் 23:30,35).

ஐயோ! யாருக்கு வேதனை? யாருக்குத் துக்கம்? யாருக்குச் சண்டைகள்? யாருக்குப் புலம்பல்? யாருக்குக் காரணமில்லாத காயங்கள்? யாருக்கு இரத்தங்கலங்கின கண்கள்?

மதுபானம் இருக்கும் இடத்திலே தங்கித் தரிப்பவர்களுக் –கும், கலப்புள்ள சாராயத்தை நாடுகிறவர்களுக்குந்தானே.

– (நீதிமொழிகள் 23:29,30)

மதுபானம் இரத்த வருணமாயிருந்து, பாத்திரத்தில் பள –பளப்பாய்த் தோன்றும்போது, நீ அதைப் பாராதே; அது மெதுவாய் இறங்கும். முடிவிலே அது பாம்பைப்போல் கடிக்கும், விரியனைப் போல் தீண்டும். உன் கண்கள் பரஸ்திரீகளை நோக்கும்; உன் உள்ளம் தாறுமாறானவைகளைப் பேசும்.

– (நீதிமொழிகள்.23:31–33).

மதுபானப்பிரியரையும் மாமிசப் பெருந்தீனிக்காரரையும் சேராதே. குடிகாரரும் பெருந்தீனியரும் முடிவில் ஏழைகளாவர்; உண்டு குடித்த மயக்கம் கந்தையை உடுத்துவிக்கும்.

– (நீதி. 23:20,21).

அரசருக்குக் குடிப்பழக்கம் இருத்தலாகாது; அது அரசருக்கு அடுத்ததன்று; வெறியூட்டும் மதுவை ஆட்சியாளர் அருந்தக் கூடாது. *– (நீதி.31:4,5).*

ஆனால், யுத்தகளத்தில் பெருங்காயம்பட்டு மரணத் தருவாயிலிருப்பவர்கள் தங்கள் வேதனையை அறியாதிருக்க மயக்கந்தரும் மது அன்று பயன்படுத்தப்பட்டது.

– (நீதி.31:6,7).

ஞானத்தின் மீதுள்ள ஆவலை விட்டுவிடாமலே, மதுவால் உடலுக்குக் களிப்பூட்டவும், மதிகெட்ட திட்டத்தில் ஈடுபடவும் தலைப்பட்டேன்; மக்கள் தங்கள் குறுகிய உலக வாழ்க்கையில் செய்யக்கூடிய நலமான செயல் எதுவென்று அறிவதற்காக இவ்வாறு செய்யலானேன்.

... எல்லாம் மாயையும், மனதுக்குச் சஞ்சலமுமாயிருக்கிறது.

–(பிரசங்கி 2:3,17) (சாலமோன் இராஜா).

சாராயத்தை நாடி அதிகாலமே எழுந்து, மதுபானம் தங் –களைச் சூடாக்கும்படி தரித்திருந்து, இருட்டும் வரைக்கும் குடித்துக் கொண்டிருப்பவர்களுக்கு ஐயோ! கேடு!

பொய்ம்மை என்னும் கயிறுகளால், தீச்செயலைக் கட்டி இழுத்து, வண்டியைக் கயிற்றால் இழுப்பது போலப் பாவத்தையும் கட்டி இழுப்பவர்களுக்கு ஐயோ, கேடு! *– (ஏசாயா 5:11,18).*

மதுவும், திராட்சை இரசமும்(புளிப்பானது) அறிவைக் கெடுக்கும்.

வேசித்தனமும் திராட்சை ரசமும் (புளிப்பானது) மதுபான –மும் இருதயத்தை மயக்கும், அறிவைக் கெடுக்கும்.

– (ஓசியா 4:11)

மாமிசம் (புலால்) புசிக்கிறதும், மதுபானம் பண்ணுகிறதும், மற்றெதையாகிலும் செய்கிறதும், உன் சகோதரன், உன் சகோதரி இடறுகிறதற்காவது, தவறுகிறதற்காவது, பலவீனப்படுகிறதற் –காவது ஏதுவாயிருந்தால், அவைகளில் ஒன்றையும் செய்யா –மலிருப்பதே நன்மையாயிருக்கும்.

– (ரோமர் 14:21).

ஆகையால், உங்கள் நடத்தையைப் பற்றி மிகவும் கருத்தா –யிருங்கள். ஞானமற்றவர்களால் வாழாமல் ஞானத்தோடு வாழுங்கள். இந்த நாட்கள் பொல்லாதவை. ஆகவே, காலத்தை முற்றும் பயன்படுத்துங்கள்; ஆகவே, அறிவிலிகளாய் இராமல், ஆண்டவருடைய திருவுளம் யாது எனப் புரிந்துக் கொள்ளுங்கள்.



(தீமைகள் பிறக்கும் பாவக்கூடு)

திராட்சை மது அருந்திக் குடிவெறிக்கு ஆளாகாதீர்கள். இது தாறுமாறான வாழ்வுக்கு வழிகோலும்.

– *(எபேசியர் 5:15–18).*

சபைக் கண்காணியாளர், மதுபானப்பிரியனும், அடிக்கிறவ–னும், இழிவான ஆதாயத்தை இச்சிக்கிறவனுமாய் இராமல், பொறுமையுள்ளவனும், சண்டை பண்ணாதவனும், பண ஆசையில்லாதவனுமாயிருக்க வேண்டும்.

– *(1 தீமோத்தேயு 3:3).*

❑

38. மேடைப்பேச்சுக்களில் மது ஒழிப்பு

மேடைப்பேச்சுக்களில் சுதந்திரப் போராட்டத்தைப்பற்றி பேசுவது மட்டும் இல்லாமல் மகளிர் நலம், சாதி ஒழிப்பு, இந்திய சுதந்திரம், மது ஒழிப்பு போன்றவற்றையும் பேசினர்.



பத்திரிக்கைகள் படித்தவர்கள் வட்டாரத்தையே கவர்ந்த நிலையில் பட்டிதொட்டிகளில் எல்லாம் மேடைப்பேச்சு முக்கிய இடம்பெற்றது. அந்தக்காலத்தில் ஒலிபெருக்கி வசதியோ, சுவ-ரொட்டி விளம்பரமோ இல்லாமல் நடந்தவை. திருவிழாக்காலங்-களிலும் சந்தை நடக்கும் நாட்களிலும் சாவடிகளிலும் மக்கள் கூடும் இடத்தை பயன்படுத்திக்கொண்டு முழக்கம் கொடுப்பர்.

வ.உ.சிதம்பரம்பிள்ளை, திரு.வி.க., தந்தைபெரியார், வரதராஜலு, இராஜாஜி, பசும்பொன் முத்துராமலிங்கத்தேவர், கோவை அய்யாமுத்து, அண்ணாமலை பிள்ளை, கோடி இடை குப்புச்சாமி முதலியார், மதுரை சிதம்பரபாரதி, வேலூர்

உபயதுல்லா, கோவை சி.பி.சுப்பையா போன்றோரின் பேச்சு கள்ளுக்கடை ஒழிப்பு விஷயத்தில் முக்கிய இடத்தைப் பிடித்தது.

மதுஒழிப்பு பற்றி ம.பொ.சிவஞானம் அவர்கள் செந் தமிழில் பேசுவார். இராஜாஜி அவர்கள் வட்டார மொழியில் பேசுவார், தந்தைபெரியார் அவர்கள் சமுதாய சிந்தனையோடு பேசுவார்.

தந்தை பெரியார் அவர்கள் நகைச்சுவையாகவும், நாகரீகமா –கவும் சிறிய கதைகளை கூறியும் பாமரர் மனதில் பதிவு செய்யும் வகையில் பேசுவதில் வல்லவர்.

மதுவிலக்கை சட்ட அடிப்படையில் சர்க்காரே ஏன் செயல்படுத்த வேண்டும். பிரசாரம் செய்வது பலன் தராதா? என்ற வாதத்தை பதில் அளித்துக் கூறினார். இடறி விழுவதற்கு குழிகள் தோண்டிவிட்டு அவற்றின் அருகில் குழந்தைகளை விளையாட விட்டு எச்சரிக்கையாக இரு என்று சொல்லுவோமா? நாடு நகரங்கள் எல்லாம் கள்ளும், சாராயமும் விற்கவும், வாங்கவும், வசதி செய்துவிட்டு குடிக்க வேண்டாம் என்று மக்களிடம் சொல்வதில் பலன் உண்டா? என்றும் பேசி மதுவிலக்கிற்காக மேடைகளில் பிரசாரம் செய்து வந்தார்.

❑

39. நாட்டுப்புறப்பாடல்களில் மது ஒழிப்பு

நாட்டுப்புறப் பாடல்கள் எப்பொழுது யாரால் உருவாக்கப் பட்டது என்று எடுத்துச் சொல்ல இயலாத பண்பும் பாங்கும் பெற்றவை. ஏட்டிலே இடம் பெறாத, எழுத்திலே காண முடியாத ஆனால் உள்ளத்திலே ஊறிக்கிடக்கும் எண்ணங்களையும் நம்பிக்கைககளையும் பழக்கவழக்கங்களையும் அப்படியே படம் பிடித்துக் காட்டுவனவாக அமைந்தவையே இந்நாட்டுப்புறப் பாடல்கள்.

கிராமங்களில் கள்ளுக்கடைகள் தோன்றி மக்கள் உடலைக் கெடுத்து உயிர்ச்சத்தை உறிஞ்சி ஒற்றுமையைக் கெடுத்தது. இதனை நாட்டுப்புறப்பாடல் ஒன்று மிக அழகாகக் கூறுகின்றது.

"சாராயக் காரா சதிகாரா அட
சாராயம் விற்கிற ராமலிங்கம்
நீ கொடுத்த பட்டைச் சாராயம் – இங்கே
நித்தமும் சண்டைகள் வாங்குதப்பா"

மது உட்சென்றால் மதி கலங்கி விடுகிறது. தீயசெயல் புரிவதற்கு மனதை ஊக்குவிக்கின்றது.

குடிகாரக் கணவனைத் திருத்த ஒருத்தி,

மெத்தக் குடியாதீங்க
பித்தம் சிரசிலேறும்

என்று பாடுகிறாள். அதற்கு,

கள்ளு குடிச்சனடி
கண்ணு ரெண்டும் சொக்குதடி
தன்வீட்டுக்குள் நுழையத்
தடமே மிரளுதடி

என்று கணவன் பாடுகிறான். இத்தகைய அவலத்தையும் நாட்டுப் புறப்பாடல்கள் வழி அறியலாம். ❑

40. பத்திரிக்கைகளும் மது ஒழிப்பும்



25.09.1937 தினமணி செய்தி

கல்லீரலைக் காப்பாற்றுங்கள்!

தினமும் தவறாமல் உடற்பயிற்சி மேற்கொள்வது, சத்தான உணவுகளைத் தேவையான அளவு உட்கொள்வது, மதுப்பழக் -கத்தைத் தவிர்ப்பது போன்றவற்றின் மூலமாக கல்லீரல் பாதிப்பைத் தவிர்க்கலாம்.

கை, கால், இதயம், நுரையீரல், மூளை என அனைத்து உடல் உறுப்புகளுக்கும் ஆற்றல் அளிக்கும் மையமாக கல்லீரல் விளங்கு -கிறது. நாம் அன்றாடம் பருகும் தண்ணீர், உட்கொள்ளும் பல்வேறு உணவுப் பொருட்கள் 100 சதவிகிதம் சுத்தமானது எனக் கூறமுடியாது. இவற்றில் கலந்துள்ள வேதிப்பொருட்கள் நாட்கணக்கில் உடம்பில் சேர்ந்தால் அவை நஞ்சாக மாறி உட -லுக்கு ஊறுவிளைவிக்கும் அபாயம் உள்ளது. இந்த அபாயத்தை தவிர்க்கும் பணியை கல்லீரல் மேற்கொண்டு வருகிறது. தினமும் குடலில் செரிமானம் செய்யப்படும் உணவை உறிஞ்சும் கல்லீரல் முதலில் அதில் உள்ள நச்சுத்தன்மை கொண்ட வேதிப்பொருட் -களை நீக்குகிறது. அதன்பின்னர், உணவில் உள்ள புரதம், கார்போ ஹைட்ரேட், கொழுப்புச்சத்து ஆகியவற்றை தனித்தனியாகப் பிரித்து அவற்றை ஆற்றலாக மாற்றி சிறுநீரகம், மூளை, கை, கால் உள்ளிட்ட அனைத்து உறுப்புகளுக்கும் தொடர்ந்து அளிக்கிறது.

மேலும், உடலின் நீர்ச்சத்தை பராமரிக்கத் தேவையான புரதத்தை உற்பத்தி செய்வதுடன் இரத்தத்தை நீர்த்துப் போகச் செய்யாமல் அதைக் குறிப்பிட்ட உறைநிலையில் வைத்திருக்கும் முக்கியமான பணியையும் கல்லீரல் மேற்கொள்கிறது.

உடலின் வேதித்தொழிற்சாலை என்று கூறுமளவிற்கு கிட்டத்தட்ட மூவாயிரம் வேதிவினைகளை கல்லீரல் மேற் கொள்கிறது.

தொடர் மதுப்பழக்கம், வெறும் வயிற்றில் மது அருந்துவது, உடம்பில் அளவிற்கு அதிகமாக சேரும் கொழுப்புச்சத்து போன்ற காரணங்களால் கல்லீரல் பாதிக்கப்படுகிறது.

கல்லீரல் பாதிப்பின் அறிகுறியாக மஞ்சள்காமாலை நோய் ஏற்படுகிறது. கல்லீரலில் கொழுப்புச்சத்து அதிகமாக சேரும்போது கல்லீரல் நோய் ஏற்பட வாய்ப்பு உண்டாகிறது.

சுமார் 1.5 கிலோ கிராம் எடையுள்ள கல்லீரல் ஏதாவது ஒரு காரணத்தால் சேதமடைந்தால் மீண்டும் தன்னைத்தானே புதுப்பித்துக் கொள்ளும் தன்மை கொண்டது.

தன்னைத்தானே புதுப்பித்து உடலுறுப்புகள் அனைத்திற்கும் ஆற்றல் அளிக்கும் அற்புத உறுப்பான கல்லீரல் ஒருவருக்கு பாதிக்கப்பட்டால் அதற்கு அவரே முழுமுதற்காரணமாக இருக்க முடியும்.

கல்லீரல் செயலிழந்தால் உடல் உறுப்புகளின் இயக்கமும் தடைப்படும் என்பதை கருத்தில் கொண்டு கல்லீரலை நாம் காக்க வேண்டும்.

– பேராசிரியர் நாராயணசாமி

கல்லீரல் மருத்துவத்துறைத் தலைவர்

சென்னை மருத்துவக்கல்லூரி

தொடர்புக்கு : **98411 70145**

நன்றி : தினமலர் – 12.05.2013



குடிக்க 18.. வாங்க 21

இருபத்தியொரு வயதுக்கு உட்பட்ட இளைஞர்கள் டாஸ்-மாக் கடைகளில் மதுபானங்களை வாங்கவோ விற்கவோ கூடாது என்ற சட்ட விதியை கறாராக அமல்படுத்தக்கோரி சமீபத்தில் பொதுநலவழக்கு ஒன்று தொடுக்கப்பட்டு அதில் அரசிடம் விளக்கம் கேட்டு உயர்நீதிமன்றம் நோட்டீஸ் அனுப்பியது.

1937ம் ஆண்டு மதுவிலக்குச் சட்டம் கொண்டுவரப் பட்டது. 1950ல் நடைமுறைக்கு வந்த இந்திய அரசியலமைப்புச் சட்டத்தின் 47வது பிரிவில் மருத்துவ காரணங்களைத் தவிர வேறு எக்காரணத்துக்கும் போதையூட்டும் பானங்கள் பருகுவதைத் தடை செய்து பூரண மதுவிலக்கு அமல்படுத்த வேண்டும் என்று கூறப்பட்டுள்ளது. குஜராத் தவிர வேறு எந்த மாநிலத்திலும் மதுவிலக்கு இல்லை. மாறாக, மாநில அரசுகளே மதுவிற்கும் போக்குதான் உள்ளது. தமிழக அரசோ உச்சகட்டமாக தமிழ்நாடு மாநில வாணிபக் கழகம் (TASMAC) மூலம் பட்டிதொட்டி எல்லாம் மது விற்பனையைக் கொடிகட்டிப் பறக்கச் செய்கிறது. ஓர் ஆண்டு கலால் வரி வசூல் மட்டும் 25,000 கோடி ரூபாய் என்றால் மொத்த மது விற்பனை எவ்வளவு என்று கணக்கிட்டுக் கொள்ளலாம்.

இன்று பத்திரிகைகளைப் புரட்டினால் பள்ளி மாணவர்கள் கூட போதைப்பழக்கத்துக்கு ஆளாகி இருப்பதைக் காணலாம். மதுக்கடைகளில் முழு பாட்டிலும், அத்துடனுள்ள மதுக்கூடங்-களில், சில்லறை விற்பனையும் நடக்கிறது. இக்கடைகள் 2003ம் ஆண்டு தமிழ்நாடு சில்லறை (கடை மற்றும் மதுக்கூடம்) விற்பனை விதிகளின்படிதான் இயங்க வேண்டும். 1937ம் ஆண்டு மது விலக்குச்சட்டத்தின் கீழ்தான் இவ்விதிகளும் இயற்றப்பட்டுள்ளன என்பதுதான் கொடுமையிலும் கொடுமை.

இந்தியப் பொருளாதாரம் தாராளமயமாக்கப்படுவதை வர-வேற்று 2006ல் அளித்த உச்சநீதிமன்ற உத்தரவு இது. “மாநிலங்கள் எல்லாம் சாராய பானங்களை சிறு மளிகைக்

கடைகளில் விற்பனை செய்வதை அனுமதிக்கின்றன. விமான நிலையங்களில் மதுக்கடைகளைத் திறக்க அதிகாரிகள் திட்ட -மிட்டுள்ளனர். சமூகமே நகரங்களில் மதுக்கூட கலாச்சாரத்தை (Pub Culture) ஏற்றுக் கொண்டுவிட்டது."

2003ம் ஆண்டு விதி எண் 15ன் கீழ் 21 வயதுக்கு உட்பட்டவர்களுக்கு மதுபானம் விற்கத் தடை இருந்தாலும் மது அருந்துவதற்குத் தடை இல்லை. டெல்லியில் இருந்து வந்த ஒரு சட்ட மாணவர் இவ்விதியை எதிர்த்து வழக்கு தொடுக்கப்போவ -தாக என்னிடம் கூறினார். அவர் கூறிய காரணம் விசித்திரம். "இந்திய அரசியலமைப்புச் சட்டம் 1989ல் திருத்தப்பட்டு 18 வயதுக்கு மேற்பட்ட இந்தியர் தேர்தலில் ஓட்டுப்போட உரிமை வழங்கப்பட்டுள்ளது. அதன்படி மதுவிலக்குக் கொள்கையை உருவாக்கும் அமைச்சரவையை நாங்கள் தேர்ந்தெடுக்கலாம், ஆனால், மதுபானம் வாங்கக் கூடாது என்பது எவ்விதத்தில் நியாயம்? 18 வயதுக்கு மேற்பட்டோர் மது அருந்துவதை தடுக்காத சட்டம் எப்படி வாங்குவதை மட்டும் தடை செய்ய முடியும்?"

அந்த மாணவர் சொன்னதில் லாஜிக்கும் வேகமும் இருந்தது. அவரிடம், 'முதலில் சட்டம் படியுங்கள். வக்கீல் தொழில் செய்யப்பதிவு பெற்று Bar (சட்ட அறைக்கு) வாருங்கள்; பிறகு அந்த Barக்கு (மதுக்கூடம்) போகலாம்' என்றேன்.

எது எப்படியோ! இளைஞர்கள் குடிக்கலாம். ஆனால் வாங்கக் கூடாது என்ற விதியில் லாஜிக் உதைக்கிறது.

– சந்துரு, ஓய்வுபெற்ற நீதிபதி.

நன்றி : தி இந்து, தமிழ் நாளிதழ்.





மது. மரணக் கிடங்கின் வாசல். மதுவை நாடிப்போவோர் மரணக்கிடங்கையே நாடிப் போகின்றனர்.

41. தமிழ் ஈழத்தில் மது ஒழிப்பு



தமிழ் தேசியத் தலைவர் மேதகு **பிரபாகரன்** அவர்கள் மதுவை முற்றிலுமாக வெறுத்தார். தமிழீழத்தில் மது அங்கீகரிக்கப் படவில்லை. மேலும் மதுவினால் எதிர்காலத்தில் குழந்தைகள் பாதிப்படையலாம் என்று கருதினார். அதன் காரணமாக தமிழீழ வெளியீட்டு வாரியத்தின் அங்கீகரிக்கப்பட்ட குழந்கைள் மாத இதழான **சாளரம்** பத்திரிகை பின்வரும் கட்டுரையை வெளியிட்டது.

மது அருந்தும் பழக்கம் மனநோயாக மாறுகிறது :

மேலை நாடுகளில் குறிப்பாக அமெரிக்கா போன்ற நாடுகளில் வாகனம் ஓட்டும்போது ஓட்டுநர்கள் குடிபோதையில் இருப்பதால், சுமார் 25,000 பேர் ஒரு வருடத்தில் இறக்கின்றனர் என்று ஆய்வுகள் கூறுகின்றன. இது தவிர குடிபோதையில் சுமார் 15,000 பேர் கொலைக்கும், தற்கொலைக்கும் ஆளாவதாகவும், சுமார் 25,000 பேர் பல்வேறு நோயுற்று இறப்பதாகவும் புள்ளி

விபரங்கள் தெரிவிக்கின்றன. உலக சனத்தொகையில் நான்கு கோடி மக்கள் இதனால் அவதியுறுகின்றனர்.

குடிப்பழக்கம் என்பது, ஒருவனது நடத்தையில் ஏற்படும் மாறுபாடே ஆகும். பிறந்து வளர்ந்தது, மது அருந்தவே என்பது போல, இவர்கள் எப்போதும் குடித்துக் காலங்கழிப்பது மட்டுமல் -லாமல், தங்களது உடல் நலத்தையும் மன நலத்தையும் கெடுத்துக் கொள்கின்றனர். நாளடைவில், மது அருந்தாமல் ஓரிரு நாட்கள் இருந்தாலும் உடலிலும், உள்ளத்திலும் பல்வகை நோய் அறி -குறிகள் தோன்றி மிகுந்த அவதிக்கு ஆளாகின்றனர். அந்த அள -விற்கு இவர்கள் மது அரக்கனுக்கு அடிமையாகி விடுகிறார்கள். மனநலம், உடல்நலம் மற்றும் சமூக பொருளாதார நிலைகளைப் பாதிக்கும் அளவிற்கு முறையற்றுக் குடிப்பதையும், குடிக்கும் அளவைக் கட்டுப்படுத்தும் திறனை இழப்பதையும், மதுவை விலக்க முடியாமல் தினமும் குடித்தலையும் தான் மது அடிமை எனக் கொள்ள வேண்டும். முதலில் நண்பர்களுக்காகச் சிறிதளவு மது அருந்தும் பழக்கமே, நாளாவட்டத்தில் மது அடிமை நிலைக் -குக் கொண்டு செல்லும்.

மதுப்பழக்கம் தோன்றக் காரணங்கள் :

வாழ்க்கையில் ஏற்படும் கசப்பான சில அனுபவங்களை மறந்து வாழவும், அதிலிருந்து தப்பித்துக் கொள்ளவும் இக்குடிப் பழக்கம் உதவுகிறது என அவர்கள் கருதுகின்றனர். குழந்தைப் பருவத்தில் பெற்றோர்களின் கண்டிப்பும், சட்ட திட்டங்களும் குழந்தையின் மனதில் பெற்றோருக்கு எதிரான கோபத்தையும், வெறுப்பையும் ஏற்படுத்துகின்றன. ஆனால், அவற்றைப் பெற் -றோரிடம் அவர்கள் வெளிக்காட்டுவதில்லை. காரணம், அவ் விதமான கோபத்தின் விளைவால் பெற்றோருக்குத் தீங்கு ஏற் பட்டும், அதனால் அவர்களை இழக்க நேரிடும் என்ற பயம் மனதில் உண்டாவதே. பின்பு வளர்ந்து பெரியவர்கள் ஆனதும், குடிப்பழக் -கம் அவர்களது ஆசைகளை நிறைவேற்றவும், பழி உணர்வைத் தீர்த்துக் கொள்ளவும் உதவுகிறது.

சமூக விரோதச் செயல்களில் இறங்கவும், பகைமை உணர்வை வளர்த்துக் கொள்ளவும், சாராயம் போன்ற மது பானங்கள் அவர்களுக்கு மிகவும் கைகொடுக்கின்றன. சிலருக்கு சிலசமயம் ஏற்படும் குற்ற உணர்வுகளை மறக்கவும் மது உதவு -கிறது. இது தவிர, தவிர்க்க முடியாத அளவிற்கு மனதில் தோன்றும் தாழ்வு மனப்பான்மையும், பொறுப்புகளில் இருந்து தப்பித்துக் கொள்ள விரும்புவதாலும் இக்குடிப்பழக்கத்திற்கு அடிமையாக, சில முக்கியமான காரணங்களாகும்.

இப்பழக்கத்திற்குப் பாரம்பரியமும் சூழ்நிலைகளும், சமூகப் பண்பாடுகளும், நண்பர் குழாமின் வற்புறுத்தல்களும் தூண்டுகோலாக அமைகின்றன. இவை தவிர, குடும்பத்தில் பெற்றோர் அல்லது உடன்பிறந்தோர் குடிப்பழக்கம் உடைய -வராயின், மற்றவரும் அப்பழக்கத்திற்கு ஆளாகலாம்.

மதுவும் மனநிலையும் :

மது பொதுவாக மனிதனது உடலுக்கு தீங்கு செய்யும் ஒரு நச்சுப் பொருள் ஆகும். அளவிற்கு அதிகமாக ஒருவன் அதை அருந்தினால் மூளை முதலில் பாதிக்கப்படுகின்றது. இதனால் அவன் மன நோயுற்றவனைப் போல நடந்து கொள்கிறான். இரத்தத்தில் சேரும் மதுவின் அளவிற்கு ஏற்றபடி மனிதனது மனநிலை மாறுபாடு அடைகிறது. சிறிதளவு மது அருந்தியவுடன் ஒருவித கேளிக்கை மனப்பான்மையும், போலியான மனமகிழ்ச்சி -யும் ஏற்படுகின்றன. பேச்சின் அளவும் அதிகரிக்கின்றது. இன்ன -மும் சிறிது மது அருந்தினால், கொஞ்ச நேரத்தில் ஒருவித மனக் குழப்பம் ஏற்படுகின்றது. பேசும் பேச்சு, மேல் எழுந்து வாரியாக - உண்மை குறைந்து - பொருளற்றதாக அமைவதோடு மட்டுமன்றி, எடுக்கும் தீர்மானங்களும், முடிவுகளும் முறையற்றவையாக இருக்கும். சொல்லும் கருத்துக்கள் தொடர்பு இல்லாமலும், பொருத்தமற்றும் இருக்கும். இரைச்சலாகப் பேசுவதுடன், தான் மிகவும் சக்தி வாய்ந்தவன் என்றும், தன்னால் எதையும் சாதிக்க முடியும் என்றும் சொல்வார்கள். உண்மையில் எல்லாவிதமான திறமைகளும் அப்போது குறைந்தே இருக்கும். உல்லாசமான

ஒருநிலையில் இருந்து சிறிதுசிறிதாக எரிச்சல் உணர்வும், தற்பெருமை நிறைந்த திமிரான மனப்போக்கும், அடக்கம் குறைந்த ஆராவாரமும், கூச்சமின்மையும் ஏற்படுகின்றன. சமூகத் –திற்கும் சுற்றுப்புறச் சூழ்நிலைக்கும் இடையூறாகக் குடிகாரன் அமைகிறான்.

– நன்றி : சசி, சாளரம் மாத இதழ்,

தமிழீழம், மே – ஜீன், 1995.

சிறு போதைப்பழக்கம் கூட சமூகத்தையே அழித்துவிடும். அதனால், போதைப் பொருட்களை தொடுவதில்லை என்று சபதம் ஏற்போம்.

– தேசிய தலைவர் மேதகு பிரபாகரன், தமிழீழம்

❑



42. திரைப்படங்களில் மது ஒழிப்பு

முதன்முதலில் தமிழில் பேசிய, பாடிய சினிமா காளிதாஸ். இப்படம் 1931 அக்டோபர் 31 அன்று திரைக்கு வந்தது. ஆரம்ப காலத்தில் தீண்டாமை ஒழிப்பு, குழந்தைகள் திருமணக் கொடுமை, வரதட்சணைக் கொடுமை, ஆலயப்பிரவேசம், மது ஒழிப்பு போன்ற கொள்கைகளை மையப்படுத்தி வெளிவந்தது. இது போன்ற படத்தின் விமர்சனங்களை தினமணி, ஆனந்த விகடன், குண்டூசி, குமரிமலர், பேசும்படம் (திரைப்பட மாத இதழ்), பொம்மை, ஜனசக்தி போன்ற பத்திரிகைகள் வெளியிட்டன.

தியாக பூமி என்ற திரைப்படத்தில் மது ஒழிப்பிற்காக கீழ்க்கண்ட பாடல் பாடப்பட்டது.

அலங்காரம் செய்திடுவோம்
அண்ணன்மாரே வாருங்களேன்!
தெருவீதிக் குப்பையெல்லாம்
கூட்டித் தள்ளுவோம்!
மானமழிக்கும் மனைவி
மக்கள் வயிற்றிலடிக்கும்
மதிகெடுக்கும் உயிர் குடிக்கும்
நஞ்சன்றோ மதுபானம்!
வேலைக்குக் கூலி கொஞ்சமே
மிஞ்சுமோ அதையும்
குடிப்பதோ? பாழாய் அடிப்பதோ?

இப்படம் 1935 இல் வெளிவந்தது. இதனை அடுத்து சந்திரசேனா, சந்திரமோகன், தர்மபத்தினி, பதிபக்தி, இருசகோதரர் -கள், தேவதாஸ், பக்கா ரவுடி, சொர்ணலதா, மதுரைவீரன் போன்ற படங்களில் தீண்டாமை ஒழிப்பிற்காக கருத்துகளை வெளிப் படுத்தும் வகையில் படங்கள் வெளிவந்தன.

சுதந்திரப் போராட்ட காலத்தில் இந்தியர்கள் பிரிட்டிஷாரை எதிர்த்து மட்டும் போராடிக் கொண்டிருக்கவில்லை. இந்த நாட்டில் நிலவி வந்த மூட பழக்கவழக்கங்களையும், அவற்றால் நேரும் சமூகக் கேடுகளையும் எதிர்த்துப் போராடிக் கொண்டிருந்தார்கள் என காந்தியடிகள் குறிப்பிட்டுள்ளார்.

1938 ஆம் ஆண்டு "சொர்ணலதா" என்ற திரைப்படம் மதுவிலக்கு பிரச்சாரங்களுடன் வெளிவந்தது.

1940 இல் "விமோசனம்" என்ற தமிழ்த் திரைப்படம் வெளிவந்தது.

நவசக்தி பத்திரிகையில் 21.08.1929 அன்று, "விமோசனம்" மாதப்பத்திரிகையானது சக்கரவர்த்தி இராஜகோபாலாச்சாரியாரால் நடத்தப்பட்டு வந்தது. இதன் நோக்கம் பூரண மதுவிலக்கு. வருட சந்தா, தபால் கூலி உட்பட ரூபாய் ஒன்றுக்கு விற்பனையானது. அயல்நாட்டிற்கு ரூ.1-2-0.

1940 ஆம் ஆண்டு வெளிவந்த தமிழ் திரைப்படத்திற்கு 1929 இல் வெளியான விமோசனம் பத்திரிகையின் தலைப்பை வைத்தனர்.

"விமோசனம்" படம் முழுவதும் சிறுமியரே நடித்துள்ளனர் என்பது சிறப்புச் செய்தியாகும்.

24.07.1938 இல் ஆனந்த விகடன் இதழ், சீக்கிரமே "விமோசனம்" வந்துவிடும் போல் இருக்கிறது என்று கூறியது.

இந்த திரைக்கதையில் கள்ளுக்கடைகள் எல்லாம் உணவு விடுதியாக மாறுகின்றன. கள்ளுக்கடை ஒழிந்த மகிழ்ச்சியில் கிராமத்தில் பெண்கள் கூடி கும்மியடித்து பாடல்களைப் பாடுகிறார் -கள். அந்தப்பாடல்,

பட்டோமடி வெகு கஷ்டமடி
அந்தப் பாழாப்போன கள்வெறி
போதையினால்,
கள்ளுக்கடைகளை மூடிவிட
நம் காந்திஜி எண்ணத்தில்
கொண்டுவிட,

தெள்ளறிவுள்ளவர் ராஜாஜி
மிகத் துரிதமாய்
சட்டம் இயற்றிவிட்டார்
காந்திஜியின் சக்தியைக் காணுங்கடி – ராஜ
கோபாலர் புத்தியைக் காணுங்கடி
போற்றுங்கள் காந்தியைப்
போற்றுங்கடி!

இவ்வாறு பாடல்கள் பாடப்பட்டது. இப்படத்தின் பாடல் –களை மதுரை, ஸ்ரீ எல்.கிருஷ்ணசாமிபாரதி எம்.எல்.ஏ அவர்கள் எழுதியிருந்தார்.

1929 இல் ராஜாஜி அவர்கள் "விமோசனம்" பத்திரிகையை துவக்கினார். துணை ஆசிரியராக கல்கி கிருஷ்ணமூர்த்தி இருந்தார். இதனை கல்கி கிருஷ்ணமூர்த்தி அவர்கள் என் பூர்வாசிரமம் என்ற கட்டுரையில் கீழ்வருமாறு குறிப்பிடுகிறார்.

நாற்பது பக்கத்திற்கு மதுவிலக்கு விசயத்தை எப்படித் திரட்டுவது? அப்படியே பத்திரிகையைக் கொண்டு வந்தாலும் ஜனங்கள் வாங்குவார்களா? என்ற சந்தேகம் எனக்கு எழுந்தது.

ஏன் வாங்கமாட்டார்கள்? வாங்காவிட்டால் வாங்கச் செய்ய வேண்டும்? என ராஜாஜி கூறினார்.

எப்படி வாங்கச் செய்வது, வாங்குவதை கட்டாயமாக்க முடியுமா? படிக்க சுவாரஸ்யமாக இருந்தால்தானே பத்திரிகையை வாங்குவார்கள் என்று கூறினேன்.

அதற்கு இராஜாஜி அவர்கள் படிக்க சுவாரஸ்யமாக இருக்கும் –படி செய்யலாம். நீ பார்த்துக் கொண்டே இரு. முதல் இதழை நான் தனியாகவே தயாரித்துக் காட்டுகிறேன் என்று கூறினார்.

அவ்விதமே விமோசனம் முதல் இதழை ராஜாஜி தயாரிக்க ஆரம்பித்தார். ஒரு வாரத்தில் தயாரித்து முடித்து விட்டார். அட்டைப் பக்கத்திற்கு மதுப்புட்டியாகிய அரக்கனை விரட்டி –யடிப்பது போன்ற படம் அச்சிடப்பட்டது. இரண்டாவது பக்கத் –தில் பாரதியாரின் "ஜெயபேரிகை கொட்டடா" என்ற பாட்டைத் தழுவி "மதுவெனும் பேய்தனை அடித்தோம்" என்ற ஒரு பாட்டும்

படமும் சேர்க்கப்பட்டது. அமெரிக்காவிலிருந்தும், இங்கிலாந்தி -லிருந்தும் பல மதுவிலக்கு நூல்களை இராஜாஜி தருவித்தார். அவற்றைக் கொண்டு பல கட்டுரைகள் எழுதினார். இப்படியெல் -லாம் தயார் செய்த புத்தகத்தை இராஜாஜியே சென்னைக்கு சென்று இதழை அச்சடித்துக் கொண்டு வந்தார். அந்த இதழை பார்த்தவுடன் பத்திரிகை வெற்றியடையப் போகிறது என்ற தைரியம் எனக்கு உண்டாகிவிட்டது.

– வெள்ளிமணி, 12.09.1947

24.07.1938 ஆனந்தவிகடன் இதழில் “விமோசனம்” நாடகமாக நடித்து வந்ததைத் திரைப்படமாக வெளிவருகிறது என்றும், ஆயத்தப் பணிகள் துவங்கி விட்டன என்றும், இந்தப் படத்தில் சென்னை நகரப் பெண் பாடசாலை மாணவிகள் நடிக்கின்றனர். இந்த படம் வெற்றிபெற வேண்டும் என்பது எல்லோரது விருப்பம் என்று கட்டுரையின் ஒரு பகுதி கூறுகிறது.

படத்தின் துவக்கத்திலேயே குடியை ஒழிக்க பாடல் வருகிறது.

இன்பம் அளிக்க வருவாய்
ஏழைகள் தமக்கின்பம்
அளிக்க வருவாய்
பாரதத் தாயே!
துன்பம் தவிர்க்க வருவாய்
குடியால் வாழ்ந்த
துன்பம் தவிர்த்து எங்கள்
தீய வினையும் தவிர்த்து

என்ற பாடலாகும்.

மேலும், இன்னொரு காட்சியில் மது ஒழிக்கும் தொண்டர் படை கீழ்க்கண்ட பாடல்களைப் பாடுகிறார்கள்.

இந்தியச் சோதரர் இன்புற வாழவே
ஏற்றவழி இதுவே!
சொந்த அறிவுதனை
மந்தமாக்கிடும் குடியைக் கைவிடுவீரே!
நாட்டினில் பஞ்சமும் பலவிதத்

தொல்லையும் வருத்துவதையோ!
வீட்டிலும் கவலை துன்பம்
குறைந்த பாடில்லை ஐயோ!
அல்லும் பகலுமே அடிமைகளாகி
அரைவயிறு தனக்குணவுமின்றி
தொல்லைப்படும் ஏழை
தமக்கிங்காகுமோ
குடியைக் கைவிடுவீரே!

கிட்டப்பா என்றவுடன் நினைவுக்கு வருபவர் கே.பி.சுந்தராம் –பாள். கிட்டப்பாவும், கே.பி.சுந்தராம்பாளும் நாடக மேடையில் தோன்றினால் இவர்களின் கணீரென்ற குரல் அனைவரையும் வசீகரிக்கும். ஈழத்திலும் பல இடங்களில் கே.பி.சுந்தராம்பாளின் நாடகங்கள் சிறப்பாக நடைபெற்றது. கே.பி.சுந்தராம்பாள் அவர்களும் மதுவிலக்கிற்கு எதிராக பல்வேறு பாடல்களை மேடைகளில் பாடியுள்ளார்.

தமிழ்த் திரைப்பட உலகில் மதுவுக்கு அடிமையாகி பல நடிகர், நடிகைகள் வாழ்க்கையை இழந்து விட்டனர். புகழின் உச்சிக்குச் சென்ற பல நடிகர் நடிகைகள் மதுவின் காரணமாக திரைப்பட உலகை விட்டே வெளியேற வேண்டிய சூழல் ஏற்பட்டது. இவற்றையெல்லாம் “குடியால் குடை சாய்ந்த கோபுரங்கள்” என்ற நூல் திரைப்பட வரலாற்று உண்மைகளைப் பதிவு செய்துள்ளது.

1968 ஆம் ஆண்டு பொம்மை என்ற இதழில் டி.ஏ.மதுரம் அவர்கள் தன் பேட்டியில் பின்வருமாறு கூறுகிறார். “குடிச்சுப் பழகணும், நீராகாரம் குடிச்சுப் பழகணும்” என்று பாடி உபதேசித்த மதுவிலக்கு பிரச்சாரத்திற்கு எதிராகவே நல்லதம்பி படத்தை தயாரித்த, நாகர்கோயிலில் காந்தி நினைவு ஸ்தூபியை 60,000 ரூபாய் செலவில் கட்டிய கலைவாணர் என்.எஸ்.கிருஷ்ணன் அவருடைய இறுதிக்காலத்தில் மதுப்பழக்கத்திற்கு ஆட்பட்டு சென்னை பொதுமருத்துவமனையில் 1957 ஆம் ஆண்டு ஆகஸ்ட் மாதம் இறந்தபோது அவருக்கு வயது 49 ஆகும்.

சிரிப்பது உடலுக்கு நல்லது என்று அடிக்கடி கூறும் என்.எஸ்.கிருஷ்ணன் உடலுக்கு நல்லது அல்லாத ஒன்றை அவர் தனக்கு விருப்பம் இல்லாமலேயே நாடிச் சென்றார். இறுதியில் அது அவரை அடிமையாக்கிக் கொண்டது என்று கூறியுள்ளார்.

தந்தை பெரியார் அவர்கள் மகாத்மா காந்தி கூறியதற்கு இணங்க சேலம் தாதம்பட்டியில் உள்ள அவருக்குச் சொந்தமான தென்னை மரங்களை வெட்டி வீழ்த்தினார். பெரியாருடைய குடும்பப் பெண்கள் கூட மதுவிலக்கில் தீவிரம் காட்டினர். கள்ளுக்கடை மறியலைப் பெரியார் திரைப்படத்தில் முழுவது -மாகப் பதிவு செய்துள்ளனர் என்பது குறிப்பிடத்தக்கது.



கலையுலக மார்க்கண்டேயன் சிவக்குமார் அவர்கள் மது ஒழிப்பிற்காக சாதி, மத வேற்றுமையைக் கடந்து தமிழர்களின் நலன் காக்க கடுமையாகப் போராடி வருகிறார்.

தற்போது வெளிவரும் திரைப்படங்களில் மது அருந்தும் காட்சி அதிகம் இடம் பெறுகிறது. டெல்லியைச் சேர்ந்த **ஹ்ருதய்** என்ற தொண்டு நிறுவனம் நடத்திய ஆய்வில் இளம் வயதினர் மத்தியில் மது அருந்தும் தூண்டுதலை ஏற்படுத்துவதில் திரைப் படங்களுக்கு முக்கிய பங்கு உண்டு என்று தெரிந்தது. மது அருந்தும் காட்சிகள் இடம்பெறும் திரைப்படங்களைப் பார்க்கும் மாணவர்களிடம் மது அருந்துவது 2.78 மடங்கு அதிகரித்துள்ள -தாகக் கூறுகிறது. மது விருப்பத்தைத் தூண்டுவதில் ஊடகங் -களுக்கும் பெரும்பங்கு உண்டு.

43. துவக்ககால காங்கிரசும் மது ஒழிப்பும்

ஆங்கிலேயர்களுக்கு எதிராக உருவான இயக்கத்தில் தொடக்க காலத்தில் ஏ.ஓ.ஹ்யூம், வெட்டர் பர்ன், ஜார்ஜ் யூல், ஷெர்லி நார்ட்டன் போன்ற ஆங்கிலேயர்களும் முக்கிய பங்கு வகித்தனர்.

தொடக்க காலத்தில் "பாரத ஜாதீய ஐக்ய சங்கம்" என்று பெயர் இருந்தது. இந்த சங்கத்தின் கூட்டத்திற்கு வரும் பிரதி-நிதிகளுக்கு ஆங்கிலம் கட்டாயம் தெரிந்திருக்க வேண்டும். இந்தச் சங்கம் முதன் முதலாக 1885 இல் பூனா நகரத்தில் கூட்டம் நடைபெறுவதாக அறிவிக்கப்பட்டது. ஆனால் அந்த நேரத்தில் வாந்தி, பேதியுடன் பிளேக் நோய் தீவிரமாக இருந்ததால் பம்பாயில் நடத்துவதாக தீர்மானம் செய்யப்பட்டது.

அடிமைப்பட்டுக் கிடந்த நாட்டில் தமிழ்க்கவிஞர் பாரதி ஒருவர் மட்டுமே ஆனந்த சுதந்திரப் பாடலைப் பாடினார்.

"யாமறிந்த மொழிகளிலே தமிழ்மொழிபோல் இனிதாவ-தெங்கும் காணோம்" என்று கூறிய பாரதி வேற்று மொழிகளி-லிருந்து மிக எளிய நடையில் தமிழ்மொழிக்கு நூல்களைக் கொடுத்தது விந்தையிலும் விந்தையான செயலாகும்.

1885 இல் பம்பாய் நகரில் கூடிய சபையைக் குறித்து தமிழ்நாடு தவமுடையது. ஏனெனில் பாரத ஜன சபையின் முதற்கூட்டத்தில் முதல் தீர்மானத்தைத் தமிழ்நாட்டுத் தலைவ-ராகிய சுதேசமித்திரன் ஆசிரியர் சுப்பிரமணியம் அய்யர் கொண்டு வந்தார் என்று பெருமிதத்துடன் கூறினார்.

இந்திய தேசிய காங்கிரஸ் என்று குறிப்பிடாமல் பாரத ஜனசபை என்றே பாரதியார் குறிப்பிட்டார்.

பாரதி சிறந்த மொழி பெயர்ப்பாளர் பல கலைச்சொற்களுக்-குரிய தமிழ்ச் சொற்களைக் கொடுத்தார். ஆங்கிலம் மூலத்தை ஒரு

தடவை படித்துவிட்டபின் அதை மூடிவைத்து விட்டுத் தமிழில் மிக வேகமாக எழுதும் வல்லமை கொண்டவர்.

காங்கிரசின் ஆரம்பகால வரலாற்றை பாரத ஜனசபை என்று 1919 ஆம் ஆண்டு முதல் தொகுதியும், 1920 ஆம் ஆண்டு இரண்டாம் தொகுதியும் வெளியிட்டார். இந்த இரு நூல்களையும் சுதேசமித்திரன் புத்தகசாலையில் பிரசுரமாயின.

1890 ஆம் ஆண்டு கல்கத்தாவில் ஆறாம் ஜனசபைக் கூட்டம் நடைபெற்றது. நான்காவது தீர்மானமாக ஆப்காரி சட்டத்தைப் பற்றி விளக்குகிறது.

ஆப்காரி விஷயத்தில் நம்முடைய பழைய வேண்டுதல் -களைக் கருதி ஏற்கெனவே, இந்தியா கவர்ன்மெண்டாரும் இந்தியா மந்திரியும் செய்திருக்கும் காரியங்களை ஒப்புக் கொள்ளு -கிறோமெனினும்;

அதாவது, போதைச் சாறுகளின்மீது இறக்குமதித் தீர்வை -கள் விதித்திருப்பதையும் இந்தியாவில் வடிக்கப்பட்ட தானியச் சாறுகளின்மேல் வரிபோட்டிருப்பதையும் வங்காள கவர்ன் -மெண்டார் வெளிவடிப்பு முறையை விட்டதையும், 1889 – 90 வருஷத்தில் சென்னை கவர்ன்மெண்டார் 7000 சாராயக் கடைகளை மூடியிருப்பதையும் கண்டு மிகவும் மகிழ்ச்சி கொள்ளுகிறோமாயினும்;

1890 மார்ச் முதல் தேதி இந்தியா கெஜட்டில் பிரசுரம் செய்யப்பட்ட அறிக்கையின் 103,104,105 –ஆம் பிரிவுகளில் ஆப்காரி விஷயத்தைக் குறித்துக்சொல்லப்பட்ட முறை முழு -வதையும் அதிலும் விசேஷமாக 103–ம் பிரிவு நான்காம் உட்பகுதியில் கூறியபடி, “அந்தந்த ஊர்களில் ஜனங்களுடைய கருத்தை அறிந்து கொண்டு இயன்றவரை அதைத் தழுவியே நடக்க முயல வேண்டும்” என்ற விதியையும் பரிபூர்ணமாக அனுஷ்டிக்கும்படி எல்லா மாகாண கவர்ன்மெண்டுகளையும் வற்புறுத்துமாறு இந்தியா கவர்ன்மெண்டாரை இந்த ஜன சபை அழுத்தமாக வேண்டிக்கொள்ளுகிறது. ❑

44. திருக்குறளில் மதுபற்றிய குறட்பாக்கள்

திருக்குறள் உலகப் பொதுமறையாகக் கருதப்படுகிறது. உலக அளவில் திருக்குறள் பல மொழிகளில் மொழி பெயர்க்கப் -பட்டுள்ளது. "வாடிய பயிரைக் கண்டபோதெல்லாம் வாடினேன்" என்ற வள்ளற்பெருமான் திருக்குறளை நன்கு கற்றுத் தேர்ந்தார். திருக்குறளுக்கு பலர் உரை எழுதியுள்ளனர். கள்ளுண்ணாமைக் -காக ஒரு அதிகாரமே எழுதியுள்ளார் திருவள்ளுவர்.

இருமனப் பெண்டிருங் கள்ளுங் கவறுந்
திருநீக்கப் பட்டார் தொடர்பு - குறள் 920

இரு மனம் கொண்ட பொதுமகளிருடனும், மதுவுடனும், சூதாட்டத்தினுடவும் உழல்வோரை விட்டு வாழ்வில் அமைய வேண்டிய சிறப்பு அகன்று விடும்.

உட்கப் படாஅர் ஒளியிழப்பர் எஞ்ஞான்றும்
கட்காதல் கொண்டொழுகு வார். - குறள் 921

மதுப்பழக்கத்திற்கு அடிமையானவர்கள் தமது சிறப்பை இழப்பது மட்டுமல்ல; மாற்றாரும் அவர்களைக் கண்டு அஞ்ச மாட்டார்கள்.

உண்ணற்க கள்ளை உணிலுண்க சான்றோரான்
எண்ணப் படவேண்டா தார். - குறள் 922

மதுவை அருந்தக்கூடாது. சான்றோர்களின் நன்மதிப்பைப் பெற விரும்பாதவர் வேண்டுமானால் அருந்தலாம்.

ஈன்றாள் முகத்தேயும் இன்னாதால் என்மற்றுச்
சான்றோர் முகத்துக் களி. - குறள் 923

கள்ளருந்தி மயங்கிவிடும் தன் மகனை, அவன் குற்றங்களை மன்னிக்கக்கூடிய தாயே காணச் சகிக்க மாட்டாள் என்கிறபோது, மற்ற சான்றோர்கள் அவனை எப்படி மதிப்பார்கள்.

நாணென்னும் நல்லாள் புறங்கொடுக்கும் கள்ளென்னும்
பேணாப் பெருங்குற்றத் தார்க்கு. - குறள் 924

மது மயக்கம் எனும் வெறுக்கத்தக்க பெருங்குற்றத்திற்கு ஆளாகியிருப்போரின் முன்னால் நாணம் என்று சொல்லப்படும் நற்பண்பு நிற்காமல் ஓடிவிடும்.

கையறி யாமை உடைத்தே பொருள்கொடுத்து
மெய்யறி யாமை கொளல். - குறள் 925

ஒருவன் தன்னிலை மறந்து மயங்கியிருப்பதற்காக, போதைப் பொருட்களை விலை கொடுத்து வாங்குதல் விவரிக்கவே மூடத்தனமாகும்.

துஞ்சினார் செத்தாரின் வேறல்லர் எஞ்ஞான்றும்
நஞ்சுண்பார் கள்ளுண் பவர். - குறள் 926

மது அருந்துவோர்க்கும் நஞ்சு அருந்துவோர்க்கும் வேறுபாடு கிடையாது என்பதால் அவர்கள் தூங்குவதற்கும் இறந்து கிடப் -பதற்கும் கூட வேறுபாடு கிடையாது என்று கூறலாம்.

உள்ளொற்றி உள்ளூர் நகப்படுவர் எஞ்ஞான்றும்
கள்ளொற்றி கண்சாய் பவர். - குறள் 927

மறைந்திருந்து மதுவருந்தினாலும் மறைக்க முடியாமல் அவர்களது கண்கள் சுழன்று மயங்குவதைக் கண்டு ஊரார் எள்ளி நகையாடத்தான் செய்வார்கள்.

களித்தறியேன் என்பது கைவிடுக நெஞ்சத்
தொளித்ததூஉம் ஆங்கே மிகும். - குறள் 928

மது அருந்துவதே இல்லை என்று ஒருவன் பொய் சொல் -லவே முடியாது. காரணம் அவன் மது மயக்கத்தில் இருக்கும்போது அந்த உண்மையைச் சொல்லி விடுவான்.

களித்தானைக் காரணம் காட்டுதல் கீழ்நீர்க்
குளித்தானைத் தீத்துரீஇ அற்று. - குறள் 929

குடிபோதைக்கு அடிமையானவனைத் திருத்த அறிவுரை கூறுவதும், தண்ணீருக்குள் மூழ்கிவிட்டவனைத் தேடிக் கண்டு பிடிக்கத் தீப்பந்தம் கொளுத்திக் கொண்டு செல்வதும் ஒன்றுதான்.

கள்ளுண்ணாப் போழ்திற் களித்தானைக் காணுங்கால்
உள்ளான்கொல் உண்டதன் சோர்வு. - குறள் 930

ஒரு குடிகாரன், தான் குடிக்காமல் இருக்கும்போது மற்றொரு குடிகாரன் மது மயக்கத்தில் தள்ளாடுவதைப் பார்த்த பிறகாவது அதன் கேட்டினை எண்ணிப் பார்க்க மாட்டானா என்பதே ஆகும்.

☐

45. கம்பராமாயணத்தில் மதுவால் உண்டான இன்னல்கள்

சீதையை இலங்கைக்கு இராவணன் கடத்திச் சென்று விடுகிறான். இந்நிலையில் கார்காலம் முடிந்தவுடன் சீதையைத் தேடச்செல்வதாக முடிவு செய்கிறார்கள். சுக்ரீவனும் வருவதாக ஒப்புக் கொண்டார். ஆனால், கார்காலம் முடிந்த பின்னும் சுக்கிரீவன் வரவில்லை. காரணத்தை அறிந்தபோது மதுவின் மயக்கத்தில் இருந்துள்ளான். இந்நிலையில், சுக்கிரீவன் மனம் வருந்தி, "பிறர் எவராலும் பெறுவதற்கரியதும், அழிவில்லாதது -மான பேருதவியை இராமனிடமிருந்து பெற்றிருந்தும் மது மயக்கத்தால் நன்றியை மறந்து இராமனுக்கு செய்ய வேண்டிய உதவிகளை எதுவும் செய்யாமல் அவனை வருத்தமடையச் செய்வதற்காக வெட்கப்படுகிறேன். இதற்கு காரணமே இந்த மது. தன்னைத் தான் உணராமல் இருந்தது முதற்குற்றம். மேலும், கள்ளைக் குடித்தது இரண்டாவது குற்றம்" என்று மனம் வருந்தினார்.

'ஈண்டு, இனி, நிற்றல் என்பது
　　இனியது ஓர் இயல்பிற்று அன்றால் ;
வேண்டலர் அறிவரேனும், கேண்மை
　　தீர் வினையிற்று ஆமால்:
ஆண் தகை ஆளி மொய்ம்பின்
　　ஐய! நீர் அளித்த செல்வம்
காண்டியால், உன்முன் வந்த
　　கவிக்குலக் கோனொடு' என்றான். – 4440

விளக்கம் : வானரங்கள் வாயிலடைத்துக் குன்றுகளை அடுக்கின. ஏனெனில், உனது சீற்றத்தைக் கண்டு அஞ்சியதேயாகும். ஆனால், நீ அதைக் கருதாமல் உன்னோடு மாறுபாடு கொண்டு செய்ததாகக் கருதி ஓர் அன்னியன் போல இங்கே நிற்கிறாய்! இப்படி நிற்பதைப் பகைவர் பார்த்தால் உன் குற்றத்தை மேலும் வளரச் செய்து நம் இரு

திறத்தார்க்குமுள்ள நட்பைக் கெடுப்பதற்கு முயல்வார்கள். ஆதலால், நீ உள்ளே வந்து நீங்கள் செல்வத்தால் சிறப்பையும் பெருமையும் பெற்றுள்ள சுக்கிரீவனைப் பார்த்து உன் கோபத்தை தணிவிப்பேன் என்றான் அனுமன்.

மாருதி மாற்றம் கேட்ட, மலை
புரை வயிரத் தோளான்,
நீர்வினை சென்று நின்ற சீற்றத்தான்,
சிந்தை செய்தான் –
'ஆரியன் அருளின் தீர்ந்தான் அல்லன் ;
வந்து அடுத்த செல்வம்
பேர்வு அரிதாகச் செய்த
சிறுமையான்' என்னும் பெற்றி. – 4441

இச்சுக்கிரீவன் எங்களை அவமதித்தான் என்று சொல்ல இயலாது. தவிர, நான் சொன்ன தவணைப்படி வராமல் இராமனது ஆணையை மீற வேண்டுமென்ற எண்ணமும் இவனுக்குச் சிறிதும் இல்லை; புதிதாகக் கிடைத்த செல்வச் செருக்கால்தான் செய்ய வேண்டிய செயலை மறந்ததனால் ஏற்பட்டது இது என்று அனுமன் வார்த்தையால், தெளிவடைந்த இலக்குவனின் சினம் தணிந்தது.

அனையது கருதி, பின்னர்,
அரிக் குலத்தவனை நோக்கி,
'நினை; ஒரு மாற்றம் இன்னே
நிகழ்த்துவது உளது, நின்பால்;
இனையன உணர்தற்கு ஏற்ற;
எண்ணிய நீதி' என்னா,
வனை கழல் வயிரத் திண் தோள்
மன் இளங் குமரன் சொல்வான்: – 4442

சுக்கிரீவன் இராமனது ஆணையை மீறாதிருந்தும், அவனுக்குக் கிடைத்த செல்வம் சிறுமை செய்தது என்பது. செல்வம் பெற்றவர்க்குப் பல்வேறு மாறாட்டங்கள் நிகழக்கூடும். அதனால் பல தீங்குகள் விளைய வாய்ப்புள்ளது.

தேவியைக் குறித்துச் செற்ற
சீற்றமும், மானத் தீயும்,
ஆவியைக் குறித்து நின்றது,
ஐயனை; அதனைக் கண்டேன்;
கோ இயல் தருமம் நீங்க,
கொடுமையோடு உறவு கூடி,
பாவியர்க்கு ஏற்ற செய்கை
கருதுவன்; பழியும் பாரேன். – 4443

இராவணன் சீதையைக் கவர்ந்த செயல் இராமனை மிக வருத்தியது. அதனை நேரில் கண்ட இலக்குவன் தனக்கு நேரும் சீற்றத்தையும்; அதன் விளைவுகளையும் எடுத்துரைக்கின்றான். காலம் பார்த்துச் சினம் ஆறியிருத்தல் அரசனுக்குக் கடமையாயிருக்க, இராமனுக்கு நேர்ந்த துன்பங்களைக் கண்டு, ஆற்றலோடு இலக்குவன் 'கோவியல் தருமம் நீங்க... பாவியர்க்கு ஏற்ற செய்கை கருதுவான்' என்றான்.

'ஆயினும், என்னை யானே ஆற்றி
நின்று, ஆவி உற்று,
நாயகன்தனையும் தேற்ற நாள்
பல கழிந்த; அன்றேல்,
தீயும், இவ் உலகம் மூன்றும்;
தேவரும் வீவர்; ஒன்றோ?
வீயும் நல் அறமும்; போகா
விதியை யார் விலக்கற்பாலார்? – 4444

'என் உள்ளத்தில் மூண்டெழுந்த சினத்தை நானே தணி–வித்து என் உயிரையும் தரித்திருக்கச் செய்தேன். பின்பு என் அண்–ணனான இராமனைத் தேற்றுவிக்கப் பலநாள்கள் கழிந்து விட்–டன. இவ்வாறு நாள்கள் பல கழிந்து எங்கள் கோபமும் தணிந்திரா விட்டால் இவ்வுலகம் மூன்றும், தேவரும், நல்லறமும் அழிந்தே போயிருக்கும். அவற்றின் நல்வினையால் எங்கள் சினமும் துயரும் தணிந்தன' என்று இலக்குவன் உரைத்தவாறு, விதியின் வலி–மையை உணர்த்தவே 'போகா விதியை யார் விலக்கற்பாலார்' என்றார். 'ஊழிற் பெருவலி யாவுள' என்பது குறள் (380). 'விதிக்கும்

விதியாகும் என் விற்றொழில் காண்டி' (1735) என்று முன் கூறியவன் இவ் இலக்குவன்.

'உம்மைக் கண்டு உம் கோன்தன்னை
உற்ற இடத்து உதவும் பெற்றி,
என்னைக் கண்டனன்போல் கண்டு, இங்கு
இத் துணை நெடித்து வைகி,
தன்னைக் கொண்டு இருந்தே தாழ்த்தான்;
அன்று எனின், தனு ஒன்றாலே
மின்னைக் கண்டனையாள்தன்னை
நாடுதல் விலக்கற்பாற்றோ? – 4445

உன்னைக் கண்டதும் உன்னிடம் அருள் உண்டாக உன் மூலமாக உன் அரசனாகிய சுக்கிரீவனிடம் நட்புக் கொண்டு, இடருற்றபோது அவன் உதவுவதா என்று கருதினான்; என்னிடம் மிக்க பாசம் கொண்டு என்னை பாவிப்பது போன்றே அவனையும் உடன் பிறந்தவனாகப் பாவித்து உங்கள் மூலமாக இச்செயலை எளிதில் முடித்துக் கொள்ளலாம் என்று கருதினான் இராமன். அதனால் இதுவரை பொறுத்திருந்தான்; அவன் இவ்வாறு பொறுத்திருந்தது உங்களுக்குப் பெருமையைத் தருவதற்கேயாம்; வல்லமையில்லாமையாலன்று. அவன் நினைத்திருந்தால், தன் வில்லொன்றால் பகைவரை வதைத்துச் சீதையை எளிதிலே மீட்டிருக்க முடியும் என்று இலக்குவன் அனுமனிடம் கூறினான் என்பது. ஒளியினாலும் (கொடிபோல்) ஒல்கிடும் மென்மையாலும் சீதையை 'மின்னைக் கண்டனையாள்' என்றார்.

'ஒன்றுமோ, வானம்? அன்றி
உலகமும் பதினால் உள்ள
வென்றிமா கடலும் ஏழ் ஏழ்
மலை உள்ள என்னவேயாய்
நின்றது ஓர் அண்டத்துள்ளே எனின்,
அது நெடியது ஒன்றோ?
அன்று நீர் சொன்ன மாற்றம்
தாழ்வித்தல் தருமம் அன்றால். – 4446

மிகப்பெரிய அண்ட கோளத்திலே எங்கே இருந்தாலும் தன் வில்லாற்றலால் சீதையை மீட்டுவருவது இராமனுக்கு அரிய செயலாகாது. ஆனாலும் நான் மிக்க சீற்றத்தோடு வந்தது, நீங்கள் முன்பு சொன்ன சொற்படி நடவாமல் தருவதைச் சிதைத்துத் தாமதம் செய்ததாலேயாகும்.

'தாழ்வித்தீர் அல்லீர்; பல்
நாள் தருக்கிய அரக்கர்தம்மை
வாழ்வித்தீர்; இமையோர்க்கு இன்னல்
வருவித்தீர்; மரபின் தீராக்
கேள்வித் தீயாளர் துன்பம்
கிளர்வித்தீர்; பாவம்தன்னை
மூள்வித்தீர்; முனியாதானை முனிவித்தீர்,
முடிவின்' என்றான். – 4447

உங்கள் காலதாமதம் அரக்கர்க்குப் பெருவாழ்வையும், தேவர்க்கும் முனிவர்க்கும் துன்பத்தையும் உண்டாக்கி; உங்களுக்-குப் பாவங்களைச் சேர்த்து; இராமனுக்குச் சினத்தைத் தோற்றுவித்து , உங்களது கேட்டிற்கும் காரணமாகியது என்று இலக்குவன் உரைத்தான் என்பது. 'கேள்வி' என்பது வேதம்; கேள்வித் தீயாளர், வேத வேள்விக்குத் தீ ஓம்பும் வேதியர் மற்றும் முனிவர்கள்.

தாழ்வித்தீர், வாழ்வித்தீர், வருவித்தீர், கிளர்வித்தீர், மூள்வித்-தீர், முனிவித்தீர் என்று 'வி' விகுதியைச் சேர்த்துப் பிறவினைகளா-கவே அமைத்திருப்பது சிந்திக்கத்தக்கது. உங்களால்தான் இவ்விளைவுகள் அனைத்தும் ஏற்பட்டன என்பதை இப் பிற வினைகளால் நன்கு வலியுறுத்துகிறார் கவிஞர்.

தோன்றல் அஃது உரைத்தலோடும்
மாருதி தொழுது, 'தொல்லை
ஆன்ற நூல் அறிஞர் போன
பொருள் மனத்து அடைப்பாய் அல்லை
ஏன்றது முடியும்என்னின், இறத்தும்;
இத் திறத்துக்கு எல்லாம்
சான்று இனி அறனே; போந்து,
உன் தம்முனைச் சார்தி' என்றான். – 4448

அனுமன் இலக்குவனது சினத்தைத் தணிக்க விரும்பிச் சீதையைத் தேற்ற, முதலான செயல்களைத் தவறாது செய்து முடிப்போம்; அவ்வாறு முடியாவிட்டால் நாங்கள் இறந்து படுவோம்; இச்செயலுக்குத் தருமமே சாட்சி என்றான் என்பது.

சான்று இனி அறனே; நாங்கள் அறம் திறம்பினோம் என்று நீங்கள் இனியும் எங்களைக் கொல்ல வேண்டா. ஏனென்றால் அறமே எங்களைக் கொன்று விடும். மறந்தும் பிறன்கேடு சூழற்க, சூழின் அறஞ்சூழும் சூழ்ந்தவன் கேடு (குறள் –204)

'முன்னும் நீ சொல்லிற்று
அன்றோ முயன்றது; முயற்றுங்காறும்,
இன்னும் நீ இசைத்த செய்வான்
இயைந்தனம்' என்று கூறி,
அன்னது ஓர் அமைதியான்தன் அருள்
சிறிது அறிவான் நோக்கி,
பொன்னின் வார் சிலையினானும்,
மாருதியோடும் போனான். – 4449

சுக்கிரீவன் கார்காலம் நீங்கியவுடன் சீதையைத் தேடுவதற்கு முயலாமல் அந்தப்புரத்தில் உறங்கிக் கிடக்கின்றமையால் அவன் 'அன்னது ஓர் அமைதியான்' எனப்பட்டான்.

அயில் விழி, குமுதச் செவ் வாய்,
சிலை நுதல், அன்பைப் போக்கின்,
மயில் இயல், கொடித் தேர் அல்குதல்,
மணி நகை, திணி வேய் மென்தோள்
குயில்மொழி, கலசக்கொங்கை, மின்இடை,
குமிழ் ஏர் மூக்கின்,
புயல் இயல் கூந்தல், மாதர்
குழாத்தொடும் தாரை போனாள். – 4450

தாரையுடன் சென்ற மகளிர்க்கே இவ்வனப்புகள் அனைத் –தையும் கூறித் தாரைக்கு ஒன்றும் அடைமொழி கூறாமல் அன்ன வளின் கைம்மைக் கோலமும், கற்புநிலையும் உணர்த்தப் படுகின்றன.

வல்ல மந்தியரோடும், வாலி
        காதலனும், மைந்தன்
அல்லி அம் கமலம் அன்ன
        அடி பணிந்து, அச்சம் தீர்ந்தான்;
வில்லியும் அவனை நோக்கி, 'விரைவின்
        என் வரவு, வீர!
சொல்லுதி நுந்தைக்கு என்றான்;' 'நன்று'
        என தொழுது போனான் – 4451

போனபின், தாதை கோயில் புக்கு,
        அவன் பொலம் கொள் பாதம்
தான் உறப் பற்றி, முற்றும்
        தைவந்து, 'தடக் கை வீர!
மானவற்கு இளையோன் வந்து, உன்
        வாசலின் புறத்தானன்; சீற்றம்
மீன் உயர் வேலைமேலும் பெரிது;
        இது விளைந்தது' என்றான். – 4452

அறிவுற்று, மகளிர் வெள்ளம்
        அலமரும் அமலை நோக்கிப்
பிறிவு உற்ற மயக்கத்தால், முந்து
        உற்றது ஓர் பெற்றி ஓரான்,
'செறி பொன் – தார் அலங்கல்
        வீர! செய்திலம் குற்றம்; நம்மைக்
கறுவுற்ற பொருளுக்கு என்னோ
        காரணம் கண்டது?' என்றான். – 4453

"இயைந்த நாள் எந்தை, நீ
        சென்று எய்தலை; செல்வம் எய்தி
வியத்தனை; உதவி கொன்றாய்; மெய்
        இலை" என வீங்கி,
உயர்ந்தது சீற்றம்; மற்று, ஈது
        உற்றது செய்கை; முற்றும்
நயம் தெரி அனுமன்
        வேண்ட, நல்கினன், நம்மை இன்னும். – 4454

அனுமன் இலக்குவனை வேண்டியிராவிடில் அப்போதே நாம் அனைவரும் இலக்குவனால் கொல்லப்பட்டிருப்போம் என்றவாறு முற்றும் தணிந்த அனுமன் - முன்பு தாரையைக் கொண்டு இலக்குவனது சினத்தை தணித்த பின்னர் இனிய சொற்களால் வேண்டிக் கொண்டதை குறித்தது.

'வருகின்ற வேகம் நோக்கி,
வானர வீரர், வானைப்
பொருகின்ற நகர வாயில் பொற்
கதவு அடைத்து, கற் குன்று
அருகு ஒன்றும் இல்லா வண்ணம்
வாங்கினர் அடுக்கி, மற்றும்
தெரிகின்ற சினத்தீப் பொங்க, செருச்
செய்வான் செருக்கி நின்றார். – 4455

வானர வீரர்கள் நகர வாயிலின் பொற் கதவுகளைத் தாளிட்டு அவற்றின் மேல் பல சிறு குன்றுகளை அடுக்கி வைத்த செய்தி முன் கூறப்பட்டது (4301). இதனை அங்கதன் சுக்கிரீவனுக்குத் தெரிவிக்கிறான்.

'ஆண்நகை, அதனை நோக்கி, அம்
மலர்க் கமலத் தாளால்
தீண்டினன்; தீண்டாமுன்னம், தெற்கொடு
வடக்குச் செல்ல
நீண்ட கல் மதிலும், கொற்ற
வாயிலும், நிரைத்த குன்றும்,
கீண்டன நகர்ந்து, பின்னைப்
பொடியொடும் கெழீஇய அன்றே. – 4456

'அந்நிலை கண்ட, திண் தோள்
அரிக் குலத்து அனிகம் அம்மா!
எந்நிலை நின்றது என்கேன்? யாண்டுப்
புக்கு ஒளித்தது என்கேன்?
இந் நிலை கண்ட அன்னை,
ஏந்து இழை ஆயத்தோடு,
மின் நிலை வில்லினானை வழி
எதிர் விலக்கி நின்றாள். – 4457

இலக்குவனது திருவடி பட்ட அந்த வாயிற்கதவு முதலியன பொடியாய் விட்டதைக் கண்ட வானரங்கள் அஞ்சின. தப்பிக் கலங்கி போனதிசை தெரியாமல் ஓடிப் போயின; அப்போது இலக்குவன் சினத்தோடு வர, அவனை மகளிர் கூட்டத்தோடு தாரை எதிர் கொண்டாள் என்பது.

மங்கையர் மேனி நோக்கான்,
மைந்தனும், மனத்து வந்து
பொங்கிய சீற்றம் பற்றிப்
புகல்கிலன்; பொருமி நின்றான்;
நங்கையும் இனிது கூறி,
"நாயக! நடந்தது என்னோ,
எங்கள்பால்?" என்னச் சொன்னாள்;
அண்ணலும் இனைய சொன்னான். – 4458

'அது' பெரிது அறிந்த அன்னை,
அன்னவன் சீற்றம் மாற்றி,
"விதி முறை மறந்தான் அல்லன்;
வெஞ் சினச் சேனை வெள்ளம்
கதுமெனக் கொணரும் தூது கல்
அதர் செல்ல ஏவி,
எதிர்முறை இருந்தான்" என்றாள்;
இது இங்குப் புகுந்தது' என்றான். – 4459

தூதர்கள் மூலமாக வானரப் படைகளைத் திரட்டக் காலதாமத –மாவதற்கான காரணத்தை குறிப்பாக உணர்த்த தாரை 'கல்லதர் செல்ல ஏவி' என்றாள்.

சுக்கிரீவன் வானர சேனைகளை வருவிக்கத் தூதர்களை அனுப்பிய செய்தியோடும் மீண்டும் உரைக்கப்பெறுகிறது. தவிர, அனுமன் சுக்கிரீவனுக்குக் கார்கால முடிவைக் கூறி எச்சரிக்க, அவன் அனுமனையே எல்லா திசைகளுக்கும் அனுப்பக் கட்டளையிட்டான் என்றும், அதன்பின்பு அயர்ந்து விட்டான் என்றும் கூறப்பெற்றுள்ளன.

சொற்றலும், அருக்கன் தோன்றல்
சொல்லுவான், 'மண்ணில் விண்ணில்

நிற்க உரியார்கள் யாவர்,
அனையவர் சினத்தின் நேர்ந்தால்?
விற்கு உரியார், இத் தன்மை
வெகுளியின் விரைவின் எய்த,
எற்கு உரையாது, நீர் ஈது
இயற்றியது என்கொல்?' என்றான். – 4460

எவ்வுலகத்திலும் ஈடில்லாத மகாவீரர் இராமலக்குவர் என்பதை உணராமல் வாயில் அடைத்து இலக்குவனோடு போர் செய்ய நின்றதும், அந்த இலக்குவன் பெருஞ்சினத்தோடு வந்தபோது தனக்கு முன்னமே தெரிவியாதிருந்தது தவறு என்று சுக்கிரீவன் குறிப்பித்தான் என்பது.

உணர்த்தினேன்முன்னர்; நீ அஃது
உணர்ந்தநிலை; உணர்வின் தீர்ந்தாய்!
புணர்ப்பது ஒன்று இன்மை நோக்கி,
மாருதிக்கு உரைக்கப் போனேன்;
இணர்த் தொகை ஈன்ற பொன் – தார்
எறுழ் வலித் தடந் தோள் எந்தாய்!
கணத்திடை, அவனை நீயும்
காணுதல், கருமம்' என்றான். – 4461

போதையால் மயங்கியதற்கு சுக்கிரீவன் வருந்துதல்

உறவுகண்ட சிந்தையானும் உரை
செய்வான்; 'ஒருவற்கு இன்னம்
பெறல் உண்டோ, அவரால் ஈண்டு யான்
பெற்ற பேர் உதவி? உற்றது
இறல் உண்டோ? என்னின் தீர்வான்
இருந்த பேர் இடரை எல்லாம்,
நறவு உண்டு மறந்தேன்; காண
நாணுவல், மைந்த!' என்றான். – 4462

பிறர் எவராலும் பெறுவதற்கு அரியதும், அழிவில்லாதது –மான பேருதவியை நான் இராமனிடமிருந்து பெற்றிருந்தும், மது மயக்கத்தால் நன்றியை மறந்து அத்தலைவனுக்குச் செய்ய

வேண்டிய உதவி எதையும் செய்யாமல் அவனை வருந்துமாறு விட்டு வைத்ததால் இப்போது இலக்குவனைக் கண்ணாற் காணுதற்கும் வெட்கப் படுகிறேன் என்றான் சுக்கிரீவன் என்பது.

'ஏயின இது அலால், மற்று,
ஏழைமைப் பாலது என்னோ?
"தாய் இவள், மனைவி" என்னும் தெளிவு
இன்றேல், தருமம் என் ஆம்?
தீவினை ஐந்தின் ஒன்று ஆம்;
அன்றியும், திருக்கு நீங்கா
மாவையின் மயங்குகின்றாம்; மயக்கின்மேல்
மயக்கும் வைத்தாம்! – 4463

எவ்வகையிலும் காக்க முடியாத குற்றம் செய்தேனெனச் சுக்கிரீவன் மீது விரக்கம் கொண்டான். பிறவியும் அதைச் சார்ந்த பிறவும் மாயையின் லீலைகள் என்பது தத்துவம். இயல்பாகவே பொருந்தியுள்ள அந்த மாயைக்கு மேல் மற்றொரு மாயையாக மதுவருந்தும் மயக்கத்தைக் கைக்கொண்டதாகக் சுக்கிரீவன் வருந்துகின்றான். மது என்பது தன்னைக் குடித்தவனது அறிவைக் கெடுத்து தன்னிடத்திலுள்ள பிற தருமங்களையும் கெடுத்துவிடும் என்பதால் தாய் இவன் மனைவி என்னும் தெளிவு இன்றேல் என்றார். ஐம்பெரும் பாதகங்கள் : கொலை, களவு, கள்ளுண்டல், பொய் கூறல், காமம்.

' "தெளிந்து தீவினையைச் செற்றார்
பிறவியின் தீர்வர்" என்னா,
விளிந்திலா உணர்வினோரும்,
வேதமும், விளம்பவேயும்,
நெளிந்து உறை புழுவை நீக்கி,
நறவு உண்டு நிறைகின்றேனால் –
அளிந்து அகத்து எரியும்
தீயை நெய்யினால் அவிக்கின்றாரின். – 4464

மூண்டெரியும் நெருப்பில் நெய்யைச் சொரிந்தால் அந்த நெருப்பு அவியாது. மேன்மேல் வளருவது போல, இயற்கையில் மாயைக்கு வசப்பட்டுத் தீவினையில் உழல்கின்றவர்கட்

குடிப்பதையும் மேற்கொள்வது தீவினை வளர்வதற்கே காரணமாய் முடியுமென்பது.

' "தன்னைத் தான் உணரத் தீரும்,
தகை அறு பிறவி" என்பது
என்னைத் தான் மறையும் மற்றத்
துறைகளும் இசைத்த எல்லாம்,
முன்னை, தான் தன்னை ஓரா
முழுப் பிணி அழுக்கின் மேலே,
பின்னைத் தான் பெறுவது, அம்மா!
நறவு உண்டு திகைக்கும் பித்தோ? – 4465

பிறவித் துன்பம் நீங்கத் தன்னை உணர்தல் இன்றியமையாத தாயிருக்க, அந்த நன்மையோடு கள் மயக்கத்தையும் பெறுவது என்ன விந்தை எனக் கூறியது.

'அளித்தவர், அஞ்சும் நெஞ்சின்
அடைத்தவர், அறிவில் மூழ்கிக்
குளித்தவர், இன்ப துன்பம்
குறைத்தவர், அன்றி, வேரி
ஒளித்தவர் உண்டு, மீண்டு, இவ்
உலகு எலாம் உணர ஓடிக்
களித்தவர் எய்தி நின்ற கதி
ஒன்று கண்டது உண்டோ? – 4466

அஞ்சி வந்து அடைந்தவரை அபயமென்று காத்தலும், ஐம்பொறிகளை வசப்படுத்துதலும் தத்துவ அறிவு நிரம்புதலும், சுக துக்கங்களை ஒரு நிகரற்றதாகக் கருதுவதும் ஆகிய இவையே நற்கதி யடைவதற்குரிய வழிகளாகுமேயல்லாமல் கள் குடித்தலால் ஒருகாலும் நற்கதியுண்டாகாது என்பது.

'செற்றதும் பகைஞர், நட்டார்
செய்த பேர் உதவிதானும்,
கற்றதும், கண்கூடாகக்
கண்டதும், கலைவலாளர்
சொற்றதும், மானம் வந்து
தொடர்ந்ததும், படந்த துன்பம்

உற்றதும், உணரார் ஆயின், இறுதி
வேறு இதனின் உண்டோ? – 4467

தன் நண்பராகிய இராமலக்குவர் செய்த பேருதவியை மறவாதிருப்பதே நமக்கு நன்மையெனக் கூறுகிறான் சுக்கிரீவன். பகைஞர் செற்றது முதலியவற்றை மறத்தலால் தீமையும், மறவாது மனத்துக் கொண்டிருத்தலால் நன்மையும் உண்டு என்றான். உறுதி பயக்கும் நன்மைகள் யாவற்றையும் மது சிதைத்து விடும்.

வஞ்சமும், களவும், பொய்யும், மயக்கமும்,
மரபு இல் கொட்பும்,
தஞ்சம் என்றாரை நீக்கும்
தன்மையும், களிப்பும், தாக்கும்;
கஞ்ச மெல் அணங்கும்
தீரும், கள்ளினால்; அருந்தினாரை
நஞ்சமும் கொல்வது அல்லால்,
நரகினை நல்காது அன்றே? – 4468

தன்னை உண்டவரது உடம்பை மட்டும் நஞ்சு அழிக்கும்; கள்ளோ உடம்பழித்தலோடு உயிரையும் நரகத்தில் சேர்க்கும் என்பது.

'கேட்டெனன், "நறவால்; கேடு வரும்
என; கிடைத்த அச்சொல்
காட்டியது; அனுமன் நீதிக்
கல்வியால் கடந்தது அல்லால்,
மீட்டு இனி உரைப்பது என்னே?
விரைவின், வந்து அடைந்த வீரன்
மூட்டி வெகுளியால் யாம்
முடிவதற்கு ஐயம் உண்டோ? – 4469

அனுமன் இடத்திற்கேற்பத் தனது நுட்ப உணர்வினால் இலக்குவனது சீற்றத்தை தணித்திராவிட்டால் நாம் இறுதி எய்திருப்போம் என்பதில் ஐயமில்லை என்றான் சுக்கிரீவன்.

'ஐய! நான் அஞ்சினேன், இந்
நறவினின் அரிய கேடு;
கையினால் அன்றியேயும்
கருதுதல் கருமம் அன்றால்;

வெய்யது ஆம் மதுவை இன்னம்
விரும்பினேன் என்னின், வீரன்
செய்ய தாமரைகள் அன்ன
சேவடி சிதைக்க' என்றான் – 4470

இராமனின் திருவடியே சான்றாக மதுவை இனி ஒருக்காலும் விரும்பமாட்டேன் என்று சுக்கிரீவன் சூளுரை செய்தவாறு மதுவை இடைவிடாது நினைத்ததும் இடையறாது காண்டலும் பின்னர் அதனைப் பருகுவதற்குத் தூண்டுகோல் இல்லாததலின் 'கருதுதல் கருமம் அன்று' என்றான்.

என்று கொண்டு இயம்பி, அண்ணற்கு
எதிர்கொளற்கு இயைந்த எல்லாம்
நன்று கொண்டு, 'இன்னும் நீயே
நணுகு!' என, அவனை ஏவி,
தன் துணைத் தேவிமாரும்,
தமரொடும் தழுவ, தானும்
நின்றனன், நெடிய வாயில்
கடைத்தலை, நிறைந்த சீரான். – 4471

அண்ணலை எதிர்கொள்ள இயைந்தவை; கொடி, குடை, சாமரம் முதலியன. அண்ணற்கு வேற்றுமை மயக்கம் அரசனுக்குப் பட்டத்தரசியர் தவிர வேறு மனைவியரும் உண்டாகலின் 'துணைத் தேவிமார்' எனப்பட்டது.

உரைத்த செஞ் சாந்தும், பூவும்,
'சுண்ணமும், புகையும், ஊழின்
நிரைத்த பொற்குடமும், தீப மாலையும்,
நிகர் இல் முத்தும்,
குரைத்து எழு விதானத்தோடு
தொங்கலும், கொடியும், சங்கும்
இரைத்து இமிழ் முரசும், முற்றும்
இயங்கின, வீதி எல்லாம். – 4472

இலக்குவன் வருகையை யுணர்ந்த கிட்கிந்தா நகர மக்கள் மங்கலப் பொருட்களைக் கொண்டு வரவேற்றனர் என்பது.

அட்டமங்கலங்கள் கண்ணாடி, பூக்கும்பம், இடபம், வெண்கவரி, தோட்டி, திருமகள் உருவம், ஸ்வஸ்திகம், விளக்கு என்பன.

தூய திண் பளிங்கின் செய்த
சுவர்களின் தலத்தில், சுற்றில்,
நாயக மணியின் செய்த நனி
நெடுந் தூணின் நாப்பண்,
சாயை புக்கு உறலால், கண்டோர்
அயர்வுற, 'கைவிலோடும்
ஆயிரம் மைந்தர் வந்தார் உளர்'
எனப் பொலிந்தது அவ் ஊர். – 4473

இலக்குவன் சொல்லுகின்ற இடங்களிலுள்ள பளிங்குச் சுவர்களிலும், இரத்தினத்தூண்களிலும் அவனது சாயை ஆயிரக் கணக்காகத் தோன்றியதால், வீரர்கள் திரண்டு வந்தார்களோ என்று ஐயுறும்படி அந்த ஊர் விளங்கியது என்பது.

அங்கதன், பெயர்த்தும் வந்து, ஆண்டு
அடி இணை தொழுதான், 'ஐய!
எங்கு இருந்தான் நும் கோமான்?
என்றலும், 'எதிர்கோள் எண்ணி,
மங்குல் தோய் கோயில் கொற்றக்
கடைத்தலை மருங்கு நின்றான் –
சிங்க ஏறு அனை வீர! –
செய் தவச் செல்வன்' என்றான். – 4474

முற்பிறவியில் சுக்கிரீவன் செய்த தவப்பயனால்தான் உமது நட்பு அவனுக்கு கிடைத்தது என்பான். அவனைச் 'செய்தவச் செல்வன்' என்றான் என்பது. இப்படியாயினும், வரும் பிறப்புகளிலும் தவம் உதவும் என்பதால் செய்தவம் என குறித்தார்.

சுண்ணமும் தூசும் வீசி, சூடகத்
தொடிக் கைம் மாதர்,
கண் அகன் கவரிக் கற்றைக் கால்
உற, கலை வெண் திங்கள்

விண் உற வளந்தது என்ன
வெண் குடை விளங்க, வீர
வண்ண வில் கரத்தான் முன்னர்,
கவிக் குலத்து அரசன் வந்தான். – 4475

சுண்ணமும் தூசும் வீசுதல் மகிழ்ச்சியைத் தெரிவிக்கும் என்பது. சூடகத்தொடி – கைவளையின் வகைகள். சூடகம் – முன்கைவளை. தொடி – தோள்வளை இருபாலரும் அணிவது. குடையும் சாமரமும் அரச சின்னங்களாம்.

அருக்கியம் முதல ஆன
அருச்சனைக்கு அமைந்த யாவும்
முருக்கு இதழ் மகளிர் ஏந்த,
முரசுஇனம் முகிலின் ஆர்ப்ப,
இருக்குஇனம் முனிவர் ஓத, இசை
திசை அளப்ப, யாணர்த்
திருக் கிளர் செல்வம் நோக்கி,
தேவரும் மருளச் சென்றான். – 4476

அரசன் பிற அரச குலத்தவரானவரை வரவேற்கும் முறை இங்குக் கூறப்பெற்றுள்ளது. அருக்கியம் – கைகழுவ நீர்தருதல் – இது பதினாறு வகை உபச்சாரங்களான சோடச உபச்சாரங்களில் ஒன்று. மற்றவை: இருக்கையளித்தல், கை கழுவ நீர் தருதல், முக்குடி நீர்தருதல், நீராட்டல், ஆடை காத்தல், முப்புரி தருதல், சந்தனக்குழம்பு பூசுதல், மலர் சூட்டுதல், அட்சதை தூவுதல், நறுமையூட்டல், விளக்கிடல், கர்ப்பூரம் ஏற்றுதல், அமுதம் ஏந்ததல், அடைக்காய் தர மந்திர மலரால் அருச்சித்தல் என்பன.

வெம் முலை மகளிர் வெள்ளம்
மீன் என விளங்க, விண்ணில்
கம்மை வான் மதியம் குன்றில்
தோன்றியது எனவும் தோன்றி,
செம்மலை எதிர்கோள் எண்ணி,
திருவொடு மலர்ந்த செல்வன்,
அம்மலை உதயம் செய்த
தாதையும் அனையன் ஆனான். – 4477

சுக்கிரீவனுக்கு அவனது மகிழ்ச்சியின் சிறப்பை விளக்க சந்திரனும், அவனது அழகைச் சுட்ட உதயகிரியில் தோன்றிய சூரியனும் உவமைகளாம். கம்மை பேரொளி.

சுக்கிரிவனைக் கண்டவுடன் எழுந்த சீற்றத்தை இலக்குவன் ஆற்றிக் கொள்ளுதல்

தோற்றிய அரிக்குலத்து
அரசை தோன்றலும்,
ஏற்று எதிர்நோக்கினன்; எழுந்தது
அவ் வழிச்
சீற்றம்; அங்கு; அதுதனை
தெளிந்த சிந்தையால்
ஆற்றினன், தருமத்தின்
அமைதி உன்னுவான். – 4478

தங்கள் திறத்தில் குறித்த தவணைப்படி வராது தவறிய சுக்கிரீவன் எதிர்ப்பட்ட அளவில் இலக்குவனுக்குச் சினம் மூண்டதை இப்பாடல் சுட்டும். இதில் அனுமன், அங்கதன் ஆகியோரால் இலக்குவனின் சினம் பெரும்பாலும் தணிந்தது என்பதும், அது முற்றிலும் நீங்கவில்லை என்பதும் சுக்கிரீவனைக் கண்டதும் தருமத்தின் அமைதி உன்னியும், இராமன் முன் கூறியதை ஒட்டியும் தன் தெளிந்த சிந்தையால் அச்சினத்தை மாற்றினான் என்பதும் இங்கு அறியத்தக்கன.

எழு என மலை என எழுந்த தோள்களால்
தழுவினர் இருவரும்; தழுவிதையலார்
குழுவொடும் வீரர்தம் குழாத்தினேடும் புக்கு
ஒழிவு இல் பொற் கோபுரத்து உறையுள் எய்தினார்.

– 4479

46. கள்ளுண்ணாமை பற்றித் திருமூலர்

திமுநீர் பசுப்பெறின் சுயந்தொறும் தேரா
கமுநீர் விடாய்த்துத்தம் காயம் சுருக்கும்
முழுநீர்க் கள்ளுண்போர் முறைமை அகன்றோ
செழுநீர்ச் சிவன்தன் சிவானந்தத் தேறலே!

சித்தம் உருக்கிச் சிவமாம் சமாதியில்
ஒழித்த சிவானந்தத் தோவாத தேறலைச்
சுத்த மதுவுண்ணச் சுவானந்தம் விட்டிடா
நித்தல் இருத்தல் கிடத்தல்கீழ்க் காலே!

காமமும் கள்ளும் கலதிகட்கே ஆகும்
மாமல முஞ்சம யத்தள் மயலுறும்
போமதி யாகும் புனிதன் இணையடி
யோமய ஆனந்தத் தேறல் உணர்வுண்டே.

வாமத்தோர் தாமும் மதுவுண்டு மாள்பவர்
காமத்தோர் காமக்கள் உண்டே கலங்குவர்
ஓமத்தோர் உள்ளொளிக்கு உள்ளே உணர்வார்கள்
நாமத்தோர் அன்றே நணுகுவர் தாமே!

உள்ளுண்மை ஓரார் உணரார் பசுபாசம்
வள்ளண்மை நாதன் அருளினில் வாழ்வுறார்
தெள்ளுண்ணாமை ஞானச் சிவயோகம் சேர்வுறார்
கள்ளுண்ணும் மாந்தர் கருத்தறி யாரே.

மயக்கும் சமய மலமன்னும் மூடர்
மயக்கும் மதுவுண்ணும் மாமூடர் தேரார்
மயக்குறும் மாமாயை மாயையின் வீடு
மயக்கில் தெளியின் மயக்குறும் அன்றே!

இராப்பகல் அற்ற இடத்தே இருந்து
பராக்கற ஆனந்தத் தேறல் பருகார்
இராப்பகல் அற்ற இறையடி இன்பத்
திராப்பகல் மாயை இரண்டிடத் தானே.

சத்தியை வேண்டிச் சமயத்தோர் கள்ளுண்பர்
சத்தி அழிந்தது தம்மை மறத்தலால்
சத்தி சிவஞானம் தன்னில் தலைபட்டுச்
சத்திய ஞானஆ னந்தத்திற் சார்தலே.

யோகிகள் கால்கட்டி ஒண்மதி ஆனந்தப்
போத அமுதைப் பொசித்தவர் எண்சித்தி
மோகியர் கள்ளுண்டு மூடராய் மோகமுற்று
ஆகும் மதத்தால் அறிவழிந்தாரே.

உண்ணீர் அமுத மறுமூ றலைத்திறந்
தெண்ணீர் குரவன் இணையடித் தாமரை
நண்ணீர் சமாதியி னாடிநீ ரானலங்
கண்ணாற் றொடெச்சென்று கால்வழி காணுமே.

❑

47. சுக்கிரநீதி கூறும் மதுவின் தீமை

இந்துமதத்தில் பல்வேறு புராணக்கதைகள் அதிக மது மயக்கத்தில் மிகவும் பாதிப்பு அடைந்ததை தெளிவாகக் கூறுகின்றன.

சுக்கராச்சாரியார் என்பவர் அசுரர்களின் குருவாக விளங் -கினார். பிரகஸ்பதி என்பவர் தேவர்களின் குருவாக விளங்கினார். ஒரு காலகட்டத்தில் தேவர்களுக்கும், அசுரர்களுக்கும் கடுமை -யான போர் நடந்தது. இந்த போரில் இரண்டு பக்கமும் பலத்த சேதம் ஏற்பட்டது.

அசுரர்களின் குருவான சுக்ராச்சாரியார் "சஞ்சீவினி" என்ற மந்திரவித்தையை அறிந்திருந்தார். இதன்காரணமாக, போரில் இறந்தவர்களை மீண்டும் உயிர் பெறச் செய்தார். இதனால் தேவர்களுக்குப் போரில் பலத்த உயிர்ச்சேதம் ஏற்பட்டது.

இதன் காரணமாக, பிரகஸ்பதியின் மகன் கசனை, தேவர்கள் அணுகி உன்னால் மட்டுமே சுக்கராச்சாரியாரிடம் சென்று சஞ்சீவினி மந்திரத்தை அறிந்து வரமுடியும். ஆகையால்,"நீ சுக்கராச்சாரியிடம் சென்று, குருவாக அவரை ஏற்று பணிவிடை செய்து அம்மந்திரத்தை அறிந்து வா" என அனுப்பிவைத்தனர்.

அந்த நேரத்தில் சுக்ராச்சாரியார் அசுரர்களின் அரசராக விளங்கிய விநவு பர்வீன் நகரத்தில் இருந்தார். கசன் அவரிடம் சென்று தன்னை அறிமுகம் செய்து கொண்டு தம்மைச் சீடனாக ஏற்றுக்கொள்ளுமாறு வேண்டினான்.

சுக்ராச்சாரியாரும் எந்த மறுப்பும் கூறாமல், சீடனாக ஏற்றுக் கொண்டார். சுக்ராச்சாரியாருக்கும், அவரது மகளுக்கும் பணி விடைகள் செய்து கொண்டு இருந்தான் கசன். இந்நிலையில் சுக்ராச்சாரியாரின் மகள் தேவயானிக்கும் கசனுக்கும் காதல் மலர்ந்தது.

கசன் சஞ்சீவினி வித்தையை கற்றுக்கொள்வதற்காகவே வஞ்சமாக இங்கு வந்துள்ளான் என்பதை அசுரர்கள் அறிந்து கொண்டனர். இதனால் அசுரர்கள் கசனை அழித்துவிட தீர்மானித்தனர்.

ஒருநாள் குருவின் பசுக்களை வனத்திலே மேய்த்துக் கொண்டிருந்தான் கசன். அப்போது அசுரர்கள் ஒன்றுகூடி கசனை வெட்டிக் கொன்று விடுகின்றனர். துண்டு துண்டாக வெட்டி நாய்களுக்கு இறையாகப் போட்டுவிடுகின்றனர். இதன்பின்னர் கசன் அழிந்தான் என மகிழ்கின்றனர். கசனைக் காணாமல் தேவ -யானி தன் தந்தையிடம் சென்று முறையிட்டாள். சுக்ராச்சாரியார் தன்னுடைய ஞானத்தால் நடந்ததை அறிந்து கொண்டார். தன்னிடமுள்ள சஞ்சீவினி மந்திரத்தைப் பயன்படுத்தி நாய்களின் உடம்பைப் பிளந்து பிண்டங்களை ஒன்று சேர்த்து மீண்டும் உயிர் பெறச் செய்தார்.

இதன்பின் மறுமுறை, கசனைக் கொன்று அவனது உடலை மாவாக அரைத்துக் கடலில் கரைத்து விடுகின்றனர். இப்பொழுதும் சுக்ராச்சாரியார் நடந்ததை அறிந்து அவனைக் காப்பாற்றி விடுகிறார். இதனால் அசுரர்கள் கோபம் கொண்டனர். வெகுண்டெழுந்தனர். மூன்றாவது முறையாக, கசனின் உடலைத் தீயில் பொசுக்கி விட்டனர். அந்தச் சாம்பலை எடுத்து மதுவினில் கரைத்து, மதுப்பழக்கமுள்ள சுக்ராச்சாரியாருக்கு கொடுத்து விடுகின்றனர். அவரும் அந்த சாம்பல் கலந்த மதுவைக் குடித்து விடுகிறார். இந்த நிலையில் கசனைக் காணாமல் தேவயானி மீண்டும் முறையிடுகிறாள். சுக்ராச்சாரியாருக்கு அசுரர்கள் மேல் கோபம் உண்டாகிறது. இந்த கோபத்திற்கு அவருடைய மகள் தேவயானியும் காரணமாக இருந்தாள்.

சுக்ராச்சாரியார் தியானத்தில் அமர்ந்து சஞ்சீவினி மந்திரத்தைக் கூறி “கசனே எங்கிருந்தாலும் வா” என்று அழைக் -கிறார். கசன் அவருடைய வயிற்றுக்குள் இருந்து கொண்டு

கூக்குரல் இடுவது அவருக்குக் கேட்டது. மதுபானத்தில் கசனின் எரித்த சாம்பலை அசுரர்கள் கரைத்துக் கொடுத்ததை அறிகிறார். மதுபானம் அருந்தும் பழக்கத்தால் மதி இழந்துவிட்டதை உணர்ந்து வருத்தப்பட்டார். உடனே சுக்கிர நீதியில் நீதிமொழியாக,

"மதுவினாலே புத்தி கெட்டுப் போகிறது. மதுபானம் அருந்துபவனை விட்டுத் தருமமானது உடனே விலகிப் போய்விடுகிறது. இதனால் எல்லோரும் இகழ்ச்சிக்கு தள்ளப் படுகின்றனர். எனவே, இன்று முதலாக அனைவரும் அறத்தின் -படி நின்று மதித்து நடப்பது அவசியம். இதன் காரணமாக யாரும் மது அருந்தக்கூடாது"

மிக்க வருத்தத்தோடு தனது மகளிடம் உன்னுடைய காதலன் கசன் வெளியே வரவேண்டுமானால் எனது வயிற்றைப் பிளந்து கொண்டுதான் வரவேண்டும். நான் இறப்பதற்கு நீ விருப்பம் கொள்கிறாயா? எனக் கேட்டார். அதற்கு அவர் மகள் தேவயாணியோ, நீங்கள் இருவரும் இல்லாமல் ஒரு கணப்பொழுது கூட என்னால் வாழ முடியாது என்று கூறுகின்றாள். சுக்ராச்சாரியார் உடனே வேறுவழியின்றி தன் வயிற்றுக்குள் இருக்கும் கசனுக்கு சஞ்சீவினி மந்திரத்தை உபதேசம் செய்து விடுகிறார். கசன் மந்திரத்தை நன்றாகக் கிரகித்துக் கொண்டு சுக்ராச்சாரியார் வயிற்றைப் பிளந்து கொண்டு வெளியே வந்தான். தான் கற்றுக் கொண்ட சஞ்சீவினி மந்திரத்தைப் பயன்படுத்தி சுக்ராச்சாரியாரை பிழைக்கச் செய்தான்.

ஒரு குலத்தை காத்துவந்த இரகசியங்கள் மது மயக்கத் -தினால் அடுத்தவருக்கு உபதேசித்து விட்டதை நினைத்து சுக்ராச்சாரியார் வெட்கப்பட்டார். இவ்வாறு மதுவின் மயக்கத்தால் நடந்த இன்னல்களை சுக்ராச்சாரியார் கதையின் மூலம் அறிய முடிகிறது.

❑

48. மது என்னும் ஓர் கொடிய விஷம்

முதலில் நாம் மதுவைக் குடிப்போம்!
பிறகு மது நம்மையே குடித்துவிடும்!

முதலில் வேடிக்கையாய் குடிப்போம்!
பிறகு குடிப்பதே வாடிக்கையாகிவிடும்!

முதலில் பொழுதுபோக்காக குடிப்போம்!
பிறகு பொழுதெல்லாம் குடிப்போம்!

முதலில் வாழ்நாளில் ஒரேநாள் எனக் குடிப்போம்!
பிறகு குடிப்பதற்கென்றே வாழ்வோம்!

முதலில் மறைந்து மறைந்து குடிப்போம்!
பிறகு மானமிழந்தும் குடிப்போம்!

முதலில் குடிக்கவேண்டும் எனக் குடிப்போம்!
பிறகு விட்டுவிட வேண்டும் எனத் துடிப்போம்!

முதலில் நமது கட்டுப்பாட்டில் இருக்கும்!
பிறகு நாம் அதன் கட்டுப்பாட்டில் இருப்போம்!

எனவே குடிகெடுக்கும் குடியை
இன்றுமுதல் விட்டொழிப்பொம்!

- ☆ குடி – குடும்ப வாழ்வைப் பாலைவனமாக்கிறது!
- ☆ குடி – பெண்களை பெரும் துயரில் ஆழ்த்துகிறது!
- ☆ குடி – நம் குழந்தைகளைப் பட்டினி போடுகிறது!
- ☆ குடி – மனிதனை மிருகமாக்குகிறது!
- ☆ குடி – மனிதனைக் கொடிய நோயாளியாக்குகிறது!
- ☆ குடி – மனிதனைச் சிறுகச் சிறுக கொல்லுகிறது!

- ☆ குடிப்பதைத் தடுப்பது கோடி புண்ணியம்.
- ☆ மதுக்கடைப் பழக்கம் மயானத்தில் முடியும்.
- ☆ மதுக்கடை வருமானம் அரசுக்கு அவமானம்.
- ☆ மதுவினால் பாதிக்கப்பட்ட குடும்பங்களுக்கு அரசு சட்டப்படி நஷ்ட ஈடு வழங்க வேண்டும். ☐

49. மதுவால் ஏற்படும் பேரிழப்புக்கள்!

ஒரு குடும்பத்தில் ஒருவர் மது குடித்தால் ஏற்படும் இழப்புகள் :

1. குடும்ப வருமானம் இழப்பு!
2. குடும்பத்தைக் கவனிக்க வேண்டிய ஒரு தந்தை குடித்தால், பிள்ளைகளின் மகிழ்ச்சி, கல்வி, நல்ல எதிர்காலம் முதலியன இழப்பு!
3. குடிப்பவர் சுமார் 4 மணி நேரத்திற்குமேல் மது போதையில் இருப்பதால், அவரது உழைப்பு இழப்பு!
4. மது, சிறுமூளை, இதயம், குடல், கல்லீரல், கணையம், சிறுநீரகம், நரம்பு மண்டலம், இரத்த ஓட்டம் இவற்றின் செயல்பாட்டை முடக்கி, முழு உடல் நலத்தையும் கெடுத்து கொடிய வியாதியைக் குடிப்பவருக்குத் தருகிறது. இதனால் உடல் ஆரோக்கியம் இழப்பு!
5. குடிப்பவர் நோய்வாய்ப்படும் போது அவருக்கு மருத்துவ மனையில் சிகிச்சை அளிக்கப்படுகிறது. பல மருத்துவர்கள் மற்றும் செவிலியர்கள் அவரைக் கவனிக்க வேண்டியுள்ளது. விலையுயர்ந்த மருந்துகள் சிகிச்சைக்கு பயன்படுத்தப் படுகின்றன. இதனால் அரசுக்கு பெரும் நிதி இழப்பு!
6. பெற்றோர், மனைவி, பிள்ளைகள், உறவினர்கள், நண்பர்கள் முதலிய யாவரும் குடிப்பவரை ஒதுக்குவதால் அவர் மன அமைதி இழக்கிறார். தன்னம்பிக்கை இழப்பு, குடும்ப உறவுகள் இழப்பு, கணவன் - மனைவி அன்பு இழப்பு, தந்தை - பிள்ளை பாசம் இழப்பு, மொத்தத்தில் குடும்ப அமைதிக்குப் பேரிழப்பு!
7. குடிப்பவரால் ஏற்படும் சாலை விபத்துக்கள் மற்றும் அடிதடி தகராறுகள், கொலை போன்ற குற்றங்களால் காவல் துறைக்கும், நீதித்துறைக்கும் ஏற்படும் செலவுகள் மற்றும்

அவர் சிறை தண்டனை பெற்ற பிறகு, அவரைப் பராமரிக்க அரசுக்கு ஆகும் செலவுகளால் ஏற்படும் நிதி இழப்பு!

8. குடிப்பவர் வாகனம் ஓட்டும்போது நடைபெறும் விபத்துக் -களால் அப்பாவிப் பொதுமக்களுக்கு ஏற்படும் உடல் ஊனங்கள் மற்றும் உயிர் இழப்பு!

9. குடித்துப் பழகிவிட்டவர், குடிப்பதற்குப் பணம் வேண்டும் என்பதற்காகத் திருடுதல், கொள்ளை அடித்தல், பிக்பாக்கெட் செய்தல் மற்றும் குடிபோதையில் செய்கின்ற பல சமூக விரோத செயல்களால் சமுதாய அமைதிக்கே பேரிழப்பு!

10. கிடைத்தற்கரிய மனிதப் பிறப்பு கிடைத்துள்ளதை மறந்து, பல ஒழுங்கீனமான செயல்களில் மதுப்பழக்கம் ஈடுபட வைப்பதால் உயரிய மனிதப் பிறவிக்குப் பேரிழப்பு!

– வெளியீடு : காந்தி ஆசிரமம், ஆனைமலை.

கோவை மாவட்டம், மேற்குத் தொடர்ச்சி மலையை ஒட்டி ஆழியாறு நதிக்கரையில் அமைந்துள்ள அழகிய ஊர் ஆனைமலை. இங்கு காந்தி ஆசிரமம் செயல்பட்டு வருகிறது. இந்த ஆசிரமத்திலிருந்து மதுவிற்கு எதிராக கடுமையாகப் போராடி வருகின்றனர். தொடர்ச்சியாக துண்டறிக்கைகள் வெளியிட்டு வருகின்றனர்.



50. மது ஒழிப்பைப் பற்றிய பாடல்கள்

மகிழ்ச்சியில் ஆரம்பித்து
துன்பத்தில் முடிவது

போதை என்ற பாதையிலே
போகின்ற மானிடா!
வேதனைகள் எத்தனை – என்ற
விபரம் தனை கேளடா!

ஈன்ற தாயின் கனவுகள்
ஈடேறும் முன்னரே!
இன்னுயிரை மாய்த்திட
இறுமாப்பு கொள்வதேன்?

போடுகின்ற புகையிலை
புற்றுநோயை வளர்க்குமே!
புகைக்கின்ற பீடியும் – உன்னை
புகையாக்கத் துடிக்குமே!

ஆல்கஹாலின் சக்தியை
அறிந்து கொண்ட பின்னரும்
ஆறடி மண்ணிலே – நீயும்
ஆழ்ந்துறங்க ஆசையோ!

போனது போகட்டும் இனியேனும்
போதையை நிறுத்திவிட்டு
பாதையை மாற்றிக் கொண்டால்
பண்பட்ட மனிதனாய் – இப்
பாரினிலே பவனி வரலாம்.

– பிரஜாபிதா பிரம்மா குமாரிகள்
ஈஸ்வரிய விஷ்வ வித்யாலயம்

வள்ளிமலை திருப்புகழில் மதுஒழிப்பு பற்றிய பாடல்

வள்ளிமலைத் திருப்புகழ்

புந்நாகவராளி) உள்நோக்கம் பெற (ஆதிதாளம்

தய்யத் தனாத்த தனதான
கள்ளப்புலாற்கி ருமிவிடு –
கள்வைத்த தோற்பை சுமவாதே;
உள்ளக் கணோக்கு மறிவூறி –
உள்ளத்தை நோக்க அருள்வாயே;
வெள்ளைப் பிராட்டி இறைகாணா –
வெள்ளத்தை ஏற்ற பதிவாழ்வே;
வள்ளிக் குலாத்தி கிரிவாழும் –
வள்ளிக்கு வாய்த்த பெருமாளே.

விநாயகர் புராணத்தில் மதுஒழிப்பு பற்றிய பாடல்

அறிவை அழிக்கும் செயலழிக்கும்
அழியா மானம் தனைஅழிக்கும்
செறியும் அறிஞர் மதியாத
செருக்கை விளைக்கும் ஈன்றாளும்
முறியும் வெறுப்பு மிகவிளைக்கும்
முனிவு விளைக்கும் பகையஞ்சாக்
குறிகள் விளைக்கும் நகைவிளைக்கும்
கொள்ளேல் கள்ளுண்டலை மைந்தா! (140)

அறநெறிச் சாரம் என்ற நூலில்

மதுஒழிப்பு பற்றிய பாடல்

ஒளியும் ஒளிசான்ற செய்கையும் சான்றோர்
தெளிவுடையான் என்றுரைக்கும் தேசும் – களி என்னும்
கட்டுரையால், கோது, படுமேல், இவை எல்லாம்
விட்டொழியும் வேறாய் விரைந்து. (86)

மது

– பூபாளம் ப.முருகேசபாண்டியன்

தனக்கடிமை ஆகுமட்டும்
தவங்கிடந்து
மனக்கவலை கூட்டுவிக்கும்
மா மருந்தே
மதுவே!
திராட்சை ரசமென்று
பேர் படைத்த
திரவ ராட்சசமே!
நீ
ரசமென்று பேர்
படைத்தாய்
ரசிக்கும் வரையில்
விசமென்று பேர்
படைத்தாய்
புசிக்கும் சுகத்தில்
காரென்றும் நீரென்றும்
மோரென்றும்
பேர்படைத்த
கவிதை நயத்தை
மாமழைக்கு
ஏற்றி வைத்துக்
கவிஞர் பாடுவார்

விசமென்றும் நிசமென்றும்
நீசமென்றும் பேர்படைத்த
உன்னை
நல்ல பேரொடு
நாடறிய வீடறியக்
கட்டுண்டு கிடந்தாரை
மட்டுண்டு மதிமயங்கச்
செய்திட்ட
சிறுக்கியே!
சீமை அமிலமே!
உனக்கொரு நாள் விடுதலை
உள்ளபடி கிட்டும்வரை
உனக்கு – குடிகெடுக்கும் உனக்கு
அந்தாதிபாடி – அறம்பாடி
அரற்றுவனே! அறிவாயா?
இல்லாவிடில் மதியை – மயக்கும்
மதுவே! நீ கம்பி நீட்டு
கண்ணியவான்கள் விதியை உருவாக்கி
சூழ்ந்திருக்கின்றார்கள் வீழ்த்திடவே!

51. எதை விரும்புகிறீர்கள்

நேர்மையாக இந்தக் கேள்விகளுக்கு விடை சொல்லுங்கள்!
உங்கள் உள்ளம் உங்களைச் செயலற்றிருக்க விடுமா என்று பாருங்கள்!

1. மதுபானக்கடையிலே விழுந்து பரிதாபமாக சாவதை நீங்கள் விரும்புகிறீர்களா?
2. உங்களைப் பெற்ற தாயை மதுக்கடையிலே பார்ப்பதை நீங்கள் நேசிக்கிறீர்களா?
3. உங்கள் அன்பு மனைவியை மதுக்கடையிலே சந்திப்பதை விரும்புகிறீர்களா?
4. உங்கள் மகனிடம் ஓய்வுப் பொழுதை மதுபானக் கடையில் போய்ச் செலவிடுமாறு சொல்லுவீர்களா?
5. உங்கள் வீட்டின் அருகில் மதுபானக் கடையை வைத்து நடப்பதை சகிப்பீர்களா?
6. மதுக்கடைப் பக்கம் சுற்றுபவர்களை உங்களின் நெருங்கிய தோழர்களாகக் கருதிப் பெருமை கொள்வீர்களா?
7. மதுக்கடை வாடிக்கையாளர் என்பதை ஒரு பெரிய கௌரவமாக கருதுவீர்களா?
8. மது குடிப்பதால் உங்களுக்கு ஏற்படும் இழப்புகளை தாங்கிக் கொள்வீர்களா?
9. மது குடிப்பதால் உங்கள் குடும்பத்தினர் படும் இன்னல்களை சகித்துக் கொள்வீர்களா?
10. மதுகுடித்துவிட்டு அதிக போதையால் தாங்கள் எங்கு விழுந்து உள்ளீர்கள் என்றுகூட தெரியாமல் பலர் முகம் சுளிக்க கீழே விழுந்து கிடப்பதைப் பெருமையாக நினைப்பீர்களா?

இந்தக் கேள்விகளுக்கு ஆமாம் என்று நீங்கள் பதில் சொல்வீர் -களானால், நீங்கள் மதுப்பழக்கம் நாட்டிலே பரவுவதை எதிர்க்க வேண்டாம்.

எதிராக விடை சொல்வீர்களானால், ஒரு நல்ல இந்திய குடிமகன் என்ற முறையில் மதுவிலக்கிற்காகப் போராடும் சக்திகளோடு சேர்ந்து இப்போதே பாடுபடத் தொடங்குங்கள்.

- மதுவிலக்குப் போதகன்

52. தேசிய சிறுகதைகளில் மது ஒழிப்பு

விடுதலைப் போராட்டத்தின்போது பத்திரிகைகளின் பங்கு மிகவும் மகத்தானது. வெறும் பிரச்சார எழுத்தாக இல்லாமல் கொண்ட லட்சியத்தை உணர்த்தும் வகையில் சிறுகதைகள் எழுதப்பட்டன. மேலும் மேலைநாடுகளில் போராட்ட குணம் படைத்தவர்களின் வரலாறுகளை மொழிமாற்றம் செய்தும், அந்த நூல்களை மையப்படுத்தியும் கதைகள் எழுதப்பட்டன.

உதாரணமாக பிரஞ்சு நாட்டு விடுதலைக்குப் போராடிய வீரப்பெண்மணி "ஜோன் ஆப் ஆர்க்" வாழ்க்கையைத் தழுவி வ.வே.சு. அய்யர் அவர்கள் "மங்கையர்க்கரசி" என்ற சிறுகதையை எழுதினார்.

மேலும் பிரம்மச்சர்யம், கதர் உற்பத்தி விற்பனை, சாதி ஒழிப்பு, தீண்டாமை விலக்கு, தேசீய விடுதலை, அஹிம்சை, சத்தியம், ஒழுக்கம், பகை ஒழிப்பு, மது ஒழிப்பு போன்ற சமூக சீர்திருத்தக் கருத்துக்களை மையப்படுத்தி சிறுகதைகள் பலரால் எழுதப்பட்டன.

உயிரோட்டமும், நாட்டுப்பற்று உணர்வும் கொண்ட பல கதைகளை போராட்டக் காலத்தில் எழுதிய பெருமை கல்கி, அகிலன், புதுமைப்பித்தன் போன்றோரைச் சாரும்.

மதுவிலக்கை மையமாகக்கொண்டு எழுதப்பட்ட கதை -களில் கல்கி அவர்கள் எழுதிய "தெய்வயானை" என்ற கதை மிகவும் உருக்கமானது.

எந்தப் பெண்ணை திருமணம் செய்ய வேண்டும் என்ற ஏக்கத்திலே குறுக்குவழியிலே பணம் ஈட்டக்கூடிய கள்ளுக் கடையை குத்தகைக்கு எடுத்து பணத்தைச் சம்பாதித்தார். திரு மண ஆசையில் வெற்றிகிட்டும் தருவாயில் ஆசைக்குரிய அந்தப் பெண்ணே மோசமான குடிப்பழக்கத்திற்கு பலியானதை அறிந்து அதிர்ச்சி அடைந்து மனமுடைந்து கள்ளுத்தொழிலுக்கு கணக்குத்

தீர்த்து விட்டு அந்த ஊரை வீட்டு வெளியேறி, உள்ளத்திற்கு அமைதி தேடிய ஓமக்குட்டி முதலியாரின் கதை மிகவும் உருக்கமானது.

"திக்கற்றபார்வதி" என்ற கதையை மூதறிஞர் இராஜாஜி எழுதினார். கொடிய மதுப்பழக்கத்தின் கோரத்தாண்டவத்தால் கருப்பனின் ஏழைக்குடும்பம் சிதறுண்டு, கதியற்ற பார்வதி கற்பழிக்க நேரிட்டு இறுதியில் கணவன் சிறை செல்லவும் மனைவி மரணத்தைத் தழுவவும் வாழ்க்கை முடிந்து போகின்றது.

இக்கதையில் கள்ளின் கொடுமையால் மானம் இழந்து, அறிவு இழந்து குடும்பம் நாசக்கேடானதை மிக அழுத்தமாக சித்தரித்து இருந்தார்.

நாராண துரைக்கண்ணனின் "இராவணாகாரம்" என்ற கதை காந்திய தொண்டர்கள் தேசிய புரட்சியின் அம்சமாக நடத்திய கள்ளுக்கடை மறியலைத் தெளிவாகக் கூறுகிறது.

சூரியன் அஸ்தமிக்காத பிரிட்டிஸ் சாமராஜ்யத்தையே கிடுக்கிட வைக்கும் காந்திய தொண்டர்களை, ஆப் காரி காண்ராக்டரின் உருட்டல், மிரட்டல்களுக்கு பயந்துபோய் விடுவார்களா என்று பொதுமக்கள் பேசிக்கொள்கின்றனர்.

கள்ளுக்கடை முதலாளியின் சகோதரர் "தம்பிஅய்யா" என்பவர் துப்பாக்கி கொண்டு கள்ளுக்கடை மறியல்காரர்களை சுட வருகிறார். துப்பாக்கி முனைக்கு தன் மார்பை பத்மநாபன் என்னும் தொண்டன் திறந்து காட்டுகிறான். காவல்துறை "தம்பிஅய்யா"வைக் கைது செய்து போலீஸ் வண்டியில் ஏற்றி அழைத்துச் செல்லுகின்றனர்.

விமோசனம் என்ற சிறுகதையை சோமாஸ் அவர்களும், புதுக்கடை என்னும் சிறுகதையை பெ.தூரன் அவர்களும், அடிச்சுவடு என்னும் சிறுகதையை புலவர் நாக.சண்முகம் அவர்களும், மதுவிலக்கு என்னும் சிறுகதையை வி.எஸ்.சுப்பையா அவர்களும் எழுதினர்.

எந்தக் காலத்திலும் நீதிக்குப்போராடுவோர் பல்வேறு துன்பங்களைத் தாங்கி இறுதியில் வெற்றி பெற முடியும் என்பதை பல தேசிய சிறுகதைகள் வெளிப்படுத்தின. இச்சிறுகதைகள் மக்கள் மனதில் மதுஒழிப்பிற்கான கொள்கையை ஆழமாக வலுப்படுத்தியது.

1. தெய்வயானை

— கல்கி

என்னுடைய நண்பர் வெற்றிலைப் பாக்குக்கடை ஓமக் குட்டி முதலியாரும் நானும் ஒருநாள் கடற்கரையில் உட்கார்ந்து பேசிக் கொண்டிருந்தோம். மதுவிலக்கு இயக்கத்தைப் பற்றிப் பேச்சு வந்தது. "இருக்கட்டும், நீங்கள் ஒரு காலத்தில் சாராயக்கடை குத்தகை எடுத்திருந்தீர்களாமே? அதை எப்படி விட்டீர்கள்? உத்தரமேரூரை விட்டுச் சென்னைப் பட்டணத்துக்கு ஏன் வந்தீர்கள்?" என்று நண்பரைக் கேட்டேன். "அது பெரியகதை!" என்றார் முதலியார்.

"பாதகமில்லை, சொல்லுங்கள்" என்றேன். ஓமக்குட்டி முதலியார் சொல்லத் தொடங்கினார்:

நாங்கள் ஜாதியில் நெசவுக்காரர்கள்; ஆனாலும் எங்கள் குடும்பத்தில் மட்டும் இரண்டு தலைமுறையாய் நெசவுத்தொழில் செய்வது கிடையாது. எங்களுடைய பாட்டனார் எங்கள் ஊரிலேயே பெரிய பணக்காரராக இருந்தார். ஆனால் என் தகப்ப -னார் காலத்தில் சொத்தெல்லாம் பல வழிகளில் அழிந்துவிட்டது. என்னையும் என் தாயாரையும் ஏழைகளாய் விட்டுத் தந்தை இறந்து போனார். அப்பொழுது எனக்கு மூன்றே வயது. கடன்காரர்கள் எங்கள் சொத்தையெல்லாம் எடுத்துக்கொண்டு விட்டார்களாம்.

என் தாயைப் பெற்ற பாட்டனார் ஒருவர் இருந்தார். அவர் அப்போது எங்களுடன் வந்து வசிக்கத் தொடங்கினார். அவர் கிழவர்; வேலை செய்யத் தள்ளாதவர். ஆனால் நல்ல கெட்டிக் -காரர். எங்களுக்கு மிஞ்சிய சொற்ப நிலத்தின் சாகுபடிக்கு வேண்டிய ஏற்பாடு செய்து குடும்ப காரியங்களைச் சீராக நடத்தி வந்தார். நான் தினந்தோறும் பகலில் எங்கள் மாடுகளை ஓட்டிச் சென்று வருவேன். மாலையில் வீட்டுக்கு வந்து மாடுகளைக் கட்டி விட்டுப் பாட்டன் பக்கத்தில் உட்காருவேன். அவர் இராமாயண, பாரதக் கதைகள் சொல்லுவார். விக்கிரமாதித்தியன் கதை, தேசிங்கு

ராஜன் கதை முதலியனவும் சொல்லுவார். இவைகளையெல்லாம் நான் மிகவும் சுவாரசியமாகக் கேட்டுக்கொண்டிருப்பேன்.

ஒரு நாள் அவர் நளன் கதை சொல்லிக் கொண்டிருந்தார். தமயந்திக்கு இரண்டாவது சுயம்வரம் என்பதாக நளனுக்குச் செய்தி வந்த இடத்தில் கதையை நிறுத்தி, 'உடம்பு சரியில்லை அப்பா! ஏதோ ஒரு மாதிரியா இருக்கிறது. பாக்கிக் கதையை நாளைக்குச் சொல்லுகிறேன்' என்றார்.

கதையை அவர் முடிக்கவேயில்லை. மறுநாள் அவருக்கு உடம்பு அதிகமாய் விட்டது. ஊரார் அவர் செத்துப்போய்விடுவார் என்று பேசுவதைக் கேட்டேன். செத்துப்போவதென்றால் அது என்னவென்று எனக்கு அப்போது முழுதும் புலப்படவில்லை. எலி, பெருச்சாளி, பூச்சியின் சாவுதான் தெரியும். ஆனாலும் எல்லாரும் பேசிக்கொள்வதைக் கேட்டு ஒருவிதத் துக்கம் உண்டாயிற்று. அதைவிடக் கதை பாக்கியாய் நின்றுவிட்டதே என்ற துக்கம் தான் அதிகமாயிருந்தது! எனக்கு இப்போது நன்றாய் ஞாபகமிருக்கிறது. அவர் அருகில் சென்று "தாத்தா! நீ செத்துப்போகிறாயா? வேண் -டாம்! கதையை முடிக்காமல் செத்துப் போக வேண்டாம்" என்று சொல்லி அழுதேன். அப்போது அவர் புன்சிரிப்பு சிரித்து, "குழந் -தாய்! இதற்காக நீ வருத்தப்படாதே; நீ புத்தகம் படிப்பதற்குக் கற்றுக்கொள். நான் உனக்குச் சொன்ன கதைகளைவிட இன்னும் எவ்வளவோ நல்ல கதைகள் புத்தகங்களில் இருக்கின்றன. நீ படிக்கக் கற்றுக்கொண்டால், ஆயிரங்கதைகள் படிக்கலாம். மற்றவர் -களுக்கும் சொல்லலாம்" என்றார். மறுநாள் அவர் இறந்து போனார்.

பாட்டன் கூறிய வார்த்தைகளை நான் மறக்கவேயில்லை. எங்கள் ஊருக்கு அடுத்த ஊரில் ஒரு பள்ளிக்கூடம் இருந்தது. தாயிடம் உத்தரவு பெற்று அந்தப் பள்ளிக்கூடத்திற்குப் போனேன். எழுத்துக்கூட்டிப் படிக்கத் தெரியும் வரையில் நான் அங்கே இருந்தேன். வீட்டுவேலை, வயல் வேலைகளைக் கவனிக்க வேண்டியிருந்தது. ஆனால் படிப்பதை மட்டும் விடவில்லை. எங்கே யாரிடத்தில் கதைப் புத்தகம் இருந்தாலும் கெஞ்சிக்கூத்தாடி வாங்கிக் கொண்டுவந்து விடுவேன். விளங்கினாலும் விளங்கா விட்டாலும் தட்டுத்தடுமாறி வாசித்து முடிப்பேன். ஒரு கந்தல் ஏடு

அகப்பட்டால் கூட விடுவதில்லை. இவ்வாறு இராமாயணம், பாரதம், கந்தபுராணம், நளமகாராஜன் கதை, விக்கிரமாதித்தியன் கதை, அல்லி அரசாணி மாலை முதலிய பல நூல்களைப் படித்து முடித்தேன்.

இப்படிப் பல வருஷங்கள் சென்றன. ஒருநாள் எனக்கு ஒரு நாவல் கிடைத்தது. ஆஹா! அதைப் படித்தபோது நான் அடைந்த சந்தோஷத்தைச் சொல்லிமுடியாது. அது முதல் நாவல் பைத்தியம் என்னை நன்றாய்ப் பிடித்துக் கொண்டது. ஒரு முறை ஊரிலிருந்து சிலர் கிறிஸ்துமஸ் வேடிக்கை பார்க்கப் பட்டணத்திற்கு வந்தார்கள். நானும் அவர்களுடன் சேர்ந்து வந்தேன். அவர்களெல்லாம் ஏதேதோ சாமான்கள் வாங்கிக் கொண்டு திரும்பினார்கள். நான் என்ன செய்தேன் தெரியுமா? மூர் மார்க்கெட்டில் பழைய கிழிந்த நாவல்களில் ஒரு கட்டுவாங்கிக்கொண்டு போய்ச் சேர்ந்தேன். இரவு பகல் ஒரே மூச்சாக வாசித்து முடித்தேன். இப்பொழுது நினைத்தால் மிகவும் ஆச்சர்யமாய் இருக்கிறது. குப்பைத் தொட்டியில் போடுவதற்கே தகுந்தவை என்று இப்போது நான் கருதும் நாவல்களை அப்போது எத்தனை ஆவலுடன் படித்தேன், தெரியுமா?

("இருக்கட்டும், நீங்கள் என்னைக் கேலி செய்வதில்லை என்று உறுதி கூறினால் தான் இனிமேல் கதை சொல்லுவேன்" என்றார் ஓமக்குட்டி முதலியார். "ஒரு நாளும் கேலி செய்ய மாட்டேன், சொல்லுங்கள்" என்றேன்.)

சாதாரணமாய் நாவல்கள் என்றால் எப்படிப்பட்டவை என்று உங்களுக்குத் தெரியுமே? எல்லாம் காதல் மயம். நமது வாழ்வுக்குச் சற்றும் பொருந்தாதவை. ஆனால் நான் அப்போது பதினெட்டு வயது வாலிபன். இவ்வளவு தூரம் பகுத்தறியும் சக்தி எனக்கில்லை. ஆகவே,மேற்படி நாவல்களைப் படித்ததன் பயனாகக் காதலைப் பற்றியும், விவாகத்தைப்பற்றியும், வருங்கால வாழ்வைப்பற்றியும் ஏதேதோ மனோராஜ்யம் செய்யத் தொடங்கினேன்.

எங்கள் கிராமத்தில் அப்பொழுது பெரிய பணக்காரர் அப்புக் குட்டி முதலியார். அவர்தான் கிராம முன்சீப்புங்கூட. அவருக்கு ஒரு பெண் இருந்தாள். அவள் பெயர் தெய்வானை. இப்பொழுது

நினைத்துப் பார்த்தால் அவள் ஒரு சர்வசாதாரணமான பெண் என்றே தோன்றுகிறது. ஆனால் அப்போது "நாவல்" கண்ணுடன் பார்த்த எனக்கு அவள் ஓர் அப்ஸர ஸ்திரீயைப் போல் காணப் பட்டாள். பூலோகத்திலும் சரி, தேவலோகத்திலும் சரி, அவளைப் போன்ற அழகி வேறொருத்தி இல்லை என்று நிச்சயமடைந்தேன். புத்தகத்தில் படித்த கதாநாயகர்களைப் போலவே நானும் அவளைக் கல்யாணம் செய்து கொள்ளாவிட்டால் உயிர் பிழைத்திருக்க முடியாது என்று உறுதி கொண்டேன்.

இதுவரையில் நாவல் படிப்பு பயன்பட்டது. இதற்கு மேல் என்ன செய்வதென்பதற்கு நாவல்களின் உதவி கிடைக்கவில்லை. நானோ தன்னந்தனியனான வாலிபன்; தகப்பனற்றவன்; ஏழை. அப்புக்குட்டி முதலியாரோ பெரும் பணக்காரர்; ஊருக்கு எஜமானர் அவரிடம் போய், "உன் பெண்ணைக் கொடு" என்று கேட்டால் கட்டி வைத்து அடிப்பார். நாவல்களில் படித்ததைப் போல் பெண்ணை நேரே பார்த்து என் காதலை வெளியிடுவதற்கு வேண்டிய தைரியம் இல்லை. அதெல்லாம் நாவல்களில் நடக்கும். வாழ்க்கையில் நடைபெறாது. ஆதலால் ஓயாமல் சிந்தித்த வண்ணம் இருந்தேன். கடைசியாக ஒரு யுக்தி தோன்றியது அந்த ஊரில் சமீபத்தில் கள்ளுச் சாராயக்கடைகள் ஏலம் போட இருந்தார் -கள். அந்தக் கடைகளை ஏலம் எடுப்பதென்று தீர்மானித்தேன். விரைவில் பணம் சம்பாதித்து அப்புக்குட்டி முதலியாருக்கு சமமாவதற்கு இது ஒன்றுதான் வழி என்று எண்ணினேன்.

தன் நகைகளை விற்றும் பத்துப் பன்னிரண்டு வருஷங் -களில் கொஞ்சம் கொஞ்சமாய்ச் சேர்த்தும் என் தாயார் இருநூறு ரூபாய் வரையில் பணம் வைத்திருந்தாள். ஏலப்பணத்தைக் கட்டுவதற்கு அத்தொகையைக் கொடுக்கும்படி கேட்டேன். தாயார் முதலில் ஆட்சேபித்தாள். "அந்தப் பாவத்தொழில் நமக்கு வேண -டாமப்பா; ஏதோ உள்ளதை வைத்துக்கொண்டு திருப்தி அடை -வோம்" என்றாள். நான் பிடிவாதம் பிடித்ததன்மேல் அவள், "குழந்தாய்! நம்முடைய குடும்ப சொத்தெல்லாம் எப்படி அழிந்தது, தெரியுமா?" என்று கேட்டாள். "தெரியாதே! எப்படி?" என்றேன். "எல்லாம் உன் தகப்பன் குடித்தே ஒழித்துப் போட்டான்.

அந்தப் பாவம் என்னத்திற்கு?" என்றாள். எனக்குத் தூக்கிவாரிப் போட்டது. இதுவரையில் அந்த விஷயம் எனக்குத் தெரியாது. ஆனால் தெய்வானையை நினைத்துக்கொண்டேன். தாயார் சொன்ன செய்தியிலிருந்து என்னுடைய தீர்மானம் இன்னும் உறுதிப்பட்டது. "அம்மா! கள்ளுக்கடையில் போன சொத்தை கள்ளுக்கடை மூலமாகவே சம்பாதித்துத் தீருவேன். அதுதான் தெய்வத்தின் சித்தம். இல்லாவிட்டால் எனக்கேன் இந்த யோசனை தோன்ற வேண்டும்?" என்றேன்.

கள்ளுக்கடைக்குப் போட்டி அதிகம். எடுக்க முடியவில்லை. சாராயக்கடை மட்டும் எடுத்தேன். வியாபாரம் நன்றாய் நடந்தது. உத்தியோகஸ்தர்களுக்கு அதிகப் பணம் கொடுத்தேன். ஆனால் என் கையிலும் பணம் அதிவேகமாகச் சேர்ந்து கொண்டு வந்தது. அடுத்த வருஷம் கள்ளுக்கடை, சாராயக்கடை இரண்டையும் எடுத்தேன். அப்புக்குட்டி முதலியாருடைய பெண்ணுக்காக நான் செய்த காரியங்களெல்லாம் அவர் மனத்தில் பொறாமையைத்தான் உண்டாக்கின. ஏனெனில் அப்போது அவருடைய கை இறங்கி வந்தது. கடன் அதிகமாயிற்று, "கள்ளுக்கடைக்காரப்பயல்" என்று என்னைப்பற்றி அவர் அவமதிப்பாய்ப் பேசியதாகக் கேள்விப்பட்டேன். அவருடைய அகம்பாவத்தை அடக்குவது எப்படி என்று ஓயாமல் சிந்தித்துக் கொண்டு வந்தேன். என் எண்ணம் நிறைவேறுவதற்கான ஒரு சம்பவம் விரைவிலேயே நடந்தது. கடவுள் என் பக்கம் இருக்கிறார் என்று தோன்றியது!

ஒரு சமயம் அப்புக்குட்டி முதலியார் தம் குடும்பத்துடன் ஏதோ வியாதியை சொஸ்தப்படுத்திக் கொள்ளப் பட்டணத்துக்கு வந்து ஆறு மாதம் தங்கியிருந்தார். இங்கே அவர்களுக்கு பந்துக்கள் பலர் இருக்கிறார்கள். அவர் திரும்ப ஊருக்கு வந்த அன்று அவருடைய ஆள் ஒருவன் சாராயக் கடைக்கு வந்து ஒரு புட்டி சரக்கு வாங்கிக் கொண்டு போனான். எனக்கு மிகவும் ஆச்சர்யமாயிருந்தது. பட்டணத்தில் பந்துக்கள் வீட்டில் கற்றுக் கொண்டார் போலும் என்று எண்ணினேன். மூன்று நாள் கழித்து மறுபடியும் அந்த ஆள் வந்து இன்னொரு புட்டி வாங்கிக்கொண்டு போனான்.

அப்போது எனக்குண்டான சந்தோஷத்தை அளவிட முடி -யாது. "சரி, முதலியார் நமது வலையில் வீழ்ந்தார். அவர் கர்வம் ஒழிந்தது; இந்த ஊரில் நம்மைத் தவிரக் கடன் கொடுப்பார் யாருமில்லை. தெய்வயானை நம்மைத் தப்பி எங்கே போகிறாள்?" என்று இவ்வாறெல்லாம் ஆகாசக் கோட்டை கட்டினேன்.

எல்லாம் நான் எண்ணியபடியே நடந்து வந்தது. ஒரு வருஷத்துக்குள் அப்புக்குட்டி முதலியார் ஊரறிந்த பெருங் குடிகாரரானார். கடன் விஷம் போல ஏறிவந்தது. ஏராளமான பூமி அவருக்கிருந்தாலும் வட்டி கொடுப்பது எளிதன்று. நிலத்தை விற்றுக் கடனைத் தீர்ப்பதற்கும் நிலத்தை வாங்குவார் யாரு -மில்லை. இந்த நிலைமையில் ஒரு கோர்ட்டு வாரண்டு அவர் மீது பிறந்தது. வாரண்டில் தப்புவதற்காக கையிலிருந்த சர்க்கார் கிஸ்திப் பணத்தைக் கொடுத்து விட்டார். இவர் குடிகாரரென்றும், கடன்கார -ரென்றும், மொட்டை விண்ணப்பத்தின் மூலம் அதிகாரிகளுக் -குத் தெரிந்து சோதனைக்கு வந்துவிட்டார்கள். முதலியார் தம் கர்வமெல்லாம் விட்டு என்னிடம் ஓடிவந்தார். என் காலில் விழுந்து கெஞ்சினார். எண்ணூறு ரூபாய் கடன் கொடுத்து அவர் தலைக்கு வந்த விபத்திலிருந்து அவரைத் தப்புவித்தேன்.

நான் கொஞ்சம் குறிப்புக் காட்டியது தான் தாமதம், முதலி -யார் தெய்வயானையை எனக்குக் கலியாணம் செய்து கொடுப் -பதற்குத் தம்முடைய பூரண சம்மதத்தைத் தெரிவித்தார். விவாகத்திற்கு நாள் குறிப்பிடுவதுதான் பாக்கி. இந்தச் சமயத்தில் அப்புக்குட்டி முதலியார் ஒரு நாள் திடீரென்று மரணமடைந்தார். நல்ல திடதேகியாயிருந்த அவர் இப்படி அகால மரணமடைந் -ததற்கு மித மிஞ்சிய குடிதான் காரணமாயிருக்க வேண்டும். இந்தத் துக்கச் சம்பவத்தினால் என்னுடைய உத்தேசங்களைப் பற்றிப் புனராலோசனை செய்ய வேண்டியதாயிற்று இப்பொழுது நான் தெய்வயானையை விவாகம் செய்துகொண்டால் அவரு -டைய குடும்பப் பொறுப்பு முழுவதையும் நானே ஏற்றுக் கொள்ள வேண்டிவரும். ஏனெனில், அவர்கள் வீட்டில் வயது வந்த ஆண் மக்கள் யாருமில்லை, அப்புக்குட்டி முதலியாருடைய இரண்டாந் -தாரம், சிறு பெண், அவளும் அவளுடைய கைக்குழந்தையும்

தெய்வயானையும்தான் வீட்டில் உள்ளவர்கள். இவர்களைக் காப்பாற்றும் பொறுப்பையும் குடும்பத்தின் கடனைத் தீர்த்துச் சீர்படுத்தும் பொறுப்பையும் நானே வகிக்கவேண்டியவனாவேன். இப்படியெல்லாம் மனத்தில் சந்தேகங்கள் உண்டாயின. ஆனாலும் முடிவில் தெய்வயானையை மணந்துதான் தீரவேண்டும் என்று தீர்மானித்தேன்.

இப்போதெல்லாம் கள்ளு, சாராயக்கடைகளுக்கு நானே நேரில் போவதில்லை. சம்பள ஆட்கள் வைத்துவிட்டேன். அன்றாடம் சாயங்காலத்தில் மட்டும் சென்று கூடு முதல் தொகையை வாங்கிக் கொண்டு வருவேன். ஒருநாள் அவ்வாறு சென்றபோது, கிராம முன்சீப்பு வீட்டு வேலைக்காரன் அப்பொழுது தான் கையில் புட்டியுடன் கடையிலிருந்து வெளியே வருவதைக் கண்டேன். என்னைப் பார்த்ததும் அவன் சாலையோரமாய்ப் பதுங்கிக்கொண்டு சென்றான்.

“இவன் இப்போது யாருக்குச் சாராயம் வாங்கிப் போகி-றான்?” என்று எனக்கு ஆச்சர்யமாயிருந்தது. ஏதோ ஒரு குருட்டு எண்ணத்தினால் அதைக் கண்டுபிடிக்க வேண்டுமென்று தோன்-றிற்று. ஆகவே, அவனுக்குத் தெரியாமல் அவனைப் பின் தொடர்ந்து சென்றேன. அவன் ஊர்த்தெருவின் புறம்பாய்ச் சென்று அப்புக்குட்டி முதலியாரின் வாயிற்படி வழியாய் நுழைந்தான். இதை முற்றும் ஆராயவேண்டுமென்று எண்ணி, தெருவீதிக்குச் சென்று முதலியார் வீட்டுக்குள் நுழைந்தேன். நடைக்குச் சென்ற-தும் சிறிது தயங்கி உள்ளே எட்டிப் பார்த்தேன். அப்போது நான் கண்ட காட்சி இடி விழுந்தாற்போல் என்னைத் திகைக்கச் செய்து விட்டது.

தெய்வயானையும் அவளுடைய சிறிய தாயாரும் ஊஞ்சல் பலகையில் உட்கார்ந்திருந்தார்கள். முதலியாருடைய மனைவி-யின் கையில் சாராயப்புட்டி. இரண்டு தம்ளர்களில் ஊற்றி ஒன்றை தெய்வயானையிடம் கொடுத்து மற்றொன்றைத் தான் அருந்த ஆரம்பித்தாள். பல வருஷ காலமாக என் உள்ளத்தில் வளர்ந்து வந்த காதல் அத்தனையும் அந்த ஒரு கண நேரத்தில் விஷமாகி விட்டது. சொல்லமுடியாத அருவருப்பு எனக்குண்

-டாயிற்று. சத்தம் செய்யாமல் வெளியே வந்து அவசரமாக வீடுவந்து சேர்ந்தேன்.

என் மனோரதத்தில் இடி விழுந்தது. என் ஆசையெல்லாம் நிராசையாயிற்று. முதலில் அப்புக்குட்டி முதலியார் வீட்டில் சாராயப்புட்டி புகுந்ததைப் பார்த்தபோது, நான் ஆசைப்பட்ட பழம் கிட்டிவிட்டது என்று சந்தோஷப்பட்டேன். வீட்டிற்குள் சென்ற அந்தச் சாராயப்புட்டி, பின்னால் செய்த வேலையைப் பார்த்தது, அந்தப்பழம் விஷமாய்ப் போவதற்குக் காரணமாயிற்று. அளவில்லாத துக்கத்துடன் அன்று படுத்தேன். பட்டன எல்லாம் ஆபாசமாய்த் தோன்றின.

அதற்குப்பிறகு ஒருவாரத்துக்குள் கள்ளு, சாராயக்கடை-களைத் தொலைத்துத் தலை முழுகினேன். அக்கடைகளில் சம்பாதித்த சொத்தையெல்லாம் அந்த ஊர்க்கோயிலுக்கும், பஜனை மடத்திற்கும், பள்ளிக்கூடத்திற்குமாக எழுதிவைத்தேன். இந்தத் தர்மங்கள் சரிவர நடப்பதற்கும் ஏற்பாடு செய்தேன். கையில் கொஞ்ச ரூபாய் எடுத்துக்கொண்டு தாயாரும் நானும் இந்தச் சென்னை நகருக்கு வந்து சேர்ந்தோம்" என்று கூறி நண்பர் கதையை முடித்தார். ❑



மக்கள் இரத்தத்தை உறிஞ்சும் மது அரக்கன்!

2. மதுவிலக்கு

– வி.எஸ்.சுப்பையா

தாமிரபரணி தன் தடக்கைகளை எட்டிய மட்டும் தொட்டுச் செழிப்பித்த தீரத்தில் உள்ளது. மாவடி கிராமம். ஏறக்குறைய நூறு தலைக்கட்டுகள் கொண்டது. அந்த வட்டாரத்திலுள்ள கிராமங் -களில் எல்லாம் மாவடி கிராமத்தார் தான் வறுமை இன்னதென்றே அறியாமல் வாழ்ந்தனர்.

ஆற்றுப்பாய்ச்சலில் அறுவடை நடக்கும்போது, ஏரிப் பாய்ச்சலில் நடுகை மும்முரமாக இருக்கும். நதி தீர நஞ்சைகளில் புழுதி உழவு நடந்துகொண்டிருந்தால் ஏரி கழனிகளில் களை பறியில் பெண்கள் ஈடுபட்டிருப்பார்கள். ஆக, ஆண்டு முழுவதி -லுமே மாவடிவாசிகளுக்கு உழைப்பு இருந்து கொண்டே இருக்கும்.

களைபறி முடிந்து சூல்கொண்ட நெற் பயிர் இப்போதோ சற்று நேரத்திலோ கதிர்களை ஈன்று விடுவேன் என்று விம்மிக் கொண்டிருக்கும் சமயத்தில் கண்ணுக்கு எட்டியதூரம் கழனிக் காட்டைப் பார்த்தாலோ அப்பப்பா அந்தக் காட்சியே ஒரு தனி.

இந்தக் காட்சியை எல்லாம் நன்றாய் அனுபவிக்க மாவடி கிராமத்திலுள்ள ஜில்லா போர்டு பள்ளிக் கூடத்துக்கு ஆசிரியராக வந்து சேர்ந்தான் இளைஞன் நாகய்யா.

பழைய ஆசிரியர் வயதானவர், தலை வழுக்கை விழுந்து நடக்கும்போதே கொஞ்சம் தள்ளாடுவார். கையில் ஒரு கம்பும் முட்டை வடிவ மூக்குக் கண்ணாடியும் அவருடைய முத்திரைகள். பத்து ஆண்டுகளாக அந்த ஊரிலேயே பணி செய்தவர்.

ஆனால் ஊரார் சிலர் அவருடைய மாற்றலைத் தடுத்து மறு உத்தரவு வாங்க முயன்றார்கள். அவருக்கும் அந்த ஊரைவிட்டுப் போக மனம் இல்லை. அதனால் நெருங்கிப் பழகிய அந்தரங்க நண்பர்களைக் கொண்டு உத்திரவை ரத்து செய்து இன்னும் ஒரு வருஷமோ இரண்டு வருஷமோ அங்கேயே பணி செய்து ஓய்வு பெற விரும்பினார்.

நாகய்யாவுக்கு ஆசிரியர் பயிற்சி முடிந்து இது முதல் நிய -மனம். இளைஞன், கல்யாணமாகாதவன்.

இந்தக் காரணத்தையும் சுட்டிக்காட்டி அவன் அங்கே வேண்-டாம் என்று மனுவில் குறிப்பிட்டு பெரும்பான்மையோர் கையெ-ழுத்தும் கைநாட்டும் வாங்கப்பட்டன.

பழைய ஆசிரியர் புது ஆசிரியருக்கு வேலையை ஒப்புக் கொடுக்க மறுத்துவிட்டார். ஊரார் ஜில்லா போர்டு தலைவருக்கு அனுப்பிய மனுவுக்கு உத்தரவு வரும் வரை வேலையை அவனி-டம் ஒப்படைக்க முடியாதென்று கண்டிப்பாகச் சொல்லிவிட்டார். உத்தரவும் வந்தபாடில்லை.

நாகய்யாவுக்கு என்ன செய்வதென்றே தெரியவில்லை. வேறு எந்த ஊருக்காவது மறுநியமனம் வந்தாலாவது போதும். வேண்டாத ஊரில் வலுக்கட்டாயமாக இருந்து பணி செய்வதில் மனக்கஷ்டமே தவிர வேறு என்ன லாபம்?

இந்த நிலையில் ஊரார், கள்ளுக்கடை கண்ணுசாமியை அணுகி அவன் ஜில்லா போர்டு தலைவரை நேரில் கண்டு உத்திரவை ரத்து செய்து வாங்கி வரும்படிக் கேட்டுக் கொண்ட-தற்கு இணங்க, கண்ணுசாமியும் அதிகாலையில் போகும் ரயிலில் போய்விட்டான். இரண்டு மூன்று நாட்கள் ஆனாலும் அங்கேயே தங்கி உத்திரவை கையோடு வாங்கி வருவதாகச் சொல்லிவிட்டு அவன் போனதாக கமுக்கமாய்ப் பேசிக்கொண்டார்கள்.

நாகய்யா அன்று மாலை ரயிலில் அந்த ஊரைவிட்டுப் புறப்பட்டுப் போகத் தீர்மானித்துவிட்டான். முதல் நியமனம் இப்படி ஆகிவிட்டதே என்ற கவலை அவன் முகத்தில் நன்றாகத் தெரிந்தது.

வந்த இந்த ஒரு வாரத்துக்குள்ளேயே மாவடி கிராமத்து இளைஞர்கள் அவனைச் சூழ்ந்து கொண்டார்கள்.

எழுத்து வாசனை இதுவரை பெறாதவர்கள் அவனிடம் இரவில் கற்றுக்கொள்ள விரும்பினார்கள்.

நாகய்யாவின் மனதில் என்ன என்னவோ திட்டம் உருவாகி-யிருந்தது படிப்பைப்பற்றி, எல்லோரும் படிக்கவேண்டும், எல்-லோருக்கும் எழுதப் படிக்கத் தெரிய வேண்டும். பெண்களும்

படிக்க வேண்டும். ஒரு பெண் தன் கணவனுக்குக் கடிதம் எழுதும் அளவுக்காவது எழுதத்தெரிந்திருக்க வேண்டும். அதற்காக அவள் இன்னொருவர் துணையை நாடக்கூடாது என்றெல்லாம் திட்டம் வைத்திருந்த அவனுக்கு மாவடி கிராமத்தில் தொடக்க காலத்தி-லேயே ஏற்பட்ட எதிர்ப்பு பெரு வெறுப்பையும் சோர்வையும் விளைவித்தது.

கடைசியாக அதைவிட்டுப் போய் ஜில்லாபோர்டில் மறு நியமனம் பெறவேண்டியதுதான் என்று முடிவுகட்டி தன் கொஞ்ச நஞ்ச சாமான்களோடு ரயில் நிலையத்தை அடைந்தான். அவன் போகும்போது ஆண்களும் பெண்களும் அவரவர் வீட்டிலிருந்து எட்டிப்பார்த்தார்கள். பழைய ஆசிரியருக்கு வெற்றி. அந்த வெற்றிக்-குப் பாடுபட்டவர்கள் பெருமிதம் அடைந்தார்கள். அதில் ஆச்சரியம் எதுவும் இல்லை.

ஆனால் ரயிலடியில் அவன் போகும் வண்டி வருவதற்குள் இளைஞர்கள் கூட்டமாகச் சென்று அவன் போகக்கூடாது என்று தடுத்தார்கள்.

"மேலிடத்திலிருந்து உத்தரவு என்னதான் வருகிறது என்று பார்ப்போமே! அதுவரை எங்களுக்காகத் தங்குங்கள். அப்புறம் நடக்கிறபடி நடக்கட்டும்" என்று வாதாடினார்கள்.

அவர்கள் அன்பைப் புறக்கணிக்க விரும்பவில்லை நாகய்யா.

"கள்ளுக்கடை கண்ணுசாமி செல்வாக்கு உள்ளவன் என்-கிறார்களே! உத்திரவை ரத்து செய்து வாங்காமலா வருவான்?" என்று ஐயம் தெரிவித்தான் நாகய்யா.

"அப்படி உத்தரவு வாங்கிவந்து விட்டால் நாங்களே உங்-களை வழியனுப்பி வைக்கிறோம்" என்று சொல்லி ரயில் நிலை-யத்திலிருந்து திரும்பக் கூட்டிக்கொண்டு வந்துவிட்டார்கள்.

எதிர்பார்த்ததற்குமாறாக, கண்ணுசாமியின் பாச்சா ஜில்லா போர்டு தலைவரிடம் பலிக்கவில்லை. போன மச்சான் திரும்பி வந்த கதையாகத் தலையைத் தொங்கப்போட்டுக் கொண்டு வெறுங்கையோடு மாவடி வந்தான்.

நாகய்யா ஆசிரியர் பதவியை ஒப்புக்கொண்டதோடு மாற்ற -லாகிச் செல்லும் பழைய ஆசிரியருக்குத் தக்கபடி ஒரு பிரிவு உபசாரம் வேறு நடத்திக் காண்பித்தான். பழைய ஆசிரியரின் ஆதர -வாளர்கள் வெளிப்படையாக இந்த உபசாரத்தை ஆதரித்ததாகக் காட்டிக்கொண்டாலும் உள்ளுக்குள் அவர்களுக்கு ஒரே வேக்காடு.

கண்ணுசாமி உள்ளுக்குள் கருவினான். "இரு, இரு. உன்னை என்ன செய்கிறேன் பார்" என்று வன்மம் வைத்தான். நாகய்யா மீது என்ன பழியைச் சுமத்தி ஊரைவிட்டு விரட்டலாம் என்று இராப்பகலாய் யோசனை செய்ய ஆரம்பித்தான்.

யார் இந்த கண்ணுசாமி? கண்ணுசாமி குடும்பமே பரம் -பரையாக கள்ளுக்கடை குத்தகை எடுக்கிறவர்கள். கண்ணுசாமி அக்கரை சீமையிலிருந்து அண்மையில்தான் ஊருக்கு வந்தவன். மலேசியாவிலோ சிங்கப்பூரிலோ ஒரு சாராயக்கடையை நடத்துகிற -தாம் அவன் குடும்பம். குடும்பத்தில் ஒருவர் மாறிமாறி அங்கே போய் அதை மேற்பார்வை பார்ப்பார்கள். ஊரில் நிலபுலன்கள், பனந்தோப்பு, தென்னந்தோப்பு சேர்க்கை நாளுக்கு நாள் அதிக -மாகிக் கொண்டே வந்தது.

கண்ணுசாமிக்கு நாற்பது வயதிருக்கும். சமீபத்தில் அவ -னில் ஏற்பட்ட மாற்றம் இரண்டு தங்கப்பல் கட்டிக்கொண்டு வந்திருப்பதுதான். அவன் சிரிக்கும்போது மற்றவர்களும் சிரிப்பார் -கள் எகத்தாளமாக. அந்தப் பல்லைப் பார்த்து. கண்ணுசாமி வருவதற்கு முன் அவன் வரவுக்குக் கட்டியம் கூறுவது கள் வாசனை அல்ல; அவன் சிங்கப்பூரிலிருந்து கொண்டுவந்திருக் -கும் ஒருவித வாசனை. அது சீமைச்சாராய வாசனைதான் என்று சிலர் மறைவாக தங்களுக்குள் எள்ளி நகையாடுவது வழக்கம்.

மதுவிலக்கு, மாவடியிலும் அதைச்சுற்றியுள்ள கிராமங்களி -லும் வெகுகாலமாக தலைகாட்டவில்லை. சில இளைஞர்கள் மட்டும் அவ்வப்போது நகர்ப்புறங்களில் கேட்ட கொள்கைகளைப் பின்பற்றி மதுவிலக்கு பிரசாரம் செய்யத் தொடங்குவார்கள்.

ஆனால் கள்ளுக்கடை கண்ணுசாமி இரவோடு இரவாய் எல்லா பெரியதனக்காரர்களையும் அழைத்து அழகாக ஒரு கள் பார்ட்டி நடத்திக் காண்பித்துவிட்டானானால் – அவ்வளவுதான் – படம் ஒடுங்கிய பாம்புபோல அந்தப் பிரச்சனை படுத்துவிடும்.

ஆயினும் கள்ளை ஒழித்தே ஆகவேண்டும் என்ற உணர்ச்சி அந்த வட்டாரத்தில் மறைந்து போய்விடவில்லை. அதுவும் சங்கிலியோடு வளர்ந்து வந்தது என்றுகூடச் சொல்லலாம்.

சங்கிலி இதற்காகத்தானோ என்னவோ புழுதியில் நட்ட சம்பா நடுகையைப்போலச் செழிப்பாக வளர்ந்துவிட்டாள். இரண்டு ஆண்டுகளுக்கு முன்னால் சிற்றாடையைக்கூட நன் –றாகச் சுற்றிக் கொள்ளத் தெரியாத சங்கிலி, இப்போது நம்ப முடியாதபடி பச்சை மஞ்சளை முறித்ததைப்போல கண்ணைப் பறிக்கும் பொலிவோடு விளங்கினாள்.

பல தடவைகளில் வாய்க்கால் கரைகளிலும் வயல் வரப்புகளி –லும் சங்கிலியை அவன், எதிரேவரக் கண்டிருக்கிறான். அவன்தான் புதிதாக வந்த ஆசிரியர் என்று அறிந்தபொழுது, சங்கிலியும் கண் –களை அகல விழித்து, தன் நெஞ்சகத்துப் புகவும் வழிவிட்டாள்.

இதற்கு முன்னில்லாத புத்தம்புது உணர்ச்சிகள் சங்கிலியி –டம் தோன்றி வலுக்க ஆரம்பித்தன. நாகய்யாவின் அழகிய முகம். கூரிய விழிகள், தூய ஆடம்பரமற்ற தன்மை, இனிய மொழிகள் எல்லாம் அவளுடைய இதயத்தில் சதா உலவி அவனைப்பற்றி இடையறாமல் நினைக்கத் தூண்டின.

அறுவடை சமயத்திலும், அறுவடை முடிந்தவுடனுந்தான் கள் குடி அபரிமிதமாக இருக்கும். களங்களிலும் களத்துமேடு –களிலும் கள், மிடாக்களிலும் குடங்களிலும் குடுவைகளிலும் வந்து இறங்கிய வண்ணமாக இருக்கும். ஆண்களும் பெண்களும், ஓலைப்பட்டைகளிலும், கலயங்களிலும், கள்ளை ஊற்றி ஊற்றிக் குடித்து மயங்குவார்கள்.

காசை வாங்கிக்கொண்டு கள் விற்பதைவிட, நெல்லுக்குக் கள்ளைப் பண்டமாற்று செய்வதில்தான் அதிக லாபம் என்பது

கண்ணுசாமி கண்டு வைத்திருந்த சிதம்பர ரகசியம். அதனால்தான் வயல்களிலும் களத்துமேடுகளிலும் கள்ளை ஆறாகப் பாயவிட்டு வயல் நெல் வீடுவந்து சேர்வதற்குகுள்ளேயே அவன் நெல்லை அபகரித்துச் செல்லும் கொடுமையை மாவடி இளைஞர்கள் கண்டிக்கத் தலைப்பட்டார்கள்.

முதல்நாள் இரவில் பள்ளிக்கூடத்தில் ஆசிரியர் தலைமை -யில் ரகசியக் கூட்டம் நடத்தி கள்ளை அடியோடு ஒழிக்க ஆலோசனை செய்தார்கள். அதில் முக்கியமான யோசனைகள் குடியின் தீமையைப் பற்றி முதலில் மக்கள் உணர்ந்து மனம் திருந்த வேண்டும்.

ஆகையால் ஊரில் பெரியவர்களை நேருக்கு நேர் சந்தித்து அதைப்பற்றி விளக்கவேண்டும். அடுத்து, கள் விற்பனை, கடை -யோடு மட்டும் நிற்காமல் வயல்களிலும் களங்களிலும் விற்கப் -படுவது உடனே நிறுத்தப்படவேண்டும்.

ஆலோசனைப்படி மறுநாள் இளைஞர்கள் வயல்களிலும் களங்களிலும் சுற்றித்திரிந்து, விற்பனை நிலவரத்தை அறிந்து வந்து மூன்றாம் நாள் இரவில் ஊர்க்கூட்டம் போட்டு அதைத் தடுத்துவிடத் திட்டமிட்டனர். நாகய்யா தற்செயலாகப் போவது போல பல களங்களைப்போய்ப் பார்த்தான்.

சங்கிலி வீட்டார் களத்தைத் தங்கள் வயலிலேயே வைத்திருந்தார்கள்.

நெல்லும் நெற்கதிர் கட்டுகளும், வைக்கோலும், வைக் கோல் போருமாகக் காட்சியளிக்கும் களத்தில், ஆடவரும் பெண் -டிரும் இயல்பாக மகிழ்ச்சியோடு விளங்குவார்கள். பாடுபட்ட பலன் கிடைக்கும் சமயம் அல்லவா? அறுவடை முடியும் வரை இரவும் பகலும் களங்களிலேயே தங்கி விடுவதும் உண்டு. வெயிலுக்கும் - பனிக்கும் மறைவாக சிறு சிறு குடில்களை அமைத்துக்கொண்டு, அங்கேயே உண்டு உறங்கி உழைப்பதில் ஒரு தனி மகிழ்ச்சிதான்.

நாகய்யா களத்தை அடைந்தபோது ஆசிரியருக்கு உரிய மரியாதையோடு அவனை வரவேற்றார்கள். சங்கிலியின் தமையன் அங்கே கிடந்த வைக்கோல் கட்டு மீது நாகய்யாவை அமரும்படி வேண்டினான்.

பக்கத்துக் கிராமத்துக்கு ஒரு வேலையாக, தான் போவ -தாகவும், வரும் வழியில் தற்செயலாக அங்கு வந்ததாகவும் கூறிக் கொண்டு, அங்கு கள் நடமாடுகிறதா என்று நோட்டம் விட்டான்.

கள் வாசனை களத்து வாசனையோடு எங்கும் பரவியிருந் -தது. அதிகாலையிலேயே கள் அங்கு வந்துவிட்டதற்கு அறிகுறி -யாக கள் பானைகள், முட்டிக்கலயங்கள், சொண்டான்கள் அங்கே தென்பட்டன.

சங்கிலியின் தமயன் முத்தன் அவனிடம் மிக மரியாதையாக உரையாடினாலும், கள்குடி மயக்கத்தால் உரை குளறினான். சங்கிலி அங்கே வைக்கோற்போருக்கு அருகே நின்று கொண்டிருந் -தாள். இரண்டு மூன்று தடவைகள் அவர்கள் கண்கள் சந்தித்தன. நாகய்யா முத்தனிடம் விடை பெற்றுக்கொண்டு அங்கிருந்து அகன்று வந்து விட்டான். அதற்குப் பின்னர் வேறு எந்தக் களத்துக் -கும் போகவில்லை.போகத் தெம்பு இல்லை. சங்கிலியும் கள்குடி மயக்கத்தில் நின்றிருந்ததைக் கண்ட பாவம்தான். அவள் கண்கள் செவ்வலரி போலச் சிவந்திருந்தன. இயற்கையாக மலர விழிக்கும் மான் போன்ற மருண்ட விழிகள் எங்கே! கட்குடியால் சிவந்து தன்னைப் பார்க்கக்கூசிய இந்த விழிகள் எங்கே!

இவ்வாறு நொந்து போயிருந்த அவன் உள்ளத்தில் இன் -னொரு அடி வீழ்ந்தது உடனடியாக. அவனைப் போலவே களத்துமேடுகளில் சுற்றி வேவு பார்த்துவிட்டு வந்த இரு உற்சாக -மான இளைஞர்கள் இந்தச் சங்கதியையும் கொண்டு வந்தார்கள். அதாவது, சங்கிலி வீட்டுக்குக் கள்ளுக்கடை கண்ணுசாமி குடுவை குடுவையாகக் கள் அனுப்புவதைப்பற்றி மாவடியிலும் அதைச் சுற்றியுள்ள கிராமங்களிலும் பலவித வதந்திகள் அறுவறுக் -கத்தக்க விதமாக உலாவுதைத்தான் அவர்கள் நாகய்யாவிடம் சொன்னார்கள்.

அந்தச் சங்கதி அவன் காதில் விழுந்தபோது தூண்டில் புழுவைப்போல துடித்தான். 'சே! இப்படி ஒருநாளும் இருக்காது. ஒருவேளை உள்நோக்கத்தோடு கண்ணுசாமி இலவசமாகக் கள் அனுப்புவதில் வேணுமானால் ஒருவேளை உண்மை இருக்கலாம். ஆனால் அதற்காகச் சங்கிலி மீது இந்த அவதூறு சுமத்துவது அபாண்டம். அடுக்காது. இரவு பகலாக ஒரு புழு இருந்து குடைவது போல நாகய்யா துடித்துக் கொண்டிருந்தான்.

ஒரு வாரம் கழித்து, தற்செயலாக சங்கிலியின் தமையன் முத்தனை வாய்க்கால் ஓரத்தில் சந்தித்தான். முத்தன் மிகவும் நல்லவன். நாகய்யாவிடம் தனிமதிப்பும் கொண்டவன். அவனிடம் நாகய்யா முதலில் பொதுவாகக் கிராமத்தைப் பற்றிப் பேசிவிட்டு பின்பு சாமர்த்தியமாக அந்த வதந்தியைப் பற்றி விசாரித்தான்.

பெண்கள் குடிப்பது வழக்கம் என்றும் அம்மாதிரியே சங்கி–லியும் குடிப்பது வழக்கம் என்றும் அதைத் தவிர மற்றபடி பேசுவது எல்லாம் வம்பு என்றும் சொன்னான்.

நாகய்யாவுக்கு மகிழ்ச்சியும், துக்கமும் கலந்த ஓர் உணர்ச்சி. அந்த வதந்தியில் உண்மை ஏதும் இல்லை என்பதில் மட்டற்ற மகிழ்ச்சி, சங்கிலியும் குடிக்கிறாள் என்பதில் ஒரே வருத்தம்.

"போகட்டும், சங்கிலி சின்னவள்தானே? அவளாவது குடிக்காமல் இருக்கலாகாதா?" என்று உருக்கமாக வேண்டிக் கொண்டான்.

மறுநாள் அதிகாலையில் நாகய்யாவின் வீட்டுக் கதவைத் தட்டினான் முத்தன். நாகய்யா வெளியே வந்தான். முத்தன் சொன்னான்: வாத்தியாரையா நீங்க சொன்னதை சங்கிலியிடம் சொன்னேன். அவ்வளவுதான். தங்கச்சி என்ன சொன்னாள் தெரியுமா? கள்ளைக் கையால் இனிமேல் தொடுவதுகூட இல்லை என்று என் தலையில் அடித்துச் சத்தியம் செய்துவிட்டாள். உங்கள் மனம் நோகும்படி நடந்து கொண்டோமே என்று சங்கிலி ரொம்பச் சங்கடப்பட்டாள்." அதைக் கேட்ட நாகய்யா அது நனவு தானா என்று தன் காதுகளை நம்பமுடியாமல் திகைத்தான்.

நாகய்யா இவ்வளவு காலமும் தனிமையைத் துணையாகக் கொண்டு வாழ்ந்து வந்தான் அல்லவா! இப்போது சங்கிலியைக் கல்யாணம் செய்து கொள்ள வேண்டுமென்ற எண்ணம் வேரூன்றி விட்டது. இனி முத்தனிடம் தன் விருப்பத்தைத் தெரிவிக்க வேண்டியதுதான்.

ஒருநாள் முத்தன் வயலில் வேலை செய்து கொண்டிருந்த போது அவனை அணுகித் தன் விருப்பத்தை மெதுவாக அவனிடம் வெளியிட்டான்.

முத்தன் அங்கலாய்த்தான். "தம்பி, இதை நீ முன்னமே சொல்லியிருக்கக்கூடாதா! சங்கிலிக்கு உனக்கு வாழ்க்கைப்படக் கொடுத்து வைத்திருந்தால் அது புண்ணியம் செஞ்சதாச்சே! இந்தக் கள்ளுக்கடை கண்ணுசாமியினால் ஏற்பட்ட புரளியினாலே அவளுக்குக் கருங்காட்டுக்கிராமத்தில் ஒருத்தனுக்கு கொடுக்க நிச்சயமாயிட்டதே!"

நாகய்யாவுக்கு அவன் மனசைப் போலவே, அவன் கண் -ணுக்குத் தோன்றிய பொருள்கள் யாவும் சுழன்றன.

சங்கிலி மாவடியை விட்டு கருங்காட்டுக் கிராமத்துக்குப் போன ஒரு வாரத்துக்குள், மாவடியும் அதைச் சுற்றியுள்ள கிராமங் -களும் ஒரு நல்ல ஆசிரியரை இழந்து விட்டன. எப்படியோ நாகய்யா அந்த ஊரை விட்டுத் தன்னை மாற்றிக்கொண்டான்.

நாகய்யா மாவடியை விட்டு நான்கு ஆண்டுகள் ஓடி மறைந்து விட்ட பின்னர், புளியங்குளம் என்ற ஊரிலுள்ள ஒரு பெரிய பள்ளிக்கூடத்துக்கு உதவி ஆசிரியராக அவன், நியமிக்கப் -பட்டு மாற்றல் உத்தரவு வந்து சேர்ந்தது.

புளியங்குளத்தில் நாகய்யாவுக்கு வசதியான வீடு எதுவும் கிடைக்கவில்லை. ஆகையால் புளியங்குளத்துக்கு அருகில் உள்ள கருங்காடு என்ற கிராமத்தில் வீடு கிடைக்கும் என்று தலைமை ஆசிரியர் சொன்னார்.

'கருங்காடு' என்ற பேரைக் கேட்ட மாத்திரத்திலேயே திடுக் -கிட்டது. நாகய்யாவின் மனம். அலை அலையாக எண்ணங்கள் வந்து மோதின. பேசாது கற்சிலை போல நின்றான்.

இதற்குள் தலைமை ஆசிரியர் கருங்காட்டிலிருந்து அங்கு வேலை செய்ய வந்திருந்த ஒருவனிடம் நாகய்யாவை அறிமுகப் படுத்தி வைத்து, அவனுக்கு வசதியாகவுள்ள ஒரு சின்ன வீடு பார்த்துக் கொடுத்து உதவி செய்யும்படிச் சொன்னார்.

உற்சாகமாக அதை ஒப்புக்கொண்டான் அவன். தன்னிடமே ஒரு வீடு இருப்பதாகவும் அந்த ஆசிரியருக்குப் பிடித்திருந்தால் அதிலேயே தங்கலாம் என்றும் சொன்னான். எனவே, அவனுடைய சாமான்கள் கொண்ட மாட்டு வண்டி மீண்டும் பூட்டப்பட்டது.

அப்போது பொழுது மறையும் வேளை. தடத்தின் வழியாக வண்டி முன் செல்ல இருவரும் பின்னால் நடந்து சென்றனர்.

அந்த மனிதனிடம் அப்பொழுதே சங்கிலியைப் பற்றி விசாரிக்க வேண்டுமென்ற எண்ணம் அவனை உந்தித்தள்ளியது. ஆனால் அது அழகாக இருக்காது என்று படவே அதைப்பற்றி எதுவும் பேசாது அந்த எண்ணத்தை அடக்கிக்கொண்டான்.

சாலை ஓரத்தில் உள்ள ஒரு வீட்டின் முன்னால் வண்டி நிறுத்தப்பட்டது. அவன் சாவி கொண்டு வந்து வீட்டு முன் வாசலைத் திறந்து அரிக்கேன் லாந்தல் ஒன்றை ஏற்றி வைத்துச் சாமான்களையும் வீட்டினுள் கொண்டு வந்து சேர்த்தான். அங்கு கிடந்த ஒரு கயிற்றுக் கட்டிலில் அவனுடைய படுக்கையை விரித்துப் போட்டான். அதில் உட்கார்ந்துகொண்டிருந்தான் நாகய்யா.

"இந்தா, இவனைப் பிடி, எவ்வளவு சேட்டை பண்ணுது வர வர" என்று குழந்தையை அவனிடம் கொடுத்து விட்டு, "இவர்தான் புது வாத்தியார் அய்யாவா?" என்று அன்புடன் தன் வரவேற்பைத் தெரிவித்தாள் அவன் மனைவி, தானும் ஏதாவது பேசவேண்டும் என்பதற்காக.

"குழந்தைக்கு வயது என்ன?" என்று கேட்டான் நாகய்யா.

"மூணு வயசு முடிஞ்சு போச்சு" என்றாள் அவள்.

"பேரு?"

"பேரு, நாகய்யா."

நாகய்யா திடுக்கிட்டது அந்த தம்பதிக்குத் தெரியாது. "நாகய்யாவா..........?" பலமான சிந்தனை ஓட்டம் அவன் இதயத்தில் ஓட ஆரம்பித்தது.

வந்த களைப்பினால் படுத்துக்கொண்டான் நாகய்யா. சுவர்க்கோழிகள் விடாமல் 'இய்ங்ங்' என்று கத்திச் செவியைப் பிய்த்துக் கொண்டிருந்தன.

சற்றுநேரம் கழிந்ததும் கதவு திறக்கும் சப்தம் கேட்டது. நாகய்யா எழுந்தான். அவன் கண்களை நம்பமுடியவில்லை. சங்கிலி! ஆமாம், சங்கிலியேதான்!!

மீண்டும் கதவைச் சாத்திவிட்டு அவன் அருகில் வந்தாள் சங்கிலி, அவள் கண்களில் கண்ணீர் வெள்ளம் புரண்டோடியது. நாகய்யா என்ன பேசுவது என்று தெரியாமல் திணறிக் கொண்டி-ருந்தான்.

"உங்களுக்காக நான் எவ்வளவு நாள் காத்துக்கொண்டிருக்-கிறேன்? என்னை நீங்கள் மறந்துவிட்டீர்களா? என்னால் ஒரு நிமிஷம் கூட உங்களை மறக்க முடியவில்லையே. என் மனம் உங்களையேதான் சுற்றிக்கொண்டிருக்கிறது. மலரைச்சுற்றி சதாவட்டமிடும் வண்டைப்போல...." என்று கூறியவண்ணம் அவனை நெருங்கிக் கட்டிலின் மீது அமர்ந்தாள்.

சங்கிலி இவ்வளவு அழகாகப் பேச எங்கு கற்றுக் கொண்-டாள்? சாதாரண கிராமப்பெண். மாவடி கிராமத்தை விட்டுக்கூட நகர்ப்புறங்களுக்கு அவள் அதிகம் போனது இல்லை. தன்னிடம் இவ்வளவு தூரம் அவள் அன்புகொண்டிருந்தது தனக்குத் தெரி-யாமல் போயிற்றே. அவளுக்காக யாராவது காத்துக் கொண்டிருந்-தார் என்றால் அது தான் அல்லவா? அவளை அல்லவா தான் மறந்துவிட முடியவில்லை. அவளை அல்லவா தன் மனம் சதா சுற்றிக்கொண்டிருக்கிறது...

இவ்வாறு நினைத்த நாகய்யா வெள்ளம் எனப்பாயும் அவள் கண்ணீரைத் துடைக்க எண்ணிக்கட்டிலில் படுத்துக் கிடந்த

அவன் எழுந்து அவளை நெருங்கி அமர்ந்தபொழுது கதவு மீண்டும் கீச்சிட்டுக்கொண்டு திறந்தது !

நாகய்யா திடுக்கிட்டுக் கண்விழித்தான். சங்கிலி? சங்கிலி எங்கே? என்ன பயங்கர இன்பக்கனவு!

அவன் உணவோடு உள்ளே வந்து அவனைச் சாப்பிட வேண்டினான். அவன் மனைவி பாத்திரத்தில் தண்ணீர் கொண்டு வந்து வைத்துவிட்டுப் போய்விட்டாள்.

அந்த மனிதனிடம் நாகய்யா, "ஆமாம்... மாவடி கிராமத்தி லிருந்து ஒரு பெண் இந்த ஊருக்கு வாழ்க்கைப்பட்டு வந்திருக்கி றாளே! சங்கிலி என்று பேர். அவள் வீடு எங்கே? அவள் சவுக்கி -யமா? நான் நாலு வருஷங்களுக்கு முன்னால் மாவடி பள்ளிக் கூடத்தில் ஆசிரியராக இருந்தேன். அவர்கள் குடும்பத்தை எனக்கு நன்றாகத் தெரியும்" என்றான்.

அவள் முகம் திடீரென்று மாறுதல் அடைந்தது. விம்மலும் பொருமலும் அவள் தொண்டையை நெரித்தது. "இந்தப் பாவிக்குத் தான் தங்கம்போல அந்தப் பெண்ணைக் கொடுத்தார்கள். ஒரு வருஷத்துக்குள் இந்தப் பிள்ளையைப் பெத்துவிட்டுப்பாயும் படுக்கையும் ஆனாள். அவள் மனசில் என்ன கவலையோ தெரியாது. நீங்க உக்காந்திருக்கும் கட்டிலில்தான் ஆறுமாதம் கிடந்தாள். பண்ணாத வைத்தியம் இல்லை. எண்ணாத தெய்வம் இல்லை. கடைசியில் என்னை விட்டுவிட்டுப் போய்விட்டாள்.."

நாகய்யாவின் மனமும் தலையும் பம்பரம்போல் சுற்றியது. மேலும் சங்கிலியின் கணவன் சொன்னது அவன் காதில் விழ வில்லை.

3. இராவணாகாரம்

– நாரணா. துரைக்கண்ணன்

திருவல்லிக்கேணிப் பகுதி முழுதும் ஒரே பரபரப்பாய் இருந்தது. ஆங்காங்கு மக்கள் மூவர் நால்வராகக் கூடிநின்று பேசிக் கொண்டிருந்தனர். "என்ன ஆகுமோ? ஏது ஆகுமோ?" என்ற அச்சம் சிலர் முகங்களில் காணப்பட்டது.

"தம்பியப்பா வருகிறாராமே?"

"சும்மாவா வருகிறார்? துப்பாக்கியைத் தூக்கிக் கொண்டல்லவா வருகிறாராம்."

"இந்தச் சத்தியாக்கிரகிகளுக்கு இவருடைய சங்கதி தெரியாது போலிருக்கு."

"இவர்கள் இந்தக் கள்ளுக்கடைக்கு ஏன் மறியல் செய்ய வந்தார்கள்? வேறெங்காயினும் போவதுதானே?"

"இங்கு மட்டும் என்ன? எல்லா மதுபானக் கடைகளிலுந்தான் மறியல் செய்கிறார்கள்; காந்தி மகாத்மா கட்டளைப்படி."

"மற்ற இடங்களில் எதுவானாலும், என்னவானாலும் நடக்கலாம். இந்தக் கிருஷ்ணாம்பேட்டை இருக்கிறதே? இது இராவணன் தர்பார் நடக்கிற இடம் ஆச்சே! இதன்கிட்டே வரலாமா?"

"சத்தியாக்கிரகிகளுக்கு எல்லா இடமும் சமந்தான்."

"காந்தி ஆசாமிகள் யாருக்காகவும் எதற்காகவும் தங்கள் கடமையைச் செய்யாமல் விட மாட்டார்கள்."

"சாமிநாதப்பிள்ளை கடை வஸ்தாதுகள், சிலம்பம் ஆடுகிற கோதாவைக் காவலாகக் கொண்டதாச்சே! இந்த இடத்தில் இவர்கள் அடியெடுத்து வைக்கலாமா?"

"சூரியன் அஸ்தமிக்காத பிரிட்டிஷ் சாம்ராஜ்யத்தையே கிடுகிடுக்க வைக்கிற காந்தித் தொண்டர்களா, இந்த ஆப்காரி

காண்டிராக்டரின் உருட்டல் மிரட்டல்களுக்குப் பயந்து போய் விடுவார்கள்?"

"என்னமோ ஐயா! இந்தச் சத்தியாக்கிரகிகளுக்குப் போதாத காலந்தான் இந்தக் கள்ளுக்கடையை மறியல் செய்ய வந்திருக் -கிறார்கள் என்று எண்ணுகிறேன்."

"பாவம்! யார் பெற்ற பிள்ளைகளோ?"

கும்பல் கும்பலாகக் கூடியிருந்தவர்கள் தங்களுக்குத் தோன்றியவாறெல்லாம் பேசிக்கொண்டிருந்தனர்.

காந்தியடிகள் வகுத்துக் கொடுத்த நிர்மாண வேலைத் திட்டப்படி 1931-ம் ஆண்டில் பாரதம் முழுதும் மதுபானக்கடை மறியலும், விதேசித்துணிக்கடை மறியலும் மும்மரமாக நடந்து கொண்டிருந்தன. நம் தமிழகத்திலும் இது எதிரொலி செய்து கொண்டிருந்தது.

காந்தி மகாத்மா தலைமையில் நடைபெற்று வந்த இச் சுதந்திரப் போராட்டம் இந்தியாவின் மற்ற பகுதிகளில் தீவிரமாக நடைபெற்று வந்தது போலவே அவற்றுக்கு ஒரு படி மேலாகவே தமிழ்நாடு முழுவதிலும் தீவிரமாக நடந்து வந்தது. கள்ளுச்சாராயக் கடை மறியலையும், அன்னியத் துணிக்கடை மறியலையும் திற -மையாகவும் தைரியமாகவும் நடத்திப் பல்லாயிரக்கணக்கான பேர் தடியடி பட்டும் ரத்தம் சிந்தியும் சிறை சென்று கொண்டிருந்தனர்.

இச்சுதந்திரப் போராட்ட வீரர்களைப் பின்பற்றித்தான் சத்தியாக்கிரகத் தொண்டர்கள் சிலர் கிருஷ்ணாம்பேட்டை சாமி -நாதப்பிள்ளை கள்ளுக்கடையை மறியல் செய்ய வந்தனர். இங்கு தொண்டர்கள் வந்து கள்ளுக்கடையை மறியல் செய்யப்போகின் -றார்கள் என்ற செய்தி எப்படியோ காட்டுத்தீ போல் முன்னதாகவே பரவி விட்டிருந்ததால், அன்று பொழுது புலருவதற்கு முன்னி -ருந்தே மக்கள் திரள்திரளாக வந்து கூடலாயினர். போலீஸாரும் தங்கள் கடமையை ஆற்றுவதற்காக ஏராளமாக வந்து இருந்தனர், "இரகுபதி இராகவ இராஜாராம்; பதிதபாவன சீதாராம்" என்று பாடிக்

கொண்டே சத்தியாக்கிரகத் தொண்டர்கள் உதயவனம் முகாமிலி -ருந்து வந்து கொண்டிருந்தனர். "வீரசுதந்திரம் வேண்டி நின்றார். பின்னர் வேறொன்று கொள்வாரோ?", "என்று தணியும் இந்தச் சுதந்திர தாகம்? என்று மடியும் எங்கள் அடிமையின் மோகம்".

"ஜெய பேரிகை கொட்டடா," "கத்தி இன்றி ரத்தம் இன்றி யுத்தம் ஒன்று வருகுது" என்பன போன்ற பாடல்களைப் பாடிக் கொண்டே வந்து சாமிநாதப்பிள்ளையின் கள்ளுக்கடையை அவர்கள் முற்றுகையிடலாயினர்.

கள்ளுக்கடை வாயிலின் முன் வரிசைக்கு இருவர் மூவராக அத்தொண்டர்கள் நின்று, கள் குடிக்க வருவோரைப் பார்த்துப் பணிவாக, "ஐயா! கள்ளு குடிக்கப் போகாதீர்கள். அது உங்களுக்குப் போதையுண்டு பண்ணி உடம்பைக் கெடுக்கும். அது மட்டுமல்ல, இந்தக் கள்ளுக்குடி உங்கள் குடியை அடியோடு அழித்துவிடும். கடைக்குள் நுழையாமல் தயவுசெய்து திரும்பிப் போய்விடுங்கள்" என்று கைகூப்பி வணக்கஞ் செய்து பணிவாகக் கேட்டுக் கொள்ள -லாயினர். குடிக்க வந்தவர் சிலர் அத்தொண்டர்களுடைய வேண்டுகோளைச் செவியுற்றுத் திரும்பிப் போகலாயினர். சிலர், "யாரடா இவன்கள்? நாங்கள் குடித்துக்கெட்டுப் போனால் உங்களுக்கு என்ன வந்தது? உங்கள் வேலையைப் பார்த்துக் கொண்டு போங்கடா!" என்று மூர்க்கத்தனமாகச் சொல்லிவிட்டுக் கடைக்குள் நுழையலாயினர். அப்படி நுழைபவர்களைத் தடுக்கச் சில தொண்டர்கள் அவர்களைக் கும்பிடுவது போல் தரையில் குறுக்கே விழுந்து வழி மறிக்கலாயினர். இது கண்ட சில குடியர்கள் அவர்களுடைய வழி மறிப்பு வேண்டுதலை மீற மனமில்லாமல் திரும்பிப் போகலாயினர். சிலர் சத்தியாகிரகிகளை லட்சியம் செய் -யாமல் அவர்களைத் தாண்டிக் கொண்டும், மிதித்துக் கொண்டும் கடைக்குள் நுழையலாயினர்.

இக்காட்சியை உள்ளிருந்து கவனித்துக் கொண்டிருந்த கள்ளுக்கடை தலைமை குமாஸ்தா கைலாசப்பிள்ளை, "யாரடா இங்கே? சண்டித்தனம் செய்யும் இந்தக் காந்திப் பசங்களை

இழுத்துக் கொண்டு போய் வெளியே தள்ளுங்கடா! கடைக்கு வருகிறவர்களை வழி மறிக்கிறான்கள்" என்று கோபத்தோடு கொக்கரிக்கலானார். இது கேட்டுக் கள்ளுக்கடை அடியாட்களும் குடிகாரர்கள் சிலரும், "ஆய்! .... யார்றா நீங்க? மருவாதையா போறீங்களா? இல்லே; உங்க லூட்டியை அறுத்து எறிஞ்சுடட்-டுமா?" என்று கத்திக்கொண்டு வெளிவர முயன்றனர்.

இதுவரை நிலைமையைக் கவனித்துக் கொண்டிருந்த போலீஸ்காரர்கள் நிலைமை கட்டுமீறிப் போய்விடக் கூடாது என்று எண்ணி, ஏய்! "நீங்க சும்மா இருங்கய்யா" என்று உள்ளிருப்பவர்-களைப் பார்த்து அதட்டிவிட்டுச் சத்தியாக்கிரகிகளை நோக்கி, "தொண்டர்களே! உங்களுக்கு இரண்டு நிமிஷம் அவகாசம் தருகிறோம். இதற்குள் நீங்கள் இவ்விடத்தைவிட்டுக் கலைந்து போய்விடுங்கள். கள்ளுக்கடைக்கு வருபவர்களை வழி மறித்து நிறுத்த முயல்வது சட்டப்படி பெருங்குற்றமாகும், இதை நாங்கள் அனுமதிக்க முடியாது. மரியாதையாகப் போய் விடுங்கள்" என்று உத்திரவிடலாயினர்.

சத்தியாக்கிரகிகள் இதைச் செவியேற்கவே இல்லை. மறியல் செய்வதிலேயே கண்ணுங்கருத்துமாயிருந்தனர். கள்ளுக்கடை தலைமை குமாஸ்தாவிற்கு கோபம் மிகுந்தது. அவருடைய மதுரைவீரன் மீசை துடிக்கலாயிற்று. அவர் போலீஸ்காரர்களைப் பார்த்து, "என்னய்யா, கான்ஸ்டபிள்களே! நீங்கள் வேடிக்கை பார்த்துக் கொண்டிருக்கிறீர்கள், இந்தப் பிச்சைக்கார நாய்களை இழுத்து வெளியே போடாமல்" என்று முழக்கமிட்டார். போலீஸ்-காரர்களும் பொறுமையிழந்து விட்டனர். கடை குமாஸ்தாவின் மரியாதையற்ற பேச்சு அவர்களுக்கு உணர்ச்சியை உண்டு பண்ணியது. சப் – இன்ஸ்பெக்டர் தன் கையில் உள்ள குறுந்தடியை ஒருவிதமாக ஆட்டிக் கண் சைகையால் கான்ஸ்டபிள்களுக்குக் குறிப்புக் காட்டினார். உடனே கான்ஸ்டபிள்கள், தொண்டர்கள் இருக்குமிடத்திற்குப் பாய்ந்து, "ஊம் போங்கள், கடைக்குமுன் நிற்காதீர்கள். வழியை மறிக்காதீர்கள்." என்று உரத்த குரலில்

கூறியவாறு மறியல் செய்து கொண்டிருந்த சத்தியாக்கிரகிகளைக் தாங்கள் வைத்திருந்த குண்டாந்தடிகளால் முரட்டுத்தனமாகத் தள்ளிவிடலாயினர். ஆனால், போலீஸாரின் இந்த கெடுபிடிகளுக்–குச் சத்தியாக்கிரகத் தொண்டர்கள் சிறிதும் அஞ்சவில்லை. அவர்கள் மறுபடியும் வந்து நின்று அமைதியாக மறியல் செய்ய–லாயினர். இதுகண்டு ஒரு கணம் திகைத்துப்போன போலீஸார் அடுத்து தங்கள் குண்டாந்தடியைச் சுழற்றி அவர்களை விரட்ட–லாயினர். இதனால், சத்தியாக்கிரகிகள், சிலருக்குத் தடியடி விழலாயிற்று; சிலர் காயமுற்றனர்.

இது போன்ற துவந்துவ யுத்தம் வேடிக்கை பார்க்க வந்து பொதுமக்களையும் ஆவேச உணர்ச்சி கொள்ள வைத்தது. இதற்–குள் சிலர், சத்தியாக்கிரகத் தொண்டர்கள் வந்து கள்ளுக் கடையை மறியல் செய்வதையும், அதனால் ஏற்பட்டுள்ள நெருக்கடியான நிலைமையையும் கள்ளுக்கடை முதலாளியான சாமிநாதப் பிள்ளைக்குத் தகவல் சொல்லலாயினர். சிலர் முதலாளியின் தம்பியிடமும் முறையிட்டனர். முதலாளியோ இந்நிலைமையை எப்படிச் சமாளிப்பது என்று யோசிக்கலானார். "தம்பியான செளந்தர–ராஜப்பிள்ளை மட்டும் சத்தியாக்கிரகிகள் தங்கள் கடையை மறியல் செய்ய வந்திருக்கும் செய்தி கேட்டுக் கோபத்தால் குதிக்க–லானார். "யாரடா அது? நம்ம கடையை வந்து மறியல் செய்வது? அவ்வளவு நெஞ்சுத் தைரியமுடையவர்களும் இருக்கிறார்களா? அவர்களுக்கு நம்ம சங்கதி தெரியாது போலிருக்கு. இதோ வருகிறேன் என்று சொல்லு" என்று முழங்கிக் கொண்டே பெரிய மலை போன்ற தம் உடம்பைத் தூக்கிக் கொண்டு வேகமாகப் புறப்படலானார். அடுத்த கணம் அவர் கையில் துப்பாக்கி இடம் பெற்றது. அவருடன் அவருடைய பரிவாரங்களும் கிளம்பலாயி–னர். அக்கம் பக்கத்து மக்களும், "தம்பியப்பா கோபத்துடன் கிளம்பி விட்டாரே! என்ன விபரீதம் நடக்கப் போகிறதோ?" என்ற அச்சத்துடன் அவர்கள் பின்னால் நடந்தார்கள்.

சாமிநாதப்பிள்ளையின் வீட்டிற்கும், கள்ளுக்கடைக்கும் மூன்று பர்லாங்கு தூரம்கூட இருக்காது. அவர் இருக்கும் தெருவிற்கு அடுத்த திருப்பத்தில்தான் கள்ளுக்கடை இருந்தது. கடையை அடுத்தாற்போலவே பத்து கஜ தூரத்தில் ஐஸ்ஹவுஸ் போலீஸ் ஸ்டேஷன் இருந்தது. ஆனால் அது திருவல்லிக்கேணி பகுதிக்கு மட்டுமே உரியது. கிருஷ்ணாம்பேட்டை பகுதிக்குப் பொறுப்பான போலீஸ் ஸ்டேஷன் இராயப்பேட்டை நெடுஞ் சாலையில் இருந்தது.

இந்தக் கள்ளுக்கடை மறியலால் ஏற்படும் நிலைமையைச் சமாளிக்க இராயப்பேட்டை போலீஸார்தான் வந்திருந்தனர். "ஐஸ்ஹவுஸ்" போலீஸ் ஸ்டேஷனைச் சேர்ந்த போலீஸார் இவர்களுக்கு உதவியாக இருந்தனர். இவர்களை மேற்பார்க்கவும் மறியல் நிலைமையைக் கண்காணிக்கவும் டிபுடி கமிஷனர் ஒருவர் வந்திருந்தார். இதுவன்றி இண்டலிஜன்ஸ் டிபார்ட்மெண்ட்டைச் சேர்ந்த சி.ஐ.டிக்கள் சிலரும் உத்தியோக உடுப்பின்றி கூட்டத் –தோடு கூட்டமாக நின்று நடப்பதைக் கவனித்துக் கொண்டிருந் தனர். இந்தச் சி.ஐ.டிக்களில் ஒருவர் சத்தியாக்கிரகப் படைத் தளபதி ஒருவரைக் குறிப்பாகப் பார்த்துக்கொண்டிருந்தார். இதைத் தற்செயலாகக் கவனித்துவிட்ட அத்தளபதி அந்தச் சி.ஐ.டியை உற்றுப் பார்த்துவிட்டு, "யார் அனந்தனா? நீ இங்கேயாப்பா இருக்கே? ஊரிலிருந்து வந்து எவ்வளவு நாளாச்சு? என்ன செய்து கொண்டு இருக்கே?" என்று. காட்டிக்கொள்ளக்கூடாது என்று எச்சரிக்கையாய் இருந்த அந்தச் சி.ஐ.டி. தளபதியின் குரலைக் கேட்டுத் திடுக்கிட்டுப் போனார். பின் தன்னைச் சுதாரித்துக் கொண்டு "ஓ! பத்மநாப அண்ணனா? நான்... நான்..." என நிறுத்திப்பின், "நீங்களும் இங்கேதான் இருக்கிறீங்களா? திருச்சூரி –லிருந்து எப்போது வந்தீங்க? எங்கே இருக்கீங்க?" எனக் கேட்டார். "போனவாரம் தான் வந்தேன். சத்தியாக்கிரகப் படையில் சேர்ந்து மறியல் செய்வதற்காக குருவாயூர் தலைவர் கேளப்பன் என்னை அனுப்பியிருக்கிறார்..." எனச் சொல்லிக் கொண்டிருக்கும்போதே

கூட்டம் நெருக்கியடித்துக் கொண்டு வந்து அவர்களை மோதித் தள்ளிப் பிரித்து விட்டது.

கரிய பெரிய மலை அசைந்து வருவதுபோல் ஆடி அசைந்து வந்து கொண்டிருந்த தம்பியப்பா, கள்ளுக்கடையை நெருங்க நெருங்க மக்களிடையே பரபரப்பு அதிகமாகிக் கொண்டிருந்தது. அவர் வழி நெடுகிலும் மறியல் செய்ய வந்திருக்கும் சத்தியாக் கிரகத் தொண்டர்களைப் பற்றி வாய்க்கு வந்தவாறு வசைமாரி பொழிந்து கொண்டே வந்தார். இப்பேச்சு கேட்போர் சிலருக்குக் கேலியாகவும் இருந்தது; பயம் ஊட்டுவதாகவும் இருந்தது. அவர் கையில் வைத்திருந்த துப்பாக்கி பொதுவாக எல்லாருக்குமே அச்சத்தை ஊட்டியது.

இதற்கிடையே சத்தியாக்கிரகத் தொண்டர்கள் போலீஸா -ரின் கெடுபிடியையும், தடியடியையும் பொருட்படுத்தாமல் அணியணியாக வந்து மறியல் செய்து கொண்டு இருந்தனர். இதற்குள் ஏறக்குறைய 20 தொண்டர்கள் கைது ஆகி போலீஸ் வேனில் ஏற்றப்பட்டு இருந்தனர். இப்போது ஆறாவது தொண்டர் படை, தளபதி பத்மநாபன் தலைமையில் மறியல் செய்து கொண்டி -ருந்தது. இந்தச் சமயத்தில் கள்ளுக்கடைக்கு முன் இருந்தவர்கள் இடையே சலசலப்பு ஏற்படலாயிற்று. “அதோ தம்பியப்பா வரு -கிறார். சின்ன முதலாளி வந்து விட்டார்” என்று சிலர் பதட்டக் குரலில் கூறினர். உடனே அங்கிருந்தோர் கிழக்கு திசையை நோக்கித் திரும்பிப் பார்த்தனர். தம்பியப்பா முன்வர அவருக்குப் பக்கத்திலும், பின்னாலும் பெருங்கூட்டம் வந்து கொண்டிருந்தது.

இதைக் கண்டதும் போலீஸார் திடுக்கிடலாயினர். ஆனால் சத்தியாக்கிரகத் தொண்டர்கள் சிறிதும் பதட்டம் அடையவில்லை. வழக்கம்போலவே அவர்கள் அமைதியாகக் கள்ளுக்கடைக்கு வருவோரிடம் வேண்டுகோள் விடுத்தவாறு மறியல் செய்து கொண்டிருந்தனர். “யாரடா அது? அங்கே? எங்கள் கடையை விட்டுப்போகப் போகிறீர்களா? இல்லையா?” என்று தம்பியப்பா போட்ட அதட்டல் குரல்கூட அவர்களை அசைத்திடவில்லை.

தன்னுடைய வருகையும் அதட்டலும்கூட சத்தியாக்கிரகிகளைச் சிந்தை கலங்க வைக்கவில்லை என்று அறிந்ததும், தம்பியப்பா -வின் ஆத்திரம் அதிகமாய் விட்டது. அவர் காற்றினும் கடிய வேக -மாகச் சத்தியாக்கிரகிகள் இருக்குமிடத்தை நோக்கித் தாவி வந்தார். இதற்குள் போலீஸ் அதிகாரிகள் அவருக்குக் குறுக்காக வந்து நின்று, "சல்யூட்" அடித்து மரியாதை செய்தவாறு, "நீங்கள் போங்கள் சார்! உங்களுக்குச் சிரமம் எதற்கு? நாங்கள் பார்த்துக் கொள்கிறோம்" என்று சொன்னார்கள்.

"சரிதானய்யா! உங்கள் பவிசுதான் இதோ தெரிகிறதே! கேவலம் இந்தக் காந்தி குல்லாக்காரன்கள் போலீஸ்காரர்களாகிய உங்களுடைய பௌருஷத்தைப் போக்கிவிட்டு உங்களைப் பிள்ளைப் பூச்சிகளாக்கி விட்டார்களே! உங்களைக் கண்டால் துடை நடுங்கி ஓடி ஒளிய வேண்டியவர்கள் அவர்கள். ஆனால், இப்போது நீங்கள் சோற்றுக்கு இல்லாத இந்தக் காந்தி தொண்டர் -களைப் பார்த்து நடுங்கிச் சாகிறீர்கள். சரிதான், போங்கள் வழி விட்டு, நான் இவர்களைக் கவனித்துக் கொள்கிறேன்; உங்களு -டைய உதவியொன்றும் எனக்கு வேண்டியதில்லை" என்று வீராப்பாகக் கூறிவிட்டு முன்னோக்கிப் போகலானார். போலீஸ் அதிகாரிகள் இவருடைய ஆணவப் பேச்சைக் கேட்டு அதிர்ந்து போய் நின்றனர். டிபுடி கமிஷனர் சிந்தனையுடன் அவ்விடத்தி -னின்றும் மெல்ல அகன்றார். கள்ளுக்கடை முன் குழுமியிருந்த மக்கள் கூட்டம் பயபக்தியுடன் தம்பியப்பாவுக்கு வழிவிட்டு ஒதுங்கி நிற்கலாயிற்று.

சத்தியாக்கிரகிகளின் மறியலைக் கண்டு தயங்கி வெளியே நின்றிருந்த குடிகாரர்கள் சிலர் சின்ன முதலாளியின் வருகையால் தைரியம் அடைந்து வேண்டுகோள் விடும் தொண்டர்களை விலக்கிக் கொண்டும், தரையில் படுத்திருக்கும் தொண்டர்களை மிதித்துக் கொண்டும் கள்ளுக்கடைக்குள் "திமுதிமு"வெனப் புகுந்தனர். இவர்களிடையே தம்பியப்பா துப்பாக்கியுடன் குறுக்கே பாய்ந்து, "டேய், வயிற்றுச் சோற்றுக்கு வக்கற்ற சோம்பேறிப்

பசங்களே! எங்கள் கடையை விட்டுப் போகிறீர்களா? இல்லையா! உங்களைத் தொலைத்து விடுவேன் தொலைத்து, ஆமாம்; சொல்லி விட்டேன். உங்கள் உயிர்மீது ஆசையிருந்தால் உடனே போய்விடுங்கள்" என்று ஓங்கிக் கூக்குரல் இட்டார். இது கேட்டு மக்கள் கூட்டமும் போலீசும் கதிகலங்கி நின்றனர். சத்தியாக்கிரகி -கள் மட்டும் சற்றும் அசைந்து கொடுக்கவில்லை. இது இன்னும் தம்பியப்பாவிற்கு அதிக ஆத்திரத்தை உண்டு பண்ணியது. "என்னடா நான் சொல்லுகிறேன், சிறிதும் சட்டை செய்யாமல் அப்படியே நிற்கிறீர்களே! நான் ஏதோ வாயால் சொல்லுகிறேன் என்று நினைக்கிறீர்களா? இன்னும் ஒரு நிமிஷத்திற்குள் நீங்கள் கடையைவிட்டுப் போகவில்லையானால் பறவையைச் சுட்டுத் தள்ளுவதைப் போல் ஈவிரக்கமில்லாமல் உங்கள் எல்லோரையும் சுட்டுத் தள்ளிவிடுவேன்" என்று உறுமினார். அத்துடன் நில்லாமல், தம் கையில் வைத்திருக்கும் துப்பாக்கியையும் தூக்கிப் பிடித்து அவர்களுக்கு நேரே குறி பார்ப்பது போல் நீட்டினார்.

அச்சமயம் மறியல் செய்யும் தொண்டர்களை மேற்பார்வை செய்தவாறு சமயோசிதம்போல் அவர்களுக்கு உத்தரவு பிறப் -பித்துக்கொண்டிருந்த தளபதி பத்மனாபன் முன்வந்து, "பிள்ளை -வாள்! எங்களைச் சுட்டுத் தள்ளப்போகிறேன் என்றுதானே சொல்லுகிறீர்கள்; காந்தி மகாத்மா கட்டளைப்படி தேசசேவை செய்ய வந்திருக்கும் எங்களுக்கு இந்தக் குண்டுப் பரிசு கிடைத் -தால் அளவில்லா மகிழ்ச்சியுடன் அதை ஏற்றுக்கொள்வோம்" என்று கூறி, தம்பியப்பாவிற்கு முன் நின்று தம் மார்பை நிமிர்த்திக் காட்டினார். கூட்டத்தோடு கூட்டமாக நின்று நடப்பவற்றை எல்லாம் கூர்ந்து கவனித்துக்கொண்டிருந்த சி.ஐ.டி அனந்தனுக்குப் பத்மநாபனின் செயல் துணுக்கம் உண்டாக்கிற்று. நிலைமை எப்படித் திரும்புமோ என்ற கவலையுடன் அவன் பத்மநாபன் பக்கம் நெருங்கி நின்றான். பத்மநாபனின் அமைதியான வீரப்பேச்சு தம்பியப்பாவிற்கு அவரைக்கேலி செய்வது போல் தோன்றியது. ஆகவே, அவர் இராவணாவதாரம் கொள்ளலானார். "அட! துப்பாக்

–கிக் குண்டுக்கு முன் மார்பைத் திறந்து காட்டும் சூரப்புலியைப் பாருங்கடா! இப்படிப் பகட்டிப் பேசினால் நான் பிரமித்துப்போய்ப் பின்வாங்கிவிடுவேன் என்பது உன் நினைப்போ? அதெல்லாம் இந்த ஐயாவிடம் நடக்காது. நான் எச்சரித்திருக்கிறபடி உன் ஆட்களுடன் உடனே இவ்விடத்தை விட்டு நீ போகவில்லை –யானால், உங்களெல்லோரையும் சுட்டுப் பொசுக்கி விட்டு மறுவேலை பார்ப்பேன். ஜாக்கிரதை!" என்று கூறிக்கொண்டே துப்பாக்கி முனையை அவர் மார்பின் மீது வைத்து அழுத்தினார். இதுகண்டு அங்கு இருந்த எல்லோருமே (சத்தியாக்கிரகிகள் உட்பட) பயந்துவிட்டார்கள். பத்பநாபனுக்குப் பக்கத்திலிருந்த அனந்தன் மட்டும் அச்சத்துக்கு இடங்கொடாது, திடீரெனப் பாய்ந்து தம்பியப்பாவின் கையிலிருந்த துப்பாக்கியைத் தட்டி விட்டான். அத்துடன் நில்லாமல், அவன் கண்மூடிக் கண் திறப்பதற்குள் தன்னுடைய மேல் துண்டையுருவியெடுத்துத் தம்பியப்பாவின் கழுத்தில் போட்டுக் கைகளோடு சேர்த்துப் பிடித்துக் கொண்டான். இதுகண்டு "ஆஹா... ஹா" என்ற பயப்பீதி ஒலி எல்லோரிடமிருந்தும் எழலாயிற்று. போலீஸார் உட்பட எல்லோரும் பிரமைபிடித்து நின்றுவிட்டனர். சில விநாடிகள் கழித்து ஒரு கான்ஸ்டபிள் மட்டும் தூரப்போய் விழுந்து கிடந்த துப்பாக்கியை ஓடிச்சென்று தூக்கிக்கொண்டார்.

இராவணன் போல் வணங்காமுடியான தம்பியப்பா இவ் –விதமான நிலையைச் சிறிதும் எதிர்பார்க்கவில்லை. நிமிர்ந்து நின்று தன் விருப்பம்போல் எதையுஞ் செய்து அவர் பழக்கப் பட்டவர். அவருக்குத் தடையெதுவும் ஏற்பட்டு அனுபவமில்லை. அவர் பிறரைத் தட்டிக் கேட்டு ஆணையிட்டதைத் தவிர, அவரை இதுவரை யாரும் தட்டிக் கேட்டு அறிந்தவரில்லை. இப்போது இங்கும் தன்னை யாரும் தட்டிக் கேட்கமாட்டார்கள் என்று கருதியிருந்த அவருக்கு சி.ஐ.டி அனந்தனின் தீரச்செயல் திடுக் –காட்டத்தை உண்டு பண்ணியது. அவர், தன் கையிலிருந்த துப்பாக்கியைத் தட்டிவிட்டதோடு, ஒருவன் தன்னையும் துணி

போட்டுப் பிடித்துக்கொண்டதை உணர்ந்து பேரதிர்ச்சி கொண்டு நின்றுவிட்டார். இப்பிரமிப்பிலிருந்து தன்னை சுதாரித்துக் கொள்வதற்கு அவருக்குச் சில விநாடிகள் ஆயின. "யாரடா! அவன் என்னைப் பிடிக்கிறது? என்னைத் தொடுவதற்குக் கூட ஒருவ –னுக்குத் தைரியம் வந்துவிட்டதா?" என்று சொல்லிக் கொண்டே தன் தோள்களைக் குலுக்கி ஒரு உலுக்கு உலுக்கினார். இதனால் சி.ஐ.டி. அனந்தன் சிறிது நிலைகுலைந்துதான் போனான். தன் பிடி தளர்வதை உணர்ந்து திடுக்கிட்ட அவன், மிகச் சிரமத்துடன் சமாளித்துக் கொண்டு தன் பிடியை இறுக்கலானான். தனக்கு உதவியாக சி.ஐ.டி. சகாக்களும் போலீஸ்காரர்களும் வருவார்கள் என்று எதிர்பார்த்து அவன் ஏமாற்றத்தையே அடைந்தான். போலீஸார் அவனுக்கு உதவி புரியாதது மட்டுமல்லாமல் சிலர் உபதேசமும் செய்யலாயினர்.

"என்ன காரியம் செய்தாய், அனந்தன்?"

"அவர் யார்? எப்பேர்ப்பட்ட செல்வாக்குடையவர் என உனக்குத் தெரியாதா? நம்ம இலாகா பெரிய அதிகாரிகள் கூட அவர் முன் கூழைக் கும்பிடு போடுவார்களே."

"அவரை விட்டு விடப்பா! வீணாக நீ ஏன் வம்பையும் ஆபத்தையும் விலைக்கு வாங்கிக்கொள்கிறாய்?"

இது போன்ற பேச்சுக்கள் தான் அனந்தன் காதில் விழுந்தன. இது கேட்டு அவன் மனம்வேதனையடைந்தான்.

"இங்கு நேரவிருந்த ஆபத்தான நிலைமையைச் சமாளிக்க என் கடமையைச் செய்தேன். இது தவறா?" என்ற வார்த்தைகள் அனந்தனின் வாயிலிருந்து வந்தன. "S.I.க்கும், D.C.க்கும் தெரியாதா? ஏதாயினும் நடவடிக்கை எடுக்க வேண்டும் என்றால் அவர்கள் சொல்லமாட்டார்களா? அதிகப்பிரசங்கித்தனமாக நீ இப்படி நடந்து கொண்டாயே?"

ஹெட் கான்ஸ்டபிள் ஒருவர் கோபமாகச் சொன்னார்.

"டிப்டி கமிஷனர் என்ன சொல்கிறார்? கேளுங்கள்?" அனந்தன் சொன்னான்.

சில கான்ஸ்டபிள்கள் சுற்று முற்றும் பார்க்கலாயினர்.

"அவர் எங்கே இருக்கிறார்? அவர் போய் சிறிது நேரம் ஆயிற்றே!" என்றார் ஒரு கான்ஸ்டபிள்.

"ஏதோ தெரியாத்தனமாய் செய்தது செய்துட்டே. அவரை விட்டுட்டு அவரிடம் மன்னிப்புக் கேட்டுக் கொள்ளப்பா."

அனந்தனைப் போல உள்ள ஒரு சி.ஐ.டி சொன்னார். இதற்குள் இலாவகமாக கழுத்தை இறுக்கிப்பிடித்திருந்த துண்டை எடுத்துத் தோள்களைச் சேர்த்து பின்கட்டாகக் கட்டிப் பிடித்துக் கொண்ட அனந்தன் "ஊஹூம்... நான் இவரை விட முடியாது. இவரை விட்டால் அடுத்த கணம் ஆபத்தான நிலைமைதான் ஏற்படும். பிடித்தது பிடித்து விட்டேன் இவரை ஸ்டேஷனுக்கு அழைத்துச் சென்று இன்ஸ்பெக்டரிடம் ஒப்படைத்து விடுகிறேன். அவர் என்ன வேண்டுமானாலும் செய்து கொள்ளட்டும். எனக்கு அக்கறையில்லை."

அனந்தன் உறுதியான குரலில் சொன்னான். அவன் தம்பியப்பாவைப் பிடித்திருந்த பிடி அவனுடைய சொல்லைப் போலவே அழுத்தமாயிருந்தது.

போலீஸாருக்கும் மற்றவர்களுக்கும் திகைப்பு அதிக-மாயிற்று.

மற்றவர்களைப் போலவே திகைத்துப் போய்ச் செயலற்றி-ருந்த பத்மனாபன் இச்சமயம் அனந்தனை நோக்கி ஏதோ சொல்ல வாயெடுத்தார்.

அதற்குள் அனந்தன் தம்பியப்பாவைப் பிடித்துத் தள்ளிக் கொண்டு போலீஸ் வேனை நோக்கிச் சென்றான். ஆஜானுபாகு-வான தம்பியப்பா அவனுடைய பிடியிலிருந்து விடுபட எப்படி-யெப்படியோ திமிறிப் பார்க்கலானார். அவருடைய ஜம்பம் ஒன்றும் சாயவில்லை. அவன் பிடி உடும்புப் பிடிபோல் இரும்புக் கணக்காய் இருந்தது.

எங்கோ போய்விட்டு வந்த சப் – இன்ஸ்பெக்டர், அனந்தன் தம்பியப்பாவை மேல் துண்டினால் இருகரங்களையும் பின் கட்டாக இறுக்கிக் கட்டித் தள்ளிக்கொண்டு போவதைப் பார்த்து விட்டு, “அனந்தன்! என்ன காரியம் செய்துட்டே! நீ?” என வியப்பும், விதிர்ப்பும் மேலிடக் கூறினார்.

“என் கடமையைச் செய்தேன் சார்” எனச் சொல்லிக் கொண்டே திரும்பிப் பாராமல் போகலானான். ஒரு கான்ஸ்டபிள் அவன் காதருகேசென்று, “நீ பலே ஆளப்பா! உன் தைரியத்தைப் பாராட்டுகிறேன்” என்றான்.

“உங்க பாராட்டுக்கு நன்றி ஐயா! எனக்குத் தைரியமுண் –டாக்கியது சத்தியாக்கிரகப் படைத் தளபதியின் அஞ்சா நெஞ்சம் தான். கள்ளுக்கடைக்காரரின் குண்டுக்குறிக்கு ஆளாக இருந்த அவர் எங்கள் ஊர்க்காரர். மலையாளி” என்று அனந்தன் உற்சாக –மாகச் சொன்னான்.

“ஓ! அப்படியா சங்கதி!” என்ற கான்ஸ்டபிள், “எது காரணமாக இருந்தாலும், நீ இப்பொழுது செய்துள்ளது அபாரச் செயல் ஆகும்” என்று கூறிவிட்டு நகர்ந்தான்.

கடைசியாக, அனந்தன் போலீஸ் வேனண்டை சென்று, “கொஞ்சங் கதவைத் திறவுங்கள். ஐயா!” என்று கூறினான்.

பிரமிப்புடன் வேடிக்கை பார்த்துக் கொண்டு போலீஸ் வேனில் ஏற்றியிருந்த தொண்டர்களைக் காவல் புரிந்து கொண்டி –ருந்த போலீஸார் அனந்தன் அதிகாரத் தோரணையோடு கதவைத் திறக்குமாறு கூறியதைக் கேட்டுச் சிறிதுந் தயங்காமல் கதவைத் திறந்து விட்டனர். உடனே அனந்தன் தம்பியப்பாவின் முதுகில் தட்டி, “ஊம்; வண்டியில் ஏறு” என்று கூறி வண்டியில் ஏற்றினார். அனந்தனும் ஏறலானான். இச்சமயத்தில் சில போலீஸ்காரர்கள் ஓடிவந்து வேனில் ஏறிக் கொண்டனர். அனந்தன் கதவைச் சாத்திக் கொண்டு, “251! வேனை இராயப்பேட்டை ஸ்டேஷனுக்கு ஓட்டு! இல்லை... இல்லை, போலீஸ் கமிஷனர் ஆபீசுக்கு ஓட்டு” என்று கூறினான் டிரைவர் கான்ஸ்டபிள்; வேனில் இருந்த மற்றக்

கான்ஸ்டபிள்களை ஒருவிதமாகப் பார்த்துவிட்டு வண்டியை வேகமாக ஓட்டலானான். சத்தியாக்கிரகிகளான தங்களைச் சிறை செய்து செல்வதற்காக வந்த போலீஸாரில் ஒருவன், கள்ளுக்கடைச் சொந்தக்காரனொருவனையே கைது செய்து கொண்டு வந்த அதிசயத்தைக் கண்டு தொண்டர்கள் மகிழ்ச்சியாரவாரம் செய்யலா-யினர். இந்த உற்சாகத்தில் அவர்கள் "பாரத மாதாகி ஜே! மகாத்மா காந்தி ஜே" என கோஷம் போடலாயினர்.

இதுவரை மந்திரத்தால் கட்டுண்ட பாம்பைப் போல் உணர்-வற்று, நடப்பதையெல்லாம் கவனித்துக் கொண்டிருந்த மக்கள் கூட்டம் போலீஸ்வேன் போனதும் பரபரப்படைந்து பலவிதமாகப் பேசிக்கொள்ளலாயினர்.

தங்கள் சின்ன எஜமானையே ஒரு சி.ஐ.டி. கட்டிப் பிடித்து விட்டானே என்ற பயப்பிரமையால் செயலாற்று இருந்த கள்ளுக் கடையாட்களும், குடிகாரர்களும் ஆளுக்கு ஒருவிதமாகப் பேசி ஆர்ப்பரிக்கலாயினர். கடைத் தலைமைக் குமாஸ்தா ஒரு சி.ஐ.டி. தம்பியப்பாவைப் பிடித்துக் கொண்டு போன செய்தியை முதலாளி-யிடம் போய்ச் சொல்ல சிப்பந்திகள் சிலரை ஏவினார். சிலர் வெளியே வந்து 'ஆய்... ஊய்' என்று கூவி விகாரமாகக் கை, கால்களை ஆட்டலாயினர். எஞ்சியிருந்த போலீஸார், பிரமை பிடித்துப் போய் நின்றிருந்த சத்தியாக்கிரகத் தொண்டர்களைப் பார்த்து, "இத்தோடு உங்கள் மறியலை முடித்துக் கொண்டு போங்கய்யா! இனியும் இருந்தால் ஏதேனும் விபரீதமாகப் போகி-றது" என்று மெல்லக் கூறிவிட்டுக் கூட்டத்தை நோக்கி, "சரி... சரி! போங்க கலைந்து" என்று அதட்டிக் கொண்டே போயினர். கூட்டம் மெல்லக் கலையலாயிற்று. அனந்தனின் துணிச்சலான செய்கை-யைப் பற்றியே நினைத்துக் கொண்டிருந்த பத்மநாபன், கைது ஆகக் காத்திருந்த தொண்டர்களை நோக்கி, "சரி; வாருங்கள் நாம் முகாமுக்குப் போவோம்" என்று சொல்லிக் கொண்டு அவ் விடத்தை விட்டு மேற்கே நடக்கலானார். அவர் வாய், 'அனந்த-னுக்கு ஒன்றும் நேராமல் இருக்க வேண்டும். ஆண்டவனே!' என்று முணுமுணுச்[illegible]ன்று.

4. புதுக்கடை

— பெ.தூரன்

கந்தப்பன் இப்பொழுது பெருங்குடிகாரனாகி விட்டான். வீரப்பனோடு சேர்ந்து கொண்டு பழகிய இந்தக் கெட்ட குணம் அவனை இன்று இறுகப் பிடித்துக்கொண்டது! முதலில் தனியே குடிக்கப்போக அஞ்சுவான்; அவன் கால்கள் கடைக்குள் எட்டி வைக்க கூசும்; "யாராவது பார்த்தால், மானம் போச்சே!" என்ற எண்ணம் அவனுக்கு உண்டாகும்! உண்மையில் வீரப்பன் இல்லாவிட்டால் அவன் அந்தப் பக்கமே போயிருக்கமாட்டான். இப்பொழுதோ கந்தப்பன் எந்த நேரத்தில் வேண்டுமானாலும் கடைக்குள் நுழைய பின்வாங்குவதில்லை. கந்தப்பன் பெருத்த குடிகாரனாகிவிட்டான் என்பது கிராமம் முழுவதும் தெரிந்து விட்டது.

சில வேளைகளில் அவன் குடிவெறியால் நடுவழியில் உருண்டு கிடப்பான். அப்போது அவனைப் பார்த்தவர்கள், "ஐயோ! சூதுவாது தெரியாத இவனும் சேர்க்கையால் இப்படிக் கெட்டு விட்டானே!" என்று இரக்கப்படுவார்கள்.

கந்தப்பன் செங்காளிபாளையத்தில் ஒரு பண்ணையாள். கிடைக்கும் சம்பளத்தைக் கொண்டு தன் மனைவி, இரு குழந்தை –களோடு சுகமாக வாழ்ந்து வந்தான். ஊரில் எல்லோரும் அவனை, "அப்பாவி" என்று புகழ்ந்து பேசுவார்கள்.

கந்தப்பனுக்குக் காலை முதல் மாலை வரையில் பண் –ணைக்காரனுக்குத் திருப்தி ஏற்படும்படி வேலை செய்யத்தான் தெரியும். கூலியைத் தன் மனைவி வேலாயியிடம் கொடுத்து விடுவான்; தனக்கென்று அவன் ஒரு காசுகூட வைத்துக்கொள்ள மாட்டான். வேலாயி வீட்டுக்கு எஜமானி; குழந்தைகளோடு கொஞ்சுவதும், பகலெல்லாம் உழைத்துக் களைப்புடன் திரும்பி வரும் கந்தப்பனை உபசரிப்பதுந்தான் அவள் வேலை. கந்தப்பன் தன் மனைவியின் அமுதமொழிகளால் சலிப்பெல்லாம் நீங்கிக் களிப்புறுவான்.

புதன்கிழமை செங்காளிபாளையத்திற்குச் சந்தை நாள். அன்று ஒருவரும் வேலைக்குப் போகமாட்டார்கள். சில கூலிக்காரர் அன்றுதான் தலையில் இரண்டு செம்பு தண்ணீர் ஊற்றிக் கொள்வார்கள்; வேலாயி அதிகாலையிலேயே தன் கணவன், குழந்தைகளை எண்ணெய் தேய்த்துக்குளிக்கச் செய்து, பின்பு தானும் எண்ணெய் தேய்த்து முழுகுவாள். சூரியன் உதயமாக ஆக இந்தக் குடும்பம் தூய ஆடை உடுத்திக்கொண்டு, கற்பூரம் ஊது -வத்திகளோடு கோவிலுக்கு வந்துவிடும்; அவ்வூரில் சிவன், விஷ்ணு, மாரியம்மன் கோயில்கள் பக்கம் பக்கமாகவே இருந்தன. அவர்களுக்கு எல்லாம் கடவுள்தான்; சைவம், வைணவம் என்ற பெயரே தெரியாது. அவர்கள் மூன்று கோவிலுக்கும் சென்று வணங்குவார்கள்; கந்தப்பனுக்குக் கற்பூர ஆராதனை நடக்கும் போதும், மணிச்சத்தங் கேட்கும்போதும் கண்களில் நீர் பெருகி விடும். வேலாயி, "என் கண்ணாட்டிகள் (கணவனும், பிள்ளை -களும்) சுகமாக இருக்க வேண்டும" என்று மனமாறத் தொழுவாள்.

மாலை வேலாயி சந்தைக்குச் சென்று வீட்டுக்குவேண்டிய 'செலவும்' பிள்ளைகளுக்கு மிட்டாயும் கந்தப்பனுக்குக் கரும்பும் வாங்கி வருவாள். கந்தப்பனுக்குக் கரும்பைவிட அவள் அன்பே அதிகமாக இனிக்கும்.

ஆனால் இவையெல்லாம் குடிப்பேய் பிடிப்பதற்கு முந்திய நிகழ்ச்சிகள். இப்பொழுது எல்லாம் மாறிவிட்டன. கந்தப்பனுக்குக் குடிப்பதற்கே கூலிப்பணம் கட்டுவதில்லை. வீட்டில் ராகிகூட இருக்காது; அதைப்பற்றி அவன் கவலைப்படமாட்டான்; சில சமயம் வேலாயி, இரண்டணாவாவது கொடுக்கும்படி கெஞ்சுவாள். குடி மயக்கம் இல்லாவிட்டால் கந்தப்பன், "இந்தா" என்று கொடுப்பான்; குடிமயக்கமாயிருந்தால் வேலாயிக்கு அடிதான் கிடைக்கும்.

இன்பம் குடிகொண்டிருந்த அக்குடும்பத்தில் வறுமை புகுந்து விட்டது. வேலாயி உடல் மெலிந்து களையிழந்து வாடி விட்டாள். வீட்டில் இருந்த நகைகளை எல்லாம் விற்றாய் விட்டது. குழந்தைகளுக்குச் சரிவரச் சோறு போடுவதே இப்பொழுது முடிவதில்லை.

ஒருநாள் மாலை பண்ணைக்காரன் கந்தப்பனிடம் நூறு ரூபாய் கொடுத்துப் பக்கத்து ஊரில் ஒருவனுக்குக் கொடுத்து வரும்படி சொன்னான். கந்தப்பன் போகும் வழியில் ஒரு கள்ளுக் கடை இருந்தது. அவன் அன்று காலை முதல் கையில் காசு இல்லா -ததால் குடிக்கவில்லை. கடையைக் கண்டதும் கந்தப்பனுக்குக் கால் அங்கே இழுத்தது. சற்றுநேரம் தயங்கினான். பண்ணைக் -காரனுக்குத் தெரிந்தால் அப்புறம் வேலைக்கு வரவேண்டா -மென்று சொல்லி விடுவானே என்ற பயமும் உண்டாயிற்று; "உம் நாலணாவுக்கு குடித்துவிட்டுப் பிறகு யாரிடத்திலாவது வாங்கிக் கொடுத்துவிட முடியாதா?" என்ற எண்ணமும் நடுவே தோன் -றியது. இதற்குள் அவன் கடைக்குப் பக்கமாக வந்துவிட்டான். "கந்தப்பா! வா வா, உன்னைப் பத்தித்தான் இவ்வளவு நேரம் பேசிக்கிட்டிருந்தேன்" என்று கடையில் உட்கார்ந்து கொண்டிருந்த வீரப்பன் கூப்பிட்டான்; "எங்கே, இப்படி இரண்டு கொண்டா, டேய் சாக்கணா!" என்று கூவினான் வீரப்பன். பண்ணைக்காரன் கட்டளை பறந்துவிட்டது. கந்தப்பன் தன் நண்பனோடு சேர்ந்து குடிகுடி யென்று குடித்து விட்டான்.

கந்தப்பன் தள்ளாடிக் கொண்டு நடக்கிறான். எந்தப் பக்கம் போகிறான், ஏன் அங்கே போகிறான்? ஒரு நிதானமும் இல்லை. பாதையை 'அளக்கிறான்' முகத்தில் களிப்புப் பொங்குகிறது; ஒரு சிறு தெம்மாங்கு அவனை அறியாது வாயிலிருந்து கிளம்புகிறது.

கடையைவிட்டு ஒரு காடுகூடத் தாண்டவில்லை. அதற் -குள்ளேயே கந்தப்பனுக்குக் கால் நிலத்தில் பாவவில்லை. அப்ப -டியே திண்டாடி ஒரு கள்ளிப்புதர் அருகில் பொத்தென்று விழுந் -தான். கெட்ட நாற்றத்தோடு அவன் வாயிலிருந்து கள் வழிந்தது. வேட்டி சரியாக இடுப்பில் இல்லை; மடிப்பையைக் காணோம்.

மறுநாள் காலை: கதிரவனோடு தூங்கிக் கதிரவனோடு விழிக்கும் பறவைகள் தங்கள் இணையுடன் உல்லாசமாகப் பேசிக் கொண்டிருக்கின்றன; இன்துயில் நீங்கிப் புத்துயிருடனும் புது மகிழ்ச்சியுடனும் மரத்துக்கு மரம், கிளைக்குக்கிளை பறந்து திரிகின் -றன. இயற்கைத்தேவி அருளிய மந்த மாருதத்தில் நீந்தி, உண -வைத் தேடி உண்டு, ஊறும் தீஞ்சுவைத் தண்ணீரைப் பருகி

வாழும் அப்பறவைகளுக்கு அடக்க முடியாத, மயக்கந்தரும் களிப் -பும் கிடையாது; பின்பு அதனால் ஏற்படும் தளர்ச்சியும் கிடையாது.

மயக்கத்திலிருந்து தூக்கத்திற்குச் சென்று விழித்த கந்தப் -பன் மிகுந்த குடியால் தளர்வுற்று அப்படியே படுத்துக் கொண்டு சற்றுநேரம் இந்தக் காட்சியைக் கவனித்தான். அவனை அறியாம -லேயே அவனுக்குச் சிரிப்பு வந்தது, புதிதாகத் தோன்றிய பகல -வனும் சிரித்தான். மறுகணம் கந்தப்பனுக்குத் தன் மேலேயே வெறுப்புண்டாயிற்று. குடி பெருந்தீங்கு என்ற எண்ணம் திடீ -ரென்று, அந்தப் பறவைகளைப் பார்த்ததாலோ வைகறையின் வசீகரத்தாலோ அவனுக்கு ஏற்பட்டது.

இந்த எண்ணத்துடன் அவன் தன் வீட்டுக்குள் நுழைந்தான். இரவு பட்டினியாகையால் குழந்தைகள் இரண்டும் வயிறு ஒட்டிப் பிய்ந்த பாயில் படுத்துக்கொண்டிருந்தன. தூக்கமோ, பசிமயக்கமோ – குழந்தைகள் அவனைக் கண்டு ஒன்றும் பேசவில்லை. வேலாயி, இரவில் வெகு நேரம் தூங்காமல் அழுது கொண்டிருந்தபடியால் தலை நோவுண்டாக, பக்கத்து வீட்டுக்காரி கொடுத்த நாலு மிளகை அரைத்து நெற்றியில் தடவிக்கொண்டிருந்தாள். இக்காட்சியால் கந்தப்பனுக்கு அடக்க முடியாத துக்கம் வந்துவிட்டது. பழைய அன்பு, குடியில் வெறுப்பேற்பட்டவுடன் திரும்பிவர, அவன் வாய்விட்டுக் கதறினான்!

"இனிமேல் நான் இந்தப் பாழும் கள்ளைக் கையில் கூடத் தொடுவதில்லை" என்று தன் மனைவியின் முன் சத்தியம் செய்தான். அப்பொழுதுதான் அவனுக்குச் சிறிது ஆறுதல் உண்டாயிற்று.

வேலாயி மறுபடியும் நல்ல நாட்களைக் காண ஆரம்பித் -தாள். கந்தப்பன் தனது சத்தியத்தைக் கைவிடவில்லை. கூலிப் பணம் பழையபடி வேலாயி கையில் விழுந்தது. ஆனால் தொலைத்து விட்ட நூறு ரூபாயைக் கொடுக்க அடகு வைத்த தாலியை இன்னும் திருப்பவில்லை. வேலாயி கழுத்தில் தாலிக்குப் பதிலாக ஒரு சிறு நூல் சரடுதான் இருக்கிறது.

கந்தப்பன், தன்னை அவமானத்திலிருந்து காக்கத் தன் மனைவி தாலியை அடகு வைக்கத் துணிந்ததைக் கண்டு அவள்

மேல் முன்னிலும் அதிக அன்பு கொண்டான். "குடிப்பதில்லை, இது உறுதி" என்று பலமுறை சொல்லிக் கொள்ளுவான். அதோடு கிராம சேவையில் ஈடுபட்ட பல தொண்டர்கள் அக்கிராமத்தில் வந்து செய்யும் மதுவிலக்குப் பிரசாரத்தை அவன் தப்பாமல் கேட்பான். படிக்கத் தெரியாவிட்டாலும் பல சொற்பொழிவுகளைக் கேட்க அவன் மதுபானத்தின் தீங்கைப் பற்றி நன்றாகத் தெரிந்து கொண்டான்.

ஆனால் மதுபானம் தீங்கு என்ற உண்மையை உணர்ந்து அவன் அதைத் தொடாமல் இருக்கவில்லை; சத்தியத்தைக் காப்பாற்றவேண்டும், குடிப்பதால் மனைவி மக்கள் துன்புற வேண்டியிருக்கிறது என்ற எண்ணங்களே அவனைக் குடிக்காம –லிருக்கச் செய்தன.

கந்தப்பன் தனது உறுதியில் வெற்றிப் பெறுவதற்கு அரசாங் –கத்தில் உண்டான ஒரு முக்கிய மாறுதலும் உதவி புரிந்தது. முதன் முதலில் காங்கிரஸ் ஆட்சி சென்னை மாகாணத்தில் ஏற்பட்டதும் சேலம் மாவட்டத்தில் மதுவிலக்கு அமுலுக்கு வந்தது. செங்காளி பாளையம் அந்த மாவட்டத்தில் இருந்ததால் அங்கு மதுக்கடைகள் மூடப்பட்டன. கந்தப்பன் குடியை அறவே மறந்து விட்டான்.

காலம் மெதுவாக நழுவிக் கொண்டிருந்தது. அப்படி நழுவிய ஐந்தாறு ஆண்டுகளில் எத்தனையோ மாறுதல்கள் உண்டாயின. இரண்டாம் உலகப் போருக்குப் பின் இந்தியாவுக்கு சுதந்திரம் தருவதாகத் தெளிவான வாக்குறுதி கிடைக்காததால் காங்கிரஸ் ஆட்சியை விட்டு விலகிக் கொண்டது. பயங்கர யுத்தம் உலகத்தையே வளைத்துக் கொண்டது. சேலத்தில் மது அரக்கன் மறுபடியும் தாண்டவமாடலானான்.

மறுபடியும் ஒரு புதன்கிழமை, கந்தப்பனுக்கு இப்பொழுது சம்பளம் சிறிது அதிகம். மத்தியானம் சுமார் இரண்டு மணிக்குக் கந்தப்பன் கூலிப்பணத்தை வாங்கிக்கொண்டு வந்தான். இத்தனை ஆண்டுகளாக மிச்சம் பிடித்த பணத்துடன் இதையும் சேர்க்கவே மொத்தம் 103 ரூபாய் இருந்தது. அதைக் கண்டு அவன் உள்ளம் பூரித்தது. "இனி அடகு வைத்த தாலியைத் திருப்பி விடலாம்" என்று அந்தப் பணத்தை எடுத்துக்கொண்டு சந்தைக் –குப் புறப்பட்டான்.

சந்தைக்குள் நுழைவதென்றால் கள்ளுக்கடையைத் தாண்டி வந்தாகவேண்டும். சந்தையன்று மக்கள் அதைப் பார்க் -காது சென்றாலும் ஏழு நாளைய புளித்த கள் நாற்றத்தையாவது மூக்கில் ஏற்றிக் கொண்டு போய்த்தானாக வேண்டும். அதோடு வழக்கமாக அன்று கள் விலை சொப்பு ஓர் அணா ஆகிவிடும். "விலை சொப்பு ஒரு அணா" என்று ஒருவன் திடுமம் அடித்துக் கொண்டிருப்பான்.

கந்தப்பன் கடையை அணுகியதும் பழைய நினைவு எப் -படியோ உதயமாகிவிட்டது. நல்ல வெயிலில் இரண்டு மைல் -களுக்கு மேல் நடந்ததால் அவனுக்கு மிகுந்த தாகம் உண் -டாயிற்று. "தாலியைத் திருப்ப 100 ரூபாய் போதும்; சந்தைச் செலவுக்கு இரண்டு ரூபாய் வேண்டுமென்று வேலாயி சொல்லி யிருக்கிறாள். ஒரு ரூபாய் மீதி இருக்கிறதே, அதைச் சொந்தச் செலவிற்கு வைத்துக் கொண்டால் என்ன? இன்றைக்கு ஒரு நாள் மட்டும் மனமாரக் குடித்துவிட்டுப் பிறகு அதை நினைக்கிறதே இல்லை" என்று இம்மாதிரி அவன் மனத்தில் நினைப்போடியது. களைப்பாறவோ என்னவோ அவன் சந்தைக்குள் நுழையாமல் கள்ளுக்கடைக்குப் பக்கத்தில் இருந்த ஒரு வேப்பமரத்து நிழலில் உட்கார்ந்தான்.

கந்தப்பன் மறுபடியும் கள்ளைப் பற்றி நினைத்தான்: "விட்டது முதல் அதன் மேலேயே ஒரே பைத்தியமாக இருக்கிறது. இன்றைக்கு ஒருநாள் குடிப்பதால் என்ன முழுகிவிடும்? நான் முன்னைப்போல் தினமுமா குடிக்கப்போகிறேன்? இந்த ஆசை -யைத் தீர்த்துக்கொள்ள இன்றைக்கு மாத்திரம். மறுபடியும் இதைத் தொடுவதே இல்லை. மறுபடியும் கடையைத் திறந்திருக் -கிறார்களே. ஒரு தடவை குடித்தால் என்ன கெட்டுப்போகும்? புதுக்கடையைக் கண்டது முதல் அதே நினைவாக இருக்கிறது. இன்றைக்கு மாத்திரம் குடித்துப் பார்த்துவிட்டு மறுபடியும் அதைத் தொடுவதே இல்லை. இன்றைக்கு மாத்திரம்; மறுபடியும் கிட்டக் கூட போவதில்லை" என்று அவன் மறுபடியும் உறுதியாகத் தீர்மானிக்கத் தொடங்கினான். "ஆகக் கூடி ஒரு நாலணாக் காசு - இந்த ஆசை தொலையட்டும்" என்று முனகிக் கொண்டே கந்தப்பன் கடைசியாகக் கடைக்குள் நுழைந்து விட்டான்.

அன்று அவன் வேலாயியைப் பார்க்கவில்லை. புளித்த கள்ளை வெயில் நேரத்தில் 'இன்றைக்கு மாத்திரந்தானே' என்று நிறையக் குடித்ததனாலும், நெடுநாளாகக் குடிப்பழக்கம் விட்டுப் போனதாலும் அவனுக்குப் போதை மீறிவிட்டது. சந்தை சென்று திரும்பிய வண்டிக்காரன் ஒருவன் அவன் வழியில் தடுமாறு -வதைக் கண்டு வண்டியில் தூக்கிப்போட்டுக்கொண்டு போய் அவன் வீட்டில் விட்டான்.

கந்தப்பனுக்குப் போதை தெளிவதற்குள் இருட்டிவிட்டது. முதலில் எங்கிருக்கிறோமென்றே அவனுக்குத் தெரியவில்லை. பிறகு கொஞ்சம் கொஞ்சமாக நடந்தவையெல்லாம் நினைவிற்கு வந்தன. "வாக்குத் தவறினதுமல்லாமல், வேலாயிக்குத் தெரியும் -படி நடந்துகொண்டேனே! யாரிடத்திலாவது அவளிடம் கொடுக் -கும்படி இரண்டு ரூபாயை முதலிலேயே கொடுத்திருக்க வேண்டும்" என்று பலவாறு நினைத்துக் கலங்கினான். அப் -பொழுதுதான் அவனுக்குந் தான் கொண்டுபோன ரூபாயைப் பற்றிய எண்ணம் வந்தது. மடியைத் தொட்டுப் பார்த்தான். பையைக் காணவில்லை.

சந்தையில் ஒரு செலவும் வாங்காமல் வேலாயி வெறுங் கூடையுடன் வீட்டுக்கு வந்தாள். "அடே அம்மா வந்துட்டா அம்மா! மிட்டாயி" என்று சத்தம் போட்டுக்கொண்டு சிறுவர்கள் ஓடி வந்தார்கள்.

கந்தப்பனுக்கு இதைக்கேட்கப் பொறுக்க முடியவில்லை. வேலாயியிடம் நடந்ததை ஒளிக்க அவன் இப்பொழுது கருதாமல் தனது மனதைக் கலைத்த கள்ளுக்கடையை ஒரு சிலந்திக் கூடு என மனதிற்குள்ளேயே சபிக்கலானான். அதேசமயத்தில் வேலாயி -யின் வாடிய கண்கள் அவன் கண்களைச் சந்தித்தன. "ஐயோ! கடையை மறுபடியும் திறந்துவிட்டு என் புத்தியைக் கெடுத்து விட்டார்களே! கடையில்லாவிட்டால் நான் புத்திகெட்டு போயிருக்க மாட்டேனே!" என்று அவன் கதறினான். ❑

5. அடிச்சுவடு

– புலவர் நாகசண்முகம்

காரிய பெரிய மனிதனுடைய வெள்ளைப் பற்களைப் போல, இருண்டுகிடந்த வானத்தில் ஒளிக்கீற்றுகள் மின்னிக் கொண்டி–ருந்தன.

இங்கொன்றும் அங்கொன்றுமாக விழத் தொடங்கிய மழைத்துளிகள் அந்தப் பேரொளியில் வைர நெடுங்கம்பிகள் போலக் காட்சி தந்து கொண்டிருந்தன.

அந்த ஒளிக்கற்றைகளுக்கு முன்னே, பொன்னியூர்த் தெருக்–களில் மின்னிக் கொண்டிருந்த தெருவிளக்குகள் வலுவிழந்து காணப்பட்டன.

மற்றொரு முறை வானம் மின்னிச் சிரித்தபோது அந்தப் பெருஞ்சிரிப்பைக்கண்டு அஞ்சியது போல் மின்சாரம் தன் ஆற்றலை இழக்கவே தெருவிளக்குகள் அணைந்தன.

பொன்னியூர் இருள் அரக்கனின் கோரப்பிடியில் சிக்குண்டு விட்டதோ, என்று எண்ணும்படியாக அந்த ஊரை இருள் சூழ்ந்து கொண்டது.

மழை “சோ” வெனப் பெய்யத் தொடங்கியது.

இந்த நிலையில் விலை உயர்ந்த பெரிய கார் ஒன்று பொன்னியூர்த் தெருக்களின் ஊடே மண்டிக்கிடந்த, இருளைக் கிழித்துக் கொண்டு ஊரின் தென்புறத்தே உள்ள மூன்று மாடிக் கட்–டிடத்தை நோக்கிச் சென்றுகொண்டிருந்தது.

“பல நாட்களாக நான் கோடை வெய்யிலில் காய்ந்தேன் ஒரு நாளாவது கொட்டும் மழையில் நான் நனைந்து மகிழ வேண்–டாமா?” என்று கேட்பதுபோல அந்த விலை உயர்ந்த கார் மூன்று மாடிக்கட்டிடத்தின் அருகில் வந்ததும் நின்று விட்டது.

அதை ஓட்டிக்கொண்டு வந்த இளைஞன் என்ன முயன்றும் காரை இயக்கும் முயற்சியில் வெற்றி பெறவில்லை. எனவே காரைவிட்டு இறங்கிப் பங்களாவை நோக்கி அவன் நடக்கத் தொடங்கினான்.

உள்ளபடியே தள்ளாடும் நிலையில் இருந்த அவனை கொட்டிக் கொண்டிருந்த மழை வேறு தள்ளாடச் செய்தது.

எப்படியோ பங்களாவின் வெளிக்கதவுகளை அவன் அடைந்து விட்டான். இரவு மணி ஒன்பதாகியும் அவன் வரவிற்-காக அந்தக் கதவுகள் பூட்டப்படாமலிருந்தன. கார் எப்போது வரும் என்று எதிர்பார்த்தபடியே காவற்காரன் அவனுக்காக உருவாக்கப்பட்டிருந்த மரப்பெட்டியின் உள்ளே உட்கார்ந்திருந்-தான். அதனால் அவனுடைய முதலாளியான அந்த இளைஞன் வந்ததை அவன் கவனிக்கவில்லை.

தள்ளாடியபடியே பங்களாவை நோக்கி நடந்து கொண்டி-ருந்த அந்த இளம் முதலாளி பங்களா முற்றத்தை அடைவதற்கு முன்னால் இருந்த சிறிய வீட்டின் அருகில் சென்றதும் நின்றான்.

அந்த வீட்டில் வாழ்ந்து கொண்டிருந்த கண்ணனும் அவன் மனைவி கமலாவும் பேசிய வார்த்தைகள் அவனை நிற்கும்படி செய்தன.

“மணி என்னங்க ஆகுது?”

“ஒன்பது ஆகுது”

“இன்னம் அந்தப் பாவி மனுஷனைக் காணோமே”

“நீயே பாவி மனுஷன்னு உண்மையைச் சொல்லிட்டியே அப்படிப்பட்ட ஆளுக்கு நேரமும் காலமும் ஏது கமலம்!...”

“இந்த இருட்டிலே மைதிலி கைக்குழந்தையோடே எப்படிக் கவலைப்பட்டுகிட்டிருக்காங்களோ”

“தெய்வமா இருக்க வேண்டிய கணவனோ தெருவிற்கு வந்த பின்னாலே நாமெல்லாம் என்னதான் உதவி செஞ்சுட முடியும். அந்த அம்மாவுக்குத் தெய்வம்தான் இனித் துணை.”

இலேசாகத் திறந்திருந்த ஜன்னல் வழியே அந்த இளை-ஞன் உள்ளே பார்த்தான். தன்னைக் குறைத்துக் கொள்வதன் மூலம் அந்தத் தம்பதிகளுக்கு மத்தியில் இருந்த மெழுகுவர்த்தி ஒன்று சிறிய அளவில் ஒளி தந்து கொண்டிருந்தது. அந்த ஒளியில் கூட கண்ணன், கமலம் இருவர் கண்களிலும் கலங்கி நின்ற நீர்த் திவலைகள் பளிச்சென்று தெரிந்தன. சுடரின் சூட்டால் உருகிக்

கொண்டிருந்த மெழுகுவர்த்திகூட அவர்கள் கூறிய மைதிலிக் -காகக் கண்ணீர் சிந்துவது போல அவனுக்குத் தோன்றியது.

உணர்வுகள் மங்கிக்கிடந்த அந்த இளைஞனின் உள்ளத் -தில் இந்தக் காட்சிகள் சுரீர் என்று தைத்தன. சவுக்கடிக்கு ஆளான நிலையை அவன் அடைந்தான்.

அவன் யார்?

பொன்னியூர் ஒரு சிறு கிராமம்! இது பழைய கதை. இன்று, அது ஓர் அழகிய சிறு நகரம்.

தாலூகா அலுவலகங்கள், கால்நடை பராமரிப்பு நிலை -யம், கோழி வளர்ப்புப் பண்ணை, குடும்பக் கட்டுப்பாட்டு நிலை -யம், ஆண், பெண்களுக்குத் தனித்தனியே விளங்கும் மாபெரும் சேவை அரங்கம், அதன் உள்ளே விளங்கும் பல தொழிற்பிரிவுகள், மாபெரும் நூல் நிலையம் முதலியன அது ஒரு நகரம்தான் என்பதை நிலைநாட்டிக் கொண்டிருந்தன.

தமக்காகவே வாழ்ந்து சுயநலச் சேற்றிலேயே அழுந்தி, அதுவே சுவர்க்கம் என்று எண்ணித் திரியும் மாந்தர் நிறைந்த இந்த உலகில் பிறருக்குச் சேவை செய்வதற்காகவே சிலர் பிறக்கிறார்கள்.

அப்படிப்பட்டவர்களில் ஒருவர் தான் இராமநாதன்.

இராமநாதன் பருவகாலப் பணக்காரர் அல்ல. பரம்பரைப் பணக்காரர்.

பொன்னியூர்க் கிராமத்திலேயே மாபெரும் மிராசுதாராக விளங்கிய மாணிக்கவேலரின் ஒரே மகன்!

இராமநாதன் இளமையிலேயே தந்தையை இழந்துவிட்டார் என்றாலும் சிறந்த முறையில் படித்து உயர்ந்த வகையில் வாழ்க் -கையை அமைத்துக்கொண்டார்.

அந்த இராமநாதனின் கடும் 'உழைப்பால் – தன்னலம் கருதாத தொண்டால்தான் பொன்னியூர் புகழ் மணக்கும் ஊராக மாறியது.'

இராமநாதன் உள்ளப் பெருவெளியி(ல்) காந்தீயத் தத்துவங் -கள் முளைவிடத் தொடங்கியபோதுதான் அவர் சேவையின் சிறப்பை உள்ளவாறு தெரிந்து கொண்டார்.

அவர் காந்தியடிகளை ஞானகுருவாக ஏற்றுக் கொண்ட பரம சீடராக விளங்கி வந்தார்.

"தன்நிகரற்ற பெருமகன் ஒருவருடைய தத்துவங்கள்தான் உயிர் பெற்றுச் சமுதாயத்தை வாழவைக்கின்றன. அந்தத் தத்துவங் -களின் செயலாக்கத்திற்கே கட்சி பிறக்கிறது. தலைவன் எவ்வழி, அவ்வழி தொண்டர்கள். கட்சித் தலைவனுடைய தூய்மையே கட்சி வாய்மை வழியிலே செல்ல வழி வகுக்கிறது," என்ற எண் -ணங்களை உடையவர் இராமநாதன்.

நல்ல வசதியும் ஏராளமான வாய்ப்புகளும் கொண்ட இளை -ஞரான இராமநாதன் முரட்டுக் கதர்த் துணியை அணிந்து கொண்டு தாழ்ந்த குடிமக்கள் என்று மற்றவர்களால் ஒதுக்கி வைக்கப்பட்ட ஏழை எளியவர்களோடு கலந்து பழகத் தொடங்கிய போது ஊரே வியப்படைந்தது. ஊர் மக்கள் அவரைத் தெய்வமாக நினைத்தார்கள்.

தெய்வ சந்நிதானத்தில் விளங்கும் திருவிளக்குப் போலச் சீதை என்ற குணவதி அவருக்கு மனைவியாக வாய்த்தாள்.

தம்மைப் பார்க்கப் பல ஊர்களிலிருந்தும் வருபவர்கள் தங்குவதற்கு வசதியாக இருக்கட்டும், வளத்திற்கு ஒரு எடுத்துக் காட்டாகத் திகழட்டும், ஊருக்கு பெருமையாக இருக்கட்டும் என்று எண்ணிய இராமநாதன் அழகிய முறையில் மூன்றடுக்குக் கட்டிடம் ஒன்றைக் கட்டினார்.

அந்த மாளிகையில் கணவனும் மனைவியும் இராமபிரா -னும் சீதாப்பிராட்டியும் போலவே வாழத் தொடங்கினார்.

அந்த அன்புத் தம்பதிகளுக்கு ஆண்குழந்தை ஒன்று பிறந் -தது. ஊரே மகிழ்ந்தது. அக்குழந்தைக்கு தயாளன் என்று இராம நாதன் பெயர் சூட்டினார்.

எங்கும் எதிலும் அமைதி நிலைக்க வேண்டும் என்றுதான் பெரியவர்கள் விரும்புகிறார்கள். ஆனால் அவ்வாறு எங்கே அமைகிறது?...

ஒருநாள், ஒத்துழையாமை இயக்கப் போராட்டத்தில் கலந்து கொண்ட இராமநாதன் போலீசாரின் தடியடிக்கு இலக்கானார் -

மயங்கி வீழ்ந்தார். பிறகு அவர் பேசவில்லை. உடற்கூண்டிலி -ருந்து உயிர்பறவை பறந்து விட்டபிறகு அவர் எப்படிப் பேசுவார்?

தங்களுடைய மகிழ்ச்சிக்கெல்லாம் காரணமாக இருந்தவர் பிரிந்ததை அறிந்து ஊர் மக்கள் பெரும் அதிர்ச்சிக்கு ஆளானார்கள், அழுதார்கள், புலம்பினார்கள் என்றாலும் தங்களைத் தேற்றிக் கொண்டு துணை இழந்து கொடிபோல் துவண்ட கோதையை, இராமநாதன் மனைவி சீதையை அனைவரும் சென்று தேற்றி -னார்கள்.

தன் ஒரே செல்வனின் அறிவுக்கூர்மை நிறைந்த விழி -களைப் பார்த்து – தன் கணவனைப் போலவே இருந்த அவன் தோற்றத்தை நோக்கி அந்தக் கோதையும் மனம் தேறினாள்.

படகை இழந்தவனுக்குக் கிடைத்த பற்றுக் கோல்போல கணவனை இழந்த சீதைக்குத் தயாளன் உற்ற துணையாக வளர்ந்து வந்தான்.

பருவங்கள் மாறின. ஆண்டுகள் கரைந்தன. தயாளன் உருவத்தில்தான் எத்தனை மாற்றம்! இராமநாதன் இந்த உலக வாழ்வை நீத்தபோது பாலகனாக இருந்த அவன் பதினெட்டு வருடங்களைக் கடந்தபோது மற்றொரு இராமநாதனாகவே காட்சி தந்தான்.

ஊரார் அவனைச் சின்ன இராமநாதன் என்றே குறிப்பிட்டு வந்தார்கள்.

கோடிகோடி செம்பொன் கொடுத்தாலும் பெறமுடியாத குணக்குன்றான மைதிலியை தயாளனுக்கு சீதை மணம் முடித்து வைத்தாள்.

கங்கையிலும், காவிரியிலும் கழிவு நீர்கள் கலப்பதற்கு என்ன காரணம் சொல்வது?

புனிதரான, புகழின் உருவமான இராமநாதனின் மகன் மற் -றொரு இராமநாதனா வருவான் என்ன தான் பெற்றவளும், மற்ற -வர்களும் நினைத்தார்கள். அவன் புகழ் சேர்க்கும் இராமநாதனாக வராவிட்டாலும் சாதாரணத் தயாளனாகவாவது இருந்திருக்கலாம். ஆனால் தரம் கெட்டவனாக தந்தையின் புனிதமான சேவை

–களுக்கே உலை வைப்பவனாக, சுருங்கச்சொன்னால் குடிகார –னாக மாறினான்.

நினைவோடு வீட்டை விட்டுச் சென்று நினைவு தடுமாறிய நிலையிலே வீட்டை அடையும் கணவனைக் கண்டு மைதிலி நைந்தாள்.

சாணம் நாறலாம் – சந்தனம் நாறலாமா? மாபெரும் தேச பக்தரான இராமநாதன் மகன் குடிகாரன் ஆகாலாமா? இந்தத் கொடுமையை அந்த உத்தமரின் மனைவி அறிந்தால் என்ன நடக்குமோ என்று மைதிலி கலங்கினாள்.

உலைவாயை மூடலாம் – ஊர்வாயைக் கூட மூடலாம் – ஆனால் உண்மையை எப்படி மூடமுடியும்!

அதை மூட முடிந்திருந்தால் சத்தியம் என்ற சொல்லுக்கு பொருள் வேறாக அல்லவா ஆகியிருக்கும்.

தன் மகன் இரவில் நெடுநேரம் கழித்து வருகிறான் என்பதை அறியத் தொடங்கிய, தாய் உள்ளம் பதறியது.

குலவிளக்கான மனைவியை விட்டுவிட்டு குடி கெடுக்கும் எவளிடமாவது தன் மகன் தொடர்பு கொண்டு விட்டானோ என்று தான் அந்தப் பேதைத் தாய் எண்ணினாள்.

ஆனால் மனிதனை மிருகமாக்கும் மது அரக்கனுக்கு, ஒப்பற்ற தேசபக்தரான இராமநாதரின் மகன் பலியாவான் என்று அவள் கற்பனை கூடச் செய்யவில்லை.

ஒரு நாள் இரவு மகனைச் சந்தித்த பிறகுதான். தன் அறைக்குச் செல்வது என்ற தெளிவான முடிவோடு சீதை ஹாலில் அமர்ந்திருந்தாள் மைதிலி, "நேரமாகிறது நீங்கள் போய்ப்படுத்துக் கொள்ளுங்கள்" என்று என்ன சொல்லியும் அவள் கேட்கவில்லை.

குடித்துவிட்டு வரும் தன் கணவனை அத்தை பார்த்ததும் என்னென்ன விபரீதங்கள் நேரப் போகின்றனவோ என்று குமுறிய படியே மைதிலி சீதை அருகில் நின்று கொண்டிருந்தாள்.

தயாளன் தள்ளாடியபடியே வந்து சேர்ந்தான். தனயனைக் கண்ட தாய் உள்ளம் பதறியது. கடுமையான நோய்க்கு எதிர் பாராமல் இலக்காகி விட்டானோ என்றுதான் அந்தத் தாய் உள்ளம் முதலில் எண்ணியது.

"மகனே! என்னடா உடம்பு" என்று கேட்டபடியே புதல்வன் அருகில் சீதை வந்தாள்.

அவன் வாயிலிருந்து வந்த நெடி அவள் வயிற்றைக் குமட்டி -யது. நம்பமுடியாத அளவு பெரும் அதிர்ச்சிக்கு அவள் ஆளானாள்.

"குடிக்கிறாயா! அடப்பாவி, குடிக்கிறாயா?" தாய் அலறி -னாள்.

"ஏன் அலறுகிறாய் – இதிலெல்லாம் தலையிட நீ யார்? வயதான காலத்தில் கிருஷ்ணா, ராமா என்று ஜபம் செய்து கொண்டு பேசாமல் இருக்க வேண்டியதுதானே?" அவன் உளறினான். மது அரக்கன் அவனை உளறச் செய்தான்.

நம் உடம்பில்தானே நோய் ஏற்பட்டிருக்கிறது? என்று நோயை வரவேற்க முடியுமா?

நம்பிள்ளை குடித்துவிட்டுத்தானே உளறுகிறான் என்று தாய் நினைக்க முடியுமா? அதுவும் இராமநாதன் மனைவியால் அது எப்படி முடியும்?

சீதையின் வயிறு எரிந்தது. தன் கணவன் இறந்த போதே தானும் இறக்காமல் போனோமே என்று துடித்தாள்.

ஹாலிலே நெடிதுயர்ந்து நின்ற காந்திமகானின் படத்தை அவள் தன் மகனுக்குச் சுட்டிக்காட்டினாள்.

"இந்த மகானின் பரம பக்தர்களில் ஒருவரான உன் தந்தைக்கு நீயா பிள்ளை?" என்று சீறினாள்.

தயாளன் பேய் போலச் சிரித்தான். "இந்தக் காந்தி படம் இருப்பதால் நான் குடிக்கக்கூடாது என்றால் இப்போதே அதை நான் எடுத்து எறிந்து விடுகிறேன்." என்று உளறிய அந்த வெறியன் மகானின் படத்தை நோக்கி நடந்தான்.

மைதிலி பயத்தால் ஊறிட்டாள்.

அந்தத் தெய்வத்தாய்க்கு, எங்கிருந்து தான் அந்த பலம் வந்ததோ படத்தை நோக்கிச் சென்று கொண்டிருந்த மகனை நோக்கி ஓடியவள், அவனை அப்படியே தன்புறம் திரும்பினாள். அடித்தாள், கை ஓயும் வரை அடித்தாள்.

பிரமை பிடித்த நிலையில் தயாளன் நின்றான். கை ஓயும் வரை அடித்த அந்தத்தாய் மெய்சோரக் கீழே விழுந்தாள். மறுநாள் உதயத்தில் சீதை இந்த உலகை விட்டுப் போய் விட்ட செய்தியைத் தான் ஊர் மக்கள் கேள்விப்பட்டார்கள்.

சீதை இறந்த ஒரு மாதத்திற்கெல்லாம் மைதிலி ஆண் குழந் -தைக்குத் தாய் ஆனாள். தாய் இறந்ததாலோ தனயன் பிறந்த -தாலோ தயாளன் எந்த மாற்றத்திற்கும் இலக்காகவில்லை.

அவனை மைதிலி திருத்த முடியவில்லை. தாயால் முடியா -மல் போனதைத் தன்னால் சாதிக்க முடியும் என்ற நம்பிக்கையே அவளுக்கு இல்லை......!

எண்ணச் சூழல்களுக்கு இலக்காகி நின்ற தயாளன் தன் தலையிலிருந்து வழிந்து கொண்டிருந்த மழை நீரைத் தன் கைகளால் வழித்து விட்டுக்கொண்டான்.

மீண்டும் கண்ணனும் கமலமும் பேசத் தொடங்கினார்கள்.

“கமலம், மணி ஒன்பதைரை ஆகுது. வா நாம சாப்பிடலாம்.”

“எனக்கென்னவோ மனசே சரியில்லீங்க. பாவம் மைதிலி கைக்குழந்தையோடே கண்ணீர் விட்டுக்கலங்குறதை நினைச்சா என் நெஞ்சே வெடிச்சுடும் போலே இருக்கு.”

“நமக்கு அப்படியிருக்கு, ஆனால் தாய் இறந்த பின்னாலே கூட அந்தத் தயாளன் புத்திமாறலையே!”

“மழை கொட்டுது. அந்த ஆளாக குடிவெறியிலே காரைக் கொண்டு போய் எங்கேயாவது மோதிட்டா, அதனாலே ஆகக் கூடாதது ஏதும் ஆயிட்டா, மைதிலி நிலை என்னங்க ஆகும்?”

கமலம் விம்மினாள்.

“நீ இதைச் சொல்ற போதுதான் எனக்குப் பழைய நினைவு வருது. என் பாட்டன் காலத்தில் இந்தத் தயாளன் குடும்பத்திற்கு இணையாகத் தான் எங்கள் குடும்பமும் இருந்தது. என் தந்தை குடிக்கத் தொடங்கிக் குடியையே கெடுத்துவிட்டார். தயாளன் தந்தை நல்லவராக இருந்தால் என்னைப் படிக்க வைத்து ஆளாக வழி செய்தார். இப்போது அவர் இல்லாவிட்டாலும் அவர் குடும் -பத்தில் வேலை பார்க்கும் நிலைக்குக்கூட வழி செய்தார்.”

கமலத்தின் விம்மல் ஒலி அதிகமாயிற்று.

மேலும் அங்கு நிற்க முடியாத தயாளன் உள்ளம் தடுமாற உணர்ச்சிகள் வட்டமிட, அங்கிருந்து மெல்ல நடந்தான். தன் வீட்டு ஹாலை அடைந்தான்.

ஹாலில் ஓர் ஓரத்தில் அரிக்கேன் விளக்கு ஒன்று எரிந்து கொண்டிருந்தது. மைதிலி தன் செல்வனைத் தோளில் போட்டுத் தட்டிக் கொடுத்தபடியே விம்மிக் கொண்டிருந்தாள்.

வேலைக்காரி ஓர் ஓரமாக உட்கார்ந்தபடியே தூங்கிக் கொண்டிருந்தாள்.

"மைதிலி!"... தயாளன் மனைவியை அழைத்தான். அவன் குரல் கரகரத்தது.

சிறிய விளக்கொளியில் வந்தது கணவன் தான் என்பதைச் சரியாகப் புரிந்து கொள்ள முடியாத மைதிலி ஒரு முறை கீரிச்சிட்டு விட்டாள்.

"நான் தான், மைதிலி!"...... தயாளன் இப்போது தெளிவாகக் கூறினான்.

அவன் குரலிலிருந்த மாற்றத்தைக் கண்டு மைதிலி வியப்புணர்ச்சிக்கு ஆளானாள்.

முற்றத்துப் படியில் நின்ற அவன் அங்கிருந்து உள்ளே வந்தான். அவன் தன்னை நோக்கித்தான் வருகிறான் என்று மைதிலி நினைத்தாள்.

அவன் ஹாலின் மற்றொரு புறத்தை நோக்கி நடந்தான்......

அவன் எங்கே போகிறான்? குடி மயக்கத்தில் நினைவற்றுப் போகிறானா? பேதை நெஞ்சம் தவித்தது.

தயாளன் இப்பொழுது நினைவோடுதான் சென்று கொண்டிருந்தான்.

நெடிதுயர்ந்து நின்ற மகாத்மாவின் படத்திற்கு அருகிலே சென்று அவன் நின்றான். அந்த எளிய வெளிச்சத்திலும் அந்த ஏந்தலின் கால்களைத் தொட்டு வணங்கியபடி அவன் விம்மினான்.

என்ன வியப்பு! மின்னல் ஒளியால் செயலற்றுப் போன மின்சாரம் மீண்டும் செயல்படத் தொடங்கியது. வீடு எங்கும் மின் விளக்குகள் பளிச்சிடத் தொடங்கின.

முற்றத்திலே கண்ணனும் கமலமும் நின்று கொண்டிருப் -பதை தயாளனும் மைதிலியும் கண்டார்கள்.

யாரோ போவது போன்ற ஓசை எழவே கண்ணன் வெளியே வந்து பார்த்தால், போவது தயாளன் தான் என அறிந்து என்ன நடக்கிறது என்று காணத்துடிப்போடு அவனை பின் தொடர்ந்து வந்தவர்கள் அங்கே நின்று கொண்டிருந்தார்கள்.

நீர் ஒழுகும் கண்களால் தயாளன் மனைவியையும், கண்ண -னையும், கமலத்தையும் பார்த்தான்.

"கண்ணா! மைதிலியின் துயரத்தைப்பற்றி நீயும் உன் மனைவியும் கொண்ட கவலையில் நூற்றில் ஒரு பங்குகூட நான் கொள்ளவில்லை. நீங்கள் அப்படிக் கவலைப்பட்டதற்குக் காரணம் என்ன? உங்கள் உள்ளம் நல்ல உள்ளம். உள்ளம் நல்லதாக அமைந்து விடுகிற போது அன்பும் பாசமும் அங்கே குடியிருக்கத் தொடங்கி விடுகின்றன. அதனால்தான் காந்தியடிகள் மனத் தூய்மையோடு வாழ வேண்டும் என்று கூறினார். அதை நான் உணர்ந்துவிட்டேன். மனிதனுக்குச் சிறப்பாக உள்ளது பகுத்தறிவு. அதையே பாழ் செய்யக்கூடியது குடி. எனவே குடிப்பவன் எப்படி முழு மனிதனாவான்?... மைதிலி! இன்று முதல் நான் முழு மனித -னாகி விட்டேன். கண்ணீரைத் துடைத்துக்கொள்!... மகான்களு -டைய அடிச்சுவடுகள்தான் மக்களை பூவுலகிலேயே சுவர்க்க போகத்தில் வாழச் செய்யும் வழிகாட்டிகள் ஆகும். நமது புண்ணிய பூமிக்கு காந்தியடிகளுடைய அடிச்சுவடுகளைவிடச் சிறந்த வழி காட்டிகள் எங்கே அமைய முடியும். இவற்றைக் கூறிய தயாளன் உணர்ச்சிப் பிழம்பாக நின்றான்.

மைதிலியும், கண்ணனும், கமலமும் மானசீகமாக காந்தி மகானின் அடிச் சுவடுகளுக்கு மாபெரும் அஞ்சலி செலுத்தினார்கள்.

❑

53. தமிழக அரசியல் கட்சிகளும் மதுஒழிப்பும்

இருபத்தியோராம் நூற்றாண்டின் துவக்கத்திலேயே மது ஒழிப்பிற்கான போராட்டங்களைத் தமிழகத்தில் அரசியல் கட்சிகளும், பல சமூக அமைப்புகளும் ஒவ்வொரு கோணத்தில் தொடர்ச்சியாக நடத்தத் துவங்கிவிட்டன.

மறுமலர்ச்சி திராவிட முன்னேற்றக்கழகம் :



மறுமலர்ச்சி திராவிட முன்னேற்றக்கழகம் தொடங்கிய காலத்திலிருந்தே இளைஞர்கள் நலனுக்கு அதிமுக்கியத்துவம் கொடுத்து செயல்பட்டு வருகிறது. தனிமனித ஒழுக்கத்திற்குச் சொந்தக்காரரான வைகோ அவர்கள் தன் சகாக்களும், தன்னைப் போலவே இருக்க வேண்டுமென விரும்புவார். மது ஒழிப்பிற்காக தமிழகம் முழுவதும் பல பொதுக்கூட்டங்களில் பேசியுள்ளார். நெல்லை மாவட்டம் உவரியிலிருந்து மதுரை வரையிலும், பொள்ளாச்சியில் துவங்கி ஈரோடு வரையிலும், காஞ்சிபுரம் மாவட்டம் கோவளத்தில் தொடங்கி மறைமலைநகர் வரையிலும் சுமார் 1500 கி.மீட்டருக்குமேல் தமது தொண்டர் படையுடன் நடைபயணமாகச் சென்று மக்களைச் சந்தித்தார். நடைபயணத் -தின்போது பெண்களிடத்தில் நல்ல வரவேற்பு கிடைத்தது.

மதுவிலக்கிற்காக மாரத்தான் போட்டியை ம.தி.மு.க நடத்தியது. கோவையில் சுந்தராபுரம் உழவர் சந்தையில் தொடங்கி மதுக்கரை மார்க்கெட் வரை 5 கி.மீ தூரம் நடைபெற்றது. முதன் முயற்சியாக நடைபெற்ற இந்த மாரத்தான் போட்டியில் பத்தாயிரத் –திற்கும் மேற்பட்டோர் கலந்து கொண்டனர்.

இந்தப்போட்டி 6 முதல் 9 ஆம் வகுப்பு வரை உள்ள மாணவ, மாணவிகள் தனித்தனிப் பிரிவாகவும், 10 முதல் 12 ஆம் வகுப்பு மாணவ, மாணவிகள் தனித்தனிப்பிரிவாகவும், 18 வயதிற்கும் மேற்பட்ட அனைவரையும் கொண்ட பொதுப்பிரிவாக மொத்தம் 5 பிரிவுகளாக நடைபெற்றது.



சென்னை, அண்ணாசாலை சிம்சன் அருகில், பெரியார் சிலை அருகே தொடங்கி மெரீனா கடற்கரை வழியாக கலங்கரை விளக்கம் அருகில் நிறைவு பெற்றது. இப்போட்டியில் 50 ஆயிரத்திற்கும் மேற்பட்டோர் கலந்து கொண்டனர். முந்தைய கின்னஸ் சாதனையை இந்த மதுவிலக்கு மாபெரும் மாரத்தான் போட்டி மிஞ்சி விட்டது.



திருச்சியில் கே.டி.திரையரங்கம் அருகில் துவங்கி ஜமால் முகமது கல்லூரிக்கு அருகில் நிறைவடைந்தது. இந்த மாரத்தான் போட்டியில் 42 ஆயிரம் பங்குபெற்றனர். இப்போட்டியில் 10 ஆயிரத்திற்கும் மேற்பட்ட பெண்கள் கலந்து கொண்டது குறிப்பிடத்தக்கது.




ம.தி.மு.க நடத்திய அனைத்து மதுவிலக்கு மாரத்தான் போட்டிகளிலும் கலந்து கொண்ட அனைவருக்கும் சிற்றுண்டி வழங்கப்பட்டது. ஆம்புலன்ஸ் வசதியுடன் மருத்துவர்களும் இணைந்து செயல்பட்டனர். போட்டிகள் நடைபெற்ற மூன்று இடங்களிலும் நிகழ்விற்குப் பின்னர் ம.தி.மு.க.வினரே அந்தந்த இடங்களைச் சுத்தம் செய்தனர்.



போட்டியின் இறுதியில் வெற்றி பெற்றவர்களுக்கு பரிசுகள் வழங்கி கௌரவிக்கப்பட்டது. உடல் ஊனமுற்றோரும், வயதில் முதிர்ந்தோர்களும் மதுவிலக்கு மாரத்தான் போட்டியில் கலந்து கொண்டது குறிப்பிடத்தக்கது.

பாட்டாளி மக்கள் கட்சி :



பாட்டாளி மக்கள் கட்சி தமிழகத்தில் மது ஒழிப்பிற்கான போராட்டங்களைத் தொடர்ச்சியாக நடத்தி வருகிறது. மதுவிற்கு எதிராக பெண்கள் மாநாடு நடத்தினர். மதுக்கடைகளுக்குப் பூட்டுப்போடும் போராட்டம் எனப் பல்வேறு போராட்டங்களை நடத்தியது. மருத்துவர் அன்புமணி ராமதாஸ் அவர்கள் மத்திய அமைச்சராக இருந்தபோது புகையிலைக்கு எதிராக கடும் சட்டங்களைக் கொண்டு வந்தார். முழு மதுவிலக்கை அமுல் படுத்தக்கோரி பலமுறை மதுக்கடைகளை முற்றுகையிட்டு போராட்டங்களை நடத்தியுள்ளனர்.

மக்கள் மதுவிலக்கு இயக்கம் :






காந்தியவாதி சசிபெருமாள் அவர்கள் தலைமையில் இயங்கும் மக்கள் மதுவிலக்கு இயக்கமானது மது ஒழிப்பிற்காக பலவித போராட்டங்களை நடத்தியுள்ளது. சசி பெருமாள் அவர்கள் உண்ணா விரதம் மேற்கொண்டார்.

முழு மதுவிலக்கிற்காக மக்களைத் திரட்டிப் போராடுதல், தொடர் பிரசாரம், விழிப்புணர்வு பிரசுரங்கள் விநியோகித்தல், மதுக்கடைகளுக்கு முன்பாக மது அருந்துபவர்களின் காலில் விழுந்து மது அருந்தக் கூடாது என வலியுறுத்துதல் எனப்பல போராட்டங்களை நடத்தி வருகிறார். மது ஒழிப்பிற்காகத் தன்னை முழுமையாக அர்ப்பணித்துக் கொண்டு செயலாற்றி வருகிறார்.

சட்டப்பஞ்சாயத்து இயக்கம் :



இந்த அமைப்பு இளைஞர்களின் நலனுக்காக மது ஒழிப்பை மையப்படுத்தி தொடர்ச்சியாக கலந்துரையாடல் கூட்டங்கள், போராட்டங்கள் நடத்தி வருகின்றனர்.

மதுவிலக்கை நோக்கிய முதற்கட்ட செயல்பாடாக, தமிழக அரசு கீழ்கண்ட நடவடிக்கைகளை உடனே அமல்படுத்த சட்ட பஞ்சாயத்து இயக்கம் கோருகிறது.

1. இலக்கு வைத்து வருமானத்தைப் பெருக்காமல் மக்கள் நல்வாழ்வே முக்கியம் என்ற அடிப்படையில் புதிய மதுக்கடைகள் இனி திறக்கப்படாது என தமிழக அரசு கொள்கை அறிவிப்பு வெளியிட வேண்டும்.

2. பொதுமக்களுக்கு இடையூறாக உள்ள மதுக்கடைகளை மூடக்கோரி மனு அளித்தாலோ, போராட்டம் நடத்தினாலோ, அக்கடைகள் உடனடியாக மூடப்பட வேண்டும். போராட்டத்தின் காரணமாக மூடப்படும் கடைகளை வேறு இடத்தில் திறக்கக் கூடாது.

3. தற்போது 12 மணி நேரமாக உள்ள மதுக்கடைகள் செயல்படும் நேரத்தை 6 மணி நேரமாகக் குறைக்க வேண்டும்.

4. வாரக்கூலி பெறும் குடிநோயாளிகளின் நல -னைக் கருத்தில் கொண்டு டாஸ்மாக் கடைகளுக்கு சனி, ஞாயிறு என 2 நாட்கள் விடுமுறை விடவேண்டும். அதேபோல், மாதத்தில் முதல் நாள், அரசு விடுமுறை நாட்களில் மதுக்கடைகள் மூடப்பட வேண்டும்.


5. குற்றச்செயல்கள் உருவாகும் இடமாக இருக்கும் குடிப்பகங்கள் (பார்கள்) உடனடியாக மூடப்படவேண்டும்.

6. தமிழகமெங்கும் உள்ள குடிநோயாளிகள் மறுவாழ்வு பெறுவதற்கு ஒன்றியத்திற்கு ஒரு மறுவாழ்வு மையங்கள் திறக்கப்பட வேண்டும். மதுவின் தீமைகள் குறித்த விழிப்புணர்வுப் பாடங்களை பள்ளி, கல்லூரி பாடத்திட்டத்தில் சேர்க்க வேண்டும்.

7. 21 வயதுக்கு கீழ் உள்ள பள்ளி, கல்லூரி மாணவர்கள் உள்ளிட்ட எவருக்கும் மது விற்பனை செய்யக்கூடாது என தற்போது உள்ள சட்டத்தை கடுமையாக அமல்படுத்த வேண்டும். இளையதலை முறையின் எதிர்காலத்தை கருத்திற்கொண்டு இந்தச் சட்டத்தை மீறுபவர்களை கடுமையாக தண்டிக்கப்பட வேண்டும்.



விழி தமிழ்நாடு :



ஓய்வுபெற்ற நீதியரசர் சந்துரு அவர்களை தலைவராகக் கொண்டு செயல்பட்டு வரும் இந்த அமைப்பானது தொடர்ச்சியாக மக்களிடத்தில் மதுவிலக்கு தொடர்பாக விழிப்புணர்வினை ஏற்படுத்தி வருகிறது. **சட்டப்படி மதுக்கடைகளை ஒழிப்பது எப்படி** என்ற நூலினை வெளியிட்டுள்ளனர். பல சமூக ஆர்வலர் -களையும், மது ஒழிப்பிற்காக பாடுபடும் இயக்கங்களையும் இணைத்து தொடர்ந்து பூரண மதுஒழிப்பிறக்காக பாடுபட்டு வருகின்றனர்.

காந்திய மக்கள் இயக்கம் :



காந்திய வழியில் செயல்பட்டுவரும் தமிழருவி மணியன் அவர்களை தலைவராகக் கொண்டு செயல்படும் இந்த அமைப்பு, அறவழிப் போராட்டங்களின் மூலம் மதுவிலக்கிற்காகப் போராடி வருகிறது. மது ஒழிப்பிற்காக ஒருகோடி கையெழுத்து இயக்கம் நடத்தியது குறிப்பிடத்தக்கது.

மது ஒழிக்கும் சபை :

திருநெல்வேலி மாவட்டம் உவரியில் பரிசுத்த அமலோத் –துவமாதா மதுவிலக்கு சபை என்ற அமைப்பு உள்ளது. இச்சபை நூறு ஆண்டுகளைக் கடந்து தொடர்ச்சியாக மதுவிற்கு எதிராக போராடி வருகிறது.

இந்து மக்கள் கட்சி :

அர்ஜுன் சம்பத் அவர்கள் தலைமையில் இயங்கும் இந்து மக்கள் கட்சியானது மது ஒழிப்பிற்காகப் போராடி வருகின்றது. மது ஒழிப்பிற்காக நடை பயணம், பள்ளி, கல்லூரி, கோவில்களுக்கு அருகில் இருக்கும் மதுக்கடைகளை இடம் மாற்றக்கோரி போராட்டம், மது ஒழிப்பு மகா யுத்தம், மது மீட்பு முகாம் போன்றவற்றை நடத்தி முழு மது ஒழிப்பிற்காகப் பாடுபட்டு வருகிறது.



சோசியல் டெமாக்ரடி பார்ட்டி ஆஃப் இந்தியா :

சோசியல் டெமாக்ரடி பார்ட்டி ஆஃப் இந்தியா என்ற அமைப்பானது மது ஒழிப்பிற்கான பல போராட்டங்களைத் தொடர்ந்து நடத்தி வருகிறது.



ஜமாஅத்தே இஸ்லாமி ஹிந்த் :

ஜமாஅத்தே இஸ்லாமி ஹிந்த் என்ற அமைப்பு அனைத்து மக்களின் முன்னேற்றத்திலும் அதிக அக்கறை செலுத்துகிறது. மதுவிற்கு எதிராக சுவரொட்டிகள், மதுவிலக்கு பிரசாரங்கள் செய்து போராடி வருகிறது. தொடர்ந்து மது ஒழிப்பிற்கான பணியில் பல போராட்டங்களை நடத்தி வருகிறது.




மனிதநேய மக்கள் கட்சி :

மனித நேய மக்கள் கட்சியானது முழு மதுவிலக்கிற்காக பல்வேறு கோணங்களில் போராட்டங்களை முன்னெடுத்துச் செல்கிறது. முழு மதுவிலக்கை தாரக மந்திரமாகக் கொண்டு சுவரொட்டிகள், துண்டு பிரசுரங்கள் மூலமாக மக்களுக்கு விழிப்புணர்வை ஏற்படுத்தி வருகிறது.



கல்லூரி மாணவர்கள் போராட்டம் :

தமிழகத்தில் உள்ள பல கல்லூரிகளிலும் நாட்டு நலப்பணி திட்டங்களோடு இணைந்து மது ஒழிப்புப் பிரச்சாரத்தை செய்து வருகின்றனர். மாணவ, மாணவிகளும் மது ஒழிப்பிற்காக உண்ணா விரதம், போராட்டங்கள் என தொடர்ச்சியாக நடத்தி வருகின்றனர்.



மதுபோதைக்கு எதிரான மக்கள் இயக்கம் :

மதுபோதைக்கு எதிரான மக்கள் இயக்கத்தினர் கன்னியாகுமரியில் தொடங்கி சென்னை நோக்கி 27 மாவட்டங்கள் வழியாக 100 நாள் நடைபயண பிரச்சாரம் மேற்கொண்டனர். இந்த அமைப்பிற்கு அனைத்துத் தரப்பிலிருந்தும் நல்ல வரவேற்பு கிடைத்தது.



மதுபோதைக்கு எதிரான இவர்களது நடைபயண பிரச்சாரத்-தில் திருப்பூர் குமரன், கண்ணகி, விவேகானந்தர் போன்ற வேடங்கள் அணிந்து பயணம் மேற்கொண்டனர்.

ஆல்கஹாலிக்ஸ் அனானிமஸ் :

ஆல்கஹாலிக்ஸ் அனானிமஸ் என்பது மருத்துவர்களுடனும் சமயப் பற்றுடையவர்-களுடனும் உலகம் முழுவதும் விரிவான அளவில் வேலை செய்து வரும் அமைப்பா-கும்.

மருத்துவர் பாப் அவர்களின் நிரந்தரக் குடியில்லாத வாழ்க்கையின் முதல் தினமான 10.06.1935 ஆம் ஆண்டு இந்த இயக்கம் பிறந்த நாளாக கொண்டாடப்படுகிறது.

இந்த அமைப்பு 1996 ஆம் ஆண்டு ஆல்கஹாலிக்ஸ் அனானிமஸ் என்ற ஆங்கில நூலினை தமிழில் மொழிபெயர்த்து மும்பையில் வெளியிட்டது. குடியை நிறுத்த வேண்டுமென்ற விருப்பமே இதில் உறுப்பினராவதற்கு தகுதியாகக் கொண்டு பொறுப்பான சேவைக்குழுவை உருவாக்கி செயல்பட்டு வருகின்றனர். இந்த அமைப்பிற்கு உலகம் முழுவதும் மருத்துவ கழகங்களும் மருத்துவர்களும் அங்கீகாரம் அளித்துள்ளனர்.

காலங்காலமாக இருந்து வரும் ஆரோக்கியப் பிரச்சனை -யாகவும் சமூகப் பிரச்சனையாகவும் உள்ள குடிநோய்க்கு இவர்கள் கண்டுள்ள இணையற்ற மிகவும் வெற்றிகரமான அணுகு முறையைப் பாராட்டி அமெரிக்க பொதுஜன கழகம் 1951 ஆம் ஆண்டுக்கான லஷ்கர் குழு விருதை வழங்கியுள்ளது.

இரண்டு மாதத்திற்கொருமுறை பன்னிரெண்டாவது வழி முறை என்ற பத்திரிகையை நடத்தி வருகிறார்கள். தமிழகத்திலும் இந்த அமைப்பு போற்றத்தக்க வகையில் பாடுபட்டு வருகிறது.

மது ஒழிப்பிற்காக போராடுவோருக்கு நாமும் பக்க பலமாக இருப்போம்.

❑

ஆதார நூல்கள் :

1. மது அருந்தக் கூடாது ஏன்?, புலியூர் கேசிகன், பாலாஜி பப்ளிகேஷன்ஸ், சென்னை. முதற்பதிப்பு - 1984
2. மதுவா? மதியா?, Dr. E.K.T. சிவக்குமார், விஜய ராசேசுவரி பதிப்பகம், சென்னை. முதற்பதிப்பு : 1996
3. குடிபோதை - புனைவுகள் தெளிவுகள், தமிழினி, சென்னை. டிசம்பர் 2008
4. குடியின்றி அமையா உலகு, முத்தையா வெள்ளையன், புலம், சென்னை.
5. AlCoholic Liver Disease, Editor Philip Abraham, Elsevier - Haragana.
6. மதுவும் மானிட உடலும், கே.கான் துரைராஜ், சென்னை, 2007
7. ஜி.டி.நாயுடு, ராமையா பதிப்பகம், சென்னை - 600 014
8. மது விலக்கு, சின்னக்குத்தூசி, நக்கீரன், சென்னை. 2008
9. தவத்திரு குன்றக்குடி அடிகளார், தமிழகத்தின் ஆன்மிக வழிகாட்டி, பொன்னீலன், நியூ செஞ்சுரி புக் ஹவுஸ் பிரைவேட் லிமிடெட், சென்னை - 98.
10. பாரதரத்தினம் சி. சுப்பிரமணியம், சிற்பி பாலசுப்பிரமணியம், கோலம், பொள்ளாச்சி.
11. தென்னக காந்தி P.S. குமாரசாமி ராஜா வாழ்வும் பணியும், பி.ஆர். சுப்பிரமணிய ராஜா, கவிதா, தி.நகர், சென்னை - 17
12. பாரத ஜனசபை, மகாகவி சி.சுப்பிரமணியபாரதி. காங்கிரஸ் மகாசபையின் சரித்திரம்.
13. டாஸ்மாக்கை இழுத்து மூடு! கள் இறக்க அனுமதியாதே!, மு.கார்க்கி, வழக்கறிஞர், கோவை. சமர்வெளியீட்டகம், விளாங்குறிச்சி, கோவை.
14. கள் மது அல்ல, உணவின் ஒரு பகுதி, இரா.ரவிக்குமார், தமிழ்நாடு கள் இயக்கம், உடுமலைப்பேட்டை.
15. தமிழ்நாடு கள் இயக்கம் போராட்ட வரலாறு, இரா.ரவிக்குமார், கொங்குமண்டல ஆய்வு மையம், உடுமலைப்பேட்டை.
16. புரட்சித்தலைவர் தலைமையில் அண்ணாயிசம், வி.சுந்தரராஜன் பி.ஏ., பி.எல்., மான் துயில் நிலையம், தெற்கு அலங்கம், தஞ்சாவூர்.
17. பூரண மதுவிலக்கு எங்கள் கொள்கை, தமிழக கொங்கு பேரவை, 2007
18. மூதறிஞர் ராஜாஜியின் நம்மை மேம்படுத்தும் எண்ணங்கள், பி.எஸ்.மணி (கல்கி), பாரதி நிலையம், 108, உஸ்மான் சாலை தி.நகர், சென்னை - 17
19. நாட்டுக்கு உழைத்த நல்லவர் பெரியார் ஈ.வெ.ராமசாமி, மா. கமலவேலன் பழனியப்பா பிரதர்ஸ், 25. பீட்டர்ஸ் சாலை, சென்னை - 600 011

20. எனது அரசியல் சிந்தனைகள், திருப்பூர். வீ.பொன்னுலிங்கம், அனிதா பதிப்பகம், திருப்பூர்.

21. காந்தியின் கிராம சுயராஜ்யம், டாக்டர் . A. சாமிநாதன், சீச்சு பப்ளிகேஷன்ஸ், சென்னை முதற்பதிப்பு : 1992

22. சிம்ம கர்ஜனை (உழவர் பெருந்தலைவர் சி.நாராயணசாமி நாயுடு அவர்களின் மேடைப்பேச்சு), டாக்டர். குரு. ஜெகநாதன், அரசு கலைக் கல்லூரி, திருச்சி, விவசாயிகளின் நண்பர்கள் அரங்கு, திருச்சி.

23. வாசித்தவை யோசிக்காதவை, மா. டைட்டஸ் மோகன், வைகறைப் பதிப்பகம், திண்டுக்கல்.

24. அறநெறி வெண்பா, நாச்சிகுளத்தார், பாரி நிலையம், 59. பிராட்வே, சென்னை - 1, 1966

25. மயக்கம் என்ன?, டி.எல்.சஞ்சீவிகுமார், விகடன் பிரசுரம். 2012

26. தமிழ்த்தென்றல் அல்லது தலைமைப்பொழிவு, திரு. வி.கலியாணசுந்தரனார், தமிழ்த்தென்றல், சென்னை. 1947

27. சீர்திருத்தம் அல்லது இளமை விருந்து, திரு. வி.கலியாணசுந்தரனார், தமிழ்த்தென்றல், சென்னை. 1937

28. 1937 ஆம் ஆண்டு தமிழ்நாடு மதுவிலக்குச் சட்டம் மற்றும் தமிழ்நாடு மது (சில்லறை வணிக) விதிகள், 1989

29. யோகி வேமன்ன பத்தியம் மூலமும் உரையும், து. ராவுஜி, ஸ்ரீ தேவி புத்தக நிலையம், சென்னை - 600 112

30. பசவண்ணர் வாழ்க்கை வரலாறு, தமிழாக்கம் : டாக்டர். சி. சிவசண்முகம், காவ்யா, ஜனவரி 1984

31. பெரியார் 100 பெருகி வந்த பெருமைகள், சபீதா ஜோசப், நக்கீரன், சென்னை.

32. மதுவிலக்கு (கள் ஒழிக), சக்கரவர்த்தி இராஜகோபாலாச்சாரியார், 1943, கமலா பிரசுராலயம், சென்னை. மே 2001. முல்லை பதிப்பகம், 323/10, கதிரவன் காலனி, அண்ணாநகர் மேற்கு, சென்னை - 600 040.

33. ஆல்கஹாலிக்ஸ் அனானிமஸ், மும்பை. 1976.

பின்னிணைப்பு



அருட்செல்வர் மகாலிங்கம் அவர்கள் கொங்கு மண்டல ஆய்வு மையத்தின் பணிகளை பாராட்டி சிறப்பித்தபோது...




கிருஷ்ணராஜ் வாணவராயர் அவர்களுடன்...



கண்தானம், இரத்ததானத்தில் சிறப்பாக செயல்பட்டமைக்காக இந்திய மருத்துவ கழக பாராட்டுவிழாவில்...



பேரூர் ஆதீனம் அவர்கள் கொங்கு மண்டல ஆய்வு மையத்தின் பணிகளை பாராட்டியபோது...



இந்திய விவசாயிகள் சங்கத் தலைவர்
கிஷன் பீர் சவுத்ரி அவர்களுடன்...



மரபணு மாற்று அரிசியை எதிர்த்து போராடிய
உலகளாவிய தலைவர்களுடன்...



பி.டி. விதை பேராபத்து நூல் வெளியீட்டு விழாவில்...



கொங்கு வட்டார வழக்குச் சொல்லகராதி நூல்
வெளியீட்டு விழாவில்...



அமராவதி மரம் வளர்ப்போர் சங்கத்தின்
முதலாம் ஆண்டு விழாவில்...



அமராவதி மரம் வளர்ப்போர் சங்கத்தின்
இரண்டாம் ஆண்டு விழாவில்...



இயற்கை விவசாய விஞ்ஞானி சுபாஷ் பாலேக்கர் அவர்களுடன்...



விடியலை நோக்கி நூல் வெளியீட்டு விழாவில்...



தலைக்காவிரியில் காவிரி அன்னைக்கு ஆராத்தி எடுத்தல்..



காவிரி பாதுகாப்புப் பயணத்தின்போது

பாகமங்கலத்தில் சைவ ஆதீனங்களுடன்...



கொங்கு மண்டல ஆய்வு மையத்தின் அமராவதி நூல்
முதற்பதிப்பு வெளியீடு.



கொங்கு மண்டல ஆய்வு மையத்தின் அமராவதி நூல்
இரண்டாம் பதிப்பு வெளியீடு.



அமராவதி நதிக்கான உண்ணாவிரதத்தின்போது...



தமிழ்வழிக்கல்வி கருத்தரங்கில்...




மயில்சாமி அண்ணாதுரை அவர்களுடன்...




மதுவிலக்கு நடைப்பயணத்தின்போது வைகோ அவர்கள்
எங்களது இல்லத்திற்கு வருகைதந்தபோது...



அமெரிக்க மான்சான்டோ நிறுவனத்தை இந்தியாவை விட்டு வெளியேற்றக்கோரி நடைபெற்ற ஆர்ப்பாட்டத்தில்...




இயற்கை விவசாய விழிப்புணர்வு கருத்தரங்கில்...



இன்றைய சூழலில் உடல் நலத்திற்குத் தீங்கு விளைவிக்கக்கூடிய முக்கிய காரணியாக இருப்பது போதைப் பழக்கமாகும்.

மது ஒழிப்பு பற்றிய சான்றுகளுடன் விளக்கமாகத் தொகுத்திருப்பது அனைவருக்கும் மிகப்பயனுள்ளதாக அமைந்துள்ளது.

தவத்திரு மருதாசல அடிகள்
பேரூர் ஆதினம், பேரூர்



மது அருந்துவது நம் அன்றாட உணவுப் பழக்கங்களில் ஒன்றாகிவிடும் அபாயமும் உள்ளது. ஆகவே முழு மதுவிலக்கு என்பது ஒரு தேசிய இயக்கமாக உருவெடுக்கவேண்டும்.

கொங்கு மண்டல ஆய்வு மையத்தின் முயற்சி வெற்றி பெற வாழ்த்துகிறேன். குடிப்பழக்கம் இல்லாத இந்தியா, குன்றின் மேல் இட்ட சுடர்போல் எரியும் திருவண்ணாமலை தீபமாகி உலகிற்கு ஒளி சேர்க்கும் என்று நம்புகிறேன்.

பரம பூஜ்ய ஸ்ரீஸ்ரீ ரவிசங்கர் குருதேவ்



மதுவை தமிழகத்திலிருந்து அப்புறப்படுத்த முடியாதா என என் ஆழ்மனதில் தோன்றிய எண்ணத்தை 'முடியும்' என நினைத்து என் அருமைத்தம்பி உடுமலை ரவி, 'முழு மதுவிலக்கு அதுவே நமது இலக்கு' என்ற இந்த அற்புதமான தொகுப்பை வெளியிட்டுள்ளார். இந்நூல் தமிழினத்தின் விடியலுக்கான ஒரு மைல்கல்.

சிவகுமார்
திரைப்படக் கலைஞர்

ISBN 978-81-93064-80-1

9 788193 064801

ரூ.250

வெளியீடு :
கொங்கு மண்டல ஆய்வு மையம், உடுமலை